# வாலிபர்களுக்கு செய்திகள்

தமிழாக்கம்

Pr. தாஸ் குமார்

தென் கிழக்கு இந்திய ஒன்றியம்
செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை
197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர்,
சென்னை – 600 048.
தமிழ்நாடு, இந்தியா.

Copy Right : Messages to Young People (Tamil)

1st Edition : 2000 Copies, April – 2014.

*Published by, Youth Ministry*

**South East India Union of Seventh –day Adventists**

197, G. S. T. Road, Vandalur,

Chennai – 600 048. Tamilnadu, India.

# அணிந்துரை ...

வாலிபர்களின் வளமான ஆவிக்குரிய வாழ்வுக்கேற்ற வல்லமையான ஆலோசனைகள் நிரம்பியுள்ள இந்த அரிய நூலை கரங்களில் ஏந்தியிருக்கும் மிகவும் அருமையான வாலிபச் செல்வங்களே! தேவசித்தமில்லாமல் இது உங்களிடம் வரவில்லை.

இந்நூலின் ஆசிரியரான திருமதி. எலன் ஜி ஒயிட் அம்மையார் அவர்கள் தனது ஒன்பதாம் வயதில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தினால் மூன்று வாரங்கள் உயிருக்குப் போராடினார்கள். ஜீவாதிபதியான கிறிஸ்து இவருக்கு ஜீவன் தந்து, எழுபது ஆண்டுகள் ஊழியம் செய்யவும், மொத்தத்தில் எண்பத்தெட்டு ஆண்டுகள் (1827–1915) உயிர்வாழவும் கிருபை ஈந்தார்.

ஊழியத்தையே உயிர்மூச்சாகக்கொண்டிருந்த ஓர் உண்மையான ஊழியக்காரியின் எழுத்தாணியிலிருந்து வரையப்பட்ட வார்த்தைகளின் தொகுப்புதான் நூலாக இப்பொழுது உங்கள் கரங்களில் தவழ்கிறது. இந்நூலின் ஒவ்வொரு பக்கமும் உன்னதமான ஆலோசனைகளாலும், தேவனுடைய ஜீவ வசனங்களாலும் ஆவியானவரால் ஒளியூட்டம் பெற்றிருக்கிறது.

வாலிபக் கண்மணிகளே! இது உங்கள் நூல்! உங்களுக்கே உரிய பிரத்தியேகமான நூல்! கருத்தூன்றிப் படியுங்கள்! உங்கள் வாழ்வைச் சீர்ப்படுத்துங்கள். தேவன் தமது சுயரத்தத்தால் சம்பாதித்திருக்கிற திருச்சபைக்குத் தூணும் ஆதாரமுமாக நிலைத்திருங்கள். மறுரூபமாக, மகிமையில் பிரவேசிக்க ஆயத்தப்படுங்கள். அதற்கு இந்நூல் உங்களுக்குத் துணைபுரியட்டும் என்பதே என் ஜெபம், என் வாஞ்சை!

கர்த்தர் உங்களை அபரிமிதமாய் ஆசீர்வதிப்பாராக!

மீட்பரின் அருட்பணியில்,

**போதகர் K. செல்லத்துரை**

தலைவர், தென்கிழக்கு இந்திய யூனியன்

ஆ.்.ப் செவந்த்–டே அட்வென்டிஸ்ட்ஸ்

# பொருளடக்கம்


| பகுதி | | பக்கம் |
|---|---|---|
| அறிமுகம் | நித்தியத்திற்காகக் குணத்தைக் கட்டுதல் | 1 |
| 1 | வாலிபர்களுக்கான தேவனுடைய நோக்கம் | 6 |
| 2 | பாவத்துடனுள்ள போராட்டம | 34 |
| 3 | வெற்றிகளை ஈட்டுதல் | 77 |
| 4 | ஒளியில் நடத்தல் | 102 |
| 5 | வாழ்க்கைப் பணிக்கான ஆயத்தம் | 148 |
| 6 | சேவை | 175 |
| 7 | ஆரோக்கியமும் போதுமான தகுதியும் | 208 |
| 8 | பக்தியுள்ள வாழ்க்கை | 221 |
| 9 | வாசித்தலும் இசையும் | 243 |
| 10 | உக்கிராணத்துவம் | 269 |
| 11 | குடும்ப வாழ்வு | 294 |
| 12 | ஆடையும் அலங்காரமும் | 313 |
| 13 | பொழுதுபோக்கும் கேளிக்கையும் | 330 |
| 14 | சமுதாயத் தொடர்புகள் | 368 |
| 15 | காதலுறவும் திருமணமும் | 399 |

## அறிமுகம்

# நித்தியத்திற்காகக் குணத்தைக் கட்டுதல்

வாலிபர்களைக் குறித்து எனக்கு ஆழ்ந்த ஆர்வம் உண்டு; தேவனுடைய ஊழியத்தில் ஏற்புடைய சேவை செய்யத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு, ஊக்கமிக்க ஆராய்ச்சியுடனும் ஆர்வமிக்க ஜெபத்துடனும் தேடி, அவர்கள் தங்களது கிறிஸ்தவ குணங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ள முயற்சிப்பதைக் காணப் பெரிதும் வாஞ்சிக்கிறேன். கிறிஸ்தவ அனுபவத்தில் ஒரு உன்னத நிலையை அடைவதற்கு, அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பதைக் காண ஏங்குகிறேன்.

மனிதக் குடும்பத்திற்கு இரட்சிப்பின் வழியைக் கற்றுக்கொடுப்பதற்குக் கிறிஸ்து வந்தார்; ஒரு சிறுபிள்ளைகூட அவ்வழியில் நடக்கும்வண்ணம், அதை அவர் மிகவும் எளிதாக்கினார். கர்த்தரை அறிந்துகொள்வதில் தமது சீஷர்கள் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று அவர் கட்டளையிடுகிறார்; அவரது வழிநடத்துதலை அனுதினமும் பின்பற்றும்போது, அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறதை (ஓசியா 6:3) அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

உதிக்கும் சூரியனையும், பூமியிலும் வானத்திலும் மெல்ல மெல்லப் பொழுது புலர்வதையும் நீங்கள் கண்டிருப்பீர்கள். சூரியன் தோன்றுமட்டும், கொஞ்சம் கொஞ்சமாக விடியல் அதிகமாகும்; மதியவேளையின் முழு மகிமை உண்டாகுமட்டும், ஒளி தொடர்ந்து பலமிக்கதாகவும், தெளிவானதாகவும் வளர்கிறது. தேவபிள்ளைகள் தங்களது கிறிஸ்தவ அனுபவத்தைப் பக்குவப் படுத்திக் கொள்வதில், தேவன் செய்ய விரும்புவதை விளக்குவதற்கு இது ஒரு அழகான உதாரணம் ஆகும். அவர் நமக்கு அனுப்பும் ஒளியில் அனுதினமும் நடக்கும்போது, அவரது கோரிக்கைகளுக்கெல்லாம் விருப்பத்துடன் கீழ்ப்படியும்போது, நமது அனுபவம் வளர்கிறது; கிறிஸ்து இயேசுவில் நிறைவான வளர்ச்சி பெற்ற ஆண்களாகவும் பெண்களாகவும் வளரும்வரை இது விரிவடைகிறது.

கிறிஸ்து கடந்துசென்ற பாதையை வாலிபர்கள் எப்பொழுதும் தங்களுக்கு முன்பாக வைத்திருக்கவேண்டும். ஒவ்வொரு அடியிலும் அது ஜெயம்பெறும் பாதையாயிருந்தது. தேசங்களை ஆளக்கூடிய ஒரு அரசராகக்

கிறிஸ்துவானவர் பூமிக்கு வரவில்லை. சோதிக்கப்படவும், சோதனையை மேற்கொள்ளவும், கர்த்தரை அறிவதில் தொடர்ந்து முன்னேறவும் ஒரு தாழ்மையான மனிதனாக அவர் வந்தார். நாமும் அவரைப் போலாக வேண்டும். அவரது ஜீவியத்தை நாம் ஆய்வுசெய்தால், அவர் மூலமாக தேவன் தமது பிள்ளைகளுக்கு எவ்வளவாகச் செய்துமுடிப்பார் என்பதைக் கற்றுக்கொள்ளலாம். நமது பாடுகள் எவ்வளவு பெரிதாயிருந்தாலும், அவைகள் வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும் நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகப் பொறுமையுடன் சகித்த கிறிஸ்துவின் பாடுகளை மிஞ்சிவிடமுடியாது என்பதை நாம் கற்றுக்கொள்ளலாம். அவரது முன்மாதிரியின்படி வாழ இசைந்துகொடுப்பதன்மூலம், நமக்காகச் செய்த அவரது தியாகத்தை மதிக்கிறோம் என்பதை நாம் காண்பிக்கவேண்டும்.

தேவகுமாரனுடைய இரத்தம் என்ற அளவற்ற விலைக்கிரயத்தினால் வாலிபர்கள் வாங்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தியாகத்தைச் செய் வதற்குத் தமது குமாரனை அனுமதித்த பிதாவின் தியாகத்தை எண்ணிப் பாருங்கள். மனிதர்களுக்கான ஒரு அனுதின பலியாகத் தமது ஜீவனைக் கொடுப்பதற்காக, பரலோக மன்றங்களையும், ராஜ சிங்காசனத்தையும் விட்டுவந்த கிறிஸ்துவை எண்ணிப்பாருங்கள். அவர் நிந்தையையும், அவதூறையும் பொறுத்தார். துன்மார்க்கர் அவர்மீது குவித்த எல்லா அவமானத்தையும், பரியாசத்தையும் அவர் தாங்கினார். அவரது பூலோக ஊழியம் நிறைவேறியபோது, சிலுவை மரணத்தை அவர் அடைந்தார். அவரது கரங்களிலும், கால்களிலும், துளைக்கப்பட்ட ஆணிகள், எவர்களை இரட்சிக்க வந்தாரோ அவர்களிடமிருந்து பெற்ற பழிச்சொல் மற்றும் அவதூறு, பிதாவின் முகம் மறைக்கப்படல் ஆகிய அவரது சிலுவைப்பாடுகளை எண்ணிப்பாருங்கள். இவையெல்லாவற்றின் மூலமாக, தேவனுடைய ஜீவியத்துக்கு இணையான ஜீவியத்தை உடையவர்களாக விரும்பும் யாவருக்கும் கிறிஸ்து வழியை உண்டாக்கினார்.

### ஓர் உண்மையான நண்பன்

கிறிஸ்துவானவர் பிதாவிடம் சென்றபோது, தமது பின்னடியார்களை உதவியற்ற நிலையில் விட்டுவிடவில்லை. மாபெரும் விந்தைகளுக்கெதிராக விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடிக் கொண்டிருக்கிறவர்களுக்கு உறுதுணையாக, அவரது பிரதிநிதியான பரிசுத்த ஆவியானவரும், பணிவிடை ஆவிகளான பரலோக தூதர்களும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இயேசு உங்கள் சகாயர் என்பதை எப்பொழுதும் நினைவிற்கொள்ளுங்கள். உங்களது குணத்தின் தனித்தன்மைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய அவரைப்போல் ஒருவருமில்லை. அவர் உங்கள்மீது கண்ணோக்கமாய்

இருக்கிறார். அவரால் வழிநடத்தப்படவேண்டுமென்று நீங்கள் விரும்பினால், உங்களுக்கான அவரது சித்தத்தையெல்லாம் செய்துமுடிக்கப் பெலப்படுத்தும் நன்மைக்கேதுவான செல்வாக்குகள் உங்களைச் சூழ்ந்துகொள்ளும்படி அவர் செய்வார்.

இந்த வாழ்வில் எதிர்கால வாழ்வுக்காக நாம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். மாபெரும் மறுஆய்வு விரைவில் வரப்போகிறது. அதில் கிறிஸ்தவ குணத்தைப் பூர்த்தியாக்கத் தேடிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனுடைய ஆராய்ந்தறியும் கேள்விகளின் பரீட்சைக்கு முன்பாக நிற்க வேண்டும்: மற்றவர்கள் பாதுகாப்பாகப் பின்பற்றக்கூடிய முன்மாதிரியை நீ வைத்தாயா? கணக்குக் கொடுக்க வேண்டியவர்களான ஆத்துமாக்கள்மீது கவனமாயிருந்தாயா? பரமசேனை வாலிபர்மீது ஆர்வங்கொண்டுள்ளது; பரீட்சைக்கு நீங்கள் நிலைநின்று, “நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே… உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” என்ற அங்கீகார வார்த்தைகள் உங்களிடம் சொல்லப்படவேண்டும் என்பதற்காக அவர்கள் தீவிர வாஞ்சைகொண்டுள்ளனர்.

நித்தியத்திற்கான குணக்கூறுகளை இங்கேயே கட்டவேண்டும் என்பதையும், மிகச்சிறந்ததைச் செய்ய தேவன் அவர்களிடம் கோருகிறார் என்பதையும் வாலிபர்கள் நினைவிற்கொள்வார்களாக. அனுபவத்தில் முதிர்ந்தவர்கள் வாலிபர்கள்மீது கவனமாயிருப்பார்களாக; அவர்கள் சோதிக்கப்படுவதைக் காணும்போது, அவர்களை அப்புறம் கொண்டுசென்று, அவர்களோடு, அவர்களுக்காக ஜெபிப்பார்களாக. கிறிஸ்துவானவர் இரட்சிக்க வந்தவர்களின் இரட்சிப்பில் ஆர்வங்காட்டுவதன்மூலம், அவரது மாபெரும் தியாகத்தை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். வாலிபர்கள் கிறிஸ்துவைத் தேடினால், அவர்களது முயற்சிகளை அவர் பயனுள்ளதாக்குவார்.—Mrs. E. G. White, The Youth's Instructor, Notvember 21, 1911. ★

## பகுதி 1

# வாலிபர்களுக்கான தேவனுடைய நோக்கம்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 2 | வாலிபர்களுக்கான ஓர் அழைப்பு | 5 |
| 3 | அவரைப் பிரியப்படுத்த நாடுதல் | 10 |
| 4 | வெற்றிக்கான படித்தரங்கள் | 11 |
| 5 | நமது சிலாக்கியத்தின்நாள் | 16 |
| 6 | எட்டிப் பிடிக்கக்கூபய உயரங்கள் | 19 |
| 7 | திறமையின் தராதரங்கள் | 23 |
| 8 | உயரங்களில் ஏறுதல் | 27 |
| 9 | தேவனுடன் கூடிச் செயல்படுதல் | 29 |

பகுதி 1

## 2

# வாலிபர்களுக்கான ஓர் அழைப்பு

**ஊ**ழியம் அதன் எல்லாக் கிளைகளோடும் முன்னேறிச்செல்ல வேண்டுமென்பதற்காக, இளமைமிக்க ஆற்றலையும், வைராக்கியத்தையும், தைரியத்தையும் தேவன் அழைக்கிறார். தமது செயல்நோக்கத்தின் வளர்ச்சிக்கு உதவுவதற்காக அவர் வாலிபர்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார். தெளிவான மனதுடன் திட்டமிடவும், துணிச்சலான கரத்துடன் நிறைவேற்றிடவும் புத்தம்புதிய, முறிவடையாத சக்திகள் தேவை. வாலிப ஆண்களும், பெண்களும் தங்களுடைய வாலிபத்தின் பெலத்தை தேவனுக்குக் கொடுக்க அழைக்கப்படுகிறார்கள்; அவர்களது வல்லமைகளின் செயலாக்கத்தின் மூலமாக, கூரிய சிந்தனை மற்றும் உயிர்த்துடிப்புள்ள செயலின்மூலமாக, அவருக்கு மகிமையையும், தங்களுடைய சக மனிதருக்கு இரட்சிப்பையும் அவர்கள் கொண்டு வரலாம்.—Gospel Workers, Page 67.

**த**ம்முடைய மேன்மையான ஊழியத்தில் களமிறங்க ஆயத்தப்படவும், பொறுப்புகளை வகிப்பதற்குத் தகுதிப்படவும் ஆர்வமிக்க சிந்தையுள்ள மனிதர்களாக வாலிபர்கள் மாறவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். கறைபடியாத, பலமும் துணிச்சலுமிக்க உள்ளத்தோடு, தங்களுக்கு முன் உள்ள போராட்டத்தில் வீரத்துடன் போராடத் தீர்மானித்திருக்கிற, தேவனை மகிமைப்படுத்தி மனிதகுலத்திற்கு ஆசீர்வாதம் சேர்க்கிற வாலிபர்களை தேவன் அழைக்கிறார். வாலிபர்கள் தங்களுடைய துடிக்கும் ஆசைகளை அமைதிப்படுத்தி, வேதாகமத்தை ஆராய்ந்து, தங்களது சிருஷ்டிகரும், மீட்பருமானவரின் சத்தத்துக்குச் செவிகொடுப்பார்களானால், தேவனோடு சமாதானமாயிருப்பது மட்டுமின்றி, மேன்மையடைந்து, உயர்ந்திருப்பதையும் காண்பார்கள். என் இளம் நண்பனே, தேவனுடைய வார்த்தையிலுள்ள ஆலோசனைகளைக் கவனிப்பது உனக்கு நித்திய நன்மையாயிருக்கும்; அவை உனக்கு மதிப்பிடமுடியாத முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கிறது.

தேவனுடைய ஆவியானவருக்குக் கட்டுப்படாமல், ஒரு முரட்டுத் தனமான வாழ்க்கையை நடத்துவதால் உண்டாகும் விளைவு எப்படி யிருக்கும் என்று நிதானித்து, ஞானமாயிருக்கும்படி உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். “மோசம்போகாதிருங்கள். தேவன் தம்மைப் பரியாசம்

பண்ணவொட்டார்: மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்" –கலா. 6:7,8. உன் ஆத்துமாவினிமித்தமும், அழிவிலிருந்து உன்னை இரட்சிக்கத் தம்மையே ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினிமித்தமும், உன் வாழ்வின் வாயிற்படியில் சற்று நின்று, உன் பொறுப்புகளையும், உன் வாய்ப்புகளையும், நீ சாதிக்கக்கூடியவைகளையும் நன்கு எண்ணிப்பார். ஒரு உன்னத இலக்கை அடைவதற்கான வாய்ப்பை தேவன் உனக்குத் தந்திருக்கிறார். உனது செல்வாக்கு தேவனுடைய சத்தியத்துக்காகப் பேசட்டும்; மனித மீட்பு எனும் மாபெரும் பணியில் தேவனோடு நீ ஒரு உடன்வேலையாளாக இருக்கலாமே…

## ஓர் உன்னத இலக்குக்காக அழைக்கப்படுதல்

வாலிபர்கள் தாங்கள் அழைக்கப்பட்டிருக்கிற உன்னத இலக்கைக் குறித்து மெச்சிப்பேசினால் நலமாயிருக்குமே! உங்கள் காலடிகள் செல்லும் பாதைகளை நன்கு கவனித்துப் பாருங்கள். உன்னதமும், பரிசுத்தமுமான நோக்கத்துடன் உங்கள் பணியைத் தொடங்குங்கள். தேவனுடைய கிருபையின் வல்லமையினால், நேர்மையின் பாதையிலிருந்து நான் பிசகுவதில்லையென்று உறுதிகொள்ளுங்கள். தவறான திசையில் நீங்கள் போகத் தொடங்கினால் ஒவ்வொரு அடியும் ஆபத்து மற்றும் அழிவு நிறைந்ததாயிருக்கும்; சத்தியம், பாதுகாப்பு மற்றும் வெற்றியின் பாதையிலிருந்தும் தொடர்ந்து விலகிச்செல்வீர்கள். தெய்வீக வல்லமையினால் உங்களது அறிவுத்திறன் பெலப்படுத்தப்பட்டு, உங்களது ஒழுக்க சக்திகள் உயிரூட்டப்பட வேண்டியதாயிருக்கிறது.

மனிதனின் மாஉன்னத வல்லமைகள் தேவனுடைய ஊழியத்தில் தேவை; கல்வியில் தேர்ச்சிபெற்ற வாலிபர்கள் அநேக துறைகளில் அவசரமாகத் தேவை. அறுவடைக்கு இப்பொழுது ஆயத்தமாயிருக்கிற பெரிய துறைகளில் பணிபுரிவதற்கு நம்பகத்தன்மையுள்ள மனிதர்கள் தேவை. தங்களை தேவனுக்கென்று முற்றிலும் அர்ப்பணிக்கிற, தீமையாலும் அசுத்தத்தாலும் கறைபடாத சாதாரண திறமையுள்ள வாலிபர்கள் வெற்றி சிறப்பார்கள்; தேவனுக்காகப் பெரிய வேலையைச் செய்துமுடிக்கப் பெலன் அடைவார்கள். வாலிபர்கள் மென்மையான கடிந்துரைக்குச் செவிசாய்த்து, தெளிந்த புத்தியுடன் இருப்பார்களாக.

தேவன் தங்களுக்குத் தந்துள்ள பெலனை வீணாகவும் மதியீனமாகவும், கழித்துப் போடுகிற வாலிபர்கள் எத்தனை பேர்! தீய பழக்கங்களில் திளைத்ததினிமித்தம், மனரீதியாகவும், ஒழுக்கரீதியாகவும், சரீரரீதியாகவும் பாதிக்கப்பட்ட வாலிபர்களின் வேதனைமிக்க சரித்திரங்கள் எத்தனை

எனக்குமுன் எழுகின்றன! விதிமுறைக்கு மாறான சிற்றின்பங்களில் திளைப்பதினால், அவர்களது சரீரங்கள் சீர்கெடுகின்றன, அவர்களது வாழ்க்கைப் பயன்பாடும் பெருமளவில் முடக்கம் அடைகின்றது.

அக்கறையற்ற, பொறுப்பற்ற இன்றைய வாலிபர்களே, நீங்கள் மனந் திரும்பி, தேவனுக்கு உடன்வேலையாட்களாகும்படி உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். பிறரை ஆசீர்வதிப்பதும், இரட்சிப்பதுமே உங்களது வாழ்வின் ஆராய்ச்சியாக இருக்கட்டும். நீங்கள் தேவனிடமிருந்து உதவியைத் தேடினால், உங்களில் கிரியை செய்யும் அவரது வல்லமை எல்லா எதிர் வல்லமைகளையும் தவிடுபொடியாக்கிவிடும்; சத்தியத்தின்மூலம் நீங்கள் பரிசுத்தமாக்கப்படுவீர்கள். இன்றைய வாலிபர்களிடையே அஞ்சத்தகுந்த விதத்தில் பாவம் பரவிக்கிடக்கிறது, ஆயினும் சாத்தானின் வல்லமையிலிருந்து ஆத்துமாக்களை மீட்பதற்கு உங்களால் இயன்றதைச் செய்வது உங்களது நோக்கமாக இருக்கட்டும்.

## வெளிச்சம் வீசுபவர்களாய் இருங்கள்

நீங்கள் எங்கு சென்றாலும், ஒளியைச் சுமந்து செல்லுங்கள்: திடமான நோக்கம் உங்களிடம் உண்டு என்பதையும், தீய தோழர்களின் தூண்டுதலால் எளிதில் இழுப்புண்டு போகிற தீர்மானமற்ற நபரல்ல நீங்கள் என்பதையும் காட்டுங்கள். தேவனை அவமதிக்கிறவர்களின் ஆலோசனைகளுக்கு உடனே இணங்காதிருங்கள், மாறாக, ஆத்துமாக்களைத் திருத்தி, திரும்பப்பெற்று, தீமையினின்று மீட்கத் தேடுங்கள்.

எதிர்த்து நிற்போருக்காக அடிக்கடி ஜெபியுங்கள். சாந்தத்தோடும், மனத்தாழ்மையோடும் அவர்களை இணங்கச்செய்யுங்கள். தவறிலிருந்து மீட்கப்பட்டு கிறிஸ்துவின் கொடியின்கீழ் கொண்டுவரப்படுகிற ஒரு ஆத்துமா, பரலோகத்தில் மகிழ்ச்சி உண்டாக்கி, உங்களுடைய மகிழ்ச்சியின் கிரீடத்தில் ஒரு நட்சத்திரத்தைப் பதிக்கும். மீட்கப்பட்ட ஒரு ஆத்துமா, தனது தேவபக்தியுள்ள செல்வாக்கின்மூலம், மற்ற ஆத்துமாக்களை இரட்சிப்பின் அறிவுக்குள் கொண்டுவரும். இவ்விதமாக ஊழியம் பெருக்கமடையும். அந்த ஊழியத்தின் விரிவாக்கத்தை நியாயத்தீர்ப்பின் நாள் மட்டுமே வெளியரங்கமாக்கும்.

என்னால் கொஞ்சம்தான் செய்யமுடியும் என்று கருதி, கர்த்தருடைய வேலையைச் செய்யத் தயங்காதீர்கள். உங்களது கொஞ்சத்தையும் உண்மையாய்ச் செய்யுங்கள். உங்களது முயற்சிகளுடன் இணைந்து தேவனும் கிரியை செய்வார். கர்த்தருடைய சந்தோஷத்தில் பிரவேசிப்பதற்குத் தகுதியுடைய ஒரு நபராக, ஜீவ புஸ்தகத்தில் உங்களுடைய பெயரை

அவர் எழுதுவார். வயல்நிலங்கள் அறுவடைக்கு முதிர்ந்திருக்கின்றன; அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்: வேலையாட்களை எழுப்பும்படி கர்த்தரிடம் நாம் ஊக்கத்துடன் கெஞ்சுவோமாக…

## பரந்த எண்ணங்களைப் பேணி வளருங்கள்

வாலிபர்கள் தங்களது பெரும்பான்மையான வாய்ப்புகளைப் பயன்படுத்தும்விதத்தில், பரந்த எண்ணங்களையும், ஞானமுள்ள திட்டங் களையும் கொண்டிருக்கவேண்டும். அப்போஸ்தலர்களை உயிரூட்டிய அகத்தூண்டுதலையும், தைரியத்தையும் பற்றிக்கொள்ளுங்கள். “வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத் திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்,” என்று யோவான் (1 யோவான் 2:14) கூறுகிறார். ஓர் உயர்ந்த படித்தரம் வாலிபருக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. தமக்கு மெய்யான சேவை செய்திட வரும்படி தேவன் அவர்களை அழைக்கிறார். கிறிஸ்துவின் பள்ளியில் கற்றுக்கொள்ளபவர்களாக இருக்க விரும்புகிற உண்மையான மனம்படைத்த வாலிபர்கள், “புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்” (1 கொரி. 16:13) என்று நமது காலம்வரைக்கும் தொனித்துக் கொண்டிருக்கிற அதிபதியின் கட்டளைக்கு மாத்திரம் செவிகொடுப்பார்களானால், எஜமானுக்காக ஒரு பெரிய வேலையைச் செய்திடமுடியும்.

தேவனுடன் தாழ்மையாக நடக்கும் மனிதர்களாகவும், இக்காலத்தைச் சீர்கெடுத்து வருகிற புலனுணர்வு சார்ந்த எல்லாக் கறைகளுக்கும், அசுத்தத் துக்கும் விலகி, தேவன் உங்களுக்கு அளித்திருக்கிற புருஷத்தன்மையில் அவருக்கு முன்பாக நிற்கிறவர்களாகவும் நீங்கள் இருக்கவேண்டும். எல்லாப் பொய்யையும், பொல்லாங்கையும் புறக்கணித்து, உண்மையும், தைரியமும் காட்டத் துணிவுள்ளவர்களாக, இளவரசர் இம்மானுவேலின் இரத்தம் தோய்ந்த கொடியை உயர்த்திப்பிடிக்கும் மனிதர்களாக நீங்கள் இருக்கவேண்டும். உங்கள் எஜமானுக்காகப் பயன்படுத்தும்போது, உங்கள் தாலந்துகள் பெருகும். அளவற்ற விலைக்கிரயத்தினால் அவைகளை வாங்கியிருக்கிற அவரால் அவைகள் விலையேறப்பெற்றதாக மதிக்கப்படும். உங்களால் பெரிதாக ஒன்றும் சாதிக்க முடியாது என்பதற்காக, எதையும் செய்யாமல் அமர்ந்து அசட்டை பண்ணாதிருங்கள். மாறாக, செய்யும்படி உங்கள் கைகளுக்கு நேரிடுவது எதுவோ, அதை முழுமையாகவும், ஆற்றலோடும் செய்திடுங்கள்…

## படையில் சேர அழைப்பு

விருப்பத் தொண்டர்கள் தமது கொடியின்கீழ் வந்து, உலகத்திற்கு முன்பாக சிலுவைக் கொடியைத் தாங்கிப் பிடிக்க கிறிஸ்துவானவர் அழைக்கிறார். உலகில் திருச்சபையின் வல்லமையை அதிகரிக்க, தேவஜனங்களின் மந்தமாகிப்போன ஆற்றல்களைப் பற்றியெரியும் வைராக் கியத்துடன் தட்டியெழுப்பி, தைரியத்துடன் சாட்சி பகரக்கூடிய வாலிபர்களின் உதவிக்காகத் திருச்சபை களைத்துப்போய் காத்திருக்கிறது. லௌகிக அலையை எதிர்த்து, ஒழுக்கக்கேட்டிலும் தீமையிலும் வைக்கும் முதல் அடிக்கு எதிராக எச்சரிப்பின் சத்தத்தை உயர்த்துகிற வாலிபர்கள் தேவைப்படுகின்றனர்.

தேவனுக்கு சேவை செய்யவும் அவரது பணிக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கவும் விரும்புகிற வாலிபர்கள் முதலாவது சகல அசுத்தமும் நீங்க ஆத்தும ஆலயத்தைச் சுத்திகரித்து, கிறிஸ்துவை இதய சிம்மாசனத்தில் அமரச்செய்யவேண்டும்; அப்போது தங்களது கிறிஸ்தவ முயற்சிக்கு ஆற்றல் சேர்க்க அவர்கள் பெலப்படுத்தப்பட்டு, கிறிஸ்துவோடு ஒப்புரவாக்குவதற்கு மனிதர்களை இணங்கச் செய்வதில் ஆர்வமிக்க வைராக்கியத்தை வெளிக்காட்டுவார்கள். கிறிஸ்துவின் அழைப்புக்கு நமது வாலிபர்கள் செவிசாய்த்து, “இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்” (ஏசா 6:8) என்று பதிலளிக்கமாட்டார்களா? கிறிஸ்துவுடன் பணிசெய்பவர்களாக உங்களை அடையாளங்காட்டி, அவர் விட்டுச்சென்ற இடத்தில் பணியைக் கையிலெடுத்து, முடிவுவரை அதைக் கொண்டுசெல்ல வாலிபரே, முன்னேறிச் செல்லுங்கள்.—Review and Herald, June 16, 1891

## அதிமுக்கியமான குணக்கூறுகள்

வாலிபர்கள் குறைவான இலட்சியத்தோடு இருக்கவேண்டுமென்று தேவன் கட்டளையிடவில்லை. மாபெரும் ஒரு நன்மைக்காக அடக்கமுடியாத வாஞ்சை, அசைக்கமுடியாத மன உறுதி, சுறுசுறுப்பான செயல்பாடு, தளர்வுறாத விடாமுயற்சி ஆகிய ஒரு மனிதனை வெற்றியாளனாக, மனிதருள் கனமிக்கவனாக ஆக்கும் குணக்கூறுகள் நசுக்கப்படக்கூடாது.—Patriarchs and Prophets, p. 602.

3

# அவரைப் பிரியப்படுத்த நாடுதல்

தனிப்பட்ட முறையில் நமக்கெனச் செய்யும்படி ஒரு விசேஷித்த பணியைக் கர்த்தர் வைத்திருக்கிறார். நீதிமன்றங்களிலும், தினசரிகளிலும் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்படும் உலகத்தின் அக்கிரமத்தை நாம் காணும்போது, தேவனண்டை கிட்டிச்சேருவோமாக; நம்மில் கிறிஸ்துவின் கிருபை வெளியாகும்பொருட்டு, உயிருள்ள விசுவாசத்தினால் அவரது வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்வோமாக. உலகத்தில் ஒரு செல்வாக்கை வல்லமைமிக்க ஒரு செல்வாக்கை நாம் கொண்டிருக்கலாம். தேவனுடைய கண்டித்துணர்த்தும் வல்லமை நம்மோடிருந்தால், பாவத்திலிருக்கும் ஆத்துமாக்களை மனமாற்றத்துக்குள் நடத்தும்படி நாம் பெலப்படுத்தப் படுவோம்.

நமது எளிமை இப்பணியில் அதிகம் சாதிக்கும். உயர் பதவிகளை அடையவோ, மனிதர்களின் புகழ்ச்சியைச் சம்பாதிக்கவோ நாம் முயற்சிக்க லாகாது. மிகப்பெரியவர்களாக விளங்குவது நமது இலக்காக இருத்த லாகாது. தேவனுடைய மகிமை ஒன்றையே நமது குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். தெய்வீக சாயலுக்கேற்ப வனையப்படுவதற்கேதுவாக தேவனுடைய கிருபை நம்மீது அமரும்பொருட்டு, நம்மை ஒளியின் பாதையில் வைத்து, தேவன் நமக்கருளியுள்ள எல்லாப் புத்திக்கூர்மையோடும் பணியாற்ற வேண்டியிருக்கிறது. உலக வரலாற்றின் இந்தக் கடைசி நாட்களில் தேவனுடைய பணியைச் செய்திடத் தங்களையே அர்ப்பணிப்போர்மீது பரலோகம் தனது வளமான ஆசீர்வாதங்களை வாரி வழங்கக் காத்துநிற்கிறது. நாம் சோதிக்கப்பட்டுப் பரீட்சிக்கப்படுவோம்; இரவுகளில் கண்விழித்திருக்க நாம் அழைக்கப்படுவோம்; ஆயினும் அத்தகைய நேரங்கள் தேவனை நோக்கிய ஊக்கமான ஜெபத்தில் செலவிடப்படுவதாக, அப்போது அவர் புத்தியை அருளுவார், நம்முடைய சிலாக்கியங்களைப் பகுத்துணர உள்ளத்தை உயிர்ப்பிப்பார்.—Review and Herald, April 1, 1909.

# 4

# வெற்றிக்கான படித்தரங்கள்

“கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.” எல்லா நேரங் களிலும் எல்லா சந்தர்ப்பங்களின்கீழும் சிறந்தவற்றைச் செய்வதற்குத் தங்களுடைய சக்திகளை தீவிரமாக உபயோகிக்கவேண்டியதன் அவசியத்தை நம் வாலிபர்களில் அநேகர் உணராதிருக்கின்றனர். அவர்களது கண்களுக்கு முன் தெய்வபயமில்லை; அவர்களது சிந்தனைகள் தூயதாகவும் உயர்ந்ததாகவும் இல்லை.

ஒவ்வொரு சிந்தனையையும் ஒவ்வொரு செயலையும் முழுப் பரலோகமும் அறிந்திருக்கிறது. உனது செயல்களை ஒருவேளை உன் தோழர்கள் காணாதிருக்கலாம், ஆயினும் அவைகள் எல்லாம் தூதர்களின் பார்வைக்குமுன் வெளியரங்கமாயிருக்கிறது. சாத்தானின் கண்ணிகளிலிருந்து விலகி நின்று, ஒவ்வொரு தவறான பழக்கத்தையும் வெற்றிகொள்ள போராடுவோருக்குப் பணிவிடை செய்ய தூதர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## உண்மைமிக்க நேர்மை

குணத்தை வனைவதில் சின்னச் சின்ன முரண்பாடுகள் மற்றும் தீமையான சிறுசெயல்களின் வல்லமை கணிக்கப்படவேண்டியபிரகாரம் கணிக்கப்படவில்லை. தேவனுடைய வார்த்தையில் மாமேன்மையான, மிக உயர்வான கொள்கைகள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. நன்மைக்கான ஒவ்வொரு முயற்சியையும் பெலப்படுத்தவும், சிந்தையைச் சீராக்கிக் கட்டுப்படுத்தவும், ஓர் உயர்வான தரத்தை அடைய வாஞ்சிக்கும்படி நம்மை நடத்தவும் அவைகள் நமக்கு அருளப்பட்டிருக்கின்றன.

யோசேப்பு, தானியேல் மற்றும் அவரது நண்பர்களின் சரித்திரத்தில், சத்தியம் எனும் பொற்சங்கிலி எங்ஙனம் வாலிபரை தேவ சிங்காசனத்துடன் இணைத்துக்கட்டுகிறது என்பதை நாம் காணலாம். தங்களது நேர்மையின் பாதையினின்று திசைதிருப்பும் வகையில் அவர்கள் சோதிக்கப்படமுடியாது. இளவரசர்களின் புகழ்ச்சிக்கும் தயவுக்கும் மேலாக தேவதயவை அவர்கள் மதித்திருந்தனர்; தேவன் அவர்களிடம் அன்புகூர்ந்து, தமது கேடகத்தை அவர்கள்மீது விரித்திருந்தார். அவர்களது உண்மைமிக்க நேர்மையினிமித்தம், எல்லா மனிதசக்திக்கும் மேலாக தேவனை கனம்பண்ணவேண்டும் என்ற அவர்களது தீர்மானத்தினிமித்தம், கர்த்தர் மனிதருக்குமுன்பாக வெளிப்படையாக அவர்களைக் கனப்படுத்தினார். மேலே வானத்திலும்

கீழே பூமியிலும் தனமது கரத்தின் கிரியைகள் அனைத்தின்மீதும் அதிகாரம் பெற்றிருக்கிற சேனைகளின் தேவனாகிய கர்த்தரால் அவர்கள் கனம்பெற்றார்கள். இவ்விளைஞர்கள் தங்களது உண்மை நிறங்களை வெளிக்காட்ட வெட்கப்படவில்லை. அரசனின் மன்றத்திலுங்கூட, தங்கள் வார்த்தைகளிலும், தங்கள் பழக்கங்களிலும், தங்கள் செய்கைகளிலும் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடம் தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்தை அவர்கள் அறிக்கையிட்டார்கள். தேவனுடைய கனத்துக்குப் பங்கம் உண்டாக்கும் எந்த பூமிக்குரிய கட்டளைக்கும் அடிபணிய அவர்கள் மறுத்துவிட்டனர். தேவனிடம் தாங்கள்கொண்டிருந்த பற்றுறுதியை அறிக்கையிட அவர்கள் பரலோகத்திலிருந்து பெலன்பெற்றிருந்தார்கள்.

இத்தகைய உயர்ந்த இளைஞர்களின் முன்மாதிரியைப் பின்பற்று வதற்கு நீங்கள் ஆயத்தப்படவேண்டும். உங்கள் நிறங்களைக்குறித்து ஒருபோதும் வெட்கப்படாதீர்கள்; மனிதர்கள் மற்றும் தூதர்களின் பார்வைக் காக அவற்றை அணிந்துகொள்ளுங்கள். இந்த ஆலோசனைக்கு எதிரான பாதையில் நடக்கத் தூண்டும் போலியான விவேகத்தால் கட்டுப்படுத்தப் படாதிருங்கள். கிறிஸ்துவானவர் உங்கள் ஆத்தும ஆலயத்தின் அரியணையில் அமர்ந்திருப்பார் என்ற தீர்மானத்துடன், உங்களது சரியான வார்த்தைகளாலும், உறுதியான நடக்கையினாலும், பக்தியினாலும், உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து, அவரது சேவையில் பயன்படும்படி உங்கள் தாலந்துகளை அவருடைய பாதத்தில் முழுமையாக வைத்துவிடுங்கள்.

## பூரணப் பிரதிஷ்டை

நீங்கள் எங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை உலகம் அறிவதற்காக, உங்களுடைய நிகழ்கால, நித்தியகால நன்மைக்காக, நீதியின்பக்கம் முற்றிலுமாக உங்களை ஒப்படைப்பதே மிகவும் சிறந்ததாகும். தேவனுக்கென்று அநேகர் முழுமையாகத் தங்களை ஒப்படைக்கவில்லை; அவர்களது ஊசலாடும் நிலையே பெலவீனத்துக்கான ஆதாரமாகவும், பிறருக்கு ஒரு தடைக்கல்லாகவும் இருக்கிறது. கொள்கைப் பிடிப்பும், அர்ப்பணிப்பும் இல்லாத அவர்களை சோதனையின் அலைகள் அவர்கள் சரியென்று நினைத்தவற்றிலிருந்தும் சுருட்டிச் சென்றுவிடுகின்றன. ஒவ்வொரு தவறையும் மேற்கொள்ள அவர்கள் பரிசுத்தப் பிரயத்தனம் செய்வதுமில்லை, கிறிஸ்துவினுடைய (எண்ணப்படும்) நீதியினால், ஒரு நீதியுள்ள குணத்தைப் பூரணப்படுத்திக்கொள்வதுமில்லை.

ஒவ்வொரு அறிவுமிக்க மனிதனிடமிருந்தும் எதை எதிர்பார்க்கலாம் என்றறிகிற உரிமை உலகத்திற்கு இருக்கிறது. தீர்மானமிக்க நீதிநெறிகளின்

மொத்த உருவமேயான ஒரு நபர் தனது உடன்பணியாளர்களுக்கு ஒரு உயிருள்ள வல்லமையாக விளங்குவார். தனது கிறிஸ்தவத்தினால் அவர் பிறரிடம் தாக்கத்தை ஏற்படுத்துவார். ஒவ்வொரு நபரின் செல்வாக்கும் நன்மைக்கோ, தீமைக்கோ எவ்வளவுதூரம் ஏதுவாயிருக்கிறது என்பதை அநேகர் பகுத்துணர்வதுமில்லை; பாராட்டுவதுமில்லை. தான் தெரிவுசெய்துகொள்கிற கொள்கைகள், குணத்தின்மீது ஒரு உயிருள்ள வனையும் செல்வாக்காக மாறும் என்பதை ஒவ்வொரு மாணவனும் புரிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்பவர் இயேசுவை நேசிப்பார், கிறிஸ்து எவருக்காக மரித்தாரோ அவர்களனைவரையும் நேசிப்பார்; கிறிஸ்துதாமே அவருக்குள் நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருப்பார். கிறிஸ்துவின் ஆளுகைக்கு அவர் தன்னை முழுவதுமாக அர்ப்பணிப்பார்.

## உங்கள் விடுதலையை உறுதிசெய்யுங்கள்

"தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி" அவர் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தபடியால், தேவனை கனம்பண்ணுவதிலிருந்து எந்த சோதனையோ அல்லது பக்க ஆதாயமோ உங்களைத் திசைதிருப்ப இயலாது என்பதை உங்களது வாழ்வின் சட்டமாக்கிக்கொள்ளுங்கள். அளவற்ற கிரயத்தால் கொள்ளப்பட்டு, மீட்கப்பட்ட, சுயாதீனமுள்ள ஒழுக்க ஜீவியான நீங்கள், உங்களது விடுதலையை உறுதிசெய்துகொள்ளவும், பரலோக இராஜ்யத்தின் ஒரு சுயாதீனமுள்ள பிரஜையாக தேவன் தந்துள்ள அதிகாரங்களை பிரயோகிக்கவும் தேவன் உங்களை அழைக்கிறார். இனி ஒருபோதும் பாவ அடிமைத்தனத்தின்கீழ் இராமல், இராஜாதி இராஜாவுக்கு உண்மையான ஒரு பிரஜையாக இருந்து தேவனுக்கென்று உங்களது விசுவாசத்தை நிரூபித்துக் காட்டுங்கள்.

கர்த்தர் உங்களுக்கு ஜீவனையும் கிருபையையும் அருளி, புனிதமான பொறுப்புடன் உங்களை கனப்படுத்தியிருப்பதற்கு நீங்கள் பாத்திரர் என்பதை இயேசு கிறிஸ்துவின்மூலமாகக் காண்பியுங்கள். தீமையின் வல்லமைக்குக் கீழ்ப்பட்டிருப்பதற்கு நீங்கள் மறுக்கவேண்டும். கிறிஸ்துவின் சேனைவீரர்களாக, ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்கீழும் அவரது இரட்சிப்பின் நியதிகளை நாம் துணிவுடனும், அறிவுடனும் ஏற்றுக்கொள்ளவேண்டும். சரியான கொள்கைகளைப் பேணி, அவைகளின்படி நடக்கவேண்டும். தெய்வீக ஞானம் உங்கள் கால்களுக்குத் தீபமாக இருக்கவேண்டும். உங்களுக்கு உண்மையாயிருங்கள், உங்கள் தேவனுக்கும் உண்மையாயிருங்கள். அசைக்கப்படக்கூடிய அனைத்தும் அசைக்கப்படும்; ஆயினும் சத்தியத்தில்

வேரூன்றி அஸ்திபாரமிட்டிருப்பின், அசைக்கப்பட முடியாதவைகளுடன் நீங்கள் நிலைத்திருப்பீர்கள். தேவனுடைய பிரமாணம் உறுதியானது, மாற்றப்படக்கூடாதது; அது யெகோவாவின் குணத்தின் வெளிப்பாடு. வார்த்தையினாலோ அல்லது செல்வாக்கினாலோ அதன் அதிகாரத்தின்மீது குறைந்த அளவில்கூட அவமதிப்பை உண்டாக்கமாட்டேன் என்று உங்கள் மனதில் தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

## முழுமையான அர்ப்பணிப்பு

கிறிஸ்துவின் மதத்தை உடையவராயிருத்தல் என்பது உங்களது அனைத்தையும் தேவனுக்கென்று முழுமையாக அர்ப்பணித்துவிடுதலும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு இணங்கிவிடுதலுமே ஆகும். பரிசுத்த ஆவியானவரின் வரத்தின்மூலமாக சன்மார்க்க வல்லமை உங்களுக்கு அருளப்படும். தேவனுடைய சேவைக்கென்று முன்னமே நம்பி ஒப்படைக்கப்பட்டிருந்த தாலந்துகள் திரும்ப அருளப்படுவதுடன், அவைகளின் செயல்திறனும் அதிகமாகக் கூட்டி வழங்கப்படும். நமது எல்லா சக்திகளையும் தேவனுக்கென்று அர்ப்பணிப்பது வாழ்வின் சிக்கலை மிகவும் எளிதாக்கும். சுபாவ இருதயத்தின் வெறி உணர்ச்சிகளுடனான ஓராயிரம் போராட்டங்களை அது பெலவீனப்படுத்திக் குறைத்துப்போடுகிறது. இளைஞர் மற்றும் முதியோரின் ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுடன் இணைக்கிற ஒரு பொற்கயிறாக மதம் இருக்கிறது. அதன் வாயிலாகவே விருப்பமும், கீழ்ப்படிதலுமுள்ளவர்கள், இருளும் சிக்கலுமான பாதைகளினூடாக தேவனுடைய நகரத்துக்குப் பத்திரமாகக் கொண்டுவரப்படுகிறார்கள்.

சாதாரண திறமைகளை மட்டுமே பெற்றிருக்கிற வாலிபர்கள் இருக்கின்றனர். இருப்பினும், உயர்வும், தூயதுமான கொள்கைகளின் அடிப்படையில் செயல்படுகிற ஆசிரியர்களின்கீழ் பெறும் கல்வி மற்றும் கட்டுப்பாடுகளினால், தேவன் அவர்களை அழைத்திருக்கிற நம்பகமான பணிக்குத் தகுதியடைந்தவர்களாக பயிற்சிப் பாசறையிலிருந்து வெளி வரலாம். சுபாவ இயல்புகளை மேற்கொள்ளத் தீர்மானிக்காததால், தோல்வியைத் தழுவுகிற வாலிபர்கள் இருக்கின்றனர்; அவர்கள் தேவனுடைய வார்த்தையில் வெளிப்படும் அவரது குரலை கவனிக்கமாட்டார்கள். சோதனைக்கெதிராக தங்கள் ஆத்துமாக்களைக் காக்கவும், எல்லா அபாயச் சூழல்களிலும் தங்கள் கடமையைச் செய்யவும் அவர்கள் தீர்மானிக்கவில்லை. ஆபத்தான பயணத்தில், விபத்து மற்றும் அழிவிலிருந்து தப்புவதற்கு உதவுகிற வழிகாட்டியையோ அல்லது ஆலோசனையையோ மறுத்து, நிச்சயமான அழிவின் பாதையில் செல்லும் நபருக்கு ஒப்பாக அவர்கள் இருக்கிறார்கள்.

## உங்கள் முடிவைத் தெரிந்துகொள்ளுதல்

தனது சொந்த முடிவுக்குத் தானே அதிகாரி என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தால் எத்தனை நலமாயிருக்கும்! இவ்வாழ்க்கை மற்றும் இனிவரப்போகும் அழிவில்லா வாழ்க்கையின் மகிழ்ச்சி உன்னைச்சார்ந்துதான் இருக்கிறது. நீ தெரிந்துகொண்டால், தங்களுடைய செல்வாக்கினால் உன் எண்ணங்களையும், உன் வார்த்தைகளையும், உன் ஒழுக்கநெறிகளையும் மலிவாக்குகிற நண்பர்களை நீ பெறலாம். பசிநாட்டத்தையும் வெறி உணர்ச்சியையும் கட்டவிழ்த்து, அதிகாரத்தை அசட்டைசெய்து, நாகரீகமற்ற மொழியைப் பயன்படுத்தி, மிகவும் கீழான நிலைக்கு உன்னை நீயே தள்ளிக் கெடுத்துக்கொள்ளலாம். உன் செல்வாக்கு பிறரைக் கறைபடுத்துவதாக இருந்து, கிறிஸ்துவிடம் நீ கொண்டுவந்திருக்க வேண்டியவர்களின் அழிவுக்கு நீயே காரணமாகலாம். கிறிஸ்துவைவிட்டும், நீதியைவிட்டும், பரிசுத்தத்தைவிட்டும், பரலோகத்தைவிட்டும் வழிவிலகச் செய்யலாம். “இவனுடைய செல்வாக்கு இல்லாமல் இருந்திருந்தால், நான் தடுமாறியிருந்திருக்கவுமாட்டேன், மதத்தைப் பரிகசித்திருக்கவுமாட்டேன். அவனிடம் வெளிச்சம் இருந்தது, பரலோகத்திற்கான பாதையை அவன் அறிந்திருந்தான். நானோ அறியாதவனாக, கண்கள் கட்டப்பட்டவனாக அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன்” என்று நியாயத்தீர்ப்பில் இரட்சிப்பை இழந்துபோனவர்கள் உன்னைப் பார்த்துச் சொல்வார்கள். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு நாம் என்ன பதில்சொல்லுவோம்? ஆத்துமாக்களை எங்கே நடத்திச் செல்லுகிறோம் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டியது எத்தனை முக்கியமானது. நித்திய உலகின் கண்ணோட்டத்தில் வாழ்கிற நாம், நமது செல்வாக்கின் விளைவை எவ்வளவு ஜாக்கிரதையாகக் கணித்திடவேண்டும். நமது கணிப்பிலிருந்து நாம் நித்தியத்தைத் தவறவிட்டு விடலாகாது. மாறாக, இச்செயல் தேவனுக்குப் பிரியமாயிருக்குமோ? நியாயத்தைக்குறித்த மிகக்குறைவான வெளிச்சத்தையும், ஆதாரத்தையும் கொண்டிருக்கிறவர்களின் மனங்களின்மீது எனது செயலின் செல்வாக்கு எப்படிப்பட்டதாயிருக்கும்? என்று எப்பொழுதும் கேட்டுப்பார்ப்பதற்கு நம்மை நாமே பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

## சிந்தனைக்குரிய கேள்விகள்

வாலிபர் வேத வாக்கியங்களை ஆராய்ந்து, அதுபோன்ற சூழ்நிலைகளில் கிறிஸ்து எவ்வாறு செயல்பட்டிருப்பார் என்று நினைக்கி றார்களோ அதேவிதமாகச் செய்வார்களானால் நலமாயிருக்கும்! பரலோகத்திலிருந்து அறிவைப் பெறுவதற்கான நமது சிலாக்கியங்கள் நம்மீது பெரும்பொறுப்புகளைச் சுமத்தியிருக்கின்றன; நான் ஒளியில்

நடக்கிறேனா? எனக்கு அருளப்பட்டிருக்கிற மாபெரும் வெளிச்சத்தின்படி சரியான வழியில் நான் நடத்திச் செல்கிறேனா? அல்லது முடவர்கள் வழியைவிட்டுத் திரும்பும்வண்ணமாக கோணலான பாதைகளைச் செய்து கொண்டிருக்கிறேனா?... என்று தீவிர அக்கறையுடன் நாம் கேள்விகளை எழுப்ப வேண்டும்.

சத்தியத்தின் மதிப்பு, பரிசுத்தம் மற்றும் அதிகாரம்குறித்த ஒரு ஆழமான, நிலையான உணர்வினால் நாம் ஆட்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். பிரியமான வாலிபரே, பரலோக ஒளியின் பிரகாசமான கதிர்கள் உங்களது பாதைகளின்மீது ஒளிவீசிக்கொண்டிருக்கிறது; உங்களது வாய்ப்புகளை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்று உங்களை கேட்டுக் கொள்கிறேன். பரலோகம் அனுப்பும் ஒவ்வொரு ஒளிக்கதிரையும் பெற்று பேணி வையுங்கள்; உங்களது பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசத்தில் வளரும்.—The Youth's Instructor, February 2, 1893.

## 5

# நமது சிலாக்கியத்தின் நாள்

கடந்த தலைமுறைகளில் தேவனுக்காக உழைத்தவர்களின் அனுபவத்திலிருந்து இன்றைக்கு நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் இருக்கின்றன. சாத்தானிய சேனைகளைச் சந்திப்பதற்குத் தங்களைத் தகுதிப்படுத்திக்கொண்ட இத்தகைய மனிதர்களின் பிரச்சனைகளையும், துன்பங்களையும் பாடுகளையும்பற்றி நாம் எவ்வளவு குறைவாக அறிந்திருக் கிறோம். தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொண்டவர் களாக, சாத்தானின் தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்க அவர்கள் திராணி யுள்ளவர்களாயிருந்தனர்…

கடந்த காலங்களில் தேவனுக்கென்றும் அவருடைய ஊழியத்தின் உயர்வுக்கென்றும் தங்களை ஒப்புக்கொடுத்திருந்த இத்தகைய மனிதர்கள் கொள்கையில் எ∴கைப்போன்று உறுதியாயிருந்தனர். தோல்வியுறாத, சோர்ந்துபோகாத மனிதர்களாக அவர்கள் இருந்தனர்; தானியேலைப் போன்று, தேவனுக்காக பயபக்தி மற்றும் வைராக்கியமிக்கவர்களாகவும், உயர்ந்த நோக்கங்கள் மற்றும் பேரார்வம் நிறைந்தவர்களாகவும் அவர்கள் இருந்தனர். இப்பொழுது பணியில் ஈடுபட்டிருக்கிற எவரைப்போன்றும் அவர்களும் பெலவீனர்களாக, உதவியற்றவர்களாகவே இருந்தனர்; ஆயினும் தங்களது

முழு நம்பிக்கையையும் தேவன்மீது வைத்திருந்தனர். அவர்களிடம் செல்வம் இருந்தது, ஆயினும் அது மனமும், குணமும் பண்பட்ட நிலையினால் ஆகியிருந்தது. தேவனை எல்லாவற்றிலும் முதன்மையும், கடைசியும், சிறந்தவருமாக ஆக்கிக்கொள்ளும் ஒவ்வொருவரும் இச்செல்வத்தை அடையமுடியும். ஞானமும், அறிவும், நல்லொழுக்கமும், வல்லமையும் அற்றவர்களாக இருந்தபோதிலும், கற்றுக்கொள்வது நமது சிலாக்கியம் என்றுணர்ந்து பாடங்களைக் கிறிஸ்துவிடமிருந்து கற்றுக்கொள்வோமாயின், இவையனைத்தையும் நாம் பெற்றுக்கொள்ளலாம்.

## தேவைப்படும் பணியாளர்களின் தகுதி

கடந்த தலைமுறைகளில் எளிதில் அடையக்கூடாதிருந்த நன்மைகளும், சிலாக்கியங்களும் இக்காலத்தில் நமக்கு இருக்கின்றன. அதிகமான வெளிச்சம் நம்மிடம் உண்டு; தேவனைத் தங்களது ஆதாரமாக்கிக்கொண்டு, உலகத்தில் தெளிவான, பிரகாசமான ஒளிக்கதிர்களை வீசுவதற்கு அவரிடமிருந்து வல்லமையைப் பெற்றுக்கொண்ட உண்மைமிக்க வீரர்களின் உழைப்பின்மூலமாகவே அது நமக்குக் கிடைத்திருக்கிறது. தேவன் தங்களுக்குத் தந்த ஒளியை கடந்த காலங்களின் மேன்மையான ஆண்களும் பெண்களும் மேம்படுத்தினதைப்போலவே, மேம்படுத்தும்படியான அதிகப்படியான வெளிச்சம் இக்காலத்தில் நம்மிடமும் இருக்கிறது. கிறிஸ்துவின் பள்ளியில் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பாடங்களைக் கற்றுக்கொள்ள அவர்கள் அதிகம் போராடினர்; என்றாலும் வீணாகப் போராடவில்லை. அவர்களது அயராத முயற்சிகள் வெகுமானம் பெற்றன. எல்லா வல்லமைகளிலும் மேலான வல்லமையுடன் அவர்கள் தங்களை இணைத்துக் கொண்டனர். ஆயினும் தேவையிலுள்ள ஒரு உலகத்திற்கு சத்தியப் பொக்கிஷங்களை வெற்றிகரமாக அளித்திட, நித்திய உண்மைகளை ஆழமாக, உயர்வாக, விரிவாகப் புரிந்துகொள்ள எப்பொழுதும் ஏங்கிக் கொண்டிருந்தனர்.

இத்தகைய குணமுள்ள பணியாளர்கள் இப்பொழுது தேவை. தேவனுடைய பார்வையில் புருஷராகக் காணப்பட்டு பரலோகப் புத்தகங்களில் இவ்விதமாகப் பதிவுசெய்யப்படுபவர்கள், துன்மார்க்கத்தில் கிடக்கும் உலகத்தில் தேவனுடைய ராஜ்யத்தைச் சிறந்த முறையில் பிரதிபலிக்கும் வண்ணம் தானியேலைப்போன்று ஒவ்வொரு மனோசக்தியையும் பயிற்றுவிக்கிறவர்களே ஆவர். அறிவுவிருத்தி அவசியமே; தேவனுடைய ஊழியத்தில் உபயோகப்படுத்தப்படும்போது, அது நன்மைக்கேதுவான வல்லமையாயிருக்கிறது. சிந்தனாவாதிகளும், கொள்கைப் பற்றுள்ளவர்களும், புரிதலிலும் பகுத்தறிவதிலும் தொடர்ச்சியாய் வளர்கின்ற மனிதர்களுமே உலகத்திற்குத் தேவை. எல்லா தேசத்தாருக்கும், பாஷைக்காரருக்கும்,

ஜனக்கூட்டத்தாருக்கும் விரைவாக செல்லும்வண்ணம் சத்தியத்திற்குச் சிறகுகள் கொடுக்கப்பட, இந்த ஊழியத்தை திறம்படச் செய்யக்கூடிய மனிதர்கள் தேவை.

## நமது திறமையின் மூலாதாரம்

நேர்மையான உழைப்பை விரும்புகிற, உழைப்பதற்குத் தங்கள் சக்திகளைப் பயன்படுத்தப் பயப்படாதிருக்கிற வாலிபர்களை நாம் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட வாலிபர்கள் தங்கள் வழியில் தவறாதவர்களானதால், எவ்விடத்திலும் நல்வாய்ப்பைப் பெறுவார் கள்; மனதிலும் ஆத்துமாவிலும் அவர்கள் தெய்வீக சாயலைத் தாங்கி நிற்கின்றனர். ஒரே நோக்கமுடையவர்களாக, அவர்கள் தொடர்ந்து முன்னேறி, மேல்நோக்கி வெற்றி முழக்கமிட்டுச் செல்கின்றனர். ஆனால் சோம்பேறிகளுக்கும், பயப்படுகிறவர்களுக்கும், அவிசுவாசிகளுக்கும், தங்களது விசுவாசக் குறைவினாலும் கிறிஸ்துவிற்காக சுயத்தை மறுக்கும் விருப்பமின்மையினாலும் வேலையை முன்னேறவிடாமல் தடை செய்பவர்களுக்கும் அழைப்பு இல்லை....

தேவன் தம்முடன் இணைந்து பணியாளர்களாகச் செயல்படுவதற்கு அழைப்பு விடுக்கிறார். கிறிஸ்துவுடன் இணையும் மனிதத்தன்மை தூய்மையும் உண்மையுமுள்ளதாகிறது. கிறிஸ்துவானவர் திறமையை அருளுகிறார். நன்மைக்கேதுவான வல்லமையாக மனிதன் மாறுகிறான். உண்மையும் நேர்மையும் தேவகுணங்களாகும். இத்தகைய குணங்களைக் கொண்டிருக்கிறவன் வெல்ல முடியாத ஒரு வல்லமையைக்கொண்டிருப் பவனாக விளங்குகிறான்.—Review and Herald, March 10, 1903.

## உள்ளிருக்கும் நீதி

வெளியில் விளங்கும் நீதி உள்ளிருக்கும் நீதிக்குச் சாட்சியாக விளங்குகிறது. உள்ளாக நீதியுள்ளவன் கடினமனமுள்ளவனாக, பரிதாப மற்றவனாக இருக்கமாட்டான்; மாறாக, நாளுக்கு நாள் கிறிஸ்துவின் சாயலில் வளர்ந்து, பெலத்தின்மேல் பெலனடைகிறான். சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்படுகிறவன் தன்னடக்கமுள்ளவனாயிருந்து, கிருபையானது மகிமையில் மறைகிற வரைக்கும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடக்கிறான். நம்மை நீதிமானாக்குகிற நீதி—எண்ணப்படும் நீதி ஆகும்; நம்மைப் பரிசுத்தவானாக்குகிற நீதி—அருளப்படும் நீதி ஆகும். முதலாவது நீதி பரலோகத்திற்கான நமது உரிமைச் சான்றாகும்; இரண்டாவது நீதி பரலோகத்திற்கான நமது தகுதிச்சான்றாகும்.—Review and Herald, June, 1895.

# 6

# எட்டிப் பிடிக்கக்கூடிய உயரங்கள்

பிரியமான வாலிபரே, உங்களது வாழ்வின் இலட்சியமும், நோக்கமும் என்ன? உலகில் பெயரும் பதவியும் பெறுவதற்காக, கல்வியைக்குறித்துப் பேராவல் கொண்டுள்ளீரா? அறிவாற்றல் சார்ந்த மேன்மையின் உச்சியில் ஒரு நாள் நிற்பேன்; ஆலோசனை மன்றங்களிலும் சட்டசபைக் கூட்டங் களிலும் அமர்ந்து, தேசத்திற்கான சட்டங்களை அமல்படுத்த உதவுவேன் என்பதுபோன்ற—வெளியில் சொல்லமுடியாத எண்ணங்களைக் கொண்டிருக் கிறீரா? இத்தகைய பேரார்வங்களில் தவறொன்றுமில்லை. உங்கள் ஒவ்வொருவரது குறிக்கோளையும் குறிப்பிட்டு வைத்துக்கொள்ளலாம். அற்பமான சாதனைகளில் நீங்கள் திருப்தியடைந்துவிடக்கூடாது. உயர்ந்த இலட்சியம் கொள்ளுங்கள், அதை அடைவதற்கு எந்த வேதனைகளையும் சகிக்கத் தயங்காதிருங்கள்.

### பக்திவாழ்வே வாழ்வின் அடித்தளம்

கர்த்தருக்குப் பயப்படுதலே அனைத்து மெய்யான மேன்மைக்கும் அஸ்திபாரமாக இருக்கிறது. வாழ்வின் எல்லா உறவுகளுக்குள்ளும் நீங்கள் சுமந்துசெல்ல வேண்டிய கொள்கை—நேர்மை—அலைவுறாத நேர்மையே. உங்களது பக்திவாழ்வை உங்களுடைய பள்ளிக்கூட வாழ்வுக்குள்ளும், தங்கும் விடுதிக்குள்ளும், எல்லா உத்தியோகங்களுக்குள்ளும் எடுத்துச் செல்லுங்கள். கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் உன்னதமான உரிமை பாராட்டல்களின்கீழ் எல்லா லௌகீக உரிமை பாராட்டல்களையும் ஆர்வங் களையும் கட்டுப்படுத்தி, கறையற்ற கிறிஸ்தவ குணத்தின் தூய்மையை யும் உறுதியையும் மேம்படுத்திக்கொள்ள பாடங்களை எப்படித் தேர்ந்தெடுப்பது என்பதே உங்களுடைய இப்போதைய முக்கிய கேள்வியாயிருக்கிறது.

உங்களது படைப்பிலுள்ள தேவநோக்கத்தை அறிவித்து, அவ்விதமாக சமூகத்தோடும் வாழ்வோடும் உங்களை தொடர்படுத்துவதற்கு ஏதுவாக, உங்களால் கூடியமட்டும் இப்பொழுது கட்டிக்கொள்ள விரும்புகிறீர்கள். கிறிஸ்துவின் சீடர்களாகிய உங்களுக்கு உலக அலுவல்களில் ஈடுபடுவதற்குத் தடையில்லை; ஆனால் உங்களது பக்திவாழ்வை உங்களுடன் நீங்கள் சுமந்துசெல்லவேண்டும். எந்தத் தொழிலில் உங்களைத் தகுதிப்படுத்தினாலும், கொள்கையைத் தியாகம் செய்யாவிட்டால் அதில் வெற்றி காணமுடியாது என்ற அபிப்பிராயத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதிருங்கள்.

## உயர்ந்த பொறுப்புகள்

பக்திவாழ்வுக் கொள்கையில் சமநிலையிருந்தால், நீங்கள் விரும்பும் எந்த உயரத்துக்கும் நீங்கள் ஏறிவிடலாம். அடையவேண்டுமென்று தேவன் திட்டமிட்டுள்ள மேன்மையான உயர்வுநிலைக்கு நீங்கள் வருவதைக் காண்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். அருமையான வாலிபரை இயேசு நேசிக்கிறார்; வளர்ச்சியடையாத, முன்னேற்றம் பெறாத தாலந்துகளுடன் அவர்கள் வளர்வதைக் காண்பதில் அவர் பிரியப்படுகிறதில்லை. உறுதியான கொள்கையில் வலிமைபடைத்த மனிதர்களாக, உயர்ந்த பொறுப்புகள் ஒப்படைக்கப்படுவதற்குத் தகுதிப்பட்டவர்களாக அவர்கள் மாறலாம். இதற்காக அவர்கள் ஒவ்வொரு நரம்பையும் முறைப்படி பயிற்றுவிக்கலாம்.

ஆனால் தேவன் அளித்துள்ள சக்திகளைத் தீமை செய்யவும், பிறரை அழிக்கவும் திரித்துப் பயன்படுத்தும் கொடுங்குற்றத்தை ஒருபோதும் செய்யாதிருங்கள். ஒழுக்கச் சிதைவும் சீர்கேடும் பரவத் தங்களது திறமையைப் பயன்படுத்துகிற வரம்பெற்ற மனிதர்கள் இருக்கிறார்கள்; ஆனால் அப்படிப்பட்ட அனைவரும் பெருமைப்படமுடியாத ஒரு அறுவடையை விளையச் செய்யும் விதையை விதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். சமுதாயத்தில் ஆசீர்வாதத்திற்குப் பதிலாக, நாசத்தையும் ஆபத்தையும் பரவச்செய்கிற விதத்தில் தேவன் அளித்துள்ள திறமைகளைப் பயன்படுத்துவது ஒரு அச்சமூட்டும் காரியமாகும். நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தாலந்தை ஒரு துணியில் சுற்றி, உலகத்தில் அதை மறைத்துவைத்துவிடுவதும் ஒரு அச்சமூட்டும் காரியமாகும்; அது ஜீவ கிரீடத்தைப் புறம்பே தள்ளுவதைப் போன்றது. நமது சேவையை தேவன் உரிமைகோருகிறார். ஒவ்வொருவரும் தாங்கிநிற்க வேண்டிய பொறுப்புகள் உண்டு; இத்தகைய பொறுப்புகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு, உண்மையாகவும் உணர்வுப்பூர்வமாகவும் செய்து முடிக்கும்போதுமட்டுமே வாழ்வின் மாபெரும் பணியை நாம் நிறைவேற்ற முடியும்.

## பக்திவாழ்வின் செல்வாக்கு

“நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை” என்று ஞானி கூறியுள்ளார். ஆனால் பக்திவாழ்வு உங்களை சோகமும், சோர்வுமுள்ளவராக்கி, வெற்றிக்கான வழியை அடைத்துவிடும் என்று நொடிப்பொழுதுகூட நினைத்துவிடாதிருங்கள். கிறிஸ்துவின் மார்க்கம் ஒரு மனோசக்தியைகூட துடைத்தழிப்பதில்லை; பெலவீனப்படுத்துவதும் இல்லை. எந்த ஒரு உண்மையான சந்தோஷத்தையும் அனுபவிக்கக்கூடாதபடி எவ்விதத்திலும் அது உங்களைத் தகுதியற்றவர்களாக்கிவிடுவதில்லை; வாழ்வில் உங்கள் ஆர்வத்தைக் குறைப்பதற்கோ அல்லது நண்பர்கள்

மற்றும் சமுதாயத்தின் உரிமை கோருதல்களுக்கு உங்களை அக்கறை யற்றவர்களாக்கிவிடுவதற்கோ அது வடிவமைக்கப்படவில்லை. அது வாழ்க்கையை இரட்டுத்துணிக்குள் பொதிந்துவைக்கிறதில்லை; ஆழ்ந்துவிடும் பெருமூச்சுகளிலும், முனகல்களிலும் வெளியாக்கப்படுவதில்லை, இல்லை, இல்லை; அனைத்திலும் ஆண்டவரை முதன்மையும், கடைசியும் சிறந்த வருமாக்குபவர்களே உலகின் மகிழ்ச்சி நிறைந்த மக்கள். புன்சிரிப்பு களும் சூரியப்பிரகாசமும் அவர்களது முகத்தோற்றத்திலிருந்து அகற்றப் படுவதில்லை. பக்திவாழ்வு அதைப் பெறுகிற நபரை கரடுமுரடானவராக, அசுத்தமானவராக, பண்பற்றவராக ஆக்குகிறதில்லை; மாறாக, அவரை உயர்த்தி மேன்மைப்படுத்துகிறது, அவரது விருப்பத்தைத் திருத்தி அமைக்கிறது, அவரது பகுத்தறிவைப் பரிசுத்தப்படுத்துகிறது, பரலோக தூதர்களின் சங்கத்திற்கும் இயேசு ஆயத்தம் செய்யச் சென்றிருக்கிற இல்லத்துக்கும் அவரைத் தகுதிப்படுத்துகிறது.

இயேசுவானவர் மகிழ்ச்சியின் ஊற்றாக இருக்கிறார் என்ற உண்மையைக் காண நாம் ஒருபோதும் தவறிவிடக்கூடாது. மனிதர்களின் துயரைக் கண்டு அவர் மகிழ்பவரல்ல, அவர்கள் மகிழ்வுடன் இருப்பதைக் காணவே விரும்புகிறார். கிறிஸ்தவர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டில் அநேக மகிழ்ச்சியின் ஊற்றுக்களைக் கொண்டுள்ளனர். தவறிழையாத நுணுக்கத்துடன் எத்தகைய இன்பங்கள் தகுதியானது, சரியானது என்பதை அவர்களால் சொல்லமுடியும். மனதைச் சிதறடித்து, ஆத்துமாவைக் கீழ்நிலைக்குத் தள்ளாத, சுயமதிப்பைக் கெடுக்குமளவிற்கு ஒரு வருத்தமான பிற்செல்வாக்கை ஏற்படுத்தி மனக்கசப்பூட்டாத அல்லது பயன்பாட்டிற்கான பாதையைத் தடைசெய்யாத பொழுதுபோக்குகளை அவர்கள் அனுபவிக்கலாம். தங்களுடன் இயேசுவையும் அழைத்துச் சென்று, ஜெபசிந்தையைக் காத்துக்கொள்ளக்கூடுமானால், அவர்கள் முற்றிலும் பாதுகாப்பாக இருப்பர்...

## நமது தாலந்துகளின் உக்கிராணத்துவம்

இளம் நண்பர்களே, அனைத்து முன்னேற்றத்திற்கும் மிகவும் அடிப்படை கர்த்தருக்குப் பயப்படுதலே ஆகும்; அதுவே ஞானத்தின் ஆரம்பம். உங்கள் பரமபிதா உங்கள்மீது உரிமைகோருகிறார்; உங்கள் சார்பானப் பரிந்துரை அல்லது புண்ணியம் எதுவுமின்றி, அவர் தமது தெய்வீக ஆசீர்வாதங்களை உங்களுக்கு அருளுகிறார்; இதற்கும்மேலாக, தமது பிரியமான குமாரன் எனும் ஒரே ஈவுக்குள் பரலோகம் முழுவதையுமே அவர் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். இந்த எல்லையற்ற ஈவிற்குப் பிரதிபலனாக, உங்களது விருப்பமான கீழ்ப்படிதலை அவர் உரிமைகோருகிறார். தேவகுமாரனின்

விலையேறப்பெற்ற இரத்தம் எனும் ஒரு விலைக்கிரயத்தினால் நீங்கள் கொள்ளப்பட்டிருக்கிறபடியால், நீங்கள் அனுபவிக்கும் சிலாக்கியங்களை சரியானவிதத்தில் பயன்படுத்த அவர் கோருகிறார். உங்களது அறிவு மற்றும் ஒழுக்க மனோசக்திகள், ஞானமுள்ள பயன்பாட்டிற்கென உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற தாலந்துகளும், தேவனுடைய ஈவுகளுமாகும். முறையாகப் பயன்படுத்தாமல் அவைகளைக் கிடப்பில் போடுவதற்கோ அல்லது செயலின்மையினால் முடக்கிப்போட்டு வளர்ச்சியைத் தடுப்பதற்கோ உங்களுக்கு உரிமை இல்லை. உங்கள் மீதிருக்கிற கனமான பொறுப்புகளை உண்மையுடன் செய்துமுடிப்பீர்களோ இல்லையோ அல்லது உங்களது முயற்சிகளுக்கு நன்கு இயக்கமளித்து சிறப்பாகச் செயல்படுவீர்களோ இல்லையோ என்பதை நீங்கள்தான் தீர்மானிக்கவேண்டும்.

கடைசிநாட்களின் துன்பநெருக்கடிகளில் நாம் வாழ்ந்துகொண் டிருக்கிறோம். உங்களில் அமையப்பெற்று வருகிற குணாதிசயங்களில் முழுப் பரலோகமும் ஆர்வமுடையதாயிருக்கிறது. இச்சையினால் உலகத்தி லுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாவ தற்கான எல்லா முன்னேற்பாடுகளும் உங்களுக்காகச் செய்யப்பட்டிருக்கிறது. மனிதன் தனது சொந்த, பெலவீன முயற்சிகளினால் தீமையின் சக்திகளை மேற்கொள்ளும்படித் தனியே விட்டுவிடப்படவில்லை. சகாயம் சமீபமாயிருக்கிறது, அதை உண்மையாகவே வாஞ்சிக்கிற ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் அது அருளப்படும். தரிசனத்தில் யாக்கோபு கண்ட ஏணியில் ஏறுவதும் இறங்குவதுமாயிருந்த தேவதூதர்கள், உன்னதமான பரலோகத்திற்கு ஏறவிரும்பும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் சகாயம் செய்வார்கள். அவர்கள் தேவஜனத்தைக் காக்கிறார்கள், ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்கப்படும் விதத்தைக் கண்காணிக்கிறார்கள். பிரகாசிக்கும் பாதையில் ஏறும் எவரும் வெகுமானம் பெறுவர்; அவர்கள் தங்களது எஜமானனின் சந்தோஷத்துக்குள் பிரவேசிப்பர்.—Fundamentals of Christian Education, p. 82–86.

## அடையவேண்டிய ஓர் உன்னத இலக்கு

தமது பிள்ளைகளுக்கான தேவனுடைய குறிக்கோள் மிக உயர்ந்ததாக, மனித எண்ணங்கள் எட்டுவதற்கும் மேலே உயர்வானதாக இருக்கிறது. தேவபக்தி-தேவசாயல் என்பதே அடையவேண்டிய இலக்காக உள்ளது. தொடர்ச்சியான வளர்ச்சியின் பாதையானது மாணவனுக்கு முன்பாகத் திறக்கப்பட்டுள்ளது. நன்மையான, தூய்மையான, சிறப்பான அனைத்தும் உள்ளடக்கிய சாதிக்கவேண்டிய ஒரு நோக்கமும், அடையவேண்டிய ஒரு தகுதியும் மாணவனுக்கு இருக்கிறது. உண்மையான அறிவின் ஒவ்வொரு

பிரிவிலும் எந்தளவிற்கு வேகமாகவும், தூரமாகவும் செல்லமுடியுமோ அந்தளவிற்கு அவன் முன்னேறிச்செல்வான். ஆனால் பூமியைக் காட்டிலும் வானங்கள் உயர்ந்திருக்கிறதைப்போல, வெறும் சுயநலம் மற்றும் உலக விருப்பங்களைக் காட்டிலும் உயர்வான நோக்கங்களை உடையதாக அவனது முயற்சிகள் இருக்கும்.—Education, p. 18,19.

### தேவகிருபையின் வாய்க்கால்கள்

தேவன் தமது கிருபையின் பொக்கிஷங்களையும், ஆராய்ந்துமுடியாத கிறிஸ்துவின் ஐசுவரியங்களையும் உலகத்திற்குப் பகிர்ந்தளிக்கிறதற்கு ஓர் உயிருள்ள வாய்க்காலாக இருப்பது ஒவ்வொரு ஆத்துமாவின் சிலாக்கியமாகும். தமது ஆவியையும் குணத்தையும் உலகத்திற்குப் பிரதிபலிக்கும் முகவர் களைப்போன்று வேறெதையும் கிறிஸ்து அதிகமாக விரும்பவில்லை. இரட்சகரின் அன்பு மனித இனத்தின்மூலமாக வெளிக்காட்டப்படுவதைப் போன்று வேறு எதுவும் உலகத்திற்கு அதிகம் தேவைப்படவில்லை. மனித இதயங்களுக்குச் சந்தோஷமாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கிற பரிசுத்த தைலத்தைக் கொண்டுசெல்லக் கூடியதான வாய்க்கால்களுக்காகப் பரலோகம் முழுவதும் காத்திருக்கிறது.—Christ's Object Lessons, p. 419.

## 7

# திறமையின் தராதரங்கள்

மிகப்பெரிய பொறுப்புகள் வாலிபர்மீது சுமந்திருக்கின்றன. கூடுதலான வெளிச்சத்தையும் அறிவையும் பெற்று வாழும் இந்தத் தலைமுறை வாலிபர்களிடமிருந்து தேவன் அதிகம் எதிர்பார்க்கிறார். இந்த வெளிச்சத்தையும் அறிவையும் அவர்கள் பகிர்ந்திடவேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். அநேகரது மனங்களை மூடியிருக்கிற மூடநம்பிக்கையையும், அசத்தியத்தையும் துரத்துவதில் அவர்களைப் பயன்படுத்துவதற்கு அவர் விரும்புகிறார். அறிவு மற்றும் அனுபவத்தின் ஒவ்வொரு எழுத்தையும் உறுப்பையும் சேகரித்துக் கொள்வதில் அவர்கள் தங்களையே ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்புகள் மற்றும் சிலாக்கியங்களைக்குறித்து தேவன் அவர்களிடம் கணக்குக் கேட்பார். அவர்களுக்கு முன்னிருக்கும் பணி அவர்களது ஆர்வமிக்க முயற்சிக்காகக் காத்திருக்கிறது. காலத்தின் தேவைக்கேற்ப, மூலைக்கு மூலை அதை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டியதாயிருக்கிறது.

வாலிபர்கள் தங்களது சிந்தைகளையும் இதயங்களையும் தேவசேவைக்கென அர்ப்பணித்தால், திறமை மற்றும் பயன்பாட்டின் உயர்ந்த தராதரத்தை அவர்கள் அடைவார்கள். வாலிபர்கள் அடையவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிற தராதரம் இதுவே. இதைக்காட்டிலும் குறைவாகச் செய்வது என்பது தேவன் அளித்துள்ள வாய்ப்புகளில் அதிகமானவற்றைப் பயன்படுத்த மறுப்பதாகும். இது தேவனுக்கெதிரான துரோகமாகவும், மனித இனத்தின் நலனுக்காக உழைப்பதில் ஒரு தோல்வியாகவும் கருதப்படும்.

## சேவைக்காகத் தகுதியடைதல்

தேவனுக்கான பணியாளர்களாகப் பிரயாசப்படுகிறவர்களும், பகிர்ந்தளிப்பதற்காகப் பெறவேண்டுமென்று ஆவலுடன் தேடுகிறவர்களும், கூறியறிவிக்கும் வாய்க்கால்களாக விளங்குமாறு தேவனிடமிருந்து ஒளியைப் பெற்றுக்கொண்டேயிருப்பார்கள். தானியேலைப் போல, வாலிப ஆண்களும் வாலிபப்பெண்களும் தங்களது எல்லாப் பழக்கங்களையும், பசிநாட்டங்களையும், தீவிர உணர்ச்சிகளையும் தேவனுடைய கோரிக்கைகளுக்கு இணங்கச் செய்துவிடுவார்களானால், உன்னதமான பணிக்காக அவர்கள் தங்களையே தகுதியாக்கிக்கொள்வார்கள். அவர்கள் தங்கள் சிந்தைகளிலிருந்து எல்லா மலிவும், மடத்தனமுமானவைகளை அப்புறப்படுத்த வேண்டும். தேவகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து, அவரது இரத்தத்தைப் பானம்பண்ணி, அவரில் விசுவாசம் வைத்து வாழ்கிறவர்களின் வாழ்வு மற்றும் அனுபவத்தில், புத்தியீனமும், கேளிக்கையை விரும்புகிறதுமான இயல்புகள் அகற்றப்படவேண்டும்.

கற்றுக்கொள்வதினால் உண்டாகும் அனைத்து நன்மைகளும் அடையக்கூடிய தூரத்திலே இருந்தாலும், கர்த்தருடைய தோட்டத்தின் சில பகுதியில் பணிசெய்ய அவர்களைத் தகுதியாக்குகிற கல்வியைப் பெறுவதில் தாங்கள் தோல்வியடைக்கூடும் என்பதை அவர்கள் உணரவேண்டும். அவசியப்படுகின்ற அறிவார்ந்த பக்தியின் தகுதிகளின்றி அவர்கள் தேவசேவையில் ஈடுபடமுடியாது. உன்னதமும் மேன்மையுமான நோக்கத்தினால் பலப்படவேண்டிய அருமையான சிந்தையை அவர்கள் சிற்றின்பத்துக்கும், கேளிக்கைக்கும் ஒப்புக்கொடுப்பார்களானால், தேவன் அவர்களுக்கு அளித்திருக்கிற சக்திகளை அவமதிக்கிறார்கள்; ஞானமுள்ள பயன்பாட்டினால் அவர்களது தாலந்துகளை மேம்படுத்தத் தவறுகிறபடியினால், அவருக்கு முன்பாகக் குற்றமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

அவர்களது நொடித்துப்போன பக்திவாழ்வு தேவனுக்குமுன் குற்றச் செயலாக இருக்கிறது. தங்களுடன் பழகுகிறவர்களின் மனங்களை அவர்கள்

கறைப்படுத்தி, சீர்கெடுத்து விடுகின்றனர். தங்களது வார்த்தைகளினாலும் செயல்களினாலும் புனிதக் காரியங்களின்மீது ஒரு அக்கறையற்ற கவனமின்மையை அவர்கள் ஊக்கப்படுத்தி விடுகின்றனர். அவர்கள் தங்களது ஆத்துமாக்களை அபாயத்துக்குள்ளாக்குவது மட்டுமில்லாது, தங்களுடன் தொடர்புக்குள் வரும் யாவருக்கும் தங்களது மாதிரியினால் அழிவுண்டாக்குகின்றனர். கிறிஸ்துவைப் பிரதிபலிக்க அவர்கள் முற்றிலும் தகுதியற்றவர்களாயிருக்கின்றனர். அக்கறையற்ற, கவனமற்ற, மதியீனமான பாவத்தின் வேசகர்களாக அவரிடமிருந்து அவர்கள் சிதறடிக்கின்றனர்.

எளிய சாதனைகளில் திருப்தியடைந்து விடுகிறவர்கள் தேவனுக்கு உடன்பணியாட்களாய் இருப்பதிலிருந்து தவறிவிடுகின்றனர். சிந்தையைக் காத்துக்கொள்ளாமல் அதை அலைபாய விடுகிறவர்களுக்கு, சாத்தான் ஆலோசனை கொடுக்கிறான். அது அவர்களுடைய உள்ளத்தை நிரப்ப, பிறரையும் வஞ்சித்துப் பிடிக்குமளவுக்கு அவர்கள் அவனது சேனையில் பயிற்சி பெறுகின்றனர். அவர்கள் மதவாதிகள் போலக் காட்டிக்கொள்ளலாம், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்களாக இருக்கலாம்; ஆனால் அவர்கள் தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராய் இருக்கின்றனர்.

## பக்திவிநயமல்ல சூழ்ச்சிநயம்

தோழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மெச்சப்படுகிற ஒரு குறிப்பிட்டவிதமான புத்திக்கூர்மையுள்ள வாலிபர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களது திறமை பரிசுத்தமாக்கப்படவில்லை. அனுபவத்துன்பங்கள் மற்றும் பண்புகளால் அது பலப்படுத்தப்படவில்லை; உறுதியாக்கப்படவில்லை. மனிதகுல நன்மைக்காகவும், தமது நாம மகிமைக்காகவும் தேவன் அதைப் பயன்படுத்தக்கூடாது. தேவபக்தி எனும் போர்வையின்கீழ், தவறான தராதரங்களை எழுப்புவதற்கு, அவர்களது சக்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மனந்திரும்பாதவர்கள் தங்களது தவறான போக்குக்கான ஒரு நொண்டிச்சாக்காக அவர்களை நோக்கிப் பார்க்கின்றனர். தங்களது புத்தியீனம் மற்றும் நகைச்சுவைத்திறம் ஆகியவற்றால் தங்களுடைய தோழர்களிடம் வேடிக்கை காட்டுதவற்கு சாத்தான் அவர்களை நடத்துகிறான். அவர்கள் மேற்கொள்ளும் அனைத்தும் அற்பமானதாயிருக்கிறது. அவர்கள் சோதனைக்காரனின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறார்கள். அவனது வேலையைச் செய்ய வைப்பதற்காக, அவன் அவர்களது குணங்களில் திருப்பம் செய்து, வனைந்து வருகிறான்.

அவர்களிடம் செயல்திறம் உண்டு, ஆனால் அது பயிற்றுவிக்கப் படாதிருக்கிறது; அவர்களிடம் அறிவுத்திறம் உண்டு, ஆனால் அது

மேம்படுத்தப்படாமல் இருக்கிறது. தாலந்துகள் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது; ஆனால் அவர்கள் அவற்றைத் தவறாகப் பிரயோகித்து, மதியின்மையினால் இழிவுக்குள்ளாக்கி, தங்களுடைய கீழான நிலைக்குப் பிறரையும் இழுக்கின்றனர். கிறிஸ்துவானவர் தாம் சகித்த அவமானத்தினாலும் நிந்தையினாலும், சுயமறுப்பு, சுயதியாகம் மற்றும் தாழ்த்தப்படுதலினாலும் அவர்களது ஆத்துமாக்களுக்கான விலைக்கிரயத்தைச் செலுத்தினார். ஆத்துமாக்களை அழிப்பதற்கு அவர்களைப் பயன்படுத்துவதில் மட்டுமே அக்கறைகாட்டும் ஒரு எஜமானுடைய அடிமைத்தனத்திலிருந்தும், பாவப்பிடியி லிருந்தும் அவர்களை மீட்பதற்காகவே இதைச் செய்தார். ஆனால் அவர்களோ தங்களது சார்பிலான மீட்பரின் அன்பைப் பயனற்றதாக ஆக்கியிருப்பதால், அவர் அவர்களது கிரியைகளை வருத்தத்துடன் கண்னோக்குகிறார்.

அப்படிப்பட்ட வாலிபர்கள் நித்திய இழப்பைச் சந்திப்பார்கள். சர்வபூமியின் நியாயாதிபதியினிடத்திலிருந்து சரீரத்தில் செய்த கிரியைகளுக்குத்தக்கதாக ஒவ்வொரு மனிதனும் பெற்றுக்கொள்ளும் அந்த நாளில் அவர்களது வேடிக்கையும், கேலித்தனமும் அவர்களுக்கு எப்படிப்பட்டதாய் தோன்றும்? அவர்கள் மரத்தையும், வைக்கோலையும், துரும்பையும் அஸ்திபாரத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், அவர்களது வாழ்நாட்பணி அனைத்தும் அழிந்துபோகும். என்ன ஓர் இழப்பு!

அங்கீகாரத்துக்காக இயேசுவையே நோக்கிப்பார்த்து, தங்களுடைய கணக்குவைப்புப் புத்தகத்தில் தங்களது பிழைகளையும், தவறுகளையும், சோதனையின்மீது தாங்கள் பெற்ற வெற்றிகளையும், கிறிஸ்துவில் தங்களது சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தினமும் எழுதிவைத்துக்கொண்டு, இவ்விதமாக தேவசேவையில் தங்கள் பங்கைச் செயல்படுத்துகிறவர்களின் நிலைமை எவ்வளவு சிறந்ததாயிருக்கும்! அப்படிப்பட்ட வாலிபர்கள் தங்களது ஜீவப் பதிவேட்டை வெட்கத்தோடும் கலக்கத்தோடும் சந்திக்க வேண்டியதாக இருக்காது.—The Youth's Instructor, June 22, 1899.

## தெரிந்துகொள்ளப்பட்ட செயல்துணை

கிறிஸ்துவின் உண்மையை நாம் அறிக்கையிடுதலே உலகத்திற்கு அவரை வெளிப்படுத்துவதற்கென பரலோகம் தெரிந்துகொண்ட செயல் துணையாயிருக்கிறது. பூர்வகாலத்துப் பரிசுத்த மனிதர்கள்மூலமாக வெளிப் படுத்தப்பட்ட அவரது கிருபையை நாம் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்; ஆனால் மிகவும் பெலனுள்ளதாய் விளங்குவது நமது சொந்த அனுபவத்தின் சாட்சியே ஆகும். நம்மில் கிரியை செய்யும் தெய்வீக வல்லமையை நாம் வெளிப்படுத்துகிறபோது தேவனுடைய சாட்சிகளாக விளங்குகிறோம்.

மற்றெல்லாரை விடவும் வித்தியாசமான ஒரு வாழ்வும், சிறப்பான ஒரு அனுபவமும் ஒவ்வொரு தனிநபரிடத்திலும் உண்டு. நமக்கே உரிய தனித்தன்மையுடன் அடையாளமிடப்பட்டதாக, நமது துதி அவரை நோக்கி எழும்பவேண்டுமென தேவன் விரும்புகிறார்.—Ministry of Healing, p. 100.

# 8

# உயரங்களில் ஏறுதல்

கிறிஸ்தவ குணத்தைப் பூரணப்படுத்துவதில் சரியான செயலை விடாமுயற்சியுடன் செய்தல் மிகவும் அவசியமாகும். குணக்கட்டுமானப் பணியில் விடாமுயற்சி மற்றும் செயலாற்றலின் முக்கியத்துவத்தை நமது வாலிபர்களுக்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன். வாலிபர்கள் ஆண்மை மற்றும் பெண்மையின் உயர்ந்த நிலைப்பாட்டை அடைவதற்கேதுவாக, ஆரம்ப வருடங்களிலிருந்தே உறுதியான நேர்மைத்தன்மையின் கொள்கை களை குணத்திற்குள்ளாக உருவாக்குதல் அவசியமானதாகும். தாங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தேவனுக்கு உடையவைகளாகிய தங்கள் சரீரங்களினாலும், ஆவிகளினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டியவர்கள் என்ற உண்மையை எப்பொழுதும் தங்கள் கண்களுக்கு முன்பாக வைத்திருக்கவேண்டும்...

### அனுதின வளர்ச்சி

அனுதினம் வளர்ச்சியடைய வேண்டியது வாலிபர்களின் கடமை ஆகும். "உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது" என்று பேதுரு கூறுகிறார்.

அடுத்தடுத்து வரும் இந்தப் படிக்கட்டுகள் மனக்கண்முன்பாக வைக்கப்பட்டு, நீங்கள் தொடங்கும்போது எண்ணப்படவேண்டியதில்லை; ஆனால் தேவமகிமை என்ற ஒரே நோக்கத்தோடு கண்களை இயேசுவின்மீது பதியவைத்தால், நீங்கள் வளர்ச்சியடைவீர்கள். கிறிஸ்துவினுடைய

நிறைவான வளர்ச்சியை நீங்கள் ஒரே நாளில் அடைந்துவிடமுடியாது. சந்தித்து, மேற்கொள்ளப்படவேண்டிய எல்லாத் துன்பங்களையும் காண நேரிட்டால், நீங்கள் நம்பிக்கையிழந்து மூழ்கிவிடுவீர்கள். நீங்கள் போராடவேண்டிய சாத்தான் இருக்கிறான்; கிறிஸ்துவிடமிருந்து உங்கள் சிந்தையைக் கவர்ந்திழுக்கக்கூடுமான ஒவ்வொரு உபாயத்தினாலும் அவன் வகைதேடுவான்.

### தடைகளைச் சந்தித்தல்

நமது வழியில் இருக்கும் எல்லாத் தடைகளையும் சந்தித்து, ஒவ்வொன்றாக அவற்றை நாம் மேற்கொள்ள வேண்டும். முதலாம் இடையூறை வென்றுவிட்டால். அடுத்ததைச் சந்திக்க நாம் பெலனுள்ளவர்களாவோம். ஒவ்வொரு முயற்சியிலும் வளர்ச்சி காண்பதற் கேதுவான திராணியுள்ளவர்களாவோம். இயேசுவை நோக்கிப் பார்த்தால், நாம் ஜெயங்கொள்ளுகிறவர்கள் ஆகலாம். கண்களை துன்பங்களின்மீதே வைத்து, நீதிக்கான ஆர்வமிக்க போராட்டத்திலிருந்து பின்வாங்குவதாலேயே, நாம் பெலவீனர்களும், விசுவாசமற்றவர்களும் ஆகிறோம்.

ஒன்றன்பின் ஒன்றாக அடியெடுத்து வைத்தால், உயரமான சிகரத்தில் ஏறி, கடைசியில் மலையின் உச்சியை அடைந்துவிடலாம். உங்களது வாழ்நாட்காலத்தில் செய்து முடிக்கப்பட வேண்டுமென்றிருக்கிற மாபெரும் அளவிலான பணியைப் பார்த்துப் திணறிப்போகவேண்டாம்; அவையனைத்தையும் ஒரே நேரத்தில் செய்யவேண்டும் என்று உங்களிடம் கோரப்படவில்லை. உங்களது சரீரத்தின் ஒவ்வொரு சக்தியும் அந்தந்த நாளின் பணிக்கெனச் சென்று, ஒவ்வொரு அருமையான வாய்ப்பையும் வளர்த்துக்கொள்ளட்டும்; தேவன் உங்களுக்கு அருளியுள்ள உதவிகளையும் மதிப்பீடு செய்து, படிப்படியாக முன்னேற்றத்தின் ஏணியில் மேல்நோக்கி வளர்ச்சி அடையட்டும். அந்தந்த நாளுக்குரிய வாழ்வை மட்டும் நீங்கள் வாழ்ந்தாக வேண்டும், தேவன் உங்களுக்கு ஒரு நாளைக் கொடுத்திருக்கிறார்; அதன் சிலாக்கியங்களையும் வாய்ப்புகளையும் நீங்கள் எவ்வாறு மதித்துப் போற்றினீர்கள் என்பதைப் பரலோகப் பதிவேடுகள் காட்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவன் உங்களுக்கு அருளும் ஒவ்வொரு நாளையும் அவ்விதமாகப் பயனுள்ளதாக்கிக்கொண்டால், "நல்லது, உத்தமமும் உண்மையுள்ள ஊழியக்காரனே," என்று கடைசியில் எஜமானன் கூறுவதை நீங்கள் கேட்கலாம்.—The Youth's Instructor, January 5, 1893.

9

# தேவனுடன் கூடிச் செயல்படுதல்

வரையறைக்குட்பட்ட சாத்தியக்கூறுகளைக் காட்டிலும் அதிக மானவை நீங்கள் அடையக்கூடிய தூரத்திலே இருக்கிறது. ஒரு மனிதன் தேவன் குறிப்பிடும் பதத்தின்படி தேவனுடைய குமாரனாக இருக்கிறான். “இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான். மனிதரால் மதிக்கப்படவும், தேவனால் நேசிக்கப்படவும், ஓர் உயர்ந்த தரத்தை அடைந்திடவும், மலிவும் கீழ்த்தரமானவற்றிலுமிருந்து விலகிட வேண்டியது உங்களது சிலாக்கியமாக இருக்கிறது.

வாலிபருக்கும், சகல யுகங்களின் மனிதருக்கும் ஆன்மீகப் பணியைக் கொடுத்திருப்பது, அவர்களைத் தம் பிள்ளைகளாக அவர் மதிப்பதைக் காட்டுகிறது. சுயத்தை ஆளும் பணியை அவர் அவர்களுக்குக் கொடுக்கிறார். மீட்டு மேன்மையடையச் செய்யும் மாபெரும் பணியில் அவருடன் பங்காளிகளாக இருக்கும்படி அவர் அவர்களை அழைக்கிறார். ஒரு தகப்பன் தன் வியாபாரத்தில் தனது மகனையும் கூட்டாளியாக்கிக் கொள்வதுபோல, கர்த்தர் தமது பிள்ளைகளைத் தம்முடன் கூட்டாளிகளாக்கிக் கொள்கிறார். நாம் தேவனுக்கு உடன் வேலையாட்களாக்கப்பட்டிருக்கிறோம். “நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்” என்று இயேசு கூறுகிறார். கிறிஸ்துவின் எதிரி என உனது பெயர் பதிவாக்கப்பட்டு, பாவத்திற்கும் பிசாசுக்கும் பணியாளனாக இருப்பதைவிட ஒரு தேவபிள்ளையாக இருப்பதற்கு நீ தெரிந்துகொள்ளமாட்டாயா?

கிறிஸ்தவத்தின் கொள்கைகளை அன்றாட வாழ்விற்குள் கொண்டு வருவதற்கு, வாலிப ஆண்களுக்கும் பெண்களுக்கும் கிறிஸ்துவின் கிருபை அதிகமாகத் தேவை. கிறிஸ்துவின் வருகைக்கான ஆயத்தம் என்பது நமது மேலான குணக்கூறுகளின் பயிற்சிக்காகக் கிறிஸ்துவின்மூலமாக செய்யப்படுகிற ஆயத்தமே ஆகும். தனது குணத்தை ஒரு அழகான கட்டமைப்பாக்குவது ஒவ்வொரு வாலிபனின் சிலாக்கியமாகும். ஆகிலும்

இயேசுவுடன் நெருங்கியிருக்கிற ஒரு நேர்மறைத் தேவையும் இருக்கிறது. நமது பெலனும் திறனும் வல்லமையும் அவரே. ஒரு விநாடிகூட நாம் சுயத்தைக் சார்ந்திருக்க முடியாது...

**உயர உயரச் சென்றடைதல்**

உங்களது தாலந்துகள் பெரியதோ, சிறியதோ எப்படியிருப்பினும், உங்களிடம் நம்பியே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள். இவ்விதமாக நீங்கள் உங்களை உண்மையுள்ளவர்களென்று நிரூபிப்பதற்கான வாய்ப்பை அருளி, தேவன் உங்களைப் பரீட்சித்துப் பார்க்கிறார். உங்களுடைய எல்லாத் திறமைகளுக்காகவும் நீங்கள் அவரிடத்தில் கடன்பட்டிருக்கிறீர்கள். உங்களது சரீர, மன மற்றும் ஆத்துமத்தின் சக்திகள் அவருக்கே சொந்தமானவை; அவருக்காகவே இந்தச் சக்திகள் பயன்படுத்தப்பட வேண்டும். உங்கள் நேரம், செல்வாக்கு, திறமைகள், சாமர்த்தியம்—இவையனைத்திற்கும் சகலத்தையும் வழங்கும் அவரிடத்திலேயே நாம் கணக்கொப்புவிக்க வேண்டும். மனித இனத்தை உயர்த்திடுவதற்கான கர்த்தருடைய மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்த ஆர்வமிக்க முயற்சியுடன் நாடுபவர் தனது வரங்களைச் சிறந்தமுறையில் பயன்படுத்துகிறார்.

தொடங்கின வேலையில் வெற்றிமேல் வெற்றி பெறும்வரை, விடாமுயற்சியுடன் தொடருங்கள். ஒரு நோக்கத்துக்காக உங்களை பயிற்றுவித்துக் கொள்ளுங்கள். மேன்மையான, இன்னும் மேன்மையான நன்மையைச் சாதித்து, இங்ஙனம் தேவமகிமையைப் பிரதிபலிக்கும் வண்ணம், மிக உயர்ந்த தரத்தை கண்முன் வைத்துக்கொள்ளுங்கள்.—The Youth's Instructor, January 25, 1910.

# பகுதி 2

# பாவத்துடனுள்ள போராட்டம்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 10 | சாத்தான் ஒருபலமிக்க எதிரி | 32 |
| 11 | போராட்டத்தின் தன்மை | 35 |
| 12 | சாததானின் பிரத்தியேக முயற்சி | 38 |
| 13 | சோதனை—பாவத்துக்கான சாக்குப்போக்கு அல்ல | 43 |
| 14 | மன வலிமை | 44 |
| 15 | ஆத்தும ஆலயம் | 46 |
| 16 | நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல | 49 |
| 17 | மெய்யான மனமாற்றம் | 52 |
| 18 | மனம் போன போக்கில் செல்லும் ஒரு மகளுக்கான ஆலோசனை | 56 |
| 19 | போராட்டத்தின் மூலம் விளங்கும் குணத்தின் பெலன் | 59 |
| 20 | சோதனைக்கு எதிர்ப்புக் காட்டுதல் | 62 |
| 21 | பாவத்தின் வஞ்சகத்தன்மை | 64 |
| 22 | ஐயவாதத்துக்கு எதிரான ஓர் எச்சரிக்கை | 66 |
| 23 | ஒரு பெலவீனமான கூறு | 72 |

## பகுதி 2

**பாவத்துடனுள்ள போராட்டம்**

சாத்தானின் தாக்குதல்களுக்குத் தொடர்ந்து எதிர்த்துநிற்பதே நமது வெற்றிக்கான ஒரே நம்பிக்கை என்று கிறிஸ்துவின் மாதிரி நமக்குக் காட்டுகிறது. சோதனைகள் எனும் போராட்டத்தில் ஆத்துமாக்களின் எதிராளியின்மேல் ஜெயங்கொண்டவர், ஜனத்தின்மீதான சாத்தானுடைய வல்லமையைப் புரிந்துகொள்கிறார், நம் சார்பில் அவனை ஜெயித்திருக்கிறார். நமது முயற்சிகளில் சாத்தானின் சோதனைகளுக்கு எதிர்த்துநிற்கும்வண்ணம், நமது பெலவீனத்தை அவருடைய பெலத்துடனும், நமது தகுதியின்மையை அவருடைய புண்ணியங்களுடனும் நாம் இணைத்துக்கொள்ளும்படி, ஜெயங்கொண்டவராக அவர்தாமே தமது வெற்றியின் அனுகூலத்தை நமக்கருளியிருக்கிறார். சோதனையின் வல்லமையின்கீழிருக்கும்போது அவரது நீடித்திருக்கும் பெலத்தினால் நாம் தாங்கப்பட்டால், அவரது சர்வவல்லமையுள்ள நாமத்தினால் எதிர்த்துநின்று அவர் ஜெயங்கொண்டதுபோல் நாமும் ஜெயங்கொள்ளலாம்.— The Signs of the Times, March 4, 1880.

## 10

# சாத்தான் ஒரு பலமிக்க எதிரி

விழுந்துபோன மனிதன் சட்டப்படி சாத்தானின் சிறைக்கைதியாவான். அவனது வல்லமையிலிருந்து அவனை மீட்பதே இயேசுகிறிஸ்துவின் பணியாக இருந்தது. சாத்தானின் தூண்டுதல்களைப் பின்பற்றுவதற்கு மனிதன் இயல்பாகவே நாட்டமுள்ளவனாயிருக்கிறான். பலமிகக் வெற்றியாளரான கிறிஸ்து அவனுக்குள் வசித்து, அவனது விருப்பங்களை வழிநடத்தி, அவனுக்குப் பெலனளிக்காவிட்டால், ஒரு மிக பயங்கரமான எதிரியை அவன் தானாகவே வெற்றிகரமாக எதிர்த்துநிற்க முடியாது. தேவன் மட்டுமே சாத்தானின் வல்லமையைக் கட்டுக்குள் வைக்கமுடியும். அவன் பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறான். ஆத்துமாக்களை அழிக்கும்

வாய்ப்பை இழந்துவிடும் பயத்தினிமித்தம், அவன் ஒரு நொடிப்பொழுதாகிலும் தனது காவலைவிட்டு விலகுகிறதில்லை. தேவஜனங்கள் அவனது கண்ணிகளுக்குத் தப்பித்துக்கொள்ளும்வண்ணம், இதை புரிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது.

## வேடம் பூண்டிருக்கும் சாத்தான்

சாத்தான் தேவஜனத்துக்கெதிரான தனது கடைசியான போர் நடவடிக்கையில் அது அவன்தான் என்று அவர்கள் புரிந்துகொள்ளக்கூடாதபடி, அவன் தனது வஞ்சகங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறான். 2 கொரி. 11:14: “அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.” சில வஞ்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் அப்படி ஒருவன் இல்லை என்று ஆதரித்துப் பேசிவரும் வேளையில், அவன் அவர்களைச் சிறையாக்கிக்கொண்டு, அவர்கள்மூலமாகவே பெருமளவில் கிரியை செய்துகொண்டிருக்கிறான். தேவஜனங்கள் சாத்தானை மேற்கொள்ள வேண்டிய வல்லமையை, கிறிஸ்துவில் பெலன்கொள்ளும்போது மட்டுமே பெற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதை அவர்களைவிட அவன் நன்கறிந்திருக்கிறான்.

அவர்கள் பலமிக்க வெற்றியாளரிடம் உதவிக்காகத் தாழ்மையுடன் கெஞ்சி மன்றாடும்போது, சத்தியத்தில் மிகப் பெலவீனமான விசுவாசிகளும் கிறிஸ்துவின்மீது உறுதியுடன் சார்ந்திருந்தால், வெற்றிகரமாகச் சாத்தானையும் அவனது சர்வசேனையையும் துரத்திவிடமுடியும். அவன் தனது சோதனைகளுடன் பகிரங்கமாக, தைரியமாக வருவதற்கு மிகவும் தந்திரமுள்ளவன்; அப்படியானால் கிறிஸ்தவனின் உறங்கும் ஆற்றல்கள் விழித்துக்கொள்ளும், உறுதியும் பலமுமிக்க விடுவிப்பாளரை அவன் சார்ந்துகொள்ளுவான். ஆனால் அவன் அறியக்கூடாதவிதத்தில் வருகிறான், தேவபக்தியாகக் காட்டிக்கொள்ளும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மூலமாக வேடம்பூண்டவனாய் அவன் கிரியை செய்கிறான். சாத்தான் தனது வல்லமையினால் அலைக்கழித்து, சோதித்து, தேவஜனத்தைத் தவறாகத் திசைதிருப்பவும் செய்வான்.

நமது கர்த்தரை நேர்முகமாய்ச் சந்தித்து, சோதித்துப் பரிகசிக்கத் துணிந்தவன், தனது கரங்களால் ஒரு ஆலயத்தின் உப்பரிகைக்கும், மிக உயரமான ஒரு மலையின் மேலும் அவரைச் சுமந்தெடுத்துக் கொண்டுசெல்ல வல்லமை பெற்றிருந்தவன், கர்த்தரைவிடவும் ஞானத்தில் மிகவும் குறைந்து, சாத்தானுடைய தந்திரத்தையும் பெலத்தையும் ஏறக்குறைய முற்றிலும்

அறியாதிருக்கிற இக்காலத் தலைமுறையினரிடம் ஆச்சரியமான அளவில் தனது வல்லமையைச் செயல்படுத்துவான்.

அவனது கட்டளையைச் செய்வதற்கு இயல்பாகவே நாட்டமுள்ளவர்களின் சரீரங்களை அதிசயமானவிதத்தில் அவன் பாதிப்புக்குள்ளாக்குவான். சாத்தான் ஒரு கட்டுக்கதையாகக் கருதப்படும்போது, அவன் தன்னைக்குறித்து அகமகிழ்வு கொள்ளுகிறான். அவனை ஒரு பொருட்டாக மதியாமல் விடும்போதும், ஒரு குழந்தைத்தனமான உதாரணமாகவோ அல்லது ஒரு மிருகமாகவோ அவனைக் காட்டும்பொழுதும், அது அவனுக்கு நன்கு பிடித்துவிடுகிறது. அவன் மிகவும் கீழ்த்தரமானவனாகக் கருதப்பட்டிருப்பதால், தந்திரமாய்த் தீட்டப்பட்ட அவனது திட்டங்களுக்கு மனங்கள் முற்றிலுமாய் ஆயத்தப்பட்டிருக்கவில்லை, அவன் ஏறக்குறைய எப்பொழுதும் நன்றாகவே வெற்றியடைந்து விடுகிறான். அவனது வல்லமையும் மதிநுட்பமும் புரிந்துகொள்ளப்பட்டிருக்குமானால், அவனை வெற்றிகரமாக எதிர்த்துநிற்பதற்கு மனங்கள் ஆயத்தப்பட்டிருக்கும்…

## ஒவ்வொரு ஆத்துமாவுக்கான போராட்டம்

ஆத்துமாக்களுக்காகத் தீயதூதர்கள் போராடுவதையும், தேவனுடைய தூதர்கள் அவர்களைத் தடுப்பதையும் நான் கண்டேன். போராட்டம் கடுமையாய் இருந்தது. தீயதூதர்கள் அவர்களைச் சூழ்ந்து, தங்களது விஷமான செல்வாக்கினால் அவர்கள் சுற்றுப்புறத்தைக் கெடுத்து, அவர்களது உணர்ச்சிக்கூறுகளை மழுங்கச் செய்துகொண்டிருந்தனர். இந்த ஆத்துமாக்களைத் தூய தூதர்கள் கவலையுடன் கண்காணித்துக் கொண்டிருந்தனர்; சாத்தானின் சேனையைப் பின்னிட்டுத் துரத்த அவர்கள் காத்துக்கொண்டிருந்தனர். ஆகிலும் தனிநபர்களின் சித்தத்துக்கு எதிராக மனங்களைக் கட்டுப்படுத்துவது நல்ல தூதர்களின் பணியல்ல. எதிராளிக்கு இணங்கி, அவனுக்கு எதிர்த்துநிற்க அவர்கள் முயற்சிக்காவிடில், கூடுதல் வெளிச்சம் கொடுக்கப்படும்வரை, ஆபத்திலிருக்கிறவர்கள் உதவிக்காகப் பரலோகத்தை நோக்கிப் பார்க்கும்படி அவர்களைத் தட்டியெழுப்பி, சாத்தானுடைய சேனை அவர்களை அழிக்காதபடிக்கு அதனைத் தடுத்து நிறுத்துவதை மட்டுமே தேவதூதர்கள் செய்யக்கூடும். தங்களுக்குத் தாங்களே உதவிக்கொள்ள முயற்சிக்காதவர்களை விடுவிப்பதற்கு இயேசுவானவர் தூய தூதர்களை அனுப்பமாட்டார்.

ஒரு ஆத்துமாவை இழந்துபோகும் அபாயத்தில் தான் இருப்பதாகச் சாத்தான் கண்டால், அவ்வாத்துமாவைத் தன்வசம் காத்துக்கொள்ள

இயன்றமட்டும் அவன் பெருமுயற்சி செய்வான். தனது அபாயநிலையை அந்தத் தனிநபர் உணர்ந்து, துயரத்தோடும் அக்கறையோடும், பெலத்திற்காக இயேசுவை நோக்கிப் பார்த்தால், ஒரு சிறைக்கைதியைத் தான் இழந்துபோவதாக சாத்தான் பயம் கொள்ளுகிறான். ஏழை ஆத்துமாவிடம் பரலோகத்தின் வெளிச்சம் சென்றடையாதபடிக்கு, அவனைச் சுற்றிலும் ஒரு அந்தகாரச் சுவரை அமைக்கவும், வேலியமைக்கவும் தனது தூதர்களின் பட்டாளத்தை அவன் அழைக்கிறான். ஆகிலும் அபாயத்திலிருக்கும் அந்நபர் விடாமுயற்சியுடன், உதவியற்ற நிலையிலும், பெலவீனத்திலும் கிறிஸ்துவின் இரத்தத்தின் புண்ணியங்களின்மீது தன்னைச் சாற்றிக்கொள்ளுவாரானால், ஆர்வமிக்க விசுவாச ஜெபத்திற்கு இயேசுவானவர் செவிசாய்த்து, அந்நபரை விடுவிப்பதற்காகப் பலத்த சவுரியவான்களாகிய ஒரு தூதர்களின் பட்டாளத்தை அனுப்புகிறார்.

தன்னுடைய வல்லமைமிக்க எதிராளியிடம் (கிறிஸ்துவிடம்) மன்றாடுவதைச் சாத்தானால் சகிக்க இயலாது; ஏனெனில் அவரது பெலன் மற்றும் மகத்துவத்திற்குமுன்பாக அவன் அஞ்சி நடுங்குகிறான். ஊக்கமான ஜெபத்தின் சத்தத்திற்கு, சாத்தானின் சர்வ சேனையும் நடுங்குகிறது… சர்வ வல்லமை படைத்த தூதர்கள் பரலோகத்தின் ஆயதந்தரித்தவர்களாக, துரத்தப்பட்டுத் தொய்ந்துபோன ஆத்துமாவின் உதவிக்காக வரும்பொழுது, தங்களது போராட்டம் தோல்வியடையும் என்பதை நன்கறிந்த சாத்தானும் அவனது சேனையும் பின்னிட்டு விழுகின்றனர்.”—The Review and Herald, May 13, 1862.

## 11

# போராட்டத்தின் தன்மை

மனிதனுடைய சித்தம் தீவிரத்தன்மையுள்ளது; அனைத்துக் காரியங்களையும் தன் நோக்கத்திற்கேற்ப வளைப்பதற்குத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது. தேவன் மற்றும் நீதியின் பக்கம் அது சார்ந்திருந்தால், ஆவியின் கனிகள் வாழ்வில் தோன்றும்; “நன்மைசெய்கிற ஒவ்வொரு மனிதனுக்கும், மகிமையையும், கனத்தையும், சமாதானத்தையும்,” தேவன் நியமித்திருக்கிறார்.

சித்தத்தை வனைவதற்குச் சாத்தானுக்கு அனுமதியளித்தால், தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள அவன் அதைப் பயன்படுத்தி விடுவான். அவநம்பிக்கைக் கோட்பாடுகளை தூண்டிவிடுவான். தேவ வார்த்தைக்கெதிராகப் போர்புரிய மனித இதயத்தை கிளறிவிடுவான். பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள் பரலோகத்தின் கோரிக்கைகள் மற்றும் நியமனங்களுக்கெதிராக அணிவகுத்து நிற்கச் செய்யவும், தேவனிடம் பகைமையும் வெறுப்பும் கொண்டவர்களாக இருக்கும்படியும் மனிதர்களைத் தனது ஆற்றல்களால் ஏவிவிடவும், பிடிவாதமான விடாமுயற்சியுடன் அவன் வகைதேடிக் கொண்டிருக்கிறான். அனைத்துத் தீமையின் ஏதுகரங்களையும் தனது கொடியின்கீழ் அவன் சேர்த்துக்கொள்ளுகிறான்; அவனது தலைமை யின்கீழ் நன்மைக்கெதிரான தீமையைச் செயல்படுத்த அவற்றைப் போர்க்களத்திற்கு கொண்டுவருகிறான்.

## தீமையின் சக்திகளை எதிர்க்கும்படி அழைப்பு

இதயத்திலிருந்து தேவனை அகற்றிவிடுவதும், அவனது அருவருப்பான சாயலுக்கொப்பாக மனிதத்தன்மையை வனைந்திடுவதும் சாத்தானின் கிரியை ஆகும். அசுத்தமான வெறி உணர்ச்சிகளையும், பேராவல்களையும் கிளறிவிட்டு, அனைத்துத் தீய இயல்புகளையும் அவன் தூண்டிவிடுகிறான். இந்த எல்லா அதிகாரத்தையும், கனத்தையும், ஐசுவரியங்களையும், பாவ சிற்றின்பங்களையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன் என்று அவன் அறிவிக்கிறான்; ஆனால் நேர்மையை இணங்கச் செய்துவிடவேண்டும், மனச்சாட்சியை மழுங்கச் செய்துவிடவேண்டும் என்பதே அவனது நிபந்தனைகளாக இருக்கிறது. இங்ஙனம் அவன் மனித மனோசக்திகளை இழிநிலைக்குள்ளாக்கி, அவற்றைப் பாவ அடிமைத்தனத்திற்குள் கொண்டு வருகிறான்.

தீமையின் சக்திகளுக்கு எதிர்த்து நிற்கும்படி தேவன் மனிதர்களை அழைக்கிறார். “ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளா திருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக் கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.”

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு போர் நடவடிக்கை ஆகும். ஆகிலும், “மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும்,

அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.” அநீதிக்கெதிரான இந்த நீதியின் போராட்டத்திலே, தெய்வீக உதவியினால் மட்டுமே நாம் வெற்றிவாகை சூடமுடியும். எல்லைக்குட்பட்ட நமது சித்தம் எல்லையற்றவரின் சித்தத்துக்குக் கீழாகக் கொண்டுவரப்பட வேண்டும்; மனித சித்தம் தெய்வீகத்தோடு ஒன்றரக் கலந்திடவேண்டும். நமக்கு ஒத்தாசையாகப் பரிசுத்த ஆவியானவரை இதுவே கொண்டுவந்து சேர்க்கும்; தேவனுடைய சம்பாதிக்கப்பட்ட உடைமையை மீட்டுக்கொணர்வதும், ஆத்துமாவில் அவரது சாயலைத் திரும்பச் செய்வதுமே ஒவ்வொரு வெற்றியின் நாட்டமாக இருக்கும்.

## பரிசுத்த ஆவியானவரின் உதவி

கர்த்தராகிய இயேசு பரிசுத்த ஆவியானவர்மூலமாகக் கிரியை நடப்பிக்கிறார்; அவரே அவரது பிரதிநிதியாவார். ஆவியானவர்மூலமாகவே அவர் ஆத்துமாவுக்குள் ஆவிக்குரிய ஜீவனை உட்செலுத்துகிறார்; நன்மைக்காக அதன் ஆற்றல்களுக்கு உயிரளிக்கிறார்; ஒழுக்கச் சீர்குலைவி லிருந்து அதைச் சுத்திகரித்து, அவரது ராஜ்யத்திற்கான தகுதியை அதற்குக் கொடுக்கிறார். மனிதர்கள் மத்தியில் பகிர்ந்தளிப்பதற்கு வளமான ஈவுகளும், வழங்குவதற்குப் பெரும் ஆசீர்வாதங்களும் இயேசுவிடம் உண்டு. அவர் அதிசயமான ஆலோசனைக்கர்த்தர், ஞானத்திலும் பெலத்திலும் எல்லையற்றவர்; அவரது ஆவியின் வல்லமையை நாம் ஒப்புக்கொண்டு, அதினால் வனையப்படுவதற்கு ஒப்படைப்போமானால், அவருக்குள் நாம் நிறைவானவர்களாக நிற்போம். இது எப்பேர்ப்பட்ட சிந்தனையாயிருக்கிறது! கிறிஸ்துவுக்குள், “தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது... அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ள வர்களாயிருக்கிறீர்கள்.” தேவனுடைய ஆவியினால் வனையப்படுவதற்கு மனித இதயமானது கீழ்ப்படியாத வரையில், மகிழ்ச்சியை அது ஒருக்காலும் அறியாது. ஆவியானவர் புதுப்பிக்கப்பட்ட ஆத்துமாவை மாதிரியான இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பாக்குகிறார். ஆவியானவரின் செல்வாக்கின் மூலமாக, தேவனுக்கெதிரான பகை—விசுவாசம் மற்றும் அன்பாகவும், பெருமை—தாழ்மையாகவும் மாற்றம் பெறுகிறது. ஆத்துமா சத்தியத்தின் அழகைப் புரிந்துகொள்கிறது. நேர்த்தியான, பூரணமான குணத்தினால் கிறிஸ்துவானர் கனப்படுத்தப்படுகிறார். இந்த மாற்றங்ள் ஏற்படும்போது, தூதர்கள் மகிழ்ச்சி பொங்கப் பாடுகிறார்கள்; தெய்வீக சாயலுக்கொப்பாக உருவாக்கப்பட்டிருக்கிற ஆத்துமாக்களினிமித்தம் தேவனும் கிறிஸ்துவும் களிகூருகிறார்கள்.

### வெற்றியின் விலைக்கிரயம்

நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டம் இரட்சகரின் நாட்களில் இருந்ததைக் காட்டிலும், வேகத்தில் குறைந்துபோய்விடவில்லை. பரலோகத்திற்கான பாதை அப்பொழுது இருந்ததை விடவும் இப்பொழுது எளிதாகிவிடவில்லை. நமது பாவங்களனைத்தும் அகற்றப்படவேண்டும். நமது ஆவிக்குரிய முன்னேற்றத்தைத் தடைசெய்யும் ஒவ்வொரு பிரியமான இன்பத்தோய்வும் துண்டிக்கப்பட்டாக வேண்டும். நமக்கு இடறலுண்டாக்கும் வலது கண் அல்லது வலது கரத்தைத் தியாகம் செய்திடல் வேண்டும். நமது சுயஞானத்தைத் துறந்து, ஒரு சிறுபிள்ளையைப் போலப் பரலோக ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள நாம் விரும்புகிறோமா? நமது சுயநீதியைவிட்டு விலகிட நாம் விரும்புகிறோமா? மனிதர்களின் பாராட்டை நாம் தியாகம் செய்திட விரும்புகிறோமா? நித்திய வாழ்வின் விலைக்கிரயம் முடிவற்ற மதிப்புடையதாகும். பரிசுத்த ஆவியானவரின் உதவியை வரவேற்று, அடையப்போகிற பொருளின் மதிப்புக்குச் சமானமான தியாகங்களைச் செய்து, முயற்சிகளை மேற்கொண்டு, அவருடன் ஒத்துழைக்கவும் விரும்புகிறோமா?—The Review and Herald, February 10, 1903.

## 12

# சாத்தானின் பிரத்தியேக முயற்சி

நாம் ஒவ்வொரு பக்கமும் காக்கப்பட்டு, சாத்தானின் தந்திரங்களுக்கும், ஊடுருவல்களுக்கும் இடையறாது எதிர்த்து நிற்க வேண்டுமென்று எனக்குக் காட்டப்பட்டது. ஒரு ஒளியின் தூதனைப்போல அவன் தன்னை உருமாற்றிக்கொண்டு, ஆயிரங்களைச் சிறையாக்கி வஞ்சித்து நடத்திக் கொண்டிருக்கிறான். மனித மனத்தின் அறிவியல் அனுகூலங்களை அவன் பயனுடையதாக்கிக் கொள்ளும்விதம் வியப்புக்குரியதாயிருக்கிறது. தேவனுடைய வேலையைச் சீர்கெடுப்பதற்கு, சர்ப்பத்தைப் போல உணரப்படாதவிதத்தில் அவன் இங்குதான் ஊடுருவுகிறான். கிறிஸ்துவின் கிரியைகள் மற்றும் அற்புதங்கள் அனைத்தையும் அவன் மனிதத்தன்மை யுடையதாக்குகிறான்.

சாத்தான் கிறிஸ்தவத்தின்மீது ஒரு பகிரங்கமான, துணிவான தாக்குதலைச் செய்வானானால், அது கிறிஸ்தவனை அவனது மீட்பரின் பாதத்திற்குத் துயரத்திலும், வியாகுலத்திலும் கொண்டுவந்துவிடும்; பலமும்

வலிமையுமிக்க விடுவிப்பாளர் துணிவுமிக்க எதிராளியை அச்சுறுத்தி அப்புறப்படுத்திவிடுவார். ஆனால் சாத்தானோ, ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்தவனாக, ஒரே பாதுகாப்பான, சரியான பாதையிலிருந்து கவர்ந்திழுத்திட மனதின்மீது கிரியை செய்கிறான். மண்டையோட்டு அமைப்பு ஆய்வியல், உளவியல் மற்றும் மனோவசியம் ஆகிய அறிவியல்களின் வாயிலாக, சாத்தான் மிக நேரடியாக இந்தத் தலைமுறையினரிடத்தில் வந்திருக்கிறான்; கிருபையின் கால முடிவுவேளையில் அந்த வல்லமையைக் கொண்டே தனது கிரியையைத் தனிச்சிறப்பாய் ஆற்றிக்கொண்டிருக்கிறான்....

காலத்தின் முடிவை நெருங்கும் வேளையில், மனித சிந்தையானது சாத்தானின் சூழ்ச்சித் திறன்களால் தடையேதுமின்றி பாதிக்கப்பட்டு விடுகிறது. கிறிஸ்துவின் கிரியைகளையும், அற்புதங்களையும் பொதுவான நியதிகளைக் கொண்டு கணக்கிட, வஞ்சிக்கப்பட்ட, சாவுக்கேதுவான மனிதர்களை அவன் வழிநடத்துகிறான். கிறிஸ்துவின் கிரியைபோன்று போலியானதைச் செய்து, தனது சொந்த வல்லமையையும், உரிமைகோரல்களையும் நிலைநாட்டிக்கொள்ள அவன் எப்பொழுதுமே பேரார்வமிக்கவனாக இருந்திருக்கிறான். பொதுவாக, இதை அவன் பகிரங்கமாகவோ, துணிவாகவோ செய்வதில்லை. அவன் தந்திரமிக்கவன். ஒரு ஒளியின் தூதனுடைய உருவில் பாவப்பட்ட விழுந்துபோன மனிதனிடம் வருவதே, தனது பணியைச் செய்துமுடிப்பதற்கான மிகவும் பயனுள்ள வழி என்பதை அறிந்திருக்கிறான்.

ஒரு விழுந்துபோன தூதனைப்போலல்லாமல், ஒரு பேரரசனைப்போல —ஒரு அழகான இளைஞனின் தோற்றத்தில், வனாந்தரத்திலிருந்த கிறிஸ்துவிடம் சாத்தான் வந்தான். அவன் தன் வாயில் வசனத்துடன் வந்தான். "என்பதாய் எழுதியிருக்கிறது," என்று அவன் சொன்னான். நமது பாடுபடும் இரட்சகர் அவனை வசனத்துடன் சந்தித்து, "எழுதியிருக்கிறதே," என்றார். கிறிஸ்துவின் பெலவீனமான, பாடுபடும் நிலைமையைச் சாத்தான் அனுகூலமாய் எடுத்துக்கொள்கிறான். நமது மனித சாயலை அவர் தம்மீது எடுத்துக்கொண்டார்...

## சுயத்தில் நம்பிக்கை சாவுக்கேதுவானது

மாபெரிய, நன்மையான செயல்களைச் செய்வதற்குத் தங்களுக்குள்ளேயே சக்தி உண்டு என்று மரிக்குந்தன்மையுள்ள மனிதர்களை எண்ணச் செய்து, அவர்களது மனதைச் சாத்தான் வஞ்சித்து நடத்துவானாகில், தங்களுக்காகச் செய்துகொள்ளும்படித் தங்களில் இருப்பதாக எண்ணிக்கொண்டிருப்பதைத் தேவன் செய்யும்படிக்கு அவரைச் சார்ந்திருப்பதை அவர்கள் நிறுத்திவிடுகின்றனர். ஒரு மேலான வல்லமையை

அவர்கள் அங்கீகரிக்கிறதில்லை. தேவன் தாமே உரிமைகோருகிற, அவரது மாபெரும், மிகச்சிறந்த மகத்துவத்திற்குமான மகிமையை அவர்கள் அவருக்குக் கொடுக்கிறதில்லை. சாத்தானுடைய நோக்கம் இவ்விதமாக நிறைவேறிவிடுகிறது. அவன் தன்னையே பரலோகத்தில் உயர்த்திக்கொண்டதால், வெளியே தள்ளப்பட்டான்; விழுந்துபோன மனிதனும் தன்னைத் துணிகரமாக உயர்த்தும்பொழுது அவன் எக்களிக்கிறான். மனிதன் தன்னை உயர்த்தினால், தன்னுடையதைப் போலவே அவனுடைய அழிவும் நிச்சயம் என்பதை அவன் அறிந்திருக்கிறான்.

## அழிவுண்டாக்கும் நம்பிக்கை

வனாந்தரத்தில் கிறிஸ்துவுடனான சோதனைகளில் அவன் தோல்வியடைந்தான். இரட்சிப்பின் திட்டம் நிறைவேற்றப்பட்டது. மனிதனுடைய மீட்புக்காக விலையேறப்பெற்ற கிரயம் செலுத்தப்பட்டுவிட்டது. செலுத்தப்பட்டிருக்கிற மாபெரும் தியாகபலியினால் இரட்சிக்கப்படவோ, நன்மையடையவோ கூடாதபடி வேறுவழியில் மனித மனங்களைத் திருப்புவதற்கும், கிறிஸ்தவனுடைய நம்பிக்கையின் அஸ்திபாரத்தைத் தகர்ப்பதற்கும் சாத்தான் இப்பொழுது வகைதேடிக்கொண்டிருக்கிறான். விழுந்துபோன மனிதன் பிராயச்சித்தம் இல்லாமலேயே நன்கு செயல்படமுடியும் என்றும்; சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்த இரட்சகரைச் சார்ந்திருக்கவேண்டிய அவசியமில்லை என்றும்; தேவனுடைய தயவைப் பெறுவதற்கு மனிதனுடைய சொந்தப் புண்ணியங்களே போதுமானது என்றும் நம்புவதற்கு சாத்தான் தனது “அநீதியினால் உண்டாகும் வஞ்சகத்தின்” மூலமாக நடத்திக்கொண்டிருக்கிறான். பிற்பாடு வேதத்தில் இருக்கும் மனிதனின் நம்பிக்கையை அவன் அழித்துப்போடுகிறான்; தன்மீது குறிவைத்திருக்கும் துப்பறியும் பொறியை அழிப்பதில் அவன் வெற்றி கண்டுவிட்டால், அதுவே அவன் பாதுகாப்பு என்பதை அவன் நன்கறிந்திருக்கிறான்.

ஆள்தத்துவமுள்ள பிசாசு என்று ஒருவன் இல்லை என்ற வஞ்சகத்தை அவன் உள்ளங்களில் பதியவைத்திருக்கிறான்; இதை நம்புகிறவர்கள் இல்லாத ஒன்றிற்கெதிராகப் போர்புரியவும், எதிர்த்துநிற்கவும் முயற்சிக்கிறதில்லை; கடைசியாக, பாவப்பட்ட மரிக்குந்தன்மையுள்ள குருட்டு மனிதர்கள், “எதுவானாலும் சரி, அதுவே சரி,” என்ற கோட்பாட்டை நடைமுறைப்படுத்திக் கொள்கின்றனர். தங்கள் போக்கைக் கணக்கிட்டுப் பார்க்க எந்தச் சட்டத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. தேவனிடத்தில் ஜெபிப்பது பயனற்றது, அது வெறும் சடங்கே என்று நம்பும்படி சாத்தான் அநேகரை நடத்துகிறான். அவனது சூழ்ச்சியையும்,

வஞ்சகங்களையும் எதிர்த்து நிற்கக் கிறிஸ்துவின் பின்னடியார்களை விழிப்புடன் வைப்பதற்கு, தியானமும் ஜெபமும் எவ்வளவு அவசியம் என்பதை அவன் நன்கறிந்திருக்கிறான். ஆத்துமாவானது உதவிக்காக வல்லமைமிக்கவரைச் சார்ந்து, அவனது தாக்குதல்களுக்கு எதிர்த்துநிற்க அவரிடமிருந்து பெலத்தைப் பெற்றுவிடாதபடிக்கு, இத்தகைய முக்கியமான பயிற்சிகளிலிருந்து சாத்தானுடைய சூழ்ச்சிகள் மனதைத் திசைதிருப்பும்...

ஜெபம் எனும் பயிற்சியை நாம் புறக்கணித்தால், அது அவனது நோக்கத்தை நிறைவேற்றுவதாகிறது; அப்பொழுது அவனது பொய்யான அற்புதங்கள் தடையேதுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டு விடுகிறது. கிறிஸ்துவைச் சோதிப்பதில் தோற்றுப்போன சாத்தான், மனிதனுக்கு முன்பாகத் தனது வஞ்சகமான சோதனைகளை வைத்துத் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறான். சில வேலைகளில் அவன் ஒரு கவர்ச்சியான இளைஞனைப் போல அல்லது ஒரு அழகான உருவமாக வருகிறான். அவன் சுகமளிக்கும் கிரியைகளைச் செய்வான், நமது இனத்திற்கு நன்மை செய்கிறவன்போல வஞ்சிக்கப்பட்ட மனிதர்களால் அவன் வணங்கப்படுகிறான்.

## மனதைக் கட்டுப்படுத்துதல்

சாத்தானுடைய கட்டுப்பாட்டுக்குள் இணங்காத பட்சத்தில், அவன் மனங்களைக் கட்டுப்படுத்த முடியாது என்பது எனக்குக் காட்டப்பட்டது. சரியானதினின்று விலகுகிறவர்கள் இப்பொழுது பெரும் அபாயத்தில் இருக்கிறார்கள். தேவனிடமிருந்தும், தேவதூதர்களின் பாதுகாப்பிலிருந்தும் அவர்கள் தங்களைப் பிரித்துக்கொள்கிறார்கள்; ஆத்துமாக்களை அழிப்பதையே எப்பொழுதும் குறியாகக் கொண்டிருக்கும் சாத்தான், அப்படிப்பட்டவர்களிடம் தனது வஞ்சகங்களை முன்வைக்கத் தொடங்குகிறான்; அவர்கள் மிகப்பெரும் துன்பநெருக்கடியில் இருக்கிறார்கள். அந்தகார வல்லமைகளை அவர்கள் கண்டு, எதிர்த்து நிற்கவும், சாத்தானின் கண்ணிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளவும் முயற்சிப்பது என்பது ஒரு எளிமையான காரியமல்ல. சாத்தானின் களத்தில் அவர்கள் துணிந்திறங்கி விட்டனர்; அவன் அவர்களை உரிமை கொண்டாடுகிறான். ஒரே ஒரு மனிதனைக் கிறிஸ்துவின் கரத்திலிருந்து பறிப்பதற்குத் தனக்கு உதவிக்காகத் தனது முழு தீய சேனையை அழைக்கவும், தனது எல்லா ஆற்றல்களை ஈடுபடுத்தவும் அவன் தயங்கமாட்டான்.

தங்களைச் சோதிக்கும்படிப் பிசாசைச் சோதித்தவர்கள் அவனது வல்லமையிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளக் கடுமையான முயற்சிகளைச் செய்ய வேண்டியதிருக்கும். அவர்கள் தங்களுக்காக

வேலைசெய்யத் தொடங்கும்பொழுது, அவர்கள் வருத்தப்படுத்தியிருந்த தேவதூதர்களும் அவர்களது ஒத்தாசைக்கு உடனடியாக வருவார்கள். சாத்தானும் அவனது தூதர்களும் தங்களது இரையை இழந்து விடுவதற்கு விருப்பமற்றவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் தூய தூதர்களுடன் வாதிட்டுப் போராடுகிறார்கள்; போராட்டம் கடுமையாயிருக்கிறது. தவறிழைத்தவர்கள் தொடர்ந்து கெஞ்சி மன்றாடி, மிகுந்த தாழ்மையுடன் தங்கள் தப்பிதங்களை அறிக்கையிடுவார்களானால், பலத்த சவுரியவான்களான தூதர்கள் தீய தூதர்களின் வல்லமையின் பிடியிலிருந்து அவர்களை வலிந்து பிடித்துச்சென்று, வெற்றிபெறுவார்கள்.

## உயர்த்தப்பட்ட திரை

திரையானது உயர்த்தப்பட்டபொழுது, இக்காலத்தின் சீர்கேடு எனக்குக் காட்டப்பட்து; என் இதயம் சோர்வுற்றது; என் ஆவி எனக்குள்ளேயே ஏறக்குறைய திடனற்றுப்போனது. பூமியின் குடிகள் தங்களது அக்கிரமப் பாத்திரத்தின் அளவை நிரப்பிக் கொண்டிருக்கிறதை நான் கண்டேன்— தேவனுடைய கோபம் தூண்டிவிடப்பட்டிருக்கிறது, பூமியலிருந்து பாவிகள் அழிக்கப்பட்டுப்போகுமட்டும் அதை அமைதிப்படுத்தலாகாது.

கிறிஸ்துவின் தனிப்பட்ட எதிரியாகச் சாத்தான் இருக்கிறான். பரலோகம் மற்றும் பூமியில் காணும் அனைத்துவகைக் கலகத்துக்கும் அவனே காரணகர்த்தாவாகவும், தலைவனாகவும் இருக்கிறான். அவனது உக்கிரகோபம் கூடுகிறது, அவனது வல்லமையை நாம் உணர்வதில்லை. இன்ப அமைதி உணர்வுடன், தங்களைப் பாதுகாப்பாக இருப்பதாகக் கருதிக்கொள்பவர்களுடன் விழுந்துபோன தூதர்கள் செய்துவரும் கிரியையைக் காணும்படி நமது கண்கள் திறக்கப்படுமானால், நாம் அவ்வளவு பாதுகாப்பாக உணரமாட்டோம். தீய தூதர்கள் ஒவ்வொரு நொடியிலும் நமது பாதையின்மீது இருக்கிறார்கள். சாத்தான் கூறுகிறபடி தீயமனிதர்கள் செயல்படவேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோம்; ஆனால் நமது மனங்கள் சாத்தானின் காணக்கூடாத ஏதுகரங்களுக்கு எதிராகப் பாதுகாப்பற்றிருக்கிற வேளையில், அவர்கள் புதிய களத்தை வலிந்து பற்றிக்கொண்டவர்களாக, நமது பார்வையில் அடையாளங்களையும், அற்புதங்களையும் நடப்பிப்பார்கள். நாம் வெற்றிகரமாகப் பயன்படுத்தக்கூடிய ஒரே ஆயுதமான தேவனுடைய வார்த்தையினால் அவர்களுக்கு எதிர்த்துநிற்க ஆயத்தமாய் இருக்கிறோமா?

இந்த அடையாளங்கள் தேவனிடமிருந்து வருகிறதாக ஏற்றுக் கொள்ளும்படி சிலர் சோதிக்கப்படுவார்கள். நமக்கு முன்பாக வியாதியஸ்தர்கள் சொஸ்தமாக்கப்படுவார்கள். நாம் காணும்படியாக அற்புதங்கள் செய்யப்படும்.

சாத்தானின் பொய்யான அற்புதங்கள் முற்றிலுமாக வெளியரங்கமாகத்தக்கதாக நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. இத்தகைய சோதனையைச் சந்திக்க நாம் ஆயத்தமாக இருக்கிறோமா? அநேக ஆத்துமாக்கள் கண்ணியில் அகப்படுத்தப்பட்டு, வீழ்த்தப்பட்டுவிட மாட்டார்களா? தேவனுடைய தெளிவான கொள்கைகளினின்றும், கட்டளைகளினின்றும் வழிவிலகிச்சென்று, கட்டுக் கதைகளின்மீது கவனஞ்செலுத்துவதினால், அநேகருடைய உள்ளங்கள் இத்தகைய பொய்யான அற்புதங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. வெகுசீக்கிரத்தில் ஈடுபடப்போகிற அந்தப் போராட்டத் திற்காக, நாம் அனைவரும் இப்பொழுதே அதற்கு எதிரான கவசத்தை அணிந்துகொள்ள நாடவேண்டும். தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைத்து, ஜெபத்தோடு படித்து, செயல்முறையில் அதைக் காட்டுவோமானால், அதுவே சாத்தானுடைய வல்லமையினின்று காக்கக்கூடிய கேடகமாக நமக்கு அமையும். கிறிஸ்துவின் இரத்தத்தின்மூலமாக, நாம் வெற்றியாளர்களாகக் கொண்டுவரப்படுவோம்.—The Review and Herald, February 18, 1862.

## 13

# சோதனை—பாவத்துக்கான சாக்குப்போக்கு அல்ல

தேவனுடைய ஆவியானவரின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத நமது தன்மையின் தூண்டுதல்; மனத்தின் திறமை அல்லது இதயத்தின் விருப்பம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விநாடியும் அவரது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கவேண்டியது அவசியம். தேவன் மனிதனுக்கு அளிக்கிற ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும், அவன்மீது வரும்படி அவர் அனுமதிக்கிற ஒவ்வொரு சோதனையையும், நாம் கொஞ்சம் இடமளித்தாலும், அதைப் பற்றிக்கொண்டு ஆத்துமாவைச் சோதிக்கவும், அலைக்கழிக்கவும், அழித்துப்போடவும் சாத்தான் வகைதேடாமல் இல்லை. ஆகையால் ஒருவரது ஆவிக்குரிய வெளிச்சம் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் சரி, தெய்வீக தயவையும் ஆசீர்வாதத்தையும் அவர் எவ்வளவுக்கதிகமாக அனுபவிப்பவராக இருந்தாலும் சரி, கர்த்தருக்கு முன்பாக அவர் எப்பொழுதும் தாழ்மையுள்ளவராக நடந்து, ஒவ்வொரு எண்ணத்தையும் தேவன் வழிநடத்தி, ஒவ்வொரு தூண்டுதலையும் கட்டுப்படுத்தியருளுமாறு விசுவாசத்தோடு கெஞ்சி மன்றாட வேண்டும்.

தேவபக்தியாய் இருக்கும் யாவரும் மிகப் பரிசுத்தமான கடமையின்கீழ் ஆவியைக் கர்த்துக்கொள்கிறவர்களாகவும், மாபெரும் சினமூட்டுதலின்கீழ் இச்சையடக்கத்தைக் கடைபிடிக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். மோசேயின்மீது சுமத்தப்பட்டிருந்த பாரங்கள் மிகவும் பெரியவைகளாயிருந்தன; அவரைப்போல வெகுசிலரே அவ்விதக்கடுமையான சோதனைக்குட்படுவார்கள்; ஆயினும் அது அவருடைய பாவத்திற்கான சாக்குப்போக்காக இருக்கும்படி அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. தேவன் தமது ஜனங்களுக்காகத் தாராளமான முன்னேற்பாடுகளைச் செய்துவைத்திருக்கிறார்; அவரது பெலத்தை அவர்கள் சார்ந்துகொள்வார்களானால், அவர்கள் ஒருபோதும் சந்தர்ப்பங்களுக்கேற்ற வேடிக்கைப் பொருளாக மாட்டார்கள். மிகப் பலமிக்க சோதனை பாவத்திற்கான சாக்குப்போக்காகிவிடாது. ஆத்துமாவின்மீது கொண்டு வரப்படும் அழுத்தம் எவ்வளவு பெரியதாயிருந்தாலும், மீறுதல் என்பது நமது சொந்தச் செயலே ஆகும். எவரையும் தீமைசெய்யக் கட்டாயப்படுத்துவதற்குப் பூமியிலோ அல்லது நரகத்திலோ அதிகாரம் இல்லை. நமது பெலவீனமான இடங்களில் சாத்தான் நம்மைத் தாக்குகிறான்; ஆயினும் நாம் மேற்கொள்ளப்படமாட்டோம். தாக்குதல் எவ்வளவு கடுமையானதாக அல்லது எதிர்பாராததாக இருந்தாலும் சரி, தேவன் நமக்குச் சகாயம் உண்டுபண்ணியிருக்கிறார், அவரது பெலத்தினால் நாம் ஜெயம்பெறுவோம்.—Patriarchs and Prophets, p. 421.

## 14

# மனவலிமை

கடைசியில் வெற்றியாளர்களாக இருக்கப்போகிறவர்களுடைய ஆன்மீக வாழ்வில் கடுமையான நெருக்கடி மற்றும் சோதனையின் காலகட்டங்கள் ஏற்படும்; ஆகிலும் அவர்கள் தங்களுடைய நம்பிக்கையை விட்டுவிடக்கூடாது. கிறிஸ்துவின் பள்ளியில் அவர்களது ஒழுக்கப் பயிற்சியின் ஒரு பகுதியாக இது இருக்கிறது. எல்லாக் களிம்பும் கழுவப்பட்டு அகற்றப்படுவதற்கு இது அவசியமாயிருக்கிறது. சத்துருவின் தாக்குதல்களையும், அவனது வருத்தமுண்டாக்கும் பரியாசங்களையும் தேவனுடைய ஊழியக்காரன் மன வலிமையுடன் சகித்துக்கொள்ள வேண்டும்; தம் பாதையில் சாத்தான் கொண்டுவரும் தடைகளை மேற்கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் பின்னடியார்கள் ஜெபித்துவிடாதபடிக்கு அல்லது வேதவாக்கியங்களை ஆராய்ந்துவிடாதபடிக்கு அவர்களுக்குச் சோர்வுண்

டாக்கச் சாத்தான் வகைதேடுவான்; கண் பார்வையிலிருந்து இயேசுவை மறைப்பதற்கும், அவரது அன்பு மற்றும் பரலோக சுதந்தரத்தின் மகிமைகளைக் குறித்தக் காட்சியை அடைத்துப்போடுவதற்கும் பாதையின் குறுக்கே அவன் தனது வெறுப்புமிக்க இருளை வாரி வீசுவான். தேவனுடைய பிள்ளைகளைத் தொடர்ச்சியான சந்தேகத்தின்கீழ் திகைப்புடனும், நடுக்கத்துடனும், வழிநெடுக வேதனையுடனும் போகச்செய்வது, அவனுக்கு மனமகிழ்ச்சியாயிருக்கிறது. கூடுமானவரைக்கும் பயனப்பாதையை துயர மிகுந்ததாக்கும்படி அவன் வகைதேடுகிறான்; கீழ்நோக்கி உங்கள் பிரச்சனைகளையல்ல, மேல்நோக்கி பார்த்துக்கொண்டே இருப்பீர்களானால், வழியில் நீங்கள் சோர்ந்துபோகமாட்டீர்கள்; உங்களுக்கு உதவும்படி இயேசுவானவர் தமது கரத்தை நீட்டுவதை நீங்கள் சீக்கிரம் காண்பீர்கள்; அவர் உங்களை வழிநடத்தும்படி, எளிமையான பற்றுறுதியுடன் உங்கள் கரத்தை மட்டுமே அவரிடத்தில் நீங்கள் கொடுக்க வேண்டியதாயிருக்கும். ஐயமற்றவர்களாக மாறும்போது, நம்பிக்கையுள்ளவர்களாகவும் நீங்கள் மாறுவீர்கள்.

## கர்த்தருடைய பெலத்தில்

இயேசு உலகத்தின் ஒளியாயிருக்கிறார், உங்களுடைய வாழ்வை அவருடையதைப்போல நீங்கள் உருவாக்கிக் கொள்ளவேண்டும். ஒரு உறுதியான, சமச்சீரான அழகான குணத்தை அமைத்துக்கொள்வதற்குக் கிறிஸ்துவில் நீங்கள் உதவியைக் கண்டடையலாம். அப்படிப்பட்ட ஒரு குணத்திலிருந்து வீசும் ஒளியை ஒன்றுமில்லாததாக்கச் செய்யச் சாத்தானால் கூடாது. செய்வதற்கென்று ஒரு பணியைக் கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் நமக்காக வைத்திருக்கிறார். மனிதப்புகழ்ச்சி மற்றும் சீராட்டுதலின் செல்வாக்கினால் நாம் ஊக்கம்பெற வேண்டும் என்று அவர் ஏற்பாடு செய்திருக்கவில்லை. ஒவ்வொரு ஆத்துமாவும் கர்த்தருடைய பெலத்தில் நிற்கவேண்டும் என்பதையே அவர் குறித்துவைத்திருக்கிறார். தம்முடைய ராஜ்யத்தின் வீட்டிலே நாம் உயர்த்தப்பட்டு, மேன்மையடைந்து, நற்சீர் பொருந்த வேண்டுமென்பதற்காகத் தேவன் தமது சொந்த குணத்தின் பூரணத்தை நம்மீது தரிப்பிக்கும்படி, தமது ஒரேபேறான குமாரனையே மிகச்சிறந்த ஈவாக நமக்கு அருளியிருக்கிறார். இயேசுவானவர் தமது பின்னடியார்கள் எப்படி வாழவேண்டும் என்று எதிர்பார்க்கிறாரோ, அதுபோலவே நம் உலகத்திற்கு வந்து அவர் வாழ்ந்துகாட்டினார். தேவனுடைய ஆச்சரியமான செயலுடன் ஒத்துழைக்கும்படி நாம் ஆர்வமிக்க முயற்சி எடுப்பதில் மிகவும் சோம்பற்காரராக, சுயத்தைத் திருப்திபடுத்துபவராக இருப்போம் என்றால், இந்த வாழ்விலும், எதிர்கால, அழியாப்பெரு வாழ்விலும் நஷ்டத்தையே சந்திப்போம்.

ஒரு மனமுடைந்த விதத்தில் அல்ல, பலமான விசுவாசம் மற்றும் நம்பிக்கையுடன் நாம் செயல்படவேண்டும் என்று தேவன் திட்டமிட்டிருக்கிறார். நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பதால், உலகத்திற்கு இயேசுவைக் கொடுப்பதில் பிதாவானவரின் அற்புதமான விட்டுக்கொடுக்கும் பண்பைக் கண்டு ஒளியூட்டம் பெறுகிறோம்; குமாரனை விசுவாசிக்கிற அனைவரும் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்குப் பிதாவானவர் அவரைத் தந்தருளினது கண்டு, நாம் சொல்லமுடியாத சந்தோஷத்தினாலும், மகிமையின் நிறைவினாலும் மகிழ்ந்து களிகூரவேண்டும். கல்வியினால் கிடைக்கக்கூடிய அனைத்தையும் சத்தியத்தின் முன்னேற்றத்திற்காக நாம் பயன்படுத்தவேண்டும் என்று தேவன் கருதுகிறார். உலகத்தின் முன்பாகக் கிறிஸ்துவின் சிலுவை உயர்த்தப்படவும், சிலுவையின் வெளிச்சத்தில் ஆத்துமாவின் மதிப்பு வெளியாக்கப்படவும், உண்மையும் மிக அவசியமுமான தேவபக்தி வாழ்வு மற்றும் குணத்திலிருந்து பிரதிபலிக்கப்படவேண்டும். பரலோக அப்பத்தை உட்கொள்வதால் நாம் ஆவிக்குரிய வல்லமையைப் பெறும்வண்ணமாக, வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்வதற்கு நமது மனங்கள் திறந்த நிலையில் இருக்கவேண்டும்.—The Review and Herald, April 8, 1890.

## 15

# ஆத்தும ஆலயம்

தேவனுடைய கோரிக்கைகளுக்கு உண்மையுடன் கீழ்ப்படிவதால், மனிதனின் அனைத்து மனோசக்திகளையும் உயர்த்தி, மேம்படுத்தி, பெலப்படுத்துகிற ஓர் வியப்பூட்டும் செல்வாக்கு உண்டாகும். தேவனுடைய சேவைக்கென்று இளமையிலேயே தங்களை அர்ப்பணித்திருந்தவர்கள், ஆழ்ந்த சிந்தனையாளர்களாக, கூரிய பகுத்துணர்வாளர்களாகக் காணப் பட்டிருக்கின்றனர். ஏன் அப்படி இருக்கக்கூடாது? உலகமே அறிந்திருக்கிற மாபெரும் ஆசானுடன் கொள்ளும் ஐக்கியம், புரியுந்தன்மையை ஸ்திரப்படுத்தும், மனதை ஒளிப்படுத்தும், இதயத்தை சுத்தப்படுத்தும்; முழு மனிதனையும் உயர்த்தி, சீர்ப்படுத்தி, மேம்படுத்தும். “உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்.”

### தேவனுடைய குறிக்கோள்

தேவபக்தியாயிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் வாலிபர் மத்தியில்,

ஒரு பெரும்பகுதியினர் இவ்வாக்கியத்திற்கு மறுப்புத் தெரிவிப்பதுபோலக் காணப்படுகிறார்கள். அறிவிலோ அல்லது ஆன்மீகத்திலோ அவர்கள் முன்னேற்றமடைகிறதில்லை. வளர்வதற்குப் பதிலாக அவர்களது சக்திகள் சிறுத்துப்போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் சங்கீதக்காரனின் வார்த்தைகள் உண்மைக் கிறிஸ்தவனுக்கு உண்மையானவைகளாகவே இருக்கின்றன. ஒளியையும், உணர்வையும் கொடுப்பதாகச் சொல்லும் தேவனுடைய வார்த்தை வெறும் எழுத்து மட்டுமல்ல; அது பரிசுத்த ஆவியானவரால் திறக்கப்பட்டு, இருதயத்துக்கு அப்பியாசப்படுத்தும் வார்த்தை ஆகும். ஒரு மனிதன் உண்மையாக மனம்மாறும்பொழுது, அவன் ஒரு தேவபிள்ளையாக, திவ்ய சுபாவத்திற்குப் பங்குள்ளவனாகிறான். மனம் மறுரூபமடைவது மட்டுமல்ல, அறிவாற்றல் பெலப்படுத்தப்பட்டு, உயிரூட்டமடைகிறது. மனமாற்றத்துக்கு முன்பாக, சாதாரணமான, மிகவும் தரந்தாழ்ந்த திறமையைக் கொண்டிருப்பதாகக் கருதப்பட்ட நபர்கள் மனமாற்றத்திற்குப்பின் முற்றிலுமாக உருமாறிய அநேக சம்பவங்கள் இருக்கின்றன. பிற்பாடு அவர்கள் தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களைப் புரிந்துகொள்வதற்கும், பிறருக்கு இந்தச் சத்தியங்களை எடுத்துரைப்பதற்குமான குறிப்பிடத்தக்க வல்லமையை வெளிக்காட்டினார்கள். இத்தகைய மனிதர்களுடன் பேசுவதை ஒரு சிலாக்கியமாக உயர்ந்த நிலையிலுள்ள் அறிவுஜீவிகள் கருதியிருக்கின்றனர். நீதியின் சூரியன் தனது பிரகாசமான ஒளிக்கதிர்களை அவர்களது மனங்களில் வீசச்செய்து, ஒவ்வொரு சக்தியையும் மிகவும் விறுவிறுப்பான செயல்பாட்டுக்குள் விழிப்பூட்டியிருக்கிறது.

வாலிபர்கள் பரிசுத்த ஆவியானவரின் உதவியினால் தேவனுடைய வார்த்தையை இருதயத்தில் ஏற்று, வாழ்க்கையில் அதற்குக் கீழ்ப்படிவார்களானால், தேவன் அவர்களுக்காக ஒரு மாபெரும் கிரியையைச் செய்வார். சகல ஞானத்துக்கும் ஆதாரமும், நன்மைக்கும், தூய்மைக்கும், உண்மைக்கும் ஊற்றுமான தம்மண்டைக்கு அவர்களைக் கவர்ந்திழுக்க அவர் தொடர்ந்து வகைதேடிக்கொண்டிருக்கிறார். உயர்ந்த கருப்பொருள்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிற மனம் தன்னில்தானே மேன்மையுடையதாக மாறுகிறது.

## தூய்மைக்கேடடையும் புனிதச் சிறப்பிடங்கள்

தேவனைச் சேவிப்பதாகச் சொல்லிக்கொண்டு, அறிவிலும் பக்தியிலும் முன்னேற முயலாதவர்கள் பெயருக்கு மட்டுமே கிறிஸ்தவர் களாக இருக்கின்றனர். ஆத்தும ஆலயம் தூய்மைக் கேடுகளினால் நிறைந்திருக்கிறது. தேவனுடைய வார்த்தை பிரவேசிப்பதற்கு இடமில்லாதபடிக்கு, அற்பமான வாசிப்பும், பயனற்ற பேச்சும், உலகச் சிற்றின்பமும் உள்ளத்தை முழு அளவில்

ஆக்கிரமித்திருக்கிறது. ஆத்துமாவில் கிறிஸ்து இருக்கவேண்டிய இடத்தை லௌகிகமும், சிறுமைத்தனமும், பெருமையும் பிடித்துக்கொள்ளுகிறது.

## புலன் சார்ந்த இன்பத்தோய்வின்மூலம் கீழ்நிலையடைதல்

பசிநாட்டம் மற்றும் வெறி உணர்ச்சியினால் திருப்தியடைதலைத் தங்களுடைய பிரதான நன்மையாகத் தேடுபவர்கள் ஒருபோதும் நல்லவர்களாக அல்லது உண்மையான பெரும் மனிதர்களாக விளங்குவதில்லை. உலகத்தின் அபிப்பிராயப்படி அவர்கள் எவ்வளவு உயர்ந்த நிலையிலிருந்தாலும் சரி, தேவனுடைய கணிப்பில் அவர்கள் கீழானவர்களாக, இழிந்தவர்களாக, சீர்கெட்டவர்களாக இருக்கின்றனர். அவர்களது இழப்பின் அடையாளத்தை அவர்களது முகத்தோற்றத்தின்மீதே எழுதிவிடுமாறு பரலோகம் ஒழுங்குசெய்திருக்கிறது. அவர்களது எண்ணங்கள் பூமிக்கடுத்ததாக, பூமிக்குரியதாகவே இருக்கின்றன. உள்ளத்தின் கீழான நிலையை அவர்களது வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன. இழிவான வற்றினால் இதயத்தை அவர்கள் நிரப்பிக்கொண்டு, அங்கிருந்து தேவசாயலை ஏறக்குறைய துடைத்தழித்துவிட்டனர். பகுத்தறிவின் சத்தம் மூழ்கடிக்கப்பட்டுவிட்டது; சிந்தனைத்திறன் தவறாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டது. ஐயோ! புலன்சார்ந்த இன்பத்தோய்வினால் மனிதனின் முழுசாயலும் எப்படிப்பட்ட கீழ்த்தரநிலையை அடைந்துவிட்டது! சித்தத்தைச் சாத்தானுக்குச் சமர்ப்பித்துவிட்டால், தீமை மற்றும் மதியீனத்தின் ஆழங்களுக்குள் மனிதர்கள் எவ்வளவாக இறங்கமாட்டார்கள்! சத்தியமானது வீணாகவே நுண்ணறிவை நோக்கி முறையிடுகிறது; ஏனெனில் அதன் தூய நியதிகளுக்கு இதயமானது எதிர்த்து நிற்கிறதாயிருக்கிறது.—The Signs of the Times, December 1, 1881.

## சோதனையில் உதவி

விசுவாசத்தினாலும் ஜெபத்தினாலும் சுவிசேஷத்தின் கோரிக்கைகளை அனைவருமே நிறைவேற்றிவிடலாம். மீறுதல்செய்த எந்த ஒரு மனிதனையும் கட்டாயப்படுத்த முடியாது. முதலாவது அவனது சொந்த அனுமதி பெறப்பட்டாக வேண்டும். பகுத்தறிவின்மீது வெறிஉணர்ச்சி ஆதிக்கம் செலுத்துமுன்பாக அல்லது மனச்சாட்சியின்மீது அக்கிரம் ஜெயம்பெறுமுன்பாக, பாவமிக்க செயலை ஆத்துமா சிந்தனை செய்திருக்கவேண்டும். எவ்வளவு பலமுடையதாயினும் சோதனை என்பது பாவத்திற்கான சாக்குப்போக்கே அல்ல. "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது." சோதிக்கப்பட்ட ஆத்துமாவே, கர்த்தரை நோக்கி முறையிடு. உதவியற்ற, தகுதியற்ற உன்னையே இயேசுவிடம் ஒப்படைத்து அவரது உறுதியான

வாக்குத்தத்தத்தை உரிமைகொண்டாடு. கர்த்தர் கேட்பார். சுபாவ இருதயத்தின் இழுப்புகள் எவ்வளவு பலமானவை என்பதை அவர் அறிந்திருக்கிறார். ஒவ்வொரு சோதனையின் வேளையிலும் அவர் உதவி செய்வார்.

பாவத்திற்குள் நீ விழுந்துவிட்டாயா? அப்படியானால் தாமதமின்றி இரக்கத்துக்காக, மன்னிப்புக்காக தேவனைத் தேடு… பாவிக்கு இரக்கம் இன்னும் காட்டப்படுகிறது. நமது எல்லா அலைச்சல்களிலும், "சீர்கெட்ட பிள்ளைகளே திரும்புங்கள், நான் உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன்," என்று கர்த்தர் நம்மை அழைத்துக் கொண்டிருக்கிறார்.—5 Testimonies for the Church, p. 177.

## 16

# நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல

எனக்குப் பிரியமானபடி ஒருபோதும் நான் செய்யக்கூடாதா? என் மனம்போகும் போக்கிலே நான் ஒருபோதும் போகக்கூடாதா? எனக்கு எப்பொழுதுமே தடையிடப்படவேண்டுமா? என் விருப்பங்களின்படி நான் ஒருபோதும் செயல்படக்கூடாதா? என்பது போன்ற கேள்விகளை சில நேரங்களில் நாம் கேள்விப்படுகிறோம்.

சுபாவப் போக்குகளைக் குறைவாக நீங்கள் பின்பற்றினால், அது உங்களுக்கும், பிறருக்கும் நன்மை பயக்கிறதாயிருக்கும். சுபாவப் போக்குகள் திசைதிருப்பப்பட்டிருக்கின்றன, சுபாவ சக்திகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சாத்தான் மனிதனை தேவனோடு போர்புரியும்படிச் செய்கிறான். மனிதனிலுள்ள தெய்வீக சாயலை அழிப்பதற்கே அவன் தொடர்ந்து கிரியை செய்கிறான். ஆகையால் நமது வார்த்தைகள் மற்றும் செயல்கள்மீது ஒரு கட்டுப்பாட்டை நாம் வைத்திருக்கவேண்டும்.

### முழுமையான அர்ப்பணிப்பின் பலன்கள்

தேவகிருபை நம் இதயத்தை ஆட்கொள்ளும்போது, வழிவழியாய்ப் பெற்ற, வளர்க்கப்பட்ட தீமைக்கான இயல்புகள் சிலுவையிலறையப்பட

வேண்டும் என்பது விளங்குகிறது. ஒரு புதிய கட்டுப்பாட்டின்கீழ், ஒரு புதிய வாழ்வு ஆத்துமாவில் தொடங்கப்படவேண்டும். செய்யப்படும் அனைத்தும் தேவமகிமைக்கென்று செய்யப்படவேண்டும். புறம்பான மனிதனையும், உள்ளான மனிதனையும் இப்பணி உள்ளடக்குகிறது. சரீரம், ஆத்துமா, ஆவி ஆகிய முழுமையும் நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனால் பயன்படுத்தப்படுவதற்கு, அவரது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

ஜென்ம சுபாவமுள்ள மனிதன் தேவனுடைய பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனாக இல்லை. அது அவனால் கூடாததாகவும் இருக்கிறது. ஆனால் விசுவாசத்தினால் புதுப்பிக்கப்பட்டவனோ நாளுக்குநாள் கிறிஸ்துவின் வாழ்வை வாழ்கிறான். தான் தேவனுடைய சம்பத்து என்பதை அவன் உணர்ந்திருப்பதாக நாளுக்கு நாள் அவன் காண்பிக்கிறான்.

சரீரமும் ஆத்துமாவும் தேவனுக்குரியவை. உலகத்தின் மீட்புக்காக அவர் தமது குமாரனை ஒப்புக்கொடுத்தார்; இதினிமித்தம் பூரணமாக உண்மையின் குணங்களை வளர்த்துக்கொள்வதற்கான ஒரு கிருபையின் காலம், ஒரு புதுவாழ்வுக்கான வாய்ப்பு நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் நம்மை மீட்டிருக்கிறார்; மறுபிறப்படைந்த, மறுரூபமாக்கப்பட்ட சேவையின் வாழ்வை நாம் வாழ்வதற்கு அவர் சாத்தியப்படுத்தி இருக்கிறார்.

## நமது சக்திகள் அனைத்தும் அவருக்கே சொந்தம்

தேவனுடைய முத்திரை நம்மீது இருக்கிறது. அவர் நம்மை வாங்கியிருக்கிறார், நமது சரீர, மனோரீதியான, ஒழுக்க சக்திகள் அவருக்கே சொந்தம் என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நேரம், செல்வாக்கு, பகுத்தறிவு, பற்றுறுதி, மனச்சாட்சி ஆகிய அனைத்தும் தேவனுடையதே; அவருடைய சித்தத்துக்கு இசைவாக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். உலகத்தின் போக்கிற்கேற்ப அவற்றைப் பயன்படுத்தக்கூடாது; ஏனெனில் உலகம் தேவனுடன் பகைகொண்டுள்ள ஒரு தலைவனுக்குக் கீழாக இருக்கிறது.

ஆத்துமா வாசம்பண்ணுகிற மாம்சமும் தேவனுக்குச் சொந்தமானது. ஒவ்வொரு நரம்பும், ஒவ்வொரு தசையும் அவருடையது. அசட்டையினாலோ அல்லது தவறாகப் பயன்படுத்துதலினாலோ ஒரே ஒரு உறுப்பைக்கூட எவ்விதத்திலும் நாம் பெலவீனப்படுத்தி விடலாகாது. தேவனுடைய சித்தத்துக்கேற்ப ஒவ்வொரு சரீர, ஆவிக்குரிய வல்லமையையும் வனைந்து, பரிசுத்த ஆவியானவர் தங்குவதற்கேதுவான ஒரு ஆலயமாய்

திகழச்செய்யும்படி, கூடுமானவரைக்கும் மிகச்சிறப்பான ஆரோக்கிய நிலையில் சரீரத்தைக் காத்துக்கொள்வதற்குத் தேவனுடன் ஒத்துழைக்கிறவர்களாக நாம் இருக்கவேண்டும்.

தூய நியதிகளால் உள்ளம் நிரப்பப்பட்டிருக்கவேண்டும். ஆத்துமாவின் பொற்தகடுகளில் சத்தியம் பதிக்கப்பட்டாக வேண்டும். வேத வார்த்தையின் விலையேறப்பெற்ற சத்தியங்களினால் நினைவாற்றல் நிரம்பியிருக்கவேண்டும். அப்பொழுது, அழகான இரத்தினங்களைப்போல, இந்த சத்தியங்கள் வாழ்வில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.

## ஒரு ஆத்துமாவின் விலை

தேவன் தனது கைகளின் கிரியைமீது வைத்திருக்கிற மதிப்பும், தமது பிள்ளைகளுக்காகக் கொண்டிருக்கும் அன்பும், மனிதர்களை மீட்பதற்கு அவர் கொடுத்த ஈவில் வெளிப்பட்டிருக்கிறது. ஆதாம் சாத்தானின் ஆளுகையின்கீழ் விழுந்தான். உலகத்திற்குள் பாவத்தையும், பாவத்தினால் மரணத்தையும் அவன் கொண்டுவந்தான். மனிதனை இரட்சிப்பதற்காக தேவன் தமது ஒரேபேறான குமாரனை ஒப்புக்கொடுத்தார். தாம் நீதியுள்ளவரும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் யாவரையும் நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி அவர் இதைச் செய்தார். மனிதன் சாத்தானிடத்தில் தன்னையே விற்றுப்போட்டான், ஆனால் இயேசுவோ மனித இனத்தைத் திரும்பவும் மீட்டுக்கொண்டார்…

நீங்கள் உங்களுடையவர்களல்ல. இயேசு தமது இரத்தத்தினால் உங்களை வாங்கியிருக்கிறார். உங்களது தாலந்துகளைப் பூமிக்குள் புதைக்காதிருங்கள். அவருக்காக அவைகளைப் பயன்படுத்துங்கள். என்னவித தொழிலில் நீங்கள் ஈடுபட்டிருந்தாலும், அதற்குள் இயேசுவைக் கொண்டுவாருங்கள். உங்களுடைய இரட்சகருக்கான உங்களது அன்பை நீங்கள் இழந்துகொண்டிருப்பதாகக் கண்டால், உங்கள் தொழிலை நீங்கள் விட்டுவிட்டு, “இரட்சகரே, இதோ அடியேன் இருக்கிறேன்; நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?,” என்று கூறுங்கள். அவர் உங்களைக் கிருபையாக ஏற்றுக்கொண்டு, அளவில்லாமல் உங்களை நேசிப்பார். அவர் அபரிமிதமாக மன்னிப்பார்; ஏனெனில் ஒருவரும் கெட்டுப்போவதை அவர் விரும்பாதபடியால், இரக்கமுள்ளவராக, நீடிய பொறுமையுள்ளவராக இருக்கிறார்…

நாமும், நம்முடையது அனைத்தும் தேவனுக்கே சொந்தம். நமது இதயங்களின் நேசத்தை அவருக்குக் கொடுப்பதை ஒரு தியாகமாக நாம்

கருதக்கூடாது. ஒரு பிரியமான காணிக்கையாக இதயமே அவருக்குக் கொடுக்கப்படவேண்டும்.—Youth Instructor, November 8, 1900.

### தீர்மானம் அழைக்கப்படுகிறது

சாத்தான் கொடுக்கும் புதுக்கருத்துகளுக்கு வளைந்து கொடுப்பதின் மூலமாக, நாம் அறுவடைசெய்யப்போகும் மேன்மைகளைக்குறித்து, தயங்கியவர்களாக ஆழ்ந்து சிந்தனை செய்வது நமக்குப் பாதுகாப்பல்ல. பாவம் என்று சொன்னாலே, அதில் திளைக்கின்ற ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் அவமானம், பேரழிவு என்பதே அதின் பொருளாகும்; ஆனால், பாவம் அதின் தன்மையில் குருட்டாட்டமாகவும், ஏமாற்றுகிறதாகவும் இருக்கிறது. அது இனிய முகஸ்துதியின் வார்த்தைகளை எடுத்துக்கூறி, நம்மை மயக்கிக் சிக்கவைத்துவிடும். நாம் சாத்தானின் தளத்திலே நின்றுகொண்டு, துணிகரமாக முயற்சிசெய்வோமானால், அவனது வல்லமையினின்று நமக்குப் பாதுகாப்பு கிடைக்குமென்ற நிச்சயம் கிடையாது. நம்மால் முடிந்த அளவு—சக்திக்கு ஏற்ப—சோதனைக்காரன் நம்மை அடைவதற்கான வழிவாய்ப்புகளைக் கண்டுபிடிக்காதபடிக்கு இருமருங்கிலும் ஒவ்வொரு நுழைவாயில்களையும் மூடிவிடவேண்டும்.—Thoughts from the Mount of Blessings, 171.

## 17

# மெய்யான மனமாற்றம்

“அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.”

ஒரு புதிய இருதயத்தின் அவசியத்தைக்குறித்துப் பிறரிடம் பேசுகிற அநேகர் அந்த வார்த்தைகளுக்குரிய அர்த்தத்தைத் தாங்களே அறியாமலிருக்கிறார்கள். வாலிபர்கள் விசேஷமாக “நவமான இருதயம்” என்ற சொற்றொடரைக் குறித்துத் தடுமாறுகிறார்கள். அவர்கள் அதன் பொருளை அறியாதிருக்கிறார்கள். தங்கள் உணர்ச்சிகளில் ஒரு விசேஷ மாற்றம்

ஏற்பட வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதையே அவர்கள் மனமாற்றம் என்றும் கூறுகிறார்கள். “நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்,” என்ற பதத்தைப் புரிந்துகொள்ளாதபடியால், இந்தப் பிழையின்மீது ஆயிரக்கணக்கானவர்கள் அழிவுக்கென தடுமாறியிருந்திருக்கின்றனர்.

## உணர்ச்சி அல்ல உருமாறிய ஒரு வாழ்க்கையே

ஜனங்கள் ஒரு ஆனந்தப்பரவச உணர்ச்சியை அடைந்துவிட்டால், தாங்கள் மனமாற்றமடைந்து விட்டதாக எண்ணிக்கொள்ளும்படிச் சாத்தான் அவர்களை வழிநடத்துகிறான். ஆனாலும் அவர்களது அனுபவம் மாற்ற மடையவில்லை. அவர்களது செயல்பாடுகள் முந்தியிருந்ததுபோலவே இருக்கின்றன். அவர்களது ஜீவியங்கள் நற்கனியைக் காட்டவில்லை. அவர்கள் அடிக்கடி, நீண்டநேரம் ஜெபிக்கின்றனர்; அப்படிப்பட்ட நேரங்களில் அவர்கள் அடைந்த உணர்ச்சிகளைத் தவறாமல் கூறிக்கொள்கின்றனர். ஆனால் புதிய வாழ்வை வாழ்கிறதில்லை. அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கின்றனர். உணர்ச்சியைக் காட்டிலும் ஆழ்ந்ததாக அவர்களது அனுபவம் செல்கிறதில்லை. அவர்கள் மணலின்மீது கட்டுகின்றனர்; தீங்குண்டாக்கும் காற்றுகள் வரும்பொழுது, அவர்களது வீடு அடித்துச் செல்லப்படுகிறது.

தங்களது அனுபவத்தில் தாங்கள் பெற்றிருப்பதாகப் பிறர் கூறிக்கொள்ளும் உணர்ச்சிகளைத் தேடி, ஏராளமான வறிய ஆத்துமாக்கள் இருளில் தடவித்திரிந்து கொண்டிருக்கின்றனர். கிறிஸ்துவில் விசுவாசியா யிருப்பவர் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் தனது சொந்த இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவேண்டும் என்ற உண்மையை அவர்கள் காணத் தவறி விடுகின்றனர். உணர்த்தப்பட்ட பாவி செய்ய வேண்டியதொன்று உண்டு. அவர் மனந்திரும்பி, மெய்யான விசுவாசத்தைக் காட்டவேண்டும்.

நவமான இருதயத்தைக்குறித்து இயேசு பேசும்பொழுது, அவர் உள்ளத்தையும், வாழ்வையும், முழு உயிருருவையும் குறிப்பிடுகிறார். இருதயமாற்றம் அடைதல் என்றால் உலகத்தின் மீதிருக்கும் விருப்பங்களைப் பின்னிழுத்துக்கொண்டு, அவற்றைக் கிறிஸ்துவின்மீது நிலைக்கச் செய்வதாகும். நவமான இருதயம் பெறுதல் என்றால் நவமான சிந்தையையும், நவமான நோக்கங்களையும், நவமான உள்ளெண்ணங்களையும் பெறுதல் ஆகும். ஒரு நவமான இருதயத்தின் அடையாளம் என்ன?—ஒரு மாற்றமடைந்த வாழ்க்கையே. சுயநலத்திற்கும், பெருமைக்கும் நாள்தோறும், மணிதோறும் மரித்தல் அங்கே இருக்கும்.

## மெய்யான மதத்தின் நடைமுறைத்தன்மை

உண்மையான சேவையின் தேவையை ஒரு உயர்ந்த வெளிப்படையான அறிவிப்பு ஈடுகட்டிவிடும் என்றெண்ணுவதால், சிலர் மாபெரும் தவறு செய்கிறார்கள். ஆனால் நடைமுறையில் இல்லாத ஒரு மதம் மெய்யானது அல்ல. உண்மையான மனமாற்றம் நமது சகமனிதர்களுடனுள்ள நடவடிக்கைகளில் நம்மைக் கண்டிப்பான நேர்மையாளர்களாக இருக்கும்படிச் செய்யும். நமது அன்றாடப்பணியில் அது நம்மை உண்மைமிக்கவர்களாக்கும். கிறிஸ்துவின் ஒவ்வொரு உண்மையான பின்னடியாரும், வேதாகமத்தின் மதம் தன்னுடைய தாலந்துகளை எஜமானனுடைய சேவையில் பயன்படுத்துவதற்குத் தன்னைத் தகுதிப்படுத்துகிறது என்பதைக் காட்டுவார்.

“அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்.” இவ்வார்த்தைகள் ஒவ்வொரு உண்மைக் கிறிஸ்தவனின் வாழ்விலும் நிறைவேறும். உங்களது பணி ஒருவேளை கடுமையானதாக இருந்தாலும், அதைச் செய்யும் விதத்தினால் நீங்கள் அதை மேன்மையுறச் செய்யலாம். கர்த்தருக் கென்றே அதைச் செய்யுங்கள். அதை மகிழ்ச்சியுடனும், தெய்வீகப் பெருந்தன்மையுடனும் செய்யுங்கள். பணிக்குள் கொண்டுவரப்படும் உயர்தர நியதிகளே அப்பணியைக் கர்த்தருடைய பார்வையில் முற்றிலும் ஏற்புடையதாக்குகிறது. உண்மையான சேவை பூமியின் மீதிருக்கிற தேவனுடைய எளிமையான ஊழியர்களை உன்னத மன்றங்களிலிருக்கிற அவருடைய உயர்ந்த ஊழியர்களுடன் இணைக்கிறது.

தேவனுடைய குமாரர்களும், குமாரத்திகளுமாகக் கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தில் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற உயர்ந்த குறிக்கோளை அடைவதற்குப் பிரயாசப்படவேண்டும். பூரண சற்குணத்தைக் காட்டிலும் குறைவானதொன்றில் அவர்கள் திருப்தியடைந்துவிடக்கூடாது; ஏனெனில், “பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணரா யிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்,” என்று கிறிஸ்து கூறியிருக்கிறார்.

## பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கை

தேவனுடைய பரிசுத்த வார்த்தையை நமது பாடமாக்கி, அதன் பரிசுத்த நியதிகளை நமது ஜீவியங்களுக்குள் கொண்டு வருவோமாக. நமது தப்பிதங்களை தினமும் திருத்திக்கொண்டு, தேவனுக்கு முன்பாக சாந்தமாகவும், தாழ்மையாகவும் நடப்போமாக. தன்னலப் பெருமையினால்

ஆத்துமாவை தேவனிடமிருந்து பிரித்துக் கொள்ளாதிருப்போமாக. பிறரைக் காட்டிலும் உங்களை மேன்மையாக எண்ணிக்கொள்கிற உச்ச உயர்நிலை உணர்வை நினைவில் பேணாதிருங்கள். “தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.” கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படியச் செய்யும்படி உங்களது சித்தத்தைக் கொண்டு வந்தால், சமாதானமும் இளைப்பாறுதலும் உங்களுக்கு வந்துசேரும். அப்பொழுது கிறிஸ்துவின் அன்பு இதயத்தில் ஆளுகை செய்யும்; செயல்பாட்டின் அந்தரங்க ஊற்றுகளை இரட்சகரிடம் சிறைப்படுத்துவதற்குக் கொண்டுவரும். விரைவாக, எளிதில் தூண்டுதலடையும் எரிச்சல் கிறிஸ்துவின் கிருபையெனும் தைலத்தினால் மென்மையாக்கப்பட்டுக், கீழ்ப்படுத்தப்படும். பாவங்கள் மன்னிக்கப்பட்ட உணர்வு எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானத்தைக் கொண்டுவரும். கிறிஸ்தவப் பூரண சற்குணத்துக்கு எதிரான அனைத்தையும் மேற்கொள்ள ஆர்வமிக்கப் பிரயாசம் அங்கே உண்டாகும். கருத்துவேற்றுமை காணாமல்போகும். தன்னைச் சுற்றியிருந்தவர்களிடத்தில் ஒரு காலத்தில் குறைகாண்பவராயிருந்தவர் தனது சொந்த குணத்தில் மிகவும் பெரிய குறைகள் இருப்பதைக் காண்பார்.

சத்தியத்திற்குச் செவிசாய்ப்பவர்கள் இருக்கிறார்கள்; கிறிஸ்துவுக் கெதிராக வாழ்ந்து வந்திருக்கிறதையுங்குறித்து உணர்த்தப்படுகிறார்கள். குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக, தங்கள் மீறுதல்களைவிட்டு மனந்திரும்புகி றார்கள். கிறிஸ்துவின் புண்ணியங்களைச் சார்ந்துகொண்டு, அவரில் உண்மையான விசுவாசத்தைச் செயல்படுத்தி, பாவத்திற்கான மன்னிப்பை அவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். அவர்கள் தீமைசெய்வதை நிறுத்தி, நன்மை செய்வதற்குப் படிக்கும்போது, தேவனுடைய அறிவிலும், கிருபையிலும் வளருகிறார்கள். உலகத்தினின்று விலகியிருக்கும்வண்ணம் தாங்கள் தியாகம்செய்திடல் வேண்டும் என்பதை அவர்கள் காண்கிறார்கள்; விலைக்கிரயத்தைக் கணக்கிட்டபின்னர், கிறிஸ்துவைப் பந்தயப்பொருளாகப் பெறுவதற்காக அனைத்தையும் நஷ்டமென்று கருதுகிறார்கள். கிறிஸ்துவின் சேனையுடன் அவர்கள் சேர்ந்துவிட்டனர். போராட்டம் அவர்களுக்குமுன்பாக இருக்கிறது; சுபாவப் போக்குகள் மற்றும் சுய விருப்பங்களுக்கெதிராக யுத்தம் செய்து, சித்தத்தைக் கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படியச் செய்யக் கொண்டுவரும் போராட்டத்தில் அவர்கள் துணிவுடன், மகிழ்வுடன் நுழைகின்றனர். கர்த்தருக்குக் கீழ்ப்படியும் கிருபைக்காக அவர்கள் தினமும் கர்த்தரைத் தேடுகிறார்கள்; அவர்கள் பெலப்படுத்தப்பட்டு, சகாயமும் பெறுகிறார்கள். இதுவே உண்மையான மனமாற்றம் ஆகும். நவமான இருதயத்தைப் பெற்றிருப்பவர் தாழ்மையும் நன்றியுணர்வுமிக்க

நம்பிக்கையுடன் கிறிஸ்துவின் உதவியைச் சார்ந்திருக்கிறார். நீதியின் கனியை அவர் தன் வாழ்வில் வெளிப்படுத்துகிறார். அவர் ஒரு காலத்தில் தன்னையே நேசித்தவர். உலகச் சிற்றின்பம் அவரது மனமகிழ்ச்சியாய் இருந்தது. இப்பொழுது அவரது விக்கிரகம் கீழிறக்கப்பட்டுவிட்டது; தேவன் முதன்மையானவராக ஆளுகை செய்கிறார். ஒரு காலத்தில் தான் நேசித்தப் பாவங்களை இப்பொழுது அவர் வெறுக்கிறார். பரிசுத்தத்தின் பாதையில் உறுதியுடன், தீர்மானத்துடன் அவர் பின்பற்றி நடக்கிறார்.—Youth Instructor, September26, 1901.

### பிசாசின் கயிறுகள்

பணியின் துன்பங்கள் மற்றும் பாவச் சிற்றின்பங்கள் என்பவையே சாத்தான் தனது கண்ணிகளில் மனிதரைக் கட்டுவதற்கான கயிறுகள் ஆகும். ஒரு தவறான செயலைச் செய்வதைவிடவும் மரித்து விடுவதை விரும்புபவர்கள் மட்டுமே உண்மைமிக்கவர்களாகக் காணப்படுவார்கள்.—Testimonies for the Church, Vol. 5, p. 53.

## 18

# மனம்போன போக்கில் செல்லும் ஒரு மகளுக்கான ஆலோசனை

ஆயிரக்கணக்கான தூய, பாவமற்ற தூதர்கள் மற்றும் பரலோகத்தின் மகத்துவமானவரின் பார்வைக்குமுன்பாகத் திறந்துவைக்கப்பட்டிருக்கிற, கடந்த ஆண்டைப் பற்றிய ஒரு அச்சமூட்டும் ஆவணம் உன்னைக் குறித்து இருக்கிறது. மரிக்குந்தன்மையுள்ள மனிதர்களிடமிருந்து உனது எண்ணங்களும், செயல்களும், மூர்க்கமான, பரிசுத்தமற்ற உணர்ச்சிகளும் மறைக்கப்பட்டிருக்கலாம்; ஆனால் உனது வாழ்வின் மிக மிக அற்பமான செயல்கள் தேவனுடைய கண்களுக்கு முன்பாக வெட்டவெளிச்சமாயிருக்கிறது என்பதை நினைவிற்கொள். பரலோகத்தில் உன்னைக்குறித்தக் கறைபடிந்த பதிவேடு இருக்கிறது. நீ செய்த பாவங்கள் அனைத்தும் அங்கே பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

தேவனுடைய சினம் உன்மீது இருக்கிறது, ஆயினும் நீ உணர்வற்றவனாய்த் தோற்றமளிக்கிறாய்; உனது இழக்கப்பட்டுப்போன,

அழியப்போகும் நிலையை உணராதிருக்கிறாய். சிலவேளைகளில் வருத்த மூட்டும் உணர்வுகள் உன்னில் ஏற்படுகின்றன; ஆனால் அதற்கும் மேலாக உனது கர்வமிக்க, தற்சார்புடைய ஆவி உயர்ந்துநின்று, உனது மனச்சாட்சியின் குரலை அடக்கிவிடுகிறது.

நீ மகிழ்ச்சியாக இல்லை; ஆயினும் தடைசெய்யப்படாமல் உன் போக்கின்படி சென்றால், மகிழ்ச்சியாக இருந்துவிடலாமெனக் கற்பனை செய்துகொள்கிறாய். பரிதாபமான பிள்ளையே! ஏதேனின் ஏவாளைப்போன்ற நிலைமையில் நீ இருக்கிறாய். அவள் மரிக்காதபடிக்குத் தொடவும் கூடாதென தேவன் தடைசெய்திருந்த மரத்தின் கனியைப் புசித்த மாத்திரத்தில் மேன்மைநிலையை அடையக்கூடும் என்பதாக அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். அவள் புசித்தாள், ஏதேனின் எல்லா மகிமைகளையும் இழந்தாள்.

## கற்பனாசக்தியைக் கட்டுப்படுத்துதல்

உனது எண்ணங்களை நீ கட்டுப்படுத்த வேண்டும். இது எளிமையான பணியாக இருக்காது; இடைவிடாத, ஒரு கடுமையான முயற்சியின்றி நீ அதைச் சாதிக்க இயலாது. ஆயினும் நீ அதைச் செய்யும்படி தேவன் கோருகிறார்; கணக்கொப்புவிக்கவேண்டிய ஒவ்வொருவரின் கடமையாக அது இருக்கிறது. உனது எண்ணங்களைக்குறித்துத் தேவனிடம் பதில்கூறக் கடமைப்பட்டிருக்கிறாய். அசுத்தமான காரியங்களின்மீது லயித்திருக்க உன் மனதை அனுமதித்து, வீணான சிந்தனைகளில் திளைத்திருந்தால், ஒரு வகையில் உனது எண்ணங்களைச் செயல்பாட்டுக்குள் கொண்டுவந்ததைப் போல, தேவனுக்கு முன்பாகக் குற்றவாளியாயிருக்கிறாய். அந்தச் செயல்பாட்டுக்கெல்லாம் தடையாயிருப்பது வாய்ப்புக் குறைபாடே ஆகும்.

பகல் மற்றும் இராத்திரிக் கனவு மற்றும் மனக்கோட்டை கட்டுதல் ஆகியவை மோசமான மிகவும் அபாயகரமான பழக்கங்களாகும். ஒருமுறை நிலைநாட்டப்பட்டுவிட்டால், அப்படிப்பட்ட பழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, எண்ணங்களைத் தூய்மையான, பரிசுத்தமான, உணர்வான கருப்பொருள்களுக்கு நேராகத் திருப்புவது கூடாததாகிவிடுகிறது. நீ உனது சிந்தையைக் கட்டுப்படுத்தி, வீணான, சீர்கெட்ட சிந்தனைகளால் கறைபடுவதிலிருந்து உன் ஆத்துமாவைக் காக்க விரும்பினால், உனது கண்கள், காதுகள் மற்றும் உனது எல்லா உணர்வுகளின்மீதும் ஒரு உண்மைமிக்கக் காவலாளனாக இருக்கும்படி நீ மாறியாக வேண்டும். கிருபையின் வல்லமை மட்டுமே இத்தகைய மிகவும் விரும்பத்தக்க

கிரியையைச் செய்திட இயலும். இந்த விஷயத்தில் நீ பெலவீனமாய் இருக்கிறாய்.

### வெறி உணர்ச்சிகள் மற்றும் விருப்பங்களை அடக்கியாளுதல்

வழிதவறுபவளாக, தைரியமும், துணிவுமிக்கவளாக நீ மாறியிருக்கிறாய். உனது இருதயத்தில் தேவகிருபைக்கு இடமில்லை. தேவனுடைய கிருபையைப் பெறுகிறவளாகவும், நீதியின் ஆயுதமாகவும் உன்னை விளங்கச்செய்யும் நிலைக்கு, அவருடைய பெலன்மாத்திரமே உன்னைக் கொண்டுவரமுடியும். உனது எண்ணங்களை மட்டுமல்ல, உனது வெறி உணர்ச்சிகளையும், விருப்பங்களையுங்கூடக் கட்டுப்படுத்தும்படி தேவன் உன்னிடம் கோருகிறார். இக்காரியங்களில் உன்னை நீயே ஆளுகை செய்துகொள்ளும் விதத்தைப் பொறுத்தே உனது இரட்சிப்பு அமைந்திருக்கிறது. வெறி உணர்ச்சியும், விருப்பமும் வல்லமையான கருவிகள் ஆகும்; தவறாகப் பயன்படுத்தப்பட்டால், தவறான உள்ளெண்ணங்கள் மூலமாகச் செயல்படுத்தினால், தவறான இடத்தில் வைத்துவிட்டால், உனக்கு அழிவைக் கொண்டுவருவதில் அவைகள் சக்திமிக்கவைகளாயிருக்கிறது; தேவனற்ற, நம்பிக்கையற்ற ஒரு பரிதாபமான சீர்குலைவில் உன்னைக் கொண்டுவந்து நிறுத்திவிடவும் செய்யும்.

வெறி உணர்ச்சிகளையும், விருப்பங்களையும் பகுத்தறிவு, மனச்சாட்சி மற்றும் குணாதிசயத்தின்கீழாகக் கொண்டுவந்துவிட்டால், கற்பனாசக்தியைத் தன்னுறுதியுடன், விடாப்பிடியாகக் கட்டுப்படுத்திட முடியும். நீ அபாயநிலையிலிருக்கிறாய், உனது நித்திய நன்மைகளை வெறி உணர்ச்சியின் பலிபீடத்தில் பலிசெலுத்திவிடுமளவுக்கு இப்பொழுது விளிம்பில் இருக்கிறாய். வெறி உணர்ச்சியானது உனது முழு உயிருருவின்மீதும் நேர்மறையான கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. எத்தன்மையுள்ள வெறியுணர்ச்சி! கீழ்த்தரமான, அழிக்குந்தன்மையுள்ள வெறியுணர்ச்சியே ஆகும். அதற்கு இணங்குவதால், உன் பெற்றோர்களின் ஜீவியங்களைக் கசப்பாக்குவாய், உன் சகோதரிகளுக்கு வருத்தத்தையும், வெட்கத்தையும் கொண்டுவருவாய், உன் குணத்தை இழப்பாய், பரலோகத்தையும், மகிமையான அழியா வாழ்வையும் இழப்பாய். இதைச் செய்வதற்கு நீ ஆயத்தமா? நீ இப்பொழுது செய்யும் காரியத்தை நிறுத்தும்படி உன்னை வேண்டுகிறேன். உனது பிடிமுரண்டான, காமவிகாரப் பாதையில் மேலும் ஒரு அடியெடுத்து வைக்காதே; ஏனெனில் உனக்கு முன்பாக துயரமும், மரணமும் இருக்கின்றன. உனது வெறி உணர்ச்சிகள் மற்றும் விருப்பங்களுக்கடுத்த காரியத்தில் இச்சையடக்கத்தை நீ செயல்படுத்தாவிட்டால், உன்னைச்

சூழ்ந்துள்ள அனைவராலும் பழிக்கப்படும் நிலைக்குள் நிச்சயமாக உன்னை வருவித்துக்கொள்வாய்; நீ வாழும் காலம் வரையிலும் நீடித்திருக்கும் அவகீர்த்தியை உன் குணத்தின்மீது ஏற்படுத்திக் கொள்வாய்.

உன் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாதவளாக, அடக்கமற்றவளாக, நன்றியற்றவளாக, பரிசுத்தமற்றவளாக நீ இருக்கிறாய். இத்தகைய இழிந்த குணங்கள் ஒரு கெட்ட மரத்தின் கனிகளகாகும். நீ துடுக்குத்தனமிக்கவளாய் இருக்கிறாய். நீ இளைஞர்களை நேசிக்கிறாய், அவர்களை உனது உரையாடலின் உட்கருத்தாக்கிக் கொள்ளவும் விரும்புகிறாய். “இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.” உன்னைக் கட்டுப்படுத்துமளவுக்குப் பழக்கங்கள் பலமிக்கவைகளாகிவிட்டன; உனது நோக்கங்களை நிறைவேற்றி, உனது ஆசைகளைத் தீர்த்துக்கொள்ளும்விதத்தில் ஏமாற்றவும் நீ கற்றுக்கொண்டிருக்கிறாய்.—Testimonies for the Church, Vol. 2, p. 560–562.

## 19

# போராட்டத்தின் மூலம் விளங்கும் குணத்தின் பெலன்

கிறிஸ்துவின் முதல் முப்பதாண்டுகால வாழ்க்கை நாசரேத் என்னும் பிரபலமற்ற கிராமத்தில் உருண்டோடியது. இக்கிராமத்தின் குடியானவர்கள் தங்களது துன்மார்க்கத்துக்குப் பேர்போனவர்கள்; அதனாலேயே “நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா?” என்று நாத்தான்வேல் கேட்டார். கிறிஸ்துவின் ஆரம்பகால வாழ்வுகுறித்துச் சுவிசேஷகர்கள் வெகு குறைவாகவே கூறியிருக்கின்றனர். அவரது பெற்றோர்களுடன் அவரும் சேர்ந்து எருசலேமுக்குச் சென்ற சம்பவத்தைக்குறித்து சுருக்கமான வர்ணிப்பு தவிர, ஒரு எளிய வாக்கியம் மட்டுமே நமக்குத் தெரிந்திருக்கிறது; “பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது,” என்பதே அது.

கிறிஸ்துவே அனைத்திலும் நமக்கு மாதிரியாக இருக்கிறார். தேவனுடைய தீர்மானத்தின்படி, அவரது ஆரம்பகால வாழ்க்கை நாசரேத்தில் கடந்துசென்றது. அவர் தொடர்ச்சியாகச் சோதனைகளைச்

சந்திக்குமளவுக்கு அங்குள்ள குடியானவர்களின் குணம் அமைந்திருந்தது. பாவமும் துன்மார்க்கமும் மிகுந்திருந்த இடத்தில் தூய்மையும் கறைதிரையுமின்றி வாழ்வதற்கு, அவர் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிருந்தது. இந்த இடத்தை தாமாகவே கிறிஸ்து தெரிந்துகொள்ளவில்லை. அவரது குணம் சோதிக்கப்பட்டு, பற்பல விதங்களில் பரீட்சிக்கப்படும் வண்ணம், அவரது பரமபிதா இந்த இடத்தை அவருக்காகத் தேர்ந்தெடுத்திருந்தார். குழந்தைகளுக்கும், வாலிபருக்கும், பெரியோருக்கும் தம்மை ஒரு பூரண முன்மாதிரியாக்கும்விதத்தில், பூரணமான குணத்தை அவர் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே, கிறிஸ்துவின் ஆரம்பகால வாழ்க்கையானது கடுமையான சோதனைகள், பாடுகள் மற்றும் நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

பிள்ளைகளும், வாலிபர்களும் கிறிஸ்தவ வாழ்வுக்குச் சாதகமற்ற சூழல்களில் அடிக்கடிக் கொண்டுவரப்படுகின்றனர். தடையேதுமில்லாததுபோல் அவர்கள் சோதனைகளுக்கு இணங்கியும் விடுகின்றனர்; தங்கள் சூழ்நிலைகள் அநுகூலமற்றவைகளாயிருந்தன என்பதைப் பாவப் பாதையில் செல்வதற்கான ஒரு நொண்டிச் சாக்காகவும் கூறிக்கொள்கின்றனர். கிறிஸ்து ஒதுங்கியிருக்கவும், கடின உழைப்புமிக்க ஒரு வாழ்க்கையின் மூலமாக, தமது கரங்களைப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டிருப்பதையும் தெரிந்துகொண்டார். சோதனையை அவர் வரவேற்கவில்லை, ஆயினும் சீர்கெடுக்கும் செல்வாக்குடையவர்களின் சமுதாயத்திலிருந்து அவர் விலகியிருந்தார். பிள்ளைகளும், வாலிபர்களும் பயணிக்கும்படி எப்பொழுதும் அழைக்கப்படக்கூடிய, மேடுபள்ளமான பாதையில் தமது கால்களைக் கிறிஸ்து வைத்திருந்தார். பெருஞ்செல்வமும், சோம்பலுமிக்க வாழ்க்கையை அவர் தனக்கென்று வகுத்துக்கொள்ளவில்லை. அவரது பெற்றோர்கள் ஏழைகளாகவும், வாழ்வாதாரத்திற்குத் தங்களது அன்றாட உழைப்பைச் சார்ந்தவர்களாகவும் இருந்தனர்; ஆகையால் கிறிஸ்துவின் வாழ்க்கை வறுமையும், சுயமறுப்பும், வசதி குறைந்த ஒன்றாகவும் இருந்தது. தமது பெற்றோர்களின் ஊக்கந்தளராத உழைப்புமிக்க வாழ்க்கையை அவர் பகிர்ந்துகொண்டார்.

### ஒழுக்கத்தூய்மை—சந்தர்ப்பச் சூழ்நிலைகளைச் சார்ந்ததல்ல

சாதகமற்ற சந்தர்ப்பச் சூழ்நிலைகளின்கீழ் கிறிஸ்தவ குணத்தைப் பூரணப்படுத்துவதற்கு நமது இரட்சகரைப் போன்று ஒருவரும் ஒருபோதும் அழைக்கப்படமாட்டார். சந்தர்ப்பச் சூழலுக்கேற்ப தங்களது பக்திசார்ந்த குணம் இணங்கித்தான் ஆகவேண்டும் என்று கருதும் வாலிபர்களுக்கு,

எந்த ஒரு நன்மையும் வருவது ஆச்சரியமே என் அநேகர் எண்ணிய நாசரேத்தில் கிறிஸ்து முப்பது ஆண்டுகள் வாழ்ந்தார் என்ற உண்மை ஒரு கடிந்துரையாக இருக்கிறது. வாலிபர்களின் சூழல்கள் விரும்பத்தகாததாக, மிகவும் மோசமானதாக இருந்தால், இதையே அநேகர் கிறிஸ்தவ குணத்தைப் பூரணமாக்கிக் கொள்ளாததற்கான ஒரு சாக்குப்போக்காக எடுத்துக்கொள்கின்றனர். கிறிஸ்துவின் பின்னடியார்கள் குற்றமற்ற ஜீவியம் செய்வது இடத்தையும் நல்வாய்ப்பையும் அல்லது செல்வச்செழிப்பையும் சார்ந்திருக்கிறது என்ற கருத்தைக் கிறிஸ்துவின் முன்மாதிரி கடிந்துரைக்கிறது. தேவனுடைய திட்டத்தின்படி கனமான இடத்திற்கோ அல்லது கனவீனமான இடத்திற்கோ அல்லது பதவிக்கோ—எங்கு அழைக்கப்பட்டாலும், அவர்கள் உண்மை அதற்கு இசைந்து கொடுக்கும் என்பதைக் கிறிஸ்து அவர்களுக்குப் போதிக்க விரும்புகிறார்.

ஒழுக்கத்தூய்மையும், மன உரமும், கொள்கை உறுதியும்—பாடு, வறுமை மற்றும் துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு வாழ்வைச் சார்ந்தவைகளல்ல என்பதைக் காட்டுவதற்கு கிறிஸ்துவின் வாழ்வு வடிவமைக்கப்பட்டிருந்தது. திரளான வாலிபர்கள் முணுமுணுத்துக் கொண்டிருக்கிற பாடுகளையும், துன்பங்களையும் கிறிஸ்து முறுமுறுப்பின்றி சகித்தார். இந்த ஒழுக்கப்பயிற்சி வாலிபர்களுக்கு மிகவும் தேவையான அனுபவமாயிருக்கிறது; இதுவே அவர்களது குணங்களுக்கு உறுதியை அளிக்கும்; அவர்களைக் கிறிஸ்துவைப் போலாக்கும்; சோதனையை எதிர்த்து நிற்பதற்கு ஆவியில் பலமுள்ளவர்களாக்கும். அவர்களைத் தவறாக வழிநடத்தி, அவர்களது ஒழுக்க சக்திகளைக் கெடுத்துப்போடுகிறவர்களின் செல்வாக்கிலிருந்து விலக்கிக் கொள்வார்களானால், சாத்தானின் தந்திரங்களால் அவர்கள் மேற்கொள்ளப்படமாட்டார்கள். தேவனிடம் அன்றாடம் ஜெபிப்பதின்மூலமாக, போராட்டத்தையும், வாழ்வின் கண்டிப்பான உண்மைகளைத் தாங்கிக் கொள்வதற்கான ஞானத்தையும், கிருபையையும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டவர்களாக, வெற்றிவாகை சூடுவார்கள். விழித்திருப்பு மற்றும் ஜெபத்தினால் மட்டுமே உள்ளத்தின் உறுதிப்பாட்டையும், அமைதியையும் காத்துக்கொள்ளமுடியும். விடாமுயற்சியின் ஆற்றலுக்குக் கிறிஸ்துவின் வாழ்வு ஒரு உதாரணமாய் இருக்கிறது; நிந்தை, பரியாசம், துன்பம் அல்லது பாடுகளால் பெலவீனப்பட்டுப்போவதற்கு அது அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை.

இவ்விதமாகவே இளைஞர்களிடமும் காணப்படவேண்டும். பாடுகள் அவர்களிடத்தில் பெருகினால், தேவன் அவர்களது விசுவாசத்தைப் பரீட்சித்துப் பார்க்கிறார் என்று அவர்கள் அறிந்து கொள்ளலாம். நம்பிக்கை

யிழந்த நிலைகளின்கீழ், தங்களது குணத்தின் உண்மையை அதே அளவில் காத்துக்கொள்வார்களானால், அவர்களது மனவலிமையும், உறுதிநிலைப்பாடும், தாங்கும் சக்தியும் பெருகும்; அவர்கள் ஆவியில் பெலமுள்ளவர்கள் ஆவார்கள்.—Youth Instructor, March, 1872.

### மானக்கேட்டுக்கு முன்பாக மரணம்

பாவத்தால் ஆத்துமாவைக் கறைபடியச் செய்வதைவிடவும், வறுமை யையும், நிந்தையையும், நண்பர்களிடமிருந்து பிரிவு அல்லது எந்த உபத்திரவத்தையும் தெரிந்துகொள்ளுங்கள். தேவப்பிரமாணத்தை மீறுவதற்குமுன்பாக அல்லது மானக்கேட்டுக்குமுன்பாக மரிப்பது நலம் என்பதே ஒவ்வொரு கிறிஸ்தவனின் பொன்மொழியாக இருக்கவேண்டும்.—Testimonies for the Church, Vol. 5 p. 147.

## 20

# சோதனைக்கு எதிர்ப்புக் காட்டுதல்

திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக இருக்கிறவர்கள் சோதனைக்கு இடங்கொடுக்கமாட்டார்கள். கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்திடப் பிரயாசப்படுகிறவர்களை மேற்கொள்ளும்படி எதிராளியானவன் தன் முழுப்பலத்தோடும் கிரியை செய்துகொண்டிருக்கிறான். அவர்கள் இணங்குவார்கள் என்ற நம்பிக்கையில், சோதனைகளுடன் அவன் அவர்களிடம் வருகிறான். இவ்விதமாக அவர்களை சோர்வுக்குள்ளாக்க அவன் நம்பியிருக்கிறான். ஆனால் யுகங்களின் கன்மலையானவர்மீது தங்களது பாதங்களை உறுதியாகப் பதித்தவர்கள், அவனது சூழ்ச்சிகளுக்கு இணங்கமாட்டார்கள். தேவன் தங்களது பிதாவாகவும், கிறிஸ்து தங்களது சகாயராகவும் இருப்பதை அவர்கள் நினைவுகூர்வார்கள். இரட்சகர் தாமே மேற்கொண்டதுபோல, துன்புற்று, சோதிக்கப்படும் ஒவ்வொரு ஆத்துமாவும் மேற்கொள்ளும்படி பெலனைக் கொண்டுவர அவர் நம் உலகத்திற்கு வந்தார். சோதனையின் வல்லமை எனக்குத் தெரியும்; வழியிலிருக்கும் ஆபத்துக்களும் எனக்குத் தெரியும்; ஆகிலும் சோதனைக்கெதிராகப் போராடிக் கொண்டிருப்போரின் ஒவ்வொரு தேவையின் சமயத்திற்கும் போதுமான பெலன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அறிவேன்.

## தேவையற்ற சோதனைகள் தவிர்க்கப்படல் வேண்டும்

“தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.” நாம் செயல்படுத்த வேண்டிய ஒரு பங்கும் உண்டு. சோதனையின் பாதையில் தேவையற்றவிதத்தில் நம்மை நாமே வைத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்... அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று” தேவன் சொல்லுகிறார். சுகபோகத்துக்காக உலகத்தாருடன் சேர்ந்துகொள்வதால், உலகப் பழக்கங்களுக்கு இணங்குவதால், அவிசுவாசிகளுடன் நமது ஆர்வங்களை இணைத்துக்கொள்வதால், சோதனை மற்றும் பாவத்தின் பாதையில் நமது பாதங்களைப் பதித்துக்கொள்கிறோம், விழாதபடி தேவன் நம்மைக் காக்கும்படி நாம் எதிர்பார்க்கலாமா?

உலகத்தின் கறைப்படுத்தும் செல்வாக்குகளிலிருந்து உங்களை விலக்கிக் காத்துக்கொள்ளுங்கள். எதிரியின் சேனைகள் பலமாய்ச் சூழ்ந்திருக்கிற இடங்களுக்குக் கட்டளையிடப்படாமல் செல்லாதிருங்கள்.

சோதிக்கப்பட்டுத் தடம்புரண்டுவிடக்கூடிய இடத்துக்கு நீங்கள் போகாதிருங்கள். ஆனால், அவிசுவாசிகளுக்கான ஒரு தூது உங்களிடம் இருக்குமானால், சமயத்திற்கேற்ற வார்த்தையை அவர்களிடம் பேசுமளவுக்குத் தேவனிடம் நீங்கள் மிகவும் நெருங்கியிருந்தால், அவர்களுக்கு உதவி யாகவும், தேவனுக்கு மகிமையாகவும் அமையும் வேலையை நீங்கள் செய்யலாம். “நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.”—The Review and Herald, April 14, 1904.

## விருப்பத்துக்கும் மேலான கடமை

சாத்தானுடைய கட்டுப்பாட்டிலிருந்து முறித்துக்கொள்ள வாலிபர்கள் முயற்சிக்கும்போது, அவன் தனது சோதனைகளை இருமடங்காக்குவான். அவர்களது அறியாமையையும், அனுபவமின்மையையும் சாதகமாக்கிக் கொண்டு, சரி மற்றும் தவறு என்பதற்கு இடையிலான வேறுபாட்டைத் தெளிவற்றதாக்க அவன் முயல்கிறான். ஒரு ஒளியின் தூதனைப்போல வேஷம் தரித்துக்கொண்டவனாக, தடைசெய்யப்பட்ட பாதையிலுள்ள

சிற்றின்ப வாக்குறுதிகளால் வசியப்படுத்துகிறான். கடமையைக் காட்டிலும் விருப்பத்தைப் பின்பற்றும் பழக்கத்தை வாலிபர்கள் அமைத்துக் கொள்வார்களானால், சோதனைக்கு எதிர்த்து நிற்பதைக் கடினமானதாக அவர்கள் காண்பார்கள். தடைசெய்யப்பட்டச் சிற்றின்பங்களில் ஒருமுறை ஈடுபடுவதினாலும் ஏற்படும் அபாயத்தை அவர்கள் அறியாதிருக்கிறாக்ள். சாத்தானின் புதுக்கருத்துக்கள் இருதயத்தில் சுணங்கியிருக்கும் ஒழுக்கக் கேட்டின் ஒவ்வொரு அடிப்படைக்கூறையும் சுண்டிவிடும்.—The Signs of the Times, January 19, 1882.

## 21

# பாவத்தின் வஞ்சகத்தன்மை

பாவத்தின் வஞ்சகத்தன்மையை விடவும் மிகவும் கேடானது வேறெதுவு மில்லை. வஞ்சிக்கிற, குருடாக்குகிற, அழிவுக்கு நடத்துகிற இப்பிரபஞ் சத்தின் தேவனாக அது இருக்கிறது. சாத்தான் தனது சோதனைகளின் அணிவரிசையுடன் ஒரே நேரத்தில் நுழைந்துவிடுவதில்லை. இந்தச் சோதனைகளை ஒரு நன்மைபோன்ற தோற்றத்தினால் மூடிமறைக்கிறான். கேளிக்கைகள் மற்றும் மடமையான செயலுடன் சில சிறு முன்னேற்றங்களை அவன் கலந்து வைக்கிறான்; அவைகளில் ஈடுவடுவதால் மாபெரும் நன்மை உண்டாகும் என்று வஞ்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் அதை ஒரு சாக்குப்போக்காக்கிக் கொள்ளுகிறார்கள். இது வஞ்சகத்தின் ஒரு பகுதிமட்டுமே ஆகும். சாத்தானின் நரகத்துக்குரிய சூழ்ச்சிகள் மூடித் திரையிடப்பட்டதாக இருக்கிறது. வசியமாகிவிட்ட ஆத்துமாக்கள் ஒரு அடி எடுத்துவைக்கும்போது, அடுத்ததற்கும் ஆயத்தமாகிவிடுகின்றனர். பாதுகாக்கும் விழிப்புடன் நின்று, தந்திரமுள்ள எதிரியின் முதல் ஊடுருவலுக்கு எதிர்ப்புச் செய்து, இவ்விதமாக அவனது உள்நுழைதல்களுக்குத் தடையுண்டாக்குவதைவிடவும் தங்களது இருதய விருப்பங்களின்படி செய்வதே மிகவும் மகிழ்வளிக்கிறதாக இருக்கிறது.

ஓ! சாத்தான் தனது தூண்டில் இரை தாமதமின்றி பிடிக்கப்படுவதை, தான் ஆயத்தம் பண்ணியிருக்கிற அதே பாதையில் ஆத்துமாக்கள் நடந்து செல்வதைக் காண்பதற்கு எவ்வளவு விழிப்புடனிருக்கிறான்! ஜெபிப்பதையும், பக்திக்குரிய கடமைகளின் வேஷத்தைத் தக்கவைத்துக்கொள்வதையும்

அவர்கள் விட்டுவிடவேண்டுமென்று அவன் விரும்பவில்லை; ஏனெனில் தனது சேவையில் இவ்விதமாக அவன் அவர்களை மிகவும் அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளமுடியும். அவர்களது அனுபவங்கள் மற்றும் வெளிப்படையான அறிவிப்புகளுடன் அவன் தனது தந்திரத்தையும், வஞ்சகமான கண்ணிகளையும் இணைத்துக் கொள்ளுகிறான், இவ்விதமாகத் தனது செயல், நோக்கத்தை ஆச்சரியமான விதத்தில் முன்னேற்றிக்கொள்ளுகிறான்.

## சுய ஆய்வு

தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில், எனது இருதயம் ஆரோக்கியமாயிருக்கிறதா அல்லது அழுகியிருக்கிறதா, கிறிஸ்துவில் புதிதாக்கப்பட்டிருக்கிறேனா? அல்லது வெளிப்புறத்தில் புத்தாடை தரித்து, உள்ளத்தில் மாம்ச சிந்தை கொண்டுள்ளேனா? என்று மிகவும் உன்னிப்பாகப் புலனாய்வும், சுய ஆய்வும் செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. தேவனுடைய நீதிமன்றத்துக்குமுன்பாக உங்களை நிறுத்திக்கொண்டு, நீங்கள் தியாகம் செய்திராத ஏதாவதொரு விக்கிரகம், ஏதாவதொரு அக்கிரமம், ஏதாவதொரு இரகசிய பாவம் இருக்குமானால், அதை தேவனுடைய வெளிச்சத்தில் காணுங்கள். சாத்தானின் தந்திரங்களால் நீங்கள் வஞ்சிக்கப்படாதிருக்கும்படிக்கும், ஒரு கவனமற்ற, அக்கரையற்ற வீண் சிந்தனைக்கு நீங்கள் உங்களை ஒப்புக்கொடுத்து, உங்களது மனச்சாட்சியை அமைதிப்படுத்துவதற்காக ஆன்மீகக் கடமைகளைச் செய்யாதிருக்கும்படிக்கும் ஜெபியுங்கள், ஆம், நீங்கள் முன்னொருபோதும் ஜெபித்திராததுபோல் ஜெபியுங்கள்...

கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் தேவப்பிரியராயிராமல், சுகபோகப் பிரியராய் இருப்பதே கடைசி நாட்களுக்குரிய அடையாளங்களில் ஒன்றாகவும், பாவங்களில் ஒன்றாகவும் இருக்கிறது. உங்கள் சொந்த ஆத்துமாக்களைக்குறித்து உண்மையாய் எண்ணிப்பாருங்கள். கவனமாய் ஆய்ந்துபாருங்கள். ஒரு உண்மையான பரிசோதனைக்குப்பின்னர், பரலோகத்தை நோக்கிப் பார்த்து, “இவ்விதமாக வர்ணிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவனல்ல. நான் சுகபோகப்பிரியனல்ல, தேவப்பிரியனே,” என்று எத்தனைபேர் சொல்லமுடியும். “நான் உலகத்திற்கு மரித்திருக்கிறேன்; நான் இப்பொழுது வாழும் வாழ்வு தேவகுமாரனிலுள்ள விசுவாசத்தினாலேயே. என் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது, என் ஜீவனானவர் தோன்றும்போது, நானும் அவருடன் மகிமையில் தோன்றுவேன்” என்பதை வெகுசிலரே சொல்லமுடியும்.

தேவனுடைய அன்பே! கிருபையே! ஓ விலையேறப்பெற்ற கிருபையே! பசும்பொன்னிலும் மிகவும் விலையேறப்பெற்றதாமே. அனைத்து பிற நியதிகளுக்கும் அப்பால், அது உள்ளத்தை உயர்த்தி மேம்படச் செய்கிறது. இருதயத்தையும் விருப்பங்களையும் பரலோகத்தின்மீது நிலைக்கச் செய்கிறது. நம்மைச் சுற்றிலும் இருப்பவர்கள் உலக மாயையிலும், இன்பத்தேடலிலும், மடமையிலும் ஈடுபட்டிருக்கும் வேளையில், நமது குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து நமது இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்; ஆத்துமா மன்னிப்பு மற்றும் சமாதானத்துக்காகவும், நீதி மற்றும் மெய்யான பரிசுத்தத்துக்காகவும் தேவன் பின்னே தொடர்ந்து செல்கிறது. தேவனோடு உறவாடுதலும், மேலானவைகளைத் தியானித்தலும் கிறிஸ்துவுக்கொப்பாக ஆத்துமாவை மறுரூபமாக்குகிறது.—The Review and Herald, May 11, 1886.

## 22

# ஐயவாதத்துக்கு எதிராக ஓர் எச்சரிக்கை

நமது வாலிபர்களுக்காக நான் மிகவும் வேதனைப்படுகிறேன். நீங்கள் பெற்றிருக்கக்கூடிய அறிவியல் எனும் சிறு அறிவின்மூலமாகச் சாத்தானிடம் சிக்குண்டுவிடாதிருக்கும்படி, அபாயத்தை அறிந்திருக்கிற ஒரு நபராக, நான் உங்களை எச்சரிக்கிறேன். கர்த்தருக்குரிய பயமில்லாமல், அனைத்து அறிவையும் நீங்கள் எளிதாகப் பெற்றுக்கொள்வதைவிடவும், ஒரு தூய்மையான தாழ்மையான இருதயத்தைக் கொண்டிருப்பதே சாலச்சிறந்ததாகும்.

இன்றைய வாலிபர்கள் எங்கு சென்றாலும் ஐயவாதிகளையும், இல்லை வாதிகளையும் சந்திக்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள். தங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்துச் சாந்தத்தோடும் வணக்கத்தோடும், உத்தரவு கொடுக்க திராணியுள்ளவர்களாயிருக்கும்படிக்கு, அவர்கள் தயார் நிலையில் இருப்பது எவ்வளவு அவசியம். தாமஸ் பெய்ன் தனது கல்லறைக்குள் சென்றுவிட்டார், ஆயினும் அவரது கிரியைகள் உலகத்தைச் சபிப்பதற்கு உயிரோடிருக்கின்றன. தேவனுடைய வார்த்தையின் உண்மையைச்

சந்தேகிப்பவர்கள், வாலிபர்கள் மற்றும் அனுபவமற்றவர்களின் இருதயங்களில் விஷம் நிறைந்த சந்தேகக் காற்றை நிரப்புவதற்காக, அவர்களது கரங்களில் இத்தகைய இறைநம்பிக்கையற்ற தயாரிப்புகளை வைப்பார்கள். ஆத்துமாக்களின் அழிவுக்காகச் சாத்தானின் ஆவி தனது சதித்திட்டங்களை நிறைவேற்ற துன்மார்க்கரின்மூலமாகக் கிரியை செய்து வருகிறது.

## ஐயவாதிகளுடன் ஐக்கியம் கொள்வதால் வரும் அபாயம்

காமக்கட்டுப்பாடற்ற ஒரு காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆண்களும், வாலிபர்களும் பாவத்தில் பலங்கொண்டிருக்கிறார்கள். நமது வாலிபர்கள் புனிதமாகக் காக்கப்படாவிட்டால், உறுதியான நியதிகளால் அவர்கள் மூடிமறைக்கப்படாவிட்டால், அவர்களது நண்பர்களையும், மனதிற்குள் செலுத்தும் இலக்கியங்களையும் தெரிந்தெடுப்பதில் மாபெரும் கவனம் காட்டப்படாவிட்டால், சோதோமின் குடிகளின் கேடுபாடான ஒழுக்கப் பண்புகளைப் போன்ற ஒழுக்கப்பண்புகள் கொண்ட ஒரு சமுதாயத்திற்குமுன் அவர்கள் புகலிடமற்றவர்களாய் நிற்பார்கள். உலகத்தோரின் தோற்றம் ஒருவேளை மிகக் கவர்ச்சிகரமாக இருக்கலாம்; ஆனால் அவர்கள் தொடர்ந்து வேதத்துக்கெதிரான புதுக்கருத்துக்களை வீசிக்கொண்டிருப்பார்களானால், அவர்கள் ஆபத்தான நண்பர்கள் ஆவர். உங்களது விசுவாசத்தின் அடிப்படைகளை அரித்து வீழ்த்துவதற்கும், கடமையுணர்ச்சிமிக்க பழைய பாணியிலான, சுவிசேஷ மார்க்கத்தைக் கெடுத்துப்போடுவதற்கும் அவர்கள் எப்பொழுதும் வகைதேடுவார்கள்.

வாலிபர்கள் அடிக்கடி ஐயவாதப் போக்குள்ளவர்களுடன் தொடர்புக்குள் வருகிறார்கள்; தீமையின் பயங்கரமான கிரியை முழுமையாகி, வாலிபர்கள் சீரழிக்கப்படும்வரைக்கும், அவர்களது பெற்றோர்கள் இந்த உண்மையை உணராதிருக்கிறார்கள். இத்தகைய நபர்களின் உண்மையான குணம் அறியாது வஞ்சிக்கப்படாதிருக்கும்படிக்கும், இவ்வகுப்பினருடன் தோழமை ஏற்படுத்தி, அவர்களது சூழ்ச்சியான, வசைச்சொற்களுக்குச் செவிசாய்க்காதிருக்கும்படிக்கும், வாலிபர்கள் ஜாக்கிரதையாய் போதிக்கப்பட வேண்டும். இத்தகைய நபர்களின் அவிசுவாசத்தைக் கண்டுபிடிக்கும்பொழுது, அவர்களுடனுள்ள தொடர்பைத் துண்டித்துக்கொள்வதற்கு, நமது வாலிபப் பிள்ளைகளுக்கு சன்மார்க்கத் துணிவு இல்லாமல்போகுமானால், அவர்கள் கண்ணியில் அகப்படுவார்கள்; தங்களது தோழர்களைப்போலவே, வேதாகமத்தின் விசுவாசத்தையும், மார்க்கத்தையும் அற்பமாக எண்ணவும், பேசிடவும் செய்வார்கள்.

## சுயநம்பிக்கையும் குருட்டுத்தனமும்

வஞ்சிக்கப்பட்ட வாலிபர்களின் கண்கள் திறக்கப்படுமானால், ஆத்துமாக்களை அழிப்பதில் வெற்றிபெற்றுவரும் சாத்தானின் எக்களிக்கும் நயவஞ்சகப் பார்வையை அவர்கள் காண்பார்கள். அவன் தான் சிக்கவைக்க விரும்பும் நபர்களின் பலதரப்பட்ட மனநிலைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ப, தனது சோதனைகளை மாற்றியமைத்துக்கொள்ள மனதில் தோன்றும் எல்லா வழிகளிலும் முயற்சி செய்கிறான். ஒவ்வொரு தந்திரத்தையும் அவன் செய்துபார்ப்பான், இத்தகைய சோதனைகளுக்குக் கீழ்ப்பட்டவர்கள் தேவனைத் தேடாவிடில், அவனது வஞ்சகங்களைக் காணாதபடிக்கு அவர்கள் குருடாக்கப்படுவர். தங்களது நிலைமையையும், அபாயத்தையும் அறியாது சுய நம்பிக்கையும், சுயநிறைவுமுள்ளவர்களாக இருப்பர். பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை விரைவில் அவர்கள் அலட்சியப்படுத்தவும் செய்வர்.

வாலிபர்களின் வழியில் வரப்போகும் ஆபத்துக்களைக்குறித்த முழுக்காட்சியைக் கர்த்தரிடமிருந்து கண்டறிந்த ஒரு நபராக அவர்களிடம் நான் பேசுகிறேன். சுயநம்பிக்கை உங்களை எதிராளியின் கண்ணிக்குள் கொண்டுச்செல்லும். வாலிபர்கள் தேவனுடைய ஆலோசனையைக் கேட்பதுமில்லை; அவரைத் தங்களது அடைக்கலமும் பெலனுமாக ஆக்கிக்கொள்வதுமில்லை. தங்களது பகுத்தாராயும் சக்திகளினால், சத்தியத்தைத் தாங்களாகவே கண்டுபிடித்துவிடக்கூடும் என்றும், தெய்வீக இரகசியங்களைப் புரிந்துகொள்ளவும், சரியானதைத் தேர்ந்தெடுக்கவும் தாங்கள் முற்றிலும் திறமைபடைத்தவர்கள் என்ற நம்பிக்கையுடனும், முழு நிச்சயத்துடனும் அவர்கள் சமுதாயத்தில் நுழைகிறார்கள்.

மற்ற எவரைக் காட்டிலும், சுய நம்பிக்கையுள்ளவர்களுக்காகவே நாங்கள் அதிகம் அஞ்சுகிறோம். ஏனெனில் தேவனுக்கும், மனிதருக்கும் மாபெரும் எதிராளியானவனால் வைக்கப்பட்டிருக்கிற வலையில் அவர்கள் நிச்சயமாகச் சிக்கிக்கொள்வார்கள். சந்தேகம் எனும் சீர்கேட்டினால் கறைப்படுத்தப்பட்டிருக்கிற ஒரு நபர் நன்கறிமுகமான ஒரு நண்பராக ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவர் இவ்வகுப்பாரின் உள்ளங்களில் தனது அவிசுவாசம் எனும் புளித்தமாவைப் புகுத்திவிடுவார். தெவிட்டச்செய்யும் போலிப்புகழ்ச்சி எனும் தங்கள் திறமையினாலும், தங்கள் அறிவார்ந்த உயர்வினாலும், உயர்ந்த பதவிக்கான ஒரு பேராவலை அவர்களில் தூண்டியெழுப்புவதால், அவர்களது கவனம் பெறப்படும்; சன்மார்க்கச் சீரழிவு அவர்களுக்கு நேரிடும். தங்களது சொந்த அபிப்பிராயங்களில் மேலோங்கி

நிற்பவர்கள் பிராயச்சித்த பலியானவரின் இரத்தத்தை அசட்டை செய்து, கிருபையின் ஆவியை நிந்திப்பார்கள்.

மாபெரும் வெளிச்சத்தைப் பெற்றிருந்த, மிகவும் கனிவான அக்கறைக்குப் பாத்திரவான்களாயிருந்த ஓய்வுநாளை ஆசரிக்கும் பெற்றோர்களின் பிள்ளைகள், வெட்கக்கேடான ஒரு மரபுரிமையை விட்டுச் செல்கிறவர்களாகவும், காற்றை விதைத்து சூறைக்காற்றை அறுக்கிறவர்களாகவும் இருப்பார்கள். நியாயத்தீர்ப்பில் மாபெரும் வெளிச்சத்துக்கெதிராக பாவம் செய்தவர்களின் நாமங்கள், கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்தும், அவரது வல்லமையின் மகிமையிலிருந்தும் பிரிக்கப்படுவதற்கு, குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவர்களுடன் எழுதப்படும். அவர்கள் அழிவார்கள், இல்லாமற்போவார்கள், கிறிஸ்துவின் கிருபையை நிந்தித்தவர்களுடன் எண்ணப்படுவார்கள்.

மரணத்துக்குக் கொண்டுசெல்லும் பாதையை எனது பிள்ளைகள் தெரிந்தெடுப்பதைக் காண்பதைக் காட்டிலும், அவர்கள் கல்லறையில் வைக்கப்படுவதைக் காண்பதையே நான் விரும்புகிறேன். பரலோகத்தின் தேவனுக்கெதிராகப் போரிடவும், கடைசிநாட்களில் பின்மாற்றக்காரர்களின் அணிவரிசைகளில் நிலைக்கச் செய்யவும், சாத்தானுடைய கருங்கொடியின்கீழ் போர்நடை புரியவும் பிள்ளைகளை நான் வளர்த்திருக்கிறேனே என்ற பயங்கரமான உண்மை நிச்சயம் எனக்கு ஒரு திகிலூட்டும் எண்ணமாகவே இருக்கும்.

## சன்மார்க்கத் தைரியம் தேவைப்படுகிறது

நமது வாலிபர்கள் ஒவ்வொரு புறத்திலும் சோதனைகளைச் சந்திப்பார்கள். மரிக்குந்தன்மையுள்ள மனிதர்களால் கொடுக்கப்படுவதை விடவும் மேலான உபதேசத்தையும், மேலான வல்லமையையும் சார்ந்துகொள்ளும்படி அவர்கள் கற்பிக்கப்படவேண்டும். கிறிஸ்தவத்தின்மீது அவகீர்த்தியை உண்டுபண்ணுவதை வழக்கமாகக் கொண்டிருந்து, நமது கர்த்தரை இகழக்கூடியவர்கள் எவ்விடங்களிலும் இருக்கிறார்கள். அறியாமையுள்ளவர்களின் ஏமாளித்தனத்தின்மீது சுமத்துவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட, பிள்ளைகளின் விளையாட்டுப்பொருள் என்று அவர்கள் அதை (கிறிஸ்தவத்தை) அழைக்கின்றனர்.

சன்மார்க்க வல்லமையற்றவர்கள் சத்தியத்திற்குப் பாதுகாவலாக நிற்கமுடியாது; "அவ்விதமான உரையாடல் நிறுத்தப்படாவிட்டால் உங்களது பிரசன்னத்தில் என்னால் இருக்க இயலாது. உலகமீட்பரான இயேசு என்

இரட்சகராக இருக்கிறார்; நித்திய வாழ்வுக்கான எனது நம்பிக்கை அவரில் மையங்கொண்டிருக்கிறது" என்று கூறுவதற்கு அவர்களுக்குத் தைரியம் இல்லை. ஆனால் அவர்களை அமைதிப்படுத்துவதற்கான ஒரே வழி இதுவே. நீங்கள் அவர்களுடன் வாதாடினால், உங்களுக்கான எதிர் வாதங்களை அவர்கள் வைத்திருப்பார்கள், நீங்கள் சொல்வது எதுவும் அவர்களைத் தொடாது; ஆகிலும் நீங்கள் கிறிஸ்துவுக்காக வாழ்வீர் களானால், பரலோகத்தின் தேவனுக்குரிய உங்களது விசுவாசத்தில் உறுதியா யிருப்பீர்களானால், வாதம் சாதிக்கத் தவறுவதை நீங்கள் அவர்களுக்காகச் செய்யலாம்; தேவபக்தியின் வல்லமையினால் அவர்களது உபதேசங்களின் போலித்தன்மையை அவர்களுக்கு மெய்ப்பித்துக் காட்டலாம்.

கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்டவர்கள், தேவனை மகிமைப்படுத்தும்படி தாலந்துகளை ஒப்படைக்கப்பெற்றவர்கள், அவர்களிடம் கிருபையாக அனுப்பப்பட்ட சுவிசேஷத்தின் செய்திகளை எள்ளி நகையாடத் திரும்புவதையும், கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிப்பதையும், தங்களது எல்லைக்குட்பட்ட பகுத்தறிவு மற்றும் ஆதாரமற்ற வாதங்களை நம்புவதையும் காண்பதைவிட படுமோசமான காட்சியாக வேறெதுவும் இருக்கமுடியாது. உபத்திரவத்தினால் சோதிக்கப்படும்போதும், மரணத்தின்முன் நேருக்கு நேராகக் கொண்டுவரப்படும்போதும், அவர்கள் பேணிக்காத்திருந்த இத்தகைய எல்லாப் போலிவாதங்களும் சூரியனுக்குமுன்னிருக்கும் உறைபனியைப்போல் உருகி ஒன்றுமில்லாமல் போய்விடும்.

தெய்வீக இரக்கத்தின் வேண்டுகோள்களை அசட்டைசெய்துவிட்ட ஒருவரது சவப்பெட்டியின் பக்கம் நிற்பது எத்தனை பயங்கரமானது! இதோ இழந்துபோன ஒரு வாழ்க்கை! மேன்மையான நிலைப்பாட்டினை எட்டிப்பிடித்து, அழியா வாழ்வைப் பெற்றிருந்திருக்கவேண்டிய நபர் இதோ; இவர் சாத்தானுக்குத் தனது வாழ்வை ஒப்படைத்தார், மனிதர்களின் வீணான தத்துவங்களினால் பிடிக்கப்பட்டார், பொல்லாங்கனின் விளையாட்டுப் பொருளாகவும் அவர் இருந்தார்! கிறிஸ்தவனின் நம்பிக்கை நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது; நமக்கு முன்னோடினவராகிய கிறிஸ்து நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார். நமக்கு முன்பாக இருக்கிற மாபெரும் சம்பவங்களுக்காக ஆயத்தம்செய்கிற ஒரு தனிப்பட்ட வேலை நமக்கு இருக்கிறது.

### புயல் வருகிறது

வாலிபர்கள் மிகவும் தீவிரமாகத் தேவனைத் தேடவேண்டும். புயல் வருகிறது, தேவனண்டை மனந்திரும்புவதாலும், நமது கர்த்தராகிய

இயேசு கிறிஸ்துவண்டை விசுவாசம் கொள்ளுவதாலும் அதன் சீற்றத்திற்கு நாம் தயாராகவேண்டும். பூமியைப் பயங்கரமாக அசைக்கும்படி அவர் எழுந்தருள்வார். எப்பக்கங்களிலும் நாம் துன்பங்களைக் காண்போம். ஆயிரக்கணக்கான கப்பல்கள் கடலின் ஆழங்களுக்குள் சுழற்றி வீசப்படும். கப்பற்படைகள் அடி ஆழங்களுக்குள் செல்லும், இலட்சக்கணக்கான மனித உயிர்கள் பலியாகும். எதிர்பாராதவிதமாக அக்கினிப்பிழம்புகள் உண்டாகும்; அவற்றை அணைக்க மனித முயற்சியால் கூடாமற்போகும். நெருப்பின் சீற்றத்தில் பூமியின் அரண்மனைகள் வாரிக்கொள்ளப்படும். இருப்புப்பாதை விபத்துக்கள் அடிக்கடி நிகழும்; பிரயாண நெடுஞ்சாலைகளில் குழப்பமும், மோதலும், ஒரு கணப்பொழுது எச்சரிப்பின்றி மரணமும் ஏற்படும். முடிவு சமீபித்து வருகிறது, கிருபையின் காலம் முடிந்து கொண்டிருக்கிறது. ஓ, தேவனைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடி, அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுவோமாக! “தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்” என்று தீர்க்கதரிசி கூறுகிறார். —The Signs of the Times, April 21, 1890.

## தேவனை தினம் சார்ந்திருத்தல்

காலையில் நீங்கள் எழுந்திருக்கும்பொழுது, உங்களது உதவியற்ற நிலைமையையும் தேவனிடமிருந்து வரும் பெலத்தின் அவசியத்தையும் உணருகிறீர்களா? தாழ்மையாகவும், மனப்பூர்வமாகவும் உங்கள் குறைகளை உங்கள் பரமபிதாவுக்குத் தெரியப்படுத்துகிறீர்களா? அப்படியானால், தூதர்கள் உங்களது ஜெபங்களைக் குறித்துவைக்கிறார்கள். அறியாமலேயே தவறுசெய்யும் அபாயத்திலும், பிறரைத் தவறுசெய்ய வழிநடத்துவதற்கு ஒரு தூண்டுதலாகவும் நீங்கள் இருக்கும்பொழுது, இத்தகைய ஜெபங்கள் பாசாங்கு செய்யும் உதடுகளிலிருந்து செல்லாமல் இருந்தால், ஒரு சிறந்த பாதையை உங்களுக்குக் குறிப்புணர்த்துவதற்கும், உங்கள் வார்த்தைகளை உங்களுக்காகத் தெரிந்தெடுப்பதற்கும், உங்கள் செயல்களை இயக்கி நடத்துவதற்கும் உங்கள் காவல்தூதன் உங்கள் பக்கம் நிற்பான்.

அபாத்தைக்குறித்த உணர்வற்றிருந்து, சோதனைகளுக்கு எதிர்த்து நிற்பதற்கு உதவி மற்றும் பெலன் வேண்டி நீ ஜெபிக்கவில்லையானால், நீங்கள் நிச்சயமாக வழிதவறிப் போவீர்கள்; உங்களது கடமைப் புறக்கணிப்பு பரலோகத்தில் தேவனுடைய புஸ்தகத்தில் பதிவுசெய்யப்படும்; சோதனையின்

நாளில் நீங்கள் குறையக் காணப்படுவீர்கள்.—Testimonies for the Church, Vol. 3, p. 363, 364.

## 23

# ஒரு பெலவீனமான கூறு

பிறர் குற்றணர்வுடன் இருக்கிற அநேகக் காரியங்களிலிருந்து நாம் விடுபட்டிருக்கிறோம் என்று நம்மை நாமே பெருமைப்படுத்திப் பேசிக் கொள்ளலாம்; ஆனால் நம்மிடம் பெலமான குணக்கூறுகள் சில இருந்தும், ஒரே ஒரு பெலவீனமான கூறு இருந்தால், பாவத்திற்கும் ஆத்துமாவிற்கும் இடையே உறவு இன்னும் இருக்கிறது. இருதயம் அதன் சேவையில் பிரிந்து கிடக்கிறது, "கொஞ்சம் சுயத்துக்கு, கொஞ்சம் உமக்கு" என்று கூறுகிறது. தேவனுடைய பிள்ளை தான் சீராட்டி வளர்த்த, மூழ்கித் திளைத்த பாவத்தைக் கண்டுபிடித்து, அதைத் தன் இருதயத்திலிருந்து வெட்டியெறிவதற்கு தேவனை அனுமதிக்கவேண்டும். அந்த ஒரு பாவத்தை அவர் மேற்கொள்ளவேண்டும்; தேவனுடைய பார்வையில் அது ஒரு அற்பமான காரியமல்ல.

"நான் கொஞ்சமும் எரிச்சலடைவதில்லை, இருப்பினும் கோப மடைந்து, கீழ்த்தரமான காரியங்களைச் சொல்லுகிறேன், சிடுசிடுப் பிற்கு வழிதிறந்துகொடுத்தாலும் பின்னர் எப்பொழுதுமே நான் மனஸ்தாபப் படுகிறேன்" என்று ஒருவர் கூறுகிறார். "எனக்கு இந்தக் குறை இருக்கிறது, அந்தக் குறை இருக்கிறது, ஆனாலும் என்னுடன் பழகும் ஒரு குறிப்பிட்ட நபரிடம் வெளிப்படுவதுபோன்ற அற்பத்தன்மையை நான் அலட்சியப்படுத்தி விடுகிறேன்" என்று மற்றொருவர் கூறுகிறார். சில பாவங்கள் சிறிய அளவி லானவை, அவை சிறிய தீங்கையே உண்டாக்கும், மற்றவையோ பெரிய அளவிலானவை, அவை அதிகத் தீங்கை உண்டாக்கும் என்று நாம் கணக்கிடுவதற்கேதுவாக, வகைப்படுத்தப்பட்ட பாவங்களின் பட்டியலைக் கர்த்தர் நம்மிடம் கொடுக்கவில்லை.

சங்கிலியில் ஒரு தனிவளையம் பெலவீனமாக இருந்தாலும், அச்சங்கிலி வலிமையானது அல்ல. வெளித்தோற்றத்தின்படி அது ஒரு நல்ல சங்கிலி என்று நாம் கூறலாம், ஆனால் அதில் ஒரு தனிவளையம் பெலவீனமாக இருந்தாலுங்கூட, அச்சங்கிலியை நாம் சார்ந்திருக்க முடியாது. ஜெயங்கொள்ளும் பணியே தேவனுடைய ராஜ்யத்துக்குள்

நுழையும் ஒவ்வொரு ஆத்துமாவின் ஆராய்ச்சியாக இருக்கவேண்டும். உங்கள் உதடுகளில் துடித்துக்கொண்டிருக்கும் அந்தப் பொறுமையற்ற வார்த்தைப் பேசப்படாமல் விடப்படவேண்டும். உங்கள் குணத்தைச் சரியாக மதிப்பிடாத அந்தச் சிந்தனை உங்களிடமிருந்து அகற்றப்பட வேண்டும்; ஏனெனில் அது உங்களது செல்வாக்கைப் பெலவீனப்படுத்தி, பிறரது உள்ளங்களில் உங்களைக் குறைத்து மதிப்பிடச் செய்து, நிச்சயமான விளைவை உண்டுபண்ணுகிறது. புகழுக்காகத் தனிவிருப்பங்களைத் துறப்பதாக நடிக்கிறவர் என்ற அபிப்பிராயத்தை நீங்கள் மேற்கொண்டு, "என் கிருபை உனக்குப்போதும்," என்று கூறும் கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தை உரிமைபாராட்டுங்கள்.—The Review and Herald, August 1, 1893.

## சிந்தனைக் கட்டுப்பாடு

சாத்தானின் வசீகரிக்கும் களத்திலிருந்து நீங்கள் தள்ளியிருந்து, தேவனுக்கு உண்மையாயிருப்பதிலிருந்து அசைவுற உங்கள் மனங்களை அனுமதியாதிருக்க வேண்டும். கிறிஸ்துவின்மூலமாக நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம், இருக்கவேண்டும்; இச்சையடக்கப் பழக்கவழக்கங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பகுத்தறிவு மற்றும் பக்திவாழ்வின் கட்டுப்பாட்டின்கீழ் உங்களது உணர்ச்சிகளும், தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கும்படி உங்களது சிந்தனைகளும்கூடக் கொண்டுவரப்படவேண்டும். நெறிதவறி அலைய விடுவதற்கும், தடைப்படுத்தும் அல்லது ஒழுங்குபடுத்தும் முயற்சி எதுவுமின்றித் தன்போக்கில் விடப்படுவதற்கும் உங்களது கற்பனாசக்தி உங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. எண்ணங்கள் தவறானால், உணர்ச்சிகளும் தவறாயிருக்கும்; எண்ணங்களும் உணர்ச்சிகளும் இணைந்தே ஒழுக்கக் குணம் உருவாகிறது. கிறிஸ்தவர்களாகிய உங்களது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்துவதற்கு உங்களிடம் கோரப்படவில்லையென்று நீங்கள் தீர்மானிக்கும்போது, தீயதூதர்களின் செல்வாக்கின்கீழ் நீங்கள் கொண்டுவரப்படுகிறீர்கள்; அவர்களது பிரசன்னத்தையும், அவர்களது கட்டுப்பாட்டையும் வரவேற்றுக் கொள்ளுகிறீர்கள். உங்களது எண்ணப்பதிவுகளுக்கு நீங்கள் இணங்கி, அறைகுறை நம்பிக்கை, சந்தேகம் மற்றும் அதிருப்தியின் பாதையில் ஓடுவதற்கு உங்கள் சிந்தனைகளை அனுமதிப்பீர்களானால், மரிக்குந் தன்மையுள்ள மனிதர்களிலேயே மிகவும் வருந்தக்கூடியவர்கள் மத்தியில் நீங்கள் இருப்பீர்கள், உங்களது ஜீவியமும் தோல்வியுள்ள ஒன்றாக நிருபணமாகும்.—Testimonies for the Church, Vol. 5, p. 310.

# பகுதி 3

# வெற்றிகளை ஈட்டுதல்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 24 | முன்னோக்கி, மேல்நோக்கி | 75 |
| 25 | குணத்தைப் பூரணமாக்குதல் | 79 |
| 26 | விசுவாசப் பாராட்டம் | 82 |
| 27 | ஜெயம் பெறுதல் | 84 |
| 28 | பெலமுள்ளவர்களாக இருப்பது எப்படி? | 86 |
| 29 | ஜெயமுள்ள ஜீவயம் | 88 |
| 30 | உயிருள்ள விசுவாசம் | 90 |
| 31 | கிறிஸ்துவுடன் ஐக்கியம் | 97 |

## பகுதி 3

# வெற்றிகளை ஈட்டுதல்

தனது ஒன்றுமின்மையை உணர்ந்து, இரட்சகரின் புண்ணியங்களின்மீது முற்றிலுமாய்ச் சார்ந்துகொள்ளுகிற ஆத்துமாவைவிட, வெளிப்படையாக உதவியற்ற நிலையிலும், ஆனாலும் உண்மையிலேயே வெல்லப்பட முடியாததாகவும் இருப்பது வேறெதுவுமில்லை. அப்படிப்பட்ட ஒரு நபர் மேற்கொள்ளப்படுவதற்கு விட்டுவிடப்படுவதைக் காட்டிலும், அவருக்கு உதவி செய்ய பரலோகத்திலுள்ள ஒவ்வொரு தூதனையும் தேவன் எழுப்புவார்.—Testimonies for the Church, Vol. 7, p. 17

## 24

# முன்னோக்கி, மேல்நோக்கி

கிறிஸ்தவ வாழ்வின் வனப்பை வர்ணிக்கும் வாஞ்சை எனக்கு உண்டு. வாழ்வின் காலைநேரத் தொடக்கத்தில், இயற்கை மற்றும் இறைவனின் பிரமாணங்களால் கட்டுப்படுத்தப்பட்ட கிறிஸ்தவன் தளராமல் முன்னோக்கியும், மேல்நோக்கியும் செல்கிறான்; “பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய” ஒரு புதிய நாமமும், ஜீவ கிரீடமும் தனக்கெனக் காத்திருக்கிற தனது பரலோக வீட்டின் சமீபமாக அனுதினமும் அவன் கிட்டிச்சேருகிறான். மகிழ்ச்சியிலும், பரிசுத்தத்திலும், பயன்பாட்டிலும் அவன் தொடர்ந்து வளருகிறான். கடந்துசெல்லும் ஆண்டை விடவும் ஒவ்வொரு ஆண்டின் வளர்ச்சியும் அதிகப்படியாகிறது.

பூமியிலிருந்து பரலோகம் வரை எட்டக்கூடிய ஒரு ஏணியை—வாலிபர்கள் ஏறுவதற்கான ஒரு ஏணியை தேவன் கொடுத்திருக்கிறார். இவ்வேணியின்மேல் தேவன் இருக்கிறார்; எப்பக்கமும் பிரகாசமான அவரது மகிமையின் ஒளிக்கதிர்கள் வீசுகின்றன. ஏறிக்கொண்டிருப்போரை அவர் கண்காணிக்கிறார்; பிடி தளறி, படி தவறிடும் வேளையில் உதவி அனுப்புவதற்கு ஆயத்தமாக இருக்கிறார். ஆம், விடாமுயற்சியுடன் ஏணியில் ஏறும் எவரும் பரலோக நகருக்குள் பிரவேசிக்கத் தவறுவதில்லை என்பதை நிறைவான மகிழ்வூட்டும் வார்த்தைகளில் அறிவியுங்கள்.

அநேக சோதனைகளைச் சாத்தான் வாலிபர்களுக்குமுன் வைக்கிறான். அவர்களது ஆத்துமாக்களுக்கான உயிர்விளையாட்டை அவன் விளையாடிக்கொண்டிருக்கிறான்; அவர்களைக் கவர்ந்திழுக்கவும், அழிக்கவும் எந்த வழிகளையும் முயற்சிக்காமல் அவன் விடுகிறதில்லை. ஆகிலும் சோதனைக்காரனுக்கு எதிராக உதவியற்ற நிலையில் போராடுவதற்குத் தேவன் அவர்களைவிட்டு விடுவதில்லை. சர்வவல்லமையுள்ள சகாயர் அவர்களுக்கு உண்டு.

வாலிபர்களுக்கு இன்றைக்கு வரக்கூடிய ஒவ்வொரு சோதனையையும் எதிர்த்து நின்று, இவ்வுலகில் சாத்தானைத் தமது மனித சாயலில் சந்தித்து வெற்றிகண்டவரே அவர்களது எதிரியைக் காட்டிலும் மிகவும் பெலமுள்ளவராய் இருக்கிறார். அவரே அவர்களது மூத்த சகோதரர். அவர் அவர்களுக்காக ஆழ்ந்த, மென்மையான அனுதாபங்கொள்கிறார். இடைவிடாமல் அவர்களைக் கண்காணிக்கிறார்; அவரைப் பிரியப்படுத்த அவர்கள் முயற்சிக்கும்போது அவர் களிகூருகிறார். அவர்கள் ஜெபிக்கையில், அவர்களது ஜெபங்களுடன் தமது நீதி எனும் தூபத்தை அவர் கலந்து, ஒரு நறுமண பலியாக அவற்றைத் தேவனிடம் படைக்கிறார். அவருடைய பெலத்தினால் வாலிபர்கள் சிலுவையின் நல்ல போர்வீரர்களாகக் கடினநிலையைச் சகிக்கலாம். அவரது சத்துவத்தினால் பெலப்படுத்தப் பட்டு, தங்களுக்கு முன்னிருக்கும் உயர்ந்த இலட்சியங்களை அடைவதற்கு அவர்கள் அதிகாரம் பெறுகிறார்கள். கல்வாரியில் செய்யப்பட்ட தியாகம் அவர்களது வெற்றிக்கான வாக்குறுதியாக இருக்கிறது.

## தேவன் அநியாயமானவர் அல்ல

பெரிதும் சிறிதுமான பாத்திரங்களால் தேவனுடைய திருச்சபை ஆக்கப்பட்டிருக்கிறது. அநியாயமான எதையும் கர்த்தர் கேட்கிறதில்லை. பெரிய பாத்திரங்களின் கொள்ளும் அளவுக்கேற்ப சிறிய பாத்திரங்களும் தேக்கிவைக்கவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறதில்லை. ஒரு மனிதனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே பலாபலன்களை அவர் எதிர்பார்க்கிறார். சிறப்பானதை நீங்கள் செய்யுங்கள், உங்களது முயற்சிகளை தேவன் ஏற்றுக்கொள்வார். உங்களுக்கு அருகிலிருக்கும் அலுவலை எடுத்துக்கொள்ளுங்கள், உண்மையாய் அதைச் செய்து முடியுங்கள், உங்கள் பணி எஜமானனுக்கு முழுவதும் ஏற்புடையதாயிருக்கும். ஏதோ பெரியதைச் சாதித்துவிடவேண்டும் என்ற உங்கள் விருப்பத்தில், உங்களுக்காகக் காத்திருக்கும் மிகச்சிறிய வேலைகளைக் கண்சாடையாய் விட்டுவிடாதிருங்கள்.

அந்தரங்க ஜெபத்தையும், தேவவார்த்தையின் ஆராய்ச்சியையும் நீங்கள் எவ்விதமாக அலட்சியப்படுத்துகிறீர்கள் என்பதைக்குறித்து எச்சரிக் கையாயிருங்கள். பரலோகத்தை நோக்கிய உங்களது முன்னேற்றத்தைத் தடைசெய்யப் போராடிக்கொண்டிருக்கிறவனுக்கு எதிரான உங்களுடைய ஆயுதங்கள் இவைகளே. ஜெபம் மற்றும் வேத ஆராய்ச்சியின் முதல் புறக்கணிப்பு இரண்டாம் புறக்கணிப்புக்குப் பாதையை எளிதாக்கிவிடுகிறது. ஆவியானவரின் கெஞ்சுதலுக்கெதிரான முதல் எதிர்ப்பு இரண்டாம் எதிர்ப்புக் கான வழியை ஆயத்தம்பண்ணுகிறது. இவ்விதமாக இருதயம் கடினப் படுகிறது; மனச்சாட்சி மரத்துப்போகிறது.

மறுபக்கத்தில், சோதனைக்கெதிரான ஒவ்வொரு எதிர்ப்பும் எதிர்த்து நிற்றலை மிகவும் எளிதாக்கிவிடுகிறது. சுயத்துக்கெதிரான ஒவ்வொரு மறுப்பும் சுயமறுப்பை மிகவும் இலகுவாக்கி விடுகிறது. பெறப்பட்ட ஒவ்வொரு வெற்றியும் புதியதொரு வெற்றிக்கான பாதையை ஆயத்தப்படுத்துகிறது. சோதனைக்கெதிரான ஒவ்வொரு எதிர்ப்பும், ஒவ்வொரு சுய மறுப்பும், பாவத்தின்மீதான ஒவ்வொரு வெற்றியும் நித்திய வாழ்வுக்கென விதைக்கப் படும் விதையாகும். ஒவ்வொரு சுயநலமற்ற செயலும் ஆவிக்குரிய தன்மைக்கான புதுபெலனைக் கொடுக்கிறது. அதிக உயர்குணத்திலும், அதிக உண்மையிலும் வளராமல், ஒருவரும் கிறிஸ்துவைப் போலிருக்க முயற்சிக்கக்கூடாது.

## நம்பிக்கையை வளர்த்திடுங்கள்

உங்களுக்கான அவருடைய இலட்சியத்தை அடைவதற்கு நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் கர்த்தர் அங்கீகரிப்பார். தோல்வியுறும் போதும் பாவத்தினால் வஞ்சிக்கப்படும்போதும், ஜெபிக்கமுடியாது என்றும், கர்த்தருக்கு முன்பாக வருவதற்கு உங்களுக்குத் தகுதியில்லை என்றும் நினைக்காதிருங்கள். “என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசு கிறவராயிருக்கிறார்.” கெட்டழிந்தவனை வரவேற்பதற்கு விரித்த கரங்களுடன் அவர் காத்திருக்கிறார். அவரிடம்போய், உங்களது தவறுகளையும், தோல்விகளையும் சொல்லுங்கள். புத்தம்புது முயற்சிக்காக உங்களைப் பெலப்படுத்தும்படி அவரிடம் கேளுங்கள். அவர் உங்களை ஒருபோதும் ஏமாற்றமாட்டார்; உங்களது நம்பிக்கையை ஒருபோதும் பழித்துக்கூறமாட்டார்.

உங்களுக்குத் துன்பம் வரும். இவ்விதமாகக் கர்த்தர் உங்கள் குணத்திலிருக்கும் மென்மையற்ற தன்மையை பண்படுத்துகிறார். முறுமுறுக்

காதிருங்கள். மன உளைச்சலினால் உங்கள் துன்பத்தை மிகுதியாக்கிக் கொள்ளாதீர்கள். மகிழ்ச்சியான கீழ்ப்படிதலினால் தேவனைக் கனம் பண்ணுங்கள். துன்பத்தைப் பொறுமையாகச் சகித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கெதிராகத் தவறு இழைக்கப்பட்டிருந்தாலும்கூட, இருதயத்தில் தேவனுடைய அன்பைத் தக்கவைத்துக் கொள்ளுங்கள். “உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள். தீமையை விட்டுவிலகி, நன்மை செய்; சமாதானத்தைத் தேடி அதைத் தொடர்ந்துகொள். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.”

“துணிகரமான அடிகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; நாளைவரைக் காத்திருங்கள், கருமையான நாள் கடந்துபோய்விடும்.” “அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்.” சோதனைகளின் பலத்தையும், எதிர்த்து நிற்பதற்கான உங்களது ஆற்றலின் பலத்தையும் கிறிஸ்து அறிந்திருக்கிறார். பாடுபடும் ஒவ்வொரு பிள்ளைக்கும் நேராக, இரக்கம் கலந்த மென்மையுடன் அவரது கரம் எப்பொழுதும் நீட்டப்பட்டே இருக்கிறது. பிள்ளையே உனக்காகப் பாடுபட்டு மரித்தேனே, என்னை நீ நம்பமாட்டாயா? “உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும்” என்று சோதிக்கப்பட்டு, சோர்ந்துபோன நபரிடம் அவர் கூறுகிறார்.

“உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்”... அவர் உங்களுக்கு விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலைப்போல் இருப்பார். “என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல்”— உலகம் கொடுக்கவும் எடுக்கவும் முடியாத இளைப்பாறுதலைத் தருவேன்... என்று அவர் கூறுகிறார்.

தேவனுடைய வார்த்தையிலுள்ளபடியே அவரை நம்புகிறவன் அடைகிற சமாதானத்தையும், சந்தோஷத்தையும் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. துன்பங்கள் அவனைத் தொந்தரவு செய்யாது; அவமதிப்புகள் அவனை அலைக்கழிக்காது. சுயம் சிலுவையிலறையப்பட்டுவிட்டது. நாளுக்கு நாள் அவனது கடமைகள் அதிகக் களைப்பூட்டுகிறதாகவும், அவனது சோதனைகள் வலிமையுடையதாகவும், அவனது துன்பங்கள் மிகக் கடுமையானதாகவும் மாறலாம்; ஆனாலும் அவன் தள்ளாடுகிறதில்லை; ஏனெனில் அவன் தனது தேவைக்குச் சமமான பெலனைப் பெற்றுக்கொள்ளுகிறான்.—The Youth's Instructor, June 26, 1902.

### வெற்றியின் விலை

மனிதன் பரலோகத்தைப் பெறுவதைச் சாத்தியமாக்கும்படிக் கிறிஸ்து அவனுக்காக அனைத்தையும் தியாகம் செய்தார். அழிவில்லா மகிமையை அடைந்துகொள்வதற்காக. கிறிஸ்துவின்பொருட்டு, தன் பங்கில் என்னத்தைத் தியாகம் செய்வான் என்பதை விழுந்துபோன மனிதன் இப்பொழுது காட்ட வேண்டியிருக்கிறது. இரட்சிப்பின் மேன்மையையும், அதன் விலையையும் குறித்த சரியான உணர்வுடையவர்கள், தங்களது விதைப்பு கண்ணீரோடு செய்யப்படவேண்டும் என்பதையும், போராட்டமும், சுயமறுப்பும் இவ்வாழ்வில் கிறிஸ்தவனின் பங்காக இருக்கிறது என்பதையுங்குறித்து ஒருபோதும் முறுமுறுக்கமாட்டார்கள்.—The Signs of the Times, March 4, 1880.

## 25

# குணத்தைப் பூரணமாக்குதல்

குணத்தில் பூரணமடைவது ஒரு எளிதான காரியம் என்று கிறிஸ்துவானவர் நிச்சயத்தை நமக்குக் கொடுத்திருக்கவில்லை. ஒரு உயர்ந்த முழுநிறைவான குணம் மரபுரிமையாகப் பெறப்படுவதல்ல. எதிர்பாராதவிதமாக அது நம்மிடம் வந்துவிடுவதுமில்லை. ஒரு உயர்ந்த குணம் கிறிஸ்துவின் கிருபை மற்றும் புண்ணியங்களின்மூலமாகத் தனிப்பட்ட முயற்சியினால் சம்பாதிக்கப்படுகிறது. மனதின் சக்திகளை, தாலந்துகளைத் தேவன் தருகிறார்; குணத்தை நாம் அமைத்துக் கொள்கிறோம். சுயத்துடனான கடினமான, கண்டிப்பான போராட்டங்களினால் அது அமையப்பெறுகிறது. வழிவழியாய்ப் பெற்ற இயல்புகளுக்கெதிராக அடுத்தடுத்துப் போராட்டம் செய்யப்பட்டாக வேண்டும். நம்மை நாமே கூர்ந்து ஆராய்ந்திடல் வேண்டும்; உகந்ததல்லாத ஒரு குணம்கூடத் திருத்தப்படாமல் இருப்பதற்கு அனுமதிக்கக்கூடாது.

எனது குணத்தின் குறைபாடுகளைச் சீர்செய்ய முடியாது என ஒருவரும் சொல்லாதிருப்போமாக. இத்தீர்மானத்திற்கு வருவீர்களானால், நித்திய வாழ்வைப் பெற நீங்கள் நிச்சயமாக தவறிவிடுவீர்கள். இயலாமை என்பது உங்களது சுய சித்தத்திலேயே அடங்கியிருக்கிறது. நீங்கள் சித்தங் கொள்ளவில்லையானால், உங்களால் மேற்கொள்ள இயலாது. தேவனுடைய கட்டுப்பாட்டுக்கு இணங்க விருப்பமின்மை மற்றும் பரிசுத்தமாக்கப்படாத இருதயத்தின் இழிந்தநிலையிலிருந்து உண்மையான சிக்கல் எழும்புகிறது.

## உயர்வான குறிக்கோளைக் கொண்டிருங்கள்

நேர்த்தியான பணி செய்வதற்கு தேவன் தகுதிப்படுத்தியிருக்கிற அநேகர் மிகக் கொஞ்சமாகவே சாதிக்கின்றனர்; ஏனெனில் அவர்கள் கொஞ்சமாகவே முயற்சிக்கின்றனர். வாழ்வதற்கான நிச்சயமான குறிக்கோள் ஒன்றுமில்லை, அடைவதற்கான தராதரம் ஏதுமில்லை என்பதுபோல் ஆயிரக்கணக்கானோர் வாழ்வின் வழியாய்க் கடந்து செல்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் தங்களது கிரியைகளுக்குத்தக்கதான பலனை அடைவார்கள்.

நீங்கள் உங்களுக்கென அமைத்துக்கொள்வதைக் காட்டிலும் ஒரு உன்னதமான தரத்தை உங்களால் ஒருபோதும் அடையக்கூடாதென்பதை நினைவிற்கொள்ளுங்கள். எனவே உயர்வான குறிக்கோளைக்கொண்டிருங் கள்; வேதனைமிகுந்த முயற்சியாக இருப்பினும், சுயமறுப்பினாலும் தியாகத்தினாலும், படிப்படியாக முன்னேற்ற ஏணியின் முழு நீளத்தையும் ஏறிக் கடந்திடுங்கள். உங்களை எதுவும் தடைசெய்ய விடாதிருங்கள். உதவியற்ற நிச்சயமற்ற நிலையில் தரித்திருக்கும்படி, தலைவிதி தனது வலைப்பின்னல்களை எவரையும் சுற்றி மிக உறுதியாக நெய்திருக்கவில்லை. எதிர்ச்சூழ்நிலைகள் அவற்றை மேற்கொள்வதற்கான ஓர் உறுதியான தீர்மானத்தை உருவாக்க வேண்டும். ஒரு தடையை உடைப்பது முன்னேறிச் செல்வதற்கான அதிக ஆற்றலையும், தைரியத்தையும் கொடுக்கும். தீர்மானத் துடன் சரியான திசையில் முன்னேறுங்கள்; சூழ்நிலைகள் உங்களுக்குத் தடங்கல்களாக அல்ல, உதவியாளர்களாக விளங்கும்.

## குணத்தின் ஒவ்வொரு இனிமைப்பண்பையும் பேணி வளர்த்திடுங்கள்

எஜமானனின் மகிமைக்காகக் குணத்தின் ஒவ்வொரு இனிமைப் பண்பையும் வளர்த்திட பேராவலுள்ளவர்களாய் இருங்கள். உங்கள்குணக்கட்டு மானத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தேவனைப் பிரியப்படுத்தவேண்டும். இதை நீங்கள் செய்யக்கூடும்; சீர்கேடான ஒரு காலத்தில் வாழ்ந்தபோதும், ஏனோக்கு அவரைப் பிரியப்படுத்தினார். நமது காலத்திலும் ஏனோக்குகள் இருக்கிறார்கள்.

எந்தச் சோதனையாலும் கேடுபாடு அடையக்கூடாத மனிதனும், உண்மையுள்ள இராஜதந்திரியுமான தானியேலைப்போல நில்லுங்கள். உங்கள் பாவங்களை நீக்குவதற்காகத் தமது ஜீவனையே கொடுக்குமளவுக்கு உங்களிடத்தில் இவ்வளவாய் அன்புகூர்ந்த அவரை ஏமாற்றிவிடாதிருங்கள். "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று அவர் கூறுகிறார். இதை நினைவிற்கொள்ளுங்கள். நீங்கள் தவறு செய்திருந்து, எச்சரிப்பின் கலங்கரை விளக்கங்களாக இந்தத் தவறுகளைக் கருத்துடன்

கண்ணோக்கினால், நீங்கள் நிச்சயமாக வெற்றிபெறுவீர்கள். இவ்விதமாக தோல்வியை வெற்றியாக்கி, எதிரியை ஏமாற்றமடையச் செய்து, உங்கள் மீட்பரை நீங்கள் கனப்படுத்துவீர்கள்.

இவ்வுலகத்திலிருந்து மறு உலகத்திற்கு நாம் எடுத்துச்செல்லக்கூடிய ஒரே பொக்கிஷம் தேவசாயலுக்கேற்ப அமையப்பெற்ற ஒரு குணமே. இந்த உலகத்தில் கிறிஸ்துவின் போதனையின்கீழிருப்பவர்கள் ஒவ்வொரு தெய்வீக சாதனையையும் தங்களுடன் பரலோக வாசஸ்தலங்களுக்குள் கொண்டு செல்வார்கள். பரலோகத்தில் நாம் தொடர்ந்து முன்னேறிக்கொண்டேயிருப்போம். அப்படியானால், இவ்வாழ்வில் குணவிருத்தியடைவது எவ்வளவு அவசியம்!

## அவரது கட்டளைகள்—அளிக்கப்படும் அதிகாரங்களே

செயலில் பூரணமாய் வெளிப்படும் குணாதிசயப் பூரணமாகுதலைத் தீர்மானிக்கப்பட்ட விசுவாசத்துடன் தேடுகிற மனித ஏதுகரத்துடன் பரலோக அறிவுஜீவிகள் இணைந்து உழைப்பார்கள். இப்பணியில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரிடமும், உங்களுக்கு உதவிசெய்ய நான் உங்கள் வலதுபக்கம் இருக்கிறேன் என்று கிறிஸ்து கூறுகிறார்.

மனித சித்தம் தேவசித்தத்துடன் ஒத்துழைக்கும்போது அது பேராற்றல் உடையதாகிறது. அவரது கட்டளைப்படிச் செய்யப்பட வேண்டியது எதுவாயினும், அவரது பெலத்தினாலேயே செய்து முடித்துவிடக்கூடும். அவரது கட்டளைகள் எல்லாம் அவைகளைச் செய்வதற்கான பெலமேயாகும்.—Christ's Object Lessons, pp. 331–333.

## நமது நிலையான சார்பு

எப்போதும் தேவனைச் சார்ந்திருக்கிறோம் என்பதை உணர மறுப்பவர்கள், சோதனைகளினால் மேற்கொள்ளப்படுவார்கள். நமது பாதங்கள் பாதுகாப்பாக உள்ளன; ஒருபோதும் அசைக்கப்படமாட்டோம் என்று நாம் இப்பொழுது நினைத்துக்கொள்ளலாம். “நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்; தேவனிலும் அவரது வார்த்தையிலும் எனக்குள்ள விசுவாசத்தை எதுவும் அசைக்கமுடியாது” என்று நாம் நம்பிக்கையுடன் கூறலாம். ஆனால் நமது மரபுவழி வருகின்றதும், நாமே வளர்த்துக்கொண்டதுமான குணக்கூறுகளைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவும், நமது சொந்தத்தேவைகள் மற்றும் குறைபாடுகளுக்கு நமது கண்களைக் குருடாக்கிவிடவும் சாத்தான் திட்டந்தீட்டிக் கொண்டிருக்கிறான். நமது சொந்த பெலவீனத்தை உணர்வதினாலும் இயேசுவை உறுதியாக நோக்கிப்பார்ப்பதனாலும்மட்டுமே, நாம் பாதுகாப்பாக நடக்கமுடியும்.—Desire of Ages, p. 382.

# 26

# விசுவாசப் போராட்டம்

அநேக வாலிபர்களிடம் தேவனுக்கு சேவை செய்வதற்கென நிலையான கொள்கை இல்லை. அவர்கள் ஒவ்வொரு மனவருத்த வேளையிலும் தளர்ந்து விடுகின்றனர்; தாங்குதிறன் இல்லை. கிருபையிலும் அவர்கள் வளர்கிற தில்லை. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதுபோல் அவர்கள் காட்சியளிக்கின்றனர், ஆனால் தேவப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாக இல்லை; நிச்சயமாக இருக்கவும் இயலாது. அவர்களது மாம்சீக இருதயங்கள் மாற்றப்படவேண்டும்: பரிசுத்தத்தின் அலங்காரத்தை அவர்கள் தரிசித்தாக வேண்டும்: அப்பொழுது மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, அவர்கள் வாஞ்சித்துக் கதறுவார்கள்; அப்பொழுது அவர்கள் தேவனையும், அவரது பிரமாணத்தையும் நேசிப்பார்கள்; அப்பொழுது கிறிஸ்துவின் நுகம் மெதுவாயும், அவரது சுமை இலகுவாயும் இருக்கும்.

அருமையான வாலிபர்களே, உங்களது நடைகள் கர்த்தரால் நடத்தப்படுமாயின், உங்களது பாதை எப்பொழுதும் வெளிப்படையான சமாதானமும் செழிப்புமிக்கதாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாது. நித்திய பகலுக்கு நேராய் நடத்தும் பாதை பயணப்படுவதற்கு மிகவும இலகுவான ஒன்றல்ல, சில வேளைகளில் அது இருளும், முள்ளும் படர்ந்ததாகத் தோன்றலாம். ஆனாலும் தேவனுடைய நித்திய புயங்கள் உங்களைச் சூழ்ந்து, தீமையிலிருந்து காக்கும் என்ற நிச்சயம் உங்களுக்கு உண்டு. அவரில் நீங்கள் ஊக்கமான விசுவாசம்கொள்ளவேண்டுமென்றும், இருளிலும் வெளிச்சத்திலும் அவரை நம்பக் கற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அவர் விரும்புகிறார்.

## உயிருள்ள விசுவாசம்

கிறிஸ்துவின் பின்னடியார் இருதயத்தில் விசுவாசம் நிலைத்திருக்கப் பெற்றவராயிருத்தல் வேண்டும்; ஏனெனில் இது இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். எல்லையற்ற உதவியைப் பற்றிக்கொள்ளும் கரமே விசுவாசம் ஆகும்; புதுப்பிக்கப்பட்ட இருதயம் கிறிஸ்துவின் இருதயத்தோடு ஒத்திசைந்து துடிக்கச்செய்கிற செயற்கருவி இதுவே.

தனது இல்லத்தைச் சென்றடைவதற்கான முயற்சிகளில், கழுகானது மலைகளின் குறுகலான கணவாய்களில் புயற்காற்றினால் அடிக்கடி அலைசடிபடுகிறது. அதற்கும், அது தனது கூட்டைப் பத்திரப்படுத்தியிருக்கும்

ஒளிசூழ்ந்த உயரங்களுக்கு இடையில் இருண்ட, சீற்றங்கொண்ட மேகங்கள் திரண்டு நிற்கின்றன. கொஞ்சநேரம் அது குழம்பியிருப்பதாகத் தோன்றுகிறது, இப்புறமும் அப்புறமுமாக மோதி, அடர்த்தியான மேகங்களைப் பின்னுக்குத் தள்ளிச்செல்வதுபோன்று தனது பலமுள்ள செட்டைகளை அடிக்கிறது. தனது சிறையிலிருந்து விடுபட வழிகாணும் வீண் முயற்சிகளில் அது தன்னுடைய மூர்க்கமான கூக்குரலினால் மலைகளின் புறாக்களை எழுப்பிவிடுகின்றது. கடைசியாக இருளைக் கடந்து மேல்நோக்கிப் பாய்ந்து செல்கின்றது. மறுவிநாடி அது அமைதியான சூரியப்பிரகாசத்தை நோக்கி மேலெழும்பும்போது, வெற்றிக் கீச்சிடும் கூச்சலை எழுப்புகின்றது. இருள், புயல் அனைத்தும் அதன்கீழே இருக்கிறது. அதனைச் சுற்றிலும் விண்ணொளி வீசுகிறது. உயர்ந்த பாறைக்கூர்முகட்டில் இருக்கும் தனக்குப் பிரியமான இல்லத்தை அது சென்றடைந்து திருப்தியடைகிறது. இருளின் வழியாகவே அது ஒளியைச் சென்றடைந்தது. இதைச் செய்வதற்கு அதற்கொரு முயற்சி அவசியப்பட்டது, ஆகிலும் அது தேடித் திரிந்த நோக்கத்தை அடைவதில் வெகுமானத்தையும் பெற்றது.

கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய நாம் பின்பற்ற வேண்டிய ஒரே பாதை இதுவே. பரலோகத்தின் ஒளியிடமிருந்து நம்மைப் பிரிக்கிற, தடித்த சுவர்போன்ற மேகங்களை ஊடுருவிச் செல்லக்கூடிய உயிருள்ள விசுவாசத்தை நாம் பயிற்சி செய்யவேண்டும். அனைத்தும் சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிற விசுவாச உயரங்களை நாம் எட்டிப்பிடிக்க வேண்டியதிருக்கிறது.

## ஓர் வாழ்நாள் போராட்டம்

பயந்த புறாவை விரட்டும் பருந்தை நீங்கள் எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா? பருந்து தனது இரையைப் பிடிக்கவேண்டுமானால், அதன் இறைக்குமேலாகப் பறக்க வேண்டும் என்பதைப் புறாவுக்கு அகத்தூண்டுதலே கற்றுத்தந்திருக்கிறது. பருந்து துரத்திக்கொண்டிருக்கும் வானத்தில் புறா மேலே, இன்னும் மேலே நீலவான உச்சிக்குப் பறந்துசெல்கிறது. பருந்து அதை துரத்துவது வீணே. தனது ஓட்டத்தை நிறுத்தவும் அல்லது கீழே இறங்கவும் எதையும் அனுமதியாத பட்சத்தில், அது பாதுகாப்பாக இருக்கும்; அது ஒரு முறை தவறிக் கீழ்நோக்கிப் பார்த்தாலும், விழிப்புள்ள அதன் எதிரி தன் இறையின்மீது பாய்ந்து தாக்கிவிடும். அதிக ஆர்வத்துடன் இக்காட்சியை நாம் மறுபடியும் மறுபடியும் கண்டிருக்கிறோம். நமது அனுதாபங்களெல்லாம் சின்னப் புறாவின்மீதே இருக்கிறது. கொடூரப் பருந்துக்கு அது பலியாகி வீழ்வதைக் கண்டு நாம் எவ்வளவு வருத்தப்பட்டிருந்திருப்போம்!

சாத்தானோடும் அவனது கவர்ச்சியான சோதனைகளோடும் வாழ்நாள் முழுவதுக்குமான ஒரு நெருக்கடி—ஒரு போராட்டம் நமக்கு முன்பாக இருக்கிறது. ஆத்துமாவைச் சிக்கவைப்பதற்கு எதிரியானவன் ஒவ்வொரு வாதத்தையும், ஒவ்வொரு வஞ்சகத்தையும் பயன்படுத்துவான்; ஜீவகிரீடத்தை வெல்லவேண்டுமென்றால், தீவிரமான விடாமுயற்சியை நாம் எடுத்தாக வேண்டும். வெற்றிபெறுமட்டும் சர்வாயுதவர்க்கத்தைக் கீழே வைத்துவிடவோ, போர்க்களத்தை விட்டு ஓடவோ கூடாது. நமது மீட்பருக்குள் நாம் ஜெயம்பெற முடியும். நமது விசுவாசத்தைத் துவக்கி முடிக்கிறவரின்மீது நமது கண்களை தொடர்ந்து வைத்திருக்கும்பட்சத்தில், நாம் பாதுகாப்பாயிருப்போம். ஆனால் நமது பற்றுறுதிகள் பூமியின் மீதுள்ளவைகளில் அல்ல, மேலானவைகளில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். கிறிஸ்துவின் கிருபைகளை அடைந்துகொள்வதற்கு, விசுவாசத்தினால் நாம் மேலே, இன்னும் மேலே எழும்பவேண்டும். அவரது இணையற்ற கவர்ச்சிக்கூறுகளை அனுதினமும் தியானிப்பதன்மூலம், நாம் அவரது மகிமையான சாயலுக்குள் அதிகமதிகமாக வளரவேண்டும். இவ்விதமாக நாம் பரலோகத்துடன் நெருங்கி வாழும்போது, சாத்தான் தனது வலைகளை நமக்காக விருதாகவே விரித்துவைப்பான்.—The Youth's Instructor, May 12, 1898.

## 27

# ஜெயம் பெறுதல்

அனைத்து பெலத்துக்கும் ஆதிமூலமானருடன் நம்மை இணைத்துக் கொள்ளும்போது நமக்குரியதாகும் பெலத்தைக்குறித்து அற்ப எண்ணமுடையவர்களாக நாம் இருக்கிறோம். பாவத்துக்குள் நாம் மறுபடியும் மறுபடியும் விழுந்து, எப்பொழுதும் அப்படித்தான்போல என்று எண்ணிக்கொள்கிறோம். நமது பெலவீனங்களை ஏதோ பெருமைக்குரியவை களாகக் கருதி, அவற்றைப் பற்றிக்கொண்டிருக்கிறோம். நாம் மேற்கொள்ள வேண்டுமானால், நமது முகத்தை ஒரு பாறைபோன்று வைத்திருக்க வேண்டுமெனக் கிறிஸ்து நம்மிடம் கூறுகிறார். நமது பாவங்களை மரத்தின்மீது தம் சரீரத்தில் அவர் சுமந்தார்; அவர் நமக்கு அருளியிருக்கிற வல்லமையின் மூலமாக, உலகம், மாமிசம் மற்றும் பிசாசுக்கு நாம் எதிர்த்து நிற்கலாம். அப்படியானால் நமது பெலவீனம் மற்றும் திறமையின்மைபற்றி நாம் பேசாமல், கிறிஸ்துவையும் அவரது பெலத்தையும்பற்றிப் பேசுவோமாக. சாத்தானின் பெலத்தைப்பற்றி நாம் பேசும்போது, எதிரியானவன் தனது

ஆற்றலை நம்மீது மிகவும் உறுதியாகக் கெட்டியாக்குகிறான். வல்லவரின் வல்லமையைப் பற்றி நாம் பேசும்போது, அவன் பின்னுக்குத் தள்ளப்படுகிறான். நாம் தேவனண்டை கிட்டிச்சேரும்போது, அவர் நம்மண்டை கிட்டிச்சேர்கிறார்.

நம்மில் அநேகர் நமது சிலாக்கியங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிடுகிறோம். சரியானதைச் செய்வதற்கு ஒருசில பெலவீன முயற்சிகளையே நாம் செய்கிறோம்; பிற்பாடு நமது பழைய பாவ வாழ்விற்கே திரும்பிவிடுகிறோம். தேவனுடைய ராஜ்யத்துக்குள் நாம் நுழைய வேண்டுமெனில், கறை திரை அல்லது அப்படிப்பட்ட எக்காரியத்தோடும் அல்ல, பூரண குணங்களுடன் நாம் நுழைந்தாக வேண்டும். காலத்தின் முடிவை நெருங்க நெருங்க, கூடுதலாக்கப்பட்ட செயல்பாடுடன் அவன் கிரியை செய்கிறான். நமது மனங்களைத் தனதாக்கிக்கொள்ளும்பொருட்டு, நாம் அறியக்கூடாதபடிக்கு அவன் தனது கண்ணிகளை வைக்கிறான். ஆத்துமாவிலிருந்து தேவனுடைய மகிமையை மறைத்துப்போட அவன் அனைத்து வழியிலும் முயற்சிக்கிறான். நமது இருதயங்களையும், மனங்களையும் அவன் கட்டுப்படுத்துவானா அல்லது புதிய பூமியில் நாம் ஓர் இடத்தை பெற்று ஆபிரகாமின் வீட்டில் ஒரு பங்கைப் பெறுவோமா என்று தீர்மானிப்பது நம்மிடமே விடப்பட்டிருக்கிறது.

மனித முயற்சியுடன் இணைந்து தேவ வல்லமை ஒரு மகிமையான வெற்றியை நமக்காக உருவாக்கி வைத்திருக்கிறது. இதை நாம் பாராட்டா திருக்கலாமா? பரலோகத்தின் ஐசுவரியங்களெல்லாம் இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அவர் செய்திருக்கிறதை விடவும் அதிகமாகச் செய்திருக்கக் கூடும் என்று தீமையின் கூட்டணி கூறுவதற்கு தேவன் விரும்பமாட்டார். அவர் அதற்குமேலாகச் செய்யமுடியாது என்பதற்கு அவர் படைத்திருக்கிற உலகங்களும், பரலோகத்தின் தூதர்களும் சாட்சிகபர முடிந்தது. நாம் இதுவரை ஒன்றும் அறிந்திராத அளவுக்கு, வல்லமையின் வாழ்வாதாரங்கள் தேவனிடம் உண்டு; அவைகளிலிருந்து நமது தேவையின் வேளைக்கேற்ப அவர் நமக்கு வழங்குவார். ஆனால் நமது முயற்சி எப்பொழுதும் தெய்வீகத்துடன் இணைகிறதாகவே இருக்கவேண்டும். கர்த்தருக்காகக் காத்திருக்கிற மனிதர்களைப்போல போராயுதம் தரித்து, அவசரகாலத்தில் நாம் எழும்பவேண்டுமெனில், … நமது அறிவாற்றலும் நமது புரிந்துகொள்ளும் சக்திகளும், நமது தேகத்தின் முழுபெலனும் செயலில் பயன்படுத்தப்படவேண்டும்; நமது குணங்களிலுள்ள ஒவ்வொரு குறையையும் மேற்கொள்ள உழைத்தால், தேவன் நமக்குக் கூடுதல் ஒளியும், பெலனும், சகாயமும் அளிப்பார்.—The Youth's Instructor, January 4, 1900.

**விசுவாசமும் கடமையும்**

விசுவாசம் என்பது உணர்ச்சியல்ல. விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. சுயநலத்தைவிட அதிகம் ஒன்றுமில்லாத பக்தியின் வேஷம் ஒன்று இருக்கிறது. உலகரீதியான சல்லாபத்தில் அது சந்தோஷங்கொள்ளும். கிறிஸ்துவின் மார்க்கத்தைக்குறித்துச் சிந்திப்பதில் அது திருப்தியடைகிறது, ஆயினும் அதனுடைய இரட்சிக்கும் வல்லமையைப்பற்றி ஒன்றும் அறியாதிருக்கிறது. இந்த மார்க்கத்தை உடையவர்கள் இயேசுவை அறியாதிருக்கிறபடியால், பாவத்தை இலேசானதாகவே கருதுகிறார்கள். இந்நிலையிலிருந்துகொண்டு, அவர்கள் கடமையையும் மிக இளப்பமாகவே மதிப்பிடுகின்றனர். ஆனால் கடமையை உரிமையாய்ச் செய்தல் என்பது தேவனுடைய குணத்தைக் குறித்தச் சரியான ஒரு மதிப்பீட்டுடன் இணைந்து செல்கிறது.—Review and Herald, February 28, 1907.

## 28

# பெலமுள்ளவர்களாய் இருப்பது எப்படி?

நாம் பெலனுடன் இருப்பதற்கான எல்லா வழிவகையையும் கிறிஸ்துவானவர் ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் தமது பரிசுத்தஆவியை நமக்கு அருளியிருக்கிறார்; அவரது பணி, நாம் சமாதானத்தையும் மன்னிப்பின் இனிய உணர்வையும் அடையும்படிக்கு, கிறிஸ்துவானவர் செய்திருக்கிற எல்லா வாக்குத்தத்தங்களையும் நமது நினைவிற்குக் கொண்டு வருவதே ஆகும். இரட்சகரின்மீது நமது கண்களைப் பதித்து, அவரது வல்லமையைமட்டுமே நம்புவோமானால், ஒரு பாதுகாப்பு உணர்வினால் நாம் நிரப்பப்படுவோம்; கிறிஸ்துவின் நீதி நமது நீதியாக மாறும்...

நமது தகுதியின்மையைப்பற்றிப் பேசுவதினால் அவரை நாம் அவமதிக்கிறோம். நம்மையே நோக்கிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, அனுதினமும் அவரைப்போல் அதிகமதிகமாக மாறுவதற்கும், அவரைக்குறித்துப் பேசுவதற்கு அதிகமதிகமாகத் திராணியுள்ளவர்களாவதற்கும், அவரது இரக்கத்தையும் சகாயத்தையும் நம்முடையதாக்கிக்கொள்ள சிறந்தவிதத்தில்

ஆயத்தப்பட்டிருப்பதற்கும், நமக்கு அருளப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கும், நாம் இயேசுவையே இடைவிடாது நோக்கிப் பார்ப்போமாக.

இவ்விதமாக அவருடனுள்ள ஐக்கியத்தில் நாம் வாழும்பொழுது, அவரது சத்துவத்தில் பலப்பட்டவர்களாகவும், நம்மைச் சுற்றியுள்ளோர்க்கு உதவியாகவும், ஆசீர்வாதமாகவும் நாம் வளர்கிறோம். நாம் செய்ய வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறபடி மாத்திரம் நாம் செய்தால், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்ப்பதற்கு தேவனால் அனுப்பப்பட்ட மீட்பருக்குத் துதியையும், நன்றியுணர்வையும் முழங்கப்பண்ணும் ஒவ்வொரு நரம்பைக் கொண்டுள்ள புனித சுரமண்டலங்களாக நம் இருதயங்கள் மாறும்…

## அவரது மகிமையைக் கண்ணோக்குங்கள்

சோதனைகள் நிச்சம் உண்டு என்பதுபோல, அவைகள் உங்களைத் தாக்கும்போது, கவலையும் குழப்பமும் உங்களைச் சூழும்போது, நொந்து சோர்ந்துபோய், ஏறக்குறைய நம்பிக்கையை இழக்க ஆயத்தமாயிருக்கும் போது, விசுவாசப் பார்வையால் ஒளியைக் கடைசியாக எங்கே பார்த்தீர்களோ, அங்கே பாருங்கள், பாருங்கள்; அவரது பிரகாசிக்கும் மகிமையினால் உங்களைச் சூழ்ந்துள்ள இருள் அகற்றப்படும். பாவம் உங்கள் ஆத்துமாவில் ஆதிக்கம் செய்யப்போராடும்போதும், மனச்சாட்சியைப் பாரப்படுத்தும்போதும், அவிசுவாசம் சிந்தையை மந்தமாக்கும்போதும், இரட்சகரிடம் செல்லுங்கள். பாவத்தைக் கீழ்ப்படுத்துவதற்கு அவரது கிருபை போதுமானது. அவர் நம்மை மன்னித்து, தேவனுக்குள் நம்மைச் சந்தோஷமுள்ளவர்களாக்குவார்….

நமது தகுதியின்மையையும் வல்லமைக் குறைவையுங்குறித்து ஒருபோதும் பேசாதிருப்போமாக. பின்னானவைகளை மறந்து, பரலோகம் நோக்கிய பாதையில் முன்னேறிச் செல்வோமாக. எந்த வாய்ப்பையும் நாம் அசட்டை செய்யாதிருப்போமாக, அதை நாம் பயன்படுத்திக்கொண்டால், தேவனுடைய சேவையில் நம்மை மிகவும் உபயோகமுள்ளவர்களாக்கும். அப்பொழுது பொன்னிழைகளைப்போல, நமது ஜீவியங்களின்மூலமாகப் பரிசுத்தம் பொங்கிவழியும்; நமது பிரதிஷ்டையைத் தூதர்கள் கண்டு, “புருஷனைப் பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்” என்ற வாக்குத்தத்தத்தை மீண்டும் மீண்டும் பாடுவார்கள். பெலவீனமும் தவறும் தன்மையுமுள்ள மனிதர்கள் இயேசுவின் வாழ்வை வாழ்வதற்கெனத் தங்களை கொடுக்கும்போது, முழுப்பரலோகமும் களிகூருகிறது.—Review and Herald, October 1, 1908.

**மனந்திரும்புதலின் மூலம் சந்தோஷம்**

மனிதனின் இரட்சிப்புக்கான நிபந்தனைகள் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கின்றன. மனந்திரும்பும் பாவி ஆறுதலையும் சமாதானத்தையும் கண்டடைவதற்காக, சுயத்தைத் தாழ்த்துதல் மற்றும் சிலுவை சுமத்தல் ஆகிய ஆயத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மனிதன் ஒருபோதும் சகிக்கக்ககூடாத அவமானத்திற்கும், தியாகத்திற்கும் இயேசுவானவர் அர்ப்பணித்தார் எனும் சிந்தனை ஒவ்வொரு முறுமுறுக்கும் குரலையும் அமைதிப்படுத்தவேண்டும். தேவனுடைய பிரமாணத்தை மீறினதினிமித்தம் அவரண்டை உண்மையாய் மனந்திரும்புவதன்மூலமாகவும், பாவியின் மீட்பரும் பரிந்துபேசுபவருமான இயேசு கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தின் மூலமாகவும் இனிமையான சந்தோஷம் மனிதனுக்குக் கிட்டுகிறது.—The Signs of the Times, March 4, 1880.

## 29

# ஜெயமுள்ள ஜீவியம்

தெய்வீக வல்லமையைச் சாரும்போது சமாதானம் கிடைக்கிறது. அருளப்பட்டிருக்கிற வெளிச்சத்துக்கு இசைவாகச் செயல்படுவதற்கு ஆத்துமா தீர்மானிக்கும் வேகத்துக்குத்தக்கதாக, பரிசுத்த ஆவியானவர் அதிக வெளிச்சத்தையும், பெலத்தையும் அளிப்பார். ஆத்துமாவின் தீர்மானத்துடன இணைந்து ஒத்துழைப்பதற்கு ஆவியானவரின் கிருபை வழங்கப்படுகிறது; ஆகிலும் தனிநபரின் விசுவாசப் பயிற்சிக்கு அது ஒரு மாற்று அல்ல. கிறிஸ்தவ வாழ்வில் வெற்றி என்பது தேவன் அருளியிருக்கிற வெளிச்சத்தை உரிமைப்படுத்திக்கொள்வதைச் சார்ந்தே அமைந்திருக்கிறது. கிறிஸ்துவில் விடுதலையுள்ள ஆத்துமாவாக ஆக்குவது அபரிமிதமான ஒளியோ, அடையாளமோ அல்ல; “விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்,” என்று உண்மையாகச் சத்தமிடுவதற்குச் சக்திகளும், சித்தமும், ஆத்துமத்தின் ஆற்றல்களும் உயர்ந்து செல்லுதலே ஆகும்.

பிரகாசமான வருங்கால வாய்ப்புவளங்களைக்குறித்து நான் களிகூருகிறேன்; நீங்களும் களிகூரலாம். மகிழ்ச்சியாயிருங்கள். கர்த்தருடைய கிருபைக்காக அவரைத் துதியுங்கள். உங்களால் புரிந்துகொள்ள

முடியாததை அவரிடம் ஒப்படையுங்கள். அவர் உங்களை நேசிக்கிறார், உங்களது ஒவ்வொரு பெலவீனத்துக்காகவும் பரிதபிக்கிறார். அவர் "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்." தமது குமாரனை நேசிப்பவர்களுக்குத் தமது குமாரனைவிடவும் மிகக் குறைந்த ஓர் ஆசீர்வாதத்தைக் கொடுப்பதில் எல்லையற்றவரின் இருதயம் திருப்தியடையாது.

நமது ஆத்துமத்தின் கீழான போக்கின்மீதே சிந்தனையாயிருக்க நம்மை நடத்தும்படி, வல்ல சகாயரிடமிருந்து நமது மனங்களைக் கவர்ந்திழுத்திட சாத்தான் வகைதேடுகிறான். ஆயினும் கடந்தகாலத்தின் குற்றத்தன்மையை இயேசுவானவர் கண்டாலும், அவர் மன்னிப்பைக் கூறுகிறார்; அவரது அன்பைச் சந்தேகித்து நாம் அவரை அவமதித்துவிடக்கூடாது. குற்றவுணர்வு சிலுவையினடியில் வைக்கப்படவேண்டும் அல்லது அது ஜீவ ஊற்றுகளை விஷப்படுத்திவிடும். சாத்தான் தனது அச்சுறுத்தல்களை உங்கள்மீது திணிக்கும்போது, அவைகளிடமிருந்து விலகி, தேவனுடைய வாக்குத்தத்தங்களால் உங்கள் ஆத்துமாவைத் தேற்றிக்கொள்ளுங்கள். மேகம் தன்னில்தானே இருளுடையதாயிருக்கலாம்; ஆகிலும் விண்ணொளி யினால் நிரப்பப்படும்போது, அது பொன்மயமான பிரகாசத்தை அடைகின்றது; ஏனெனில் தேவமகிமை அதன்மீது தங்குகிறது.

தேவனுடைய பிள்ளைகள் உணர்ச்சிகளுக்கும், மனக்கிளர்ச்சிகளுக்கும் கீழ்ப்பட்டிருக்கக்கூடாது. நம்பிக்கைக்கும் பயத்திற்குமிடையே அவர்கள் ஊசலாடும்போது, கிறிஸ்துவின் இருதயம் காயப்படுகிறது; ஏனெனில் அவர் தமது அன்பிற்கான தெளிவான அடையாளத்தை அவர்களுக்குக் கொடுத் திருக்கிறார்... அவர் கொடுத்திருக்கிற வேலையை அவர்கள் செய்யவேண்டு மென்று அவர் விரும்புகிறார். அப்பொழுது உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்ப்பதற்குத் தேவனால் அனுப்பப்பட்டவருக்குத் துதியையும், ஸ்தோத்திரத்தையும் மேலே அனுப்பக்கூடிய நரம்பைக் கொண்டுள்ள புனித சுரமண்டலங்களாக அவரது கரங்களில் அவர்களது இருதயங்கள் மாறும்.

தமது பிள்ளைகளுக்கான கிறிஸ்துவின் அன்பு வலிமையுள்ளதைப் போன்று, மென்மையுள்ளதாகவும் இருக்கிறது. அது மரணத்தைக்காட்டிலும் வலிது; நமது இரட்சிப்பைச் சம்பாதிப்பதற்காகவும், ஆன்மீகத்திலும் நித்தியத்திலும் நம்மை அவருடன் ஒன்றாக்குவதற்காகவும் அவர் மரித்தார். அவரது அனைத்து வல்லமைகளையும் கட்டுப்படுத்தி, அவரது ஜனங்களுக்கு நன்மை செய்வதில் பரலோகத்தின் பரவலான வள ஆதாரங்களைப் பயன்படுத்துமளவுக்கு அவரது அன்பு மிகவும் வலிமையுள்ளதாயிருக்கிறது.

அது யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமற்றதாய், நேற்றும் இன்றும் என்றும் மாறாததாய் இருக்கிறது. பாவம் யுகங்கள் நெடுகிலும் இந்த அன்பிற்கு எதிர்த்து நிற்க முயற்சித்து, பூமிநோக்கிய அதன் பாய்தலைத் தடுக்க நினைத்தபோதிலும், கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்களுக்காக அது இன்னும் வளமான நீரோட்டங்களுடன் பாய்ந்து கொண்டுதானிருக்கிறது.—Testimonies to Ministers, pp. 518, 519.

### முதன்மையாயிருக்கும் செல்வாக்கு

உங்கள் வாழ்வில் ஆன்மீகம் என்பது வெறுமனே மற்ற செல்வாக்குகளில் ஒன்றைப் போன்றது அல்ல; அது மற்ற அனைத்திற்கும் முதன்மையான ஒரு செல்வாக்காக இருக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.—Counsels to Teachers, Parents, and Students, p. 489.

## 30

# உயிருள்ள விசுவாசம்

இருதயப் பரிசுத்தத்தையும், வாழ்வின் தூய்மையையும் உண்மையாய்த் தேடிக்கொண்டிருப்பவர்களில் அநேகர் குழம்பிப்போய், சோர்ந்திருப்பது போன்று காணப்படுகின்றனர். அவர்கள் எப்பொழுதும் தங்களையே பார்த்துக்கொண்டு, தங்களது விசுவாசக் குறைவைக்குறித்தே புலம்பிக்கொண் டிருக்கின்றனர்; தங்களிடம் விசுவாசமில்லாதபடியால், தேவாசீர்வாதத்தை உரிமைபாராட்டமுடியாது என அவர்கள் நினைக்கின்றனர். இத்தகைய நபர்கள் உணர்ச்சியை விசுவாசம் எனத் தவறாக எடுத்துக்கொள்கின்றனர். மெய்விசுவாசத்தின் எளிமைக்கும் மேலாக அவர்கள் பார்க்கின்றனர்; இவ்விதமாகத் தங்களது ஆத்துமாக்களின்மீது பெரும் இருளை வருவித்துக் கொள்கின்றனர். அவர்கள் சுயத்திடமிருந்து மனதைத் திருப்பி, தேவனுடைய தயவு மற்றும் இரக்கத்தின்மீது தங்கச் செய்து, அவரது வாக்குத்தத்தங்களை மறுபடியும் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்; பின்னர் அவர் தமது வார்த்தையை நிறைவேற்றுவார் என்று அப்படியே விசுவாசிக்கவேண்டும்.

நமது விசுவாசத்தில் நாம் நம்பிக்கைவைக்காமல், தேவவாக்குத்தத்தங் களில் நம்பிக்கை வைக்கவேண்டும். அவரது பிரமாணத்துக்கெதிரான கடந்தகால மீறுதல்களிலிருந்து மனந்திரும்பி, எதிர்காலத்தில் கீழ்ப்படிந்து நடக்கத் தீர்மானிக்கும்போது, தேவன் கிறிஸ்துவினிமித்தம் நம்மை ஏற்று, நமது பாவங்களை மன்னிக்கிறார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

சில வேளைகளில் இருளும் சோர்வும் ஆத்துமாவின்மீது படிந்து, நம்மை அமிழ்த்துப்போடும்படி அச்சுறுத்தலாம்; ஆனாலும் நமது நம்பிக் கையை விட்டுவிடக்கூடாது. உணர்ச்சி இருப்பினும், இல்லாவிடினும், இயேசுவின்மீது பார்வையைப் பதித்து, அறிந்த ஒவ்வொரு கடமையையும் உண்மையாய் நிறைவேற்றுவதற்கு பிரயாசப்பட்டு, பின்பு தேவவாக்குத்தத்தங்களை அமைதியாய் அசையாமல் பிடித்துக்கொள்ள வேண்டும்.

## உணர்ச்சியைச் சாராதிருங்கள்

சில வேளைகளில் நமது தகுதியின்மையைக்குறித்த ஒரு ஆழ்ந்த உணர்வு ஆத்துமாவுக்குள் பயங்கரமான ஒரு அதிர்வை அனுப்பும்; ஆனால் அது தேவன் நம் பக்கம் மாறியிருக்கிறார் அல்லது நாம் அவர் பக்கமாக மாறியிருக்கிறோம் என்பதற்கான ஆதாரமல்ல. ஒரு குறிப்பிட்ட தீவிரமான உணர்ச்சிக்கு நேராக மனதிற்குக் கடிவாளமிட எந்த முயற்சியும் செய்யப்படக்கூடாது. நேற்று நாம் உணர்ந்திருந்த சமாதானத்தையும், சந்தோஷத்தையும் இன்று உணராமல் போகலாம்; ஆனால் நாம் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் கரத்தைப் பற்றிக்கொண்டு, முழுவதும் இருளிலிருந்தாலும் வெளிச்சத்திலிருப்பதுபோன்று அவரை நம்பவேண்டும்.

“கிறிஸ்துவானவர் இரட்சிக்கக்கூடாத ஒரு பெரும்பாவியாக நீ இருக்கிறாய்” என்று சாத்தான் இரகசியமாகக் கூறலாம். உண்மையிலே உங்களுடைய பாவத்தன்மையையும், தகுதியின்மையையும் ஒத்துக்கொள்ளும் அதே வேளையில், “பாவநிவாரணத்தின் புண்ணியத்தினால், கிறிஸ்துவை எனது இரட்சகராக நான் உரிமைபாராட்டுகிறேன். எனது சொந்தத் தகுதிகளை நான் நம்பாமல், என்னைச் சுத்திகரிக்கிற இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தையே நான் நம்புகிறேன். இவ்விநாடியே எனது உதவியற்ற ஆத்துமாவை கிறிஸ்துவின்மீது சாட்டிவிடுகிறேன்” என்ற சத்தத்துடன் சோதனைக்காரனை நீங்கள் சந்திக்கலாம். கிறிஸ்தவ வாழ்வு என்பது நிலையான, உயிருள்ள விசுவாசத்தின் வாழ்வாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின்மீதான உறுதியான சார்பும், விட்டுக்கொடுக்காத ஒரு நம்பிக்கையும் ஆத்துமாவுக்குச் சமாதானத்தையும், நிச்சயத்தையும் கொண்டுவரும்.

## சோர்ந்துபோகாதிருங்கள்

உங்கள் இருதயம் கடினமாகத் தோன்றுவதினால் சோர்ந்து போகாதிருங்கள். ஒவ்வொரு தடையும், அகத்திலுள்ள ஒவ்வொரு எதிரியும் உங்களது கிறிஸ்துவின் தேவையை அதிகரிக்கவே செய்கிறது. கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தைக் கொடுக்கவே

அவர் வந்தார். உங்களது விசேஷமான குறைவுகளை மேற்கொள்வதற்கான பிரத்தியேகக் கிருபைக்கு அவரையே நோக்கிப்பாருங்கள். சோதனையினால் எதிர்கொள்ளப்படும் வேளையில், தீய உந்துதல்களுக்கு எதிர்த்து நில்லுங்கள்; "எனது மீட்பரை நான் எப்படி அவமதிப்பேன்? கிறிஸ்துவிடம் என்னையே அர்ப்பணித்திருக்கிறேன்; சாத்தானின் கிரியைகளை என்னால் செய்ய முடியாது," என்று உங்கள் ஆத்துமாவுக்குச் சொல்லுங்கள். ஒவ்வொரு விக்கிரகத்தைத் தியாகம் செய்வதற்கும், ஒவ்வொரு பிரியமான பாவத்தையும் அகற்றிப் போடுவதற்குமான உதவிக்காக அருமை இரட்சகரிடம் கூக்குரலிடுங்கள். பிதாவின் சிங்காசனத்திற்குமுன்பாக நின்று, தமது காயப்பட்ட கரங்களைக் காட்டி உங்களுக்காக இயேசு பரிந்துபேசுகிறதை விசுவாசக் கண்கொண்டு பாருங்கள். உங்களது விசேஷித்த இரட்சகர்மூலமாக உங்களுக்குப் பெலன் கிடைக்கிறது என்று விசுவாசியுங்கள்.

## கிறிஸ்துவைக் குறித்த சிந்தனை

ஜெயங்கொள்கிறவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கிற கிரீடங்களை விசுவாசத்தினால் நோக்கிப்பாருங்கள்; அடிக்கப்பட்டு, தேவனுக்கென்று எங்களை மீட்டுக்கொண்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரர், பாத்திரர்! என்ற மீட்கப்பட்டோருடைய களிகூருதலின் பாடலைக் கவனியுங்கள். இக்காட்சிகள் உண்மையானவை என்றுணரப் பிரயாசப்படுங்கள். கிறிஸ்தவ இரத்தசாட்சியான ஸ்தேவான், துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடுமுள்ள தனது கொடிய போராட்டத்தில், "அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்" என்று ஆச்சர்யத்துடன் கூறினான். உலக இரட்சகர் பரலோகத்திலிருந்து மிகுந்த ஆர்வத்துடன் அவனை உற்றுநோக்குவதாக அவனுக்கு வெளிப் படுத்தப்பட்டார்; கிறிஸ்துவினுடைய முகத்தோற்றத்திலுள்ள மகிமையான ஒளி ஸ்தேவான்மீது மிகவும் பிரகாசித்ததால், அவனது எதிரிகள்கூட அவன் முகம் தேவதூதன் முகம்போல் பிரகாசிக்கக் கண்டார்கள்.

கிறிஸ்துவின்மீதும் மேலோகத்தின்மீதும் அதிகமாய்த் தங்கியிருக் கும்படி நமது மனங்களை நாம் அனுமதித்தால், கர்த்தருடைய யுத்தங்களை நடத்துவதற்கு வல்லமையான தூண்டுதலையும், ஆதரவையும் கண்டடை வோம். வெகு விரைவில் நமது இல்லமாகப்போகிற மேன்மையான தேசத்தின் மகிமைகளை நாம் தியானித்தால், பெருமையும் உலக சிநேகமும் தங்களது வல்லமையை இழந்துபோகும். கிறிஸ்துவின் அழகிற்கு அருகில், அனைத்துப் பூமிக்குரிய கவர்ச்சிகளும் மதிப்பற்றதாகவே தோன்றும்.

## சிந்திக்கும் பழக்கங்களை மாற்றுதல்

தங்கள் சார்பில் ஊக்கமான முயற்சியின்றி தேவனுடைய அன்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடும் என்று ஒருவரும் நினையாதிருப்பார்களாக. பூமிக்குரிய காரியங்களின்மீது மட்டுமே மனதை நெடுங்காலமாகத் தங்கச் செய்வதற்கு அனுமதிக்கும்பொழுது, சிந்திக்கும் பழக்கங்களை மாற்றுவதென்பது ஒரு கடினமான காரியமாகி விடுகிறது, கண் எதைக் காண்கிறதோ, காது எதைக் கேட்கிறதோ அதுவே வெகுவிரைவில் கவனத்தைக் கவர்ந்து, ஆர்வத்தை ஈர்த்துக்கொள்கிறது.

ஆயினும் தேவனுடைய நகரத்துக்குள் நாம் நுழைந்து, இயேசுவை அவரது மகிமையில் காண விரும்பினால், இங்கேயே விசுவாசக் கண்கொண்டு அவரைப் பார்ப்பதற்கு நாம் பழகியிருக்க வேண்டும். கிறிஸ்துவின் குணமும், வார்த்தைகளும் நமது சிந்தனைகள் மற்றும் நமது உரையாடலின் தலையங்கமாக மீண்டும் மீண்டும் இருக்கவேண்டும்; இத்தகைய புனிதமான கருப்பொருள்களின்மீது ஜெபத்துடன் தியானம் செய்வதற்கு அனுதினமும் கொஞ்சநேரம் விசேஷமாக ஒதுக்கப்பட வேண்டும்.

## பரிசுத்தமாகுதல் ஓர் அன்றாடப்பணி

பரிசுத்தமாகுதல் என்பது ஓர் அன்றாடப்பணி ஆகும். தேவனுடைய கோரிக்கைகளில் ஒன்றை மிதித்துக் கொண்டிருக்கும் அதேவேளையில், தேவன் தங்களை மன்னிப்பார், ஆசீர்வதிப்பார் என்ற கொள்கையினால் ஒருவரும் தங்களையே வஞ்சித்துக் கொள்ளாதிருப்பார்களாக. அறிந்த ஒரு பாவத்தை வேண்டுமென்றே செய்தல் என்பது ஆவியானவரின் சாட்சியிடும் குரலை அமைதிப்படுத்தி, தேவனிடமிருந்து ஆத்துமாவைப் பிரித்துவிடுகிறது. ஆன்மீக உணர்வின் ஆனந்தப் பரவசங்கள் எப்படியிருந்தாலும் சரி, தெய்வீகப்பிரமாணத்தை அவமதிக்கிற இருதயத்தில் இயேசுவானவர் இருக்க இயலாது. அவரைக் கனம்பண்ணுகிறவர்களை மட்டுமே தேவன் கனம்பண்ணுவார்.

“எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள்.” நாம் கோபத்தையாவது, இச்சையையாவது, பேராசையையாவது, வெறுப்பையாவது, சுயநலத்தையாவது அல்லது வேறெந்த பாவத்தையாவது பேணி வளர்த்தால், பாவத்திற்கு அடிமைகளாகிறோம். “இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது.” நாம் பாவத்திற்கு ஊழியஞ்செய்தால், கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்ய முடியாது. கிறிஸ்தவன்

பாவத்தின் தூண்டுதல்களை உணருவான், மாம்சம் ஆவிக்கு விரோதமாக இச்சிக்கிறது; ஆனால் ஆவியோ மாம்சத்துக்கு விரோதமாகத் தொடர்ந்து போராடிக்கொண்டேயிருக்கிறது. இங்கேதான் கிறிஸ்துவின் உதவி அவசியப் படுகிறது. மனித பெலவீனம் தெய்வீக பெலத்துடன் இணைகிறது; "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்!" என்று விசுவாசம் வியந்துரைக்கிறது.

தேவன் ஏற்றுக்கொள்கிற குணத்தை வளர்த்துக்கொள்ளவேண்டு மானால், நமது ஆன்மீக வாழ்வில் சரியான பழக்கங்களை நாம் அமைத்துக் கொள்ளவேண்டும். சரீர நலனுக்கு லௌகிக ஆகாரம் அவசியப் படுவதுபோல், கிருபையில் வளர்வதற்கும், ஆவிக்குரிய வாழ்விற்கும்கூட அன்றாட ஜெபம் அவசியமாயிருக்கிறது. ஜெபத்தில் தேவனைநோக்கிச் சிந்தனைகளை அடிக்கடி மேலெழும்பச் செய்வதற்கு நாம் நம்மையே பழக்கிக்கொள்ளவேண்டும். மனம் அலைபாய்ந்தால், அதைக் கட்டுப்படுத்திக் கொண்டுவரவேண்டும்; விடாமுயற்சியினால், பழக்கம் முடிவில் அதை எளிதாக்கிவிடும். கிறிஸ்துவிடமிருந்து நம்மைப் பிரித்துக்கொண்டு ஒரு விநாடியாகிலும் நாம் பாதுகாப்புடன் இருக்க இயலாது. அவர்தாமே ஏற்படுத்தி வைத்திருக்கிற நிபந்தனைகளைக் கைக்கொள்வதினால், ஒவ்வொரு அடியிலும் அவரது பிரசன்னத்தை நாம் உடையவர்களாய் இருக்கலாம்.

## ஆன்மீகத்தை அலுவலாக்குங்கள்

ஆன்மீகம் வாழ்வின் மாபெரும் அலுவலாக்கப்படவேண்டும். மற்றவை அனைத்தும் இதற்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும். நமது ஆத்தும, சரீர, ஆவிக்குரிய சக்திகள் அனைத்தும் கிறிஸ்தவப் போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும். பெலத்திற்கும், கிருபைக்கும் நாம் கிறிஸ்துவை நோக்கிப்பார்க்க வேண்டும்; இயேசு நமக்காக மரித்தது எவ்வளவு நிச்சயமோ அதுபோன்று வெற்றியை நாம் அடையலாம்...

கிறிஸ்துவின் சிலுவைக்கு மிகச்சமீபமாக நாம் வரவேண்டும். சிலுவையினடியில் மனந்திரும்புதலே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சமாதானத்திற்கான முதல் பாடமாகும். இயேசுவின் அன்பு—யார் அதைப் புரிந்துகொள்ளக்கூடும்? அளவிடற்கரிய, மென்மையான, தாயின் அன்பைவிடவும் சுயமறுப்புமிக்க அன்பு அது! ஒரு மனித ஆத்துமாவின் மதிப்பை நாம் அறிய வேண்டுமானால், உயிருள்ள விசுவாசத்துடன் சிலுவையின்மீது உற்றுநோக்கி, இவ்விதமாக நித்தியம் முழுமைக்கும் மீட்கப்பட்டோரின் பாடலாகவும், ஆராய்ச்சிப்பொருளாகவும் இருக்கப்போகிற பாடத்தை நாம் துவங்கவேண்டும். நமது நேரம் மற்றும் நமது தாலந்துகளின்

மதிப்பு, நமது மீட்புக்காகச் செலுத்தப்பட்டிருக்கிற கிரயத்தின் மேன்மையினால் மட்டுமே கணிக்கப்படும். அவருக்கே உரியதான நமது பற்றுறுதிகளையும், நமது சேவையையும் அவரிடமிருந்து பின்னிழுத்து அவரை நாம் வஞ்சிக்கும்போது, தேவனுக்கு நேராக எப்படிப்பட்ட நன்றியின்மையை நாம் வெளிப்படுத்துகிறோம்! நமக்காக அனைத்தையும் தியாகம் செய்தவருக்கு நம்மையே கொடுப்பது மட்டுமீறிய செயலா? “நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, … என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரலாம்” எனக் கிறிஸ்துவானவர் கொடுக்க முன்வரும் அழிவில்லா மகிமைகளுக்குமுன்பாக, உலகத்தின் சிநேகத்தை நாம் தெரிந்துகொள்ளலாமா?

### பரிசுத்தமாகுதல்—ஓர் முன்னேறிச்செல்லும் அனுபவம்

பரிசுத்தமாகுதல் என்பது ஒரு முன்னேறிச்செல்லும் அனுபவமாகும். அடுத்தடுத்துள்ள படிக்கட்டுகள் பேதுருவின் வார்த்தைகளில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. “இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதை யுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது” (2 பேதுரு 1:5-8). “ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் (2 பேதுரு 1:10,11)”

நாம் ஒருபோதும் விழுந்துபோவதில்லை என்ற நிச்சயத்தை நமக்களிக்கிற ஒரு பாதை இங்கே இருக்கிறது. கிறிஸ்தவ நற்பண்புகளை அடைவதில் கூட்டல் திட்டத்தின் அடிப்படையில் இவ்விதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள், தேவன் தமது ஆவியின் வரங்களை அவர்களுக்கு வழங்குவதில் பெருக்கல் திட்டத்தின் அடிப்படையில் செயல்படுவார் என்ற நிச்சயத்தைக் கொண்டிருக்கலாம்.

அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, “தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக்

கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது" என்று பேதுரு எழுதுகிறார். தெய்வீகக் கிருபையினால், வாஞ்சையுள்ள அனைவரும் பூமியிலிருந்து பரலோகத்திற்குப் பிரகாசமான படிக்கட்டுகளில் ஏறிச்சென்று, கடைசியில் "நித்திய மகிழ்ச்சி மற்றும் ஆனந்தக் களிப்பின் பாடல்களுடன்" வாசல்கள் வழியாய் தேவனுடைய நகரத்துக்குள் பிரவேசிப்பார்கள்.—Review and Herald, Nov. 15, 1887.

## கடுந்துன்பங்களின் மதிப்பு

"வாழ்வின் கடுந்துன்பங்கள், நமது குணத்தின் திருந்தாத முரட்டுத் தன்மையையும் அசுத்தங்களையும் நீக்குகின்ற தேவனின் பணியாட்களாகும். இத்தகைய பணியாட்கள் கற்களை வெட்டி, சரிசமமாகச் சதுரப்படுத்தி, உருவாக்கும்படி செதுக்கி, தேய்த்து, மெருகூட்டி, பளபளக்கச் செய்வது ஒரு வேதனைநிறைந்த அனுபவமாகும்; அரைக்கின்ற சக்கரத்திலே மட்டம்வரை அழுத்துவது மிகக் கடினமாகும்; ஆனால் பணிதீர்க்கப்பட்டு ஆயத்தமாக்கப்பட்ட கல்லானது, பரலோக ஆலயத்திலே அதின் இடத்தை நிரப்புவதற்கு ஆயத்தஞ்செய்யப்பட்டு கொண்டுவரப்படுகிறது. எஜமானர் கவனமுள்ள நிறைவான முழுமைவாய்ந்த ஒரு பணியைப் பயனற்ற ஒரு மூலப்பொருளிலிருந்து செய்கிறதில்லை. அவரது மதிப்புவாய்ந்த கற்களைமட்டுமே, அரண்மனைக்கு ஒத்தமுறையிலே, நேர்த்தியாகப் பளபளக்கச் செய்கிறார்."—Thoughts from the Mount of Blessing, p. 10.

## வல்லமையின் இரகசிய இருப்பிடம்

"மனிதர்களும், அவ்வப்பொழுது உன்னதமானவரின் மறைவிலும், சர்வவல்லவருடைய நிழலிலும் தங்களை செப்பனிடுவர். இப்படி தேவனோடு சில காலம் தங்கியதின் விளைவும் அவர்கள் செய்யும் நன்மையான செயல்களில் வெளிப்படுத்தப்படும். பின்னர் நம்பிக்கைத் தளர்ந்து, தொடர்பு அறுபடும்போது, அவர்கள் வாழ்க்கையின் செயல்கள் கறைபடுகின்றன. ஆனால் இயேசுவின் வாழ்க்கை ஒரு நிலையான விசுவாச வாழ்க்கையாக இருந்தது. தேவனோடு தொடர்ந்து இருந்துவந்த உறவால் அது தாங்கப்பட்டது. பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் அவர் செய்த சேவை தடங்கலின்றியும், தோல்வியின்றியும் இருந்தது.

மனுஷீகத்தையும், தெய்வீகத்தையும் இணைக்க, பரலோகத்தில் இருந்து வந்த வல்லமையால் நிறைக்கப்படும்வரை, மனிதனாக அவர் தேவனுடைய சிங்காசனத்தை நோக்கி வேண்டுதல் செய்தார். தேவனிடத்தில் ஜீவனைப் பெற்றுக்கொண்டு அந்த ஜீவனை மனிதருக்கு அளித்தார்."—Education, pp. 80, 81.

# 31

# கிறிஸ்துவுடன் ஐக்கியம்

உயிருள்ள விசுவாசத்தினால் கிறிஸ்துவுடனுள்ள ஐக்கியம் நிலைத்திருக்கக்கூடியதாக இருக்கிறது; மற்ற எந்த ஐக்கியமும் அழியக் கூடியது. நமது மீட்புக்காக ஓர் அளவற்ற விலையைச் செலுத்தி, கிறிஸ்து வானவர் முந்தி நம்மைத் தெரிந்துகொண்டார்; உண்மை விசுவாசி, கிறிஸ்துவை அனைத்திலும் முதன்மையும், கடைசியும், சிறந்தவருமாகத் தெரிந்துகொள்கிறார். ஆனால் இந்த ஐக்கியத்திற்கு நாம் ஏதோ ஒன்றைச் செலுத்தியாக வேண்டும். பெருமையுள்ள ஒரு நபர் நுழைய வேண்டியதான, முற்றிலும் சார்ந்திருத்தலின் ஐக்கியம் இதுவாகும். இந்த ஐக்கியத்தை அமைத்துக்கொள்ளும் யாவரும், கிறிஸ்துவின் பிராயச்சித்த இரத்தத்தைத் தங்களது தேவையாக உணரவேண்டும். அவர்களது இருதயம் மாற்றம் பெற்றிருக்கவேண்டும். அவர்கள் தங்களது சித்தத்தை தேவசித்தத்துக்கு ஒப்படைத்திருக்கவேண்டும். வெளிப்புறம் மற்றும் உட்புறத்திலான தடைகளுடன் ஒரு போராட்டம் இருக்கவே செய்யும். இணைத்துக் கொள்கிற ஒரு பனியைப்போல, துண்டித்துக்கொள்கிற ஒரு வேதனைமிக்கப் பணியும் இருந்தாக வேண்டும். கிறிஸ்துவுடனுள்ள ஐக்கியத்திற்குள் நாம் நுழைய வேண்டுமானால், பெருமை, சுயநலம், வீண் தற்பெருமை, லௌகிகம் —பாவம் அதன் அனைத்து வடிவங்களுடன் மேற்கொள்ளப்பட்டாக வேண்டும். கிறிஸ்தவ வாழ்வை அநேகர் மிகவும் துயர்நிறைந்த கடினமான ஒன்றாகக் காண்பதற்கும், அவர்கள் அடிக்கடி மாறும் இயல்புள்ளவர்களாக இருப்பதற்கும், நிலையற்றிருப்பதற்கும் காரணம்: அவர்கள் பேணிவந்திருக்கிற விக்கிரகங்களிடமிருந்து முதலாவது தங்களைத் துண்டித்துக் கொள்ளாமல், கிறிஸ்துவுடன் தங்களை இணைத்துக்கொள்ள முயற்சித்ததே ஆகும்.

கிறிஸ்துவுடன் ஐக்கியத்தை அமைத்துக்கொண்டபின்னர், ஊக்கமான ஜெபம் மற்றும் அயர்வுறாத முயற்சியினால் மட்டுமே அதைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும். நாம் எதிர்த்துநிற்க வேண்டும்; நாம் மறந்துவிடவேண்டும்; நாம் சுயத்தை ஜெயித்துவிடவேண்டும். கிறிஸ்துவின் கிருபையின்மூலமாக, தைரியத்தினால், விசுவாசத்தினால், விழிப்புடன் இருப்பதினால், நாம் வெற்றியைப் பெற்றுவிடலாம்.—Testimonies for the Church, Vol. 5, p. 231.

# பகுதி 4

# ஒளியில் நடத்தல்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 32 | கிருபையில் வளருதல் | 99 |
| 33 | பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரித்தல் | 104 |
| 34 | மெய்யான கிறிஸ்தவ அனுபவம் | 109 |
| 35 | சுயக்கட்டுப்பாடு | 112 |
| 36 | ஓர் உயிருள்ள அனுபவம் | 115 |
| 37 | கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் | 120 |
| 38 | வெளிச்சத்துக்காகக் கணக்கொப்புவித்தல் | 123 |
| 39 | நோக்கத்தில் அக்கறை கொள்ளுதல் | 124 |
| 40 | சித்தத்தைப் பயிற்சி செய்தல் | 128 |
| 41 | தெய்வீக வழிநடத்துதல் | 132 |
| 42 | பரிசுத்த ஆவியானவரின் அமைதியான செயல்பாடு | 133 |
| 43 | உள்வசிக்கும் கிறிஸ்து | 135 |
| 44 | சுய மறுப்பு | 138 |
| 45 | தேவன் ஏற்றுக்கொள்ளுகிற குணம் | 139 |
| 46 | கிறிஸ்துவின் நிலைத்திருக்கும் பிரசன்னம் | 142 |

## பகுதி 4

# ஒளியில் நடத்தல்

இரட்சகர் தமது இரத்தத்தால் கொள்ளப்பட்டவர்களிடம் திரும்பி, "சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?," என சொல்லிமுடியாத மென்மையோடும், பரிதாபத்தோடும் கேட்கிறார். சௌக்கியம் மற்றும் சமாதானத்துடன் நீங்கள் மேலெழும்ப அவர் கட்டளையிடுகிறார். நீங்கள் சொஸ்தமாகிவிட்டீர்கள் என்று உணர்வதற்காகக் காத்திருக்க வேண்டாம். இரட்சகரின் வார்த்தையை விசுவாசியுங்கள். கிறிஸ்துவின் பக்கம் உங்கள் சித்தத்தை வையுங்கள். அவரைச் சேவிக்கச் சித்தங் கொள்ளுங்கள், அவரது வார்த்தையின்படி செயலாற்றினால் நீங்கள் பெலனைப் பெறுவீர்கள். ஆத்துமாவையும் சரீரத்தையும் நெடுங்கால இன்பத்தோய்வினால் கட்டி வைத்திருந்த முதன்மையான வெறி உணர்ச்சி, தீய பழக்கம் எதுவாயிருப்பினும், அதிலிருந்து விடுவிக்க கிறிஸ்துவானவர் வல்லவரும், வாஞ்சையுள்ளவருமாய் இருக்கிறார். "அக்கிரமங்களினால் மரித்திருந்த" ஆத்துமாவுக்கு அவர் உயிரளிப்பார். பெலவீனம், இன்னல் மற்றும் பாவச் சங்கிலிகளினால் கட்டுண்டு கைதியாயிருப்பவரை அவர் விடுவிப்பார்.—Ministry of Healing, pp. 84, 85.

## 32

# கிருபையில் வளருதல்

"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்." வாலிபர்கள் இயேசுவில் வளரும்போது, ஆவிக்குரிய கிருபையிலும் அறிவிலும் வளருவது அவர்களது சிலாக்கியமாகும். வேதவாக்கியங்களை ஆர்வத்துடன் ஆராய்ந்து, பின்பு அதில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியம் மற்றும் நீதியின் வழிகளைப் பின்பற்றுவதன்மூலம் இயேசுவைப்பற்றி அதிகமதிகமாக நாம் அறிந்துகொள்ளலாம். எப்பொழுதும் கிருபையில் வளர்ந்து கொண்டிருக்கிறவர்கள் விசுவாசத்தில் உறுதியாயிருந்து, முன்னேறிச் செல்வார்கள்.

### உறுதித்தன்மைக்கு வளர்ச்சி அவசியம்

இயேசு கிறிஸ்துவின் சீஷனாயிருக்கத் தீர்மானித்திருக்கிற ஒவ்வொரு வாலிபனின் இருதயத்திலும், கிறிஸ்துவின் உடன்பணியாளனாக

இருப்பதற்கென்று உயர்ந்த கிறிஸ்தவத் தரத்தை அடைவதற்கான ஆர்வமிக்க வாஞ்சை இருக்கவேண்டும். தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாகக் குற்றமற்றவர்களாகப் படைக்கப்பட இருக்கிற கூட்டத்தாரில் ஒருவராயிருப்பதை தனது இலட்சியமாக்கிக்கொண்டால், அவன் தங்குதடையின்றி முன்னேறுவான். உறுதியாய் இருப்பதற்கான ஒரே வழி தெய்வீக வாழ்வில் அனுதினமும் வளர்வதே. சந்தேகங்கள் மற்றும் தடைகளுடன் எதிர்த்துநிற்க நேரிடும்போது, விசுவாசம் மேலும் பெருகும். அது அவைகளை மேற்கொள்ளும். விசுவாசம் உண்மையான பரிசுத்தமாகுதல் என்பது படிப்படியாக முன்னேறிச் செல்லக்கூடியதாகும். இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலும், கிருபையிலும் நீங்கள் வளர்ந்து கொண்டிருந்தால், கிறிஸ்துவின் குணத்தையும், வாழ்வையும் குறித்த அதிகமான அறிவை அடைவதற்கான ஒவ்வொரு சிலாக்கியத்தையும், வாய்ப்பையும் பயன்படுத்திக்கொள்வீர்கள்.

மீட்பரின் களங்கமற்ற வாழ்வு மற்றும் அவரது அளவற்ற அன்பைத் தியானித்து அவருடன் சிறப்பான நெருக்கத்துக்குள் நீங்கள் வரும்போது, இயேசுவிலுள்ள விசுவாசம் அதிகரிக்கும். தேவனுடைய சீஷனாயிருப்பதாகச் சொல்லிக்கொண்டு, அவரிடமிருந்து தள்ளியிருந்து, அவரது பரிசுத்த ஆவியினால் போஷிக்கப்பட்டு ஊட்டம்பெறாதிருப்பதைவிடவும் அதிகமாக வேறு எவ்விதத்திலும் அவரை நீங்கள் அவமதிக்கமுடியாது. நீங்கள் கிருபையில் வளரும்போது, ஆவிக்குரிய கூட்டங்களில் கலந்துகொள்ளப் பிரியப்படுவீர்கள். கிறிஸ்துவின் அன்பைக்குறித்து சபைக்குமுன்பாகச் சந்தோஷமாகச் சாட்சிபகருவீர்கள். தேவன் தமது கிருபையினால் வாலிபர்களை விவேகமுள்ளவர்களாக்கமுடியும்; பிள்ளைகளுக்கு அறிவையும் அனுபவத்தையும் அருளமுடியும். அனுதினமும் அவர்கள் கிருபையில் வளரக்கூடும். உங்கள் உணர்ச்சிகளினால் உங்கள் விசுவாசத்தை நீங்கள் அளந்துபார்க்கக்கூடாது.

## இருதயப் பரிசோதனை

உங்கள் இருதயத்தையும், தேவனுக்கு நேரான உங்களது பற்றுறுதிகளின் நிலையையும் கவனமாக ஆய்வு செய்யுங்கள். இன்றைய தினத்தின் அருமையான மணித்துளிகளைச் சுயத்தைப் பிரியப்படுத்தவும் எனது பொழுதுபோக்குக்காகவும் நான் செலவழித்தேனா? அல்லது பிறரைச் சந்தோஷப்படுத்தினேனா? என்னுடன் தொடர்பில் உள்ளவர்கள் தேவனிடம் அதிக பக்திகொள்வதற்கும், நித்திய காரியங்களை மதித்துப் போற்றுவதற்கும் நான் அவர்களுக்கு உதவி செய்தேனா? எனது பக்தியை என் இல்லத்துக்குள் கொண்டுவந்து, என் வார்த்தைகளிலும் என் நடக்கையிலும் கிறிஸ்துவின் கிருபையை வெளிப்படுத்தினேனா? எனது மரியாதைமிக்கக் கீழ்ப்படிதலினால்,

எனது பெற்றோரைக் கனம்பண்ணி, இவ்விதமாக ஐந்தாம் பிரமாணத்தைக் கைக்கொண்டேனா? எனது சின்னச் சின்ன அன்றாடக் கடமைகளை மகிழ்ச்சியாய் கையிலெடுத்து, உண்மையாய் அவைகளை நிறைவேற்றி, பிறரது பாரங்களைக் குறைப்பதற்கு என்னால் இயன்றதைச் செய்தேனா? என் உதடுகளைப் பொல்லாப்புக்கும், என் நாவைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொண்டேனா? நித்திய வாழ்வை எனக்கெட்டிய தூரத்தில் இருக்கச் செய்யும்படி தமது அருமையான ஜீவனைக் கொடுத்த எனது மீட்பர் கிறிஸ்துவை நான் கனம் பண்ணினேனா? என்று விபரமாய் ஆராயுங்கள்.

## விழித்திருந்து ஜெபியுங்கள்

அருமை வாலிபரே, எதிரியின் சோதனைகள் எந்த ரூபத்தில் வந்தாலும், அவற்றை எதிர்த்துநிற்பதற்கான பெலத்தையும், கிருபையையும் இயேசுவானவர் உங்களுக்கு அருளும்படிக்கு, ஒவ்வொரு நாளின் ஆரம்பத்திலும் ஊக்கமாக ஜெபிக்கச் தவறாதிருங்கள். விசுவாசத்தோடும், ஆத்தும பாரத்தோடும், ஊக்கமாகவும் நீங்கள் ஜெபித்தால், கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்பார். ஆனால் நீங்கள் விழித்திருக்கவும் வேண்டும் ஜெபிக்கவும் வேண்டும். “கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந் திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” (மத். 7:7–11) என்று இயேசு கூறியிருக்கிறார்.

குழந்தைகளும் வாலிபர்களும் தங்கள் பாரங்கள் மற்றும் குழப்பங்களுடன் இயேசுவண்டை வரலாம். அவரிடம் கொண்டுவரும் அவர்களது வேண்டுதல்களை அவர் மதித்து, அவர்களுக்குத் தேவைப்படும் காரியங்களை அவர்களுக்குக் கொடுப்பார் என்பதை அறிந்திடுங்கள். ஊக்கமாய் செயல்படுங்கள்; தீர்மானத்துடன் இருங்கள். தேவனுடைய வாக்குத்தத்தத்தை முன்வையுங்கள், பின்பு ஒரு சந்தேகமுமின்றி விசுவாசி யுங்கள். கர்த்தர் பதிலளிப்பார் என்று நீங்கள் நினைக்கும்முன்பாக விசேஷ உணர்ச்சிகளை உணரக் காத்திராதேயுங்கள். நீங்கள் கர்த்தரிடம் கேட்பதைப் பெற்றுக்கொள்கிறீர்கள் என்று விசுவாசிப்பதற்கு முன்பாகவே, கர்த்தர்

உங்களுக்காக இக்குறிப்பிட்ட வழியில்தான் கிரியைசெய்திடவேண்டும் என்று எல்லை வரையறுத்துக் கொள்ளாதிருங்கள்; ஆனால் அவருடைய வார்த்தையை நம்பி, உங்கள் ஜெபம் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற முழு விசுவாசத்துடன், கர்த்தருடைய கரங்களில் முழுக்காரியத்தையும் விட்டுவிடுங்கள். உங்களுக்கு நன்மையாயிருக்கும் என்று உங்கள் பரமபிதா காண்கிற சரியான வேளையில், சரியான வழியில் பதில் வந்துசேரும்; பின்பு உங்கள் ஜெபங்களின்படி வாழ்ந்திடுங்கள். தாழ்மையாய் நடந்து, தொடர்ந்து முன்னேறிச் செல்லுங்கள்.

“தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்”—சங். 84:11.

“கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சி யடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது”—சங். 34:9,10.

“உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள். தீமையை விட்டு விலகி, நன்மை செய்; சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. தீமைசெய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது. நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்க லாக்கிவிடுகிறார். நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமா யிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்”—சங். 34:13–18.

தீமை செய்தலை நிறுத்தவேண்டும், நன்மைசெய்யப் படிக்கவேண்டும் என்ற நிபந்தனைகளின்மீதான, வளஞ்செறிந்த, நிறைவான வாக்குத்தத்தங்கள் இங்கே இருக்கின்றன. அப்படியானால் யோசேப்பு, தானியேல், மோசேயைப் போல, உங்கள் வாழ்வின் இலட்சியத்தை உயர்வானதாக்கிக் கொள்ளுங்கள்; குணக்கட்டுமானத்தின் பெருமதிப்பைக் கருத்திற்கொண்டு, காலத்திற்கும் நித்தியத்திற்குமாகக் கட்டுமானம் செய்யுங்கள்…

நாம் பெலவீனரும், ஞானமற்றவர்களுமாய் இருக்கிறோம்; ஆனால் “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய

தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக்கோபு 1:5) என்று தேவன் கூறியிருக்கிறார். முழுவதும் அறிந்திருக்கக் கற்றுக்கொள்ளுங்கள், தேவனுக்கென்று சேவைசெய்ய அவர்மீதான உங்கள் பிடியை ஒருபோதும் விட்டுவிடாதிருங்கள், ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தின்மூலமாக நீங்கள் ஜெயங்கொள்ளுகிறவராக இருப்பீர்கள்.

## நன்மைக்கான வரையறையற்ற சாத்தியக்கூறுகள்

உங்களுக்காகச் செய்துகொள்கிற இவ்வேலையினால், உங்களோடு தொடர்புகொண்டிருக்கும் மற்ற அநேகர்மீதும் நீங்கள் செல்வாக்கை ஏற்படுத்துகிறீர்கள். ஏற்ற காலத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள், எவ்வளவு நன்மையானவை! கெட்டழிகிற பழக்கங்களில் வழுவிச்செல்லும் மனமுள்ள ஒருவனுக்கு, சரியான பாதையில் நடத்தும் தீர்மானமும், தைரியமும், நம்பிக்கையும் உள்ள வார்த்தை எவ்வளவு பெலன் அளிக்கிறதாயிருக்கிறது! நல்ல கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கு நீங்கள் கொண்டிருக்கும் உறுதியான நோக்கம் சரியான திசையில் ஆத்துமாக்களைச் சமநிலைப் படுத்தும் செல்வாக்கை உடையதாயிருக்கும்.

நீங்கள் செய்யக்கூடிய நன்மைக்கு எல்லையே இல்லை. தேவனுடைய வார்த்தையை உங்கள் வாழ்வின் சட்டமாக்கி, அதன் கட்டளைகளால் உங்கள் செயல்களைக் கட்டுப்படுத்தினால், உங்கள் நோக்கங்களும் கடுமுயற்சிகளும் பிறருக்கு சாபமாக அல்ல ஆசீர்வாதமாயிருக்கும்படி உங்கள் கடமையை நிறைவேற்றினால், உங்களுடைய முயற்சிகளுக்கு வெற்றி மகுடம் சூட்டும். தேவனோடுள்ள தொடர்பில் உங்களை வைத்திருக் கிறீர்கள்; பிறருக்கான ஒளியின் வாய்க்காலாக நீங்கள் மாறியிருக் கிறீர்கள். இயேசுவுக்கு உடன்பணியாளர்களானதால் நீங்கள் கனம்பண்ணப் பட்டிருக்கிறீர்கள்; இரட்சகரின் உதடுகளிலிருந்து, "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்ற பாக்கியமான ஆசியுரையைவிடவும் உயர்ந்த நன்மதிப்பை நீங்கள் பெற்றுவிடமுடியாது.—The Youth's Instructor, September 1, 1886.

## சுய அர்ப்பணிப்பு

பிளவுபட்ட சேவையை மீட்பர் ஏற்றுக்கொள்வதில்லை. சுய அர்ப் பணிப்பின் அர்த்தத்தை அனுதினமும் தேவனுடைய பணியாளன் கற்றுக் கொள்ளவேண்டும். அவன் தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து, அதன் அர்த்தத்தைக் கற்றுக்கொண்டு, அதன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இவ்விதமாக அவன் கிறிஸ்தவ மேன்மையின் தரத்தை அடையலாம். நாளுக்குநாள் தேவன் அவனுடன் கிரியைசெய்து, இறுதி சோதனையின்

காலத்தில் நிற்பதற்கென்று குணத்தைப் பூரணப்படுத்திக் கொண்டிருக்கிறார். சுவிசேஷம் விழுந்துபோன மனிதர்களுக்காக என்னசெய்யக்கூடும் என்பதைக் காட்டும்விதத்தில், மனிதர்கள் மற்றும் தூதர்களுக்குமுன்பாக ஓர் சிறப்புமிக்க செய்முறையை நாளுக்குநாள் விசுவாசியும் நிகழ்த்திக்கொண்டிருக்கிறார். —Gospel Workers, p. 113.

# 33

# பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரித்தல்

இடுக்கமான பாதையில் பயணிப்பவர்கள் தங்களது பயணத்தின் முடிவில் கிடைக்க இருக்கும் சந்தோஷம், மகிழ்ச்சியைக்குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களது முகத்தோற்றங்கள் அவ்வப்போது சோகமாய் இருந்தாலும், அவ்வப்போது பரிசுத்தமும், புனிதமுமான சந்தோஷத்தால் பிரகாசித்தன. அவர்கள் விசாலமான பாதையில் உள்ள கூட்டத்தாரைப் போல் உடுத்தியிருக்கவுமில்லை, அவர்களைப்போல் பேசவுமில்லை, அவர்களைப் போல் செயல்படவுமில்லை. அவர்களுக்கென்று ஒரு முன்மாதிரி கொடுக்கப் பட்டிருக்கிறது. துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமா யிருந்தவர் அவர்களுக்காக அப்பாதையைத் திறந்து, அவரே அதில் பயணித்திருக்கிறார். அவரது பின்னடியார்கள் அவரது அடிச்சுவடுகளைக் கண்டு, ஆறுதலும் மகிழ்ச்சியும் அடைகின்றனர். அவர் பத்திரமாய் கடந்து சென்றார்; அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றினால், அவர்களும் அப்படிச் செல்லமுடியும்.

### விசாலமான வழி

விசாலமான பாதையில் அனைவரும் தங்களைக்குறித்தும், தங்களது ஆடை மற்றும் வழியில் காணும் சிற்றின்பங்களைக்குறித்துமே எண்ணிக்கொண்டிருந்தனர். அவர்கள் மகிழ்ச்சியிலும், எக்களிப்பிலும் தங்கு தடையின்றி தோய்ந்திருந்து, தங்களது பயணத்தின் முடிவையும், பாதையின் முடிவிலுள்ள நிச்சயமான அழிவையுங்குறித்து எண்ணாதிருந்தனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் தங்களது அழிவை நெருங்கிக் கொண்டிருந்தனர்; ஆயினும் மதியீனமாக வெகுவேகத்துடன் விரைந்து கொண்டிருந்தனர். ஐயோ, அக்காட்சி எவ்வளவு பயங்கரமாக எனக்குத் தோன்றியது!

“உலகத்திற்கு மரித்துவிட்டோம்; எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. நீங்களும் ஆயத்தமாயிருங்கள்,” என்று தங்கள்மீது

எழுதியிருந்த அநேகர் இவ்விசாலமான சாலையில் பயணிப்பதை நான் கண்டேன். அவர்களது முகத்தோற்றங்களில் நான் கண்ட ஒரு வருத்தத்தின் நிழலைத்தவிர, மற்றெல்லாவற்றிலும் அப்படியே தங்களைச் சுற்றியிருந்த அனைத்து வீணரையும்போலவே தோன்றினர். அவர்களது உரையாடலும் அவர்களைச் சுற்றியிருந்த கவலையற்ற, உணர்வற்றவர்களுடையதைப் போன்றே இருந்தது. ஆனாலும் அவர்கள் அவ்வப்போது தங்களுடைய உடைகளின்மேல் இருந்த எழுத்துக்களைப் பெரும் திருப்தியுடன் சுட்டிக்காட்டி, தங்கள்மீதுள்ள அதே எழுத்துக்களைப் பெற்றுக்கொள்ளும்படி மற்றவர்களையும் அழைத்தனர். அவர்கள் விசாலமான வழியில் இருந்தனர், இருப்பினும் தாங்கள் இடுக்கமான பாதையில் பயணிக்கும் கூட்டத்தில் இருப்பதாகக் கூறிக்கொண்டனர், “நம்மிடையே எவ்வித்தியாசமும் இல்லை. நாம் அனைவரும் ஒன்றுபோலவே இருக்கிறோம்; நாம் ஒன்றுபோலவே உடுத்துகிறோம், பேசுகிறோம், செயல்படுகிறோம்” என்று அவர்களைச் சுற்றிலுமுள்ளவர்கள் கூறினர்.

ஓய்வுநாள் ஆசரிப்புக்காரர்கள் என்று கூறிக்கொண்ட சிலரின் பிரபஞ்சத்திற்கொத்த வேஷம் எனக்குக் காட்டப்பட்டது. ஓ, அது அவர்களது அறிக்கைக்கு அவமானமாகவும், ஆண்டவரின் செயல்நோக்கத்துக்கு அவமானமாகவும் இருக்கிறதை நான் கண்டேன். அவர்கள் தங்களது அறிக்கையைப் பொய்யாக்கி விடுகின்றனர். அவர்கள் தங்களை உலகத்தாரல்ல என்று நினைத்துக்கொள்கின்றனர், ஆனால் அவர்கள் உடையிலும், உரையாடலிலும், செயல்களிலும் ஏறக்குறைய அவர்களைப் போலவே இருக்கின்றனர்; வித்தியாசமே இல்லை. தேவனுடைய விரலால் எந்த நொடியிலும் தொடப்பட்டு, வேதனையின் படுக்கையில் விழுவதற்கேதுவான அவர்களது வறிய—மரிக்குந்தன்மையுள்ள சரீரங்களை அவர்கள் அலங்கரிக்கிறதையும் நான் கண்டேன். ஆ, பின்பு அவர்கள் தங்களது கடைசி மாற்றத்தை நெருங்குகையில், மரணத்துக்கேதுவான வேதனை அவர்களது சரீரங்களைத் துன்புறுத்துகிறது. “நான் மரிப்பதற்கு ஆயத்தமா? நியாயத்தீர்ப்பில் தேவனுக்கு முன்பாகத் தோன்றவும், மாபெரும் மறு ஆய்வைக் கடக்கவும் ஆயத்தமா?,” என்பதே அப்பொழுது எழும்பும் மாபெரும் கேள்வியாக இருக்கிறது.

அவர்களது சரீரங்களை அலங்கரிப்பதுகுறித்து அவர்கள் எப்படி உணருகின்றனர் என்று அப்பொழுது அவர்களிடம் கேளுங்கள். தேவனுக்கு முன் நிற்க ஆயத்தமாயிருப்பது எப்படி என்பதுபற்றி அவர்களுக்கு ஏதாவது உணர்வு இருந்திருக்குமானால், பின்னோக்கிச் சென்று, கடந்தகாலத்தில் மீண்டும் வாழக்கூடுமானால், தங்களது ஜீவியங்களை திருத்திக்கொள்வோம்

என்றும், உலகத்தின் மதியீனங்களையும், அதன் மாயையும், அதன் பெருமையையும் தவிர்த்து, தகுதியான வஸ்திரத்தால் சரீரத்தை அலங்கரித்து, தங்களைச் சுற்றியுள்ள அனைவருக்கும் நன்மாதிரியை வைத்திடுவோம் என்றும் உங்களிடம் சொல்லுவார்கள். தேவனுடைய மகிமைக்காக அவர்கள் வாழ்ந்திடுவார்கள்.

சுயமறுப்புமிக்க, தாழ்மையின் வாழ்வை நடத்துவது ஏன் மிகவும் கடினமானதாக இருக்கிறது? ஏனெனில் கிறிஸ்தவர்கள் எனக் கூறுபவர்கள் உலகத்திற்கு மரிக்கவில்லை. மரித்தபின்னர் வாழ்வது எளிதாக இருக்கும். ஆனால் அநேகர் எகிப்தின் கீரைகள் மற்றும் வெங்காயங்களுக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். இயன்றமட்டும் உலகத்தைப்போலவே செய்வதற்கும், உடுத்துவதற்குமான மனநிலை அவர்களிடம் இருக்கிறது, இருப்பினும் பரலோகம் செல்லவும் நினைக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் வேறொருவழியாக மேலேறுகின்றனர். அவர்கள் இடுக்கமான வாசல் மற்றும் நெருக்கமான வழியின்முலமாகப் பிரவேசிப்பதில்லை.

அப்படிப்பட்டவர்களுக்கு மன்னிப்பு இல்லை. அநேகர் செல்வாக்கு அடைவதற்காக உலகத்தைப்போல உடுத்துகின்றனர். ஆனால் அவர்கள் இங்கே வருத்தமான, சாவுக்கேதுவான பிழையைச் செய்கின்றனர். அவர்கள் உண்மையான இரட்சிக்கும் செல்வாக்கை ஏற்படுத்தவேண்டு மானால், தங்களது அறிக்கையின்படி வாழ்ந்துகாட்டட்டும். நீதியுள்ள கிரியைகளினால் தங்களது விசுவாசத்தைக் காண்பித்து, கிறிஸ்தவத்துக்கும் உலகத்துக்கும் இடையிலான வித்தியாசத்தைப் பெரிதெனக் காட்டட்டும். வார்த்தைகளும், உடையும், செயல்களும் தேவனுக்காகப் பேசவேண்டும் என்பதை நான் கண்டேன். அப்பொழுது ஒரு பரிசுத்த செல்வாக்கு அனைவரின்மீதும் பரவும், அவர்கள் இயேசுவோடிருந்தவர்கள் என்று அனைவரும் அறிந்துகொள்வார்கள். நாம் அறிக்கையிடுகிற சத்தியம் பரிசுத்தமான செல்வாக்கைப் பெற்றிருக்கிறது என்பதையும், கிறிஸ்துவின் வருகையின்மீதுள்ள விசுவாசம் ஒரு ஆண் அல்லது பெண்ணின் குணத்தில் பாதிப்புண்டாக்குகிறது என்பதையும் அவிசுவாசிகள் காண்பார்கள். யாராகிலும் தங்களுடைய செல்வாக்கு சத்தியத்திற்குச் சாதகமாகப் பேசிடவேண்டுமென விரும்பினால், அவர்கள் அதை வாழ்ந்து காண்பித்து, இவ்விதமாகத் தாழ்மையின் முன்மாதிரியானவரைப் பிரதிபலிக்கட்டும்.

## இயேசுவின் வருகைக்கான ஆயத்தம்

தேவன் பெருமையை வெறுக்கிறார், அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள்

அவர்களைச் சுட்டெரிக்கும் என்பதை நான் கண்டேன். மூன்றாம் தூதனின் தூதை விசுவாசிப்பதாகக் கூறும் அநேகரது இருதயங்களில் அது இன்னும் புளித்தமாவைப்போலக் கிரியைசெய்து, அவர்களது பெருமையையும், சுயநலத்தையும், பேராசையையும், உலக சிநேகத்தையும் சுத்திகரிக்க வேண்டியதிருக்கிறது.

இயேசு வரப்போகிறார், பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரித்திருக்கிற ஜனத்தை அவர் காண்பாரா? தமக்கென்று சுத்திகரித்துக்கொண்ட தமது ஜனம் என்று அவர்களை அங்கீகரிப்பாரா? ஓ, இல்லை. தூய்மையும் பரிசுத்தமு மானவர்களை மட்டுமே அவர் தம்முடையவர்களாக அங்கீகரிப்பார். சுத்தி கரிக்கப்பட்டு, பாடுகளின்மூலமாக வெண்மையாக்கப்பட்டவர்களையும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தங்களைக் காத்துக்கொண்டவர்களையுமே அவர் தமக்குச் சொந்தமானவர்களாக்கிக்கொள்ளுவார்.

தேவஜனங்கள் பிரபஞ்சத்திற்கொத்த வேஷந்தரித்து, சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ள இயேசுவின் சீடர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களில் அநேகர், தங்களுக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையிலே, பெயரில் தவிர வேறு எதிலும் வித்தியாசமில்லாதிருந்த அச்சந்தரும் உண்மையை நான் கண்டபோது, என் ஆத்துமா ஆழ்ந்த வேதனையுற்றது. இயேசுவானவர் காயப்படுத்தப்பட்டு, பகிரங்கமான அவமானத்துக்குள்ளாக்கப்பட்டதை நான் கண்டேன். தேவஜனங்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் உலகத்தை நேசித்து, அதன் ஆவியில் பங்குபெறுவதையும், அதன் பாணிகளைப் பின்பற்றுகிறதையும் கண்ட தூதுன், “அவர் உங்கள் பங்கை நகரத்திற்கு வெளியே மாயக்காரரோடும், அவிசுவாசிகளோடும் நியமிக்காதபடிக்கு வெட்டிவிடுங்கள்! வெட்டிவிடுங்கள்! உங்களது வெற்று அறிக்கை பெரும் வேதனையை மட்டுமே உங்களுக்கு உண்டாக்கும்; அவரது சித்தத்தை நீங்கள் அறிந்திருந்தும் அதைச் செய்யாது போனபடியால், உங்களது தண்டனை மிகவும் பெரிதாயிருக்கும்” என்று வருத்தத்துடன் கூறினான்.

மூன்றாம் தூதனின் தூதை விசுவாசிப்பதாக அறிக்கையிடுபவர்கள், அற்பத்தனம், வேடிக்கைப்பேச்சு மற்றும் விளையாட்டுத்தனத்தினால் தேவனுடைய செயல்நோக்கத்தைப் பெருமளவில் காயப்படுத்திவிடுகின்றனர். இத்தீமை நமது எல்லா நிலைகளிலும் இருப்பதாக எனக்குக் காட்டப்பட்டது. கர்த்தருக்குமுன்பாகத் தாழ்மை அங்கே அவசியப்படுகிறது என்பதை நான் கண்டேன். தேவனுடைய இஸ்ரவேல், வஸ்திரத்தையல்ல இருதயத்தைக் கிழிக்கவேண்டும். சிறுபிள்ளைக்கொப்பான எளிமை அரிதாகக் காணப்படு கிறது; தேவனுடைய விருப்பமின்மையைக் காட்டிலும் மனிதனின் அங்கீகாரமே பெரிதாக எண்ணப்படுகிறது.

"எளிதில் அழியுந்தன்மையுள்ள வாழ்வின் நூல் அறுந்து, பாதுகாப்பிழந்தவராக நீங்கள் படுகுழியில் கிடந்து, நியாயத்தீர்ப்புக்கான ஆயத்தமற்றவராக இருக்கையில், அவர் நியாயத்தீர்ப்பில் உங்களைச் சந்திக்காதபடிக்கு, உங்களது இருதயத்தை ஒழுங்குபடுத்துங்கள். அல்லது நீங்கள் உங்களது படுக்கையைப் பாதாளத்தில் போடாமல் இருக்கும்போதே தேவனோடு சீக்கிரமாகச் சமாதானமாகி, உலகத்திலிருந்து உங்களை வேறுபடுத்திக்கொள்ளாத பட்சத்தில், உங்கள் இருதயங்கள் கடினமாகும்; ஆயத்தமாக இருப்பதாகக் கருதப்பட்ட ஒரு போலியான ஆதாரத்தின்மேல் நீங்கள் சார்ந்திருப்பீர்கள்; நன்கு அடித்தளமிடப்பட்ட நம்பிக்கையைத் தக்கவைத்துக்கொள்வதற்கு வெகுதாமதமானபிறகே உங்கள் குற்றத்தைக் கண்டுணர்வீர்கள்" என்று தூதன் கூறினான்.—Testimonies for the Church" Vol. 1, pp. 127–134.

### இலாபம் என்ன?

ஆழ்ந்து சிந்திக்கும்படி கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். அனைத்தையும் நேர்மையாகக் கணக்கிடுங்கள். ஒரு தராசில் இயேசுவை அமர்த்துவோம். அதின் பொருள் நித்திய பொக்கிஷம், நித்திய ஜீவன், சத்தியம், பரலோகம், மீட்கப்பட்ட ஆத்துமாக்களின்மூலமாக கிறிஸ்துவிலே நாம் கொள்ளும் சந்தோஷம் ஆகியவையாகும். அடுத்த தராசிலே உலகத்தினின்று கிடைக்கும் அனைத்து கவர்ச்சிகளையும் வையுங்கள். ஒரு தராசிலே உங்களது சொந்த ஆத்துமாவின் இழப்பையும் நீங்கள் ஊழியம் செய்திருந்தால் வந்திருக்கக்கூடிய அனைத்து ஆத்துமாக்களின் இழப்பையும் வையுங்கள். காலத்திற்காகவும் நித்தியத்திற்காகவும் நிறுத்துப்பாருங்கள். இவ்வாறு நீங்கள் ஈடுபட்டிருக்கையில், கிறிஸ்து உங்களைப் பார்த்து: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" என்று கூறுகிறார்.

நாம் இம்மைக்குரியதை விட்டுவிட்டு பரத்திற்குரியதை தெரிந்து கொள்ளவேண்டுமென்று தேவன் வாஞ்சிக்கிறார். பரலோகத்தில் முதலீடு செய்யும் சாத்தியக்கூறுகளை அவர் நமக்குமுன் திறந்துவைக்கிறார். நமது மேலான—உயர்வான நோக்கங்களுக்கு ஊக்கமளித்து உற்சாகமூட்டி அதிக விருப்பத்தோடு நாம் தெரிவுசெய்யும் காரியங்களுக்குப் பாதுகாப் பளிக்கிறார். "புருஷனைப் பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இவ்வுலகின் ஐசுவரியங்கள் பூச்சியினாலும் துருவினாலும் கெடுத்துப்போடப் படும். பொக்கிஷம் அடித்துச் செல்லப்படும்போது, கிறிஸ்துவின் பின்னடி

யார்கள் பரலோகப் பொக்கிஷத்தைக்குறித்தும் அழிந்துபோகாத ஐசுவரியங்களைக்குறித்தும் மகிழ்ச்சியடைந்து களிகூரலாம்.— Christ's Object Lessons, p. 374.

## 34

# மெய்யான கிறிஸ்தவ அனுபவம்

வாலிபர்களிடத்தில் ஒரு நிறைவான மாற்றம், ஒரு முழுமையான மாற்றம் இல்லாவிடில், அவர்கள் பரலோகத்தைக்குறித்த நம்பிக்கையை இழப்பார்கள் என்று நான் கண்டேன். எனக்குக் காண்பிக்கப்பட்டதிலிருந்து, சமயம் மற்றும் சத்தியம்குறித்து அறிக்கையிடுகிற வாலிபர்களில் பாதிக்கு அதிகமானபேராகிலும், உண்மையாய் மனமாற்றம் அடையவில்லை. அவர்கள் மனமாற்றம் அடைந்திருந்தால், தேவனுடைய மகிமைக்கென்று கனிகொடுப்பார்கள். உண்மையான அஸ்திபாரமில்லாத, நம்பிக்கையென்று கருதப்பட்ட ஒன்றின்மீது அநேகர் சாய்ந்திருக்கின்றனர். ஊற்று சுத்திகரிக்கப் படவில்லை, ஆகையால் அவ்வூற்றிலிருந்து புறப்படும் சிற்றோடைகள் தூய்மையானதாக இல்லை. ஊற்றைச் சுத்தம்பண்ணுங்கள், சிற்றோடைகள் தூய்மையாயிருக்கும்.

இருதயம் சரியாயிருந்தால், உங்கள் வார்த்தைகளும், உங்கள் உடையும், உங்கள் செயல்கள் அனைத்தும் சரியாயிருக்கும். மெய்யான தேவபக்தி குறைவுபடுகிறது. ஒரு அக்கறையற்ற, அற்பத்தனமான, ஜெபமற்ற நபரைக் கிறிஸ்தவன் என்று ஏற்றுக்கொண்டு, எனது எஜமானை அதிகமாகக் கனவீனம் பண்ணமாட்டேன். இல்லை; ஒரு கிறிஸ்தவன் தன்னைப் பற்றித்தொடரும் பாவங்களின்மீதும், தனது வெறி உணர்ச்சிகளின்மீதும் வெற்றிகொள்ளுகிறான். பாவநோய் கொண்ட ஆத்துமாவுக்கு ஒரு பரிகாரம் உண்டு. அந்தப் பரிகாரம் இயேசுவில் உண்டு. அருமையான இரட்சகர்! மிகவும் பெலவீனமானோர்க்கு அவரது கிருபை போதுமானது. மிகவும் பெலமுள்ளோரும் அவரது கிருபையைப் பெறவேண்டும் அல்லது அழியவேண்டும்.

### இரட்சிக்கும் கிருபை

இந்தக் கிருபையை எப்படி அடையமுடியும் என்பதை நான் கண்டேன். உங்கள் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, “தேவனே, சுத்த இருதயத்தை என்னில் சிருஷ்டியும்; நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே

புதுப்பியும்,” என்று தனிமையில் அங்கே தேவனிடம் கெஞ்சுங்கள். ஊக்கத் தோடும், உண்மையோடும் ஜெபியுங்கள். ஆர்வமிக்க ஜெபத்திற்கு அதிக பலனுண்டு. யாக்கோபைப்போல, ஜெபத்தில் போராடுங்கள். அழுது புலம்புங்கள். தோட்டத்தில் இயேசுவானவர் இரத்தத்தின் பெருந்துளிகளாக வியர்வை சிந்தினார்; நீங்கள் முயற்சி எடுக்கவேண்டும். தேவனுக்குள் நீங்கள் பெலப்படுவதை உணரும்வரை உங்கள் உள்ளறையைவிட்டு வெளியேறாதிருங்கள்; பின்பு பாருங்கள், நீங்கள் எவ்வளவுக்கு விழித்திருந்து ஜெபிக்கிறீர்களோ, அவ்வளவுக்கு இத்தகைய தீமையான, பற்றித்தொடரும் பாவங்களைக் கீழ்ப்படுத்தி வைக்கலாம். தேவனுடைய கிருபை உங்களில் வெளிப்படக்கூடும், வெளிப்படும்.

நான் உங்களை எச்சரிப்பதற்குத் தவிர்ப்பதை தேவன் தடை பண்ணுவாராக. இளம் நண்பர்களே, உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரைத் தேடுங்கள். வைராக்கியத்துடன் வாருங்கள், தேவனுடைய உதவியின்றி அழிந்துபோவீர்கள் என்பதை நீங்கள் உண்மையாய் உணரும்போது, மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, நீங்கள் அவரை வாஞ்சித்துக் கதறும்போது, கர்த்தர் உங்களை விரைவாய் பெலப்படுத்துவார். அப்பொழுது உங்கள் சமாதானம் எல்லாப் புத்திக்கும் மேலானதாக இருக்கும். நீங்கள் இரட்சிப்பை எதிர்பார்த்தால், ஜெபிக்கவேண்டும். நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் ஜெபங்களில் அவசரமும், அக்கறையின்மையும் இருக்கவேண்டாம். உங்களில் ஆவியின் கனிகள் வாசம்பண்ணுவதற்கும், நீங்கள் உலகத்தில் சுடர்களைப்போலப் பிரகாசிப்பதற்கும் ஒரு முழுமையான சீர்திருத்தத்தை உங்களில் நடப்பிக்கும்படி தேவனிடம் மன்றாடுங்கள். தேவனுடைய செயல்நோக்கத்துக்குத் தடை யாகவோ அல்லது சாபமாகவோ இராதேயுங்கள்; நீங்கள் ஒரு உதவியாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கலாம். முழுமையான, இலவசமான இரட்சிப்பை நீங்கள் அனுபவிக்கமுடியாது என்று சாத்தான் உங்களிடமும் சொல்கிறானா? அவனை நம்பாதேயுங்கள்.

## முதல் அடிகள்

தேவனுடைய ஆவியானவரின் ஆழ்ந்த அசைவாடுதல்களை அனுபவிப்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் சிலாக்கியமாகும். ஓர் இனிமையான, பரலோக சமாதானம் சிந்தையை ஆட்கொள்ளும். தேவனையும் பரலோகத் தையுங்குறித்துத் தியானிக்க நீங்கள் விரும்புவீர்கள். அவரது வார்த்தை யின் மகிமையான வாக்குத்தத்தங்களை நுகர்ந்து மகிழ்வீர்கள். ஆனால் கிறிஸ்தவ ஓட்டத்தை நீங்கள் தொடங்கியிருக்கிறீர்கள் என்பதை முதலில் அறிந்துகொள்ளுங்கள். நித்திய வாழ்வுக்கான பாதையில் முதல் அடிகள்

எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்துகொள்ளுங்கள். மோசம் போகாதிருங்கள். ஆன்மிகம் என்றால் என்னவென்பதை உங்களில் அநேகர் அறிந்திருக்கவில்லை என்பதை நான் அறிந்திருக்கிறபடியால், ஆம், நான் அஞ்சுகிறேன். நீங்கள் ஏதோ உற்சாகத்தை, ஏதோ உணர்ச்சியை உணர்ந்திருக்கிறீர்கள்; ஆனால் பாவத்தை அதன் வெங்கொடுமையில் நீங்கள் ஒருபோதும் கண்டிருக்கவில்லை. உங்களது அதமான நிலைமையை உணர்ந்து, உங்கள் பொல்லாத வழிகளிலிருந்து கசப்பான வருத்தத்துடன் ஒருபோதும் திரும்பவில்லை. நீங்கள் ஒருபோதும் உலகத்திற்கு மரிக்கவில்லை. அதன் சிற்றின்பங்களை நீங்கள் இன்னும் நேசிக்கிறீர்கள்; லௌகிகக் காரியங்கள்பற்றிய உரையாடலில் ஈடுபட விரும்புகிறீர்கள். ஆனால் தேவனுடைய சத்தியம் அறிமுகப்படுத்தப்படும்போது, சொல்வதற்கு உங்களிடம் ஒன்றுமில்லை. ஏன் அவ்வளவு அமைதி! லௌகிகக் காரியங்களை மிக அதிகமாகப் பேசிடும் நீங்கள், உங்களது முழு ஆத்துமாவையும் ஈடுபடுத்தவேண்டிய ஒரு பாடப்பொருளை—மிகுந்த அக்கறைக்குரிய பாடப்பொருளைக்குறித்து ஏன் மிகுந்த மௌனம் சாதிக்கிறீர்கள்? தேவனுடைய சத்தியம் உங்களில் வாசம்பண்ணவில்லை.—Testimonies for the Church, Vol. 1, pp. 158, 159.

## தேவனுடைய ஆசீர்வாதத்துக்கான வழியைத் திறந்துவிடுதல்

நலிந்துகொண்டிருக்கிற மற்றும் மனந்திரும்பாத ஒரு சபைக் கூட்டத்தாரின்மீது கர்த்தர் தம்முடைய ஆவியை ஊற்றுவதற்கேதுவாக, தேவஜனங்கள் ஒவ்வொரு தடையையும் நீக்குவதன்மூலம் வழியைத் தெளிவாக்குவதைத் தவிர சாத்தான் மிக அதிகமாக அஞ்சுகிறது வேறெதுவுமில்லை. சாத்தான் தனது வழியைக் கைக்கொண்டால், காலத்தின் முடிவில் மற்றொரு பெரிய அல்லது சிறிய எழுப்புதல் ஒருபோதும் ஏற்படாது. அவனது தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. அவனது வல்லமைக்கு எதிர்த்து நிற்பது சாத்தியமே. ஆவியானவருக்கு வழி ஆயத்தமாக்கப்படும்பொழுது, ஆசீர்வாதம் வந்துசேரும். பூமியின்மீது மழை வராதபடிக்கு வானத்தின் பலகணிகளை அடைத்துப்போட சாத்தானால் கூடும்; தேவஜனத்தின்மீது ஆசீர்வாதமழை பொழிந்திடுவதை ஒருநாளும் அவனால் தடைசெய்ய முடியாது. துன்மார்க்கரும், பிசாசுகளும் தேவனுடைய பணியைத் தடைசெய்யவோ அல்லது அவரது ஜனங்களின் சபைகளிலிருந்து அவரது பிரசன்னத்தை அகற்றிப்போடவோ முடியாது. தேவஜனங்கள் இளகின நொறுங்குண்ட இருதயங்களுடன் அறிக்கையிட்டுத் தங்களுடைய பாவங்களை நீக்கிப்போட்டால், விசுவாசத்தில் அவரது வாக்குத்தத்தங்களை உரிமைபாராட்டிக்கொள்வார்கள்.—Review and Herald, March 22, 1887.

# 35

# சுயக்கட்டுப்பாடு

"பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்" நீதி. 16:32. அவன் மனிதன் சந்திக்கவேண்டிய பலமிக்க எதிரியை —சுயத்தை ஜெயித்திருக்கிறான். ஒரு கிறிஸ்தவனது உயர்பண்பின் மிக உயர்ந்த அடையாளம் தன்னடக்கம் ஆகும். அவதூறு எனும் புயலின் மத்தியில் அசையாமல் நிற்கக்கூடியவன் தேவனுடைய வீரர்களில் ஒருவனாக இருக்கிறான்.

மனதை அடக்குதல் என்பது சுயத்தைக் கட்டுப்பாட்டின்கீழ் வைப்பது, தீமைக்கு எதிர்த்து நிற்பது; தேவனுடைய மாபெரும் நீதியின் படித்தரத்தினால் ஒவ்வொரு வார்த்தையையும், செயலையும் ஒழுங்குப்படுத்திக்கொள்வது ஆகும். தன் மனதை அடக்கக் கற்றுக்கொண்டவன், நமக்கு அன்றாடம் நேரிடுகிற அவமதிப்புகள், ஏமாற்றங்கள், தொந்தரவுகள் ஆகியவற்றிற்கு மேலாக உயர்ந்து நிற்பான். இவைகள் அவனது மனதின்மீது இருளை வீசியெறிவது நின்றுபோகும்.

தெய்வீகக் கிருபையினால் கட்டுப்படுத்தப்பட்டுப் பரிசுத்தமாக்கப்பட்ட பகுத்தறிவின் ராஜரீக வல்லமையானது மனிதர்களின் ஜீவியங்களில் ஆளுகைசெய்ய வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கம் ஆகும். தன் மனதை அடக்குகிறவன் இந்த வல்லமையை உடையவனாயிருக்கிறான்.

### சுயக்கட்டுப்பாட்டின் வல்லமை

சிறுபிள்ளை மற்றும் வாலிபப் பருவங்களில், குணம் எளிதில் பாதிப்படையக் கூடியதாக இருக்கிறது. சுயக்கட்டுப்பாட்டின் வல்லமையை அப்பொழுதே முயன்று பெற்றிடவேண்டும். நெருப்பில் குளிர்காயுமிடம் மற்றும் குடும்ப உணவு மேஜைகளில் செயல்படுத்தப்படும் செல்வாக்குகள் நித்தியத்தைப்போல நீடிக்கிற விளைவுகளை உண்டுபண்ணுகின்றன. வாழ்க்கைப்போராட்டத்தில் ஒரு மனிதன் வெற்றிசிறப்பானா அல்லது முறியடிக்கப்படுவானா என்பதைத் தீர்மானிப்பது, வேறெந்த இயல்பான வரத்தைக்காட்டிலும், ஆரம்ப வருடங்களில் நிலைகொண்டுவிட்ட பழக்கங்களே ஆகும்.

பேச்சு நடைமுறையில், முதியோரும் வாலிபரும், துடுக்கான, பொறுமையற்ற சொற்களைப் பேசுவதைத் தவறாகவே கருதாமல் அற்பமாய்

விட்டுவிட மிகவும் ஆயத்தமாயிருக்கின்றனர். “நான் நிதானமற்று இருந்தேன், உண்மையிலே நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை” என்று வாதாடுவதைப் போதுமான நொண்டிச்சாக்காக அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் தேவனுடைய வார்த்தை அதை இலேசானதாக விட்டுவிடவில்லை. “தன் வார்த்தைகளில் பதறுகிற மனுஷனைக் கண்டாயானால், அவனை நம்புவதைப்பார்க்கிலும் மூடனை நம்பலாம்”–நீதி. 29:20. “தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்” (நீதி 25:28) என்று வேதம் கூறுகிறது.

கட்டுப்பாடற்ற கோபமே, வாழ்வின் பெரும்பங்காகிய தொந்தரவுகள், இதய வேதனைகள் மற்றும் எரிச்சல்கள் ஆகியவற்றிற்குக் காரணமாக இருக்கிறது. துடுக்கான, தீவிரமான, அக்கறையற்ற ஒரு விநாடியின் வார்த்தைகள், வாழ்நாள் முழுதும் மனந்திரும்பினாலும் தீர்வுகாண முடியாத அளவுக்குத் தீமையை உண்டுபண்ணிவிடும். சகாயமும் சுகமும் கொண்டு வந்திருக்க வேண்டியவர்களின் கடுப்பான, துடுக்கான வார்த்தைகளினால் உடைபட்ட இருதயங்கள், பிரிக்கப்பட்ட நண்பர்கள், சிதைவுற்ற வாழ்க்கைகள் தான் எத்தனை!

மிகுதியான வேலை சில வேளைகளில் சுயக்கட்டுப்பாட்டை இழப்பதற்குக் காரணமாயிருக்கிறது. ஆனால் கர்த்தர் ஒருபோதும் துரித கதியிலான, சிக்கலான இயக்கங்களைக் கட்டாயப்படுத்துகிறதில்லை. இரக்கமுள்ள பரமபிதாவானவர் தங்கள்மீது வைக்காத பாரங்களை அநேகர் தங்களுக்கென சேர்த்துக்கொள்கின்றனர். அவர்கள் செய்யவேண்டுமென்று அவர் ஒருபோதும் திட்டம்பண்ணியிராத கடமைகள் ஒருவரையொருவர் கட்டுமீறித் துரத்துகிறது. நாம் அநேக பாரங்களை இழுத்துப்போட்டுக்கொண்டு, மனச்சோர்வும், மூளைச்சோர்வும் உள்ளவர்களாகி, சினங்கொண்டு, எரிச்சலடைந்து, வசைபாடுகிறவர்களாகும்போது, தேவநாமத்தை மகிமைப் படுத்தவில்லை என்பதை உணரவேண்டுமென்று அவர் விரும்புகிறார். கர்த்தர் நமக்குக் கொடுக்கிற பொறுப்புகளைமாத்திரம், அவரில் நம்பிக்கைவைத்துச் செயல்படுத்தவேண்டும், இவ்விதமாக நமது இருதயங்களை தூய்மையும், இனிமையும், அனுதாபமிக்கதாகவும் காத்துக்கொள்ளவேண்டும்.

## மனதை அடக்குதல்

மௌனம் சாதிப்பதில் ஆச்சரியமான வல்லமை இருக்கிறது. பொறுமையற்ற வார்த்தைகள் உங்களிடத்தில் பேசப்படும்போது, பதிலுக்குப் பதில் செய்யாதிருங்கள். கோபமுள்ளவரிடம் மாறுத்தரமாகப் பேசப்படும் வார்த்தைகள் வழக்கமாக ஒரு சாட்டைபோல் செயல்பட்டு, கோபத்தைக்

கொடுஞ்சீற்றமாகத் தூண்டிவிடுகிறது. ஆனால் மௌனத்தால் சந்திக்கப்படும் கோபம் சீக்கிரத்தில் அடங்கிவிடும். கிறிஸ்தவன் தனது நாவிற்குக் கடிவாளமிட்டு, கடுமையான, பொறுமையற்ற வார்த்தைகளைப் பேசாதிருக்க உறுதியாகத் தீர்மானிப்பானாக. கடிவாளமிடப்பட்ட நாவுடன், கடக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிற பொறுமைக்கான ஒவ்வொரு பரீட்சையிலும் அவன் வெற்றியாளனாக விளங்கலாம்.

மனிதன் தன் சொந்த பெலத்தினால், தன் மனதை அடக்கமுடியாது. ஆகிலும் கிறிஸ்துவின்மூலமாக, அவன் இச்சையடக்கத்தை அடைந்துவிடலாம். அவருடைய பெலத்தினால், அவன் தனது எண்ணங்களையும், வார்த்தை களையும் தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படுத்தும்படிக் கொண்டுவரலாம். கிறிஸ்துவின் மார்க்கம் உணர்ச்சிகளைப் பகுத்தறிவின் கட்டுப்பாட்டிற்குக்கீழ் கொண்டுவந்து, நாவை அடக்கியாளச் செய்கிறது. அதனுடைய செல்வாக் கின்கீழ், துடுக்கான கோபம் அடக்கப்படுகிறது, இருதயம் பொறுமையினாலும், இரக்கத்தினாலும் நிரப்பப்படுகிறது.

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் பெற்றிருப்பவரை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். பொறுமையையும், அமைதியையும் வெளிப்படுத்துவதற்குப் பெரும்பாலும் தவறினாலும், போராட்டத்தை விட்டுவிடாதிருங்கள். ஒவ்வொரு சினமூட்டுதலின்கீழும் பொறுமையா யிருப்பதற்கு இம்முறை மிக உறுதியாக மறுபடியும் தீர்மானம் செய்யுங்கள். தெய்வீக முன்மாதிரியானவரைவிட்டு ஒருபோதும் உங்கள் கண்களை விலக்கிக் கொள்ளாதிருங்கள்.—Review and Herald, October 31, 1907.

## பாவஞ்செய்வதற்குச் சாக்குப்போக்கு இல்லை

தவறான எந்த ஒரு செயலிற்கும் சோதனைக்காரனின் பிரதிநிதியைக் காரணமாகவைத்து சாக்குப்போக்குச் சொல்லப்படக்கூடாது. கிறிஸ்துவின் அடியார்கள் என்று கூறிக்கொள்ளுபவர்கள் தங்களுடைய குணத்தின் குறைபாட்டிற்கு சாக்குப்போக்குகள் கூறுவதைக் கேட்கும்போது, சாத்தான் வெற்றிமுழக்கமிடுகிறான். இந்தச் சாக்குப்போக்குகள்தான் பாவத்திற்கு நடத்துகின்றன. பாவத்திற்குச் சாக்குப்போக்கு இல்லை. பாவத்திற்காக மனம்வருந்தி தேவனில் நம்பிக்கைவைக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பரிசுத்தமான ஒரு குணத்திற்கும் கிறிஸ்துவைப்போன்ற ஒரு வாழ்க்கைக்கும் பாதை உள்ளது.—Desire of Ages, p. 311.

36

# ஓர் உயிருள்ள அனுபவம்

கிறிஸ்து எனும் ஈவின்மூலமாகத் தேவன் நம்மைத் தம்முடன் இணைத்துக்கொள்ளுவார் என்பதை மனிதனுக்குச் செயல்முறைப்படுத்திக் காட்டுவதற்கு, ஜீவன் மற்றும் மகிமையின் கர்த்தர் தம் தெய்வீகத்தை மனுஷீகத்தால் மூடிக்கொண்டார். தேவனுடன் தொடர்பில்லாமல், ஒருவரும் மகிழ்ச்சியாயிருப்பது கூடாத காரியம். நமது பரமபிதாவின் அன்பு மனந்திரும்பின பாவியை அணைத்து, கறையற்ற தேவ ஆட்டுக்குட்டியின் புண்ணியங்களின்மூலமாக அவனை மறுரூபமாக்கும்வரையில் திருப்தியடைகிறதில்லை என்பதை விழுந்துபோன மனிதன் கற்றுக்கொள்ளவேண்டும்.

இந்நோக்கத்தை ஒட்டியே சகலப் பரலோக அறிவுஜீவிகளின் பணியும் இருக்கிறது. அவர்களுடைய படைத்தலைவரது கட்டளையின்கீழ், தங்களது பரமபிதாவிடமிருந்து மீறுதலினால் தங்களையே பிரித்துக் கொண்டவர்களைத் திரும்ப மீட்டுக்கொண்டுவரும் பணியை அவர்கள் செய்யவேண்டியிருக்கிறது. கிறிஸ்துவின் ஆச்சரியமான கிருபையும் அன்பும் உலகத்திற்கு வெளிப்படுத்தப்படும்வண்ணமாக, ஒரு திட்டம் தீட்டப்பட்டிருந்தது. மனிதனை மீட்பதற்குத் தேவகுமாரனால் செலுத்தப்பட்ட எல்லையற்ற கிரயத்தில், தேவஅன்பு வெளியாக்கப்பட்டிருக்கிறது. முழு உலகத்தையும் இரட்சிப்பதற்கான முன்னேற்பாடுகளில் முழுநிறைவுள்ளதாக இந்த மகிமையான மீட்பின் திட்டம் இருக்கிறது. பாவமன்னிப்பு மற்றும் கிறிஸ்துவின் எண்ணப்படும் நீதியின் மூலமாக, பாவமிகுந்த, விழுந்துபோன மனிதன் இயேசுவில் முழுமையுள்ளவனாக்கப்படக்கூடும்.

## சிலுவையின் வல்லமை

இயேசுகிறிஸ்து தமது மனித கரத்தால் மானிட இனத்தைச் சூழந்துகொள்ளும் அதே வேளையில், தமது தெய்வீகக் கரத்தால் எல்லையற்றவரின் சிங்காசனத்தைப் பற்றிக்கொண்டு, மனுஷீகத்தின்மீது அவர் பிடியைப் பதித்திருக்கிறார். அவர் தமது சிலுவையை வானத்துக்கும், பூமிக்கும் நடுவாக்கி, “நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்” என்றார். சிலுவை கவர்ந்திழுக்கும் மையப்பொருளாக இருந்தது.

அது அனைத்து மனிதரிடமும் பேசி, பாவம் ஏற்படுத்தியிருந்த பெரும்பிளப்புக்கு அப்பால் அவர்களை இழுத்து, முடிவற்ற தேவனுடன்

முடிவுள்ள மனிதனை இணைக்கிறதாய் இருந்தது. பாவத்தின் பலமான கூட்டணியிலிருந்து மனிதனைப் பிரிக்கக்கூடியது சிலுவையின் வல்லமை மட்டுமே ஆகும். பாவியின் இரட்சிப்புக்காகக் கிறிஸ்து தம்மையே ஒப்புக்கொடுத்தார். பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்கள், இயேசுவை நேசிப்பவர்கள், அவருடன் இணைக்கப்படுவார்கள். அவர்கள் கிறிஸ்துவின் நுகத்தைச் சுமப்பார்கள். இந்த நுகம் அவர்களுக்கு இடையூறாயிராது; அவர்களது ஆன்மீக வாழ்வைத் திருப்தியளியாத கடுஞ்செயலாகவும் ஆக்கிடாது. இல்லை; கிறிஸ்தவ வாழ்வு இன்பமும், சந்தோஷமும் உள்ள ஒன்றாக ஆக்கப்படுவதற்குக் கிறிஸ்துவின் நுகமே மெய்யான வழியாயிருக்கிறது. தம்முடைய ஒரேபேறான குமாரனை "விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு," உலகத்தில் மரிப்பதற்கு அவரைத் தந்தருளிய கர்த்தரின் செயலைத் தியானிப்பதில் கிறிஸ்தவனின் சந்தோஷம் இருக்கவேண்டும்.

## கிறிஸ்துவிற்கு உண்மையாயிருத்தல்

இளவரசர் இம்மானுவேலின் இரத்தக்கறைடிந்த கொடியின்கீழ் நிற்பவர்கள் கிறிஸ்துவின் சேனையில் விசுவாசமிக்கப் போர்வீரர்களாக இருக்கவேண்டும். அவர்கள் ஒருபோதும் விசுவாசமற்றவர்களாக, ஒருபோதும் உண்மையற்றவர்களாக இருக்கக்கூடாது. ஜீவாதிபதியான இயேசுவுடன் நிற்பதற்கு வாலிபர்களில் அநேகர் விருப்பத்துடன் முன்வருவார்கள். ஆனால் அவர்கள் அவருடன் தொடர்ந்து நிற்க விரும்பினால், இடைவிடாமல் தங்களது தளபதியான இயேசுவை, அவரது ஆணைகளுக்காக, நோக்கிப்பார்க்க வேண்டும். சாத்தானின் கூட்டணியுடன் ஈடுபட்டு, அவன் பக்கத்தில் உதவியாயிருந்துகொண்டிருந்தால், கிறிஸ்துவின் சேனைவீரர்களாக அவர்கள் இருக்கமுடியாது. அப்பொழுது அவர்கள் கிறிஸ்துவின் எதிராளிகளாகி விடுகிறார்கள். பரிசுத்தமான பொறுப்புகளுக்கு அவர்கள் துரோகம் செய்துவிடுகிறார்கள். சாத்தானுக்கும், உண்மையான சேனைவீரர்களுக்குமிடையில் அவர்கள் ஒரு இணைப்பை அமைத்துவிடுகின்றனர், இத்தகைய உயிருள்ள ஏதுகரங்களின்மூலமாக எதிரியானவன் கிறிஸ்துவின் சேனைவீரரது இருதயங்களைக் கைப்பற்றிச் செல்வதற்கு இடைவிடாது செயலாற்றிக் கொண்டிருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் சேனைவீரர்களாக இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் அருமையான வாலிபர்களே, நான் உங்களைக் கேட்கிறேன்: என்ன போராட்டங்களை நீங்கள் போராடியிருக்கிறீர்கள்? உங்கள் ஈடுபாடுகள் என்னவாக இருந்திருக்கின்றன? தேவனுடைய வார்த்தை உங்களது வேலையைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறபோது, அது

உங்களது போக்கிற்குப் பொருந்திப் போகாததினால், அதைச் செய்ய மறுத்துவிட்டீர்களா? உலகக் கவர்ச்சிக் கிறிஸ்துவின் சேவையிலிருந்து உங்களை ஈர்த்துவிட்டதா? விதவிதமான கவர்ச்சிகளைக் கண்டுபிடிப்பதில் சாத்தான் ஈடுபட்டிருக்கிறான்; சிறுகாரியங்களாகத் தோன்றும் மீறுதலினால், இயேசுவிடமிருந்து அவன் உங்களை இழுத்துக்கொள்கிறான். பிறகு தேவனிடமிருந்து உங்களை முற்றிலும் வசீகரித்துக்கொள்வதற்கு மாபெரிய கவர்ச்சிகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சபைப் புத்தகங்களில் உங்கள் பெயர் இருப்பதால், தேவனுடைய பிள்ளை என்று நீங்கள் உரிமைபாராட்டிக் கொள்ளலாம்; இருப்பினும் உங்களது மாதிரியும், உங்களது செல்வாக்கும் கிறிஸ்துவின் குணத்தைத் தவறாக எடுத்துக்காட்டுகிறது, அவரிடமிருந்து பிறரை நீங்கள் வழிவிலகச் செய்கிறீர்கள். விசுவாசியெனக் கூறிக்கொள்ளும் ஒருவரது முழு ஆத்துமாவும், கர்த்தர் செய்யும்படிக்குக் அவருக்குக் கொடுத்திருக்கிற பணியில் ஈடுபடாவிட்டால், அவருக்கு மகிழ்ச்சியும், சமாதானமும், சந்தோஷமும் இராது. அவர் மனந்திரும்புதல், பாவ அறிக்கையிடுதல் மற்றும் தேவனுக்கு அர்ப்பணிப்பதினால் அல்ல, மாறாக, அதிகமதிகமாக உலகத்திற்கு அர்ப்பணிப்பதினால், போராட்டத்தில் கிறிஸ்துவின் பக்கமில்லாது சாத்தானின் பக்கம் சார்வதினால், சபைக்குள் இடைவிடாது உலகத்தைக் கொண்டுவந்து கொண்டிருக்கிறார்.

## செய்முறை அறிவு அவசியம்

செயலிலும் எண்ணத்திலும் உங்களை உலகத்தோடு கட்டிவைக்கிற அழகுவாய்ந்த நூலை அறுத்துப்போடும்படி வாலிபர்களிடம் நான் வேண்டிக்கொள்கிறேன். “ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமா யிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்”–2 கொரி. 6:17,18.

இந்த அழைப்பின் குரலுக்கு நம் வாலிபர்கள் செவிகொடுப்பார்களா? தங்களது இளம் நண்பர்களுக்கு முன்பாக, தங்களது வாழ்விலும், குணத்திலும் கிறிஸ்துவைப்போன்ற முன்மாதிரியை வைப்பதன் அவசியத்தை நமது வாலிபப்பிள்ளைகள் எவ்வளவு கொஞ்சமாகவே உணர்ந்திருக்கின்றனர். நம் வாலிபர்களில் அநேகர் சத்தியத்தின் விளக்கத்தை புரிந்துவைத்திருக்கிறார்கள்; ஆனால் தங்களது ஒவ்வொரு செயலின்மீதும் சத்தியத்தின் நடைமுறைத் தாக்கத்தைச் செய்முறை அறிவினால் புரிந்துகொண்டவர்கள் வெகு

சிலரே. மாபெரும் அறுவடைக் களத்தில் தங்களைத் தேடித் தானாய் வருகிற எந்தப் பணியையும் செய்யக்கூடிய இளம் ஊழியர்கள் எங்கே? கிறிஸ்துவின் பள்ளியில் அனுதினமும் கற்றுக்கொள்ளுகிறவர்கள் எங்கே? பட்டம்பெற நாங்கள் தயாராகிவிட்டோம் என்று அவர்கள் ஒருபோதும் நினைக்கவேண்டாம். பரலோக அறிவுஜீவிகளுடன் இணைந்து எப்படி உழைப்பது என்று கற்பிக்கப்பட கர்த்தருடைய மன்றங்களில் அவர்கள் காத்திருப்பார்களாக. பிரியமான வாலிபரே, நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறபடியால் உங்களுடன் தயக்கமின்றிப் பேச விரும்புகிறேன். இனிமேலும் காலத்தை இழக்காதிருங்கள். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. நீங்கள் வெளிப்பார்வைக்குக் கிறிஸ்தவர்களாக இருக்கலாம், ஆனால் சோதனைகள் வரும்போது, கடுமையாகப் பரீட்சிக்கப்படும்போது, நீங்கள் பொதுவாக இணங்கிவிடுகிறதில்லையா?

## கிறிஸ்தவ அந்நியோந்நியம்

நீங்கள் சுறுசுறுப்புடன் பங்கெடுக்கவேண்டிய போராட்டம் உங்கள் அன்றாட வாழ்விலேயே இருக்கிறது. கடுந்துன்ப வேளைகளில் எழுதப்பட்ட வார்த்தையின் பக்கமாக உங்கள் வாஞ்சைகளை வைத்து, ஊக்கமான ஜெபத்தில் இயேசுவின் ஆலோசனையைத் தேடமாட்டீர்களா? ஜெபக் கூட்டத்தை அலட்சியப்படுத்தி அல்லது பரலோகத் தூதை அறிவிக்கிற தேவ ஊழியரின் கூட்டங்களைத் தவிர்த்து, ஒரு இன்னிசைக் கச்சேரிக்குப் போவதில் நிச்சயமாகத் தீங்கு ஏதுமில்லை என்று அநேகர் கூறுகின்றனர். கிறிஸ்து தாம் எங்கே இருப்பதாகக் கூறியிருக்கிறாரோ அங்கே இருப்பதுமட்டுமே உங்களுக்குப் பாதுகாப்பாயிருக்கும்.

கிறிஸ்துவின் வார்த்தைகளைப் பெரிதும் மதிக்கிறவர்கள் ஜெபக் கூட்டத்திலிருந்தோ அல்லது நித்திய நலனுக்கடுத்த காரியங்களை அவர் களுக்குச் சொல்லும்படி அனுப்பப்பட்டிருக்கிற கர்த்தருடைய தூதுவரின் கூட்டத்திலிருந்தோ தங்களை விலக்கிக்கொள்ள மாட்டார்கள். "இரண்டு பேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத். 18:20) என்று இயேசு கூறியிருக்கிறார். சிற்றின்பத்தைத் தெரிந்துகொண்டு ஆசீர்வாதத்தைத் தவற விடலாமா? இத்தகைய காரியங்களில் திளைப்பது உங்களுடைய வாழ்க்கை மற்றும் குணத்தில் மட்டுமல்ல, உங்களது நண்பர்களின் வாழ்கை மற்றும் குணத்தின்மீதும் ஒரு பாதிப்புண்டாக்கும் செல்வாக்கை ஏற்படுத்துகிறது.

கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று சொல்லுபவர்கள் செயலிலும்,

சத்தியத்திலும் அப்படியிருப்பார்களானால், அவர்கள் கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டிருப்பார்கள். தேவனுடைய கிரியைகளைச் செய்வார்கள். சுயத்தை ஈடுபடுத்தும் சோதனைக்கு அவர்கள் எதிர்த்து நிற்பார்கள். சமுதாயக்கூட்டத்தில் கிறிஸ்துவைச் சந்திக்கும் சிலாக்கியத்தைக் காட்டிலும் உலகத்தின் அற்பத்தனமான சிற்றின்பத்தில் தாங்கள் சந்தோஷமடைவதில்லை என்பதை அவர்கள் காட்டுவார்கள். அப்பொழுது அவர்கள் பிறர்மீது ஒரு நிச்சயமான செல்வாக்கை ஏற்படுத்தி, தங்களது முன்மாதிரியைப் பின்பற்றும்படி அவர்களை நடத்துவார்கள்.

வார்த்தைகளைவிடவும் செயல்கள் சத்தமாகப் பேசுகின்றன. தேவ ஜனங்கள் கூடும்போது உண்டாகும் வளமான ஆசீர்வாதங்களைச் சிற்றின்பப் பிரியர்கள் உயர்வாக மதிப்பதில்லை. அவர்களது இருதயங்கள் கர்த்தருடைய ஆவியினால் தொடப்படும் என்று நம்பிக்கையில், தங்களுடன் செல்லும்படி தங்களது நண்பர்களைத் தூண்டியெழுப்பும் சிலாக்கியத்தை அவர்கள் பாராட்டுகிறதுமில்லை. இத்தகைய உலகியல் கூட்டங்களுக்குள் அவர்களுடன் செல்கிறது யார்? கூடியிருப்பவர்களை ஆசீர்வதிப்பதற்கு இயேசு அங்கே இல்லை. ஆனால் நித்திய நலனுக்கேதுவான காரியங்களை வெளியேற்றும்படி சாத்தான் அநேகக் காரியங்களைச் சிந்தையில் கொண்டுவருவான். சரியைத் தவறுடன் கலக்கி குழப்பிவிடுவது அவனது நல்வாய்ப்பாக இருக்கிறது.

உலகியல் கூடுகைகளில் கலந்துகொள்வதன்மூலம், உற்சாகமூட்டும் பொழுதுபோக்குகளுக்கு என்று ஒரு சுவை உருப்பெறுகிறது; ஆனால் சன்மார்க்க வல்லமை பெலவீனமடைகின்றது, சுகபோகப் பிரியர்கள் தேவ பக்தியின் வேஷத்தைக் காட்டிக்கொள்ளலாம், ஆனால் தேவனோடு உயிராற்றல்மிக்க தொடர்புகள் அவர்களிடத்தில் இல்லை. அவர்களது விசுவாசம் செத்துவிட்டது, அவர்களது வைராக்கியம் அகன்றுபோய்விட்டது. கிறிஸ்து இல்லாத ஆத்துமாக்களிடம் சமயத்திற்கேற்ற வார்த்தையைக் கூறி, கர்த்தரிடத்தில் தங்களது இருதயங்களைக் கொடுக்குமாறு அவர்களை ஊக்கப்படுத்தும் பாரம் அவர்களிடம் இல்லை.—The Youths' Instructor, April 23, 1912; The Youths' Instructor, March 30, 1893.

## பக்தி என்பது உணர்ச்சி வெளிப்பாடு அல்ல

மாசில்லாத, சுத்தமான பக்தி என்பது ஒரு உணர்ச்சி வெளிப்பாடு அல்ல, ஆனால் இரக்கம் மற்றும் அன்பின் செயல்களைச் செய்வதாகும். ஆரோக்கியத்துக்கும், ஆனந்தத்துக்கும் இந்த பக்தி அவசியம். மாசடைந்த ஆத்தும ஆலயத்துக்குள் இது நுழைந்து, பாவத்தின் அழையா விருந்தாளிகளை சாட்டையினால் அடித்து விரட்டுகிறது. அரியாசனத்தை எடுத்துக்

கொண்டு, தன் பிரசன்னத்தினால் அனைத்தையும் புனிதப்படுத்தி, நீதியின் சூரியனுடைய பிரகாசமான ஒளிக்கதிர்களால் இருதயத்திற்கு ஒளியூட்டுகிறது. ஆத்துமாவின் பலகணிகளைப் பரலோகத்திற்கு நேராக இது திறந்துவிடுவதால், தேவனுடைய அன்பின் சூர்யப்பிரகாசம் உள்ளே நுழைகிறது. அதனுடன் சாந்தமும் அமைதியும் சேர்ந்து வருகிறது. ஓர் உயிருள்ள, சுறுசுறுப்பான ஏதுகரமாகப் பரலோகத்தின் சூழல் ஆத்துமாவை நிரப்புவதால், சரீரரீதியான, மனரீதியான மற்றும் ஒழுக்கரீதியான பெலன் பெருகுகிறது. மகிமையின் நம்பிக்கையாக, கிறிஸ்துவானவர் உள்ளே வாசம்பண்ணுகிறார்.—Review and Herald, October 15, 1901.

# 37

# கொஞ்சத்திலே உண்மையுள்ளவன்

"கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்"—லூக். 16:10.

"சின்ன விஷயங்கள்" என்று உலகம் குறிப்பிடுகிறவற்றில் கருத்துடன் மனம் செலுத்துவதே வாழ்க்கையை வெற்றியுள்ளதாக்குகிறது. சிறுசிறு அன்பின் செயல்கள், சிறுசிறு சுயமறுப்பின் செயல்கள், உபயோகமுள்ள எளிய வார்த்தைகளைப் பேசுதல், சிறுசிறு பாவங்களுக்கெதிராக விழிப்புடனிருத்தல் — இதுவே கிறிஸ்தவம் ஆகும். அனுதின ஆசீர்வாதங்களுக்கான நன்றியுள்ள ஓர் அறிக்கை, அனுதின வாய்ப்புகளை ஞானமாய்ப் பயன்படுத்திக் கொள்ளுதல், ஒப்படைக்கப்பட்டுள்ள தாலந்துகளை ஜாக்கிரதையாய் வளர்த்துக்கொள்ளுதல்—இதற்காகத்தான் எஜமான் அழைக்கிறார்.

சிறுசிறு கடமைகளை உண்மையாய்ச் செய்துமுடிப்பவர் மாபெரும் பொறுப்புகளின் தேவைகளுக்கேற்ப இணங்கி நடப்பதற்கு ஆயத்தப் பட்டிருப்பார். அனுதின வாழ்வில் தயவும், மரியாதைப் பண்பும், தன் குடும்பத்தில் தாராள மனமும், பொறுமை குணமும், குடும்பத்தை மகிழ்ச்சியாக வைப்பதில் இடைவிடாதக் குறிக்கோளும் கொண்டுள்ள மனிதரே, எஜமான் அழைக்கும்போது தியாகங்களைச் செய்யவும், சுயத்தை மறுக்கவும் முதன்மையானவராக இருப்பார்.

### ஒரு சமநிலையான குணம்

நமது சொத்துடைமையை தேவனுடைய ஊழியத்திற்காகக்

கொடுப்பதற்கு நாம் முன்வரலாம், ஆனால் அவருக்கு அன்பு மற்றும் நன்றியுணர்வின் இருதயத்தை நாம் கொடாவிட்டால், இது கணக்கில் எடுக்கப்படமாட்டாது. அயல்நாட்டு ஊழியக்களங்களில் உண்மை மிஷனெரிகளாக இருக்க விரும்புகிறவர்கள் முதலாவது வீட்டில் உண்மை மிஷனெரிகளாக இருக்கவேண்டும். எஜமானின் திராட்சத்தோட்டத்தில் பணிபுரிய வாஞ்சிப்பவர்கள், தங்களுடைய பராமரிப்பில் அவர் விட்டிருக்கிற திராட்சத்தோட்டத்தின் சிறு பகுதியில் கவனம் செலுத்தி வளர்த்து உருவாக்குவதின்மூலம், இதற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒரு மனிதனுடைய “இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்.” பல எண்ணங்கள் ஒன்றுசேர்ந்தே ஒரு நாளின் எழுதப்படாத வரலாறாக உருவாகிறது; குணக்கட்டுமானத்துடன் இத்தகைய எண்ணங்களுக்கு மிகவும் நெருங்கிய தொடர்பு உண்டு. நமது எண்ணங்கள் கண்டிப்பாகக் காக்கப்படவேண்டும்; ஏனெனில் ஒரு அசுத்தமான எண்ணம் ஆத்துமாவின்மீது ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தும். ஒரு தீய சிந்தனை மனதின்மீது ஒரு தீய முத்திரையைப் பதித்துவிடுகிறது. சிந்தனைகள் தூயதும், பரிசுத்தமுமாயிருந்தால், அவற்றைப் பேணி வளர்த்தவன் சிறந்தவனாக இருப்பான். அவைகளால் ஆவிக்குரிய இதயத்துடிப்பு உயிர்மீட்சி அடைகிறது, நன்மை செய்வதற்கான வல்லமை பெருகுகிறது. பூமியை ஈரப்பதமாக்குவதில் ஒரு மழைத்துளி மற்றொரு துளிக்கு வழியை ஆயத்தம்செய்வதுபோல, ஒரு நல்ல சிந்தனை அடுத்த சிந்தனைக்கு வழியை ஆயத்தம்பண்ணும்.

ஒவ்வொரு நேரமும் ஒரு அடியெடுத்து வைப்பதினால் மிகநீண்ட பயணமானது நிறைவேறுகிறது. எடுத்துவைக்கப்படும் அடுத்தடுத்த அடிகள் நம்மைச் சாலையின் முடிவுக்குக் கொண்டுவரும். மிகநீளமான சங்கிலி தனித்தனி வளையங்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. இவ்வளையங்களில் ஒன்று குறையுற்றிருந்தாலும், அச்சங்கிலியினால் பயனில்லை. இப்படித்தான் குணமும்கூட. ஒவ்வொரு செயலையும் நன்றாய்ச் செய்துமுடிப்பதினால், ஒரு சமநிலையான குணம் உருவாக்கப்படுகிறது. மேற்கொள்ளப்படுவதற்குப் பதிலாகப் பேணி வளர்க்கப்பட்ட ஒரு குறைபாடு, மனிதனைப் பூரணமற்றவனாக்கி, பரிசுத்த நகரத்தின் வாசலை அவனுக்கெதிராக அடைத்துவிடும். பரலோகத்தில் நுழைகிறவன் கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாத ஒரு குணத்தையுடையவனாக இருக்கவேண்டும். தீட்டுப்படுத்துகிற ஒன்றும் ஒருபோதும் அதில் பிரவேசிப்பதில்லை. மீட்கப்பட்ட சேனை முழுவதிலும் ஒரு குறைகூட காணப்படாது.

## அனுதின வாழ்வில் உண்மையாயிருத்தல்

தேவனுடைய கிரியை முழுவதும் பூரணமாயிருக்கிறது. எவ்வளவு சிறிதாயிருப்பினும், ஒவ்வொரு பகுதியிலும் அது பூரணமாயிருக்கிறது. உலகத்தை உருவாக்குவதில் செயல்படுத்தும் அதே அதிகக் கவனத்துடன் சிறிய கூரிய புல்லையும் அவர் வடிவமைக்கிறார். பரலோகத்திலிருக்கிற நமது பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நாமும் பூரண சற்குணராயிருக்க வாஞ்சித்தால், சிறுசிறு காரியங்களைச் செய்வதில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். செய்வதற்குத் தகுதியான ஒன்றை நன்றாய்ச் செய்வதே தகுதியானதாகும். உங்கள் பணி எதுவாயிருப்பினும், அதை உண்மையாய்ச் செய்யுங்கள். சின்னச் சின்ன விஷயங்களிலும் உண்மையைப் பேசுங்கள். ஒவ்வொரு நாளும் அன்பின் செயல்களைச் செய்யுங்கள், களிப்பூட்டும் வார்த்தைகளைப் பேசுங்கள். வாழ்வில் பாதை நெடுகப் புன்முறுவல்களைச் சிதறவிடுங்கள். இவ்விதமாக நீங்கள் வேலை செய்தால், தேவன் தமது அங்கீகாரத்தை உங்கள்மீது வைப்பார், "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே," என்று கிறிஸ்து ஒருநாள் உங்களைப் பார்த்துச் சொல்லுவார்.

தங்களுடைய அன்றாட வாழ்வில் உண்மையாயிருந்தவர்கள், புகழையோ லாபத்தையோ எண்ணாமல், தங்கள் வேலையைச் செய்வதில் தீவிரமாக இருந்தவர்கள், நியாயத்தீர்ப்பின் நாளில்: "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" (மத். 25:34) என்ற வார்த்தைகளைக் கேட்பார்கள். அவர்கள் ஆற்றிய சாதுரியமான சொற்பொழிவுகளுக்காகவோ, அவர்கள் காண்பித்த அறிவாற்றலுக்காகவோ அல்லது அவர்கள் வழங்கியிருக்கிற தாராளமான நன்கொடைகளுக்காகவோ, கிறிஸ்து அவர்களைப் பாராட்டவில்லை. பொதுவாகக் கண்சாடையாய் விடப்படுகிற சிறுசிறு காரியங்களைச் செய்ததற்காகவே அவர்கள் வெகுமானம் பெறுகிறார்கள். "பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்" என்று அவர் கூறுகிறார். "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்"–மத். 25:40.—The Youth's Instructor, January 17, 1901.

# 38

# வெளிச்சத்துக்காகக் கணக்கொப்புவித்தல்

வாலிப ஆண்களே, வாலிபப்பெண்களே, தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிற வெளிச்சத்துக்கு நீங்கள் கணக்கொப்புவிக்கவேண்டும். கவனித்துப் பின்பற்றப்படாவிடில், இவ்வெளிச்சமும், இத்தகைய எச்சரிப்பு களும் நியாயத்தீர்ப்பில் உங்களுக்கு விரோதமாக எழும்பி நிற்கும். உங்களது அபாயக்கூறுகள் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன; எப்பக்கத்திலும் நீங்கள் எச்சரிக்கப்பட்டு, காக்கப்பட்டிருக்கிறீர்கள். எச்சரிப்பு களால் வேலியடைக்கப்பட்டிருக்கிறீர்கள். தேவனுடைய வீட்டில் ஆவியான வரின் வல்லமையால், தேவனுடைய ஊழியக்காரர்களால் முன்வைக்கப் பட்ட பக்திவிநயமான, இருதயத்தை ஆராயும் சத்தியங்களை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். இந்த பக்திவிநயமான வேண்டுகோள்கள் உங்கள் இருதயங்களில் ஏற்படுத்தியிருக்கும் பாரம் என்ன? உங்கள் குணங்களின்மீது அவைகள் ஏற்படுத்தியிருக்கும் செல்வாக்கு என்ன? இந்த ஒவ்வொரு வேண்டுகோள்களுக்கும், எச்சரிப்புகளுக்கும் நீங்கள் பொறுப்பாளி களாக இருக்கிறீர்கள். மாயையான, கவலையீனமான, பெருமையான ஒரு வாழ்வைப் பின்தொடர்பவர்களைக் குற்றஞ்சாட்டுவதற்கு அவைகள் நியாயத்தீர்ப்பில் எழுந்து நிற்கும்.

அருமையான வாலிப நண்பர்களே, நீங்கள் எதை விதைக்கிறீர்களோ, அதையே அறுப்பீர்கள். இதுவே உங்களுக்கான விதைக்கும் காலம் ஆகும். அறுவடை என்னவாக இருக்கும்? நீங்கள் விதைக்கிறது என்ன? நீங்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தையும், நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலுமே விளையப்போகிற நல்ல அல்லது கெட்ட கனியின் விதையாக இருந்து, அறுக்கிறவனுக்குச் சந்தோஷத்தையோ, வருத்தத்தையோ உண்டாக்கும். விதைக்கப்படும் விதையைப்போலவே, பயிரும் இருக்கும். தேவன் உங்களுக்கு அதிக வெளிச்சத்தையும், அநேக சிலாக்கியங்களையும் கொடுத்திருக்கிறார். இந்த வெளிச்சம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டபின்னர், உங்களது அபாயக்கூறுகள் வெளிப்படையாக உங்களுக்குமுன் வைக்கப்பட்டபின்னர், பொறுப்பு உங்களுடையதாகிறது. தேவன் உங்களுக்குக் கொடுக்கிற வெளிச்சத்தை நீங்கள் கையாளும்

விதமே, மகிழ்ச்சி அல்லது வேதனைக்கான அளவுகோலைத் திருப்பி அமைக்கிறதாயிருக்கிறது. உங்களுக்கான மாற்றமுடியா முடிவுகளை நீங்களே வடிவமைத்துக் கொள்ளுகிறீர்கள்.—Testimonies for the Church, Vol. 3, p. 363.

## 39

# நோக்கத்தில் அக்கறை கொள்ளுதல்

பாபிலோனின் ராஜ அரமனைக்கான கல்வியை நான்கு எபிரெய வாலிபர்களும் பெற்றுக்கொண்டிருந்த பொழுது, அவர்களிடம் கோரப் பட்டிருந்த பெரும்பாரமிக்க முயற்சிக்கான ஒரு மாற்றுப்பொருளாகக் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருக்கிறது என்று அவர்கள் நினைக்கவில்லை. படிப்பில் அவர்கள் ஜாக்கிரதையாயிருந்தனர். ஏனெனில் தங்களது சித்தம் மற்றும் செயலைச் சார்ந்தே தங்களது எதிர்காலம் அமைந்திருக்கிறது என்பதை தேவகிருபையினால் உய்த்து அறிந்தனர். அவர்களது அனைத்துத் திறமையையும் அவர்கள் செயலுக்குக் கொண்டுவர வேண்டியிருந்தனர்; கவனமாகவும், கடுமையாகவும் தங்களது சக்திகளை வலிந்து செயலாற்றுவதன் மூலம், படிப்புக்கும் உழைப்புக்குமான தங்களது வாய்ப்புகளை அவர்கள் அதிக அளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர்.

### தேவனோடு இசைந்து செயல்படுதல்

இவ்வாலிபர்கள் தங்களுடைய இரட்சிப்புக்காகப் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, விருப்பத்தையும் செய்கையையும் அவர்களில் உண்டாக்கிக் கொண்டிருந்தார். வெற்றிக்கான நிபந்தனைகள் இங்கே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. தேவகிருபையை நமதாக்கிக் கொள்வதற்கு, நாம் நம் பங்கைச் செய்யவேண்டும். விருப்பத்தையோ அல்லது செய்கையையோ நமக்காகச் செய்வதற்குக் கர்த்தர் முன்மொழிகிறதில்லை. அவரது கிருபை ஒருபோதும் நமது முயற்சிக்கான ஒரு மாற்றுப்பொருளாக அல்ல, மாறாக விருப்பத்தையும், செய்கையையும் நம்மில் உண்டாக்குவதற்காகக் கொடுக்கப்படுகிறது. இசைந்து செயல்படுவதற்கு நமது ஆத்துமாக்கள் எழுப்பப்படவேண்டும்.

நமது இரட்சிப்பு நிறைவேற நம்மைப் பிரயாசப்படச் செய்வதற்கு, பரிசுத்த ஆவியானவர் நம்மில் கிரியை செய்கிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கற்றுக்கொடுக்க முயற்சிக்கிற நடைமுறைப்பாடம் இதுவே. "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்"—பிலி. 2:13.

கர்த்தர் தானியேல் மற்றும் அவனது மூன்று நண்பர்களுடன் இசைந்து செயல்பட்டதுபோல, அவரது சேவையில் உண்மையாயிருப்பதற்கு ஊக்கமாய்ப் பிரயாசப்படும் யாவரோடும் இசைந்து செயல்படுவார். நேர்த்தியான பண்புநலன்களும், உயர்ந்த நயமான சன்மார்க்க குணமும் தற்செயலாக நிகழ்பவை அல்ல. தேவன் வாய்ப்புகளைக் கொடுக்கிறார்; அவைகளைப் பயன்படுத்திக்கொள்வதைப் பொறுத்தே வெற்றி அமைகிறது. தெய்வாதீனமாக ஏற்படும் நல்வாய்ப்புகளை விரைவில் பகுத்துணர்ந்து, ஆர்வத்துடன் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஜெயங்கொள்ளுவதற்கான கிருபைக்காகவும், தங்கள் பணியைச் செய்வதற்கான பெலனுக்காகவும், திறனுக்காகவும் தானியேலைப்போலத் தேவனையே சார்ந்திருந்தால், அநேகர் பராக்கிரமசாலிகளாக மாறுவார்கள்.

## உளப்பூர்வமான சேவை

வாலிபர்களே, உங்களிடம் பேசுகிறேன்: உண்மையாயிருங்கள். உங்கள் வேலையில் மனதைச் செலுத்துங்கள். அரைமனதுடன் சேவை செய்கிற, சோம்பற்காரர்கள் ஒருவரையும் பின்பற்றாதிருங்கள். திரும்பத் திரும்பச் செய்யப்படும் செயல்களே பழக்கங்களாகின்றன, பழக்கங்கள் குணமாக அமைகிறது. வாழ்வின் சிறுசிறு கடமைகளைப் பொறுமையுடன் செய்து முடியுங்கள். சிறுசிறு கடமைகளில் உண்மையாயிருப்பதின் அவசியத்தை நீங்கள் குறைத்து மதிப்பிடும்வரைக்கும், உங்கள் குணக்கட்டுமானம் அதிருப்தியானதாக இருக்கும். சர்வவல்லவரின் பார்வையில், அனைத்துக் கடமையும் அவசியம். "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்"—லூக். 16:10. ஒரு உண்மைக் கிறிஸ்தவனின் வாழ்வில் அவசியமற்றவைகள் என்று எதுவுமில்லை.

கிறிஸ்தவர்களென்று உரிமைகோரும் அநேகர் தேவநோக்கத்துக்கு முரணாகக் கிரியைசெய்துகொண்டிருக்கிறார்கள். தங்களிடம் ஏதோ பெரிய வேலை கொண்டுவரப்படுவதற்கு அநேகர் காத்திருக்கிறார்கள். தேவனுக்குத் தங்களுடைய உண்மையைக் காண்பிப்பதற்கான வாய்ப்புகளை அவர்கள் அனுதினமும் இழக்கின்றனர்; தங்களுக்குச் சுவாரஸ்யமற்றதாகத் தோன்றும் வாழ்வின் சிறுசிறு கடமைகளை உளப்பூர்வமாகச் செய்துமுடிப்பதற்கு அனுதினமும் அவர்கள் தவறுகின்றனர். தங்களிடம் இருப்பதாக எண்ணிக்

கொண்டிருக்கிற பெரிய தாலந்துகளை ஏதோ பெரிய வேலையில் செயல்படுத்தி, இவ்விதமாகத் தங்களது பேராவலுள்ள ஏக்கங்களைப் பூர்த்திசெய்துகொள்ளலாம் என்று காத்துக்கொண்டிருக்கும் வேளையில், அவர்களது வாழ்வு கடந்துபோய் விடுகிறது.

எனக்குப் பிரியமான இளம் நண்பர்களே, உங்களுக்கு மிக அருகில் இருக்கும் பணியைச் செய்யுங்கள். உங்களுக்கு எட்டும் தூரத்திலுள்ள சில எளிமையான துறைசார்ந்த பணியின்மீது உங்கள் கவனத்தைத் திருப்புங்கள். இப்பணியைச் செய்வதற்கு உங்கள் உள்ளத்தையும், நெஞ்சத்தையும் செலுத்துங்கள். வீட்டில் நீங்கள் செய்யக்கூடிய காரியங்களை அறிவுப்பூர்வமாகச் செய்வதற்கு உங்கள் சிந்தனைகளை விரைவுபடுத்துங்கள். இவ்விதமாக மிகப்பெரிய பயன்பாட்டிற்கு நீங்கள் உங்களையே தகுதிப்படுத்திக் கொள்வீர்கள். எசேக்கியா இராஜாவைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறதை நினைவிற்கொள்ளுங்கள்: “அவன் … என்ன செய்யத் தொடங்கினானோ, அதையெல்லாம் தன் முழு இருதயத்தோடும் செய்து சித்தி பெற்றான்.”

## கவனம் செலுத்துதலின் மதிப்பீடு

கையிலிருக்கும் வேலையில் கவனத்தைச் செலுத்தும் திறமையானது ஒரு மாபெரும் ஆசீர்வாதம் ஆகும். தேவனுக்குப் பயந்த வாலிபர்கள் கருத்துமிக்கக் கவனத்துடன் தங்கள் கடமைகளைச் செய்துமுடிப்பதற்கு பிரயாசப்படவேண்டும், எண்ணங்களைச் சரியான பாதையில் நேர்ப்படுத்தி, நேர்த்தியானதை அவர்கள் செய்யவேண்டும். தங்களது நிகழ்காலக் கடமைகளை அவர்கள் கண்டறிந்து, மனதை அலைபாய அனுமதியாமல் அவற்றை நிறைவேற்றிட வேண்டும். இவ்விதமான மனப்பயிற்சி வாழ்க்கை முழுவதற்கும் உதவிமிக்கதாகவும், பயன்மிக்கதாகவும் இருக்கும். வேலை எவ்வளவு அற்பமாகத் தோன்றினாலும், தாங்கள் செய்யப் பொறுப்பெடுக்கும் அனைத்திலும் மனதைச் செலுத்துவதற்குக் கற்றுக்கொள்ளுபவர்கள், உலகத்தில் பயனுள்ளவர்களாக இருப்பார்கள்.

அருமையான வாலிபர்களே, அக்கறையுடன் இருங்கள். விடாமுயற்சி செய்யுங்கள். “நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொள்ளுங்கள்.” தேவனுக்கு உண்மையாயிருப்பதற்குத் தன் இருதயத்தில் தீர்மானித்துக் கொண்ட விசுவாசமிக்க எபிரெயனான தானியேலைப்போல் நில்லுங்கள். உங்கள் பெற்றோர்களையும், நண்பர்களையும் ஏமாற்றிவிடாதிருங்கள். நினைவிற்கொள்ள வேண்டிய இன்னொரு நபரும் இருக்கிறார். தேவனோடு உடன்பணியாளர்களாக நீங்கள் இருப்பதைச் சாத்தியமாக்கும்படிக்குத் தமது ஜீவனைக் கொடுக்குமளவுக்கு உங்களிடத்தில் மிகவும் அன்புகூர்ந்தவரை ஏமாற்றிவிடாதிருங்கள்.

## மிக மேன்மையான செயல்நோக்கம்

தேவனைக் கனம்பண்ணுவதற்கான வாஞ்சையே நமக்கு எல்லா நோக்கங்களிலும் மிகவும் வல்லமையுள்ளதாக இருக்கவேண்டும். கர்த்தருக்குரியவைகளை ஞானமாய்ப் பயன்படுத்துவது எப்படி என்பதை நாம் புரிந்துகொள்வதற்கேதுவாக, நமக்கு அளிக்கப்பட்டிருக்கிற சிலாக்கியங் களையும் வாய்ப்புகளையும் வளர்த்துக்கொள்ள ஒவ்வொரு முயற்சியையும் செய்யும்படி அது நம்மை வழிநடத்தவேண்டும். மூளை, எலும்பு, தசை மற்றும் நரம்பை மிகவும் ஆரோக்கியமான நிலையில் காத்துக்கொள்வதற்கு அது நம்மை நடத்தவேண்டும்; அதனால் நம் சரீர பெலனும், மனத்தெளிவும் நம்மை உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக்கும். சுயம் சம்பந்தமான ஆர்வம் செயல்படுவதற்கு இடமளிக்கப்பட்டால், அது மனதின் வளர்ச்சியைத் தடைசெய்து, இருதயத்தைக் கடினப்படுத்திவிடும். பிற்பாடு ஏமாற்றம் ஏற்படும்…

தானியேலுக்கு வெற்றி கொடுத்த தேவனால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் உண்மையான வெற்றி கொடுக்கப்படுகிறது. தானியேலின் இருதயத்தை அறிந்திருந்தவர், கர்த்தரைக் கனம்பண்ணுவதற்கான அவனது தீர்மானத்தையும், தமது ஊழியக்காரனின் தூய்மையான நோக்கத்தையும் மகிழ்ச்சியுடன் உற்றுநோக்கினார். தேவனுடைய நோக்கத்தைத் தங்கள் வாழ்வில் நிறைவேற்றுபவர்கள், செய்யும்படிக்கு அவர் கொடுக்கிற பணி எதுவாயிருப்பினும் அதைச் சாதிப்பதற்குத் தங்களைக் கவனத்தோடும் ஆர்வத்தோடும் ஈடுபடுத்திக்கொள்ளும்வண்ணம், கடுமையான முயற்சியை எடுத்திடவேண்டும்.—The Youth's Instructor, August 20, 1903.

## நிலைத்திருக்கும் சந்தோஷம்

நித்திய வாழ்விற்கு நடத்திச்செல்லும் அந்த செங்குத்தான பாதையின் நெடுகிலும், களைப்படைந்தோருக்கு புத்துணர்ச்சியூட்டத்தக்கதான மகிழ்ச்சி யின் ஊற்றுகள் உண்டு. ஞானத்தின் வழியில் நடக்கிறவர்கள் உபத்திரவத்தில் இருந்தாலும் அளவற்ற மகிழ்ச்சியோடிருப்பார்கள்; ஏனெனில், அவர்களது ஆத்துமாவால் விரும்பப்படுகின்றவர், அவர்களுக்கு அருகாமையிலே கண்ணுக்கு மறைவாக அவர்களுடன் நடக்கிறார். மேல்நோக்கிச் செல்வதற்காக அவர்கள் ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும்போதும், அவரது கரம் அவர்களைத் தொடுவதை மிகத் தெளிவாக—எளிதில் புரிந்து கொள்வார்கள். அவர்கள் பாதையிலே அவர்களால் எடுத்துவைக்கப்படும் ஒவ்வொரு அடியிலும் காணப்படாதவரின் மகிமையின் ஒளிக்கதிர்கள் பிரகாசிக்கின்றன. என்றுமே உச்சதொனியில் பாடப்படுகின்ற அவர்களது

துதியின் கீதங்கள், ஏறிச்சென்று சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கின்ற தூதர்களின் பாடல்களோடு இணைந்துகொள்ளுகிறது.—Thoughts from the Mount of Blessing, p. 140.

## 40

# சித்தத்தைப் பயிற்சி செய்தல்

மாசில்லாத பக்தி என்பது சித்தத்துடன் தொடர்புடையது. சித்தம் என்பது மனிதனின் தன்மையில் மற்ற எல்லா மனோசக்திகளையும் அதன் பிடியின்கீழ் கொண்டுவருகிற, ஆதிக்கம் செலுத்தும் சக்தியாயிருக்கிறது. சித்தம் என்பது சுவையோ, இயல்போ அல்ல; மாறாக, தேவனுக்கேற்கும் கீழப்படிதல் அல்லது கீழ்ப்படியாமைக்கேதுவாக மானிடப்பிள்ளைகளில் கிரியை செய்கிற தீர்மானிக்கும் சக்தியாகும்.

### உறுதியின்மையும் சந்தேகமும்

நீ ஒரு அறிவுக்கூர்மையுள்ள வாலிபன்; முடிவில் உன்னைப் பரலோகத்துக்குத் தகுதிப்படுத்திக் கொள்ளும்விதத்தில் உன் வாழ்வை அமைத்துக்கொள்ள விரும்புகிறாய். சந்தேகத்திற்கு அடிமையாக, ஒழுக்கச் சக்தியில் நீயே பெலவீனனாக இருப்பது கண்டு, அடிக்கடி சோர்ந்துபோகிறாய். பாவத்திலிருந்த பழைய வாழ்க்கையின் பழக்கவழக்கங்களினால் கட்டுப் படுத்தப்படுகிறாய். உனது சிறந்த தீர்மானங்களுக்கும், உனது மிக பக்திவிநயமான வாக்குறுதிகளுக்கும், உனது உணர்ச்சிப்பூர்வமான தன்மையும் உனக்கே உண்மையாயிராததை நீ காண்கிறாய். எதுவுமே நிஜமாகத் தோன்றவில்லை. உனக்கு நன்மைசெய்ய விரும்புவோரின் உண்மைத்தன்மையைச் சந்தேகிப்பதற்கு உனது உறுதியின்மை உன்னை வழிநடத்துகிறது. உனக்கு எங்குமே உறுதியான அடித்தளம் இல்லை என்று தோன்றுகிறவரைக்கும், சந்தேகத்தில் நீ எவ்வளவுக்குப் போராடுகிறோயோ, அவ்வளவுக்கு நிஜமற்றதாக அனைத்தும் உனக்குத் தென்படுகிறது. உனது வாக்குறுதிகள் மணற்கயிறுகளாக இருக்கின்றன, நீ நம்பவேண்டியவர்களின் சொற்களையும், செயல்களையும் அதே நிஜமற்ற வெளிச்சத்தில் மதிப்பிடுகிறாய்.

### சித்தத்தை இணங்கச் செய்வதன்மூலம் பெலன்

சித்தத்தின் உண்மையான சக்தியை நீ புரிந்துகொள்கிறவரைக்கும் நீ இடைவிடாமல் இன்னலுக்குட்படுவாய். சகல காரியங்களையும் நம்பி,

நீ வாக்குப்பண்ணலாம், ஆனாலும் உனது சித்தம் விசுவாசம் மற்றும் கிரியையின் பக்கம் வைக்கப்படாதவரையில், உனது வாக்குறுதிகள் அல்லது உனது விசுவாசத்தினால் பயனேதும் இல்லை. உனது முழு சித்த வலிமையுடன் விசுவாசப்போராட்டத்தை நீ போராடினால், ஜெயம் பெறுவாய். உனது உள்ளுணர்ச்சிகளும், உனது எண்ணப்பதிவுகளும், உனது மனக்கிளர்ச்சிகளும் நம்பப்படக்கூடாது, குறிப்பாக முரண்பாடான கருத்துகளுள்ள அவைகள் நம்பத் தகுந்தவைகளும் அல்ல; உனது நிலையற்ற வாக்குறுதிகள் மற்றும் உனது விட்டுவிடப்பட்ட உறுதிமொழிகளைப் பற்றிய அறிவு, உன்னிலுள்ள உனது நம்பிக்கையையும், பிறர் உன்னில் வைக்கும் விசுவாசத்தையும் பெலவீனப்படுத்திவிடுகிறது.

ஆனாலும் நீ நம்பிக்கையிழக்க வேண்டாம். எதுவுமே உண்மையும், நிஜமுமற்றதாக உனக்குத் தோன்றினாலும், விசுவாசிப்பதற்கு நீ தீர்மானிக்க வேண்டும். இந்த விரும்பத்தகாத நிலைக்குள் நீயே உன்னைக் கொணர்ந்து விட்டுக்கொண்டாய் என்பதை நான் உனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. உனது தேவனிலும், உனது சகோதரர்களிலும் உள்ள நம்பிக்கையை நீ மீண்டும் வென்றெடுக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சித்தத்துடன் உனது சித்தத்தை நீதான் இணங்கச் செய்யவேண்டும்; நீ இதைச் செய்யும்போது, தேவன் உடனடியாக உன்னைப் பொறுப்பெடுத்துக்கொண்டு, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உன்னில் உண்டாக்குவார். உனது முழு தன்மையும் அப்பொழுது கிறிஸ்துவினுடைய ஆவியின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படும்; உனது சிந்தனைகள் கூட அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்.

உனது உத்வேகங்களையும், உனது உணர்ச்சிகளையும் நீ விரும்புவதுபோல உன்னால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் உனது சித்தத்தைக் கட்டுப்படுத்தி, உனது வாழ்வில் ஓர் முழு மாற்றத்தை நீ ஏற்படுத்த முடியும். உனது சித்தத்தைக் கிறிஸ்துவிற்கு இணங்கச் செய்வதால், உன் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருந்து, எல்லாத் துரைத்தனங் களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலான வல்லமையுடன் இணைந்திருக்கும். தம்முடைய பெலத்துடன் இறுகப் பிணைத்துக்கொள்கிற தேவபெலத்தை நீ பெற்றுக்கொள்வாய்; உயிருள்ள விசுவாசத்தின் ஒரு புதிய ஒளி உனக்கு வந்துசேரும். உன்னைக் கண்ணியில் அகப்படுத்தி அழிக்க, இடைவிடாமல் கிரியை செய்துவரும் சாத்தானின் பக்கமுள்ள நண்பர்களின் சித்தத்துடன அல்ல, தேவசித்தத்துடன் உனது சித்தம் இசைந்து செயல்பட வேண்டும்.

தாமதமின்றி, தேவனுடன் சரியான தொடர்பில் உன்னை வைத்துக் கொள்ளமாட்டாயா? "எனது சித்தத்தை இயேசுவுக்குக் கொடுப்பேன்,

அதை இப்பொழுதே செய்வேன்; இந்த நொடியிலிருந்து முற்றிலுமாகக் கர்த்தருடைய பக்கம் இருப்பேன்" என்று நீ கூறமாட்டாயா? பசிநாட்டம் மற்றும் வெறி உணர்ச்சிக்கான பலத்தக் கிளர்ச்சியையும், வழக்கத்தையும் அவமதித்துவிடு. "நீ ஒரு பரிதாபகரமான மாய்மாலக்காரன்" என்று கூறுவதற்குச் சாத்தானுக்கு வாய்ப்பளியாதே. இவ்விதமாகச் சாத்தான் உன்னைக் குற்றப்படுத்தி, மனந்தளரச் செய்யாதபடிக்குக் கதவை அடைத்துவிடு. "நான் விசுவாசிப்பேன், தேவன் எனக்குச் சகாயர் என்பதை நான் விசுவாசிக்கிறேன்" என்று சொல், அப்பொழுது நீ தேவனில் ஜெயம் பெற்றவனாயிருக்கக் காண்பாய். சித்தத்தை உறுதியுடன் கர்த்தரின் பக்கம் வைத்துக்கொள்வதினால், ஒவ்வொரு உணர்ச்சியும் இயேசுவின் சித்தத்துக்குச் சிறைப்படுத்தக் கொண்டுவரப்படும். அப்பொழுது உனது பாதங்கள் உறுதியான கன்மலையின் மீதிருக்கக் காண்பாய். சில வேளைகளில் நீ கொண்டிருக்கிற சித்த வலிமையின் ஒவ்வொரு சிறுபகுதியும் வசப்படுத்தப்படும், ஆனாலும் தேவனே உங்களுக்காகக் கிரியைசெய்து கொண்டிருக்கிறார். வனையும் வழிமுறையிலிருந்து ஓர் கனத்துக்குரிய பாத்திரமாக நீ வெளிவருவாய்.

## தேவசித்தமும் மனித சித்தமும் இணைதல்

விசுவாசத்தைப் பேசுங்கள். தேவனுடைய அணிவரிசையின் பக்கம் அமைந்திருங்கள். எதிரியின் பக்கம் அடியெடுத்து வைக்காதிருங்கள், கர்த்தர் உங்களுக்குச் சகாயராய் இருப்பார். நீங்கள் உங்களுக்காகச் செய்து கொள்ளக் கூடாததை அவர் உங்களுக்காகச் செய்வார். "லீபனோனிலுள்ள கேதுருவைப்போல்" ஆகுவதே விளைவாக இருக்கும். உங்கள் வாழ்வு மேன்மையுள்ளதாய் இருக்கும், உங்கள் கிரியைகள் தேவனுக்குள் செய்யப்படும். தேவனுடைய கரங்களில் உங்களை மெருகூட்டப்பட்டக் கருவியாக்குகிற வல்லமையும், முனைப்பார்வமும், எளிமையும் உங்களில் விளங்கும்.

கர்த்தருக்குள்ளான சந்தோஷம் மற்றும் இன்பத்தின் இரகசியத்தை நீங்கள் புரிந்துகொள்ளும்வண்ணமாக, சத்திய ஊற்றில் அனுதினமும் பருகவேண்டியது உங்களுக்கு அவசியமாயிருக்கிறது. ஆனால் உங்கள் செயல்களுக்கெல்லாம் ஊற்றுக்கண் உங்கள் சித்தமே என்பதை நீங்கள் நினைவிற்கொள்ள வேண்டும். மனிதனின் குணத்தில் ஒரு முக்கியமான காரணியாக விளங்குகிற இச்சித்தமே, விழுகையின்போது சாத்தானின் கட்டுப்பாட்டுக்குள் கையளிக்கப்பட்டிருந்தது; அதுமுதல் அவன் மனிதனின் அவலநிலை மற்றும் முழு அழிவுக்காக, தன்னுடைய சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் மனிதனில் உண்டாக்குவதற்குக் கிரியை செய்துகொண்டிருக்கிறான்.

ஆனால், பாவத்திற்கான பலியாகும்படி, தமது பிரியமான குமாரனான இயேசுவைத் தந்தருளிய தேவனின் எல்லையற்ற தியாகம், அவரது அரசாங்கத்தின் ஒரு விதியையும் மீறிவிடாமல், "உங்களை என்னிடத்தில் ஒப்படையுங்கள்; அந்தச் சித்தத்தை என்னிடம் கொடுத்துவிடுங்கள்; சாத்தானின் கட்டுப்பாட்டிலிருந்து அதை நீக்கிவிடுங்கள், நான் அதை ஆட்கொள்கிறேன்; அப்பொழுது என்னுடைய தயவுள்ள சித்தத்தின்படியே விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் என்னால் உண்டாகக்கூடும்" என்று கூற அவருக்கு ஊக்கமளிக்கிறது. கிறிஸ்துவின் சிந்தையை அவர் உங்களுக்குக் கொடுக்கும்போது, உங்கள் சித்தம் அவருடைய சித்தத்தைப் போன்றதாகிறது, உங்கள் குணம் கிறிஸ்துவின் குணத்தைப் போலிருப்பதற்கு மறுரூபமாக்கப்படுகிறது. தேவசித்தத்தைச் செய்வது உங்களது நோக்கமாக இருக்கிறதா? வேத வாக்கியங்களுக்கு நீங்கள் கீழ்ப்படிய விரும்புகிறீர்களா? "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்"– மத். 16:24.

தேவனுக்குக் கீழ்ப்படியத் தீர்மானித்து, விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதை நீங்கள் மறுத்துவிடாத பட்சத்தில், கிறிஸ்துவைப் பின்பற்றுதல் என்று ஒரு காரியம் கிடையாது. உங்கள் உணர்ச்சிகளோ, உங்கள் மனக்கிளர்ச்சிகளோ அல்ல, தேவசித்தத்தைக் செய்தலே உங்களை ஒரு தேவபிள்ளையாக்குகிறது. உங்களது சித்தம் தேவசித்தமாக மாறினால், ஒரு பயனுள்ள வாழ்க்கை உங்களுக்கு முன்பாக இருக்கிறது. அப்பொழுது தேவன் உங்களுக்கு அருளியுள்ள வீரத்துடன், நற்கிரியைகளுக்கு மாதிரியாக நீங்கள் நிற்கலாம். அதன்பின்னர் ஒழுங்குமுறை விதிகளை உடைக்க உதவியாயிருப்பதற்குப் பதிலாக, அவற்றைக் கடைபிடிக்க நீங்கள் உதவியாயிருப்பீர்கள். மேலும் உங்கள் சொந்த நடத்தையினால் ஒழுங்கற்ற வாழ்க்கைக்குத் தூண்டிவிட்டு, அமைதியை அசட்டைசெய்வதற்குப் பதிலாக, அதைக் காத்துக்கொள்ள உதவியாயிருப்பீர்கள்.

உங்களது சித்தம் தேவனின் பக்கம் வைக்கப்பட்டால், நீங்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பீர்கள் என்பதை நானறிவேன், தெய்வபயத்துடன் நான் அதை உங்களிடம் கூறுகிறேன். "நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்." நியாயத்தீர்ப்பின் பரீட்சைக்கு நிற்கக்கூடிய விதத்தில், காலத்திற்கும் நித்தியத்திற்குமாக உங்கள் பணியை நீங்கள் செய்துகொண்டு இருக்கலாம். நீங்கள் முயற்சிப்பீர்களா? இப்பொழுது நேர்மையாய்த் திகழும்படி நீங்கள் திரும்புவீர்களா? கிறிஸ்துவின் அன்பு மற்றும் பரிந்துபேசுதலுக்கு உரியவராக நீங்கள் இருக்கிறீர்கள். இப்பொழுது

நீங்கள் உங்களைத் தேவனுக்கென்று அர்ப்பணிப்பீர்களா, அவரது பணியின் சாதக நிலைமைகளைப் பாதுகாப்பதற்குப் படைவீரர்களாக வைக்கப் பட்டிருப்பவர்களுக்கு வருத்தத்தையும், சோர்வையும் உண்டாக்குவதற்குப் பதிலாக, அவர்களுக்கு உதவி செய்வீர்களா?—Testimonies for the Church, Vol. 5, pp. 513–516.

### விசேஷித்த முயற்சி அவசியம்

நியமிக்கப்பட்ட வழிகளை தேவன் வைத்திருக்கிறார், நாம் அவற்றை ஜாக்கிரதையுடனும் ஜெபத்துடனும் பயன்படுத்தினால், எந்தக் கப்பலும் சேதமடையாமல், கொந்தளிப்பையும் புயலையும் தாண்டி, கடைசியில் மகிழ்ச்சியின் துறைமுகத்தில் ஓய்வுகொள்ளும். ஆனால் நாம் இந்த ஏற்பாடுகளையும், சிலாக்கியங்கைளும் அசட்டைசெய்து, புறக்கணிப் போமானால், நம்மில் எவரையும் இரட்சிப்பதற்கு ஒரு அற்புதத்தையும் தேவன் நடப்பிக்கமாட்டார், யூதாஸ் மற்றும் சாத்தானைப்போல நாம் தொலைந்துபோவோம்.

தீமையைப் பேணி, பாவத்தைச் செய்கிற பெலவீன ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு தேவன் ஒரு அற்புதத்தை நடப்பிப்பார்; அல்லது அவர்களது ஜீவியங்களுக்குள் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு மூலப்பொருள் கொண்டுவரப்பட்டு, ஒப்பீடு செய்தால், இலகுவான பணியுள்ள, எந்த விசேஷித்த முயற்சியும், எந்த விசேஷித்தப் போராட்டமும், சுயத்தைச் சிலுவையிலறைதல் என்ற எதுவும் இல்லாத, உடலுக்கு அப்பாலுள்ள உயர்ந்த நிலைக்கு அவர்களை உயர்த்தும் என்று எண்ணிக் கொள்ளா திருங்கள்; ஏனெனில் இப்படிச் செய்யப்படுவதற்குச் சாத்தானின் களத்தில் இன்பக்களியாட்டம் போடும் யாவரும் அக்கிரமக்காரர்களுடன் அழிந்து போவார்கள். அவர்கள் சகாயமின்றி, சடிதியில் நாசமடைவார்கள்.—Testimonies to Ministers, p. 453.

## 41

# தெய்வீக வழிநடத்துதல்

மூன்று வழிகளில் கர்த்தர் தமது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்தி, நம்மை வழிநடத்துகிறார்…

தேவன் தமது வார்த்தையில் பரிசுத்த வேத வாக்கியங்களில் நமக்கு அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அவரது தெய்வாதீனமான கிரியைகளிலும் அவரது குரல் வெளிப் படுத்தப்படுகிறது; நித்திய காரியங்களைப் பகுத்தறியக்கூடாமல், மாறுவேடம் பூண்டுவரும் சாத்தானின் குரலை தேவனின் குரலாக ஏற்றுக்கொள்ளுமளவுக்கு உணர்ச்சிக்கூறுகள் மிகவும் குழப்பமடைந்து விடுகிற வரைக்கும், நம் சுய வழிகளில் நடந்து, நம் சுய சித்தங்களைச் செய்து, பரிசுத்தமாக்கப்படாத இருதயத்தின் தூண்டுதல்களைப் பின்பற்றுவதன்மூலம் அவரிடமிருந்து நமது ஆத்துமாக்களை நாம் பிரித்துக்கொள்ளாதிருந்தால், அக்குரலை நாம் கண்டறியலாம்.

தேவனுடைய குரல் கேட்கப்படுகிற இன்னொரு வழி என்னவெனில், அவர் தமது பரிசுத்த ஆவியின் வேண்டுகோள்களின் மூலமாக, குணத்தில் வெளிப்படுமளவுக்கு எண்ணப்பதிவுகளை இருதயத்தில் ஏற்படுத்துவதே ஆகும்.

எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் உங்களுக்குச் சந்தேகம் ஏற்படுமானால், முதலில் நீங்கள் வேதவாக்கியங்களை நாடவேண்டும். விசுவாச வாழ்வை நீங்கள் மெய்யாகவே தொடங்கிவிட்டீர்களானால், முழுவதும் கர்த்தருடையதாயிருக்கும்படி அவருக்கு உங்களை நீங்கள் ஒப்படைத்துவிட்டீர்கள், நீங்கள் ஒரு கனத்துக்குரிய பாத்திரமாக விளங்குவதற்கு, தமது நோக்கத்தின்படியே வனையவும், உருவாக்கவும் அவர் உங்களைப் பொறுப்பெடுத்திருக்கிறார். அவரது கரங்களில் வளைந்துகொடுப்பதற்கும், அவர் உங்களை எங்கே நடத்தினாலும் பின்பற்றுவதற்கும் அக்கறைமிக்க வாஞ்சை உங்களுக்கு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் தமது திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நீங்கள் அவரை நம்புகிறீர்கள், அதே சமயம் அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுவதினால், நீங்கள் அவரோடு ஒத்துழைக்கிறீர்கள்.— Testimonies for the Church, Vol. 5, p. 512.

## 42

# பரிசுத்த ஆவியானவரின் அமைதியான செயல்பாடு

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பழையதிலிருந்து உண்டாக்கும் மாறுதலோ அல்லது முன்னேற்றமாகவோ இராமல், மறுரூபமடையும் இயல்பில் உள்ளது. சுயத்திற்கும் பாவத்திற்கும் ஒட்டுமொத்தமாக மரித்த

ஒரு புது வாழ்க்கையாக உள்ளது. பரிசுத்த ஆவியானவரின் பயன்தரும் செயலினால் மட்டுமே இந்த மாறுதலைக் கொண்டுவரமுடியும்.

நிக்கொதேமு தொடர்ந்து குழப்பமுள்ளவனாகவே இருந்தான். இயேசு தான் கூறவிருக்கும் பொருளை விளக்குவதற்காகக் காற்றை உதாரணமாகப் பயன்படுத்தினார்: "காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" என்றான். (யோவான் 3:8)

காற்று மரக்கிளைகளுக்கிடையிலுள்ள இலைகளையும் மலர்களையும் அசைத்து, அவைகளின் உரசலின் சத்தத்தைக் கொண்டு செல்லுகிறது; ஆனால், அது காணமுடியாததாகவும் எங்கிருந்து வருகிறது—எங்கு செல்லுகிறது என்று ஒரு மனிதனாலும் கூற முடியாததாகவும் உள்ளது. இருதயத்தின்மீதுள்ள பரிசுத்த ஆவியானவரின் செயலும் அப்படிப்பட்டதாகவே உள்ளது. காற்றின் அசைவுகளுக்கும் அதிகமாக அதைப்பற்றி விவரிக்கமுடியாது. மனந்திரும்புதல் ஏற்படும்போது, அது உண்டான சரியான இடத்தையோ, நேரத்தையோ, அனைத்து சூழ்நிலைகளையோ தொடர்ந்து கண்டறிந்து, ஒரு மனிதனால் கூறவியலாது; ஆனால், அது அவன் மனம் மாறாதவனாக இருக்கிறான் என்று மெய்ப்பிக்காது. காற்றைப்போல காணமுடியாத ஒரு ஏதுகரத்தினால் கிறிஸ்து இருதயத்தின்மீது தொடர்ந்து கிரியை செய்துகொண்டிருக்கிறார். ஆத்துமாவைக் கிறிஸ்துவிடம் நடத்தும் உணர்த்துதல்கள் கொஞ்சம் கொஞ்சமாக—ஒருவேளை அதைப் பெறுபவரின் ஞாபகமற்ற நிலையில் உண்டாகின்றன. அவரைப்பற்றித் தியானஞ்செய்வதினாலும், வேதவாக்கியங்களை வாசிப்பதின்மூலமாகவும், அல்லது ஜீவனுள்ள பிரசங்கியிடமிருந்து வார்த்தைகளைக் கேட்பதினாலும் இவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஆவியானது திடீரென்று அதிகமான ஒரு முறையீட்டுடன் நேரடியாக வரும்போது, ஆத்துமா தானாகவே மகிழ்ச்சியுடன் இயேசுவிடம் தன்னை சரணடையச்செய்கிறது. திடீரென்று உண்டான மதமாற்றம் என்று இது அநேகரால் அழைக்கப்படுகிறது; ஆனால், இது நீண்டகாலமாக தேவ ஆவியானவர், அவர்பால் இழுக்கும்படிச்செய்த முயற்சியினால்—பொறுமையுடனும் பிரயாசத்துடனும் இயக்கப்பட்ட ஒரு செயலால் உண்டானதாகும்.

காற்று காணமுடியாததாக இருக்கும்போது, அது உண்டுபண்ணும் விளைவுகள் காணவும் உணரவுங்கூடியவையாக உள்ளன; அதைப்போலவே, ஆத்துமாவின்மீதான ஆவியின் செயலும் அதன் இரட்சிக்கும் வல்லமையைப்

பெற்றுக்கொண்ட ஒருவரின் ஒவ்வொரு செயலினாலும் தானாகவே வெளிப்படும். தேவனுடைய ஆவி இருதயத்தை ஆட்கொள்ளும்போது, அது வாழ்க்கையை மறுரூபப்படுத்துகிறது. பாவகரமான சிந்தனைகள் தூரமாக விலக்கப்படுகின்றன. தீய செயல்கள் விட்டுவிடப்படுகின்றன. அன்பு, தாழ்மை, சமாதானம் ஆகியவை கோபம், பொறாமை, சச்சரவு ஆகியவைகள் இருந்த இடத்தை அடைகின்றன. துயரம் இருந்த இடத்தை மகிழ்ச்சி நிரப்புகிறது. முகம் பரலோக ஒளியைப் பிரதிபலிக்கிறது. சுமையை நீக்கும் கரத்தையோ அல்லது உன்னதப் பிராகாரத்திலிருந்து கீழிறங்கும் ஒளியையோ எந்த ஒருவரும் காண்பதில்லை. விசுவாசத்தினால் ஆத்துமா தேவனிடம் சரணடையும்போது, இந்த ஆசீர்வாதம் வருகிறது.

மீட்பின் திட்டத்தின் செயலை வரம்பிற்குட்பட்ட மனிதனால் அறிந்துகொள்ளுதல் என்பது முடியாத காரியமாக உள்ளது. அதன் தேவ இரகசியம் மனித அறிவைக் கடந்ததாக உள்ளது; இருந்தபோதிலும், மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடக்கும் ஒருவன், அது தெய்வீக உண்மை என்பதை உணருகிறான். இங்கு ஒரு நேரடியான அனுபவத்தினால் மீட்பின் ஆரம்பத்தை நாம் அறியலாம். அதன் விளைவுகள் நித்தியகாலங்களினூடாக எட்டுகின்றன.—Desire of Ages, pp. 172, 173.

### தெய்வீக உதவியின் வெளிப்படையான ஆதாரம்

உங்களது ஆத்துமாவிலே தேவை என்ற உணர்வு உங்களுக்கிருக்குமானால், நீங்கள் நீதியின்மேல் பசியோடும் தாகத்தோடும் இருப்பீர்களானால், எந்தக் காரியங்களை உங்களுக்கு உங்களால் செய்ய இயலாதோ, அந்தக் காரியங்களை பரிசுத்த ஆவியின் அருட்பொழிவின்மூலமாக, உங்களுக்கு அவர் செய்யத்தக்கதாக, அவரைத் தேடுவதற்கு கிறிஸ்து உங்கள் இருதயத்தில் கிரியை செய்திருக்கிறார் என்பதற்கு, இது ஒரு வெளிப்படையான ஆதாரமாகும்.—Thoughts from the Mount of Blessing, p. 19.

## 43

# உள்வசிக்கும் கிறிஸ்து

நாம் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி இருந்தால், “சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும்” நாம் இருப்போம்.

ஓ அருமையான சாத்தியக்கூறுகள் மற்றும் ஊக்குவிப்பு! அனைத்து ஒழுக்கத் தூய்மைக் கேட்டிலிருந்தும் சுத்திகரிக்கப்பட்ட மனித இருதயத்தில் அருமை இரட்சகர் வாசம்பண்ணி, முழுத்தன்மையையும் மேன்மைப்படுத்தி, பரிசுத்தப்படுத்தி, பரிசுத்த ஆவியானவருக்கான ஒரு ஆலயமாக மனிதனை உருவாக்குகிறார்…

## நமது விசுவாசத்துக்கான அவரது மறுபதில்

உயிருள்ள விசுவாசத்தினால் நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறோம். நமது தனிப்பட்ட விசுவாசப் பயிற்சியினால் அவர் நம் இருதயங்களில் நிலைத்திருக்கிறார். தெய்வீகப் பிரசன்னத்தின் துணை நமக்கு உண்டு, இப்பிரசன்னத்தை நாம் உணரும்போது, நமது எண்ணங்கள் இயேசு கிறிஸ்துவிடம் சிறைப்படுவதற்குக் கொண்டுவரப்படுகின்றன. இத்துணையைக் குறித்ததான தெளிந்த நம் மனநிலையைப் பொறுத்தே நமது ஆவிக்குரிய பயிற்சிகள் அமைகின்றன. இவ்விதமாகவே ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான்; கிறிஸ்து நமக்கு எப்படிப்பட்டவராக இருக்கிறார், மீட்பின் திட்டத்தில் அவர் நமக்கான எப்படிப்பட்டக் கிரியையைச் செய்திருக்கிறார் என்பதை நாம் கருத்திற்கொள்ளும்போது, விசுவாசத்தினால் அவர் நம் இருதயங்களில் வாசம் பண்ணுகிறார். உலகத்துக்கும் தனிப்பட்ட முறையில் நமக்குமான தேவனுடைய இந்த மாபெரும் ஈவைக் குறித்த உணர்வை வளர்த்துக்கொள்வதினால் நாம் மிகவும் மகிழ்ச்சியுள்ளவர்களாக இருக்கமுடியும்.

இத்தகைய எண்ணங்கள் முழு குணாதிசயத்தின்மீதும் கட்டுப்படுத்தும் வல்லமையை உடையதாய் இருக்கிறது. நீங்கள் விரும்பினால், ஒரு தெய்வீக நண்பரை நீங்கள் எப்பொழுதும் உங்களுடன் கொண்டிருக்கலாம் என்பதை உங்கள் சிந்தையில் பதிக்க நாம் விரும்புகிறேன். “தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.” (2 கொரி 6:16)

## அவரது அன்பினால் வனையப்படுதல்

மனம் கிறிஸ்துவின்மீது லயித்திருக்கும்போது, தெய்வீக சாயலுக்கொப்பாகக் குணம் வனையப்படுகிறது. அவரது நற்குணம், அவரது அன்பைக் குறித்ததான உணர்வினால் எண்ணங்கள் ஆட்கொள்ளப்படுகின்றன. அவரது குணத்தை நாம் தியானிக்கிறோம், இவ்விதமாக அவர் நமது எல்லா எண்ணங்களிலும் நிறைந்திருக்கிறார். அவரது அன்பு நம்மை நெருக்கி ஏவுகிறது. சூரியனை அதன் நண்பகல் வெளிச்சத்தில் ஒரு விநாடி

உற்றுநோக்கினாலும்கூட, நமது கண்களைத் திருப்பிக்கொண்டபின்னர் நாம் பார்க்கும் அனைத்தின்மீதும் சூரியனின் சாயல் தென்படும்.

இயேசுவை நாம் பார்க்கும்பொழுதும் அப்படித்தான்; நாம் காணும் அனைத்தின்மீதும் நீதியன் சூரியனாகிய அவரது சாயல் பிரதிபலிக்கிறது. நாம் வேறு எதையும் காண இயலாது அல்லது வேறெதைக் குறித்தும் பேச இயலாது. ஆத்துமத்தின் விழித்திரை மீது அவரது சாயல் பதிக்கப்பட்டு, நமது அனுதினவாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் பாதித்து, நமது முழுத்தன்மையையும் மென்மையாக்கிக் கீழ்ப்படுத்துகிறது. காண்கிறதினால், கிறிஸ்துவின் சாயலாகிய தெய்வீக சாயலுக்கொப்பாக நாம் மாற்றப்படுகிறோம். நம் தொடர்புக்குள் வரும் அனைவரோடும், பிரகாசமும் மகிழ்ச்சியுமான அவரது நீதியின் ஒளிக்கதிர்களை நாம் பிரதிபலிக்கிறோம். குணத்தில் நாம் மறுரூபமடைந்துவிடுகிறோம்; நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தவரின் பிரதிபலிப்பினால் இருதயமும், ஆத்துமாவும், சிந்தையும் ஒளிவீசுகிறது. விசுவாசத்தினால் நம் இருதயங்களில் வாசமாயிருக்கும் தனிப்பட்ட, உயிருள்ள செல்வாக்கு இங்கே மீண்டும் உணரப்படுகிறது.

அவரது போதனையின் வார்த்தைகள் ஏற்கப்பட்டு, நம்மை ஆட்கொள்ளும்போது, இயேசுவானவர் நமக்கு நிலைத்திருக்கும் பிரசன்னராகி, நமது எண்ணங்களையும், அபிப்பிராயங்களையும் செயல்களையும் கட்டுப்படுத்துகிறார். உலகம் அறிந்திருக்கிறவர்களிலேயே மாமேன்மையான ஆசிரியரின் போதனையினால் நாம் ஊக்குவிக்கப்படுகிறோம். மனித வாழ்வின் கணக்குக் கொடுக்குந்தன்மை மற்றும் மனித செல்வாக்கினைப் பற்றிய உணர்வானது, வாழ்வு மற்றும் அனுதினக் கடமைகள் குறித்த நமது கண்ணோட்டங்களுக்கு வடிவம் கொடுக்கிறது.

இயேசு கிறிஸ்து நமக்கு முதன்மையும், கடைசியானவரும், அனைத்திலும் சிறந்தவரும் எல்லாமாகவும் இருக்கிறார். இயேசுகிறிஸ்து, அவரது ஆவி, அவரது குணம், அனைத்திற்கும் அழகு சேர்க்கிறது; அதுவே பாவுநூல் மற்றும் ஊடிழையாகவும், நமது முழு ஆள்தத்துவத்துக்குமான இழைநயமாகவும் இருக்கிறது. கிறிஸ்துவின் வாத்தைகள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கின்றன. அப்படியானால், நமது எண்ணங்களை நாம் சுயத்தின்மீது மையம்கொள்ளச் செய்யமுடியாது; இனிவாழ்வது நாமல்ல, கிறிஸ்துவே நம்மில் வாழ்கின்றார். அவரே மகிமையின் நம்பிக்கையாக இருக்கின்றார். சுயம் செத்துவிடுகிறது, ஆனால் கிறிஸ்து உயிருள்ள இரட்சகராக இருக்கிறார். இடைவிடாது இயேசுவை நோக்கிப் பார்த்து, நம்மைச் சுற்றியுள்ள அனைவருக்கும் அவரது சாயலை நாம்

பிரதிபலிக்கிறோம். நமது ஏமாற்றங்களைக் குறித்து சிந்திப்பதற்கும் அல்லது அவைகளைக் குறித்துப் பேசுவதற்கும் நாம் நிற்கலாகாது; ஏனெனில் இயேசுவின் அருமையான சிநேகம் எனும் இன்பகரமான சித்திரம் நமது பார்வையைக் கவர்ந்திழுக்கிறது. சத்திய வார்த்தையினால் அவர் நமக்குள் வாசம்பண்ணுகிறார்.—Testimonies to Ministers, pp. 387–390.

### விலையுயர்ந்த முத்து

நாம் நம்மையே கிறிஸ்துவிற்கு அர்ப்பணித்து, விருப்பத்தோடு கீழ்ப்படிதலின் ஜீவியஞ்செய்து, அவருடைய எதிர்பார்ப்புகளனைத்தையும் நிறைவேற்றவேண்டும். நாமும் நம்முடைய தாலந்துகளும் நாம் பெற்றிருக்கும் திறமைகளும் கர்த்தருடையவைகள். நாம் அவைகளை அவருடைய பணிக்காக அர்ப்பணிக்கவேண்டும். இவ்விதமாக, நாம் நம்மை முழுமையாக அவருக்கு ஒப்புக்கொடுக்கும்போது, கிறிஸ்து அனைத்துப் பரலோகப் பொக்கிஷங்களோடும் தம்மை நமக்குத் தருகிறார். அப்பொழுது, விலையுயர்ந்த முத்தை நாம் பெற்றுக்கொள்கிறோம்.—Christ's Object Lessons, p. 116.

## 44

# சுய மறுப்பு

இயேசு தம்மை வெறுமையாக்கிவிட்டார். அவர் செயல்பட்ட அனைத்திலும் சுயம் காணப்படவே இல்லை. அனைத்து காரியங்களையும் பிதாவின் சித்தத்திற்கு அவர் கீழ்ப்படுத்தினார். பூமியிலே அவரது இறைப்பணி முடிவடையுந்தருவாயில் அவர்: “பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்” (யோவான் 17:4) என்றார். அவர் பின்வருமாறு நம்மை வேண்டுகிறார்: “நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்”–மத்தேயு 11:29; “… ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து” வரவேண்டும்–மத்தேயு 16:24. சுயம் அதின் உயர்நிலையிலிருந்து தள்ளப்பட்டு, அது இனி ஒருபோதும் ஆத்துமாவின்மீது ஆதிக்கஞ்செலுத்தக்கூடாது.

கிறிஸ்துவை அவரது சுயமறுப்பிலும், அவரது மனத்தாழ்ச்சியான நிலையிலும் காணுகின்ற ஒருவர், தானியேல் மனுஷகுமாரனுக்கொப்பான ஒருவரைக் கண்டபோது, “என் உருவம் மாறி வாடிப்போயிற்று,” (தானியேல் 10:8) என்று சொன்னதைப்போன்று கட்டாயமாகக் கூறவேண்டியதிருக்கும்! எப்பொழுதுமே மானிட இயல்பானது முனைப்போடு தன்னை வெளிப்படுத்தப்

போராடி, போட்டியிட ஆயத்தமாக இருக்கிறது; கிறிஸ்துவில் கற்றுக்கொள்கிற ஒருவன் சுயம், பெருமை, ஆதிக்கஞ்செலுத்த வேண்டுமென்ற ஆசை ஆகிய அனைத்தையும் விட்டு தன்னை வெறுமையாக்குகிறான்; அவனது ஆத்துமாவில் அமைதி நிலவுகிறது. சுயமானது பரிசுத்த ஆவியானவரின் பொறுப்பிலே சரணடைந்துவிடுகிறது. அதன்பின்பு, உயர்ந்த இடத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் (நம்மிடமிருக்காது) நமக்கிராது. மற்றவர்களும் காணுகின்றவகையில், முழங்கையால் நெருக்கித்தள்ளி முண்டியடித்துக்கொண்டு செல்லவேண்டுமென்ற பேராவல் நமக்கிராது; ஆனால், நாம் அடையவேண்டுமென்கிற உன்னதமான இடம் — நம் மீட்பரின் பாதபடியே என்பதை நாம் உணருவோம். அவரது கரம் நம்மை நடத்தத்தக்கதாக காத்துக்கொண்டிருந்து, அவரது ஆலோசனையின் குரலிற்குச் செவிசாய்த்துக்கொண்டு, இயேசுவை நோக்கிப்பார்க்கவேண்டும். இந்த அனுபவத்தைப் பெற்றிருந்த அப்போஸ்தலனாகிய பவுல், "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா. 2:20) என்று கூறுகின்றார்.

## 45

# தேவன் ஏற்றுக்கொள்ளுகிற குணம்

வாலிபர்கள் தங்களது குணங்களை நிலைத்திருக்கும் அஸ்திபாரத்தின்மீது கட்டும்விதத்தில், கவனத்தோடும் ஜெபத்தோடும் அவர்கள் போதிக்கப்பட வேண்டியதிருக்கிறது. அநேகர் வருத்தத்துக்குரிய பெரும்பிழைகளைச் செய்வதன் காரணம், அனுபவப் படிப்பினைகளுக்கு அவர்கள் செவிகொடாததே ஆகும். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆலோசனை அவர்களிடம் பலன்கொடாமற் போய்விடுகிறது, சத்துருவின் சோதனைகளுக்கு அவர்கள் சாய்ந்துவிடுகிறார்கள். தேவன் வாலிபர்களை நேசிக்கிறார். தங்களுக்குக் கிறிஸ்து தேவை என்பதை அவர்கள் உணர்ந்து, உறுதியான அஸ்திபாரத்தின் மீது கட்டுவார்களானால், நன்மைக்கான மாபெரும் சாத்தியக்கூறுகளை அவர்களில் அவர் காண்கின்றார். அவர்களது கடுந்துன்பங்களையும் அவர் அறிந்திருக்கிறார். மனித மனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பிரயாசப்படுகிற அந்தகார சக்திகளுக்கெதிராக அவர்கள் போராட வேண்டியதிருக்கும் என்பதை

அவர் அறிந்திருக்கிறார்; வாலிப ஆண்களும், வாலிபப் பெண்களும் திவ்ய சுபாவத்தில் பங்குள்ளவர்களாவதற்கான வாசலை அவர் திறந்திருக்கிறார்....

## விடாமுயற்சி தேவை

குணம் என்பது தற்செயலாய் வருவதல்ல. திடீரென வெடிக்கும் கோபத்தினால், தவறான திசையில் வைக்கும் ஒரு அடியினால் அது தீர்மானிக்கப்படுகிறதில்லை. ஒரு செயலைத் திரும்பத் திரும்பச் செய்வதால் அதுவே பழக்கமாக மாறி, நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ குணத்தை வனைகின்றது. இடைவிடாத, அயராத முயற்சியினாலும், ஒப்படைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தாலந்தையும், திறமையையும் தேவனுடைய மகிமைக்காக வளர்த்துக்கொள்வதாலும் மட்டுமே சரியான குணங்களை அமைத்திடக்கூடும். இதைச் செய்வதற்குப் பதிலாக, அநேகர் மன உந்துதல் அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைகள் தங்களைக் கொண்டுசெல்லும் போக்கிற்கேற்ப திசைமாறிச்செல்லத் தங்களையே விட்டுக்கொடுத்து விடுகின்றனர். அவர்களிடம் நன்மை குறைவுபட்டிருக்கிறது என்பதால் அல்ல, மாறாகத் தங்கள் வாலிபத்தில் மிகவும் சிறந்ததை அவர்கள் செய்திடத் தேவன் விரும்புகிறார் என்பதை அவர்கள் உணராமல் இருப்பதாலேயே தடம்புரண்டு விடுகின்றனர்.

தானியேல் நின்றதைப் போன்று வாலிபர்கள் இன்று நிற்க விரும்பினால், ஒவ்வொரு ஆவிக்குரிய நரம்பையும், தசையையும் அவர்கள் விரிவடையச் செய்யவேண்டும். அவர்கள் அனுபவமற்றவர்களாக இருக்கவேண்டுமென்பதைக் கர்த்தர் விரும்பவில்லை. முதன்மைநிலையின் உச்சத்தை அவர்கள் அடைய வேண்டுமென்று அவர் பிரியப்படுகிறார். ஏணியின் மிக உயரத்திலுள்ளதான சுற்றினை அவர்கள் அடைந்து, அதிலிருந்து தேவனுடைய இராஜ்யத்துக்குள் அவர்கள் அடியெடுத்து வைக்கவேண்டுமென்று அவர் வாஞ்சிக்கிறார்.

## நண்பர்களின் செல்வாக்கு

தங்கள் இல்லங்களைவிட்டு வெளியேறும் வாலிபர்கள், அவர்களது பெற்றோர்களின் கண்காணிப்பின்கீழ் இல்லாதபடியால், தங்களுக்குரிய நண்பர்களைத் தெரிவுசெய்யும்படிப் பெருமளவுக்கு விட்டுவிடப்படுகின்றனர். அவர்களது பரமபிதாவின் கண் அவர்கள்மீது இருக்கிறது, அவர்களது ஒவ்வொரு தேவையையும், அவர்களது ஒவ்வொரு சோதனையையும் அவர் காண்கிறார் என்பதை அவர்கள் நினைவிற்கொள்ள வேண்டும். தங்களது மனங்கள் கீழ்த்தரமான விதத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்களுடைய நடவடிக்கையினால் வெளிப்படுத்தக்கூடிய சில வாலிபர்கள் பள்ளிகளில் எப்பொழுதும் இருக்கத்தான் செய்வார்கள். சிறுபிராயத்தில்

கொடுக்கப்பட்ட ஞானமற்றப் பயிற்சியின் மூலமாக, அவர்கள் ஒரு சார்பான குணக்கூறுகளை வளர்த்திருக்கின்றனர்; அவர்கள் வயதில் வளர வளர, அவர்களது அனுபவத்தைக் கறைப்படுத்தும்படி இக்குறைபாடுகள் நிலைத்துநின்று விடுகின்றன. வார்த்தையினாலும், நடக்கையினாலும் இந்த ஆத்துமாக்கள் ஒழுக்க சக்தியில் பெலவீனமாயிருப்போரைத் தவறான வழிக்கு நடத்திவிடுகின்றனர்.

அருமை வாலிபர்களே, காலம் பொன் போன்றது. இளம்பருவத்துக்குரிய இன்பக்களியாட்டங்களில் மூழ்குவதால் உங்கள் ஆத்துமாக்களை நீங்கள் ஆபத்துக்கு உட்படுத்தலாகாது. உங்களுக்குரிய நண்பர்களைத் தெரிவுசெய்யும் காரியத்தில் அக்கறையற்றவர்களாக நீங்கள் இருக்கலாகாது. பிறரது குணங்களிலுள்ள மேன்மைகளைக் குறித்துச் சிந்தியுங்கள், தீமைக்கு எதிர்த்துநிற்பதற்கும், நன்மையைத் தெரிந்துகொள்வதற்குமான சன்மார்க்க சக்தியாக இந்தக் குண்ங்கள் உங்களிடத்தில் விளங்கும். உங்கள் இலக்கினை உயர்வானதாக வைத்துக்கொள்ளுங்கள். தேவனுக்குப் பயந்து, அவரை நேசிக்கிற உங்கள் பெற்றோர்களும், ஆசிரியர்களும் இரவும் பகலும் தங்களுடைய ஜெபங்களால் உங்களுக்குத் தொண்டு செய்வார்கள், உங்களிடம் பரிவுடன் பேசி, எச்சரிப்பார்கள்; ஆனால் நீங்கள் முரட்டுத்தனமான நண்பர்களைத் தெரிந்துகொண்டால், இவையனைத்தும் விருதாவாகிவிடும். உண்மை அபாயத்தை நீங்கள் உணராமல், நீங்கள் விரும்புகிறபடி சரியானதையும் தவறானதையும் செய்யலாம் என நினைத்தால், ஒழுக்கக்கேடு எனும் புளித்தமா நயவஞ்சகமாக உங்களது சிந்தையைக் கறைப்படுத்திச் சீரழித்துக்கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறியாதிருப்பீர்கள்.

## நமது ஒரே நம்பிக்கையான கிறிஸ்து

கிறிஸ்துவானவர் துன்புறுத்தப்பட்டார், அவமதிக்கப்பட்டார், பழிக்கப்பட்டார்; வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் சோதனையால் அவர் தாக்கப்பட்டபோதும், அவர் பாவஞ்செய்யவில்லை, மாறாக முழுவதும் திருப்தியளிக்கிற ஒரு பூரணமான கீழ்ப்படிதலைத் தேவனிடம் சமர்ப்பித்தார். இதன்மூலம் கீழ்ப்படியாமைக்கான ஒவ்வொரு சாக்குப்போக்கின் சாயலையும் என்றென்றைக்குமாக அவர் நீக்கினார். கீழ்ப்படிவது எப்படி, அனைத்துக் கற்பனைகளையும் கைக்கொள்வது எப்படி என்று மனிதனுக்குக் காண்பிக்க அவர் வந்தார். தெய்வீக வல்லமையை அவர் பற்றிக்கொண்டார், பாவியின் ஒரே நம்பிக்கை அதுவே ஆகும். இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, மனிதன் திவ்ய சுபாவத்தில் பங்குள்ளவனாக … வேண்டும் என்பதற்காக அவர் தம்முடைய ஜீவனைத் தந்தார்.

தேவனுடைய மகிமைக்காகப் பயன்படுத்துவதற்கென வாலிபர்களுக்குத் தாலந்துகளை அவர் கொடுத்திருக்கிறார்; ஆனால் அநேகர் இந்த ஈவுகளைப் புனிதமற்ற, தூயதற்ற நோக்கங்களுக்காகப் பிரயோகப்படுத்துகின்றனர். வளர்த்துக்கொள்ளப்பட்டால், மனோரீதியான, ஒழுக்கரீதியான மற்றும் சரீரரீதியான பண்புப்பேறுகள் எனும் வளமான அறுவடையை அளிக்கக்கூடிய, திறமைகளை அநேகர் பெற்றிருக்கின்றனர். ஆனாலும் அதைச் சிந்திப்பதற்கு அவர்கள் முற்படுவதில்லை. தங்களுடைய செயலோட்டத்தின் விளைவையும் அவர்கள் எண்ணுகிறதில்லை. ஆலோசனைக்கோ அல்லது கடிந்துகொள்ளுதலுக்கோ செவிகொடாத மதியீனத்தை, முரட்டுத்தன்மையை அவர்கள் ஊக்குவிக்கின்றனர். இது ஓர் கடுமையான குற்றமாகும். தேவனுடைய பார்வை தங்கள்மீது இருக்கிறது, தேவதூதர்கள் குணவிருத்தியைக் கண்காணித்துக்கொண்டும், சன்மார்க்கத் தகுதியை நிறுத்துக்கொண்டும் இருக்கிறார்கள் என்பதை வாலிபர்கள் உணர்ந்தார்களானால், அவர்கள் தெளிந்தபுத்தியுள்ளவர்களாய் இருப்பார்கள். — வாலிபர் ஆசிரியன், ஜூலை 27, 1899.

## 46

# கிறிஸ்துவின் நிலைத்திருக்கும் பிரசன்னம்

கிறிஸ்துவின் மார்க்கமென்பது, பாவத்தை மன்னிப்பது என்பதை விடவும் அதிகமானது. அதின் பொருள் நமது பாவங்களை முற்றிலுமாக எடுத்துப்போட்டு, அந்த வெற்றிடத்தை பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளால் நிறைப்பது என்பதாகும். இதின் பொருள் தெய்வீக ஒளியூட்டுதல் மற்றும் தேவனில் களிகூருதல் என்பதாகும். இதன் பொருள், இதயத்திலுள்ள சுயம் முற்றிலும் எடுத்து வெளியேற்றப்படும்; அந்த இதயம் கிறிஸ்துவின் நிலையான பிரசன்னத்தால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்பதாகும். கிறிஸ்து ஆத்துமாவில் ஆட்சிசெய்யும்போது, அங்கு தூய்மையும் பாவத்தினின்று விடுதலையும் காணப்படும். சுவிசேஷ திட்டத்தின் மகிமையும் நிறைவும் முழுமையும் வாழ்க்கையில் நிறைவேறும். மீட்பரை ஏற்றுக்கொள்ளும் செயல் பூரண சமாதானத்தையும் அன்பையும் பூரண நிச்சயத்தின் மின்னொளியையும் கொண்டுவருகிறது. கிறிஸ்துவின் குணத்தின் அழகும் நறுமணமும் வாழ்க்கையில் வெளிப்படும்போது, அதின்மூலம், தேவன் தமது மகனை இந்த உலகத்திற்கு நிச்சயமாகவே ஒரு மீட்பராக இருக்கும்படி

அனுப்பினாரென்பதற்குச் சான்றாக இருக்கிறது...

கிறிஸ்து தமது உண்மையான பின்னடியார்களுக்கு அனுதின தோழனாகவும் மிகவும் பழகிய நண்பனாகவும் இருந்திருக்கிறார். மிகவும் நெருக்கமான தொடர்புடையவர்களாக நிலையான தோழமையோடு அவருடன் வாழ்ந்து வந்தார்கள். கர்த்தரின் மகிமை அவர்கள்மீது உதித்திருந்தது. இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தேவனுடைய மகிமையின் அறிவைப்பற்றிய வெளிச்சம் அவர்களிலே பிரதிபலிக்கிறது. மங்கிப்போகாத மாபெரும் வெளிச்சத்தின் கதிர்களில் இராஜாவை அவரது மகிமையிலும் இராஜரீகத்திலும் கண்டு, இப்பொழுது களிகூருகிறார்கள். பரலோகத்திலுள்ள மக்களுடன் தோழமையோடு வாழ்வதற்கு அவர்கள் ஆயத்தப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில் பரலோகத்தை தங்களது இதயங்களிலே உடையவர்களாக இருக்கிறார்கள்.—Christ's Object Lessons. pp. 419–421.

# பகுதி 5

# வாழ்க்கைப் பணிக்கான ஆயத்தம்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 47 | கிறிஸ்தவக் கல்வி | 145 |
| 48 | மெய்யான கல்வி | 147 |
| 49 | கிறிஸ்தவக் கல்வியின் தேவை | 149 |
| 50 | நித்தியத்திற்கான கல்வி | 152 |
| 51 | ஓர் நடைமுறைப் பயிற்சி | 153 |
| 52 | மாணவர்களின் வாய்மை தவறாமை | 156 |
| 53 | மாணவர்களின் வாய்ப்பு வளங்கள் | 158 |
| 54 | சேவைக்கான பயிற்சி | 160 |
| 55 | முன்னேற்றத்துக்கான பேரார்வம் | 163 |
| 56 | மெய்ஞ்ஞானம் | 164 |
| 57 | ஓர் உயர்ந்த தரத்தை அமைத்திடுங்கள் | 166 |

## பகுதி 5

# வாழ்க்கைப் பணிக்கான ஆயத்தம்

ஒவ்வொரு கடமையையும் செயலாற்றுவதற்கு சரீரத்தின், மனதின், ஒழுக்கநிலையின் வல்லமைகளை ஆயத்தம் செய்வதே உண்மையான கல்வியாகும். தெய்வீக சேவைக்காக உடல், மனம், ஆத்துமா ஆகிவைகளுக்குப் பயிற்சிகொடுக்க வேண்டும். இதுவே நித்தியத்திற்கும் நிலைக்கும் கல்வி.— Christ's Object Lessons, p. 330.

## 47

# கிறிஸ்தவக் கல்வி

மானிட சிந்தையானது மேம்பட்ட வளாச்சியை எளிதில் அடையக் கூடியதாயிருக்கிறது. தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு அறியாமையின் வாழ்வாக இருக்கக்கூடாது. இயேசு தமது சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குப் படிப்பறிவில்லாத மீனவர்களைத் தெரிந்துகொண்டபடியால், பலர் கல்விக்கெதிராகப் பேசுகின்றனர். படிப்பறிவற்றவர்களுக்கு அவர் முன்னுரிமை அளித்தார் என்று அவர்கள் சாதிக்கின்றனர். அநேகக் கல்விமான்கள் மற்றும் கனத்துக்குரிய மனிதர்கள் அவருடைய போதகத்தில் விசுவாசம் வைத்தனர். இவர்கள் தங்களது மனச்சாட்சிகளின் உணர்த்து தல்களுக்குத் துணிவுடன் கீழ்ப்படிந்திருந்தார்களானால், அவர்கள் அவரைப் பின்பற்றியிருந்திருப்பார்கள். அவர்கள் தங்களது திறமைகளை ஒப்படைத்திருப்பார்களானால், அவை ஏற்கப்பட்டு, கிறிஸ்துவின் சேவை யில் நியமிக்கப்பட்டிருந்திருக்கும். ஆனால் கிறிஸ்துவை அறிக்கை யிடவும், தாழ்மையான கலிலேயனுடன் தங்களுடைய நற்பெயரை இணைப்பதற்கு அஞ்சாது ஈடுபடவும், கடுகடுப்பான ஆசாரியர்கள் மற்றும் எரிச்சலுள்ள அதிபதிகளின் முகத்துக்குமுன்பாக அவர்கள் சன்மார்க்க வல்லமையற்றிருந்தனர்.

இருதயங்களையெல்லாம் ஆராய்ந்து அறிந்திருந்தவர் இதைப் புரிந்துகொண்டார். கற்றோரும், மேன்மக்களும் செய்யத் தகுதிபெற்றிருக்கிற வேலையை அவர்கள் செய்யாவிடில், தமது சித்தத்தைச் செய்வதில் கீழ்ப்படிதலும் உண்மையுமிக்க மனிதர்களைக் கிறிஸ்துவானவர் தெரிந்து

கொள்வார். தாம் பூமியில் விட்டுச் செல்லப்போகிற மாபெரும் பணியை முன்னேற்றிச்செல்வதற்குக் கற்றுக்கொடுக்கும் வகையில், அவர் எளிய மனிதர்களைத் தெரிந்துகொண்டு, அவர்களைத் தம்முடன் இணைத்துக் கொண்டார்.

## மாபெரும் ஆசிரியரான கிறிஸ்து

கிறிஸ்துவானவர் உலகத்திற்கு ஒளியாய் இருந்தார். சகல அறிவின் ஊற்றும் அவரே. கல்வியறிவற்ற மீனவர்களுக்குத் தாம் கொடுக்கப் போகிற உன்னதமான கட்டளையை பெற்றுக்கொள்ள அவர்களைத் தகுதிப் படுத்துவதற்கு அவர் வல்லவராயிருக்கிறார். இந்த எளிய மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட சத்தியப் பாடங்கள் மிகவும் முக்கியமானவையாக இருந்தன. அவை உலகத்தை அசைக்கக் கூடியனவாக இருந்தன. இயேசுவானவர் இந்தத் தாழ்நிலையிலுள்ள நபர்களுடன் தம்மை இணைத்துக்கொள்வது ஓர் அற்பக் காரியமாகத் தோன்றியது; ஆனாலும் மிகப்பெரிய விளைவுகளை உண்டுபண்ணக்கூடிய சம்பவமாக அது இருந்தது. அவர்களது வார்த்தைகளும் அவர்களது செயல்களும் உலகத்தை மாற்றியமைக்கக் கூடியனவாக இருந்தன.

இயேசுவானவர் கல்வியை அலட்சியம் செய்யவில்லை. உயரிய பண்புவளமிக்க மனம், தேவனுடைய அன்பு மற்றும் பயபக்தியின்மூலம் பரிசுத்தமாக்கப்பட்டால், அவரது முழுநிறைவான அங்கீகாரத்தைப் பெறுகிறது. கிறிஸ்துவால் தெரிவுசெய்யப்பட்ட எளிய மனிதர்கள் மூன்றாண்டுகள் அவருடனிருந்து, பரலோகத்தின் மகத்துவமானவரின் பக்குவப்படுத்தும் செல்வாக்கிற்குக் கீழ்ப்பட்டிருந்தனர். உலகம் அறிந்தவர்களிலேயே மாபெரும் ஆசிரியர் கிறிஸ்துவே ஆவார்.

வாலிபர்கள் தங்களைத் தேவனுக்கென்று பிரதிஷ்டை பண்ணுவார் களானால் அவர்களது தாலந்து மற்றும் அவர்களது பற்றுறுதி எனும் செல்வத்துடன் அவர் அவர்களை ஏற்றுக்கொள்வார். அறிவார்ந்த மேன்மையின் உச்சக்கட்ட நிலையை அவர்கள் அடையலாம்; ஆவிக்குரிய கொள்கையின்மூலம் சமச்சீராய் செயல்பட்டால் கிறிஸ்துவானவர் பரலோகத்திலிருந்து செய்துமுடிப்பதற்காக வந்த பணியை அவர்கள் முன்னேற்றிக்கொண்டு செல்லக்கூடும், இவ்விதமாகச் செய்வதினால் எஜமானுடன் சக ஊழியர்களாக இருப்பார்கள்.

நமது கல்லூரியிலுள்ள மாணவர்கள் அறிவியல்களைப்பற்றின அறிவைப் பெறுவதற்கு மட்டுமல்ல, சமச்சீரான குணக்கூறுகளை அவர்களுக்கு கொடுக்கக்கூடிய நற்பண்புகளை வளர்ப்பது மற்றும் பயிற்சிசெய்வது எப்படி என்று கற்றுக்கொள்வதற்கும், விலைமதிப்பற்ற

சிலாக்கியங்களைப் பெற்றிருக்கின்றனர். அவர்கள் தேவனின் பொறுப்புமிக்க சன்மார்க்க ஏதுகரங்களாக இருக்கின்றனர். செல்வம், செய்யும் பணி, அறிவாற்றல் ஆகிய தாலந்துகளை மனிதன் ஞானமாக மேம்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக, அவை அவனிடம் தேவனால் நம்பி ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பலதரப்பட்ட பொறுப்புகளை அவரது ஊழியக்காரர்களின் அறியப்பட்ட சக்திகளுக்கும், திறமைகளுக்கும் தக்கதாக, ஒவ்வொருவருக்கும் அவனவனுடைய வேலையை அவர் பகிர்ந்தளித்திருக்கிறார்.—Review and Herald, June 21, 1877.

## 48

# மெய்யான கல்வி

சிருஷ்டிகரான தேவன் மற்றும் மீட்பரான இயேசு கிறிஸ்துவைக் குறித்த அறிவுடன் மனத்திலும், இருதயத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் கருத்துக்களை ஆழப்பதியச் செய்வதே மெய்யான கல்வி ஆகும். அப்படிப்பட்ட ஒரு கல்வி, சிந்தையைப் புதிதாக்கி குணத்தை மறுரூபப்படுத்தும். ஆத்துமாக்களுக்கு சத்துருவானவனின் வஞ்சிக்கும் இரகசியங்களுக்கெதிராக அது சிந்தையைப் பெலப்படுத்தி, அரணாகக் காக்கிறது, தேவனுடைய குரலைப் புரிந்துகொள்ளவும் அது நம்மை ஊக்குவிக்கிறது. கிறிஸ்துவோடு உடன்பணியாளனாவதற்குக் கற்றோனை அது தகுதிப்படுத்தும்.

நமது வாலிபர்கள் இந்த அறிவைப் பெறுவார்களானால், அவசியமான மற்ற அனைத்தையும் பெறுவதற்கு அவர்கள் திராணியுள்ளவர்கள் ஆவர்; இல்லையெனில், உலகத்திலிருந்து அவர்கள் பெறக்கூடிய அனைத்து அறிவும் கர்த்தருடைய அணிவரிசைகளில் அவர்களை வைத்திடாது. புத்தகங்கள் கொடுக்கிற அனைத்து அறிவையும் அவர்கள் சேகரிக்கலாம், ஆயினும் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு குணத்தை அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நீதியைக் குறித்ததான முதன்மை நியதிகளை அறியாதவர்களாகவே இருப்பார்கள்.

பூமியின்பள்ளிக்கூடங்களில்அறிவைப்பெற்றுக்கொள்ளத்தேடுபவர்கள், அவர்களை மாணவர்களாக உரிமைகோரும் இன்னொரு பள்ளிக்கூடமும்—கிறிஸ்துவின் பள்ளிக்கூடம் உண்டு என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். இப்பள்ளிக்கூடத்திலிருந்து மாணவர்கள் ஒருபோதும் பட்டம்பெறுகிறதில்லை. மாணவர்களின் மத்தியில் வயோதிபரும், வாலிபரும் இருப்பர். தெய்வீக ஆசிரியரின் போதனைகளுக்குச் செவிகொடுப்பவர்கள், அதிக ஞானத்தையும்

ஆத்துமத்தின் உயர்பண்பையும் இடைவிடாமல் பெற்றுக்கொள்கின்றனர், இவ்விதமாக நித்தியம் முழுமைக்கும் முன்னேற்றம் இருக்கப்போகிறதான மேலோகப் பள்ளிக்கூடத்தில் நுழைவதற்கு அவர்கள் ஆயத்தமாகின்றனர்.

கடமை மற்றும் மகிழ்ச்சியின் பாடங்கள் ஆகிய வாழ்வின் மாபெரும் பாடங்களை எல்லையற்ற ஞானம் நமக்கு முன்பாக வைக்கிறது. அவற்றைக் கற்றுக்கொள்வது பெரும்பாலும் கடினமே; ஆயினும் அவையின்றி மெய்யான வளர்ச்சியை நாம் அடைய இயலாது. அவை நமக்கு முயற்சியையும், கண்ணீர்த்துளிகளையும், மனவியாகுலத்தையும்கூட உண்டாக்கலாம்; ஆயினும் நாம் தடுமாறிடவோ, சோர்ந்திடவோ வேண்டியதில்லை. தூயதான, பரிசுத்த தூதர்களுடன் கூடிவாழ்தலுக்கான தகுதியை, துன்பங்கள் மற்றும் சோதனைகளுக்கு மத்தியில், இந்த உலகத்திலேயே நாம் பெறவேண்டியதிருக்கிறது. கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கற்பதை நிறுத்திவிடுமளவுக்கு முக்கியமற்ற பாடங்களில் மிகவும் மூழ்கிப்போகிறவர்கள் அளவிடமுடியாது இழப்பைச் சந்திக்கின்றனர்.

சிருஷ்டிகர் மனுபுத்திரருக்கு அருளியிருக்கிற ஒவ்வொரு மனோசக்தியும், ஒவ்வொரு நற்பண்பும் அவரது மகிமைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்; இத்தகு பயன்பாட்டில் அதனுடைய மிகத்தூய்மையான, மிக மேன்மையான, மிக மகிழ்ச்சியான பயிற்சிமுறை கண்டடையப்படுகிறது. பரலோகத்தின் நியதிகள் வாழ்வில் முதன்மையானதாக ஆக்கப்படவேண்டும்; அறிவைப் பெறுவதில் அல்லது நுண்ணறிவை வளர்ப்பதில் எடுக்கப்படும் ஒவ்வொரு முன்னேற்றப் படியும் மானிடம் தெய்வீகத்துடன் ஒன்றுபடுதலுக்கேதுவான ஒரு படியாக இருக்கவேண்டும்.—Fundamentals of Christian Education, pp. 543, 544.

### கல்வியில் அவசியமானது

நமது வாலிபர்கள் இன்றைக்குப் பெறவேண்டிய, மேலோகப் பள்ளிக்கூடத்தின் உயர் வகுப்புகளுக்கு அவர்களைத் தகுதிப்படுத்தக்கூடிய மிகவும் அவசியமான கல்வி, உலகத்திற்குத் தேவசித்தத்தை வெளிப்படுத்துவது எப்படி என்று அவர்களுக்குப் போதிக்கிற கல்வியே.—Review and Herald, October 24, 1907.

### உன்னதமான கல்வி

தேவனுடைய சித்தத்தையும் வழியையும் கற்றுக்கொள்ளத் தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்கள் மரிக்குந்தன்மையுள்ள மனிதர்கள் பெறக்கூடியதான உன்னதமான கல்வியைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்களது அனுபவத்தை, உலகத்தின் போலிவாதங்களின்மீது அல்ல, மாறாக

நித்தியமாய் இருக்கும் நியதிகளின்மீது கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.— Counsels to Teachers, Parents, and Students, p. 36.

## 49

# கிறிஸ்தவக் கல்வியின் தேவை

மனதின் திறன்களை மனிதன் பழக்குவிக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தமது ஊழியர்கள் உலகத்தினரைவிட அதிக அறிவாற்றல் உள்ளவர்களாகவும் தெளிவாகப் புரிந்துகொள்ளும் சக்தியுடையவர்களாகவும் இருக்கவேண்டுமென்று அவர் திட்டமிடுகிறார். திறமையுள்ளவர்களாயும் நன்றாகக் காரியங்களை அறிந்தவர்களாயும் இருப்பதற்குப் பதிலாக, எத்தகைய அக்கறையுமின்றி கவனமில்லாதவர்களாக இருப்பவர்களிடம் அவர் சலிப்புடையவராக இருக்கிறார். நாம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும், முழு மனதோடும் தம்மில் அன்புகூரவேண்டுமென்று கர்த்தர் நம்மை வேண்டுகிறார். நாம் முழுமனதோடு நம்மைப் படைத்தவரை அறியவும் நேசிக்கவும்தக்கதாக நமது அறிவுத்திறனை அதின் முழுமையான செயலாற்றலுக்கு முன்னேற்றுவிக்கும்படியான கடமையை இது நம்மீது வைக்கிறது.

பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்படும்போது, எவ்வளவு முழுமையாக அறிவு பண்படுத்தப்படுகிறதோ, அவ்வளவு வல்லமையாக தேவனுடைய வேலையில் அதை உபயோகப்படுத்தமுடியும். தேவனுக்குத் தன்னை அர்ப்பணித்த, மற்றவர்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்ற குணமுள்ள, ஒரு படிப்பறிவற்ற மனிதனையுங்கூட தேவனால் தம்முடைய சேவைக்குப் பயன்படுத்தமுடியும்; அவன் பயன்படுத்தப்படுகிறான். ஆனால் அதே அர்ப்பணிப்பின் ஆவியோடுகூட முழுமையான கல்வியின் நன்மைகளைப் பெற்றிருப்பவர்கள், கிறிஸ்துவிற்காக மிக அதிகமான விரிவான ஊழியத்தில் ஈடுபடமுடியும். இவர்கள் சாதகமான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

### உயரிய சேவைக்கான பயிற்சி

பிறரிடம் நமது அறிவைப் பகிர்ந்துகொள்ளும் எண்ணத்தோடு, முடிந்தளவு அனைத்துக் கல்வியையும் நாம் முயன்று பெற்றுக்கொள்ளவேண்டு மென்று கர்த்தர் விரும்புகிறார். அவர்கள் தேவனுக்காக உழைக்கவோ அல்லது பேசவோ எங்கு எப்படி அழைக்கப்படுவார்கள் என்பதை எவரும் அறிய முடியாது. நமது பரமபிதா ஒருவரே மனுஷரை எவ்வாறாக பயன்படுத்த இயலும் என்பதை அறிவார். நம்முடைய பலமற்ற விசுவாசம்

புரிந்துகொள்ளாத அநேக வாய்ப்புகள் நமக்குமுன் இருக்கின்றன. அவசியப்பட்டால், அவருடைய வார்த்தையின் சத்தியத்தை, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தும்விதத்தில், உலகின் பெரிய அதிகாரிகளுக்கு முன்பாகவும் கொடுக்கும் விதத்தில் நமது மனங்கள் பயிற்றுவிக்கப் படவேண்டும். தேவனுக்கென்று உழைப்பதற்கேதுவாக, அறிவுப்பூர்வமாக நம்மை தகுதிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பத்தைக்கூட நாம் நழுவவிட்டு விடக்கூடாது.

## ஓர் முழுநிறைவான கல்வி

கல்வியறிவை அவசியமாகப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலையி லிருக்கும் வாலிபர்கள், அதை முயன்று பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஒரு திடமான, தீர்மானத்தோடு செயல்படவேண்டும். ஒரு வழி திறக்கும் என்று காத்திராமல், நீங்களே அதை உருவாக்கிக்கொள்ளவேண்டும். வாய்ப்பது சிறிய பணியாக இருந்தாலும் அதை பலமாகப் பற்றிப்பிடித்துக்கொள்ள வேண்டும். சிக்கனத்தைக் கடைபிடிக்கவேண்டும். தேவன் நமக்குக் கொடுத்தி ருக்கும் பொருளாதார ஆசீர்வாதத்தைக்கொண்டு நாம் உணவிற்கும் பொழுது போக்கிற்கும் மாத்திரமே செலவுசெய்தல் கூடாது. தேவன் எவ்வளவு திறமை யுள்ளவர்களாகவும், பயனுள்ளவர்களாகவும் இருக்கவேண்டுமென்று உங்களை அழைத்திருக்கிறாரோ அத்தகைய நிலைக்குத் தகுதியுடையவர் களாக வேண்டுமென்று திடமாகத் தீர்மானஞ்செய்யுங்கள். நீங்கள் எதைச் செய்ய வேண்டுமென்று பொறுப்பேற்றுக்கொண்டாலும் அந்தக் காரியத்தில் முழுமையான அறிவை மேம்படுத்துவதற்கு உங்களுக்கு எட்டக்கூடிய விதத்தில் கிடைக்கின்ற அனைத்து அனுகூலங்களையும் முயன்று பெற்றுக்கொள்ளுங்கள். புத்தகப் படிப்போடு கைத்தொழிலையும் சேர்த்து உண்மையான ஊக்கமான முயற்சியோடும் விழிப்புணர்வோடும் ஜெபத் தோடும், பரத்திநின்றுவரும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இது பலதரப்பட்ட முழுமையான கல்வியை உங்களுக்கு வழங்கும். இவ்வாறு குணத்தில் மேம்பட்டவர்களாகி, மற்றவர்களின் உள்ளங்களின்மீது ஒரு சிறந்த செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதன் பயனாக அவர்களை நீதியுள்ள பரிசுத்தமான பாதையில் வழிநடத்தும்படி உங்களுக்கு இந்தக் காரியம் வல்லமையைக் கொடுக்கும்.

நமக்கு சொந்தமாகக் கிடைக்கும் சந்தர்ப்பங்களிலும் சிறப்புரிமை களிலும் விழிப்புணர்வோடு இருந்திருப்போமானால், சுயகல்வி என்னும் பணியிலே மிகவும் ஏராளமான காரியங்களைச் சாதித்திருக்கலாம். மெய்யான கல்வி கல்லூரிகள் வழங்கும் கல்வியைக்காட்டிலும் மேன்மையானது. அறிவியல் சம்பந்தமான கல்வியை நாம் அலட்சியப்படுத்தக்கூடாது. ஆனால் அதேசமயத்தில், தேவனோடுகொள்ளும் ஒரு உயிராற்றல்

நிறைந்த தொடர்பின்மூலம் ஒரு மேலான—மிகவும் உயர்ந்த பயிற்சியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். பரிசுத்த வேதாகமத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, பரம ஆசிரியருடன் (கிறிஸ்துவுடன்) நாம் தொடர்புகொள்ள வேண்டும். தெய்வீக சத்தியத்தைத் தேடி, ஆராய்வதிலே வாழ்வின் கடினமான பிரச்சனைகளோடு போராடத்தக்கதாக மனம் பயிற்சியைப் பெற்று ஒரு ஒழுங்கான கட்டுப்பாட்டிற்குள் வரட்டும்.

## அறிவும் சுயக்கட்டுப்பாடும்

தங்களது உடன்மனிதர்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்று அதற்காக அறிவைப் பெற்றுக்கொள்ள பசியோடிருப்பவர்கள், தாங்களும் தேவனிட மிருந்து தங்களுக்காக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவரது வசனத்தை ஆராய்ந்து கற்பதின்மூலம் அவர்களது மனதின் வல்லமைகள் ஊக்கமான செயல்முறைகளில் ஈடுபடும்வண்ணம் விழிப்படைகிறது. மனதின் திறன்கள் முன்னேற்றமடைந்து பெருகி, உள்ளம் சக்தியையும், திறமையையும் பெற்றுக்கொள்கிறது.—Christ's Object Lessons, pp. 334, 335.

தேவனுடைய ஊழியக்காரனாக இருக்கவேண்டுமென்று வாஞ்சிக் கின்ற ஒவ்வொருவரும் சுயக்கட்டுப்பாட்டை செயற்படுத்தவேண்டும். சுயக் கட்டுப்பாட்டை பயிற்சியில் வைத்திருப்பவர்கள் பேச்சாற்றல் உள்ளவர்களைப் பார்க்கிலும் அல்லது மிகவும் சிறப்பான தாலந்துகளைப் பெற்றிருப்பவர்களைப் பார்க்கிலும் காரியங்களைச் சாதிக்கமுடியும்.

## பெற்றோர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல்

சரியானது என்பதால் சரியானதைச் செய்வதே எப்பொழுதும் சிறந்ததும் பாதுகாப்பானதும் ஆகும். இப்பொழுது நீங்கள் கொஞ்சம் சீரிய சிந்தனை செய்யமாட்டீர்களா? சரியான செயலுக்குச் சரியான சிந்தனையே அடித்தளமாகும். உங்களைக் குறித்து உங்கள் பெற்றோர்கள் கொண்டிருக்கிற எதிர்பார்ப்புகளுக்கேற்ப மறுபதில் கொடுப்பதற்கும், சிறந்து விளங்குவதற்கான உண்மைமிகு முயற்சிகளை நீங்கள் செய்வதற்கும், உங்களுக்காகச் செலவு செய்யப்படும் பணம் தவறான விதத்தில் பயன்படுத்தப்படாதபடிக்கு நீங்க்ள பார்த்துக்கொள்வதற்கும் உங்கள் சிந்தையைத் தயார்நிலையில் வைத்துக்கொள்ளுங்கள். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களால் எடுக்கப்படும் முயற்சிகளுடன் ஒத்துழைப்பதற்கு ஒரு தீர்மானிக்கப்பட்ட நோக்கத்தைக் கொண்டிருங்கள்; குணம் மற்றும் அறிவின் உயர்ந்த தராதரத்தை எட்டிப் பிடியுங்கள். உங்களை நம்புமளவுக்கு உங்களை நேசிக்கிறவர்களுக்கு மனச்கசப்பூட்டாதிருக்கத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். சரியானதைச் செய்வதே வீரம் ஆகும், அது சரியானது என்பதால் அதைச் செய்வதற்கு

நீங்கள் நாடினால், சரியானதைச் செய்வதற்கு இயேசு உங்களுக்கு உதவுவார்.—Fundamentals of Christian Education, p. 248.

# 50

# நித்தியத்திற்கான கல்வி

"வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்த தினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்" (1 யோவான் 2:14) என்று யோவான் எழுதுகிறார். "மனத்தெளிவுள்ளவர்களாயிருக்கும்படி" வாலிபர்களுக்குக் கட்டளையிடுமாறு தீமோத்தேயுவுக்குப் பவுல் புத்திசொல்லுகிறார். சேனைகளின் கர்த்தருக்கு உண்மையும், உறுதியுமான ஊழியக்காரனாயிருந்த தானியேலைப் போன்றிருப்பதற்கு உங்கள் ஆத்துமாவை உயர்த்துங்கள். உங்களது கால்களின் பாதையை நன்றாய்ச் சிந்தித்துப் பாருங்கள்; ஏனெனில் நீங்கள் பரிசுத்த பூமியில் நின்றுகொண்டிருக்கிறீர்கள், தேவதூதர்கள் உங்களைச் சூழ்ந்திருக்கிறார்கள்.

கல்வியெனும் ஏணியின் உச்சத்திலுள்ள சுற்றுமட்டும் நீங்கள் ஏறவேண்டும் என்று நினைப்பது நியாயமானதுதான். தத்துவமும், சரித்திரமும் முக்கியமான பாடங்களே; ஆனால் உங்களுடைய சாதனைகளை தேவனுடைய மகிமைக்காகவும், மனிதகுலத்தின் நன்மைக்காகவும் நீங்கள் பயன்படுத்தாவிட்டால், உங்கள் நேரம் மற்றும் பணத்தியாகத்தினால் ஒரு பயனும் ஏற்படாது. அறிவியலைப் பற்றிய அறிவானது உன்னதமான நோக்கங்களை அடைவதற்கு ஒரு படிக்கல்லாக இராவிடில், அதனால் பயனேதும் இல்லை.

நித்தியம்போன்று நீடித்திருக்கிறதான அறிவை அளித்திடாத கல்வி நோக்கமற்றதாகும். பரலோகத்தையும், எதிர்கால, அழியா வாழ்வையும் உங்களுக்கு முன்பாக நீங்கள் வைக்காவிட்டால், உங்களது சாதனைகள் நிரந்தரமான மதிப்புள்ளவைகளாய் இராது. வாரத்தின் ஒரு நாளில் மட்டுமல்ல, ஆனால் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் இயேசுவானவர் உங்கள் ஆசிரியராக இருப்பாரானால், இலக்கியத் தொடர்பான உங்களது முயற்சிகளில் அவரது புன்சிரிப்பை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.—Fundamentals of Christian Education, pp. 191, 192.

51

# ஓர் நடைமுறைப் பயிற்சி

உபயோகமான கைவேலை சுவிசேஷத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. மேகஸ்தம்பத்தினால் மூடிமறைக்கப்பட்டிருந்த மாபெரும் ஆசிரியர், ஒவ்வொரு வாலிபனுக்கும் ஏதாவதொரு பயனுள்ள தொழில் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்று இஸ்ரவேலுக்குக் கட்டளைகளை வழங்கினார். ஆகையால் யூதர்களில் வளமை உள்ளோரும், வறுமைமிகு வகுப்பாரும், தங்கள் குமாரர், குமாரத்திகளுக்கு ஏதோ ஒரு பயன்மிகு தொழிலைக் கற்றுக்கொடுப்பது வழக்கமாயிருந்தது; எதிரிடையான சூழ்நிலைகள் எழும்போது, அவர்கள் பிறரைச் சார்ந்திராமல், தங்களது தேவைகளைச் சந்தித்துக்கொள்ளத் திராணியுள்ளவர்களாக இருப்பார்கள். இலக்கிய ரீதியான பாடங்கள் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டாலும், ஏதோ ஒரு கைத்தொழிலிலும் அவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டியிருந்தது. இது அவர்களது கல்வியின் இன்றியமையாத ஒரு பகுதியாக மதிக்கப்பட்டிருந்தது.

### சமச்சீரான கல்வி

இஸ்ரவேலரின் நாட்களில் நடந்ததுபோல, இப்பொழுதும், நடைமுறை வாழ்வின் கடமைகள் குறித்து ஒவ்வொரு வாலிபரும் போதிக்கப்படவேண்டும். தேவை ஏற்படுமாயின், அவன் தனது பிழைப்பை நடத்திக்கொள்வதற்கேதுவாக ஏதாவதொரு கைத்தொழில் பிரிவில் ஒவ்வொருவரும் அறிவை அடைந் திருக்கவேண்டும். வாழ்வின் நிலைமாற்றங்களுக்கெதிரான ஒரு பாதுகாப்பாக மட்டுமல்ல, சரீர, மன மற்றும் சன்மார்க்க வளர்ச்சியின்மீது அது ஏற்படுத்துகிற விளைவினிமித்தமும், அது அவசியமானதாக இருக்கிறது. வாழ்வாதாரத்துக்காக ஒரு நபர் கைத்தொழிலை நாடவேண்டிய தேவை ஒருபோதும் இராது என்ற நிச்சயம் இருந்தாலும்கூட, வேலை செய்யும்படி அந்நபருக்குக் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். சரீரரீதியான பயிற்சியின்றி, ஒருவரும் ஆரோக்கியமான உடலமைப்பையும், திடமான உடல்நலத்தையும் பெற்றுக்கொள்ள முடியாது; பலமான, உயிரோட்டமுடைய சிந்தையையும், ஓர் மேன்மையான குணத்தையும் தக்கவைத்துக்கொள்வதற்கு நன்முறைப் படுத்தப்பட்ட உழைப்பு எனும் ஒழுங்கு அவசியத்தில் குறைந்ததொன்றும் அல்ல.

உடல் உழைப்பு எனும் அறிவைப் பெறாமல், புத்தகஅறிவைப் பெற்றிருக்கிற மாணவர்கள் ஒரு சமச்சீரான கல்வியென அதை உரிமை

பாராட்ட இயலாது. பலதரப்பட்ட தொழில்தொடர்பான துறைகளில் ஈடுபடுத்தியிருந்திருக்க வேண்டிய ஆற்றல்கள் அசட்டைசெய்யப்பட்டிருக்கின்றன. மூளையைப் பயன்படுத்துதல் மட்டுமே கல்வி ஆகாது. ஒவ்வொரு வாலிபருக்கும் அவசியப்படுகிற பயிற்சியின் ஒரு பகுதியே சரீரரீதியான உழைப்பு ஆகும். பயனுள்ள உழைப்பில் ஈடுபடுவதற்கு மாணவன் மாணவன் கற்பிக்கப்படாவிட்டால், கல்வியின் மிக முக்கியமான ஒரு பகுதி குறைவுபடுகிறது.

முழு உயிருருவுக்குமான ஆரோக்கியமிக்கப் பயிற்சியானது ஓர் பரந்த, அகன்று விரிந்த கல்வியைக் கொடுக்கிறது. ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு நாளின் ஒரு பகுதியை சுறுசுறுப்பான உழைப்புக்கென்று ஒதுக்கிவிட வேண்டும். இவ்விதமாக கடின உழைப்பின் பழக்கங்கள் உருவாகும் மற்றும் தன் கையையே தான் நம்பியிருக்கும் குணம் ஊக்குவிக்கப்படும்; அதே சமயம் பெரும்பாலும் சோம்பேறித்தனத்தின் விளைவாக இருக்கிற இழிவுண்டாக்கும் செயல்பாடுகள் மற்றும் அநேகத் தீமையிலிருந்து வாலிபர்கள் காக்கப்படுவார்கள். இவையனைத்தும் கல்வியின் பிரதான நோக்கத்துடன் தொடர்புடையதாயிருக்கிறது; சுறுசுறுப்பையும், ஜாக்கிரதையும், தூய்மையையும் ஊக்குவிப்பதன்மூலம், சிருஷ்டிகருடன் நாம் இசைவுள்ளவர்களாகிறாம்.

### பயனுள்ள வேலையின் நன்மை

விளையாட்டாக அல்லது வெறும்பயிற்சியாக எடுத்துக்கொள்ளப்படும் உடற்பயிற்சியிலிருந்து மாபெரும் நன்மையேதும் பெறப்படுகிறதில்லை. மாசுபடாத காற்றில் இருப்பதாலும், தசைகளின் பயிற்சியினாலும் ஏதோ நன்மை இருக்கவே செய்கிறது; ஆனால் அதே அளவு ஆற்றலைப் பயனுள்ள வேலையைச் செய்வதற்காக ஒதுக்கினால், விளையும் நன்மை மிகப்பெரிதாயிருக்கும். திருப்திகரமான ஓர் உணர்வு உண்டாகும்; அப்படிப்பட்ட பயிற்சியானது உதவிகரமாயிருப்பதறான உணர்வையும், கடமையும் நன்றாய்ச் செய்ததற்கான மனச்சாட்சியின் அங்கீகாரத்தையும் அதனுடன் சுமந்துவரும்.

மாணவர்கள் கற்றுத்தேர்ந்த திறமையுடன் நம் பள்ளிகளிலிருந்து வெளியேறிச்செல்ல வேண்டும். தங்களது சொந்த ஆதாரங்களைத் துறக்க நேரிடும்போது, அவர்கள் பயன்படுத்தக்கூடியதான, வாழ்வின் வெற்றிக்கு அத்தியாவசியமான அறிவு அவர்களுக்கு இருக்கும், ஜாக்கிரதையுள்ள படிப்பு அவசியமே, அதுபோல ஜாக்கிரதையுள்ள கடின உழைப்பும்தான். விளையாட்டு அத்தியாவசியமானது அல்ல. சரீரரீதியான சக்திகளைக் கேளிக்கைக்கு ஈடுபடுத்துவது நல்ல சமநிலையிலுள்ள சிந்தைக்கு மிகவும்

உகந்ததல்ல. அளவுக்கதிகமாகச் செய்வதற்குப் படிப்படியாக வழிநடத்தும் உடற்பயிற்சிக்குரிய நேரம் கிறிஸ்துவுக்குரிய காரியங்களைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டால், உழைப்பாளர்மீது தேவாசீர்வாதம் வந்தமரும்.

மனபாரத்துடன் இணைந்த உடல் உழைப்பினால் நடைமுறை வாழ்வுக்கான ஒழுங்குமுறைப் பயிற்சியானது பெறப்படுகிறது; மனிதர்கள் செய்வதற்கென்று தேவன் திட்டமிட்டிருக்கிற வேலையைச் செய்துமுடிப்பதற்கு மனதையும், சரீரத்தையும் அது சிறந்தமுறையில் தகுதிப்படுத்துகிறது என்றெண்ணும்போது இனிக்கிறது. நடைமுறை வாழ்வின் கடமைகளை எப்படிச் செய்துமுடிப்பது என்பதை வாலிபர்கள் எவ்வளவுக்கு நேர்த்தியாகப் புரிந்துகொள்கிறார்களோ, அனுதினமும் பிறருக்கென்று பயன்படுவதில் அவர்களது சந்தோஷமும் அவ்வளவுக்கதிகமான இருக்கும். பயனுள்ள உழைப்பபை மகிழ்வுடன் செய்வதற்குக் கற்பிக்கப்பட்ட மனம் விரிவடைகிறது; பயிற்சி மற்றும் கட்டுப்பாட்டின் மூலமாகப் பயன்பாட்டிற்கென்று அது தகுதிப்படுத்தப்படுகிறது; ஏனெனில் அது அத்தியாவசியமான அறிவை அடைந்து, அதை உடையோரைப் பிறருக்கு ஆசீர்வாதமாக்கி விடுகிறது.

கிறிஸ்துவின் வாழ்வில் விளையாட்டிற்கும், கேளிக்கைக்கும் அவர் நேரம் செலவிட்டதாக ஒரு சம்பவத்தையாகிலும் என்னால் காணமுடியவில்லை. நிகழ்கால மற்றும் எதிர்கால வாழ்வுக்கான மாபெரும் ஆசிரியராக அவர் இருந்தார்; ஆயினும் உடலுக்குரிய பயிற்சியை அடைவதற்கேதுவாகக் கேளிக்கையில் ஈடுபடுமாறு அவர் தமது சீஷர்களுக்குப் போதித்த ஒரு சம்பவத்தையாகிலும் என்னால் கண்டுபிடிக்க இயலவில்லை...

## சமைப்பது எப்படி என்று கற்றுக்கொள்ளுங்கள்

வீணாக்குதலின்றிச் சமைப்பது எப்படி என்பதையும், மாமிச உணவுடன் சம்பந்தப்பட்ட அனைத்தையும் விலக்கிவிடுவதற்கும் வாலிப ஆண்கள் மற்றும் வாலிபப் பெண்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இறைச்சியானது எந்த அளவிலும் கலந்திருக்கிற உணவுப் பண்டங்களை ஆயத்தம் பண்ணுவதற்கு ஊக்கம் அளிக்கப்படாதிருப்பதாக. ஏனெனில் இது ஆரோக்கிய சீர்திருத்தத்தின் தூய்மையைவிடவும், எகிப்தின் அறியாமை மற்றும் அந்தகாரத்தையே சுட்டிக்காட்டுகிறது.

குறிப்பாக எப்படிச் சமைக்கவேண்டுமென்று பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும. ஒரு பெண்ணுக்குரிய கல்வியினல் இதைப்போல மிக முக்கியமான பகுதி வேறென்னவாக இருக்கும்? அவளது வாழ்வின் சந்தர்ப்பங்கள் எதுவாயிருந்தாலும் சரி, நடைமுறைப் பயன்பாட்டிற்கு அவள் கொண்டுவரவேண்டிய அறிவு இதிலே விளங்கும்...

### பணிக்களத்தில்

நடைமுறை வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் பய்பாடு அடைதலானது, நமது வாலிபர்கள் அயல்நாடுகளுக்குச் செல்வதற்குப் பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியேறிய பிறகு அவர்களைப் பயனுடையவர்களாக்கும். அப்பொழுது அவர்கள் தங்களுக்காகச் சமைப்பதற்கும், தைப்பதற்கும், அல்லது தங்களது குடியிருப்புகளைக் கட்டிக்கொள்வதற்கும், தாங்கள் போகிற இடத்திலுள்ள ஜனங்களைச் சார்ந்திருக்க வேண்டியதிருக்காது. சிறந்த உத்திகளுடன் உழைத்து சிறந்த விளைவுகளை உருவாக்குவது எப்படி என்று அறியாதிருக்கிறவர்களுக்கு கற்றுக்கொடுக்க முடியும் என்பதைக் காட்டுவார்களானால், அவர்கள் மிகவும் செல்வாக்குடையவர்களாய் விளங்குவார்கள். அப்படிப்பட்ட மிஷனெரிகளைத் தாங்குவதற்கு ஒரு சிறிதளவு தொகையே தேவைப்படும், ஏனெனில் அவர்கள் தங்களுடைய படிப்புடன் சேர்ந்து, தங்களது உடல்ரீதியான சக்திகளைப் பயனுள்ள, நடைமுறை உழைப்பிற்கு மிகச் சிறந்த விதத்தில் உட்படுத்தியிருக்கின்றனர். வருவாயைப் பெறுவதற்குக் கடினமான இடத்தில் இது பாராட்டைப் பெறும். உழைப்பது எப்படி என்று போதிக்கிற ஆசிரியர்களாக மிஷனெரிகள் மாறமுடியும் என்பதை அவர்கள் வெளிப்படுத்துவார்கள். அவர்கள் எங்கு சென்றாலும் சரி, இந்த வரிசையில் அவர்கள் பெற்றிருக்கிற அனைத்தும் அவர்கள் நிற்பதற்கான இடத்தைக் கொடுக்கும்.—Counsels to Teachers, Parents, and Students, pp. 307-314.

## 52

# மாணவர்களின் வாய்மை தவறாமை

தேவனை நேசித்து, சத்தியத்துக்கு கீழ்பப்டிவதாகக் கூறிக்கொள்ளும் மாணவர்கள், கல்லூரியிலோ, தங்களுடைய விடுதியறைகளிலோ அல்லது அவர்கள் எங்கிருந்தாலும் சரி, இயேசுவுக்காக நிற்கவும், சோதனைகளின் மத்தியில் அசையாமல் நிலைத்திருப்பதற்கு அவர்களை ஊக்கப்படுத்தக்கூடிய அளவுக்கு ஆன்மீகக் கொள்கையின் பெலத்தையும், சுயக்கட்டுப்பாட்டையும் உடையவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய வீட்டில் வெறுமனே உடுத்திக்கொள்ளுகிற ஓர் மேலங்கிபோல் ஆன்மீகமானது இருக்கக்கூடாது; ஆன்மீக நியதிகள் முழுவாழ்விலும் தனித்தன்மையுடன் விளங்கவேண்டும்.

## குணமும் நடத்தையும்

ஜீவ ஊற்றில் பானம்பண்ணுகிறவர்கள், உலகத்தாரைப்போல மாற்றத்துக்கும், சிற்றின்பத்துக்கும் ஏக்கமுள்ள வாஞ்சையை வெளிக்காட்ட மாட்டார்கள். அவர்கள் தங்களது குழப்பங்களையும், பாரங்களையும் அனுதினமும் இயேசுவின் பாதங்களில் வைப்பதினால் அவரில் கண்டடையக் கூடிய மகிழ்ச்சியையும், சமாதானமும், இளைப்பாறுதலும் அவர்களது நடத்தை மற்றும் குணத்தில் வெளிப்படும். கீழ்ப்படிதல் மற்றும் கடமையில் பாதையில் திருப்தியும், சந்தோஷமும்கூட உண்டு என்பதை அவர்கள் காட்டுவார்கள். அப்படிப்பட்டவர்கள் முழுப் பள்ளிக்கூடத்திலும் பேசப்படக்கூடிய ஒரு செல்வாக்கைத் தங்களது சகமாணவர்கள்மீது செயற்படுத்துவார்கள்...

பள்ளிக்கூடத்தில் ஒரு அக்கறைமிக்க, மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட, உண்மையுள்ள வாலிபன் விலைமதிப்பிடமுடியாத பொக்கிஷமாக இருக்கிறான். பரலோகத்தின் தூதர்கள் அவனை அன்புடன் உற்றுநோக்குகின்றனர், ஒவ்வொரு நீதியின் செயலும், எதிர்க்கப்பட்ட ஒவ்வொரு சோதனையும், மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு தீமையும் பரலோகப் பதிவேட்டில் பதிவுசெய்யப்படுகிறது. நித்திய ஜீவனை அவன் பற்றிக்கொள்வதற்கு ஏதுவாக, வருங்காலத்திற்கெதிராக ஒரு நல்ல அஸ்திபாரத்தை அவன் அமைத்துக் கொண்டிருக்கிறான்.

தேவன் தமது பணியை முன்னேற்றிச் செல்வதற்கான ஒரு வழிவகையாக ஏற்படுத்தியிருக்கிற நிறுவனங்களைப் பாதுகாப்பதும், நிலைத்திருக்கச் செய்வதும் பெருமளவில் கிறிஸ்தவ வாலிபர்களையே சார்ந்திருக்கிறது. அதிமுக்கிய விளைவுகளுக்காக மானிடத் தலைமுறையினரைச் சார்ந்திருந்த ஒரு காலகட்டம் ஒருபோதும் இருந்ததில்லை. அப்படியானால் தேவன் வாலிபர்களைத் தமது கருவிகளாகப் பயன்படுத்தும்படி, இம்மாபெரும் பணிக்காக அவர்கள் தகுதிப்பட வேண்டியது எத்தனை அவசியமாயிருக்கிறது! அவர்களது சிருஷ்டிகர் மற்ற அவர்கள் தகுதிப்பட வேண்டியது எத்தனை அவசியமாயிருக்கிறது! அவர்களது சிருஷ்டிகர் மற்ற அனைத்தைவிடவும் மிகவும் முக்கியம்வாய்ந்த உரிமை கோருதல்களை அவர்கள்மீது வைத்திருக்கிறார்....

## பள்ளிக்கூட ஒழுங்குமறைப் பயிற்சியின் மதிப்பு

உலகத்தின் இக்காலத்து வாலிபர்களில் அநேகரது முரட்டாட்டமான, மதியீனமான குணம் சோர்வுறச் செய்கிறது. நமது நிறுவனங்களின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதால், சமுதாயத்தில் தங்களது அந்தஸ்தை மேம்படுத்தி, குணத்தை உயர்த்துகிற, மனதை உயர்தரமாக்குகிற,

தங்களது மகிழ்ச்சியை அதிகரிக்கிற காரியத்தை மட்டுமே தாங்கள் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை வாலிபர்கள் காண்பார்களானால், நியாயமான விதிகள் மற்றும் முழுமையான கோரிக்கைகளுக்கு எதிராகக் கலகம் செய்யவோ, இந்த நிறுவனங்களுக்கெதிரான சந்தேகம் மற்றும் தப்பெண்ணத்தை உருவாக்குவதில் ஈடுபடவோ மாட்டார்கள்.

ஆற்றலோடும், விசுவாசத்தோடும் நமது வாலிபர்கள் தங்கள் மீதிருக்கிற கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்; இதுவே வெற்றிக்கான உத்தரவாதமாக இருக்கும். இவ்வாழ்விற்குரிய கடமைகளில் ஒருபோதும் வெற்றி கண்டிராத வாலிபர்கள் அதேபோல மேலுலகுக்குரிய கடமைகளில் ஈடுபடுவதற்கும் ஆயத்தமற்றவர்களாகவே இருப்பார்கள். நெருக்கடியின் மூலமாக, ஏமாற்றத்தின் மூலமாக, சுயத்தைக் கடுமையாக ஒடுக்குதல் மூலமாக, ஊக்கமான ஜெபத்தின் மூலமாக மட்டுமே ஓர் ஆன்மீக அனுபவம் அடையப்படுகிறது. பரலோகத்துக்குரிய அடிகளை நேரத்திற்கு ஒன்றாகத்தான் எடுத்துவைக்கவேண்டும்; வளர்ச்சியின் ஒவ்வொரு படியும் அடுத்த படிக்கான பெலத்தைக் கொடுக்கும்.—Counsels to Teachers, Parents, and Students, pp, 98-100.

## 53

# மாணவர்களின் வாய்ப்புவளங்கள்

மாணவர்களே, உங்கள் ஆசிரியர்களுடன் ஒத்துழையுங்கள். இதை நீங்கள் செய்தால், அவர்களுக்கு நம்பிக்கையும், தைரியமும் அளிக்கிறீர்கள். நீங்கள் அவர்களுக்கு உதவுகிறீர்கள், அதே சமயம் முன்னேற்றத்துக்கென உங்களுக்கு நீங்கள் உதவிக்கொள்கிறீர்கள். உங்கள் ஆசிரியர்கள் அனுகூல நிலையில் நிற்கிறீர்களா, அவர்களது பணி ஒப்புக்கொள்ளப்பட்ட வெற்றியா என்பது பெருமளவில் உங்களைச் சார்ந்தே இருக்கிறது என்பதை நினைவிற்கொள்ளுங்கள். மேலான அர்த்தத்தின்படி பார்த்தால், ஆசிரியர்களுக்குப்பின்னே தேவனையும், அவருடன் ஒத்துழைக்கிற ஆசிரியரையும் கண்டு கற்றுக்கொள்கிறவர்களாக நீங்கள் இருக்கவேண்டும்.

சாதனைக்கான உங்களது வாய்ப்புவளங்கள் வேகமாகக் கடந்துபோய்க் கொண்டிருக்கின்றன. சுயத்தைப் பிரியப்படுத்துவதில் செலவிடுவதற்கு உங்களுக்குக் காலமே இல்லை. வெற்றிபெற நீங்கள் அக்கறையுடன் போராடினால் மட்டுமே மெய்யான மகிழ்ச்சியை நீங்கள் அடைவீர்கள். பள்ளிக்கூடத்தில் நீங்கள் செலவிடும் காலத்தில் உங்களுக்கு அளிக்கப்படும்

வாய்ப்புவளங்கள் விலையேறப்பெற்றவையாகும். கூடுமானவரைக்கும் உங்களது மாணவ வாழ்வைக் குறைபாடற்றதாக்கிக் கொள்ளுங்கள். இவ்வழியாக நீங்கள் ஒருமுறைமட்டுமே நீங்கள் கடந்துசெல்வீர்கள். உங்களது வேலைப்பாடு வெற்றியாக அல்லது தோல்வியாக இருக்குமா என்பது உங்களிடமே விட்டுவிடப்பட்டிருக்கிறது. வேதத்தின் அறிவைப் பெறுவதில் நீங்கள் வெற்றிகாணும்போது, பகிர்ந்தளிப்பதற்கான பொக்கிஷங்களை நீங்கள் சேர்த்துவைக்கிறீர்கள்.

## பிறருக்கு உதவுதல்

பின்தங்கியுள்ள சக மாணவன் உங்களுக்கு இருந்தால், அவன் புரிந்துகொள்ளாத பாடத்தை அவனுக்கு விளக்கிக் காட்டுங்கள். உங்களுடைய புரிதலுக்கும் இது உதவியாயிருக்கும். எளிய வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள்; புரிந்துகொள்வதற்கு இலகுவான, தெளிவான வார்த்தைகளில் உங்கள் கருத்துகளைக் கூறிடுங்கள்.

உங்கள் சக மாணவனுக்கு உதவுவதினால், உங்கள் ஆசிரியர்களுக்கு உதவுகிறீர்கள். வெளிப்படையான விதத்தில் பெரும்பாலும் மந்தமான மனதையுடைய ஒரு மாணவன், ஆசிரியரைவிடவும் ஒரு சகமாணவனிடமிருந்து வரும் கருத்துகளை வெகுவிரைவில் விளங்கிக்கொள்ளுவான். கிறிஸ்து வானவர் பரிந்துரைக்கிற ஒத்துழைப்பும் இதுவேயாம். பின்தங்கியுள்ள ஒருவனுக்கு உதவுவதற்கு உங்களுக்குதவும்படி, மாபெரும் ஆசிரியர் உங்கள் அருகே நிற்கிறார்.

தேவனுடைய வார்த்தையின் ஆச்சரியமான சத்தியங்களை எளியோருக்கும், அறியாதோருக்கும் எடுத்துச்சொல்லும் வாய்ப்பு உங்களது பள்ளிவாழ்வில் உங்களுக்கு இருக்கலாம். அப்படிப்பட்ட ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இவ்விதமாகச் செலவழிக்கப்படும் ஒவ்வொரு நொடியையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்.—Testimonies for the Church, Vol. 7, pp. 275, 276.

## அடிப்படைக் கொள்கைகளை முற்றும் கற்றுத்தேர்ந்திருத்தல்

தாழ்ந்த ஓர் தரத்துடன் திருப்தியடைந்து ஒருபோதும் அமர்ந்துவிடாதீர்கள். பள்ளியில் படிப்பதனால், ஒரு மேன்மையான, பரிசுத்தமான நோக்கம் உங்கள் கண்முன் இருப்பததை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தின் ஏதோ ஒரு பகுதியில் சேவை செய்வதற்கென உங்களைத் தகுதியாக்கிக் கொள்ளும் வாஞ்சை உங்களுக்கு இருப்பதால் புறப்பட்டுப் போங்கள். இந்நோக்கத்தை அடைவதற்கு உங்களால் இயன்ற அனைத்தையும் செய்திடுங்கள்.

உங்களுக்காக வேறு எவரும் செய்கிறதைவிடவும் அதிகமாக உங்களுக்கு நீங்களே செய்துகொள்ளலாம். உங்களுக்காக செய்யவேண்டிய அனைத்தையும் நீங்களே செய்துகொள்வீர்களானால், முதல்வர் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து எப்படிப்பட்ட ஓர் பாரத்தை நீங்கள் விலக்கிவைப்பீர்கள்!

இலக்கிய அறிவின் உயரிய பிரிவுகளைப் படிப்பதற்கு முயற்சிக்கும் முன்பாக, ஆங்கில இலக்கணத்தின் எளிய விதிகளை நீங்கள் முற்றும் புரிந்துகொள்வதையும், சரியாக வாசிக்க, எழுத, உச்சரிக்கக் கற்றுக் கொண்டிருப்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்....

உங்களது பிற்கால வாழ்க்கையில் உங்களுக்கு அற்பப்பிரயோஜனமாக இருக்கப்போகிறதைக் கற்பதில் நேரத்தைச் செலவிடாதிருங்கள். பண்டைய கிரேக்க, ரோமக் கலை சார்ந்த அறிவை அடைவதற்குப் பதிலாக, ஆங்கில மொழியைச் சரியாகப் பேசுவதற்கு முதலில் கற்றுக்கொள்ளுங்கள். கணக்கு வைப்பியலைச் செய்வது எப்படியென்று கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் சரி, நீங்கள் பயனுள்ளவராக இருக்க உதவும் பாடம் சம்பந்தப்பட்ட துறைகளில் அறிவைப் பெற்றுக்கொள்ளுங்கள்.—Counsels to Teachers, Parents, and Students, pp. 218, 219.

## 54

# சேவைக்கான பயிற்சி

தேவன் அருளியிருக்கிற வெளிச்சத்தின்படி சிந்தித்தல், “ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?” என்று விசாரிக்கும் வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள் இருபதுபேர்கூட இல்லை என்பது திகைக்கச் செய்கிறது. ஒரு வாலிபன் தன்னையே ஊழியத்துக்கென்று ஒப்படைக்கத் தீர்மானிக்காவிட்டால், தேவனுடைய பணிக்காக அவனைத் தகுதிப்படுத்துவதற்கு எந்த விசேஷித்த முயற்சியும் அவசியப்படாது என்று எண்ணிக்கொள்வது ஆபத்தான தவறு ஆகும். உங்களது அழைப்பு எதுவாயிருந்தாலும் சரி, ஜாக்கிரதையுள்ள படிப்பினால் உங்கள் திறமைகளை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நல்லொழுங்கும், நுண்ணறிவும் உள்ளவர்களாவதற்குப் பரலோகம் அனுப்புகிற வாய்ப்புவளங்கள் எனும் ஆசீர்வாதங்களை உணர்ந்துபோற்றிட வாலிப ஆண்களும், பெண்களும் வலியுறுத்தப்பட வேண்டும். சிறந்த அறிவைப் பகிர்ந்தளிக்கும் நோக்கத்திற்காக நிறுவப்பட்டிருக்கிற பள்ளிக் கூடங்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கல்வி கற்கும்

காரியத்தில் கவனக்குறைவாகவும், சோம்பலாகவும் இருப்பது பாவமாகும். காலம் குறுகினது, ஆகையால், பூமிக்குரிய சரித்திரத்தின் காட்சிகளை நிறைவுசெய்திடக் கர்த்தர் சீக்கிரமாக வர இருக்கிறபடியால், தற்போதைய வாய்ப்பு வளங்களையும், சிலாக்கியங்களையும் பயன்படுத்திக் கொள்கிற மாபெரிய கட்டாய நிலை இருக்கிறது.

## தேவனுக்காகத் திறமையைத் தத்தம் செய்யுங்கள்

வாலிப ஆண்களும், வாலிபப் பெண்களும் நமது பள்ளிகளில் அறிவையும் ஒழுக்கத்தையும் அடைந்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புமிக்க வழியில் தங்களை வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் தேவனுக்காகத் தங்களது திறமையைத் தத்தம்செய்து, தவறான உபதேசத்துக்கெதிராக அவர்கள் காக்கப்படும்படிக்கும், துன்மார்க்கரின் அசத்தியத்தினால் பாதை தவறி நடத்தப்படாதபடிக்கும், சுறுசுறுப்புமிக்க வேத மாணாக்கர்களாக மாறவேண்டும்; ஏனெனில் சுறுசுறுப்புமிக்க வேத ஆராய்ச்சியினாலேயே சத்தியமாவது என்ன என்ற அறிவை நாம் அடைகிறோம். நாம் ஏற்கனவே அறிந்த சத்தியத்தைக் கைக்கொள்வதனால், பரிசுத்த வேத வாக்கியங் களிலிருந்து கூடுதல் வெளிச்சம் நம்மீது பிரகாசிக்கும்....

தேவனுக்கென்று உண்மையாய்த் தத்தம் செய்கிறவர்கள், வெறும் பிழைப்புக்கான நோக்கத்தோடு உலகரீதியான தொழிலில் ஈடுபடுவதற்கு மனிதர்களை வழிநடத்துகிற அதே உள்நோக்கத்தினால் தூண்டப்பட்டவர் களாக, ஊழியத்தில் நுழையமாட்டார்கள்; மாறாக, எந்த உலகியல்ரீதியான காரணமும் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அனுமதியாமல், தேவனுடைய செயல்நோக்கம் புனிதமானது என்று உணர்ந்தவர்களாக அவர்கள் ஊழியத்தில் நுழைவார்கள்.

## வருங்கால நிகழ்வுகளுக்கு ஆயத்தமாகுதல்

உலகம் எச்சரிக்கப்பட வேண்டியதிருக்கிறது, சத்தியத்தைக் குறித்த மேலோட்டமான அறிவினால் எந்த ஆத்துமாவும் திருப்தியடைந்துவிடக் கூடாது. எந்தப் பொறுப்புக்கு நீங்கள் அழைக்கப்படுவீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது. சத்தியம்குறித்த உங்கள் சாட்சியைக் கொடுப்பதற்கு நீங்கள் எங்கே அழைக்கப்படுவீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது. அநேகர் சட்ட மன்றங்களில் நிற்க வேண்டியதிருக்கும்; சிலர் தங்களது விசுவாசத்திற்காகப் பதிலளிக்கும் வகையில், பூமியில் கல்விமான்களுக்கு முன்பாகவும், இராஜாக்களுக்கு முன்பாகவும் நிற்க வேண்டியதிருக்கும்.

சத்தியம் குறித்த மேலோட்டமான புரிதலை மட்டுமே பெற்றிருப்பவர்கள் வேத வாக்கியங்களுக்குத் தெளிவாக விளக்கமளிக்கவோ, தங்களது

விசுவாசத்திற்கான நிச்சயமான காரண காரியங்களைக் கொடுக்கவோ திராணியற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் குழம்பிப் போவார்கள், வெட்கப்படாத ஊழியக்காரர்களாக இருக்கமாட்டார்கள். புனிதமான பிரசங்கபீடத்தில் தான் பிரசங்கிக்க வேண்டியதில்லை என்பதால் படிப்பதற் கான அவசியம் தனக்கு இல்லையென்று ஒருவரும் எண்ணிக் கொள்ளா திருப்பார்களாக. தேவன் உங்களிடம் என்னத்தைக் கேட்பார் என்பதை நீங்கள் அறியீர்கள். நம்பகமான பொறுப்புகளுக்காகத் தங்களைத் தகுதியாக்கிக்கொண்ட, கல்விகற்ற ஊழியக்காரர்களின் பற்றாக்குறை யினால், ஊழியத்தின் முன்னேற்றம் தடைபட்டிருக்கிறது என்பது வருத்தத்துக்குரிய உண்மை ஆகும். கர்த்தர் தமது மாபெரும் அறுவடைக் களத்தில் பணிசெய்ய ஆயிரங்களை ஏற்றுக்கொள்வார், ஆனால் அநேகர் பணிக்காகத் தங்களைத் தகுதிப்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டனர். ஆயினும் கிறிஸ்துவின் ஊழியத்தைத் திருமணம் புரிந்திருக்கிற, கர்த்தருடைய சேனையில் ஓர் போர்வீரனாகத் தன்னை வைத்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று கூறிக்கொள்பவர்களுக்கு ஆன்மீகம் என்பது முற்றிலும் அர்த்தமற்றதாக்கப்பட்டிருக்கிறது; ஏனெனில் ஞானமும் அறிவும் அடையப்படக்கூடிய தூரத்தில் வைக்கப்பட்டிருக்கும் பொழுது எவரும் அறியாமையில் நிலைத்திருப்பது தேவனுடைய சித்தம் அல்ல.— Fundamentals of Christian Education, pp. 216, 217.

## சரியான நியதிகளால் சமநிலை காத்தல்

புத்திக்கூர்மையுள்ள வாலிபர்களே எப்பொழுதும் வெற்றிபெறுகிறார்கள் என்பது உண்மை அல்ல. நம்பகமான பொறுப்புகளில் அமர்த்தப்பட்ட தாலந்தும், கல்வியும் படைத்த மனிதர்கள், எவ்வளவோ தரம் தோல்விகளைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்களது மினுமினுப்புப் பொன்னின் தோற்றத்தைக் கொண்டிருந்தது, ஆனால் சோதிக்கப்பட்டபோதோ அது வெறும் தகடு மற்றும் களிம்பு என்பது நிருபணமானது. விசுவாசமின்மையின் மூலமாக அவர்கள் தங்களது பணியில் தோல்வியுற்றார்கள். அவர்கள் கடின உழைப்பாளர்களாக, விடாமுயற்சியுள்ளோராக, காரியங்களின் அடி ஆழம் வரை செல்கிறவர்களாக இல்லை. ஏணியின் அடிப்பகுதியில் தொடங்கு வதற்கும், உச்சியை அடையும்வரை ஒவ்வொரு சுற்றாகப் பொறுமையுள்ள உழைப்புடன் ஏறுவதற்கும், அவர்களுக்கு விருப்பமில்லை. தாங்களாகவே பற்றவைத்துக்கொண்ட தீப்பொறிகளில் (அவர்களது எண்ணத்தின் பிரகாசமான திடீருணர்ச்சிகள்) அவர்கள் நடந்தனர். தேவன் மாத்திரமே அருளக்கூடிய ஞானத்தை அவர்கள் சார்ந்திடவில்லை. அவர்களுக்கு வாய்ப்பு இல்லை என்பதால் அல்ல, மாறாக அவர்கள் மனத்தெளிவற்றவர்களாய்

இருந்தபடியினாலே அவர்களுக்குத் தோல்வி உண்டானது. தங்களது கல்வியின் அனுகூலங்கள் தங்களுக்கு மதிப்புடையவைகளாய் இருக்கின்றன என்பதை அவர்கள் உணரவில்லை; மதம் மற்றும் அறிவியல் குறித்த அறிவில் அவர்கள் முன்னேறியிருந்திருப்பதுபோல, இதில் முன்னேறவில்லை. அவர்களது மனமும் குணமும் நேர்மையின் உயரிய நியதிகளினால் சமநிலையை அடையவில்லை.—Fundamentals of Christian Education, p. 193.

# 55

# முன்னேற்றத்துக்கான பேரார்வம்

தனது தனிப்பட்ட செல்வாக்கிற்காகத் தேவனிடம் கணக்குக் கொடுக்கவேண்டியதை ஒவ்வொரு நபரும் உணர்வாரானால், எவ்விதத்திலும் அவர் சோம்பற்காரராய் இருக்கமாட்டார், மாறாகத் தமது சுய இரத்தத்தால் தன்னைச் சம்பாதிதத்துக்கொண்டவருக்குச் செவை செய்யும்படித் தனது திறமையைப் பண்படுத்தி,ஒவ்வொரு சக்தியையும் பயிற்றுவிப்பார்.

வாலிபர்கள் தங்களுக்காகத் தமது அருமையான ஜீவனையும் அளித்திருக்கிறவருக்கு ஏற்புடைய சேவையைச் செய்யும்வண்ணம், அறிவு படைத்தவர்களாகும்படி ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டு, தங்களது சிந்தைகளைப் பயிற்றுவிக்க வேண்டும் என்பதை அவர்கள் விசேஷ மாக உணர்ந்திட வேண்டும். புத்தகங்களையோ அல்லது இயற்கையையோ படிக்கிற தேவையே இல்லாத அளவுக்கு நன்கு கற்றிருக்கிறேன் என்று தன்னைக் குறித்துக் கருதிக்கொள்கிற பிழையை எவரும் செய்யா திருப்பார்களாக. வெளிப்பாட்டிலோ அல்லது விஞ்ஞானத்திலோ கூடுமான அனைத்தையும் அடைந்துகொள்வதற்கு, தெய்வாதீனமாக ஒருவனுக்குக் காட்டப்பட்டிருக்கிற தயவின்படியே, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக்கொள்வார்களாக.

தேவன் நமக்கருளியிருக்கிற வல்லமைகளின்மீது சரியான மதிப்பீட்டை வைப்பதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு வாலிபன் ஏணியின் அடிச்சுற்றில் தொடங்க வேண்டியதிருக்குமானால், அவன் சோர்ந்துபோகக் கூடாது; மாறாக, பிள்ளையே, மேலெழும்பி வா. “நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி”—மத். 25:21 என்று கூறுகிற கிறிஸ்துவின் குரலை அவன் கேட்கிறவரைக்கும் ஒவ்வொரு சுற்றிலும் ஏறுவதற்குத்

தீர்மானமுள்ளவனாக இருக்கவேண்டும்.—Fundamentals of Christian Education, p. 213.

## 56

# மெய்ஞ்ஞானம்

வாலிப ஆண்களும் வாலிபப் பெண்களும் மிக உயர்வான பூமிக்குரிய கல்வியைப் பெற்றுக்கொள்ளலாம்; இருப்பினும் தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்களாக அவர்களை ஆக்கக்கூடிய முதன்மைக்கொள்கைகளைக் குறித்து அவர்கள் அறியாதவர்களாக இருக்கலாம். மனுஷீகக் கல்வி எவரையும் பரலோக ராஜ்யத்துக்குத் தகுதியாக்கிடாது. கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் குடிமக்கள் இவ்விதமான முறைமைகள் மற்றும் ஆரவாரங் களினால், அல்லது புத்தகங்களின் நீண்டி படிப்பினால் உருவாக்கப் படுகிறதில்லை. "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவ ராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்"–யோவான் 17:3.

### வேதமும் விஞ்ஞானமும்

பழைய, புதிய ஏற்பாட்டு வாக்கியங்கள் அனுதினமும் ஆராயப்பட வேண்டும். தேவனுடைய வழிகளையும், கிரியைகளையும் தொடர்ந்து கற்கும் மாணவனுக்கே தேவனைப் பற்றிய அறிவும், தேவ ஞானமும் கிட்டுகிறது. வேதம் நமது ஒளியாக, நமது ஆசிரியராக இருக்கவேண்டும். தாவர உலகம் செழிப்படைவதற்காக, தேவன் வானத்திலிருந்து பனியையும், மழையையும், சூரிய ஒளியையும் அனுப்புகிறார் என்பதை வாலிபர்க்ள விசுவாசிக்கக் கற்றுக்கொள்ளும்போது; அனைத்து ஆசீர்வாதங்களும் அவரிடமிருந்தே வருகின்றன என்பதையும், ஸ்தோத்திரமும் துதியும் அவருக்கே உரியன என்பதையும் அவர்கள் உணரும்போது, தங்களது வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்ளவும், அனுதினமும் தங்களது கடமைகளை உண்மையுடன் செய்து முடித்திடவும் நடத்தப்படுவார்கள்; தேவன் அவர்களது எண்ணங்களிலெல்லாம் நிறைந்திருப்பார்....

அநேக வாலிபர்கள் விஞ்ஞானத்தைக்குறித்துப் பேசுவதில், எழுதப்பட்டிருப்பதற்கும் மேலாக ஞானமுள்ளவர்களாக இருக்கின்றனர்; தங்களது வரையறைக்குட்பட்ட புரிதிறனுக்குப் பொருந்துகிற ஏதோ ஒன்றினால் தேவனுடைய கிரியை மற்றும் வழிகளைக்குறித்து விளக்க மளிக்க அவர்கள் வகைதேடுகின்றனர்; ஆனால் அது முழுவதும் துயர்மிகுந்த தோல்வியாகிவிடுகிறது. மெய்யான விஞ்ஞானமும், ஆவியின்

அகத்தூண்டுதலும் பூரண இசைவுடன் இருக்கின்றன. போலியான விஞ்ஞானம் என்பது தேவனைவிட்டுத்த தனித்தியங்குகிற ஒன்று ஆகும். அது போலிப்பெருமைகொள்கிற அறியாமை ஆகும்.

அறிவின் தேடுதல் வேட்டையில், அறிவியலின் புலனாய்வில் உடன் சென்றிருக்கிற மாபெரும் தீமைகளில் ஒன்று என்னவெனில், இந்த ஆராய்ச்சிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் தூயதான, கலப்படமற்ற ஆன்மீகத்தின் திவ்ய குணத்தைப் பெருமளவில் காணத் தவறிவிடுகின்றனர் என்பதே ஆகும். இருதயத்தின்மீதுள்ள தேவ ஆவியின் செல்வாக்கை விஞ்ஞானக் கொள்கைகள் கொண்டு விளக்கிட உலகியல் ஞானிகள் முற்பட்டிருக்கின்றனர். இத்திசையிலான கொஞ்ச முன்னேற்றமும் மனதை ஐயவாதம் எனும் ஏடாகோடமான வழிகளுக்குள் நடத்திச் சென்றுவிடும். வேதாகமத்தின் ஆன்மீகம் என்பத தேவபக்திக்குரிய இரகசியமே ஆகும்; மனித சிந்தை எதுவும் அதை முழுதும் புரிந்துகொள்ள இயலாது, மறுபடியும் பிறவாத இருதயத்திற்கு அது முற்றிலும் புரிந்துகொள்ள முடியாததாகவே இருக்கிறது.

## தேவனால் கற்பிக்கப்படுதல்

வாலிபர்கள் தேவனுடைய சேவைக்கென்று தங்களைத் தத்தம் செய்வதினால் பெலவீன மனமுள்ளவர்களாகவோ அல்லது திறமையற்றவர் களாகவோ மாறிவிடமாட்டார்கள். அநேகர் புத்தகங்களின் அறிவையே கல்வி என்று கருதுகின்றனர்; ஆனால் “கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்,” ஆகும். தனிப்பட்ட இரட்சிப்பெனும் காரியத்தை அலட்சியம்பண்ணுகிற மிகவும் திறமைபடைத்த, கற்றறிந்த மனிதனைவிடவும் தேவனுக்குப் பயந்து அவரை நேசிக்கிற சின்னஞ்சிறு பிள்ளையே அவரது பார்வையில் மிகவும் பெரியவனாக இருக்கிறான். தங்களது இருதயங்களையும் ஜீவியங்களையும் தேவனுக்கென்று தத்தம் செய்கிற வாலிபர்கள் சகல ஞானத்துக்கும்மேன்மைக்கும் ஊற்றானவருடன் உள்ள தொடர்பில் தங்களை வைத்துக்கொள்ளுகிறார்கள்.

தானியேல் செய்ததுபோல, பரம ஆசானிடமிருந்து வாலிபர்கள் கற்றுக்கொள்வார்களானால், கர்த்தருக்குப் பயப்படுதல் மெய்யாகவே ஞானத்தின் ஆரம்பம் என்பதை அவர்கள் தங்களுக்கெனத் தெரிந்து கொள்வார்கள். இவ்விதமாக உறுதியான அஸ்திபாரம் இடப்பட்டுவிட்டால், அவர்கள் தானியேலைப்போல ஒவ்வொர சிலாக்கியத்தையும் வாய்ப்பையும் மிகச் சிறந்த சாட்சியாக மாற்றிக்கொள்ளலாம், அறிவார்ந்த சாதனைகளில் எந்த மேம்மைநிலைக்கும் உயர்ந்துவிடலாம். தேவனுக்காக அர்ப்பணம்செய்து, அவரது கிருபையின் பாதுகாப்பையும், அவரது பரிசுத்த ஆவியின் உயிரூட்டும்

செல்வாக்கையும் பெற்றிருந்தால், சாதாரண உலகத்தானைவிடவும் அவர்கள் ஆழ்ந்த அறிவார்ந்த வல்லமையை வெளிக்காட்டுவார்கள்.

மனிதர்கள் விஞ்ஞானத்தின்மீது வைத்திருக்கிற வியாக்கியானத்தின் மூலமாக அதைக் கற்றுக்கொள்வது என்பது போலியான கல்வியைப் பெற்றுக்கொள்வதாகும். தேவனைக் குறித்தும், அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் அற்றுக்கொள்வது என்பது வேதாகமத்தின் விஞ்ஞானத்தைக் கற்றுக்கொள்வதாகும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் ஒவ்வொரு தெய்வாதீனச் செயலிலும், உண்மைக் கல்வியின் ஒவ்வொரு பகுதியிலும் தேவனைத் தரிசிக்கிறார்கள். தேவனுடைய சிங்காசனததிலிருந்து பிரகாசிக்கிற வெளிச்சத்தின் முதல் அனுகுதலை அவர்கள் கண்டறிகிறார்கள். ஆவிக்குரிய அறிவின் முதல் ஒளிக்கதிர்களைப் பற்றிக்கொள்கிறவர்களுக்குப் பரலோகத்திலிருந்து தொடர்புகள் உண்டாகின்றன.

நமது பள்ளிகளிலுள்ள மாணவர்கள் வேறு அனைத்திற்கும் மேலாகத் தேவனைக் குறித்த அறிவை மதித்துப்போற்றவேண்டும். வேத வாக்கியங்களை ஆராய்வதால் மட்டுமே இந்த அறிவு கிட்டும். “சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. அந்தப்படி ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது”–1 கொரி. 1:18,19; “தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமா யிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது”–1 கொரி. 1:25;... “அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்”– 1 கொரி. 1:30,31.—The Youth's Instructor, Nov. 24, 1903.

# 57

# ஓர் உயர்ந்த தரத்தை அமைத்திடுங்கள்

தேவனுடைய ஊழியத்துக்கான ஆயத்தத்தைச் செய்வதற்கு ஒ்வொரு வாய்ப்பையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அவர்

விரும்புகிறார். அதை நிறைவேற்றிட நமது சக்திகள் அனைத்தையும் கொடுக்கவும், அதன் புனிதத்திற்கும், அதன் பக்திவிநயமான பொறுப்புகளுக்கு நம் இருதயங்களை உயிர்த்துடிப்புடன் காத்துக்கொள்ளவும் அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

நேர்த்தியான ஊழியம் செய்வதற்குத் தகுதியடைந்திருக்கிற அநேகர் கொஞ்சமே சாதிக்கின்றனர். ஏனெனில் அவர்கள் கொஞ்சமே முயற்சிக்கின்றனர். வாழ்வதற்கான உயர்ந்த நோக்கமோ, அடைவதற்கான உயர்ந்த தரமோ இல்லாதவர்கள்போல ஆயிரக்கணக்கானோர் வாழ்வின் வழியாகக் கடந்துசெல்கின்றனர். அவர்கள் தங்களைக் குறைத்து மதிப்பிட்டுக் கொள்வதே இதற்கான ஒரு காரணமாகும். கிறிஸ்துவானவர் அளவற்றக் கிரயத்தை நமக்காகச் செலுத்தியிருக்கிறார், செலுத்தப்பட்டிருக்கிற கிரயத்திற்கேற்ப நம்மை நாம் மதிக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

தாழ்வான தரத்தை அடைவதில் திருப்தியடைந்துவிடாதீர்கள். இருந்திருக்க வேண்டியபடி நாம் இல்லை, அல்லது இப்படியிருக்க வேண்டும் என்று கூறும் தேவசித்தப்படியும் நாம் இல்லை. செயலற்றிருப்பதற்கோ அல்லது பூமிக்குரிய, கீழ்த்தரமான நாட்டங்களில் நெறிபிறழ்வதற்கோ தேவன் நமக்குப் பகுத்தறியும் சக்திகளைக் கொடுக்கவில்லை, மாறாக அவைகள் மிகவும் பெரிய அளவில் வளர்ச்சியடைந்து, பண்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, மேன்மையுற்று அவரது ராஜ்யத்தின் நலன்களை முன்னேற்றுவதில் பயன்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## தனித்தன்மையைக் காத்துக்கொள்ளுங்கள்

மற்றொரு மனிதனின் கருத்துப்படி இயங்குகிற, வெறும் எந்திரங்களாக இருப்பதற்கு ஒருவரும் இணங்கக்கூடாது. சிந்தித்துச் செயல்படுவதற்கான திறமையை தேவன் நமக்கு அருளியிருக்கிறார், ஞானத்துக்காக அவரை நோக்கிப் பார்த்து, கவனத்துடன் செயல்படுவதினால், சுமைகளைத் தாங்கும் திராணியுள்ளவர்களாக நீங்கள் மாறுவீர்கள். தேவன் உங்களுக்கு அருளியுள்ள தனித்தன்மையுடன் நில்லுங்கள். இன்னொரு நபரின் நிழலாக இராதேயுங்கள். உங்களில், உங்களால், உங்கள் மூலமாகக் கர்த்தர் கிரியை செய்யும்படி எதிர்பாருங்கள்.

நீங்கள் நன்றாகக் கற்றுவிட்டதாகவும், இனிமேல் உங்கள் முயற்சி களைத் தளர்த்திக் கொள்ளலாம் என்று ஒருபோதும் எண்ணாதிருங்கள். பண்பட்ட மனமே மனிதரின் அளவுகோலாக இருக்கிறது. உங்கள் வாழ்நாள் நெடுகிலும் உங்கள் கல்வி நீடிக்க வேண்டும்; அனுதினமும் நீங்கள் கற்று, பெற்ற அறிவை நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும்.

நீங்கள் எந்த பொறுப்பில் சேவை செய்தாலும், நீங்கள் உள்நோக்கத்தை வெளிப்படுத்தி, குணத்தை மேம்படுத்துகிறீர்கள் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். உங்கள் வேலை எதுவாயினும், அதைத் துல்லியமாகவும், ஜாக்கிரதையுடனும் செய்யுங்கள்; இலகுவான வேலையைத் தேடும் விருப்பத்தை மேற்கொள்ளுங்கள்.

## மனப்பூர்வமான வேலை

அனுதினப் பணிக்குள் ஒருவர் கொண்டுவரும் அதே ஆவியும், கொள்கைகளுமே முழு வாழ்வுக்குள்ளும் கொண்டுவரப்படும். ஒரு நிலையான சம்பளத்திற்காக, ஒரு குறிப்பிட்ட அளவு பணியை மட்டும் செய்ய விரும்புகிறவர்களும், மாற்றியமைத்துக் கொள்ளுதல் அல்லது பயிற்சியடைதல் எனும் தொந்தரவு ஏதுமின்றி இம்மியும் பிசகாத வாய்ப்பு வந்தமைய விரும்புகிறவர்களும் தமது ஊழியத்தில் உழைக்கும்படி தேவனால் அழைக்கப்படுகிறவர்கள் அல்ல. தங்களது சரீர, மன, ஒழுக்கரீதியான வல்லமையைக் கூடுமானவரைக்கும் குறைவாகக் கொடுப்பது எப்படியென்று ஆராய்கிறவர்கள், அவர் ஊற்றுகின்ற அபரிமிதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் ஊழியக்காரர்கள் அல்ல. அவர்களது முன்மாதிரி தொற்றுநோயைப் பரப்புகிறதாய் இருக்கிறது. தன்னலமே ஆளுகை செய்யும் உள்ளெண்ணமாய் இருக்கிறது. கண்காணிக்கப்பட வேண்டியவர்களும், தங்களுக்குக் குறிப்பிட்டுக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு கடமையை மட்டுமே செய்கிறவர்களும், உண்மையும் உத்தமுமானவர்கள் என்று அறிவிக்கப்படமாட்டார்கள். ஆற்றலையும், நேர்மையையும், ஜாக்கிரதையையும் வெளிக்காட்டுகிற, செய்யப்படுவதற்கு அவசியமான எதையும் செய்வதற்கு விருப்பம் காட்டுகிற பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தோல்வி பயத்தால் பொறுப்புகளை தவிர்த்து அநேகர் பயனற்றவர்களாகிவிடுகின்றனர். இவ்விதமாக இன்னொரு வழியில் பெறப்பட்ட வாசிப்பும், படிப்பும், மற்றும் அனைத்து அநுகூலங்களும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடாத, அனுபவத்திலிருந்து விளைகின்ற அந்தக் கல்வியைப் பெற்றுக்கொள்ள அவர்கள் தவறிவிடுகின்றனர்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை மனிதன் வடிவமைத்திட முடியும், ஆனால் மனிதனை வடிவமைப்பதற்குச் சந்தர்ப்ப சூழ்நிலைகளை அனுமதிக்கக்கூடாது. பணி செய்வதற்கான கருவிகளாக சந்தர்ப்ப சூழ்நிலைகளை நாம் விடாது பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் அவற்றை அடக்கியாள வேண்டும், மாறாக அவை நம்மை அடக்கியாளுவதற்கு அனுமதிக்கக்கூடாது.

எதிர்க்கப்பட்டு, திணறடிக்கப்பட்டு, தடைசெய்யப்பட்டவர்களே

வல்லமையின் மனிதர்கள் ஆவர். தங்களது ஆற்றல்களைச் செயல்பாட்டுக்குள் அழைக்கிறதினால், அவர்கள் சந்திக்கிற தடைகள் அவர்களுக்கு சந்தேகத்திற்கு இடமற்ற ஆசீர்வாதங்களாக உறுதிசெய்யப்படுகின்றன. தன்திற நம்பிக்கையை அவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். நெருக்கடியும், குளறுபடியும், தேவனில் நம்பிக்கையையும், சக்தியை மேம்படுத்துகிற மன உறுதியையும் செயல்படுத்துவற்கு அழைக்கின்றன.—Ministry of Healing, pp. 498–500.

### வாழ்வை முற்றிலும் பயன்படுத்திக்கொள்ளுதல்

அர்ப்பணிப்புடன் சேர்த்து ஒரு நல்ல கல்வியை பெற்றிருப்பவருக்கு அது ஒரு பெறும்பயனாக இருக்கிற அதே வேளையில், சிறந்த இலக்கிய சாதனைகளை அடைந்திடும் சிலாக்கியத்தைப் பெறாதவர்கள் அறிவுரீதியான, ஆவிக்குரிய ரீதியான வாழ்வில் தங்களால் முன்னேற முடியாது என்று அவர்கள் எண்ணவேண்டாம். தாங்கள் பெற்றிருக்கிற அறிவை அவர்கள் முற்றிலும் பயன்படுத்திக் கொள்வார்களானால், அனுதினமும் தங்களுடைய சேமிப்புக்கென்று சிறிதளவு சேகரிக்கும்படி அவர்கள் நாடுவார்களானால், கிறிஸ்துவுக்கொப்பான குணக்கூறுகளை முனைப்புள்ள அக்கறையுடன் வளர்த்துக்கொள்வதன் மூலம் மனநிலையின் அனைத்துத் தவறான போக்கையும் மேற்கொள்வார்களானால், ஞானத்தின் வாய்க்கால்களைத் தேவன் அவர்களுக்குத் திறப்பார்; தேவன் அவர்களுக்கு ஞானத்தையும் புத்தியையும் கொடுத்தார் என்று எபிரெயப் பிள்ளைகளைக் குறித்துப் பூர்வத்தில் சொல்லப்பட்டதுபோல, அவர்களைக் குறித்தும் சொல்லப்படும். —Fundamentals of Christian Education, pp. 192, 193.

# பகுதி 6

# சேவை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 58 | பணியாளர்களாக இருப்பதற்கு வாலிபர்கள் அழைக்கப்படுதல் | 171 |
| 59 | ஆத்தும ஆதாயத்துக்கான பொறுப்பு | 173 |
| 60 | கிறிஸ்துவுக்காகச் சாட்சி பகருதல் | 174 |
| 61 | தனிநபர் ஊழியம் | 177 |
| 62 | ஆத்தும ஆதாயகர்களாக வாலிபர்கள் | 178 |
| 63 | பலதரப்பட்ட துறைகளில் சேவை | 182 |
| 64 | சுயநலமற்ற சேவை | 183 |
| 65 | கடுமையான உழைப்பிற்கான வெகுமானம் | 184 |
| 66 | உழைப்பின் மேன்மை | 186 |
| 67 | நீர்நிலைகள் அருகிலெல்லாம் விதைத்தல் | 190 |
| 68 | பலதரப்பட்ட பணித்துறைகள் | 192 |
| 69 | ஏற்புடைய சேவை | 198 |
| 70 | சேவையில் உண்மை | 200 |

## பகுதி 6

# சேவை

ஊழியக்காரர்களின் சேனைபோன்று ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருக்கிற நமது வாலிபர்கள் சரியாகப் பயிற்றுவிக்கப்பட்டால், சிலுவையிலறையப்பட்டு, உயிர்த்தெழுந்து, விரைவில் வரவிருக்கும் இரட்கரின் செய்தி எவ்வளவு சீக்கிரமாக முழு உலகத்திற்கும் சுமந்துகொண்டு செல்லப்படும்! முடிவு—துன்பம், துயரம் மற்றும் பாவத்திற்கான முடிவு எவ்வளவு சீக்கிரமாக வந்துசேரும்! பாவத்தின் கேடும், வேதனையும் இருந்த இடத்தில் அதற்குப் பதிலாக, “நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றென்றைக்கும் வாசமாயிருக்கப் போகிற;” “வியாதிப்பட்டிருக்கிறேன்” என்று நகரவாசிகள் சொல்லாத, “அழுகையின் சத்தமும் இனிக் கேட்கப்படாத,” சுதந்தரத்தை நமது பிள்ளைகள் எவ்வளவு சீக்கிரமாகப் பெற்றுக்கொள்ளுவார்கள்.—Education, p. 271.

## 58

# பணியாளர்களாக இருப்பதற்கு வாலிபர்கள் அழைக்கப்படுதல்

கிறிஸ்தவ வாலிபர்கள் கிறிஸ்துவின் மாபெரும் ஆசிரியரிடமிருந்து கற்றுக்கொள்வார்களானால், நல்ல ஊழியத்தைச் செய்யக்கூடியவர்கள் அவர்களில் அநேகர் இருக்கின்றனர். இழந்துபோனவர்களைத் தேடுவதில் மேய்ப்பர்களும், சுவிசேஷகர்களும், போதகர்களும் அசட்டையாயிருந்தாலும், சிறுபிள்ளைகளும் வாலிபர்களும் வார்த்தையின்படி செய்கிறவர்களாயிருப்பதை அசட்டை செய்யாதிருப்பார்களாக....

வாலிப ஆண்களும், பெண்களும், சிறு பிள்ளைகளும் இயேசுவின் நாமத்தில் ஊழியத்துக்குச் செல்வார்களாக. ஏதோ ஒரு திட்டம் மற்றும் செயல் முறைமையின் அடிப்படையில் அவர்கள் ஒன்றுசேர்வார்களாக. ஒருமித்துச் செயல்படுவதற்கும், ஒன்றுகூடி ஜெபித்துக் கர்த்தர் தமது கிருபையை தங்களுக்கு அருளும்படிக் கேட்பதற்குக் குறிப்பிட்ட நேரங்களை ஒதுக்குவதற்கும், ஓர் ஊழியக்காரர் குழுவை அமைக்க உங்களால்

கூடாதா? தேவனுடைய ஆவியின் அசைவாடுதல்களின்கீழ் அக்கறையோடும், நிச்சயமான விளைவுகளுக்காகவும் நீங்கள் ஊழியம் செய்வதற்கேதுவான திட்டங்களை ஏற்படுத்தி, வழிமுறைகளைப் பெருக்கும்வண்ணம், ஊழியத்தில் அனுபவமிக்க, தேவனுக்குப் பயந்து, அவரை நேசிக்கிற மனிதர்களுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். தேவன் நம்பிக் கொடுத்திருக்கிற திறமைகளை அவரது நாமத்தின் மகிமைக்கென்று பயன்படுத்துவோருக்குக் கர்த்தர் உதவிசெய்வார். சத்தியத்தை விசுவாசிக்கிற நமது வாலிபப் பையன்களும், பிள்ளைகளும் உயிருள்ள மிஷனெரிகளாக மாறுவார்களா?….

## விசுவாசத்தில் ஊழியம் செய்யுங்கள்

பிறருக்கான நீங்கள் உழைக்கும்போது, ஆவியானவரின் தெய்வீக வல்லமை அவர்களது ஆத்துமாக்களின்மீது கிரியை செய்யும்; ஏனெனில் அவர்கள் ஒரே பேறான தேவகுமாரனுடைய இரத்தத்தினால் சம்பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இருதயத்தை உணர்த்தி, மாற்றுகிற வேலையைச் செய்வதற்குத் தேவனுடைய வல்லமை மற்றும் கிருபையின்மீது நாம் சார்ந்திருந்தால் மட்டுமே, கிறிஸ்து எவர்களுக்காக ஜீவனைத் தந்தாரோ அந்த ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவதில் நாம் வெற்றியாளர்களாக விளங்க முடியும். தேவனுடைய சத்தியத்தை அவர்களுக்கு முன்பாக நீங்கள் வைக்கிற வேளையில், அவிசுவாசமும், ஐயப்பாடும் சிந்தையைச் சிறைபிடிக்கப் போராடும்; ஆகிலும் தேவனுடைய உறுதியான வார்த்தை உங்கள் இருதயங்களிலிருந்து சந்தேகத்தைத் துரத்துவதாக.

அவரது வார்த்தையின்படி தேவனை நம்புங்கள், விசுவாசத்தில் ஊழியம் செய்யுங்கள். உங்கள் பரமபிதாவின் வார்த்தையில் நீங்கள் அவநம்பிக்கை கொள்ளச் செய்வதற்குத் தன்னுடைய புதுக் கருத்துக்களுடன் சாத்தான் வருவான்; ஆனால் “விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே” என்பதை நினைத்துக்கொள்ளுங்கள். சாத்தானின் அந்தகார இருளின் வழியாக உங்கள் விசுவாசத்தை முன்னேற்றிச் சென்று, கிருபாசனத்தின்மீது அதைத் தங்கச் செய்யுங்கள், ஒரு சந்தேகத்திற்கும் இடமளிக்கப்படாதிருப்பதாக. நீங்கள் அனுபவத்தை அடைவதற்கும், உங்கள் சமாதானம் மற்றும் நம்பிக்கைக்கு மிகவும் அத்தியாவசியமான வெளிப்படையான ஆதாரத்தைக் கண்டடைவதற்கும் ஒரே வழி இதுவே ஆகும்.

உங்கள் அனுபவம் வளரவளர, தேவனுடைய சேவைக்கான எழுச்சிமிக்க அன்பும், அதிகப்படியான ஆத்துமதாகமும் உங்களுக்கு உண்டாகும்; ஏனெனில் இயேசு கிறிஸ்துவுடன் ஒன்றித்த நோக்கம் உங்களுக்கு இருக்கிறது. உங்களுடைய பரிவிரக்கங்கள் பரிசுத்த ஆவியினால் தோற்றுவிக்கப்படுகின்றன. கிறிஸ்துவுடன் நீங்கள் நுகத்தை

அணிந்துகொண்டு, தேவனுக்கு உடன்வேலையாட்களாய் இருக்கிறீர்கள். —The Youth's Instructor, August 9, 1894.

### ஆர்வ ஊழியர்களுக்கான அழைப்பு

தங்களுடைய நிலைப்பாட்டை கர்த்தரின் பக்கம் உறுதியாக வைத்துக்கொள்கிற, இப்பொழுது, இப்பொழுது செய்யப்படுவதற்கு அவசியமான அதிமுக்கிய ஊழியத்தைச் செய்வதில் நாசரேத்தூரின் இயேசுவுடன் இணைத்துக்கொள்ளுவதற்குத் தங்களை அடகுவைக்கிற ஆர்வ ஊழியர்களை அவர் அழைக்கிறார்.—Fundamentals of Christian Education, p. 488.

## 59

# ஆத்தும ஆதாயத்துக்கான பொறுப்பு

வாலிபர்களின்மீது மிகவும் முக்கியமான பொறுப்புகள் சார்ந்திருக்கின்றன. வெளிச்சமும் அறிவும் கூடுதலாகப் பெற்று இத்தலைமுறையில் வாழ்கிற வாலிபர்களிடமிருந்து தேவன் அதிகம் எதிர்பார்க்கிறார். அநேகரது மனங்களை மந்தாரப்படுத்தியிருக்கிற மூடநம்பிக்கையையும், தவறான கருத்தையும் அகற்றுவதில் அவர்களைப் பயன்படுத்த அவர் வாஞ்சிக்கிறார். அறிவு மற்றும் அனுபவத்தின் ஒவ்வொரு அணுவையும், சிறு துணுக்கையும் சேகரித்துக் கொள்வதினால், அவர்கள் தங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு அருளப்பட்டிருக்கிற வாய்ப்புவளங்களுக்காகத் தேவனுக்கு அவர்கள் பதில்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு முன்பிருக்கிற ஊழியம், காலத்தின் கட்டாயத்திற்கேற்பப் படிப்படியாக முன்னேற்றிக்கொண்டு செல்லப்படும்வண்ணம் அவர்களது அக்கறைமிக்க முயற்சிகளுக்காகக் காத்திருக்கிறது.

வாலிபர்கள் சிந்தையையும் இருதயத்தையும் கர்த்தருடைய சேவைக்கென்று தத்தம் செய்வார்களானால், திறமையான செயல் மற்றும் பயன்படுநிலையின் உயர்ந்த தரத்தை அடையலாம். வாலிபர்கள் அடைய வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிற படித்தரமும் இதுவே ஆகும். இதற்கும் குறைவாகச் செய்தல் என்பது தேவன் அருளியுள்ள வாய்ப்புகளை முற்றிலும் பயன்படுத்திக்கொள்ள மறுப்பதற்குச் சமமாகும். மனுக்குலத்தின் நன்மைக்காக உழைப்பதில் தோல்வியுறுதல்—தேவனுக்கு விரோதமாக துரோகமாகக் கருதப்படும்.

பிரியமான வாலிபர்களே, தேவனுடைய வார்த்தையை வழிகாட்டியாக ஆக்கிக்கொள்வதும், யெகோவாவின் கற்பனைகளைக் கைக்கொள்வதும் எவ்வளவு முக்கியம் என்பதைப் பிறருக்கு அறிவிப்பதற்கு நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதினால் மட்டுமே மனிதர்கள் இரட்சிக்கப்பட முடியும் என்பதை வார்த்தையினாலும், வாழ்க்கையினாலும் நீங்கள் அறிவிக்கிறீர்களா? உங்களால் இயன்றதை நீங்கள் செய்தால், பிறருக்கு ஆசீர்வாதமாக இருப்பீர்கள். உங்களுடைய திறமைக்கேற்ப மிகச்சிறந்த முறையில் நீங்கள் வேலைசெய்யும்போது, இன்னும் அதிகம் செய்வதற்கான வழிகளும், வாய்ப்புகளும் உங்களுக்கு முன்பாகத் திறக்கப்படும்.—The Youth's Instructor, January 1, 1907.

# 60

# கிறிஸ்துவுக்காகச் சாட்சிபகருதல்

கர்த்தரின் பக்கம் இருக்கும் யாவரும் கிறிஸ்துவை அறிக்கையிட வேண்டும். “நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்” என்று கர்த்தர் சொல்லுகிறார். உண்மையான விசுவாசியின் விசுவாசம் குணத்தின் பரிசுத்தத்திலும் தூய்மையிலும் வெளிப்படும். விசுவாசம் அன்பினால் கிரியை செய்கிறது, ஆத்துமாவைத் தூய்மைப்படுத்துகிறது; விசுவாசத்துடன், கிறிஸ்துவின் வார்த்தைகளை உண்மையாய்ச் செய்கிற, இசைந்து செல்கிற கீழ்ப்படிதலும் இருக்கும். கிறிஸ்தவம் என்பது எப்பொழுதும் முனைப்பாக நடைமுறையில் தெரிகிறதும், நிஜவாழ்வின் அனைத்து சந்தர்ப்பங்களுக்கும் ஏற்பத் தன்னை அநுசரித்துக்கொள்கிறதுமாய் இருக்கிறது. “நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.” யாருக்கு?—உலகத்திற்கு; ஒரு பரிசுத்தமான செல்வாக்கை நீங்கள் உங்களுடன் சுமந்துசெல்ல வேண்டியதாயிருக்கிறது. கிறிஸ்து உங்கள் ஆத்துமாவில் வாசம்பண்ண வேண்டும்; நீங்கள் அவரைக் குறித்துப் பேசுங்கள், அவரது குணத்தின் கவர்ச்சிகளை வெளிக்காட்டுங்கள்.

### நமது உரையாடல்

கிறிஸ்துவினுடையவர்கள் எனக் கூறிக்கொள்ளும் வாலிபர்கள் தங்கள் நண்பர்களுக்கு அவரது நாமத்தை மிகக் குறைவாகவே கூறுவதற் கேதுவாக, காலத்துக்கேற்ற நவநாகரீக மதம் அவர்களது குணத்தை வனைந்திருக்கிறது. அவர்கள் அநேகத் தலைப்புகளைக்குறித்து உரையாடுகின்றனர், ஆனால் மீட்பின் அருமையான திட்டம் உரையாடலின் மையப்பொருளாக ஆக்கப்படவில்லை. நடைமுறைக் கிறிஸ்தவர்கள் என்று

கருதிக்கொள்ளுகிறவர்கள் இக்காரியங்களின் முறைமையை மாற்றியமைத்து, "நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை" அறிவித்திட வேண்டும். விசுவாசத்தினால் கிறிஸ்து இருதயத்தில் வாசம்பண்ணுவாரானால், நீங்கள் அமைதியாயிருக்க முடியாது. நீங்கள் இயேசுவைக் கண்டடைந்தவரானால், உண்மையான மிஷெனெரியாக இருப்பீர்கள். நீங்கள் இக்காரியத்தில் ஆர்வமிகுந்தவராயிருந்து, உங்கள் ஆத்துமாவுக்கு அருமையானவரை கண்டடைந்ததையும், தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் உங்கள் வாயில் வைத்திருப்பதையும், இயேசுவை உண்மையென்று உணர்ந்து போற்றாதவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

என் இளம் நண்பர்களே, இயேசுவின் அன்பினால் அனல்மூண்ட இருதயங்களைக் கொண்டிருப்போரைப்போன்று உங்களது கிறிஸ்தவ வாழ்வைத் தொடங்குவீர்களா? தேவபிள்ளைகளென்று உரிமைபாராட்டிக் கொள்ளாதவர்களிடத்தில் அவர்களது ஆத்தும இரட்சிப்பைக் குறித்த உள்ளுணர்வுண்டாக்கும், பக்திவிநயமான வார்த்தைகளை மென்மையாகப் பேசுவதால் எவ்வளவுக்கதிகமான நன்மையை செய்திடலாம் என்பதை நீங்கள் ஒருபோதும் அறியமாட்டீர்கள். அதே வேளையில் கிறிஸ்துவின் சாட்சிகளாக இருப்பதற்கு நீங்கள் பயன்படுத்திக்கொள்ளாமல் தவறிவிட்ட வாய்ப்புகள் எத்தனை என்பதையும் நியாயத்தீர்ப்பு மட்டும் நீங்கள் ஒருபோதும் அறியக்கூடாமல் போகலாம். உங்களது பரிசுத்த விசுவாசத்துக்கு முற்றிலும் முரண்பாடான, உங்களுடைய விளையாட்டுத்தனமான சிறுசெயல்களால், உங்களுடைய அற்பமான பேச்சால், உங்களுடைய ஒழுக்கத்தளர்வால் ஏதோ ஒரு ஆத்துமாவுக்கு நீங்கள் காயப்படுத்திய செயலையும் நீங்கள் ஒருபோதும் இவ்வுலகத்தில் அறியமாட்டீர்கள்.

## பிரியமானவர்களை ஆதாயப்படுத்துதல்

நீங்கள் நேசிக்கிற ஆத்துமாக்களைக்குறித்து ஒருவிதக் கவலையுணர்வை நீங்கள் அடைகிறீர்கள் என்பது உண்மைதான். சத்தியப் பொக்கிஷங்களை அவர்களுக்குத் திறந்துகொடுக்க நீங்கள் வகைதேடலாம், உங்களது ஆர்வத்தினால் அவர்களது இரட்சிப்புக்காகக் கண்ணீர் சிந்தலாம்; ஆனால் உங்கள் வார்த்தைகள் கொஞ்சத் தாக்கத்தையே உண்டாக்கு வதாகத் தோன்றும்போதும், உங்கள் ஜெபங்களுக்கு வெளிப்படையான பதில் இல்லாதபோதும்; உங்கள் உழைப்புகள் பலனளிக்கவில்லை என்று தேவன்மீது வசைமொழியை வீசவேண்டும் போல், நீங்கள் பெரும்பாலும் நினைக்கலாம். உங்கள் பிரியமானவர்களுக்கு விசேஷமான இருதயக்கடினம் இருப்பதாகவும், உங்கள் முயற்சிகளுக்கு அவர்கள்

மறுபதில் கொடாதது போலவும் நீங்கள் உணரலாம். ஆனால் பிரச்சனை ஒருவேளை உங்களிடத்தில் இருக்கலாம் என்பதைச் செயல்முனைப்புடன் நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர்களா? ஒரு கையினால் நீங்கள் கட்ட முயற்சித்த அதேவேளையில் மறுகையினால் நீங்கள் இடித்துப்போடுகிறீர்கள் என்பதை எண்ணிப் பார்த்தீர்களா?

சிலவேளைகளில் தேவ ஆவியானவர் உங்கள்மீது கட்டுப்படுத்தும் வல்லமையைக் கொண்டிருக்க நீங்கள் அனுமதிக்கிறீர்கள், சிலவேளைகளில் உங்கள் நடக்கையினால் விசுவாசத்தை மறுதலித்து, பிரியமானவர் களுக்கான உங்கள் ஊழியத்தை நாசப்படுத்தியிருக்கிறீர்கள்; அவர்கள் சார்பிலான உங்களது முயற்சிகள் உங்களது நடக்கையினால் விருதாவாக்கப் பட்டிருக்கின்றன. உங்கள் கோபமும், பேசப்படாத உங்கள் மொழியும், உங்கள் பண்புநலன்களும், உங்கள் மனதின் படபடப்பு நிலையும், உங்கள் கிறிஸ்தவ நறுமணத்தின் குறைபாடும், உங்கள் ஆவிக்குரிய தன்மையின் குறைபாடும், உங்கள் முகத்தோற்றத்தின் வெளிப்பாடும்கூட உங்களுக்கு விரோதமாகச் சாட்சியிட்டிருக்கிறது…

சிறுசிறு காரியங்களின் முக்கியத்துவத்தை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதிருங்கள். சிறுகாரியங்களே வாழ்விற்கான உண்மையான ஒழுக்கத்தை வழங்குகின்றன. கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக வளர்வதற்கும் அல்லது தீமையின் சாயலைத் தாங்கி நிற்பதற்கும் அவைகளினாலேயே ஆத்துமா பயிற்றுவிக்கப்படுகிறது. நாம் இயேசுவோடிருந்து, அவரிடத்தில் கற்றுக்கொண்டோம் என்று நம்மைச் சுற்றியுள்ளவர்கள் அனைவரும் சாட்சிபகரும்வண்ணம், செயல், பார்வை, வார்த்தை மற்றும் சிந்தனையின் பழக்கங்களைப் பண்படுத்திக் கொள்வதற்குத் தேவன் நமக்கு உதவி செய்கிறார்.—The Youth's Instructor, March 9, 1893.

### அக்கறை

தேவனுக்கென்று முனைப்பார்வமான பணியில் செலவழிக்கப்பட்ட வாழ்க்கை ஆசீர்வாதமான ஒன்றாகும். அற்பகாரியங்களிலும், சோம்பலான ஏக்கங்களிலும், பயனற்ற முறுமுறுப்புகளிலும் தங்கள் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கும் எண்ணற்றோர், தேவன் அவர்களுக்கு அருளியிருக்கிற வெளிச்சத்தை உணர்ந்து போற்றி, அவ்வொளியைப் பிறர்மீது வீசச் செய்வார்களானால், முற்றிலும் வித்தியாசமானதோர் அனுபவத்தை அவர்கள் அடையக்கூடும்; அநேகர் தங்களுடைய சுயநலத்தினாலும், இன்ப அமைதிப் பிரியத்தினாலும் வாழ்வைத் துயர்மிகுந்ததாக்கிக் கொள்கின்றனர். சுறுசுறுப்புள்ள உழைப்பினால், மரணத்துக்குக் கொண்டுசெல்லும் இருண்ட சாலையில் இருப்போரைப் பரலோகத்துக்கான பாதையில் வழிநடத்து

வதற்குச் சூரிய ஒளியின் பிரகாசமான கதிர்களைப்போன்று அவர்களது ஜீவியங்கள் மாறக்கூடும். இப்பாதையை அவர்கள் தெரிந்துகொண்டால், இயேசுகிறிஸ்துவிலுள்ள சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் அவர்கள் இருதயங்கள் நிரப்பப்படும்.—Review and Herald, October 25, 1881.

## 61

# தனிநபர் ஊழியம்

கிறிஸ்துவின் ஊழியம் பெரும்பாலும், தனிப்பட்ட நேர்காணல்களினால் ஆக்கப்பட்டிருந்தது. கூர்ந்துகேட்கும் ஒரு ஆத்துமாவின்மீது அவர் உண்மையுள்ள மதிப்பு வைத்திருந்தார்; அந்த ஒரு ஆத்துமா பெற்றுக்கொண்ட செய்தியை ஆயிரங்களுக்குக் கொண்டுசென்றிருக்கிறது.

சிறுசிறு காரியங்களில் தேவனுக்குச் சேவை செய்வதற்கு மகிழ்வுடன் முயல்பவர்களே மிகவும் வெற்றிகரமான கடின உழைப்பாளர்கள் ஆவர். ஒவ்வொரு மனிதனும் தனக்குச் சொந்தமான குறிப்பிட்ட ஒரு நூலிழையில் வேலைசெய்து, அதை மெல்லாடையால் ஆக்கப்பட்டத் துணியாக நெய்து, மாதிரிப்படிவத்தை முழுமையாக்கிட வேண்டும்…

வாலிபர்களுக்கு உதவிட வாலிபர்களுக்குக் கற்றுக்கொடுங்கள்; இப்பணியைச் செய்ய முனைந்திடும் வேளையில், மிகப்பெரிய செயற்களத்தில் அர்ப்பணிப்புள்ள ஊழியக்காரனாவதற்கு அவனைத் தகுதிப்படுத்துகிற அனுபவத்தை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளலாம். மிக எளிமையான வழியில் ஆயிரக்கணக்கான இருதயங்களைச் சென்றடைய முடியும்.

உலகின் மிகப்பெரும், வரம்பெற்ற ஆண்கள் மற்றும் பெண்களாக மதிக்கப்பட்டு, புகழப்பெற்ற மிகச்சிறந்த அறிவாளிகள்கூட பெரும்பாலான வேளைகளில் தேவனை நேசிக்கிற ஒருவரால் பேசப்பட்ட மிகவும் தாழ்மையான எளிமையான வார்த்தைகளால் புத்துணர்வடைந்திருக்கின்றனர். ஏனெனில் உலகத்தார் தங்கள் மனங்களில் சிந்திக்கிறதை, உட்செலுத்தியிருக்கிறதையே இயல்பாகப் பேசுவதுபோல, தேவனை நேசிக்கிறவரும் அந்த நேசத்தைக் குறித்து இயல்பாகப் பேசக்கூடியவராயிருக்கிறார். நன்கு ஆயத்தம் பண்ணப்பட்டு, ஆய்வுசெய்யப்பட்டாலும்கூட வார்த்தைகளுக்குக் கொஞ்ச செல்வாக்கு மட்டுமே உண்டு; ஆகிலும் ஒரு தேவனுடைய குமாரத்தி அல்லது ஒரு குமாரனால், வார்த்தைகளில் அல்லது சிறுசிறு காரியங்களில் சேவையில், இயல்பான எளிமையில் செய்யப்பட்ட உண்மையும்,

நேர்மையுமிக்க ஊழியம், அநேக ஆத்துமாக்களுக்கு நீண்டகாலமாகப் பூட்டப்பட்டிருந்த கதவைத் திறந்துவிடும்.—Review and Herald, May 9, 1899.

## 62

# ஆத்தும ஆதாயகர்களாக வாலிபர்கள்

சாத்தான் ஒரு விழிப்புள்ள எதிரி, தேவன் அங்கீகரிப்பதற்கு எதிரான முற்றிலும் மாறுபட்ட செயல்திசையில் வாலிபர்களை வழிநடத்திச் செல்லும் அவனது நோக்கத்தில் ஆவல்கொண்டவனாயிருக்கிறான். தேவனுக்கென்று தத்தம் செய்திருக்கிற வாலிப ஆண்கள் மற்றும் வாலிபப் பெண்களைப்போல அதிக நன்மைசெய்யக்கூடிய வகுப்பினர் வேறெவரும் இல்லையென்பதை அவன் நன்கறிவான். வாலிபர்கள், சரியானவர்களாய் இருந்தால்,அதிக செல்வாக்கைச் செலுத்த முடியும். தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்துள்ள வாலிபர்கள் தங்களது நண்பர்கள்மீது செலுத்தும் செல்வாக்கில் ஒருபாதிகூட, பிரசங்கிமார்களும், வயதில் முதிர்ந்த விசுவாசிகளும் இளைஞர்மீது செலுத்த முடியாது. தங்களுடைய சிற்றின்பம் மற்றும் இயல்பான விருப்பங் களைத் தியாகம் செய்தாகிலும், சாகுந்தன்மையுள்ள சக மனிதர்களை இரட்சிப்ப தற்குத் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வதற்கான பொறுப்பு தங்கள்மீது வைக்கப்பட்டிருக்கிறதை வாலிபர்கள் உணரவேண்டும். நேரமும், தேவைப்பட்டால் பணமும்கூட, தேவனுக்கென்று ஒப்படைக்கப்பட வேண்டும்.

தேவபக்தியை அறிக்கையிடும் அனைவரும் கிறிஸ்து இல்லாமல் இருப்போரின் அபாயத்தை உணர்ந்திடவேண்டும். அவர்களது கிருபையின்காலம் விரைவில் முடிவுபெறும். ஆத்துமாக்களை இரட்சிப்பதற் கான செல்வாக்கைச் செலுத்தியிருந்திருக்க வேண்டியவர்கள், தேவனுடைய ஆலோசனையில் நின்றிருந்தார்கள், ஆயினும் சுயநலம், சோம்பேறித் தனத்தின்மூலமாக, அல்லது கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்த வெட்கத்தினால், தங்களுடைய கடமையைச் செய்யத் தவறவிட்டபடியால், அவர்கள் தங்களுடைய ஆத்துமாக்களை இழப்பது மட்டுமல்ல, ஏழைப்பாவிகளின் இரத்தத்தையும் தங்களது வஸ்திரங்களின்மீது பெற்றிருப்பார்கள். அவர்கள் தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்திருந்தால், நன்மை செய்திருந்திருப்பார்கள், ஆனால் தங்களுடைய உண்மையின்மையினிமித்தம் அவர்கள் நன்மை செய்யவில்லை, அப்படிப்பட்டவர்கள் கணக்கொப்புவிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

மீட்கும் அன்பின் இன்பநுகர்வுகளை உண்மையிலேயே ருசிபார்த்தவர்கள், அவர்களுடன் தொடர்பிலிருக்கிற அனைவரும் இரட்சிப்பின் திட்டத்துடன் அறிமுகமாக்கப்படுகிற வரைக்கும், இளைப்பாறமாட்டார்கள், இளைப்பாறவும் முடியாது. "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்? பூமியின்மீது உமது நாமத்தை நான் எப்படிக் கனம்பண்ணி மகிமைப்படுத்த வேண்டும்?" என்று வாலிபர்கள் கேட்கவேண்டும், நம்மைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் ஆத்துமாக்கள் அழிந்துகொண்டிருக்கிறார்கள், இருப்பினும், கிறிஸ்துவுக்கு ஆத்துமாக்களை ஆதாயம்பண்ண வாலிபர்கள் கொண்டிருக்கிற பாரம் என்ன?

## பிறர்மீதான ஆர்வ அக்கறை

பள்ளிக்குப் போகிறவர்கள் இரட்சகருக்காக ஒரு செல்வாக்கைச் செயல்படுத்தக்கூடும்; ஆயினும் கிறிஸ்துவின் நாமத்தைச் சுட்டிக்காட்டுகிறவர்கள் யார்? பாவவழிகளைக் கைவிட்டு, பரிசுத்தத்தின் பாதையைத் தெரிந்துகொள்ளுமாறு தங்கள் சிநேகிதர்களிடத்தில் மென்மையும் ஆர்வமிக்க அக்கறையுடன் கெஞ்சி மன்றாடுகிறவர்களாகக் காணப்படுகிறவர்கள் யார்?

விசுவாசிக்கிற வாலிபர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய பாதை இதுவே. ஆனால் அவர்கள் தெரிந்துகொள்கிறதில்லை; விளையாட்டிலும் சிற்றின்பத்திலும் பாவியுடன் இணைகிறது, அவர்களது உணர்ச்சிகளுக்கு மிகவும் உகந்ததாயிருக்கிறது. பயன்படுதலுக்கான பரந்த எல்லை வாலிபர்களுக்கு இருக்கிறது. ஆனால் அவர்கள் அதைக் காண்கிறதில்லை. ஓ, அவர்கள் அழிந்துகொண்டிருக்கும் பாவிகளை அணுகுவதற்கான வழிகளைத் தேடுவதில் இப்பொழுது தங்களுடைய மனோசக்திகளைச் செயற்படுத்தினால், பரிசுத்தத்தின் பாதையை அவர்களுக்குத் தெரியக் காட்டினால், ஜெபத்தினாலும் மன்றாட்டினாலும் கிறிஸ்துவுக்கென்று ஒரு ஆத்துமாவையாகிலும் ஆதாயப்படுத்தினால் நலமாயிருக்கும்!

என்ன ஒரு மேன்மையான முயற்சி! நித்தியம் நெடுகிலும் தேவனைத் துதிப்பதற்கு ஒரு ஆத்துமா! நித்திய ஜீவனையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்க ஒரு ஆத்துமா! ஒரு நட்சத்திரமாக என்றும், என்றென்றும் பிரகாசிப்பதற்கு அவர்களது மகுடத்தில் ஒரு முத்து! ஆனாலும் அசத்தியத்திலிருந்து சத்தியத்திற்கு, பாவத்திலிருந்துப் பரிசுத்தத்திற்கு ஒன்றுக்கும் மேலானோர் திருப்பப்பட்டுக் கொண்டுவரப்படக்கூடும். "அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்" (தானி. 12:3) என்று தீர்க்கதரிசிமூலம் கர்த்தர் கூறுகிறார். பின்னர், அழிகின்ற ஆத்துமாக்களை இரட்சிக்கின்ற ஊழியத்தில் கிறிஸ்துவோடும் தூதர்களோடும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டவர்கள் பரலோக ராஜ்யத்தில் செழிப்பான வெகுமானத்தைப் பெறுவார்கள்.

வாலிபர்கள் தங்களை தேவனுக்கென்றும், சத்தியத்திற்கென்றும் அர்ப்பணித்து, இருக்கவேண்டிய இடத்தில் இருந்திருந்தால், அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டிருந்திருக்கக்கூடும் என்பதை நான் கண்டேன்; ஆனால் தொடர்ந்து அவர்களுக்கே ஊழியம் எடுக்கிற ஒரு அந்தஸ்தை அவர்கள் பொதுவாக ஆக்கிரமித்திருக்கின்றனர் அல்லது அவர்கள் தாங்களாகவே உலகத்தாராக மாறிவிடுவார்கள். அவர்கள் இடைவிடாத கவலைக்கும், கடுந்துயருக்கும் ஒரு மூலகாரணமாக இருக்கின்றனர். அவர்கள் சார்பாகக் கண்ணீர்த்துளிகள் சிந்தப்படுகின்றன, அவர்களின் பொருட்டு வேதனையின் ஜெபங்கள் பெற்றோர்களின் இருதயங்களிலிருந்து பிழியலாக வெளிவருகின்றன. ஆயினும் அவர்களது போக்கினால் உண்டாகும் வேதனையை உணராதவர்களாக அவர்கள் போய்க்கொண்டிருந்தனர். அவர்களை இரட்சிப்பதற்கும், கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் புண்ணியங்களின்மூலமாக அவர்கள் என்னவாக முடியுமோ அப்படியாக்குவதற்காக மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறவர்களின் நெஞ்சங் களில் அவ்வாலிபர்கள் முட்களை விதைக்கின்றனர்.

## செய்வதற்கான ஒரு பணி

வாலிப ஆண்களே, வாலிபப் பெண்களே, நீங்கள் செய்வதற்கென்று ஒரு பணியைத் தேவன் வைத்திருக்கிறார் என்பதை நான் கண்டேன்; உங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு, கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள் அல்லது நீங்கள் அவருக்குப் பாத்திரர் அல்ல. அசட்டை மனப்பான்மையில் நீங்கள் நிலைத்திருக்கும் வேளையில், உங்களைக் குறித்ததான தேவசித்தம் என்னவென்று நீங்கள் எப்படிச் சொல்லமுடியும்? உண்மையுள்ள ஊழியக்காரர்களாக உங்கள் எஜமானனுடைய சித்தத்தை நீங்கள் செய்யாத பட்சத்தில், நீங்கள் எப்படி இரட்சிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கிறீர்கள்? நித்திய ஜீவனை உடையவராயிருப்பவர்கள் எல்லாவற்றையும் நன்றாகச் செய்திருப்பார்கள். மகிமையின் இராஜா தமது வலது பக்கத்தில் இருப்பவர்களிடம், “நல்லது, உண்மையும் உத்தமுமுள்ள ஊழியக்காரர்களே” என்று கூறி, அவர்களை உயர்த்துவார். உங்களது சிற்றின்பத்தையே உற்றுநோக்கிக் கொண்டிருப்பதற்குப்பதிலாக, உங்களது எஜமானின் திராட்சத்தோட்டத்தில் நீங்கள் என்ன பணியைச் செய்திருந்திருக்கக் கூடும் என்று முயன்று தேடியிருந்தீர்களானால், அழிவிலிருந்து எத்தனை ஆத்துமாக்களை இரட்சித்திருந்திருக்கக்கூடும்! எத்தனை ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கான வழிவகையாக, இந்த உரையாடல்களும் இசைக்கச்சேரிக்கான கூட்டங்களும் இருந்திருக்கின்றன? இவ்விதமாக இரட்சிக்கப்பட்ட ஒரு ஆத்துமாவை உங்களால் குறிப்பட்டுக் காட்டக்கூடாதென்றால், திரும்புங்கள். புதியதோர் செயல்பாட்டுமுறைக்குத்

திரும்புங்கள். ஆத்துமாக்களுக்காக ஜெபிக்கத் தொடங்குங்கள், கிறிஸ்துவின் பக்கத்தில், அவரது செந்நீர் பாயும் பக்கத்தில் வாருங்கள். சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி உங்கள் ஜீவியங்களை அலங்கரிக்கட்டும், உங்களுடைய ஆத்துமாவை மட்டுமல்ல, மற்றவர்களின் ஆத்துமாக்களையும் இரட்சிப்பதில் நீங்கள் வெற்றியடைவதற்கான ஞானத்துக்காக, உங்களது ஊக்கமான, நொறுங்குண்ட, தாழ்மையின் விண்ணப்பங்கள் அவரிடம் ஏறெடுக்கப்படும்.

நீங்கள் பாடுவதைவிட அதிகம் ஜெபியுங்கள். பாடுகிறதைவிடவும் ஜெபத்திற்கான மாபெரும் தேவையில் நீங்கள் நிற்கவில்லையா? வாலிப ஆண்களே, பெண்களே, தேவனுக்காக உழைக்க, ஊழியம் செய்ய அவர் உங்களை அழைக்கிறார். உங்கள் செயல்பாட்டுமறையில் ஒரு முழுமாற்றத்தை உண்டுபண்ணுங்கள். வார்த்தையிலும், உபதேசத்திலும் ஊழியம்செய்கிறவர்கள் செய்யக்கூடாத ஊழியத்தை நீங்கள் செய்யமுடியும். ஊழியக்காரர் ஏற்படுத்தமுடியாத தாக்கத்தை ஒரு தரப்பினரிடத்தில் நீங்கள் ஏற்படுத்தமுடியும்.—Testimonies for the Church, Vol. 1, pp. 511–513.

## எங்கே தொடங்குவது

தேவனுக்காக ஊழியஞ்செய்ய விரும்புகிறவர்கள் வீட்டில், தங்களது சொந்தக் குடும்பத்தில், தங்களது அயலகத்தாரிடத்தில், தங்களது நண்பர்கள் மத்தியில் தொடங்குவார்களாக. சாதகமான ஊழியக்களத்தை அவர்கள் இங்கே கண்டடைவார்கள். இந்த உள்ளூர் ஊழியப்பணியானது, அகன்று விரிந்த களத்தின் சேவைக்காக அவர்களது திறமையை அல்லது திறமையின்மையை வெளிப்படுத்துகிற ஒரு பரீட்சையாக இருக்கிறது.—Testimonies for the Church, Vol. 6, p. 428.

## முற்றிலும் வெற்றிகரமான பாதை

நமது ஊழியத்தில், தனிப்பட்ட முயற்சி, கணக்கிடுவதை விடவும் அதிகமாகச் சாதிக்கும். இக்குறைபாட்டினாலேயே ஆத்துமாக்கள் அழிந்து கொண்டிருக்கின்றனர். ஒரு ஆத்துமா அளவிடமுடியாத மதிப்பு வாய்ந்தது; அதன் மதிப்பை கல்வாரி எடுத்துரைக்கிறது. கிறிஸ்துவுக்காக ஆதாயப் படுத்தப்பட்ட ஒரு ஆத்துமா மற்றவர்களை ஆதாயப்படுத்துவதில் கருவியாகப் பயன்படும். இவ்விதமாக ஆசீர்வாதம் மற்றும் இரட்சிப்பு எனும் விளைபயன் தொடர்ந்து பெருகிக்கொண்டேயிருக்கும்.—Gospel Workers, p. 184.

# 63

# பலதரப்பட்ட துறைகளில் சேவை

ஊழியர்களை, வேதாகமப் பணியாளர்களை, புத்தக ஊழியர்களைத் தேவன் அழைக்கிறார். நமது வாலிப ஆண்களும், வாலிபப்பெண்களும், வெற்றிகரமாக ஊழியம் செய்வது எப்படி என்று அவர்களுக்குக் காட்டக்கூடிய அனுபவம் வாய்ந்த ஊழியக்காரர்களின் தோழமையுடன், புத்தக ஊழியர்களாக, சுவிசேஷகர்களாக, மற்றும் வேதாகமப் பணியாளர்களாகப் புறப்பட்டுப் போவார்களாக. புத்தக ஊழியர்கள் நமது வெளியீடுகளை வீடுவீடாகச் சுமந்து செல்வார்களாக. வாய்ப்பு ஏற்படும்போது, தாங்கள் சந்திக்கிறவர்களுடன் இக்காலத்துக்குரிய சத்தியத்தைப் பேசுவார்களாக. அவர்களுடன் பாடி ஜெபிப்பார்களாக. தேவனுக்கான நமது ஊழியத்தில் சரியான வழிமுறைகளை நாம் சுறுசுறுப்புடன் பின்பற்றினோமானால், ஆத்துமாக்கள் அறுவடை செய்யப்படுவர்.

தற்தியாக ஆவியினால் நிரம்பியிருக்கும் யாவருக்கும் தேவனுடைய ஊழியத்தில் இடமுண்டு. பிறர்பொருட்டு சுயத்தை மறுக்க விரும்புகிற, தங்களையும் தங்களிடம் உள்ளதையும் அவரது ஊழியத்துக்காக அர்ப்பணிக்க விரும்புகிற ஆண்களையும், பெண்களையும் தேவன் அழைக்கின்றார். நெருக்கடிகளைச் சந்திக்கும்போது, நாங்கள் தளர்வுறவோ அல்லது சோர்ந்துபோகவோ மாட்டோம் என்று கூறித் தொடர்ந்து முன்னேறிச் செல்கின்ற மனிதர்கள் தேவைப்படுகின்றனர். மற்றவர்கள் செய்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிற ஊழியத்தைப் பெலப்படுத்திக் கட்டி யெழுப்புகின்ற மனிதர்கள் தேவைப்படுகின்றனர்.—Review and Herald, April 28, 1904.

### தகுதியை அடைதல்

மற்ற தொழில்களைப்போலவே, இந்த வேலையிலும் நாம் உழைக்க உழைக்க நம் திறமை மேன்மையடைகிறது. உதவி தேவைப்பட்டோருக்குச் செய்யும் ஊழியத்திலும், அன்றாட கடமைகளை செய்யும் விதத்திலும்தான் நம் தகுதி உறுதி செய்யப்படுகிறது.—Education, p. 268.

# 64

# சுயநலமற்ற சேவை

பிறரது நலனில் கொண்டுள்ள அக்கறையைச் செயல்முறையில் காட்டி அவர்களுக்கு நன்மைசெய்யும் பணியில் இயன்றவரைக்கும் ஈடுபடுகிறவர்கள், அவர்களது பாரங்களைச் சுமக்க அவர்களுக்கு உதவுவதினால் மனித வாழ்வின் தீங்குகளிலிருந்து விடுவிப்பதுமட்டுமல்லாமல், அதே வேளையில் தங்களுடைய ஆத்தும, சரீர நலனுக்கும் பெருமளவில் நன்மை செய்து கொள்கின்றனர். நன்மை செய்தல் என்பது வழங்குகிறவருக்கும், வாங்குகிற வருக்கும் நற்பயனளிக்கிற ஊழியமாகும். பிறர்மீதுள்ள ஆர்வத்தில் சுயத்தை மறந்தால், உங்கள் பெலவீனங்களின்மீது நீங்கள் வெற்றியடைகிறீர்கள். நன்மைசெய்வதால் உண்டாகும். திருப்தியை நீங்கள் உணர்தலானது, மனத்திறனின் ஆரோக்கிய நிலையைத் திரும்பப் பெறுவதில் பெரிதும் உதவிசெய்யும்.

நன்மை செய்வதால் வரும் இன்பம் மனதிற்கு உயிரூட்டுகிறது. உடல் முழுவதற்கும் சிலிர்ப்பூட்டுகிறது. இரக்கமனப்பான்மையுள்ள மனிதர்களின் முகங்கள் மகிழ்ச்சியினால் பிரகாசித்து, அவர்களது முகத்தோற்றங்கள் மனிதன் ஒழுக்க உணர்நிலையை வெளிப்படுத்துகிற வேளையில், சுயநலமும், கருமித்தனமுமுள்ளோரின் முகத்தோற்றங்களோ சோர்வுற்று, நொந்துபோய், இருண்டுபோனவைகளாக இருக்கின்றன. அவர்களது ஒழுக்கக் குறைபாடுகள் அவர்களது முக்தோற்றங்களில் தென்படுகின்றன. தன்னலமும் தற்பிரியமும் தங்களது முத்திரையைப் புறம்பான மனிதனில் பதித்துவிடுகின்றன.

மெய்யான தன்னலமற்ற இரக்கமனப்பான்மையினால் உந்தப்பட் டிருக்கிற நபர் இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவராய் இருக்கிறார்; சுயநலமும் பேராசையு முள்ளோரின் சுயநலம் அவர்களுடைய சமுதாயப் பரிவிரக்கங்களைச் செயலிழக்கச் செய்கிறவரைக்கும் அதைப் பேணி வளர்த்திருக்கின்றனர், அவர்களது முகத்தோற்றங்கள் தூய்மை மற்றும் பரிசுத்தமுள்ளோரின் சாயலைப் பிரதிபலிப்பதைவிடவும், விழுந்துபோன சத்துருவின் சாயலைப் பிரதிபலிக்கின்றன.—Testimonies for the Church, Vol. 2, p. 534.

# 65

# கடுமையான உழைப்பிற்கான வெகுமானம்

வாழ்வின் அனுதினக் கடமைகளை உண்மையாய்ச் செய்வதினால் பெறப்படும் விலைமதிப்பற்ற அனுபவத்தைச் சோம்பற்காரர்கள் இழக்கின்றனர் என்பதை வாலிபர்கள் நினைவிற்கொள்வார்களாக. சோம்பற்காரனாக, வேண்டுமென்றே அறியாமையுள்ளவனாக இருக்கிறவன் தன்னுடைய பாதையில் எப்பொழுதும் இடையூறை வைத்துக்கொள்கிறான். நேர்மையான உழைப்பிலிருந்து வரும் மேன்மையை அவன் மறுக்கிறான். மனிதகுலத்திற்கு உதவிக்கரம் நீட்டத் தவறுவதினால், அவன் தேவனை வஞ்சிக்கிறான். தேவன் அவனுக்காகக் குறித்து வைத்திருந்த உத்தியோகத்திலிருந்து அவனது உத்தியோகம் மிகவும் மாறுபட்டதாய் இருக்கிறது; பயனுள்ள வேலையை அலட்சியம்பண்ணுவது கீழ்த்தரமான விருப்பங்களை ஊக்கப்படுத்தி, தேகத்தின் மிகவும் பயனுள்ள சக்திகளை வெற்றிகரமாகச் செயலிழக்கச் செய்கிறது.

தேவன் தமது இரக்கத்தினால் பொழிந்தருள்கிற நன்மைகளை அனுபவிப்பதற்கு மட்டுமே, சிலரல்ல ஆயிரக்கணக்கானோர் இருக்கின்றனர். பூமியின் பலனை அவர்களுக்குக் கொடுப்பதின்மூலமாகக் கர்த்தர் அவர்களிடம் ஒப்புவித்திருக்கிற வளங்களுக்காக நன்றிக் காணிக்கைகளை அவருக்குக் கொண்டுவர அவர்கள் மறந்துவிடுகின்றனர். அவர்களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிற தாலந்துகளை ஞானமாகப் பயன்படுத்துவதினால், உற்பத்தியாளர்களாகவும் உபயோகிப்பாளர்களாகவும் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புவதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். கர்த்தருடைய உதவிக்கரமாக இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிற வேலையைக் குறித்த உணர்வை அவர்கள் கொண்டிருந்தார்களானால், எல்லாப் பொறுப்பையும் வெறுத்துத்தள்ளிவிட்டு, தொண்டு ஊழியங்கொள்ளுகிறதை ஒரு சிலாக்கியமாகக் கருதமாட்டார்கள்.

### உழைப்பின் ஆசீர்வாதம்

நல்லவராய் இருப்பதில், நன்மைசெய்வதில் மட்டுமே மெய்யான மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. தங்களுக்கு நியமிக்கப்பட்டக் கடமைகளை உண்மையாய் நிறைவேற்றுகிறவர்களுக்கு மிகத்தூய்மையான, மாமேன்மை யான சந்தோஷம் உண்டாகும். எந்த நேர்மையான பணியும் இழிவானதல்ல.

வாழ்வின் எளிய, அன்றாடக் கடமைகளைக் கேவலமாய்ப் பார்க்கும்படி இழிந்த சோம்பேறித்தனமே மனிதர்களை வழிநடத்துகிறது. இக்கடமைகளைச் செய்ய மறுப்பது மனரீதியான, ஒழுக்கரீதியான குறைபாட்டை விளைவிக்கிறது. அது ஒருநாள் கூர்மையாக உணரப்படும். சோம்பற்காரனின் வாழ்வில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அவனது மோசமான பண்பானது தெளிவாக வரையறுக்கப்பட்டுவிடும். உபயோகிப்பாளன், ஆனால் உற்பத்தியாளன் அல்ல என்று அவனது வாழ்க்கைப் பதிவேட்டில் எழுதப்பட்டிருக்கிறது.

வாழ்வின் எல்லாத் தொழில்களிலிருந்தும், பயனுள்ள ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். நிலத்தைப் பண்படுத்துகிறவர்கள் வேலைசெய்யும்போது, “நீங்கள் தேவனுடைய பண்ணையாயிருக்கிறீர்கள்” என்ற வார்த்தைகளின் அர்த்தத்தை ஆராயலாம். வாழ்வானது ஆவியின் அழகான கனியைக் கொடுக்கும்வண்ணம், சத்தியவிதைகள் மனித இருதயத்தில் விதைக்கப்படவேண்டும். மனதை நேர்த்தியாகச் சீர்ப்படுத்தி வனைவதே மனதின்மீதான தேவனுடைய முத்திரையாயிருக்கிறது. சரீர மற்றும் மனரீதியாகப் பட்டைத்தீட்டப்படாத சக்திகளை எஜமானனின் சேவைக்காகப் பயிற்றுவிக்க வேண்டியிருக்கிறது.

அனைவருக்கும் ஊழியப்பணியைக் கிறிஸ்துவானவர் கொடுத்திருக் கிறார். அவர் மகிமையின் இராஜா, ஆயினும், “மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யும்படி வந்தார்” என்று கூறினார். அவர் பரலோகத்தின் மகத்துவமானவர், ஆயினும் அவரது பிதாவினால் அவர்மீது வைக்கப்பட்ட ஊழியத்தை இப்பூமியில் செய்வதற்கு இறங்கிவர விருப்பத்துடன் சம்மதித்தார். உழைப்பை அவர் மேன்மைப்படுத்தி யிருக்கிறார். கடின உழைப்பிற்கான முன்மாதிரியை நமக்கு வைக்கவேண்டும் என்பதற்காக, தச்சுத் தொழிலைத் தமது கைகளினால் செய்தார். குடும்பத்தைத் தாங்குவதில் தம் பங்கை மிகவும் சிறிய வயதிலிருந்தே அவர் செய்தார். குடும்ப அமைப்பில் தாமும் ஒரு நபர் என்பதை அவர் உணர்ந்து, தம் பங்குச் சுமையை விருப்பத்துடன் சுமந்தார்.

## வீட்டில் உதவிசெய்தல்

தாய் தகப்பனின் கவலைகளைக் குறைப்பதில், வீட்டில் சுயநலமற்ற ஆர்வங்காட்டுவதில் சிறுபிள்ளைகளும், வாலிபர்களும் மனமகிழ்வு கொள்ளவேண்டும். தங்களது பங்கிற்கு விழுகிற சுமைகளை மகிழ்வுடன் அவர்கள் சுமக்கும்வேளையில், பயன்பாடு மற்றும் நம்பகமான பொறுப்பு களுக்குத் தங்களைத் தகுதிப்படுத்துகிற ஒரு பயிற்சியை அவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். ஆண்மை மற்றும் பெண்மையின் அனுபவத்தை அடைவதற்கென்று படிப்படியாக, ஆனால் நிச்சயமாகச் சிறுவர் பருவம் மற்றும்

சிறுமிப் பருவத்தின் அனுபவமின்மையை அப்புறம் ஒதுக்கிவிட்டு, ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் நிலையான முன்னேற்றத்தை அடையவேண்டும். வீட்டின் எளிய கடமைகளை உண்மையாய்ச் செய்வதினால், மன, ஒழுக்க மற்றும் ஆவிக்குரியரீதியான மேன்மைநிலைக்குச் சிறுவர்களும், சிறுமிகளும் அடித்தளம் அமைத்துக்கொள்கின்றனர்.

### கடைசி முடிவு என்னும் வலை

அருமை வாலிப நண்பர்களே, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும், ஒவ்வொரு விநாடியும், உங்களது கடைசிமுடிவு எனும் வலையை நீங்கள் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். ஒவ்வொரு முறையும் நெசவுநாடா எறியப்படும்போது, நெசவுத் துணியை அசிங்கப்படுத்துகிற அல்லது அழகுபடுத்துகிற ஒரு நூலானது வலைக்குள் இழுக்கப்படுகிறது. நீங்கள் அக்கறையற்று, சோம்பித் திரிவீர்களானால், பிரகாசமும் அழகுமாயிருக்க வேண்டுமென்ற தேவன் திட்டமிட்டிருக்கிற வாழ்வை நீங்கள் கெடுத்துப்போடுகிறீர்கள். நீங்கள் உங்கள் விருப்பங்களைப் பின்பற்றத் தெரிந்துகொண்டால், கிறிஸ்துவைப் போலல்லாத வழக்கங்கள் இரும்புக்கட்டுகளுடன் உங்களைக் கட்டிக்கொள்ளும். கிறிஸ்துவைவிட்டு நீங்கள் விலகி நடந்தால், உங்கள் முன்மாதிரி அநேகரால் பின்பற்றப் படும்; உங்களது தவறான போக்கினால் அவர்கள் பரலோக மகிமை களை ஒருபோதும் அனுபவிக்கமாட்டார்கள். ஆனால் சுயநலத்தை மேற்கொள்வதற்கும், உங்களைச் சுற்றியுள்ளோருக்கு உதவிடும் வாய்ப்பை நழுவவிட அனுமதியாதிருப்பதற்கும், நீங்கள் துணிவுள்ள முயற்சிகளைச் செய்வீர்களானால், உங்கள் முன்மாதிரியின் வெளிச்சமானது மற்றவர்களைச் சிலுவைக்கு நேராய் வழிநடத்தும்.—The Youth's Instructor, December 5, 1901.

## 66

# உழைப்பின் மேன்மை

மனிதனின் கீழ்ப்படியாமையினால் உலகத்திற்குள் கொண்டுவரப்பட்ட தீமையைக் கடும் உழைப்பினால் இலகுவாக்குவதே தேவனின் நோக்கமாக இருந்தது. கடும் உழைப்பினால் சாத்தானின் சோதனைகள் வலிமையற்ற தாக்கப்படும், தீமையின் அலை நிறுத்தப்படும். கவலையும், களைப்பும், வேதனையும் உடையதாயிருப்பினும், உழைப்பானது மகிழ்ச்சி மற்றும் வளர்ச்சியின் ஆதாரமாகவும், சோதனைக்கெதிரான ஒரு புகலிடமாகவும்

இருக்கிறது. உழைப்பின் ஒழுங்குமுறையானது சுய இன்பத்தோய்வினைத் தடைசெய்து, விடாமுயற்சியையும், தூய்மையையும், உறுதியையும் ஊக்குவிக்கிறது. இவ்விதமாக விழுகையிலிருந்து நம்மை மீட்பதற்கான தேவனுடைய மாபெரும் திட்டத்தின் ஒரு பகுதியாக அது மாறுகிறது.

## உடல் உழைப்பும், விளையாட்டுகளும்

உடல் உழைப்பு இழிவானது என்று பொதுவாக எண்ணப்படுகிறது; அதே வேளையில் மட்டைப் பந்தாட்டத்தையும், தளக்கட்டுப் பந்தாட்டத்தை (baseball) அல்லது குத்துச்சண்டைப் போட்டிகளை இழிவானதாக எண்ணாமல், அவற்றைச் தங்களுக்கென்று தெரிந்துகொள்ள அவர்கள் முயற்சிக்கலாம். பண்பை வளர்க்காத, பயன்தராத, தங்களது உதவித் தேவைப்படுவோர்க்கு ஓர் ஆசீர்வாதமாயிருக்கும்படி அவர்களுக்கு உதவியாயிராத காரியங்களில், மனிதர்கள் தங்களது சரீர மற்றும் மனோசக்திகளை ஈடுபடுத்துகிறதை சாத்தான் காணும்போது மகிழ்ச்சியடைகிறான். தங்களுக்கோ அல்லது பிறருக்கோ எவ்விதத்திலும் பயனளிக்காத விளையாட்டுகளில் வாலிபர்கள் கைதேர்ந்தவர்களாக மாறிக்கொண்டிருக்கும்வேளையில், தேவன் அவர் களுக்கு அருளியிருக்கிற தாலந்துகளை அவர்களிடமிருந்து பறித்துக் கொண்டு, அவற்றிற்குப் பதிலாகத் தன்னுடைய தீய குணங்களை வைத்து, அவர்களது ஆத்துமாக்களுக்கான வாழ்வெனும் விளையாட்டை அவன் விளையாடிக்கொண்டிருக்கிறான். தேவனைப் புறக்கணிக்கும்படி மனிதர்களை வழிநடத்துவது அவனது முயற்சியே ஆகும். சிந்தனைகளில் தேவனுக்கென்று இடமிராதபடிக்கு மனதை முற்றிலும் தன்வயப்படுத்தி ஈர்த்துக்கொள்ள அவன் வகைதேடுகிறான். ஜனங்கள் தங்களது சிருஷ்டிகரைக் குறித்த அறிவை அடைகிறதை அவன் விரும்புகிறதில்லை. தேவனும், பரலோகமும் மறக்கப்படும் விதத்தில் வாலிபர்களின் உணர்வுத்திறன்களை மிகவும் குழப்பிவிடக்கூடிய விளையாட்டுகளையும், நாடகத்தனமான அரங்கேற்றங்களையும் அவன் செயல்முறைப்படுத்தக் கூடுமானால், அவன் பெருமகிழ்வடைகிறான்.

சோம்பலானது மிகப்பெரிய சாபங்களில் ஒன்றாக இருக்கும் அதே வேளையில், பயன்மிக்க உழைப்பானது தீமைக்கெதிரான மிக நிச்சயமான புகலிடங்களில் ஒன்றாக இருக்கிறது. சோம்பலின் எதிரொலியாகத் தீயொழுக்கமும், குற்றச்செயலும், வறுமையும் பின்தொடர்கின்றன. எப்பொழுதும் அலுவலாயிருப்பவர்கள், தங்களது அனுதினப் பணிகளை மகிழ்வுடன் செய்யத் தொடங்குகிறவர்கள், சமுதாயத்தின் பயன்மிக்க அங்கத்தினர்களாக இருக்கின்றனர். அவர்களது வழியில் அமைந்திருக்கிற பலதரப்பட்ட கடமைகளை உண்மையாய் நிறைவேற்றுவதினால், அவர்கள் தங்களது ஜீவியங்களைத் தங்களுக்கும் பிறருக்கும் ஓர் ஆசீர்வாதமாக

மாற்றிக்கொள்கின்றனர். செய்யும்படியான தீமைகளை எப்பொழுதும் சோம்பற்கைகளுக்கு வைத்திருக்கிறவனுடைய பற்பல கண்ணிகளிலிருந்து சுறுசுறுப்புள்ள உழைப்பானது அவர்களைக் காக்கிறது.

தேங்கிநிற்கும் நீர் விரைவில் கெட்டுக்போகும்; ஓடும் நீர் மகிழ்ச்சி யையும் ஆரோக்கியத்தையும் நாட்டில் பரப்புகிறது. ஒன்று சோம்பற் கைகளுக்கும் மற்றது உழைப்பிற்கும் அடையாளமாயிருக்கிறது...

## கிறிஸ்துவின் முன்மாதிரி

பூமியில் வாசம்பண்ணுகிறவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கடின உழைப்பு எனும் பாதையானது கடினமாகவும், களைப்பூட்டுகிறதாகவும் இருக்கலாம், ஆயினும் அது மீட்பரின் அடிச்சுவடுகளால் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறது, இப்புனிதப் பாதையைப் பின்பற்றுகிறவன் பாதுகாப்பாக இருக்கிறான். வார்த்தையினாலும், வாழ்க்கையினாலும், கிறிஸ்துவானவர் பயன்மிகும் உழைப்புக்குப் பெருமை சேர்த்திருக்கிறார். அவரது ஆரம்ப வருடங்களிலிருந்தே கடின உழைப்புமிக்க வாழ்வை அவர் வாழ்ந்தார். அவரது ஆரம்ப வாழ்வின் பெரும்பகுதியானது நாசரேத்திலுள்ள தச்சுக்கூடத்தில் பொறுமையான உழைப்பிற்காக செலவழிக்கப்பட்டிருந்தது. ஒரு சாதாரண உழைப்பாளியின் உடையில் ஜீவனின் கர்த்தரானவர் தாம் வாழ்ந்துவந்த சிறுநகரின் தெருக்களில், தமது எளிமையான உழைப்பினிமித்தம் அங்குமிங்கும் நடந்து திரிந்தார்; அறியப்படாதவராக, மதிக்கப்படாதவராக, உழவர்கள் மற்றும் உழைப்பாளிகளுடன் இணையாக அவர் நடந்துசென்ற வேளையில், பணிவிடை தூதர்கள் அவருடன் இருந்தனர்...

கூர்மதியுள்ள உழைப்பு மனித இனத்துக்குக்கான ஆரோக்கியமூட்டும் நன்மருந்தாக இருக்கிறது. அது பெலவீனனை பெலமுள்ளவனாகவும், வறியவனை வளமிக்கவனாகவும், மன உலைச்சலுள்ளவனை மகிழ்ச்சி யுள்ளவனாகவும் ஆக்குகிறது. சாத்தான் பதுங்கி இருக்கிறான், ஓய்வுநேரத்தில் இருப்போரை ஒரு கவர்ச்சிகரமான வேடத்தின்கீழ் அணுகி அழிக்க ஆயத்தமாகும்படி அவர்களது ஓய்வுநேரம் அவனுக்கு வாய்ப்பை அளிக்கிறது. மனிதர்களது சோம்பலான நேரங்களைத்தவிர, வேறொருபோதும் அவன் அதிக வெற்றியடைவதில்லை.

## மனநிறைவளிக்கும் உழைப்பின் படிப்பினை

ஐசுவரியத்தினால் உண்டாகும் தீமைகளில் மிகவும் பெரியது, உழைப்பு இழிவானது என்ற நவநாகரீகக் கருத்தாகும். “இதோ, கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்; இவைகளே அவளிடத்திலும் அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன; சிறுமையும் எளிமையுமானவனுடைய

கையை அவள் பலப்படுத்தவில்லை” (எசே 16:49) என்று எசேக்கியேல் தீர்க்கதரிசி அறிவிக்கிறார். மனதைப் பெலவீனமாக்கி, ஆத்துமாவைத் தரம் தாழ்த்தி, புத்தியைப் பிறழச் செய்து, ஆசீர்வாதமாகக் கொடுக்கப்பட்ட ஒன்றைச் சாபமாக்குகிற சோம்பேறித்தனத்தின் கெடிய விளைவுகள் இங்கே விவரிக்கப்பட்டுள்ளன. வாழ்வில் மேன்மையும், நன்மையுமானவற்றைக் கண்டு, விசுவாசம் மற்றும் நம்பிக்கையுடன் அதன் பொறுப்புகளைச் சுமந்திட விரும்புகிறவரே, உழைக்கிற ஆண் அல்லது பெண் ஆவார்.

வாழ்வின் அத்தியாவசியக் கடமைகளில் மனநிறைவளிக்கும் உழைப்பின் முக்கியப் படிப்பினை கிறிஸ்துவின் பன்னடியார்கள் அநேகரால் இன்னும் கற்றுக்கொள்ளப்பட வேண்டியதிருக்கிறது. பரந்த களத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மிஷெனெரியாகப் பணிபுரிவதை விடவும், ஒரு எந்திர வல்லுநர், வியாபாரி, வழக்கறிஞர் அல்லது விவசாயி என்ற தகுதியில், வாழ்வின் வழக்கமான அலுவலுக்குள் கிறிஸ்தவத்தின் கொள்கைகளைச் சுமந்துசென்று தேவனுக்காக உழைப்பதற்கு அதிகக் கிருபையும், குணத்தில் அதிகக் கண்டிப்பான ஒழுங்குமுறையும் தேவைப்படுகிறது. தேவனுடைய வார்த்தையின் தரத்திற்கேற்ப, அன்றாட வாழ்வின் நுணுக்கங்களைப் பரிசுத்தமாக்கி, ஒவ்வொரு தொழில் நடவடிக்கையைச் சீர்ப்படுத்துவதற்கும், பணிமனை மற்றும் வியாபார அலுவலகத்துக்குள் ஆன்மீகத்தைக் கொண்டு வருவதற்கும் பலமான ஆவிக்குரிய ஆற்றல் அவசியப்படுகிறது. தேவன் எதிர்பார்ப்பதும் அதுவே.

சோம்பேறித்தனத்தை ஒரு பாவமாக பவுல் அப்போஸ்தலன் கருதினார். கூடாரத்தொழிலிலுள்ள மேலான கீழான பணிப்பிரிவுகளை அவர் கற்றிருந்தார். தன்னுடைய ஊழியத்தின்போது தன்னையும் பிறரையும் ஆதரித்துக்கொள்ளும்வகையில் அவர் பெருமளவில் வேலைசெய்தார். இவ்விதம் செலவழிக்கப்பட்ட நேரத்தைப் பவுல் இழப்பு என்று கருதவில்லை. இவ்விதமாக அவர் வேலைசெய்யும்போது, தாம் வேறுவகையில் சந்திக்கக் கூடாத மக்களில் ஒரு பிரிவினரைச் சந்திக்கும் வாய்ப்பு அப்போஸ்தலனுக்குக் கிடைத்தது. பொதுவான கலைகளில் காண்பிக்கும் திறன் தேவனுடைய ஓர் ஈவு என்பதைத் தமது உடன் ஊழியர்களுக்கு அவர் காண்பித்தார். அனுதின உழைப்பிலும்கூட ஆண்டவரைக் கனம்பண்ண வேண்டும் என அவர் போதித்தார். ஒரு கிறிஸ்தவ ஊழியனாக அவரது அனுதாபமிக்க வேண்டுகோள்களின் வேகத்தை எதுவும் குறைத்துப்போட அவரது உழைத்து உரமேறிப்போயிருந்த கரங்கள் விடவில்லை.

அனைவரும் உழைப்பாளர்களாக இருக்கவேண்டுனெ தேவன் வடிவமைத்திருக்கிறார். சோம்பேறியான மனிதனைவிடவும் கடினமாய்

உழைக்கும் மிருகமானது தனது படைப்பின் நோக்கத்தை நன்றாகவே நிறைவு செய்கிறது. தேவன் ஒரு இடைவிடா உழைப்பாளர். தூதர்கள் உழைப்பாளர்களாக உள்ளனர். மனுப்புத்திரருக்கு அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கின்றனர். செயல்பாடற்ற ஒரு பரலோகத்தை எதிர்நோக்கியிருப்பவர்கள் ஏமாற்றமடைவார்கள்; பரலோக நடைமுறை யாட்சியில்சோம்பலில்திளைத்திருப்பதற்கு இடமில்லை. ஆனால்வருத்தப்பட்டுப் பாரஞ்சுமப்போருக்கு இளைப்பாறுதல் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. உண்மை யுள்ள ஊழியக்காரனே தனது அலுவல்களிலிருந்து தனது எஜமானுடைய சந்தோஷத்திற்குள் வரவேற்கப்படுவான். அவன் தனது ஆயுதவர்க்கத்தை மகிழ்வுடன் கீழே வைப்பான், கிறிஸ்துவின் சிலுவையின்மூலமாக வெற்றி சிறப்போருக்கு ஆயத்தமாக்கப்பட்டுள்ள மகிமையான இளைப்பாறுதலில் யுத்த சத்தத்தை அவன் மறப்பான்.—Counsels to Teachers, Parents, and Students, pp. 274–280.

## 67

# நீர்வளம்பொருந்திய இடத்திலெல்லாம் விதைத்தல்

நீர்நிலைகள் அருகிலெல்லாம் விதைப்பதற்கு, மிஷனெரி ஊழியத்தின் பலதரப்பட்ட பிரிவுகளைத் தெரிந்துகொள்ளுமாறு கர்த்தர் தமது ஜனங்களை அழைக்கிறார். நமது அயலகத்தார் மற்றும் நண்பர்கள் மத்தியில் நாம் செய்யவேண்டுமென்று அவர் விரும்புகிற பணியில் ஒரு சிறுபகுதியையே நாம் செய்கிறோம். வறியோர், நோயுற்றோர் அல்லது துயரத்திலிருப்போருக்குக் காட்டும் கருணையினால், தெய்வீக சத்தியத்தை அவர்களது இருதயங்களுக்குக் கொண்டுசெல்லும் ஒரு செல்வாக்கை அவர்கள்மீது நாம் பெற்றுக்கொள்வோம். சேவைக்கான அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு பயன்படுத்தாமல் விட்டுவிடப்பட அனுமதிக்கக்கூடாது. அதுவே நாம் செய்யக்கூடிய மாபெரும் மிஷனெரி ஊழியம் ஆகும். அன்பு மற்றும் அனுதாபத்துடன் வீடுவீடாகச் சத்தியத்தை முன்வைப்பது, கிறிஸ்துவானவர் தனது சீஷர்களை அவர்களது முதல் மிஷனெரிப் பயணத்தில் அனுப்பியபோது அளித்த போதனைக்கு இசைவானதாக இருக்கிறது.

### பாடல் வரம்

பாடல்வரம் பெற்றோர் தேவப்படுகின்றனர். இருதயத்தின்மீது ஆவிக்குரிய சத்தியத்தைப் பதியச்செய்வதில் பாடல் மிகவும் பயன்மிக்கக்

கருவிகளில் ஒன்றாக இருக்கிறது. பக்திப்பாடலின் வார்த்தைகளால் மனந்திரும்புதல் மற்றும் விசுவாசத்தின் ஊற்றுக்கண்கள் பெரும்பாலும் திறந்துவிடப்பட்டிருக்கின்றன. வாலிபர் மற்றும் வயோதிகரான சபை அங்கத்தினர்கள், உலகத்திற்கு இந்தக் கடைசித்தூதினை அறிவிப்பதற்குப் புறப்பட்டுப்போகும் வண்ணம் கற்பிக்கப்படவேண்டும். அவர்கள் தாழ்மையாய் செல்வார்களானால், ஜெபத்தில் குரலை உயர்த்துவது எப்படியென்றும், பாடலில் குரலை உயர்த்துவது எப்படியென்றும், இக்காலத்திற்குரிய சுவிசேஷத் தூதினை அறிவிப்பது எப்படியென்றும் அவர்களுக்குப் போதிப்பதற்குத் தேவதூதர்களும் அவர்களுடன் செல்வார்கள்.

வாலிப ஆண்களே, வாலிபப் பெண்களே, தேவன் உங்களை எப்பணிக்கு அழைக்கிறாரோ அதைத் தெரிந்துகொள்ளுங்கள். உங்கள் திறமைகளை நல்ல நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதற்குக் கிறிஸ்து உங்களுக்குப் போதிப்பார். பரிசுத்த ஆவியானவரின் உயிரூட்டும் செல்வாக்கை நீங்கள் பெற்று, பிறருக்குப் போதிக்க வகைதேடும்போது, உங்கள் மனங்கள் புத்துணர்வடையும், உங்களை கவனிப்பவர்களுக்குப் புதிதும், தனித்தன்மை வாய்ந்த அழகுமிக்க வார்த்தைகளை முன்வைக்க நீங்கள் திராணியுள்ளவர்களாக இருப்பீர்கள்...

## மருத்துவ மிஷனெரி ஊழியம்

மருத்துவ மிஷனெரி ஊழியம் சேவைக்கான பல வாய்ப்புகளை அளிக்கிறது. புசித்தலில் இச்சையடக்கமின்மையும், இயற்கைப் பிரமாணங் களைக்குறித்த அறியாமையும் இப்பொழுதிருக்கிற அநேக வியாதிகளுக்குக் காரணமாயிருந்து, தேவனுக்குரிய மகிமையைக் கொள்ளையாடிக் கொண்டிருக்கின்றன. சுயத்தை மறுப்பதற்குத் தோல்வியடைவதினிமித்தம், தேவ ஜனங்களில் அநேகர் தேவன் தங்களுக்கு முன்வைத்திருக்கிற உயர்ந்த ஆவிக்குரிய தரத்தை அடையக்கூடாதிருக்கின்றனர். வியாதியைக் குணப்படுத்துவது எப்படி என்று அறிவதைவிடவும் ஆரோக்கியம் காப்பது எப்படி என்று அறிவதே சிறந்தது என்பதை ஜனங்களுக்குப் போதியுங்கள். சுய விருப்பச் செயல்பாடு அனைத்திற்கெதிராகவும் எச்சரிக்கிற ஞானமுள்ள போதனையாளர்களாக நாம் இருக்கவேண்டும். அறியாமையின் விளைவாக உலகத்திற்குள் வந்து விட்டிருக்கிற வியாதி, பெலவீனம் மற்றும் துயரம் ஆகியவற்றை நாம் காணும்போது, அறியாமையுள்ளோர்க்கு ஒளியூட்டி, துயருற்றோருக்குத் துயர்நீக்கும் நமது பங்கை நாம் எப்படிச் செய்யாதிருக்க முடியும்?

ஆணவமிக்கத் தப்பெண்ணத்தினால் ஆத்துமத்துக்குரிய நுழைவழிகள் அடைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், ஆரோக்கிய வாழ்வின் கொள்கை

களை அநேகர் அறியாதிருக்கின்றனர். ஆரோக்கிய உணவைச் சமைப்பது எப்படியென்று ஜனங்களுக்குப் போதிப்பதால் நல்ல சேவையைச் செய்யமுடியும். தெரிந்துகொள்ளப்படும் எந்த முக்கியமான வேலையையும் போன்று, இந்த வேலையும் முக்கியமானதே. அதிகமான சமையற்கலைப் பள்ளிகள் நிறுவப்பட வேண்டும். முழு ஆரோக்கியமுள்ள உணவுகளைச் சமைக்கும் கலையைச் குறித்துப் போதனை செய்வதற்கு, சிலர் வீடுவீடாக உழைக்கவேண்டும். ஆரோக்கியச் சீர்திருத்தத்தின் செல்வாக்கின்மூலமாக, சரீர, மன மற்றும் ஒழுக்கரீதியான இழிநிலையிலிருந்து அதிகமதிகமான பேர் மீட்கப்படுவார்கள்.—Review and Herald, June 6, 1912.

## 68

# பலதரப்பட்ட பணித்துறைகள்

சபை ஊழியஞ்செய்வதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எனவே கிறிஸ்துவுக்காக ஊழியஞ்செய்கிற வாழ்க்கையில், சபையோடு தொடர்பு கொண்டிருப்பதே முதல் படியாகும். கிறிஸ்துவுக்கு உண்மையாக இருப்பது சபையின் கடமைகளை உண்மையாகச் செய்வதையே குறிக்கிறது. இதுவே ஒருவருடைய பயிற்சியின் முக்கியமான பகுதியாகும். எஜமானனின் வாழ்க்கையோடு சபை ஒன்றரக் கலந்துவிட்டிருந்தால், வெளியுலகத்தை அவரிடம் கொண்டுவர எடுக்கிற முயற்சிகளுக்கு இது சரியாக நடத்திச்செல்லும். அநேக துறைகளில், உபயோகமான முயற்சிகளுக்கான சந்தர்ப் பங்கள் இருப்பதை வாலிபர்கள் காணலாம்.—Education, pp. 268, 269.

### ஒவ்வொரு நபருக்கும் ஒரு இடம்

பரலோக நித்திய திட்டத்திலே ஒவ்வொரு நபருக்கும் ஒரு இடமுண்டு. ஆத்துமாக்களை இரட்சிப்பதில் கிறிஸ்துவுடன் சேர்ந்து ஒவ்வொருவரும் பணியாற்ற வேண்டும். தேவனுக்காக ஊழியம் செய்வதற்கு இந்த பூமியிலே ஒரு சிறப்பான இடம் குறிப்பிட்டுக் கொடுக்கப்பட்டிருப்பதைவிட, பரலோக வாசஸ்தலங்களிலே நமக்காக ஓரிடம் மிக நிச்சயத்தோடு ஆயத்தம்பண்ணப்படவில்லை.—Christ's Object Lessons, pp. 326, 327.

### ஓய்வுநாள் பள்ளிப்பணி

ஓய்வுநாள் பள்ளிப் பணியில் வாழ்நாள் முழவதுமான ஆர்வமிக்க உழைப்பிற்காகத் தங்களை ஆயத்தமாக்கிக்கொள்ளுமாறு கர்த்தர் வாலிப ஆண்கள் மற்றும் வாலிபப் பெண்களை அழைக்கிறார்… மனப்பூர்வமான

சேவையை அளிக்கக்கூடிய, பயிற்சியினால் தங்களது தாலந்தை அதிகரிக்கக் கூடிய, ஏற்கனவே அடையப்பெற்றிருக்கிற வளர்ச்சியில் மேலும் முன்னேற்றம் கொண்டுவருகிற ஆசிரியர்கள் ஓய்வுநாள் பள்ளிப்பணியில் இருக்கவேண்டு மென கர்த்தர் விரும்புகிறார்.—Testimonies on Sabbath School Work, p. 53.

## வேதாகமப் பணி

வேத வாசகங்களை விளக்கமாக விவரித்தல் எனும் ஆலோசனை பரலோகத்தில் பிறந்த ஆலோசனையாகும், அது வேறெந்த வகையிலும் செய்யப்படமுடியாத முக்கியமான ஒரு வேலையைச் செய்வதற்காகக் களத்திற்குள் நூற்றுக்கணக்கான வாலிப ஆண்களையும், வாலிபப் பெண்களையும் அனுப்புவதற்கு வழியைத் திறந்து கொடுக்கிறது.

வேதாகமம் கட்டவிழ்க்கப் பெற்றது. ஒவ்வொரு மனிதனின் வாசலுக்கும் அதைச் சுமந்துகொண்டு செல்லமுடியும், அதன் சத்தியங்களை ஒவ்வொரு மனிதனின் மனச்சாட்சிக்கு முன்பாகத் திறந்துவைக்க முடியும். சத்தியம் முன்வைக்கப்படும்போது, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்பதைக் காணத் தங்களுக்கென்றே வேதவாக்கியங்களை ஆராயக்கூடிய, மேன்மைமிகு பெரோயா பட்டணத்தாரைப் போன்ற அநேகர் இருக்கின்றனர். "வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" என்று கிறிஸ்து கூறியிருக்கிறார். இது ஒரு மிகப்பெரிய, முக்கியமான பணியாகும். இது நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதைச் செய்வதினால் நமக்கு மாபெரும் நன்மை உண்டாகும்; கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிதல் தக்க பலனை அடையாமற்போகாது. அவரது வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற வெளிச்சத்தைப் பின்பற்றிய இந்த விசுவாசச் செயலுக்காக, அவர் தமது காருண்யம் எனும் தனிச்சிறப்புவாய்ந்த அடையாளங்களால் முடிசூட்டுவார். —Testimonies on Sabbath-School Work, pp. 29, 30.

## வீடுவீடாகச் சந்தித்தல்

சத்தியம் இன்னும் கேட்கப்பட்டிராத இடங்களில் வீடுவீடாகச் சென்று வேலைசெய்வதற்கும், சுற்றித்திரிகிறவர்களாகவும் சுவிசேஷகர்களாகவும் உழைப்பதற்கும் நமது வாலிபர்களைக் கர்த்தர் அழைக்கிறார். "நீங்கள் உங்களுடையவர்களல்ல…கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." தேவனுடைய இயக்கத்தின்கீழ் ஊழியத்துக்குப் போகிறவர்கள் ஆச்சரியமான விதத்தில் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.—Testimonies for the Church, Vol. 8, p. 229.

வாலிபர்கள் ஊழியத்திற்கான தகுதியடைவதற்கு மிகச் சிறந்த வழிகளில் ஒன்று. வீடுவீடாகச் சந்திக்கும் ஊழியத்தில் நுழைவதே ஆகும். இக்காலத்திற்குரிய சத்தியம் அடங்கியுள்ள புத்தகங்களை வீடுவீடாக விற்பதற்கு அவர்கள் புறநகர்ப்பகுதிகள் மற்றும் நகரங்களுக்குள் செல்வார்களாக. ஜீவவார்த்தைகளைப் பேசுவதற்கான சிலாக்கியத்தை இப்பணியில் அவர்கள் கண்டடைவார்கள், அவர்கள் விதைக்கும் சத்திய விதைகள் கனிகொடுக்கும்படி முளைத்தெழும்பும். ஜனங்களைச் சந்தித்து, நமது வெளியீடுகளை அவர்களுக்கு அளிப்பதினால், பிரசங்கம் செய்வதினால் அடையக்கூடாத அனுபவத்தை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள்...

உண்மையான ஊழியத்துக்கான ஒரு வாய்ப்பை விரும்புகிற, தேவனுக்கென்று தங்களையே முற்றிலுமாக ஒப்புக்கொடுக்கிற யாவரும், வருங்கால அழியா வாழ்வைக்குறித்து அநேகக் காரியங்களைப் பேசுகிற வாய்ப்பை வீடுவீடாகச் செய்யும் ஊழியத்தில் கண்டடைவார்கள்.—Gospel Worker, p. 96.

### போதித்தல்

வாலிப உள்ளங்களுக்குக் கற்றுக்கொடுத்து, வனைவதற்கும், பலதரப்பட்ட பணித்துறைகளை வெற்றிகரமாக முன்னேற்றிச் செல்வதற்கும் மிக விசேஷித்தத் தாலந்து தக்கவைக்கப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது, அப்பணி நமது சபைப்பள்ளிகளின் ஆசிரியரால் செய்யப்பட வேண்டியதிருக்கிறது...

அமைதியும், இரக்கமும் கொண்ட, பொறுமையும் அன்பும் அதிகம் தேவைப்படுவோருக்கு அதை வெளிக்காட்டுகிற ஆசிரியர்கள், விசேஷமாகச் சிறுபிள்ளைகளுக்குத் தேவைப்படுகின்றனர்...

உயர்ந்த ஒழுக்கத் தகுதிகளும், நம்பகத்தன்மையும், விசுவாசத்தில் உரம்வாய்ந்தவர்களும், சாமர்த்தியமும், பொறுமையும் உடையவர்களும், தேவனோடு சஞ்சரித்து, தீமையின் தோற்றத்திலிருந்தே விலக்கிகொள்கிறவர்களுமான ஆசிரியர்கள் நமது சபைப்பள்ளிகளில் தேவைப்படுகின்றனர்.— Testimonies for the Church, Vol. 6, pp. 200, 201.

### தொழில்

தேவன் நமது சேவையில், அறிவுள்ள மனிதர்கள், பல்வகைசார்ந்த துறைகளிலும் தகுதிபெற்றவர்களாக வேண்டுமென்று விரும்புகிறார். தங்களது தொழில்துறை நடவடிக்கைகளில் சத்தியத்தின் மிகமேன்மையான கொள்கைகளை பின்னிப்பிணைந்து வைத்திருக்கும் தொழில் முனைவோரே இன்றையத் தேவையாகும். முழுநிறைவான படிப்பாலும் பயிற்சியாலும்

அவர்களது தாலந்துகள் பூரணப்படவேண்டும். ஞானமும் திறமையும் உள்ளவர்களாக எந்தத் துறைசார்ந்த பணியில் ஈடுபட்டிருப்பவர்களாலும் அவர்கள் தங்களுக்கான சந்தர்ப்பங்களை மேம்படுத்தவேண்டியது அவசியமென எண்ணுவார்களேயானால், அவர்களே இந்த உலகத்தில் தேவ இராஜ்யத்தைக் கட்டுவதற்காக தங்களது திறமைகளைப் பயன்படுத்திக் கொண்டிருப்பவர்களாவர். தானியேல் தனது அனைத்து அரசாங்க அலுவல்களிலும் நடவடிக்கைகளிலும் மிக மிக நுட்பமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும், ஒரு தவறோ அல்லது பிழையோ அவனில் கண்டுபிடிக்கப்படவில்லை. மூளையின் – எலும்பின் – தசையின் – இதயத்தின் – ஜீவனின் பலமனைத்தையும் தேவனுடைய சேவைக்கு அர்ப்பணிக்கும் ஒரு மனிதனால் எப்படிப்பட்ட காரியங்கள் சாதிக்கப்பட முடியுமென்பதை தானியேலின் வரலாறு காட்டுகிறது.—Christ's Object Lessons, pp. 350, 351.

## மருத்துவப் பணி

விசுவாசமிக்க, தேவனுக்குப் பயந்த மருத்துவரால் பிடிக்கப்பட்டிருக் கிறதைவிடவும் மிக முக்கியமான ஊழியக்களம் வேறெதுவுமில்லை. ஒரு மனிதன் மாபெரும் நன்மையைச் சாதிக்கக்கூடிய அல்லது தனது மகிழ்ச்சியின் கிரீடத்திலே ஜொலிப்பதற்கென அதிகமான இரத்தினங்களை வென்றெடுக்கக்கூடிய களம் வேறெதுவுமில்லை. அவன் நுழையும் அனைத்து நோயாளி அறைகளுக்கும் கிறிஸ்துவின் கிருபையை இனிய நற்கந்தமாக அவன் சுமந்துசெல்லலாம்; பாவநோய் கொண்ட ஆத்துமாவுக்கு அவன் மெய்யான சுகமளிக்கும் தைலத்தைக் கொண்டு செல்லலாம். நோயுற்றோருக்கும், மரித்துக்கொண்டிருப்போருக்கும் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியை அவன் சுட்டிக்காட்டலாம். இன்னலுற்ற வாழ்வையுடையோரின் நிலையை இன்னும் மோசமாக்கிவிடாதபடிக்கு, அவர்களது நித்திய நலன்களைக் குறித்துப் பேசுவது அபாயகரமானது என்ற புதுக்கருத்துக்கு அவன் செவிகொடுக்கக்கூடாது; ஏனெனில் பாவத்தை மன்னிக்கும் இரட்சகரைக்குறித்த அறிவு பத்தில் ஒன்பது பேருக்கு உள்ளத்திலும், உடலிலும் ஆரோக்கியத்தை உண்டுபண்ணும். சாத்தானின் வல்லமையை இயேசுவானவர் மட்டுப்படுத்தமுடியும். சரீரம் மற்றும் ஆத்துமப் பிணிகளைக் குணமடையச்செய்வதற்கு பாவநோயுற்ற ஆத்துமா நம்பவேண்டிய வைத்தியர் அவரே ஆவார்.—Testimonies for the Church, Vol. 5, pp. 448, 449.

தேவனுடைய வார்த்தையின் பிரசங்கத்திற்குச் செவிகொடாத அல்லது எந்த ஆன்மீக ஆராதனையிலும் கலந்துகொள்ளாத பெரும் எண்ணிக்கையிலானவர்கள் ஏறக்குறைய ஒவ்வொரு மக்கள் குழுவிலும்

இருக்கிறார்கள். சுவிசேஷத்தால் அவர்களைச் சந்திக்க வேண்டுமானால், அது அவர்களது இல்லங்களுக்குச் சுமந்துசெல்லப்படவேண்டும். பெரும் பாலும் அவர்களது சரீரத் தேவைகளில் ஏற்படும் நிவாரணமே அவர்களை அணுகுவதற்கான ஒரே நுழைவழியாக இருக்கிறது. பிணியாளிகளைப் பராமரித்து, வறியோரின் துயர்துடைக்கும் மிஷனெரி செவிலிமார்கள் அவர்களுடன் ஜெபிப்பதற்கும், தேவனுடைய வார்த்தை யிலிருந்து அவர்களுடன் வாசிப்பதற்கும், இரட்சகரைக்குறித்துப் பேசுவதற்கும் அநேக வாய்ப்புகளைப் பெறுவார்கள். உணர்ச்சியானது தரங்குறைத்துவிட்ட பசியார்வங்களைக் கட்டுப்படுத்தும் மனோதிடமின்றி உதவியற்ற நிலையி லிருப்போருக்காகவும், அப்படிப்பட்டவர்களோடும் அவர்கள் ஜெபிக்கலாம். தோல்வியுற்று, சோர்வடைந்த ஜீவியங்களுக்குள் ஒரு நம்பிக்கையின் ஒளியை அவர்கள் கொண்டுவரலாம். தற்சார்பற்ற இரக்கத்தின் செயல்களில் வெளிக்காட்டப்படும் அவர்களது சுயநலமற்ற அன்பானது, துயருறுவோர் கிறிஸ்துவின் அன்பில் விசுவாசங்கொள்வதற்குப் பாதையை இலகுவானதாக்கிவிடும்.—Ministry of Healing, pp. 144, 145.

சுவிசேஷ ஊழியம் ஒரு பொருட்டல்ல என்று கருதப்படக்கூடாது. வார்த்தையின் ஊழியத்தை ஒரு கீழ்த்தரமான காரியம் என்றெண்ணப் படும்படிச் செய்வதற்கு எந்தத் துணிச்சலான முயற்சிக்கும் வழியமைத்துக் கொடுக்கக்கூடாது. அது அப்படிப்பட்டதல்ல. ஊழியத்தைச் சிறுமைப்படுத்து கிறவர்கள் கிறிஸ்துவைச் சிறுமைப்படுத்துகின்றனர். பல்வேறுபட்ட கிளைகள் கொண்ட ஊழியமே அனைத்துப் பணிகளிலும் மேலானது, சுவிசேஷ ஊழியராயிருப்பதைவிடவும் தேவனால் அதிகம் ஆசீர்வதிக்கப்பட்டப் பணி வேறெதுவுமில்லை என்பது வாலிபர்களுக்குமுன்பாக வைக்கப்பட வேண்டும்.

நமது வாலிபர்கள் ஊழியத்தில் நுழைவதற்குத் தடைசெய்யா திருப்பார்களாக. சிலர் நடக்கவேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருக்கிற பாதையிலிருந்து, உணர்ச்சிப் பெருக்குண்டாக்கும் விளக்கங்கள் மூலமாக அவர்களை வழிவிலகச் செய்கிற அபாயமும் இருக்கிறது. ஊழியத்தில் நுழைவதற்குத் தங்களை ஆயத்தமாக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் மருத்துவத்துறைகளில் ஏதாவது ஒரு பாடப்பிரிவைத் தெரிந்தெடுக்கும்படி சிலர் ஊக்கப்படுத்தப்பட்டிருக்கின்றனர். தமது திராட்சத்தோட்டத்தில் உழைக்கும்படி அதிகமான ஊழியக்காரர்களைக் கர்த்தர் அழைக்கிறார். “தூரத்திலிருக்கும் ஊழியத்தளங்களை ஸ்திரப்படுத்துங்கள்; உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் விசுவாசமிக்கக் காவற்காரர்களை நிறுத்துங்கள்” என்ற வார்த்தைகள் கூறப்பட்டன. வாலிபர்களே, தேவன் உங்களை அழைக்கிறார். பரந்த இருதயமும், பரந்தமனமும் கொண்ட, கிறிஸ்துவின்மீதும்

சத்தியத்தின்மீதும் ஆழ்ந்த நேசம்கொண்ட வாலிபர்களாலான முழு சேனைகளை அவர் அழைக்கிறார்.—Testimonies for the Church, Vol. 6, p. 411.

## அயல்நாட்டுப் ஊழியப் பணி

வாலிபர்கள் தேவை. ஊழியக்களங்களுக்குத் தேவன் அவர்களை அழைக்கிறார். ஒப்பிட்டுப் பார்த்தால் பாரம் மற்றும் பொறுப்புகளிலிருந்து விடுபட்டிருப்பதால், ஒரு பெரிய குடும்பத்திற்குப் பயிற்சியும், ஆதரவும் அளிக்க வேண்டியவர்களை விடவும் அவர்கள் ஊழியத்தில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு அதிக சாதகமான சூழலில் இருக்கின்றனர். மேலும், புதிய காலநிலைகள் மற்றும் புதிய சமுதாயத்திற்குள் தங்களை உடனடியாக மாற்றியமைத்துக் கொள்ளவும், அசௌகரியங்கள் மற்றும் துன்பங்களைத் திறமையுடன் சகித்துக்கொள்ளவும் வாலிபர்களால் முடியும். சாமர்த்தியம் மற்றும் விடாமுயற்சியினால், ஜனங்களை இருக்கிற இடத்திலேயே சந்திக்க அவர்களால் முடியும்.—Testimonies for the Church, Vol. 5, p. 393.

தேவனுடைய இரட்சிக்கும் சத்தியத்தைப் பிற தேசங்களிலுள்ளவர்களுக்கு அறிவிக்கிற சாதனங்களாக வாலிபர்களைத் தேவன் பயன்படுத்தும் வண்ணம், பிற மொழிகளுடன் அறிமுகமானவர்களாக அவர்கள் தங்களைத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். பாவிகளுக்காகப் பணிபுரிவதில் ஈடுபட்டிருக்கும் அதே நேரத்தில், பிறமொழிகளைக்குறித்த அறிவை இத்தகைய வாலிபர்கள் பெற்றுக்கொள்ளலாம். தங்களது நேரத்தை அவர்கள் சிக்கனமாகச் செலவழிப்பார்களானால், மிகவும் பரந்த பயன்பாட்டிற்கென அவர்கள் தங்கள் மனங்களை மேம்படுத்தித் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளலாம். குறைந்த அளவிலான பொறுப்பை உடையவர்களாயிருக்கிற வாலிபர்கள் தங்களைத் தேவனுக்காக அர்ப்பணிப்பார்களானால், பிறமொழிகளைப் படித்து, அவற்றுடன் அறிமுகமாகிக் கொள்வதினால், பயன்பாட்டிற்கென அவர்கள் தங்களைத் தகுதிப்படுத்திக்கொள்ளக்கூடும். மொழிபெயர்ப்புப் பணிக்கும் அவர்கள் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள முடியும்.–Testimonies for the Church, Vol. 3, p. 204.

## இளமைத்துடிப்புமிக்க சேவை

சிறுபிள்ளைகள் வீட்டிலும், சபையிலும் ஏற்புடைய மிஷனெரிப் பணியாளர்களாகச் செயல்படலாம். வெறும் விளையாட்டிற்காக மட்டுமல்ல, பயனுள்ள சேவைக்காக அவர்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்பதை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மிஷனெரிப்பணி புரிய இல்லத்தில் அவர்களைப் பயிற்றுவிக்கலாம், அது அவர்களை மிகவும் விரிவான பிரயோஜனத்தின் செயலெல்லைகளுக்குத்

தகுதிப்படுத்தும். பெற்றோர்களே, தங்களுக்கான தேவனின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உங்கள் பிள்ளைகளுக்கு உதவுங்கள்.—Review and Herald, December 8, 1910.

## 69

# ஏற்புடைய சேவை

தேவனுடைய அளவற்ற இரக்கத்தினாலும், அன்பினாலும் அவரது வார்த்தையிலிருந்து வெளிச்சம் நமக்கு அருளப்பட்டிருக்கிறது, "இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" என்று கிறிஸ்து நம்மிடம் கூறுகிறார். தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிற வெளிச்சம் இருளில் இருப்போருக்குமுன்பாகப் பிரகாசிப்பதாக. இதை நீங்கள் செய்யும்போது, கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதில் உங்களுக்கு உதவும்படி, பரலோக தூதர்கள் உங்கள் பக்கமிருப்பார்கள்….

பிரியமான இளம் நண்பர்களே, கர்த்தருக்கு சேவை செய்ய அபிஷேகம்பெற்ற ஒரு ஊழியக்காரராக இருக்கவேண்யது அவசியமில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். கிறிஸ்துவுக்காகப் பணிபுரிவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. அபிஷேகம் என்ற பெயரில் மனிதக் கரங்கள் உங்கள்மீது ஒருபோதும் வைக்கப்படாமல் இருந்திருக்கலாம்; ஆனால் தேவன் தமது சேவைக்கான தகுதியை உங்களுக்கு அளிப்பார். ஆத்துமாக்களை இரட்சிப்பதில் அவர் உங்களைக் கொண்டு கிரியை செய்யமுடியும். கிறிஸ்துவின் பள்ளியில் கற்றுக்கொண்ட பின்னர், நீங்கள் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருந்தால், அவருக்காகப் பேசுவதற்கான வார்த்தைகளை அவர் உங்களுக்கு அருளுவார்.

### தவறுகளுடன் நமது தொடர்பு

பூரணமடைவதற்கு உங்கள் பெலனுக்கேற்ப அனைத்தையும் செய்யுங்கள்; ஆனால், நீங்கள் தவறுகள் இழைப்பதால் தேவனுடைய சேவையிலிருந்து கைவிடப்பட்டுவிட்டதாக எண்ணிக்கொள்ள வேண்டாம். நமது உருவம் இன்னதென்று கர்த்தர் அறிவார்: நாம் மண்ணென்று நினைவுகூருகிறார். தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகளை நீங்கள் உண்மையாகப் பயன்படுத்தும்போது, சுயத்தின்மீது வெறுப்படையச் செய்கிற அறிவை நீங்கள் பெறுகிறீர்கள். தீங்கு விளைவிக்கும் பழக்கங்களைப் பிரித்தெறிய வேண்டியதின் அவசியத்தை நீங்கள் காண்பீர்கள், இல்லாவிடில் ஒரு தவறான முன்மாதிரியினால், நீங்கள் பிறரைக் காயப்படுத்துவீர்கள்.

உங்களுக்கு மிகவும் அருமையாயிருக்கிற சத்தியத்தைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கிற பணியை கவனத்துடன் செய்யுங்கள். பின்பு நிரப்பப்படுவதற்கான காலியிடங்கள் ஏற்படும்போது, "மேலே ஏறிவா" என்ற வார்த்தைகளை நீங்கள் கேட்பீர்கள். மறுமொழிகொடுக்க நீங்கள் விருப்பமற்றவராக இருக்கலாம்; ஆயினும் தேவுனடைய ஊழியத்திற்குள் ஒரு புத்தம்புதிய, நேர்மையான வைராக்கியத்தைக் கொண்டுவந்து, விசுவாசத்தில் முன்னேறிச் செல்லுங்கள்.

ஆத்தும ஆதாயத்தின் இரகசியமானது மாபெரும் ஆசிரியரிடமிருந்து மட்டுமே கற்றுக்கொள்ளப்பட முடியும். பனித்துளியும், மென்தூறல்களும் வாடுகின்ற தாவரத்தின்மீது மென்மையாயப் பொழிவதுபோல, நமது வார்த்தைகளும் நாம் ஆதாயம்பண்ணத் தேடுகின்ற ஆத்துமாக்களின்மீது மென்மையுடனும், அன்புடனும்ட பொழியப்படவேண்டும். வாய்ப்புகள் நம்மிடம் வரும்வரை நாம் காத்திருக்கலாகாது; சரியான நேரத்தில் சரியான வார்த்தையைப் பேசுவதற்கு தேவன் நமக்கு உதவும்படி ஜெபத்தில் உயர்த்தப்பட்ட இருதயத்தை உடையவர்களாக, நாம் அவைகளைத் தேடவேண்டும். ஒரு வாய்ப்பு தானாகவே தேடிவரும்போது, அதை அசட்டைசெய்வதற்கு எந்தச் சாக்குபோக்கும் உங்களை வழிநடத்த விடாதீர்கள்; அதனைப் பயன்படுத்திக் கொள்ளுதல் என்பது ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சிப்பதாகவும் இருக்கலாமே!—The Youth's Instructor, February 6, 1902.

## உன்னதமான பணி

கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அந்த ஆத்துமாக்களை இரட்சிக்கும் பணியே — அனைத்துப் பணியிலும் மேலான பணியாகும்; ஆத்துமாக்களின் ஆற்றல்களை இழுத்து ஈடுபடுத்தக்கூடிய மற்ற அனைத்திற்கும் மேலான தொழிலாகும். இதை உங்கள் வாழ்வின் பிரதான, முக்கியமான பணியாக்கிக் கொள்ளுங்கள். இதை உங்கள் விசேஷமான வாழ்க்கைப்பணியாக்கிக் கொள்ளுங்கள். இந்த சிறப்பான, மேன்மையான பணியில் கிறிஸ்துவுடன் ஒத்துழைத்து, உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு மிஷெனரிகளாக மாறுங்கள். உள்நாடு மற்றும் தூர தேசங்களில் ஆத்துமாக்கனை இரட்சிப்பதற்கும் பணியைத் திறமையுடன் செய்வதற்கும் ஆயத்தமாயிருங்கள். தேவனுடைய கிரியைகளைச் செய்யுங்கள்; பிறருக்காக உழைப்பதினால் உங்களது இரட்சகரிலுள்ள உங்கள் விசுவாசத்தைச் செயலில் காட்டுங்கள். வாலிபரும், வயோதிபரும் தேவனுக்கென்று முற்றிலுமாக மனமாற்றமடைந்து, அவர்களுக்கு அருகிலிருக்கும் கடமையைக் கையிலெடுத்து, அவர்களுக்கு இருக்கும் வாய்ப்பின்படியே பணிசெய்து, தேவனுடன் இணைந்துழைக்கும்

பணியாட்களாக மாறினால் எத்தனை நலமாயிருக்கும்!—The Youth's Instructor, May 4, 1893.

## 70

# சேவையில் உண்மை

உலகக் காரியங்களில் கொஞ்சத்தில் உண்மையில்லாதவர்கள் மிகப்பெரும் முக்கியமான பொறுப்புகளிலும் உண்மையற்றவர்களாயிருப்பார்கள். அவர்கள் தேவனை வஞ்சித்து, தெய்வீகப் பிரமாணத்தின் உரிமைகோருதல்களைப் பூர்த்திசெய்வதில் தோல்வியுறுவார்கள். அவர்களது தாலந்துகள் தேவனுடையவை என்பதையும், அவருடைய சேவையில் அவற்றை அர்ப்பணிக்க வேண்டும் என்பதையும் அவர்கள் உணரமாட்டார்கள். தங்களுக்குக் கட்டளையிடப்பட்டதைத் தவிர, தங்களைப் பணியமர்த்தியவர்களுக்காக ஒன்றும் செய்யாதவர்கள், பணியின் செழிப்பானது தங்களது சார்பிலான கொஞ்சங்கூடுதல் முயற்சியைச் சார்ந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும்போது, உண்மையான ஊழியக்காரர்களாக எண்ணப்பட மாட்டார்கள். பணியமர்த்தப்பட்டுள்ள ஒருவனுடைய கவனத்தின்கீழ் நேரடியாக வருகிற, செய்யப்படக் காத்திருக்கிற, குறிப்பிடப்படாத அநேகக் காரியங்கள் உண்டு.

இயேசுவின் நாமத்தை அறிக்கையிடுகிறவர்களின் வாழ்வில் அவரால் நமக்கு விதிக்கப்பட்டிருக்கிற அன்பின் நியதிகள் செயல்படுத்தப்பட்டால், கடின உழைப்புடன்கூடிய ஜாக்கிரதையும், சுயநலமற்ற முயற்சியும் வெளிக்காட்டப்பட்டால், ஏற்படுகின்ற கசிவுகளும், இழப்புகளும் தடுக்கப்படும்: ஆனால் தேவனுடைய ஊழியத்தைச் செய்துகொண்டிருக்கிற அநேகர் "கண்துடைப்பு வேலைக்காரர்கள்" என்று பதிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

### உண்மையின்மை பதிவுசெய்யப்படுகிறது

எஜமானுடைய பார்வையின்கீழ் நேரடியாகப் பணியாளன் இல்லையென்பதால், நேரத்தின் பயன்பாட்டையும், சொத்துப் பராமரிப்பையும் அசட்டைசெய்வதற்கு அவனை வழிநடத்துவது சுயநலத்தின் மிகவும் அருவருக்கப்படத்தக்க வடிவம் ஆகும். ஆனால் அப்படிப்பட்டப் பணியாளர்கள் தங்களது கவனக்குறைவுகள் கவனிக்கப்படவில்லையென்றும், தங்களது உண்மையின்மை பதிவுசெய்யப்படவில்லையென்றும் எண்ணிக் கொள்கிறார்களா? அவர்களது கண்கள் திறக்கப்படுமானால், காவலாளன் ஒருவன் காண்கிறதையும், அவர்களது அனைத்துக் கவனமின்மையும்

பரலோகப் புத்தகங்களில் பதிவுசெய்யப்படுகிறதையும் அவர்கள் காண்பார்கள்.

தேவனுடைய பணியில் உண்மையில்லாதவர்கள் கொள்கையில் குறைவுற்றிருக்கிறார்கள்; அனைத்துச் சந்தர்ப்பங்களின்கீழ் சரியானதைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்களை வழிநடத்தக்கூடிய தன்மையானது அவர்களது நோக்கங்களில் இல்லாதிருக்கிறது. தேவனுடைய ஊழியக்காரர்கள் தங்களைப் பணியமர்த்தியவரின் பார்வையின்கீழ் இருக்கிறார்கள் என்பதை எல்லா நேரங்களிலும் உணரவேண்டும். பெல்ஷாத்சாரின் புனிதம் குலைக்கும் விருந்தைக் கண்காணித்தவர் நமது எல்லா நிறுவனங்களிலும், வியாபாரியின் கணக்கறையிலும், தனியார் பணிமனையிலும் இருந்து கண்காணிக்கிறார். தூஷணம்பண்ணிய அரசனின் அஞ்சத்தக்க நியாயத்தீர்ப்பைப் பதிவுசெய்த இரத்தமற்ற கரம் உங்களது கவனக்குறைவையும் நிச்சயமாகப் பதிவுசெய்து கொண்டிருக்கிறது, “நீ தராசில் நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்,” என்ற அக்கினி வார்த்தைகளில் பெல்ஷாத்சாரின் குற்றத்தீர்ப்பு எழுதப்பட்டது: தேவன் உங்களுக்கு அளித்திருக்கிற கடமைகளை நீங்கள் நிறைவேற்றத் தவறினால், உங்களுக்கான குற்றத்தீர்ப்பும் அதுவாகவே இருக்கும்.

## சேவையின் உண்மையான நோக்கங்கள்

கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டிராமல் கிறிஸ்தவர்களென்று கூறிக் கொள்பவர்கள் அநேகர். மகிமையின் நம்பிக்கையான கிறிஸ்து அவர்களுக்குள் உருவாகவில்லை என்பதற்கு அவர்களது அன்றாட வாழ்வும், அவர்களது ஆவியும் சாட்சிபகருகிறது. அவர்களைச் சார்ந்திருக்க முடியாது, அவர்களை நம்ப முடியாது. அவர்கள் தங்களது சேவையைக் கொஞ்ச அளவிலான முயற்சியாகக் குறைத்துக்கொள்ளவும் அதே சமயம் மிக அதிகமான கூலியை வரப் பற்றிக்கொள்ளவும் ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர். “ஊழியக்காரன்” என்ற நாமம் ஒவ்வொரு மனிதனுக்கும் பொருந்துகிறது; நாம் எல்லாரும் ஊழியக்காரர்களே, எந்த மாதிரியை நாம் எடுத்துக்கொள்கிறோம் என்பதைக் கவனிப்பது நமக்கு நலமாயிருக்கும்? உண்மையின் மாதிரியா அல்லது உண்மையின்மையின் மாதிரியா?

கூடுமானவரைக்கும் அதிகமாகச் சாதிக்கவேண்டும் என்பது ஊழியக்காரர்கள் மத்தியில் பொதுவாக இருக்கிற மனநிலையா? மாறாக, பணியை எவ்வளவு சீக்கிரமாகவும், இலகுவாகவும் செய்யமுடியுமோ அவ்வாறு செய்து, தங்களாலான கொஞ்ச முயற்சியில் கூலியைப் பெற்றுக்கொள்வது வழக்கத்திலிருக்கும் பாணியாக இருக்கிறதல்லவா? கூடுமானவரைக்கும் முழுமையாகச் செய்வது அல்ல, ஆனால் சம்பளத்தைப் பெறுவதே நோக்கமாயிருக்கிறது. கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக இருப்பதாகக் கூறிக்கொள்கிறவர்கள் அப்போஸ்தலனாகிய பவுலின்

அறிவுரையை மறக்கக்கூடாது: "வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள். நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்"—கொலோ. 3:22–24.

"கண்துடைப்பு ஊழியக்காரர்களாகப்" பணிக்குள் நுழைகிறவர்கள் தங்களது பணியானது மனிதர்கள் அல்லது தூதர்களின் மேற்பார்வையைச் சகிக்க இயலாது என்பதைக் காண்பார்கள். வெற்றிகரமான பணிக்கு அவசியமான காரியம் கிறிஸ்துவைக்குறித்த அறிவே ஆகும்; இந்த அறிவானது அரோக்கியமான நீதியின் கொள்கைகளைக் கொடுத்து, நாம் சேவிக்கிறதாக அறிக்கையிடுகிற நமது இரட்சகரைப் போன்ற மேன்மையான, தன்னலமற்ற ஆவியைக் கொடுக்கும். நாம் எங்கிருந்தாலும், சமையலறையிலோ, பணிமனையிலோ, அச்சக அலுவலகத்திலோ, சுகாதார மையத்திலோ, கல்லூரியிலோ அல்லது கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் எங்கே அமர்த்தப்பட்டிருந்தாலும், நமது அனைத்துப் பணியிலும் உண்மையும், சிக்கனமும், பராமரிப்பும், முழுமையும் முக்கியப் பண்புகளாயிருக்க வேண்டும். "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ள வனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்"—லூக்கா 16:10.—Review and Herald, September 22, 1891.

# பகுதி 7

# ஆரோக்கியமும் போதுமான தகுதியும்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 71 | வாழ்வின் அறிவியல் | 205 |
| 72 | ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் | 207 |
| 73 | ஆரோக்கியத்தின் புனிதம் | 208 |
| 74 | சமச்சீரான கல்வி | 211 |
| 75 | ஆரோக்கியத்தின் இழப்பில் அடையப்படும் கல்வி | 211 |
| 76 | உயர்பண்பின் சிறப்படையாளம் | 212 |

பகுதி 7

# ஆரோக்கியமும் போதுமான தகுதியும்

சரீரத்தின்வழியாகவே மனமும் ஆத்துமாவும் வெளிப்படுவதால், மன மற்றும் ஆவிக்குரிய பெலம் பெருமளவில் சரீர பலத்தையும் செய்கையையும் சார்ந்திருக்கிறது. சரீர சுகத்தை மேம்படுத்தும் ஒவ்வொன்றும் பலமான மனதையும் சமநிலையான குணத்தையும் மேம்படுத்துகிறது. ஆரோக்கியம் இல்லாமல் எவரும் தெளிவாகப் புரிந்துகொள்ளவோ, அல்லது தனக்குச் செய்யவேண்டிய, உடன் மனிதர்களுக்குச் செய்யவேண்டிய, அல்லது தன்னுடைய சிருஷ்டிகருக்குச் செய்யவேண்டிய கடமைகளை முழுமையாக நிறைவேற்றவோ முடியாது. ஆகவே, குணத்தைப்போலவே ஆரோக்கியமும் பாதுகாக்கப்படவேண்டும். சரீரத்தைக்குறித்த மற்றும் சுகாதாரத்தைக்குறித்த அறிவுதான் அனைத்து கல்விக்கான முயற்சிக்கும் அடித்தளமாக இருக்கவேண்டும்.—Education, p. 195.

## 71

# வாழ்வின் அறிவியல்

நமது இனத்தை அழிவுக்கும், மரணத்துக்கும் நேராக வாரிக்கொண்டுபோகும் வியாதி மற்றும் குற்றத்தின் அலையைத் தடுத்திட என்ன செய்யமுடியும்? தீமைக்கான மாபெரும் காரணம், உணவுநாட்டம் மற்றும் உணர்ச்சியார்வத்தில் மையங்கொண்டுள்ளபடியால், இச்சையடக்கம் மற்றும் சுயக்கட்டுப்பாடு என்னும் பாடங்களைக் கற்றுக் கடைபிடிக்க வேண்டியது சீர்திருத்தத்தின் முதலும் முக்கியமுமான பணியாக இருக்கவேண்டும்.

சமுதாயத்தில் மேம்பாட்டிற்கான நிரந்தர மாற்றத்தை உண்டுபண்ணு வதற்கு, பெருந்திரளானவர்களின் கல்வி ஆரம்ப வாழ்விலேயே தொடங்கப்பட வேண்டும். சிறுபிராயம் மற்றும் வாலிபப்பிராயத்தில் உருவாக்கப்பட்ட பழக்கங்கள், பெறப்பட்ட சுவைகள், அடையப்பெற்ற இச்சையடக்கம், தொட்டிலிலிருந்து கற்பிக்கப்பட்ட கொள்கைகள் ஆகியவையே ஆண் அல்லது பெண்ணின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது. தளர்ந்த ஒழுக்கநெறிகளால்

உண்டாகும் குற்றம் மற்றும் ஒழுக்கச் சீர்கேட்டினை வாலிபருக்கு அளிக்கும் முறையான பயிற்சியினால் தடுத்து நிறுத்தலாம்.

### ஆரோக்கியம் மற்றும் இச்சையடக்கம்

வாலிபர்களில் தூய்மையான, மேன்மையான குணங்களைப் பூரணப் படுத்துவதிலும், உணவுவிருப்பத்தைக் கட்டுப்படுத்துவதில் அவர்களைப் பெலப்படுத்தி, ஒழுக்க இழிவுண்டாக்கும் மட்டுமீறல்களிலிருந்து விலக்கி அமைப்பதிலும் முழுமையான சரீர ஆரோக்கியம் மாபெரும் உதவிகளில் ஒன்றாக இருக்கிறது. மற்றொரு வகையில் பார்த்தால், இச்சையடக்கத்தின் மிகச்சரியான பழக்கங்களே ஆரோக்கிய மேம்பாட்டிற்கு அவசியமாயிருக்கிறது.

மனித வாழ்வின் அறிவியலையும், ஆரோக்கியத்தை அடைதல் மற்றும் காத்துக்கொள்ளுதலுக்கான சிறந்த வழிகளைக்குறித்து ஆண்களும் பெண்களும் போதிக்கப்படுவது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். விசேஷித்தவிதமாக, வாழ்வுநெடுகிலும் அன்றாடப் பயிற்சி செய்வதற்கான அறிவுக் குவியலைச் சேகரித்து வைக்கவேண்டிய காலம் வாலிப்பருவமே. நல்ல பழக்கங்களை அமைத்துக்கொள்வதற்கும், ஏற்கனவே பெறப்பட்டுள்ள தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கும், இச்சையடக்கத்தின் வல்லமையைப் பெற்றுத் தக்கவைத்துக்கொள்வதற்கும், வாழ்வின் எல்லாச் செயல்களையும் தேவனுடைய சித்தம் மற்றும் நமது சிருஷ்டிகளின் நலனுக்கேற்ப அமைத்துக்கொண்டு, திட்டமிடவும், செயல்பாட்டிற்கு ஒருவர் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்வதற்குமான காலம் வாலிப்பருவமே ஆகும்...

சரீரத்தின் உரிமைக் கோரிக்கைகளை இயேசுவானவர் புறக்கணிக்க வில்லை. மனிதனின் சரீர நிலைமையை அவர் மதித்தபடியால், பிணியாளி களைச் சுகமாக்குகிறவராகவும், தங்களது மனோசக்திகளை இழந்து தவிப்போருக்கு அவற்றை மீட்டுத் தருகிறவராகவும் சுற்றித் திரிந்தார்...

### வாழ்வு—நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு பொறுப்பு

வாழ்வில் தங்கள் இஷ்டப்படி எதையும் செய்வதற்கு வாலிபர்கள் சுதந்திரம் பெற்றிருக்கவில்லை என்பது அவர்களுக்குக் காண்பிக்கப்பட வேண்டும். நம்பி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நாள் இதுவே (இப்பொழுதே) ஆகும். அவர்கள் கணக்குக் கொடுக்க வேண்டிய நாள் விரைவில் வரும். தேவனுடைய விலையேறப்பெற்ற ஈவுகளை அற்பமாகக் கருதுகிறதற்காக அவர் அவர்களைக் குற்றமற்றவர்களாக விடார்; உலகமீட்பர் அவர்களுக்காக அளவிடற்கரிய கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார், அவர்களது ஜீவியங்களும், தாலந்துகளும் அவருக்கே உரியனவாம்; தேவன் அவர்களது பராமரிப்பிற்காக ஒப்படைத்திருந்த மூலதனத்தின் உண்மை

யான அல்லது உண்மையற்ற உக்கிராணத்துவத்திற்கு ஏற்ப அவர்கள் கடைசியில் நியாயந்தீர்க்கப்படுவார்கள். அவர்களுக்கு அளிக்கப்படும் பணமும் பாக்கியங்களும் மாபெரியது என்றால், தேவனுடைய பணிக்கான பொறுப்பும் அவர்கள்மீது மிக அதிகமாகத் தங்குகிறது என்பதும், அவர்கள் அதிகம் செய்வதற்கு கோரப்பட்டிருக்கிறார்கள் என்பதும் அவர்களுக்குப் போதிக்கப்படவேண்டும். இவ்விதமாக வாலிபர்கள் சிருஷ்டிகரிடமுள்ள தங்களது பொறுப்பையும், தங்களுடைய வாழ்வில் நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியமான பொறுப்பையும் உணரும்படிக் கொண்டுவரப்படுவார்களானால், நமது காலத்தின் நல்வாய்ப்பு வளமிக்க வாலிபர்களில் அநேகரை விழுங்கிப் போடும் குற்றம் மற்றும் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையெனும் கடுஞ்சுழற்சிக்குள் அமிழ்ந்துபோவதற்கு அவர்கள் தயக்கங்காட்டுவார்கள்.—Review and Herald, December 13, 1881.

## 72

# ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்

ஆரோக்கியம் ஓர் ஆசீர்வாதம் ஆகும்; அதன் மதிப்பைப் பாராட்டுகிறவர்கள் சிலரே. ஆயினும் நமது மனரீதியான மற்றும் சரீரரீதியான வல்லமைகளின் செயல்பாட்டுத்திறன் பெருமளவில் அதையே சார்ந்திருக்கிறது. நமது தூண்டுதல்களும், உணர்ச்சிகளும் சரீரத்தில் தங்களது ஆசனத்தைக் கொண்டிருக்கின்றன, நமது தாலந்துகளை மிக உயர்ந்த பயன்பாட்டில் ஈடுபடுத்துவதற்கேதுவாக, சரீரமானது சிறந்தநிலையில், அதிகமான ஆவிக்குரிய செல்வாக்குகளின்கீழ் காக்கப்படவேண்டும். சரீர பெலத்தைக் குன்றச் செய்யும் எதுவும் மனதைப் பெலவீனப்படுத்தி, சரி எது, தவறு எது என்று பகுத்தறியும் திறனைக் குறைவுபடுத்தி விடுகிறது.

நமது சரீர சக்திகளைத் தவறாகப் பயன்படுத்துவதால், தேவனுடைய மகிமைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய நமது ஜீவியங்களின் காலம் குறைக்கப்படுகிறது; தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற பணியைச் செய்வ தற்கு அது நம்மைத் தகுதியற்றவர்களாக்கிவிடுகிறது. தவறான பழக்கங் களை அமைத்துக்கொள்ள நம்மையே அனுமதிப்பதாலும், வெகுநேரக் கண்விழிப்பினாலும், ஆரோக்கியத்தை இழக்குமளவுக்கு உணவு விருப்பத்தைத் திருப்திப்படுத்திக் கொள்வதாலும், பெலவீனத்திற்கான அஸ்திபாரத்தை நாம் போடுகிறோம்...

இவ்விதமாகத் தங்களது ஜீவியங்களைக் குறைத்துக்கொண்டு, இயற்கைப் பிரமாணங்களை அவமதிப்பதால் சேவைக்காகத் தங்களையே

தகுதியற்றவர்களாக்கிக்கொள்பவர்கள் தேவனை வஞ்சிக்கும் குற்றத்துக்கு உட்பட்டிருக்கின்றனர். அவர்கள் தங்களது சகமனிதர்களையும் வஞ்சிக்கின்றனர். தேவன் அவர்கள் செய்யும்படி உலகத்திற்குள் அனுப்பிய மெய்யான பணியான பிறரை ஆசீர்வதிக்கிற சிலாக்கியமானது, அவர்களது சொந்த செயலின் போக்கினாலேயே குறைத்துப்போடப்படுகிறது. மிகவும் குறுகிய காலகட்டத்தில் அவர்கள் சாதித்து முடிக்கக்கூடியதையும் செய்யாதபடிக்கு அவர்கள் தங்களையே தகுதியற்றவர்களாக்கிக் கொண்டுவிட்டனர். இவ்விதமாக நமது நலங்கெடுக்கும் பழக்கங்களினால் உலகத்திற்கு ஏற்படவிருக்கும் நன்மையை நாம் இழக்கச் செய்யும்போது, கர்த்தர் நம்மைக் குற்றமுள்ளவர்களாகப் பிடிக்கிறார்.—Review and Herald, June 20, 1912.

## 73

# ஆரோக்கியத்தின் புனிதம்

சாத்தான், கிறிஸ்துவிடம் வந்ததுபோல, ஒரு ஒளியின் தூதனைப் போலத் தனது சோதனைகளுடன் மனிதனிடம் வருகிறான். அவன் தனது சோதனைகளினால் மனிதனை ஜெயங்கொண்டு, பிற்பாடு அழிவின்மீது வெற்றி எக்களிப்புக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவனைச் சரீரரீதியான மற்றும் ஒழுக்கரீதியான பெலவீன நிலைமைக்குள் கொண்டுவரக் கிரியை செய்து கொண்டிருக்கிறான். விளைவு எப்படிப்பட்டதாயிருப்பினும், உணவு விருப்பத்தில் மனிதனைத் திளைக்கச்செய்யும் விதமாகச் சோதிப்பதில் அவன் வெற்றியாளனாகவே விளங்கி வருகிறான். மனிதன், தேவன் தனக்குக் கொடுத்திருக்கிற மனோசக்திகளைச் சேதப்படுத்திக் கொள்ளும்போது, தேவனுக்கும் சக மனிதருக்குமுரிய தனது கடமைகளைச் சரிவரச் செய்வது அவனால் இயலாது என்பதை நன்கு அறிந்திருக்கிறான். மூளையே சரீரத்தின் தலைமையகம் ஆகும். புரிந்துணரும் மனோசக்திகள் எவ்வித இச்சையடக்கமின்மையின் மூலமாகவும் மந்தமடையும்போது, நித்திய காரியங்கள் நிதானிக்கப்படாமல் போகின்றன.

### குணக்கட்டுமானத்துடன் ஆரோக்கியத்தின் தொடர்பு

மனிதன் தனது தேகத்தின் பிரமாணங்களை மீறுவதற்குத் தேவன் அனுமதி அளிப்பதில்லை. ஆனால் மனிதன் சாத்தானுடைய சோதனைகளுக்கு இணங்குவதன்மூலமாக இச்சையடக்கமின்மையில் ஈடுபட்டு, உயரிய மனோசக்திகளை மிருகத்தனமான உணவு விருப்பங்களுக்கும்,

உணர்ச்சிகளுக்கும் கீழ்ப்படுத்திக் கொள்ளுகிறான். இவை ஆதிக்கநிலை அடையும்போது, உன்னதமான விருத்திக்கேதுவான மனோசக்திகளுடன் தூதர்களைவிடச் சற்று சிறியவனாகப் படைக்கப்பட்ட மனிதன், சாத்தானால் கட்டுப்படுத்தப்படுவதற்குச் சரணடைகிறான். உணவுவிருப்பத்துக்குரிய அடிமைத்தனத்தில் இருப்பவர்களை அவன் எளிதில் சென்றடைகிறான். இச்சையடக்கமின்மையின் மூலம் தங்களுடைய சரீர, மன மற்றும் ஒழுக்க ரீதியான வல்லமைகளில் சிலர் ஒரு பாதியையும், பிறர் மூன்றில் இருபங்கையும் தியாகம்செய்து, எதிராளியின் கைப்பாவைகளாக மாறிவிடுகின்றனர்.

சாத்தானின் தந்திரங்களை வேறுபாடறிவதற்குத் தெளிவான மனங்களைப் பெற விரும்புகிறவர்கள் தங்களுடைய சரீரரீதியான உணவு விருப்பங்களைப் பகுத்தறிவு மற்றும் மனச்சாட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தாக வேண்டும். மனதிற்குரிய உயரிய சக்திகளின் ஒழுக்கஞ் சார்ந்த மற்றும் விறுவிறுப்பான செயல்பாடானது கிறிஸ்தவக் குணத்தின் பூரணத்திற்கு அத்தியாவசியமானது. மனதின் பெலன் அல்லது பெலவீனமானது இவ்வுலகத்தில் நமது பயன்பாடு மற்றும் நமது கடைசி இரட்சிப்புடன் மிகவும் அதிகமாகத் தொடர்புடையதாயிருக்கிறது. நமது சரீர இயல்புக்குரிய தேவப்பிரமாணத்துக்கடுத்த அறியாமையானது வழக்கில் நீடித்திருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். எவ்விதத்திலும் இச்சையடக்கமின்மையானது நமது தேகத்தின் பிரமாணங்களை மீறும் செயல் ஆகும். மூளைச்சோர்வானது அஞ்சத்தகுந்த விதத்தில் எங்கும் பரவியிருக்கிறது. சாத்தான் பாவத்தின்மீது எறியக்கூடிய ஒளியின் மேற்போர்வையினால் பாவமானது கவர்ச்சிகரமானதாக்கப்பட்டிருக்கிறது; கிறிஸ்தவ உலகத்தை அவர்களது அன்றாடப் பழக்கங்களில், அஞ்ஞானிகளைப் போல வழக்கம் எனும் அடக்குமுறையின்கீழ் இறுகப்பிடித்து, உணவுவிருப்பமானது அவர்களை ஆளுகைசெய்ய அனுமதிக்கும்போது அவன் மிகவும் மகிழ்ச்சியடைகிறான்.

## இழிவுண்டாக்கும் இச்சையடக்கமின்மை

புத்திக்கூர்மையுள்ள ஆண்களும் பெண்களும் எவ்விதமான இச்சையடக்கமின்மையின் மூலமாகவும் தங்களது ஒழுக்க வல்லமைகளை மந்தப்படுத்திக்கொண்டால், அவர்கள் தங்களுடைய அநேகப் பழக்கங்களில் அஞ்ஞானிகளைவிடவும் சற்று உயர்த்தப்பட்டவர்களாக இருக்கின்றனர். சாத்தான், சரீர, மன மற்றும் ஒழுக்கரீதியான ஆரோக்கியத்தைப் பொருட்படுத்தாமல், இரட்சிக்கும் வெளிச்சத்திலிருந்து வழக்கத்திற்கும், புத்தம்புதுப் பாணிக்கும் நேராகத் தொடர்ந்து, ஜனங்களை இழுத்துக் கொண்டிருக்கிறான். உணவுவிருப்பமும், உணர்ச்சியார்வமும் மேலோங்கி நின்றால், சரீரத்தின் ஆரோக்கியமும் அறிவாற்றலின் பெலனும் சுயமனநிறைவு எனும் பலிபீடத்தில்

பலிசெலுத்தப்படும்: மனிதன் விரைவான அழிவுக்குக் கொண்டுவரப்படுவான் என்பதை மாபெரும் எதிராளியானவன் அறிந்திருக்கிறான். ஒளியூட்டம் பெற்ற அறிவாற்றலானது கடிவாளங்களைப் பிடித்து, மிருக இயல்புகளைக் கட்டுப்படுத்தி, அவற்றை ஒழுக்கஞ்சார்ந்த வல்லமைகளுக்கு கீழ்ப்படுத்தி வைத்தால், தனது சோதனைகளினால் ஜெயங்கொள்வதற்கான அவனுடைய வல்லமையானது மிகவும் சிறியதாக இருக்கிறது என்பதைச் சாத்தான் நன்கு அறிந்திருக்கிறான்….

கிறிஸ்தவ உலகத்தில் ஒரு பெரும்பகுதியினருக்கு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்வதற்கே உரிமை இல்லை. அவர்களது பழக்கங்கள், அவர்களது ஊதாரித்தனம் மற்றும் தங்களது சொந்த சரீரங்களைப் பொதுவாகக் கையாளும் விதம் ஆகியவை வேதாகமத் தரத்திற்கு மாறானதாகவும், சரீரப் பிரமாணத்திற்கு எதிரானதாகவும் இருக்கின்றன. அவர்கள் தங்களுடைய வாழ்வின் போக்கிலேயே, சரீரரீதியான பாடு, மன மற்றும் ஒழுக்கரீதியான பெலவீனத்திற்குத் தாங்களாகவே வழிதிறந்து கொண்டிருக்கின்றனர்.—Review and Herald, September 8, 1874.

**சுயத்தின்மீது ஜெயம் ஒரு கடமை**

சரீரமானது கட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டியதிருக்கிறது. தேகத்தின் உயரிய சக்திகள் ஆளுகை செய்யவேண்டும். உணர்ச்சிகள் சித்தத்தினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும்; சித்தமும்கூட தேவனுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கவேண்டும். தெய்வீகக் கிருபையினால் பரிசுத்தமாக்கப்பட்ட, பகுத்தறிவு எனும் ராஜரீக வல்லமை நமது ஜீவியங்களில் மேலோங்கி நிற்கவேண்டும்.

தேவனுடைய கோரிக்கைகள் மனச்சாட்சியின் இருப்பிடத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும். சுயத்தின்மீதான ஜெயம், பரிசுத்தத்தின் அவசியம், ஒவ்வொரு கேடுண்டாக்கும் உணவுவிருப்பம் மற்றும் கறைப்படுத்தும் பழக்கத்திலிருந்து விடுதலை ஆகிய கடமைக்கு ஆண்களும், பெண்களும் விழிப்பூட்டப்பட வேண்டும். அவர்களது மனம் மற்றும் சரீரத்தின் வல்லமைகள் எல்லாம் தேவனுடைய ஈவு; மேலும் அவருடைய சேவைக்காக மிகச் சிறந்த சாதகமான நிலையில் அவை காக்கப்படவேண்டும் என்ற உண்மை அவர்களுக்கு உணர்த்தப்பட வேண்டியது அவசியம்.—Ministry of Healing, p. 130.

## 74

# சமச்சீரான கல்வி

உடற்பயிற்சியில் செலவிடப்பட்ட நேரம் இழப்பு அல்ல. தனது புத்தகங்களின்மீது தொடர்ந்து மாணவன் ஒருவன் லயித்திருந்து, திறந்த வெளியில் குறைவான பயிற்சியையே மேற்கொள்வானாகில், அவன் தன்னையே காயப்படுத்திக் கொள்கிறான். பல்வேறு உறுப்புகள் மற்றும் சரீரத்தின் இயல்பு வலிமைகளின் சரிவிகிதமான பயிற்சி ஒவ்வொன்றும் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு அவசியமாயிருக்கிறது. மூளையானது தொடர்ந்து வேலைசெய்யும் அதே வேளையில், பிற உறுப்புகள் செயலற்றிருக்க விடப்படுமானால், சரீர மற்றும் மனோபலத்தில் ஓர் இழப்பு ஏற்படும். சரீர சக்திகளின் ஆரோக்கியப் பண்பானது கொள்ளையாடப்படுகிறது, மனம் தனது புத்துணர்வையும், உறுதியையும் இழக்கிறது, தீமையில் ஈடுபடுகிற தூண்டுதலே விளைவாக இருக்கிறது.

ஆண்களும், பெண்களும் நல்ல சமச்சீரான மனங்களை உடையவர்களாக இருக்கவேண்டுமானால், சரீரத்தின் சக்திகள் அனைத்தும் பயன்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, மேம்படுத்தப்படவேண்டும். இவ்வுலகில் அநேகர் ஒரு பக்கத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர்; ஏனெனில் இயல்பான வலிமைகளின் ஒரு தொகுதிமட்டும் வளர்க்கப்படுகிறது, அதே வேளையில் மற்றவை செயலின்மையால் நலிந்து போகின்றன. அநேக வாலிபர்களின் கல்வி ஒரு தோல்வியாய் இருக்கிறது. அவர்கள் அதிகம் படிக்கிற அதேவேளையில் நடைமுறைவாழ்வு சம்பந்தப்பட்டவைகளைப் புறக்கணிக்கின்றனர். சமச்சீரான மனதை முன்னேற்றுவிக்கக் கூடும்; அனைத்து வல்லமைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு, மனரீதியான உழைப்புடன் கூர்மதியுள்ள சரீரரீதியிலான உழைப்பும் இணைக்கப்பட வேண்டும்.—Counsels to Teachers, Parents, and Students, pp. 295, 296.

## 75

# ஆரோக்கியத்தின் இழப்பில் அடையப்படும் கல்வி

சில மாணவர்கள் தங்களை முழுமையாகப் பாடப்படிப்புகளுக்குள்

ஈடுபடுத்தி, கல்விப்பயிற்சியை அடையும் நோக்கில் தங்களது மனங்களை ஒருமைப்படுத்துகின்றனர். அவர்கள் மூளைக்கு வேலை தருகின்றனர், ஆனால் சரீர வல்லமைகள் சுறுசுறுப்பற்று இருக்கவிட்டு விடுகின்றனர். இவ்விதமாக மூளையானது அளவுக்கதிகமாகப் பணிபுரிகிறது, தசைகள் பயிற்சி செய்யப்படாததால், அவை பெலவீனமாகின்றன. இத்தகைய மாணவர்கள் பட்டம்பெறும்போது, உயிராற்றலை இழந்து அவர்கள் தங்கள் கல்வியைப் பெற்றிருக்கின்றனர் என்பது தெளிவாக விளங்குகிறது. அவர்கள் தங்களது மனங்களைத் தொடர்ந்து, அளவுக்குமீறிப் பயன்படுத்தி, ஆண்டுதோறும் இரவு பகலாகப் படித்திருக்கின்ற அதே வேளையில், தங்களது தசைகளுக்குப் போதுமான பயிற்சியளித்திட அவர்கள் தவறியிருக்கின்றனர்….

புத்தகங்களின் படிப்பைவிடவும் நடைமுறை வாழ்வுக்கு மிகவும் அவசியமான கல்வியின் பிற கிளைகளைப் புறக்கணித்து, இளம்பெண்கள் நுணுக்கமான ஆராய்ச்சிக்குத் தங்களையே வழக்கமாகத் தாரைவார்த்து விடுகின்றனர். அந்தக் கல்விப் பயிற்சியைப் பெற்றபின்னர், அவர்கள் பெருமளவில் வாழ்வுமுழுக்க நோயாளிகளாகவே இருக்கின்றனர். பரலோகத்தின் தூய காற்றையும், தேவன் அருளியிருக்கின்ற சூரிய வெளிச்சத்தையும் இழந்தவர்களாக, அவர்கள் வீட்டிற்குள்ளேயே அதிகமாக அடைபட்டுத் தங்கள் ஆரோக்கியத்தை அசட்டைசெய்திருக்கின்றனர். இத்தகைய இளம் பெண்கள் தங்கள் பாடப்படிப்புகளுடன் வீட்டுவேலையையும், திறந்த வெளிப் பயிற்சியையும் இணைத்திருந்தால், பள்ளியிலிருந்து ஆரோக்கியமுள்ளவர்களாக வந்திருக்கக்கூடும்.

ஆரோக்கியம் என்பது ஒரு பெரும் பொக்கிஷம் ஆகும். மரிக்குந்தன்மையுள்ள மனிதர்கள் பெற்றிருக்கக்கூடிய ஐசுவரியமிக்க உடைமையிது. உடல்நலத்தின் உரத்தன்மையை இழந்தநிலையில், செல்வமும், மதிப்பும், படிப்பும் மிகுந்த நேசத்துடன் சம்பாதிக்கப்படுகின்றன. ஆரோக்கியம் குறைவுபட்டால், இத்தகைய சாதனைகள் ஒன்றினாலும் மகிழ்ச்சியைத் தக்கவைக்க முடியாது.—Counsels to Teachers, Parents, and Students, pp. 285, 286.

## 76

# உயர்பண்பின் சிறப்படையாளம்

தானியேலும் அவனது நண்பர்களும் தங்களது மூன்றாண்டுகாலப் பயிற்சிவேளையில், தங்களது இச்சையடக்கப் பழக்கங்களையும், தேவனுக்கென்று தங்களது உண்மையையும், அவரது வல்லமையின்மீது தொடர்ந்து

வைத்திருந்த நம்பிக்கையையும் காத்துக்கொண்டனர். அவர்களது திறமைகளும், சாதனைகளும் இராஜாவினால் பரீட்சிக்கப்படக்கூடிய காலம் வந்தபோது, இராஜ்யத்தின் சேவைக்காகப் பிற நபர்களுடன் அவர்கள் பரிசோதித்துப் பார்க்கப்பட்டனர். ஆனால் "அவர்கள் எல்லாருக்குள்ளும் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களைப்போல வேறொருவரும் காணப்படவில்லை." அவர்களது கூர்மையான புரிந்துணர்திறன், அவர்களது தேர்ந்தெடுக்கும் திறன், துல்லியமான மொழி, மற்றும் அவர்களது பரந்த அறிவு ஆகியவை அவர்களது சேதமடையாத பெலத்துக்கும், அவர்களது மனோசக்தியின் உறுதிக்கும் சாட்சிபகர்ந்தன. ஆகையால் அவர்கள் இராஜாவுக்கு முன்பாக நின்றனர். "ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்"—தானி. 1:20.

தேவன் ஒழுக்கநேர்மையை எப்பொழுதும் கனம்பண்ணுகிறவர். மாபெரும் வெற்றியாளனால் கைதுசெய்யப்பட்டிருந்த நன்கு முன்னுக்கு வரக்கூடிய வாலிபர்கள் எல்லாத் தேசங்களிலிருந்தும் பாபிலோனில் கூட்டிச் சேர்க்கப்பட்டிருந்தனர்; ஆயினும் அவர்கள் அனைவர் மத்தியிலும் எபிரெயச் சிறைக்கைதிகள் இணையற்றவர்களாக இருந்தனர். நிமிர்ந்த தோற்றம், உறுதியான, விசாலமான நடை, அழகிய முகத்தோற்றம், மங்காத உணர்வுக்கூறுகள், கறைபடியாத சுவாசம்—இவையனைத்தும் உயர்பண்பின் சிறப்படையாளம் ஆகும்; இயற்கையின் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்போரை அது (இயற்கை) கனம்பண்ணும்.

## மனதின்மீது ஏற்படும் சரீரப்பழக்கங்களின் தாக்கம்

இங்கு முன்வைக்கப்பட்டிருக்கிற பாடம் நாம் நன்கு சிந்திக்கவேண்டிய ஒன்றாகும். வேதத்தின் கட்டளைகளை உறுதியாய்க் கடைபிடித்தலானது சரீரத்துக்கும், ஆத்துமாவுக்கும் ஓர் ஆசீர்வாதமாக இருக்கும். ஆவியின் கனி என்பது அன்பு, சந்தோஷம், சமாதானம் மட்டுமல்ல, இச்சையடக்கமும் கூடத்தான். நமது சரீரங்களைக் கெடுக்கக்கூடாது என நாம் கட்டளை பெற்றிருக்கிறோம்; ஏனெனில் அவை பரிசுத்த ஆவியின் ஆலயங்களாக இருக்கின்றன.

எபிரெயச் சிறைக்கைதிகள் நம்மைப்போன்று பாடுள்ள மனுஷர்களாகவே இருந்தனர். பாபிலோனின் பகட்டு மன்றங்களின் கவர்ந்திழுக்கும் செல்வாக்குகளின் மத்தியிலும், அவர்கள் உறுதியான நின்றனர். இன்றைய வாலிபர்கள் தங்குதடையற்றத் தன்விருப்பக் கவர்ச்சிகளால் சூழப்பட்டிருக்கின்றனர். விசேஷமாக நமது பெரிய பட்டணங்களில், சிற்றின்பத் திருப்திக்கான

ஒவ்வொரு முறைமையும் இலகுவாக்கப்பட்டு, இழுக்குந்தன்மையுள்ளதாய் இருக்கிறது. தானியேலைப்போலத் தங்களைக் கறைப்படுத்த மறுப்பவர்கள் இச்சையடக்கப் பண்புகளுக்கான பலனை அறுப்பார்கள். அவர்களது சரீர உரத்தன்மை மாபெரியதாயும், தாங்குதிறன் அதிகரிக்கப்பட்டதாயும் இருக்கும் பட்சத்தில், அவசரகாலத்தில் எடுப்பதற்கான நிதியையுடைய வங்கி அவர்களிடம் இருக்கிறது.

ஒழுக்கமான சரீரப் பழக்கங்கள் மனதின் மேன்மைநிலையை முன்னேறச்செய்யும். அறிவுத்திறனும், சரீர உரத்தன்மையும், நீண்ட ஆயுளும் மாறாத பிரமாணங்களைச் சார்ந்திருக்கிறது. இயற்கையின் கோரிக்கைகளை மீறுவதினால் உண்டாகும் விளைவுகளிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்க இயற்கையின் தேவன் குறுக்கிடமாட்டார். பந்தயத்திற்குப் போராடுகிறவர் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருக்க வேண்டும். தானியேலின் மனத்தெளிவு, நோக்க உறுதி, அறிவை அடைவதிலும், சோதனைக்கு எதிர்த்து நிற்பதிலும் அவனது வல்லமை போன்றவை அவனது எளிமையான உணவுத்திட்டம் மற்றும் ஜெபவாழ்வின் விளைவாக இருந்தது.

## நமது முடிவைத் திட்டஞ்செய்தல்

“ஒவ்வொரு மனிதனும் தனது எதிர்காலத்தைச் செதுக்கும் கலைஞனாயிருக்கிறான்” என்ற பழமொழியில் மாற்றுக்குறையாத உண்மை அடங்கியுள்ளது. பெற்றோர்கள் தங்களது குமாரர்கள் மற்றும் குமாரத்திகளின் குணத்தின் முத்திரைக்கும், கல்விக்கும், மற்றும் பயிற்சிக்கும் பொறுப்பாளிகளாக இருப்பினும், உலகில் நமது நிலையும் பயன்படுதன்மையும் பெருமளவில் நமது சொந்த செயலின் போக்கையே சார்ந்திருக்கிறது என்பது உண்மையிலும் உண்மையே.

தானியேலும் அவனது நண்பர்களும் சரியான பயிற்சி மற்றும் சிறுபிராயக் கல்வியின் பலாபலன்களை அனுபவித்தனர்; ஆயினும் இந்த நன்மைகள் மட்டுமே அவர்களை அந்த நிலைக்குக் கொண்டுவந்திருக்க முடியாது. அவர்கள் தங்களுக்குத் தாங்களே செயல்படவேண்டிய— அவர்களது எதிர்காலம் அவர்களது சொந்தப் போக்கையே சார்ந்திருந்த காலம் வந்தது. அப்பொழுது அவர்கள் தங்களது சிறுபிராயத்தில் அளிக்கப்பட்டிருந்த படிப்பினைகளுக்கு உண்மையாயிருக்கும்படித் தீர்மானித்தனர். ஞானத்தின் ஆரம்பமாகிய தேவபயம் அவர்களது மேன்மைக்கு அடித்தளமாக இருந்தது.

தானியேல் மற்றும் அவனது இளம் நண்பர்களின் வரலாறு எதிர்வரும் எல்லாக் காலங்களின் வாலிபர்களின் நன்மைக்காக ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தையின் பக்கங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இச்சையடக்கக் கொள்கைகளுக்கான அவர்களது உண்மைத்தன்மையின் பதிவேட்டின் மூலமாக, வாலிப ஆண்கள் மற்றும் வாலிபப்பெண்களுடன் தேவன் இன்று பேசிக்கொண்டிருக்கிறார். கிறிஸ்தவ இச்சையடக்கம் எனும் தலைப்பில் அவர் அருளியிருக்கிற விலையேறப்பெற்ற ஒளிக்கதிர்களை அவர்கள் ஒன்றுதிரட்டி, ஆரோக்கியப்பிரமாணங்களுடன் சரியான தொடர்பில் தங்களை வைத்துக்கொள்ளுமாறு அவர் கட்டளையிடுகிறார்.

## வளமாய்ப் பலனளிக்கப்படும் இச்சையடக்கம்

தானியேலைப்போல, தைரியமாய் செயல்படுகிற மனிதர்கள் இப்பொழுது தேவை—சுத்த இருதயமும், பெலனுள்ள, பயமற்ற கரமும் இன்றைய உலகத்தில் தேவை—மனிதன் தொடர்ந்து முன்னேற வேண்டும், நேர்த்தி எனும் அளவுகோலில் உச்சிமுனையைத் தினமும் அடையவேண்டும் எனத் தேவன் வடிவமைத்துள்ளார். நமக்கு நாமே உதவிசெய்யத் தேடினால் அவர் நமக்கு உதவுவார். இரண்டு உலகங்களில் மகிழ்ச்சியின் நமது நம்பிக்கையானது ஒரு உலகத்தில் நமது முன்னேற்றத்தைச் சார்ந்தே அமைந்துள்ளது. இச்சையடக்கமின்மையை நோக்கிய முதல் அணுகுமுறைக்கெதிராக, ஒவ்வொரு அடியிலும் நாம் காக்கப்படவேண்டும்.

பிரியமான வாலிபர்களே, தேவனுடைய கிருபையினால் நீங்கள் செய்யக்கூடிய ஒரு பணியைச் செய்வதற்கு அவர் உங்களை அழைக்கிறார். "உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்... இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." தேவன் உங்களுக்கு அருளியிருக்கிற ஆண்மை மற்றும் பெண்மையில் நிமிர்ந்து நில்லுங்கள். சுவைகள், உணவுவிருப்பம் மற்றும் பழக்கங்களில் தானியேலுக்கு ஒப்பான தூய்மையைக் காண்பியுங்கள். அமைதியான நரம்புகள், தெளிவான மூளை, சேதமடையாத நுண்ணறிவாற்றல், கூர்மையான உணர்திறன்கள் ஆகியவற்றைத் தேவன் உங்களுக்குப் பலனாக அளிப்பார். இன்றைய வாலிபர்களின் கொள்கைகள் உறுதியாயும், அசைவுறாமலும் இருந்தால், சரீர, மன மற்றும் ஆத்தும ஆரோக்கியத்தினால் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.—The Youth's Instructor, July 9, 1903.

## ஆன்மீகமும் ஆரோக்கியமும்

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்." தவறான பழக்கங்களும், பாவ நடவடிக்கைகளும் உள்ள மனிதர்கள் தெய்வீக சத்தியத்தின் வல்லமைக்கு இணங்கும்போது, தேவனுடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும். சத்தியமானது இருதயத்தில் அப்பியாசிக்கப்படுகிறது; முடமாகிப்போனதுபோல்

காணப்பட்ட ஒழுக்க வல்லமை உயிரடைகிறது. ஏற்றுக்கொள்கிறவர் முன்பைவிடவும் மிகவும் பெலமான, மிகவும் தெளிவான புத்தியை உடையவராகிறார். நித்திய கன்மலையுடன் அவர் தமது ஆத்துமாவைப் பிணைத்துக்கொள்கிறார். கிறிஸ்துவில் அவரது பாதுகாப்பு எனும் மெய்யான உணர்வில், ஆரோக்கியம் முன்னேற்றமடைகிறது. இவ்விதமாக ஆன்மீகமும் ஆரோக்கியப் பிரமாணங்களும் இணைந்தே செல்கின்றன.—Testimonies for the Church, Vol. 4, p. 553, 554. ★

# பகுதி 8

# பக்தியுள்ள வாழ்க்கை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 77 | ஜெபம் நமது அரண் | 218 |
| 78 | ஜெபத்தின் வல்லமை | 220 |
| 79 | ஜெபத்தில் நமது மனநிலை | 222 |
| 80 | விசுவாசமும் ஜெபமும் | 223 |
| 81 | வேத ஆராய்ச்சியின் மதிப்பு | 224 |
| 82 | வேத வாக்கியங்களை உங்களுக்காக ஆராய்ந்து பாருங்கள் | 228 |
| 83 | வேத ஆராய்ச்சியில் விடாமுயற்சி | 229 |
| 84 | ஊக்கமான வேத ஆராய்ச்சியின் பலாபலன் | 232 |
| 85 | கல்வியாளராக வேதாகமம் | 233 |
| 86 | பயபக்தி | 235 |
| 87 | நன்கு நிலைநாட்டப்பட்ட நம்பிக்கை | 238 |

பகுதி 8

# பக்தியுள்ள வாழ்க்கை

தேவனுடைய பரிசுத்தமான ஆவி போதிக்கும் அவருடைய வார்த்தையில் இருக்கிறது. ஒரு ஒளி, ஒரு புதிய விலைமதிப்புள்ள ஒளி, ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் பிரகாசிக்கிறது. தேவனுடைய குரல் ஆன்மாவிலே பேசுவதைப்போன்று சத்தியம் அதிலே வெளிப்பட்டிருக்கிறது. வார்த்தைகளும் வாக்கியங்களும் பிரகாசம்பெற்று, சமயத்திற்கேற்ற பொருத்தமான ஆலோசனையை அது நமக்கு வழங்குகிறது.

தேவனுடைய வார்த்தையிலுள்ள பொக்கிஷங்களையும் அதின் அழகையும் வாலிபர்களுக்கு வெளிப்படுத்திக்கொடுக்க பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறார். மாபெரும் ஆசிரியரால் கூறப்பட்ட வாக்குத்தத்தங்கள் புலன்களை ஈர்த்து, தெய்வீகமான ஆவிக்குரிய வல்லமையினால் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. நற்பயன் தரும் உள்ளமானது தெய்வீகக் காரியங்களோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி, சோதனைக்கு எதிரான —தடையானதாக விளங்கும்.—Christ's Object Lessons, p. 132.

## 77

# ஜெபம் நமது அரண்

இந்தக் கடைசி நாட்களின் கொடுமைகளின் மத்தியில், என்றும் அதிகரிக்கிற விழிப்பும், ஜெபமுமே வாலிபர்களின் ஒரே பாதுகாப்பு ஆகும். தேவனுடைய வார்த்தையை வாசிப்பதிலும், ஜெபநேரத்திலும் சந்தோஷத்தைக் கண்டடைகிற வாலிபன் ஜீவ ஊற்றிலிருந்து வரும் நீரினால் தொடர்ந்து புத்துணர்வடைவான். பிறரால் கிரகிக்கக்கூடாத கருத்துவிசாலத்தையும், ஒழுக்கநேர்த்தியில் உச்சத்தையும் அவன் அடைவான். தேவனுடனான ஐக்கியம் நல்ல சிந்தனைகளையும், மேன்மையான இலட்சியங்களையும், சத்தியத்தில் தெளிவான புரிதல்களையும், உன்னதமான செயல்நோக்கங் களையும் ஊக்குவிக்கும். இவ்விதமாகத் தேவனுடன் தங்களை இணைத்துக்கொள்கிறவர்கள் அவருடைய குமாரர்கள் மற்றும் குமாரத்திகளாக அவரால் அங்கீகரிக்கப்படுகிறார்கள். கர்த்தர் அவர்களை ஒளியின் வாய்க்கால்களாகவும், உலகத்திற்கு ஞானமாகவும் உருமாற்றும் வரைக்கும், அவர்கள் தேவனுக்கடுத்த மற்றும் நித்தியத்துக்கடுத்த மிகத்

தெளிவான கண்ணோட்டங்களை அடைந்து, தொடர்ந்து உன்னத, அதி உன்னதநிலையை எட்டிப் பிடிக்கிறார்கள்.

## ஜெபிப்பது எப்படி?

ஜெபமானது புரியவேண்டிய பிரகாரம் புரிந்துகொள்ளப்படவில்லை. தேவன் அறிந்திராத ஒன்றை அவருக்குத் தெரியப்படுத்துவது போன்றதாக நமது ஜெபங்கள் இருக்கக்கூடாது. ஒவ்வொரு ஆத்துமாவின் இரகசியங்களுடனும் கர்த்தர் அறிமுகமானவராக இருக்கிறார். நமது ஜெபங்கள் நீளமாகவோ, சப்தமாகவோ இருக்கவேண்டியதில்லை. மறைவான எண்ணங்களைத் தேவன் வாசிக்கிறார். அந்தரங்கத்தில் நாம் ஜெபிக்கலாம், அந்தரங்கத்தில் பார்க்கிறவர் கேட்டு, வெளியரங்கமாய் நமக்குப் பலனளிப்பார்.

நமது அவலநிலையை உணராதபோதெல்லாம், நமது அவலத்தன்மை யனைத்தையும் தேவனுக்குச் சொல்லும்படி ஏறெடுக்கப்படுகிற ஜெபங்கள் மாய்மால ஜெபங்கள் ஆகும். நொறுங்குண்டு செய்யும் ஜெபத்தையே கர்த்தர் கருத்துடன் கவனிக்கிறார். "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்"—ஏசா. 57:15.

ஜெபம் என்பது தேவனிடத்தில் ஏதாவதொரு மாற்றத்தைச் செய்யும் நோக்கத்தைக் கொண்டதல்ல; அது தேவனுடன் நம்மை ஒருங்கிணைக்கிறது. அது கடமையின் இடத்தை எடுத்துக்கொள்வதில்லை. ஜெபமானது எத்தனை தரம் ஏறெடுக்கப்பட்டாலும், எவ்வளவு ஊக்கமாக ஏறெடுக்கப்பட்டாலும் சரி, நமது தசமபாகத்துக்குப் பதிலாக அது தேவனால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஜெபம் தேவனிடத்தில் நமது கடன்களைச் செலுத்தித் தீர்க்காது…

## ஜெபம் வல்லமையைக் கொண்டுவரும்

தேவனோடுள்ள ஜெபத்தில் பெறப்பட்ட பெலன் நமது அன்றாடக் கடமைகளுக்கு நம்மை ஆயத்தப்படுத்தும். நாம் தினமும் சந்திக்கிற சோதனைகள் ஜெபத்தை அத்தியாவசியமாக்குகிறது. விசுவாசத்தின் மூலமாகத் தேவனுடைய பெலனால் நாம் காக்கப்படும்வண்ணம், மனதின் வாஞ்சைகள் மௌன ஜெபத்தில் தொடர்ந்து ஏறெடுக்கப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். தேவனிடமிருந்து நம்மை வழிவிலகச் செய்வதற்குக் கணிக்கப்பட்ட செல்வாக்குகளால் நாம் சூழப்படும்போது, உதவிக்கும்,

பெலத்துக்குமான நமது விண்ணப்பங்கள் விடாப்பிடியானதாக இருக்க வேண்டும். அப்படிச்செய்யாத பட்சத்தில், இரட்சகரிடமிருந்து நம்மைப் பிரிக்கிற பெருமையை உடைத்து நொறுக்குவதிலும், பாவவிருப்பங்களுக்கான சோதனையின் வல்லமையை மேற்கொள்வதிலும் நாம் ஒருபோதும் வெற்றியாளர்களாக இருக்கமாட்டோம். வாழ்வைப் பரிசுத்தமாக்குகிற சத்திய ஒளியானது, அதைப் பெறுகிறவரின் இருதயத்திலுள்ள பாவ உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் காட்டும்; அப்பாவ உணர்ச்சிகள் ஆதிக்கத்திற்குப் போராடுகிறபடியால், கிறிஸ்துவின் புண்ணியங்களின் மூலமாகச் சாத்தானுக்கு எதிர்த்துநின்று ஜெயிப்பதற்கு அவர் தனது ஒவ்வொரு நரம்பையும் விரிவுபடுத்தி, தனது எல்லாச் சக்திகளையும் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது.—The Youth's Instructor, August 18, 1898.

## 78

# ஜெபத்தின் வல்லமை

தேவனுடைய மகிமையின் வாசஸ்தலமாக இருக்கவிருந்த அந்த ஆச்சரியமான கட்டிடத்தின் மாதிரியைத் தேவனோடு மலையிலே மோசே கண்டார். தேவனோடு மலையில்—ஐக்கியத்தின் இரகசிய ஸ்தலத்தில்—அங்குதான் மனுக்குலத்துக்கான அவருடைய மகிமையான இலட்சியத்தை நாம் தியானிக்க வேண்டியிருக்கிறது. இவ்விதமாக நமது குணவிருத்தியானது வனையப்படுவதற்கு நாம் ஊக்கப்படுத்தப்படுவோம்; “நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்” என்ற வாக்குத்தத்தம் நம்மிடம் நிறைவேறக்கூடும்.

நமது அன்றாடப்பணியில் ஈடுபட்டிருக்கும் வேளையில், ஜெபத்தில் ஆத்துமாவைப் பரலோகத்திற்கு உயர்த்த வேண்டும். இத்தகைய மௌன விண்ணப்பங்கள் கிருபாசனத்திற்கு முன்பாகத் தூபம்போல் எழும்புகின்றன; எதிராளியானவன் திக்குமுக்காடுகிறான். இவ்விதமாகத் தேவன்மீது பற்றுமிக்க இருதயமுள்ள கிறிஸ்தவனை மேற்கொள்ள முடியாது. தீமையின் தந்திரங்கள் அவனது சமாதானத்தை அழித்திட முடியாது. தேவவார்த்தையின் அனைத்து வாக்குத்தத்தங்களும், தெய்வீகக் கிருபையின் அனைத்து வல்லமையும், யேகோவாவின் அனைத்து வாய்ப்புவளங்களும் அவனது விடுதலையைத் தக்கவைப்பதற்கென்று வாக்களிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமாகவே ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான். ஒவ்வொரு தேவையின் வேளையிலும் அநுகூலமான துணையாக, தேவன் அவனோடிருந்தார்....

## எல்லையற்றவருடன் உள்ள தொடர்பில்

ஜெபம் என்பது ஆத்துமாவின் உயிர்மூச்சு ஆகும். அது ஆவிக்குரிய வல்லமையின் இரகசியம் ஆகும். ஆத்துமத்தின் ஆரோக்கியத்தைக் காப்பதற்கு வேறு எந்தக் கிருபையின் வழிவகையையும் பதிலீடுசெய்ய முடியாது. ஜெபமானது ஜீவ ஊற்றானவருடன் நெருங்கிய தொடர்புக்குள் இருதயத்தைக் கொண்டுவருகிறது; ஆன்மீக அனுபவத்தின் தசையையும், தசைநாரையும், உறுதிப்படுத்துகிறது. ஜெபப்பயிற்சியைப் புறக்கணித்தாலோ அல்லது வசதிக்கேற்ப, இப்பொழுதும் அப்பொழுதுமாக, விட்டு விட்டு ஜெபத்தில் ஈடுபட்டாலோ, தேவன்மீதான உங்களது பிடி தளர்ந்துபோகும். ஆவிக்குரிய நுட்பத்திறமைகள் தங்களது உயிராற்றலை இழக்கின்றன, ஆன்மீக அனுபவத்தில் ஆரோக்கியமும் வலிமையும் குறைவுபடுகிறது...

நாம் ஊக்கமாக ஜெபிக்கமுடியும். தகுதியற்ற, தவறக்கூடிய மரணத்துக்கேதுவான மனிதர்கள் தங்களது கோரிக்கைகளைத் தேவனிடம் வைக்கும் வல்லமையைப் பெற்றிருப்பது ஆச்சரியமான காரியம். எல்லை யற்ற தேவனுடன் இணைக்கப்படுதலைவிட வேறு எந்த உன்னதமான வல்லமையை மனிதன் வாஞ்சிக்க முடியும்? பெலவீனமான, பாவத்தன்மை யுள்ள மனிதன் தனது சிருஷ்டிகருடன் பேசுகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக் கிறான். அண்டசராசரத்தின் பேரரசருடைய சிங்காசனத்தைச் சென்றடைகிற வார்த்தைகளை நாம் உச்சரிக்கலாம். வழியில் நடந்துபோகையில் இயேசு வுடன் பேசலாம், நான் உன் வலதுபாரிசத்தில் இருக்கிறேன் என்கிறார்.

## ஒவ்வொரு உண்மையான ஜெபமும் பதிலளிக்கப்படுகிறது.

நமது இருதயங்களில் தேவனோடு நாம் உறவுகொள்ளலாம்; கிறிஸ்துவுடன் தோழமை கொண்டவர்களாக நாம் நடக்கலாம். நமது அன்றாடத் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது, எந்த மனித செவிக்கும் கேட்கக்கூடாத, நமது இருதயத்தின் வாஞ்சையை இயம்பிடலாம்; ஆயினும் அந்த வார்த்தை அமைதிக்குள் அழிந்துபோகாது, அது தொலைந்தும்போகாது. ஆத்துமாவின் வாஞ்சையை எதுவும் மூழ்கடிக்க இயலாது. அது தெருவின் இரைச்சலுக்கும், எந்திரசத்தத்துக்கும் மேலாக எழும்புகிறது. நாம் தேவனிடத்தில் பேசுகிறோம், நமது ஜெபம் கேட்கப்படுகிறது.

அப்படியானால், கேளுங்கள்; கேளுங்கள், நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். தாழ்மை, ஞானம், தைரியம், விசுவாச விருத்தியைக் கேளுங்கள். ஒவ்வொரு உண்மையான ஜெபத்துக்கும் பதில் வரும். நீங்கள் விரும்புகிறவண்ணம் அல்லது நீங்கள் எதிர்பார்க்கும் நேரத்தில் அது வராமல் போகலாம்; ஆயினும் உங்கள் தேவையை சிறப்பாகச் சந்திக்கும் விதத்தில், நேரத்தில் அது வந்து சேரும். தனிமையில், களைப்பில்,

சோதனையில் நீங்கள் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கு, எப்பொழுதும் உங்களது எதிர்பார்ப்புகளின்படி அல்ல, ஆயினும் எப்பொழுதும் உங்களது நன்மைக்காகத் தேவன் பதிலளிக்கிறார்.—Gospel Workers, pp. 254–258.

## 79

# ஜெபத்தில் நமது மனநிலை

பொதுவான மற்றும் தனிப்பட்ட தொழுகையில், கர்த்தரிடத்தில் நமது விண்ணப்பங்களை ஏறெடுக்கும்போது, அவருக்கு முன்பாக நம்முடைய முழங்கால்களை முடக்குவது நமது சிலாக்கியம் ஆகும். நமது முன்மாதிரியான இயேசு "முழங்கால்படியிட்டு... ஜெபம் பண்ணினார்." அவரது சீஷர்களைக் குறித்து, அவர்களும் "முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணினார்கள்" என்றே பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. "நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு" என்று பவுல் அறிவிக்கிறார். இஸ்ரவேலின் பாவங்களைத் தேவனுக்குமுன்பாக அறிக்கையிடுகையில், எஸ்றா முழங்கால்படியிட்டார். தானியேல் "தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்குமுன்பாக முறங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்."

தேவனுடைய எல்லையற்ற மேன்மை மற்றும் அவரது பிரசன்னத்தை உணர்வதினால் அவருக்கான உண்மையான பயபக்தி தூண்டுதல் பெறுகிறது. காணக்கூடாதவரைக் குறித்த இந்த உணர்வினால், ஒவ்வொரு இருதயமும் ஆழமாகத் தொடப்படவேண்டும். ஜெப இடமும், நேரமும் புனிதமானவை, ஏனெனில் தேவன் அங்கே இருக்கிறார்; மனநிலையிலும், நடக்கையிலும் பயபக்தி வெளிப்படுத்தப்படும் வேளையில் ஆவியானவரின் ஏவுதலின் உணர்வை ஆழமாக உணர்வோம். "அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது" என்று சங்கீதக்காரன் அறிவிக்கிறான். தூதர்கள் அந்த நாமத்தைச் சொல்லும்போது, தங்கள் முகங்களை மூடிக்கொள்கின்றனர். அப்படியானால், விழுந்துபோன மற்றும் பாவத்திலிருக்கிற நாம், எவ்வளவு பயபக்தியுடன் அதனை நம் உதடுகளில் உச்சரிக்கவேண்டும்!

தேவனுடைய விசேஷப் பிரசன்னத்தினால் குறிக்கப்பட்டிருந்த இடத்தை நான் எவ்விதத்தில் மதித்துப் போற்றவேண்டும் என்று காட்டுகிற வேதவார்த்தைகளை முதியோரும் இளைஞரும் சிந்திப்பது எத்தனை நலமாயிருக்கும். "உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" என்று தேவன் மோசேக்கு

எரிகிற முட்செடியண்டையில் கட்டளையிட்டார். தூதர்களின் தரிசனத்தைக் கண்டபின்னர், “மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன்” என்று யாக்கோபு ஆச்சரியத்துடன் கூறினான்.— Gospel Workers, pp. 178, 179.

## 80

# விசுவாசமும் ஜெபமும்

கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தினாலே, குணங்களில் இருக்கிற குறைபாடுகள் நிவிர்த்தியாக்கப்படும், எல்லா அசுசியும் நீக்கப்படும், ஒவ்வொரு தவறும் சரிசெய்யப்படும், ஒவ்வொரு மேன்மையான காரியமும் இன்னும் உயர்ந்தோங்கி வளரும்.

“அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்”– கொலோ. 2:10.

ஜெபமும் விசுவாசமும் ஒன்றோடொன்று இணைந்திருக்கிறது. எனவே அவ்விரண்டும் ஒன்றாக படிக்கப்பட வேண்டும். விசுவாசமுள்ள ஜெபத்தில் தெய்வீக விஞ்ஞானம் (science) இருக்கிறது. அது தங்களுடைய வாழ்க்கையை வெற்றிவாழ்க்கையாக அமைக்க பிரயாசப்படுகிற அனைவரும் புரிந்துகொள்ளவேண்டிய விஞ்ஞானம் ஆகும். “நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்” (மாற்கு 11:24) என்று கிறிஸ்து கூறுகிறார். அதேநேரம் நாம் கேட்கிறதை அவர் சித்தப்படிதான் கேட்கவேண்டும் என்றும் அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார். அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறவைகளை நாம் கேட்கவேண்டும், எவைகளைப் பெற்றுக்கொள்கிறோமோ, அவைகளை அவருடைய சித்தத்தின்படி உபயோகப்படுத்த வேண்டும். இதற்குரிய நிபந்தனைகள் சந்திக்கப்படும்போது இந்த வாக்குத்தத்தம் தெளிவானதாகிறது.

பாவமன்னிப்பைப் பெறவும், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளவும், கிறிஸ்துவின் குணலட்சணங்களை அடையவும், அவருடைய வேலையைச் செய்வதற்கான ஞானத்தையும் பெலத்தையும் பெறவும், அவர் வாக்குக் கொடுத்திருக்கிற எந்த ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளவும் நாம் கேட்கலாம்; கேட்கும்போது பெற்றுக்கொள்கிறோம் என்று விசுவாசிக்க வேண்டும்; அவைகளைப் பெற்றுக்கொண்டதற்காக அவருக்கு நன்றிகளையும் ஏறெடுக்கவேண்டும்.

ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டதற்கு வெளிப்படையான ஆதாரங்களை நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை. வாக்குத்தத்தத்திலே தானே அந்த ஆசீர்வாதம் அடங்கியிருக்கிறது. எனவே வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறதை அவர் நிச்சயம் தருவார் என்று நம்பி நம் வேலைகளை நாம் தொடரவேண்டும். அப்போது நாம் ஏற்கனவே பெற்றுக்கொண்டதாயிருக்கிற வரம் நமக்கு அவசியமாய்த் தேவைப்படும் நேரத்தில் நமக்கு உணர்த்தப்படும். —Education, pp. 257, 258.

## 81

# வேதஆராய்ச்சியின் மதிப்பு

அறிவாற்றலைப் பெலப்படுத்துவதில், வேதத்தைப் படிப்பதே மற்ற எல்லாப் படிப்புக்கும் மேலானதாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தையில் ஆராய்வதற்கென்று எத்தனைக் கருத்துக்களங்களை வாலிபர்கள் கண்டடையலாம்! அதன் ஆராய்ச்சியில் மனமானது ஆழத்தின்மேல் ஆழத்தைக் கண்டு, சத்தியத்தைப் புரிந்துகொள்கிற ஒவ்வொரு முயற்சியிலும் பெலத்தைச் சேகரிக்கும்; ஆயினும் அளவிடமுடியாத எல்லை அதற்கப்பாலும் உண்டு.

தேவனை நேசித்து, புனிதக் காரியங்களுக்கு பயபக்திகாட்டுவதாகக் கூறிக்கொள்பவர்கள் அதே வேளையில் மனதை மேலோட்டமான, நிஜமல்லாத காரியங்களுக்கு அனுமதிப்பார்களானால், தங்களைச் சாத்தானின் களத்தில் வைத்துக்கொள்கின்றனர்; அவனது வேலையைச் செய்கின்றனர். இயற்கையில் தேவனுடைய மகிமையான கிரியைகளையும், அவரது வார்த்தையில் வெளிப்படுகிற அவரது மகத்துவத்தையும் வல்லமையையும் வாலிபர்கள் ஆராய்வார்களானால், அவர்கள் அப்படிப்பட்ட ஒவ்வொரு பயிற்சியிலிருந்தும் உயிரூட்டம்பெற்றும், உயர்த்தப்பட்ட மனோசக்திகளுடன் வெளிவருவர். அகந்தையுடன் சம்பந்தப்படாத ஒரு வலிமையானது பெறப்படும். தெய்வீக வல்லமையின் ஆச்சரியங்களைத் தியானிப்பதால், மனமானது பாடங்களிலெல்லாம் மிகவும் கடினமான, ஆனால் மிகவும் பயனுள்ள பாடத்தைக் கற்றுக்கொள்ளும்—மனித ஞானமானது, எல்லையற்றவருடன் இணைந்து, கிறிஸ்துவின் கிருபையினால் பரிசுத்தமாக்கப்பட்டிராத பட்சத்தில், மதியீனமாக இருக்கிறது—என்பதே அப்பாடம் ஆகும்.

### கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியம்

படைக்கப்பட்டவர்களைப் படைக்கப்படாதவருடன், முடிவுக்குரியவர்களை முடிவில்லாதவருடன் தமது சொந்த தெய்வீக ஆள்தத்துவத்தின்வழியாக

இணைப்பதற்குத் தேவனுடைய நேசகுமாரன் எடுத்துக்கொண்ட ஊழியம், வாழ்நாள் முழுக்க நமது சிந்தனைகளை ஈடுபடுத்துவதற்கேதுவான ஒரு தலையங்கமாக இருக்கிறது. கிறிஸ்துவின் இந்த ஊழியம் மற்ற உலகங்களின் ஜீவராசிகளை அவர்களது அறியாமை மற்றும் இராஜ பக்தியில் நிலைநாட்டுகிறதாகவும், அதேவேளையில் இவ்வுலகத்தின் தொலைந்துபோனோர் மற்றும் அழிவோரை இரட்சிக்கிறதாகவும் இருந்தது. கீழ்ப்படியாதோர் தேவனுக்கான தங்களது பற்றுறுதியைத் திரும்பக் கட்டுவதற்கான ஒரு பாதையை அவர் திறந்தார், அதே செயலினால் ஏற்கெனவே தூய்மையாயிருப்போர் கறைபட்டுப்போகாதபடிக்கு அவர்களைச் சுற்றிலும் ஓர் அரணை அவர் வைத்தார்.

ஒருபோதும் விழுந்துபோகாத உலகங்கள் உண்டு என்பதைக்குறித்து நாம் களிகூரும்வேளையில், ஆதாமின் விழுந்துபோன குமாரர்களை இரட்சிப்பதற்கும், தங்களது நிலையையும், குணப்பரிசுத்தத்தையும் நிலைநாட்டு வதற்குமான மீட்பின் திட்டத்துக்காக இயேசுகிறிஸ்துவுக்குத் துதியையும், கனத்தையும், மகிமையையும் இந்த உலகங்கள் செலுத்தி வருகின்றன. சாத்தான் தனது சோதனைகளின் மூலமாக மனித இனத்தின்மீது அழிவைக் கொண்டுவந்திருக்கிறான்; அந்த அழிவிலிருந்து மனிதக்குடும்பத்தை உயர்த்துகிற கரமே மற்ற உலகங்களின் மக்களைப் பாவத்திலிருந்து பாதுகாத்தக் கரம் ஆகும். அளக்க இயலாப் பெரும்பரப்பிலுள்ள ஒவ்வொரு உலகமும் பிதா, குமாரனின் பராமரிப்பையும், ஆதரவையும் பெற்றுவருகிறது; இந்தப் பராமரிப்புத் தொடர்ந்து விழுந்துபோன மனுக்குலத்துக்காகவும் காட்டப்படுகிறது. கிறிஸ்து மனிதனின் சார்பில் மத்தியஸ்தம்பண்ணிக் கொண்டிருக்கிறார். அவரது மத்தியஸ்த ஊழியத்தினால் காணப்படாத உலகங்களின் ஒழுங்கும் காக்கப்பட்டுவருகிறது. நமது எண்ணங்களை ஈடுபடுத்தி, தேவனுக்கு நமது நன்றியுணர்வையும், வணக்கத்தையும் வெளிக் காட்டுவதற்கு இந்தக் கருப்பொருள்கள் போதுமான முக்கியத்துவமும், முதன்மைத்துவமும் வாய்ந்தவைகளல்லவா?

## அறிவுசார்ந்த வளர்ச்சி

நமது வாலிபர்களுக்கு வேதாகமத்தைத் திறந்து, அதின் மறைவான பொக்கிஷங்களுக்கு அவர்களது கவனத்தை ஈர்த்து, அதிலுள்ள சத்திய முத்துக்களைத் தேடும்படி அவர்களுக்குப் போதியுங்கள். தத்துவஞானம் தழுவிய அனைத்துப் பாடமும் கொடுக்க இயலாத அறிவாற்றலை அவர்கள் அடைவார்கள். வேதம் விருந்தளிக்கிற நேர்த்திவாய்ந்த பாடத்தலைப்புகள், ஆவியால் அருளப்பட்ட வார்த்தைகளின் மதிப்புவாய்ந்த எளிமை, மனதிற்கு அது வழங்குகிற உன்னதமான கருப்பொருள்கள், தேவனுடைய

சிங்காசனத்திலிருந்து வரும் கூர்மையும், தெளிவுமான வெளிச்சம் போன்றவை புத்திக்கு ஒளியூட்டி, புரிந்துகொள்ளக்கூடாத, ஒருபோதும் முழுமையாக விவரிக்கக்கூடாத அளவுக்கு மனதின் சக்திகளை மேம்படுத்தும்.

பண்பில் மிக மேலானதும், மிக உயர்தரமுடையதுமான ஓர் எல்லையற்ற களத்தைக் கற்பனாசக்திக்கென வேதம் முன்வைக்கிறது. பூமியைவிட வானங்கள் உயர்ந்திருக்கிறதுபோல, பரிசுத்தமாக்கப்படாத அறிவாற்றலின் மேலோட்டமான படைப்புகளைவிட அது மிகவும் உயர்ந்ததாகும். ஆவியானவர் அருளிய மனித இனத்தைக் குறித்த வரலாறு ஒவ்வொரு தனிநபரின் கரங்களிலும் வைக்கப்பட்டிருக்கிறது. அனைவரும் இப்பொழுது தங்களது ஆராய்ச்சியைத் தொடங்கலாம். ஏதேனில் பரிசுத்தமான, மாசற்ற நிலையில் தேவனோடும் பாவமற்ற தூதர்களோடும் ஐக்கியத்தை அனுபவித்துநின்ற நமது ஆதிப் பெற்றோருடன் அவர்கள் அறிமுகமானவர்களாகலாம். பாவத்தின் நுழைவையும், மனித இனத்தின்மீதான அதன் விளைவுகளையும் அவர்கள் கண்டறியலாம். மனிதனின் கீழ்ப்படியாமை, மனந்திரும்பாமை மற்றும் பாவத்துக்கான நீதியான தண்டனை ஆகியவற்றைப் புனித சரித்திரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளபடி அதன் பாதையில் படிப்படியாக ஆராய்ந்து அறிந்திடலாம்.

## மாமேன்மையான அறிவுவளர்ச்சி

முற்பிதாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுடன், வாசகர் மனதில் உரையாடி மகிழலாம்; ஆழ்ந்த மனந்தொடும் காட்சிகளினூடே அவர் நகர்ந்து செல்லலாம்; பரலோகத்தில் அரசரும், தேவனுக்குச் சமமானவராகவும் இருந்து, மனுக்குலத்துக்காக மண்ணில் இறங்கி, மீட்பின் திட்டத்தைச் செயல்படுத்தி, மனிதனைக் கட்டியிருந்த சாத்தானின் சங்கிலிகளை முறித்து, மனிதன் தேவசாயலை மீண்டும் பெறுவதற்கு வழிவகை செய்கிற கிறிஸ்துவை அவர் நோக்கிப் பார்க்கலாம். கிறிஸ்து தம்மீது மனிதத்தன்மையை எடுத்து, முப்பது ஆண்டுகளாக அத்தன்மையைக் காத்து, மனிதன் அழிவுக்குள் விடப்படாதபடிக்கு, அவர் தமது ஆத்துமாவைப் பாவத்துக்கான பலியாக்கினது ஆழ்ந்த சிந்தனைக்கும், மிகவும் கருத்தூன்றிய ஆராய்ச்சிக்குமான பாடப்பொருள் ஆகும்....

வெளிப்பாட்டின் வியப்பூட்டும் சத்தியங்களை மனம் புரிந்துகொள்ளட்டும்; அற்பத்தனமான கருப்பொருள்களில் அது தன் சக்திகளை ஈடுபடுத்துவதில் ஒருபோதும் திருப்திகொள்ளாது. இன்றைய வாலிபர்களைச் சீர்கெடுக்கிற அலுப்பூட்டும் கேளிக்கைகள் மற்றும் குப்பைகூளமான இலக்கியத்திலிருந்து அருவருப்புடன் அது திரும்பும். வேதாகமத்தின் கவிஞர்கள் மற்றும் அறிவாளிகளுடன் தொடர்புகொண்டு

விசுவாச வீரர்களின் மகிமையான செயல்களினால் தூண்டுதல் பெற்ற ஆத்துமாக்கள்—மிகவும் புகழ்பெற்ற உலகரீதியான ஆசிரியர்களின் படைப்புகளைப் படிப்பதில் அல்லது உலகத்தின் ரோமராயர்கள், ஏரோதுக்கள் மற்றும் பார்வோன்களின் வீரச்செயல்களைத் தியானிப்பதில் மற்றும் மகிமைப்படுத்துவதில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததைவிடவும், வளமான கருத்துக்களங்களிலிருந்து சிந்தையில் உயர்வும் இருதயத்தில் மிக அதிகத் தூய்மை அடைந்தவர்களாகவும் புறப்பட்டுவருவார்கள்.

வாலிபர்களின் வல்லமைகள் பெரும்பாலும் உறங்கிக்கொண்டிருக் கின்றன; ஏனெனில் கர்த்தருக்குப் பயப்படுதலை அவர்கள் ஞானத்தின் ஆரம்பமாகக் கொள்ளவில்லை. கர்த்தர் தானியேலுக்கு ஞானத்தையும் அறிவையும் கொடுத்தார்; ஏனெனில் அவன் தன்னுடைய ஆன்மீகக் கொள்கைகளுடன் குறிக்கிடுகிற எந்தச் சக்தியினாலும் தூண்டப்படுவதற்கு இடமளிக்கவில்லை. நிலையான மதிப்பும், உறுதியான உள்ளமும் கொண்ட வெகுசில மனிதர்களே நம்மிடையில் காணப்படுவதற்கான காரணம், பரலோகத்துடன் தொடர்பறுந்த நிலையில் மேன்மையைத் தேட அவர்கள் நினைப்பதே ஆகும்.

மனுப்புத்திரரால் தேவன் மதிக்கப்படவில்லை, நேசிக்கப்படவில்லை, மகிமைப்படுத்தப்படவில்லை. பக்தியானது வாழ்ந்துகாட்டப்படவும் இல்லை, அறிக்கையிடப்படவும் இல்லை. கர்த்தர் மனிதனுக்காகச் சிறிதளவே செயலாற்ற முடியும், ஏனெனில் அவன் மிக எளிதில் இறுமாப்படைகிறான், மிகவிரைவில் தன்னைத் தான் முக்கியத்துவம் வாய்ந்தவனாகக் கருதுகிறான். நமது திறமைகளை நாம் விரிவடையச் செய்யவும், புத்தியானது மலர்ந்து, வளர்ந்து, பெலப்படுவதற்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் நாமே பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். மனிதன் தான் வளர்த்துக்கொள்வதைவிடவும் மிக மேலான, மிக உயர்தரமான வாழ்க்கைக்கென்று பிறந்திருக்கிறான். தேவனோடு நித்தியகாலமாக வாழ்வதற்கு ஆயத்தப்படுவதற்காகவே, நமது மரணத்துக்குரிய வாழ்வுகாலம் அருளப்பட்டிருக்கிறது.

## மாபெரும் ஆசிரியரான வேதாகமம்

பரிசுத்த வேதவாக்கியங்களில் மனதின் சிந்தனைக்காக வைக்கப் பட்டிருக்கிற தலைப்புகள் எத்தனை அருமையானவை! தியானத்திற்கான மேன்மையான கருப்பொருள்களை எங்கே கண்டடையலாம்? மிகத்தீவிரமான சுவாரஸ்யமிக்க கருப்பொருள்கள் எங்கே இருக்கின்றன? மனித அறிவியலின் ஆராய்ச்சிகள் அனைத்தும், வேதாகம அறிவியலின் உயர்நிலை மற்றும் மறைபொருளுடன் எவ்விதத்தில் ஒப்பிடக்கூடியதாய் இருக்கின்றன? ஆழ்ந்த

அறிவாற்றலையும், அக்கறைமிக்க எண்ணத்தையும் செயல்முறைக்குக் கொண்டுவருகிற ஏதாவதொன்று எங்கே இருக்கிறது?

நம்முடன் பேச நாம் அதை அனுமதித்தால், வேறு எதுவும் போதிக்கக்கூடாததை வேதாகமம் நமக்குப் போதிக்கும். அந்தோ! தேவனுடைய வார்த்தையைத் தவிர மற்ற அனைத்தும் கருத்தில் கொள்ளப்படுகிறது. வேதாகமமானது, அதன் அனைத்துப் புனித சத்தியப் பொக்கிஷங்களுடன், நமது மேஜைகளின்மீது புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கும்நிலையில், உதவாத இலக்கியமும், கற்பனைக் கதைகளும் பேராவலுடன் விழுங்கப்படுகின்றன. புனித வார்த்தையானது, வாழ்வின் சட்டமாக்கப்பட்டால், பக்குவப்படுத்தும், உயர்த்தும், பரிசுத்தப்படுத்தும். அது மனிதனுக்கான தேவனுடைய குரல் ஆகும். நாம் அதற்குச் செவிசாய்ப்போமா?

“உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்.” எண்ணப்பதிவுண்டாக்கி, சிந்தைக்கு ஒளியூட்டும் படி வேத ஆராய்ச்சியாளரின் அருகில் தூதர்கள் நிற்கின்றனர். பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பாக முதல் சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தபோது இருந்த அதே வேகத்துடன் கிறிஸ்துவின் கட்டளையானது இன்றும் நம்மிடத்தில் வருகிறது: “வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே”–யோவான் 5:39.—Review and Herald, January 11, 1881.

## 82

# வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்

வாலிபர்கள் தங்களுக்கென்றே வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அனுபவ முதிர்ச்சியுள்ளவர்கள் சத்தியத்தைத் தேடிக் கண்டடையட்டும், அவர்களிடமிருந்து வருவதை அதிகாரமாக ஏற்றுக் கொள்ளலாம் என்று அவர்கள் நினைக்கக்கூடாது. வேதாகமத்தின் சத்தியத்தி லிருந்து தங்களது அதிபதிகள், ஆசாரியர்கள் மற்றும் மூப்பர்களால் இழுக்கப்பட்டபடியால் யூதர்கள் ஒரு தேசமாக ஒழிந்து போயினர். இயேசுவின் படிப்பினைகளை கவனித்து வேதவாக்கியங்களைத் தங்களுக்காக ஆராய்ந்துபார்த்திருந்தால், அவர்கள் அழிந்திருக்கமாட்டார்கள்….

தேவனுடைய ஒரு வாக்குத்தத்தத்தின் விலைமதிப்பு மற்றும் மேன்மை அனைத்தையும் புரிந்துகொள்வது என்பது எந்நத மனதாலும் இயலாத காரியமாகும். ஒருவர் ஒரு கண்ணோட்டத்தின் மகிமையைப் புரிந்துகொள்கிறார், மற்றவர் மற்றொரு கண்ணோட்டத்திலிருந்து அழகையும், கிருபையையும் அறிந்துகொள்கிறார், ஆத்துமானாவது பரலோக ஒளியினால் நிரப்பப்படுகிறதுஇ நாம் எல்லா மகிமையையும் கண்டால், ஆவியானது சோர்ந்துபோகும். ஆனால் நாம் இப்பொழுது அனுபவிப்பதைக் பார்க்கிலும், தேவனுடைய அபரிமிதமான வாக்குத்தத்தங்களிலிருந்து மிக மேலான வெளிப்பாடுகளை உரிமையாகப் பெற்றிடமுடியும். நமக்காக வடிவமைக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதத்தின் முழுமையை நாம் எப்படிக் காணத் தவறியிருக்கிறோம் என்று நினைத்துப் பார்த்தால் என் இருதயம் வேதனைப்படுகிறது. நாம் ஒவ்வொருநாளும் அவரது பிரசன்னத்தின் ஒளியில் நடக்கவேண்டியவர்களாயிருக்கும்போது, ஆவிக்குரிய ஒளியூட்டத்தில் கணப்பொழுது மட்டுமே ஒள்ள ஒளிப்பொறிகளோடு நம்மை நாமே திருப்திப்படுத்திக்கொள்கிறோம்.—Testimonies to Ministers, pp. 109, 111.

## 83

# வேத ஆராய்ச்சியில் விடாமுயற்சி

“வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று எண்ணுகிறீர்களே.” ஆராய்ந்து பார்த்தால் என்பதற்குத் தொலைந்துபோன ஒன்றைக் கவனமாகத் தேடுதல் என்று பொருள். தேவனுடைய வார்த்தையில் மறைந்துள்ள பொக்கிஷங்களை ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் அவைகளின்றி இருக்கலாகாது. கடினமான பகுதிகளை வசனத்துடன் வசனமாக ஒப்பிட்டு ஆராயுங்கள். வேதவாக்கியமே அதைப்புரிந்துகொள்ள உதவும் திறவுகோல் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

வேதத்தை ஜெபத்துடன் ஆராய்கிறவர்கள், ஒவ்வொரு ஆராய்ச்சி யிலுமிருந்து அவர்கள் முன்பிருந்த காட்டிலும் அதிக ஞானமுள்ளவர்களாக முன்செல்வார்கள். அவர்களது சிக்கல்களில் சில தீர்க்கப்பட்டுவிட்டன; ஏனெனில் யோவான் பதினான்காம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள பணியைப் பரிசுத்த ஆவியானவர் செய்துவிட்டார்: “என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்”—யோவான் 14:26.

அடையப்பட வேண்டிய மதிப்புள்ள எதுவும் அக்கறைமிக்க, விடாப் பிடியான முயற்சியின்றி அடையப்படாது. வியாபாரத்தில், சாதிப்பதற்கான துணிவு உள்ளவர்கள் மட்டுமே வெற்றிகரமான விளைவுகளைக் காண்கிறார்கள். அக்கறைமிக்கக் கடின உழைப்பின்றி, ஆவிக்குரிய காரியங்களில் அறிவை அடைவதற்கு நாம் எதிர்பார்க்க முடியாது. பூமியில் மறைந்துள்ள விலையேறப்பெற்ற உலோகத்துக்காக ஒரு சுரங்கத்தொழிலாளி தோண்டுவதுபோல, சத்திய முத்துக்களை அடையவிரும்புகிறவர்கள் தங்களுக்காகத் தோண்டவேண்டும்.

அக்கறையின்றி, அரைகுறை மனதுடன் பணிபுரிகிறவர்கள் ஒருபோதும் வெற்றிபெறமாட்டார்கள். வாலிபரும் வயோதிபரும் தேவனுடைய வார்த்தையை வாசிக்கவேண்டும்; அவர்கள் அதை வாசிப்பதுமட்டுமல்ல, மாறாக, அவர்கள் ஜாக்கிரதையுள்ள ஆர்வத்துடன், ஜெபித்து, விசுவாசித்து, ஆராய்ந்து அதைப் படிக்கவும் வேண்டும். இவ்விதமாக அவர்கள் மறைவான பொக்கிஷத்தைக் கண்டடைவார்கள்; ஏனெனில் கர்த்தர் அவர்களது புத்திக்குத் தெளிவூட்டுவார்.

### ஒளிவுமறைவு இல்லாத மனம்

உங்களுடைய வேத ஆராய்ச்சியில், உங்களது தப்பெண்ணங்களையும், வழிவழியாகப்பெற்ற மற்றும் வளர்த்துக்கொண்ட புதுக்கருத்துக்களையும் ஆராய்ச்சியின் ஆரம்பத்திலேயே தள்ளிவைத்திடுங்கள். உங்களது சொந்தக் கருத்துக்களை நிலைநிறுத்துவதற்கு வேதவாக்கியங்களை ஆராய்ந்தால், நீங்கள் ஒருபோதும் சத்தியத்தைக் கண்டடையமாட்டீர்கள். இவற்றை வாயிலண்டையில் வைத்துவிட்டு கிறிஸ்துவின் பாதத்தில் உட்காரும்போது, கர்த்தர் உங்களுக்குச் சொல்ல இருக்கிறதை அவரிடமிருந்து கற்றுக்கொள்வீர்கள். வார்த்தை அவனுக்கு உணர்வைக் கொடுக்கும். வேதத்தை ஆராய்வதற்குத் தங்களது போலியான தற்பெருமையினால் மிகுந்த ஞானிகளாயிருப்பவர்களுக்கு: நீங்கள் இரட்சிப்புக்கேற்ற ஞானவான் களாக விரும்பினால், சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவர்களாக வேண்டும் என்று கிறிஸ்து கூறுகிறார்.

முந்தைய அபிப்பிராயங்களின் வெளிச்சத்தில் வார்த்தையை வாசிக்காதிருங்கள்; மாறாக, தப்பெண்ணத்திலிருந்து விடுபட்ட சிந்தையுடன், அதனைக் கவனத்துடனும், ஜெபத்துடனும் ஆராய்ந்திடுங்கள். நீங்கள் வாசிக்கும்போது உணர்த்துதல் உண்டானால், பேணிவளர்த்த அபிப்பிராயங் கள் வார்த்தையுடன் ஒத்துப்போகவில்லை என்பதை நீங்கள் கண்டால், இத்தகைய அபிப்பிராயங்களுக்குப் பொருந்தும்படி வார்த்தையை வளைப்பதற்கு முயற்சிக்காதிருங்கள். கடந்தகாலத்தில் நீங்கள் விசுவாசித்த

அல்லது பின்பற்றிய காரியங்கள் உங்கள் புத்தியைக் கட்டுப்படுத்த அனுமதியாதிருங்கள். வேதத்திலுள்ள அதிசயமான காரியங்களைப் பார்ப்பதற்கு உங்கள் மனக்கண்களைத் திறந்திடுங்கள். எழுதப்பட்டிருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள், பின்பு உங்கள் பாதங்களை நித்தியக் கன்மலையானவர்மீது நிலைநாட்டிக்கொள்ளுங்கள்.

## தேவசித்தம் குறித்த அறிவு

தேவவார்த்தையில் அடங்கியிருக்கிற அவரது சித்தத்தைப் பற்றிய நமது அறிவைப் பொறுத்தே நமது இரட்சிப்பு அமைந்திருக்கிறது. சத்தியத்தைக் கேட்பதையும், ஆராய்வதையும் ஒருபோதும் நிறுத்தாதிருங்கள். உங்கள் கடமையை நீங்கள் அறிய வேண்டியது அவசியம். நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். அவர் உங்களுக்கு என்ன சொல்லியிருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டியது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. ஆனால் நீங்கள் விசுவாசத்தைச் செயல்படுத்தவேண்டும். நீங்கள் வேதவாக்கியங்களை ஆராயும் வேளையில், தேவன் இருக்கிறார் என்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.

ஆ! ஆவிக்குரிய உணவுக்கான பசியுள்ள ஓர் இருதயத்துடன் வேதத்தை ஆராய்ந்திடுங்கள். தங்கத்தின் தாதுப்படுகைகளைக் கண்டடைய பூமிக்குள் தோண்டுகிற ஒரு சுரங்கத்தொழிலாளியைப் போல வார்த்தைக்குள் தோண்டி ஆராயுங்கள். தேவனோடுள்ள உங்கள் உறவையும், உங்களுக்கான அவரது சித்தத்தையும் கற்றுக்கொள்ளும் வரைக்கும் உங்கள் ஆராய்ச்சியைக் கைவிடாதிருங்கள்.—The Youth's Instructor, July 24, 1902.

## வேத ஆராய்ச்சியில் பயபக்தி

தேவபிரசன்னத்தில் நாம் இருக்கிறோம் என்ற உணர்வுடன் வேத ஆராய்ச்சிக்குப் பயபக்தியோடு நாம் வரவேண்டும். எல்லாக் கவலையீனமும், விளையாட்டுத்தனமும் தள்ளிவைக்கப்படவேண்டும். வேதத்தின் சில பகுதிகள் எளிதில் புரிந்துகொள்ளப்படுகிற வேளையில், மற்றப் பகுதிகளின் மெய்யான அர்த்தம் அப்படி உடனடியாகப் பகுத்துணரப்படுவதில்லை. பொறுமையான ஆராய்ச்சியும், தியானமும், ஊக்கமான ஜெபமும் இருக்க வேண்டும். வேதவாக்கியங்களை ஒவ்வொரு மாணவனும் திறக்கும் வேளையில், பரிசுத்த ஆவியானவரின் ஒளியூட்டத்துக்காக ஜெபிக்கவேண்டும்! அது கொடுக்கப்படும் என்ற வாக்குத்தத்தம் நிச்சயமானதாக இருக்கிறது.

வேதவாக்கியங்களின் ஆராய்ச்சிக்கு நீங்கள் எப்படிப்பட்ட ஆவியுடன் வருகிறீர்கள் என்பது உங்கள் அருகில் வரும் உதவியாளரின் தன்மையைத் தீர்மானிக்கும். இருதயத்தாழ்மையுடன் தெய்வீக வழிகாட்டுதலைத் தேடுகிறவர்களுடன் ஒளியின் உலகத்திலிருந்து தேவதூதர்கள் இணைந்து கொள்வார்கள். ஆனால் சுயநிறைவுமிக்க உணர்வுடன், பயபக்தியின்றி வேதம் திறக்கப்படுமானால், இருதயம் தப்பெண்ணத்தினால் நிறைந்திருக்குமானால், சாத்தான் உங்கள் அருகிலிருந்து, தேவனுடைய வார்த்தையின் தெளிவான வாக்கியங்களைத் தவறான ஒளியில் முன்கொண்டுவந்து வைப்பான்.— Testimonies to Ministers, pp. 107–108.

## 84

# ஊக்கமான வேத ஆராய்ச்சியின் பலாபலன்

சத்தியத்திற்கான ஆராய்ச்சியானது ஒவ்வொரு திருப்பத்திலும் ஆராய்பவருக்குப் பலனையளிக்கும். ஒவ்வொரு கண்டுபிடிப்பும் அவரது புலனாய்வுக்கு மிகுவளமிக்கக் களங்களைத் திறந்துகொடுக்கும். மனிதர்கள் மனதில் நினைப்பவைகளைப் பொறுத்தே மாற்றமடைகின்றனர். வழக்கில் உள்ள பொதுவான சிந்தனைகளும், சம்பவங்களும் கவனத்தை எடுத்துக்கொள்ளுமானால், மனிதன் சிறப்பற்றவனாகி விடுவான். தேவனுடைய சத்தியம் குறித்த மேலோட்டமான புரிதலை அடைவதற்கும் அவன் மிகுந்த அசட்டையுள்ளவனாயிருந்தால், தேவன் அவன்மீது பொழியவேண்டும் என்று விரும்புகிற வளமான ஆசீர்வாதங்களை அவன் பெறமாட்டான். சிந்தையின் ஒரு பிரமாணம் என்னவெனில், எப்படிப்பட்ட காரியங்களின் பரிமாணங்களுடன் அது நன்கு அறிமுகமானதாகிறதோ, அவற்றைப் பொறுத்தே அது குறுகும் அல்லது விரியும்.

மனரீதியான வல்லமைகள் சத்தியத்தை ஆராயும் பணியில் தீவிரமாகவும், விடாப்பிடியாகவும் ஈடுபடுத்தப்படவில்லையானால், அவைகள் நிச்சயமாகச் சுருங்கிப்போய், தேவனுடைய வார்த்தையின் ஆழந்த அர்த்தங்களைப் புரிந்துகொள்கிற திறமையை இழந்துபோகும். வேதாகமத்தின் பாடப்பொருள்களுக்கு உள்ள தொடர்பைக் கண்டறிவதிலும், வசனத்தை வசனத்துடன் மற்றும் ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளுடன் ஒப்பிடுவதிலும் சிந்தையானது செயல்படுத்தப்படுமானால், அது விரிவடை

யும். மேற்பரப்புக்கு அடியில் செல்லுங்கள்; திறமைமிக்க, ஊக்கம் நிறைந்த மாணவனுக்காக மிகவும் வளமான கருத்துப் பொக்கிஷங்கள் காத்திருக்கின்றன.—Review and Herald, July 17, 1888.

### வழிகாட்டியான வேதாகமம்

மாணவன் வேதாகமத்தைத் தனது வழிகாட்டியாக எடுத்துக்கொண்டு, கொள்கைக்காக உறுதியாய் நிற்கட்டும், சாதனையின் எந்த உச்சத்தையும் அவன் ஆர்வத்துடன் அடையலாம்.—Ministry of Healing, p. 465.

## 85

# கல்வியாளராக வேதாகமம்

ஒரு கல்வியாளரைப்போல, பரிசுத்த வேதவாக்கியங்கள் நிகர் இல்லாததாக இருக்கிறது. மனிதர்கள் உடைமையாகக் கொண்டுள்ள மிகப்பழமையான, மிகவும் அகன்றுவிரிந்த சரித்திரமாக வேதம் இருக்கிறது. நித்திய சத்தியத்தின் ஊற்றிலிருந்து அது புத்தம் புதியதாய் வந்தது; யுகங்கள் நெடுகிலும் தெய்வீகக் கரமானது அதன் பரிசுத்தத்தைப் பாதுகாத்திருக்கிறது. மனித ஆராய்ச்சியானது விருதாவாய் ஊடுருவித் தேடவிழைகிற, தொலைதூரக் கடந்தகாலத்தையும் அது ஒளிப்படுத்திக் காட்டுகிறது. பூமிக்கு அஸ்திபாரங்களைப் போட்ட, வானங்களை அகலமாய் விரித்த வல்லமையை நாம் தேவ வார்த்தையில் மட்டுமே காண்கிறோம். தேசங்களின் தோற்றம் குறித்த உண்மையான வரலாறை இங்குமட்டுமே நாம் பார்க்கிறோம். கணிதப்பெருமை அல்லது தப்பெண்ணத்தால் கறைப்படுத்தப்பட்டிராத மனித இனத்தின் சரித்திரமானது இங்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது.

### நித்தியமானவரின் குரல்

ஆழ்ந்த சிந்தனைக்கும், மேன்மையான நாட்டங்களுக்குமான பாடப்பொருள்களை தேவனுடைய வார்த்தையில் மட்டுமே மனம் கண்டடைகிறது. இதன்வழியாய் முற்பிதாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுடன் நாம் தொடர்புகொண்டு, மனிதருடன் பேசுகிற நித்தியமானவரின் குரலைக் கேட்கலாம். அந்தகாரத்தின் வல்லமைகளைத் தனியாளாகச் சமாளிக்கவும் நமது சார்பில் வெற்றியடையவும், பரலோகத்தின் மகத்துவமானவர் நமது பதிலாளியும், பிணையாளியும் ஆவதற்குத் தம்மையே தாழ்த்தியதை இங்கே நாம் காணலாம். இப்படிப்பட்டக் கருப்பொருள்களைப் பயபக்தி யுடன்

தியானிக்கும் செயல், இதயத்தை மென்மையாக்கி, உயர்தரமுடையதாக்கவும், அதே சமயம் புதுபெலன் மற்றும் உயிர்த்துடிப்புடன் மனதைத் தூண்டவும் தவறாது.

தேவனுடைய உரிமைகோருதல்களை அக்கறையின்மை மற்றும் அவமதிப்புடன் கையாளுவதைத் துணிச்சல் மற்றும் எனக் கருதுகிறவர்கள், அதன்மூலமாகத் தங்களது மதியீனத்தையும் அறியாமையையும் வெளிப் படுத்துகின்றனர். தங்களது விடுதலை மற்றும் சுயாதீனம்குறித்து அவர்கள் பெருமை பாராட்டுகிற வேளையில், அவர்கள் மெய்யாகவே பாவத்துக்கும் சாத்தானுக்கும் அடிமைப்பட்ட நிலையில் இருக்கின்றனர்.

## வாழ்வின் மெய்யான தத்துவம்

தேவன் எப்படிப்பட்டவர், நாம் எப்படியிருக்க வேண்டும் என அவர் விரும்புகிறார் என்பதுகுறித்தத் தெளிவான கருத்து, முழுமையான தாழ்மைக்கு வழிநடத்தும். புனித வார்த்தையைச் சரியான முறையில் ஆராய்கிறவர், மனித அறிவாற்றலானது எல்லாம் வல்லது அல்ல என்பதைக் கற்றுக் கொள்வார். தேவன் மட்டுமே அருளக்கூடிய உதவியில்லாத பட்சத்தில், மனித பெலன் மற்றும் ஞானம் போன்றவை பெலவீனமும் அறியாமையுமாய் இருக்கின்றன என்பதை அவர் கற்றுக்கொள்வார்.

தெய்வீக வழிநடத்துதலைப் பின்பற்றுகிறவர் இரட்சிக்கும் கிருபை மற்றும் உண்மையான மகிழ்ச்சியின் ஒரே மெய்யான ஆதாரத்தைக் கண்டுகொண்டுவிட்டார்; தன்னைச் சுற்றியுள்ள யாவருக்கும் மகிழ்ச்சியைப் பகிர்ந்தளிக்கிற வல்லமையை அடைந்துவிட்டார். ஆன்மீகம் இன்றி வாழ்வை எவரும் உண்மையாக அனுபவிக்க இயலாது. தேவனிடம் கொண்டுள்ள அன்பானது ஒவ்வொரு ருசியையும், வாஞ்சையையும் சுத்திகரித்து, உயர்தரமுள்ளதாக்கும், ஒவ்வொரு விருப்பத்தையும் தீவிரமானதாக்கும், ஒவ்வொரு தகுதியான இன்பத்தையும் பிரகாசமானதாக்கும். உண்மையும், நன்மையும், அழகுவாய்ந்ததுமான அனைத்தையும் பாராட்டி, அனுபவிக்குமாறு மனிதர்களை அது ஊக்கப்படுத்துகிறது.

வேதாகமத்தை உயர்த்தி மதிப்பிடுமாறு நம்மை நடத்துகிற மற்ற அனைத்துக் காரணங்களிலும் மேலானது என்னவென்றால், மனிதருக்கான தேவசித்தம் அதில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதே ஆகும். நமது படைப்பின் நோக்கத்தையும், அதை அடைவதற்கான வழிவகையையும் நாம் இதில் கற்றுக்கொள்கிறோம். நிகழ்கால வாழ்வை எப்படி ஞானமாக முன்னேற்றுவது என்றும், எதிர்கால வாழ்வை எப்படித் தக்கவைப்பது என்றும் நாம் கற்றுக்கொள்கிறோம். மனதின் கேள்விகள் மற்றும் இருதயத்தின்

ஏக்கங்களை வேறு எந்தப் புத்தகமும் திருப்திப்படுத்த முடியாது. தேவனுடைய வார்த்தையின் அறிவை அடைவதினாலும், அதற்குச் செவிகொடுப்பதினாலும், மனிதர்கள் தேவகுமாரர்களாகவும், பாவமற்ற தூதர்களுடன் தோழர்களாகவும் மாறும்படிக்கு, இழிநிலையின் தாழ்வான ஆழங்களிலிருந்து உயரே எழும்பலாம்.—Counsels to Teachers, Parents, and Students, pp. 52–54.

## 86

# பயபக்தி

பிரியமான இளம் நண்பர்களே, பூமியில் தேவனை மகிமைப்படுத்துவது உங்கள் சிலாக்கியம் ஆகும். இதைச் செய்யும் வண்ணமாக, மேலோட்டமான, விளையாட்டுத்தனமான, முக்கியமல்லாத காரியங்களிலிருந்து உங்கள் மனங்களை விலக்கி, நித்திய மதிப்புள்ளவைகளுக்கு நேராக அவற்றைத் திருப்ப வேண்டும்.

“நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்” என்ற இரட்சகரின் கட்டளைக்கு விஷேமாக அனைவரும் செவிகொடுக்க வேண்டிய காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பயபக்தியின்மையே உங்களது பலமான சோதனைகளில் ஒன்றாக இருக்கிறது. தேவன் உன்னதமானவர், பரிசுத்தமானவர்: தாழ்மையும் விசுவாசமிக்க ஆத்துமாவுக்கு, அவரது ஜனங்கள் தொழுகைக்காகக் கூடுகிற இடமாகிய, பூமியிலுள்ள அவரது வீடானது வானத்தின் வாசலைப்போன்று இருக்கிறது. துதியின் பாடலும், கிறிஸ்துவின் ஊழியக்காரர்களால் பேசப்படும் வார்த்தைகளும் மேலே உள்ள சபைக்காக ஒரு ஜனத்தை ஆயத்தப்படுத்துவதற்குத் தேவனால் நியமிக்கப்பட்ட ஏதுகரங்களாகும். அந்த மேன்மையான ஆராதனைக்குள் தீட்டுள்ளதும் அருவருப்புள்ளதுமாகிய எதுவும் பிரவேசிப்பதில்லை….

### தேவனுடைய வீட்டில் நடக்கும்விதம்

இக்கால வாலிபர்களிடம் பயபக்தியானது மிகவும் அதிகமாகத் தேவைப்படுகிறது. பக்தியுள்ள பெற்றோர்களின் குழந்தைகளும், வாலிபர்களும் தேவனுடைய வீட்டில் கடைபிடிக்க வேண்டிய கிரமம் மற்றும் ஒழுங்குமுறை குறித்து மிகவும் அக்கறையற்றிருப்பது கண்டு நான் குழப்பமடைந்திருக்கிறேன். தேவனுடைய ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு ஜீவவார்த்தைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கும் வேளையில், சிலர் வாசித்துக்கொண்டும், பிறர்

கிசுகிசுத்துக்கொண்டும், சிரித்துக்கொண்டும் இருக்கின்றனர். தங்களைச் சுற்றியிருப்பவர்களின் கவனத்தைத் திசைதிருப்புவதனால் அவர்களது கண்கள் பாவம் செய்கின்றன. இப்பழக்கம் தடுக்கப்படாமல் விடப்படுமானால், அது வளர்ந்து மற்றவர்களைப் பாதிக்கும்.

தேவன் ஆராதிக்கப்படுகிற கூட்டங்களில் அக்கறையின்றி, கவனமின்றி இருப்பதைப் பெருமைக்குரிய காரியமாகச் சிறுபிள்ளைகளும், வாலிபர்களும் ஒருபோதும் நினைக்கக்கூடாது. ஒவ்வொரு பயபக்தியற்ற எண்ணம் அல்லது செயலைத் தேவன் கண்ணோக்குகிறார், அது பரலோகப் புத்தகங்களில் பதிவுசெய்யப்படுகிறது. “உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்” என்று அவர் கூறுகிறார். அனைத்தையும் ஆராயும் அவரது கண்களிலிருந்து ஒன்றும் மறைக்கப்பட்டிருக்கவில்லை. தேவனுடைய வீட்டில் கவனமற்று, அக்கறையற்று இருக்கும் பழக்கத்தை எந்த அளவிலாவது நீங்கள் ஏற்படுத்திக் கொண்டிருப்பீர்களானால், அதைத் திருத்துவதற்கு உங்களிடமுள்ள வல்லமைகளைப் பயன்படுத்துங்கள், உங்களுக்குத் தன்மானம் உண்டு என்பதைக் காட்டுங்கள். பயபக்தியானது உங்களில் ஒரு பகுதியாக்கும் வரைக்கும் நடைமுறைப்படுத்துங்கள்.

பிரசங்க வேளையில் ஒருவரோடொருவர் தொடர்புகொள்ளும் அளவுக்குத் தேவனுடைய வீடு மற்றும் ஆராதனைக்குரிய பயபக்தியை மிகவும் குறைத்துக்கொள்ளாதிருங்கள். இக்குற்றத்தைச் செய்கிறவர்கள், அவர்களை உற்றுநோக்கி, அவர்களது செயல்களைக் குறித்துவைக்கிற தேவதூதர்களைக் காணக்கூடுமானால், அவர்கள் தங்களையே அருவருத்து வெட்கத்தினால் நிரப்பப்படுவார்கள். கருத்துடன் கவனிப்பவர்கள் தேவனுக்குத் தேவை. மனிதர்கள் தூங்கும்போதுதான், சத்துரு களைகளை விதைத்தான்.

புனிதமான எதுவும், தேவனுடைய தொழுகையுடன் சம்பந்தப்பட்ட எதுவும் கவனமற்று, அக்கறையற்றுக் கையாளப்படக்கூடாது. ஜீவ வார்த்தையானது பேசப்படும்போது, தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரர் மூலமாக தேவனுடைய சத்தத்தை நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் நினைவுகூர வேண்டும். கவனமின்மையின் மூலமாக இத்தகைய வார்த்தைகளை இழந்துவிடாதீர்கள்; கவனிக்கப்பட்டால், தவறான பாதைகளுக்குள் செல்வதிலிருந்து உங்களது அடிகளை அவைகள் காத்துக்கொள்ளும்.

### ஆன்மீகக் காரியங்களை அற்பமாக எண்ணுதல்

மதத்தை அறிக்கையிடும் அநேக வாலிபர்கள் இருதயமாற்றம் குறித்து எந்த அறிவும் அற்றிருப்பதைக் கண்டு நான் வருந்துகிறேன். எந்த குணமாற்றமும்

இல்லை. கிறிஸ்தவன் என்று அறிக்கையிடுவது ஒரு பக்திவிநயமான காரியம் என்பதை அவர்கள் உணராதிருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கையானது ஆன்மீக மனநிலைக்கு முற்றிலும் முரணானதாயிருக்கிறது. மெய்யாகவே தேவனுடைய குமாரர் மற்றும் குமாரத்திகள் என்ற கூட்டத்தில் அவர்கள் இருப்பர்களானால், அவர்கள் முட்டாள்தனம், கேலிப்பேச்சு மற்றும் அற்பத்தனம் ஆகியவற்றால் நிரப்பப்படமாட்டார்கள்; மற்றவர்களின் புத்தியீனமான பேச்சுகளும், நடக்கையும் அதேமாதியானவைகளை அவர்களில் எழுப்பாது. பந்தயப்பொருளான பரலோகத்தை அடைவதில் நோக்கமாயிருக்கிற மனம், ஆன்மீகக் காரியங்கள் சம்பந்தப்பட்ட நக்கல், நையாண்டி ஆகிய ஒவ்வொரு முயற்சியையும், உறுதி மற்றும் தீர்மானிக்கப்பட்ட நோக்கத்துடன் புறக்கணித்துத் தள்ளும்

இந்தப் பாடப்பொருள்குறித்து அக்கறையற்றிருப்பதில் பெரும் அபாயம் இருக்கிறது; கருத்தின்மை, கவலையின்மை போன்று மிகத் தந்திரமான மதியீனம் வேறு எதுவுமில்லை. விளையாட்டுத்தனமுள்ள வாலிபர்களை எப்பக்கத்திலும் நாம் பார்க்கிறோம். இவ்விதமான எல்லா வாலிபர்களும் தவிர்க்கப்பட வேண்டும்; ஏனெனில் அவர்கள் அபாயகரமானவர்கள். அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்வார்களானால், அவர்களைக் குறித்துதான் அதிகம் அஞ்சவேண்டும். அவர்களது மனங்கள் கீழ்த்தரமான மாதிரி அச்சால் வளர்க்கப்பட்டிருக்கிறது; உயர்த்தப்பட்ட, மேன்மையான சிந்தனைகளுக்கும், சரியான செயல்பாதைக்கும் அவர்களை மேலே கொண்டுவருவதைவிட, உங்களை அவர்களது நிலைக்குக் கீழே கொண்டுவருவது அவர்களுக்கு மிகவும் எளிதாக இருக்கும். வார்த்தைகளிலும், நடத்தையிலும் சீரான ஒழுங்கைக் கடைபிடிப்பவர்களே உங்கள் நண்பர்களாக இருக்கட்டும்.

தேவனுடைய புண்ணியங்களை அறிவிப்பதற்குச் சிறந்த விதத்தில் நீங்கள் செயல்பட வேண்டுமானால், சாதாரணமான வெற்றியிலிருந்து விலகிநின்று புனிதமானவற்றை உங்கள் மனங்களில் வைக்கக்கூடியதாக உங்கள் தொடர்புகள் இருக்கவேண்டும். பரந்த கண்ணோட்டங்கள், உயர்தரமான எண்ணங்கள் மற்றும் இலட்சியங்களை நீங்கள் அடைய விரும்பினால், நேர்மையான கொள்கைகளைத் திடப்படுத்துகிற தொடர்புகளைத் (நண்பர்களைத்) தெரிந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு செயலின் நோக்கமும் நித்திய மகிழ்ச்சியுடன்கூடிய வருங்கால வாழ்வைத் தக்கவைப்பதற்கு வளைந்து கொடுக்கட்டும்.—The Youth's Instructor, October 8, 1896.

## 87

# நன்கு நிலைநாட்டப்பட்ட நம்பிக்கை

நீங்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறீர்கள் என்பதை எப்படி அறிவீர்கள்? அவரது வார்த்தையை ஜெபத்துடன் ஆராயுங்கள். மற்ற எற்தப் புத்தகத்துக்காகவும் அதைப் புறம்பே வைக்காதிருங்கள். இப்புத்தகம் பாவத்தை உணர்த்தும். இரட்சிப்பின் வழியை அது தெளிவாய் வெளிப்படுத்தும். பிரகாசமான, மகிமையான பலனை அது பார்வைக்குக் கொண்டுவருகிறது. முழுமையான இரட்சகரை அது உங்களுக்கு வெளிப்படுத்தி, அவரது எல்லையில்லாத இரக்கத்தின் மூலமாக மட்டுமே நீங்கள் இரட்சிப்பை எதிர்பார்க்க முடியும் என்று போதிக்கிறது.

அந்தரங்க ஜெபத்தை அலட்சியம் பண்ணாதீர்கள், அதுவே ஆன்மீகத்திற்கு உயிர்நாடி ஆகும். ஆர்வமிக்க, ஊக்கமான ஜெபத்துடன் ஆத்தும பரிசுத்தத்துக்காக மன்றாடுங்கள். உங்கள் சாவுக்கேதுவான வாழ்வு இடர்நிலையில் இருந்தால் மன்றாடுவது போன்று, ஊக்கத்துடன், ஆர்வத்துடன் மன்றாடுங்கள். சொல்லிமுடியாத ஏக்கப்பெருமூச்சுகள் இரட்சிப்புக்காக உங்களுக்குள் உருவாகி, மன்னிக்கப்பட்ட பாவத்துக்கான இனிமையான அத்தாட்சி அடையப்படும்வரைக்கும் தேவனுக்குமுன்பாக அமர்ந்திருங்கள்.

நித்திய வாழ்வின் நம்பிக்கையை அற்பமான காரணங்களின் அடிப்படையில் பெற்றிட இயலாது. தேவனுக்கும் உங்களது ஆத்துமாவுக்கும் — நித்தியத்துக்குமாகத் தீர்மானிக்கப்பட வேண்டிய பாடப்பொருளாக அது இருக்கிறது. இருப்பதாகக் கருதப்பட்ட நம்பிக்கையானது உங்கள் அழிவை உறுதிப்படுத்தும், அவ்வளவுதான். தேவனுடைய வார்த்தையினால் நீங்கள நிற்கவோ. விழவோ வேண்டியதாகையால், உங்களது நிலைமைக்கான ஆலொசனையை அந்த வார்த்தையில்தான் நீங்கள் தேட வேண்டும். நீங்கள் கிறிஸ்தவனாக மாறுவதற்காக என்ன கோரப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அதிலே காணலாம். உங்கள் மீட்பரில் ஜெயத்தை, வெற்றியை நீங்கள் அடையும்வரைக்கும், போர்க்களத்திலிருந்து புறப்படாதிருங்கள் அல்லது உங்கள் ஆயுதவர்க்கத்தைப் புறம்பே வைக்காதிருங்கள்.—Testimonies for the Church, Vol. 1, pp. 163, 164. ★

# பகுதி 9

# வாசித்தலும் இசையும்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 88 | வாசிப்பதில் தேர்வுரிமை | 240 |
| 89 | எபேசியர்களின் எடுத்துக்காட்டு | 244 |
| 90 | முறையான அறிவுக்குரிய ஆகாரம் | 247 |
| 91 | வேதாகமம்—மிகவும் சுவாரஸ்யமான புத்தகம் | 251 |
| 92 | ஆத்துமத்தின் வாசல்களை நன்றாகக் காத்துக்கொள் | 253 |
| 93 | கிறிஸ்துவக் குணத்தக் கட்டியெழுப்புதல் | 255 |
| 94 | கட்டுக்கதையின் தாக்கம் | 258 |
| 95 | இசையின் நன்மைகள்ங | 259 |
| 96 | இசையின் பயன்கள் | 261 |
| 97 | இசையைத்தவறாகப் பயன்படுததுதல் | 262 |

## பகுதி 9

# வாசித்தலும் இசையும்

வாலிப ஆண்களே, வாலிபப் பெண்களே, உங்களுக்கு உண்மையான அறிவைக் கொடுக்கிற, முழுக்குடும்பத்திற்கும் உதவியாயிருக்கிற இலக்கியத்தை வாசியுங்கள். "எனக்குப் பயனளிக்காத, பிறருக்குச் சேவை செய்ய என்னைத் தகுதியிழக்க மட்டுமே செய்யக்கூடியவைகளை வாசிப்பதில் விலையேறப்பெற்ற மணித்துளிகளைச் செலவழிக்க மாட்டேன். தேவனுடைய சேவைக்கான தகுதியைப் பெறுவதில் எனது சிந்தனைகளையும், எனது நேரத்தையும் அர்ப்பணிப்பேன். விளையாட்டுத்தனமான, பாவமான காரியங்களுக்கு என் கண்களை மூடிக்கொள்வேன். எனது செவிகள் கர்த்தருடையவைகள், சத்துருவின் தந்திரமான தர்க்கத்திற்கு நான் செவிசாய்க்க மாட்டேன். தேவ ஆவியின் செல்வாக்கின்கீழ் இல்லாத ஒரு விருப்பத்துக்கு எவ்வகையிலும் எனது குரல் கீழ்ப்பட்டிருக்காது. எனது சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாய் இருக்கிறது, எனது தேகத்தின் ஒவ்வொரு வல்லமையும் ஒழுக்க உயர்வுடைய குறிக்கோள்களுக்காக அர்ப்பணிக்கப்படும்" என்று உறுதியாகச் சொல்லுங்கள்.

### வாசிப்பதில் தேர்வுரிமை

வாழ்வின் அனைத்துக் கடமைகளையும் சிறப்புறச் செய்வதற்காகச் சரீர, மன மற்றும் ஆவிக்குரிய வல்லமைகளை ஆயத்தப்படுத்துவதே கல்வி ஆகும். தாங்கு சக்திகள், மூளையின் பெலன் மற்றும் செயல்பாடு ஆகியவை குறைவடைவதும், பெருகுவதும் அவைகள் பயன்படுத்தப்படுவதைப் பொறுத்தே அமைகிறது. மனதின் வல்லமைகள் அனைத்தையும் ஒரே சீராக மேம்படச் செய்வதற்கு மனம் அதற்கேற்ப பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

அநேக வாலிபர்கள் புத்தகங்கள்மீது ஆர்வம் கொண்டுள்ளனர். கிடைக்கிற அனைத்தையும் வாசிக்கவேண்டும் என்பது அவர்கள் வாஞ்சை. என்ன வாசிக்கிறோம், என்ன கேட்கிறோம் என்பதைக் குறித்து அவர்கள் கவனமாயிருப்பார்களாக. ஒழுங்குமுறையற்ற வாசிப்பினால் அவர்கள் சீர்கெட்டுப்போகும் மிகப்பெரும் அபாயத்தில் இருக்கிறார்கள் என்று நான் அறிவுறுத்தப்பட்டேன். வாலிபர்களின் மனங்களைத் தடுமாறச் செய்கிற ஆயிரம் வழிகள் சாத்தானிடம் உண்டு. அவர்கள் விழிப்பின்றி ஒரு நொடிப்பொழுதுகூட பாதுகாப்பாக இருக்கமுடியாது. சத்துருவின் சோதனைகளால் கவர்ந்திழுக்கப்படாதபடிக்கு, அவர்கள் தங்களது மனங்களின்மீது ஒரு காவலை வைத்திட வேண்டும்.

## ஆரோக்கியமற்ற வாசிப்பின் செல்வாக்கு

சிந்தை எதை உட்கொள்ளுகிறதோ அதைப்பொறுத்து அது பெருமளவில் பாதிக்கப்படுகிறது என்பதைச் சாத்தான் அறிந்திருக்கிறான். வாலிபர்களையும், வளர்ந்த வயதினரையும் கதைப்புத்தகங்கள், கட்டுக் கதைகள் மற்றும் பிற இலக்கியத்தை வாசிக்கும்படி வழிநடத்துவதற்கு அவன் வகைதேடிக்கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட இலக்கியத்தை வாசிப்பவர்கள் தங்களுக்கு முன்னிருக்கும் கடமைகளைச் செய்வதற்குத் தகுதியற்றவர் களாகிறார்கள். அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்வதற்கும், பரலோக மன்னாவைப் புசிப்பதற்கும் வாஞ்சையற்றவர்களாய் நிஜமல்லாத வாழ்வை வாழ்கின்றனர். பெலப்படவேண்டிய மனம் பெலவீனப்படுகிறது, கிறிஸ்துவின் ஊழியம் மற்றும் பணியுடன் தொடர்புடைய மாபெரும் சத்தியங்களை—மனதைப் பாதுகாக்கிற, கற்பனாசக்திக்கு விழிப்பூட்டுகிற, கிறிஸ்து ஜெயங் கொண்டதுபோல ஜெயங்கொள்வதற்கு பலமான, ஊக்கமான வாஞ்சையைத் தூண்டிவிடுகிற சத்தியங்களை ஆராயும் வல்லமையை மனம் இழக்கிறது.

## ஆவிக்குரிய வாழ்வின் எதிரிகள்

அச்சடிக்கப்பட்டுள்ள பெரும்பகுதியான புத்தகங்கள் சுட்டெரிக்கப் பட்டால், மனம் மற்றும் இருதயத்தின்மீது அச்சமூட்டும் கிரியை நடப்பித்துக் கொண்டிருக்கிற வாதையானது தடுத்து நிறுத்தப்படும். காதல் கதைகள், அற்பமான, உணர்வைத் தூண்டுகிற கற்பனைக் கதைகள் மற்றும் எழுத்தாளர் தனது கதையுடன் ஒரு ஒழுக்கநெறிக்குரிய பாடத்தை இணைத்திருக்கிற ஆன்மீக நாவல்கள் என்ற ஒருவகைப் புத்தகங்கள்கூட வாசிப்பவர்களுக்குச் சாபமாக இருக்கின்றன. ஆன்மீக உணர்ச்சிக்கனிவுகள் ஒரு கதைப் புத்தகம் முழுக்கப் பின்னி பிணைந்திருக்கலாம், ஆனால் அநேக வேளைகளில், மிகத்திறமையாக வஞ்சிப்பதற்கும், கவர்ச்சிப்பதற்கும் சாத்தான் தூதனுடைய வஸ்திரங்களை உடுத்தியிருக்கிறான். இத்தகைய கதைகளைப் பாதுகாப்புடன் வாசிப்பதால் எவரும் சரியான கொள்கைகளில் உறுதிப்படுகிறதில்லை, சோதனையிலிருந்து மிகப்பாதுகாப்பாக இருப்பதுமில்லை.

கற்பனைக்கதைகளை வாசிக்கிறவர்கள், ஆவிக்குரிய வாழ்வை அழிக்கிற, பரிசுத்த வேதாகமப் பக்கங்களின் அழகை மறைக்கிற ஒரு தீமையில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஆரோக்கியமற்ற உற்சாகத்தை உருவாக்குகிறது, கற்பனாசக்தியைச் சமநிலையற்றதாக்குகிறது, மனதைப் பயன்பாட்டிற்கான தகுதியிழக்கச் செய்கிறது, ஆத்துமாவை ஜெபத்திலிருந்து பின்னிழுத்து, எந்த ஆவிக்குரிய பயிற்சிக்கும் அதனைத் தகுதிகெடச் செய்கிறது.

நமது வாலிபர்களில் அநேகருக்கு மேன்மையான திறமைகளைத் தேவன் அருளியிருக்கிறார்; ஆனால் பெரும்பாலும் அவர்கள் தங்கள் சக்திகளை வலுவிழக்கச்செய்து, குழப்பமடைந்து, மனங்களைப் பெலவீனப் படுத்தியிருக்கின்றனர்; அவர்களது ஞானமற்ற வாசிக்கும் தேர்வுரிமையினால், அநேக ஆண்டுகளாக அவர்கள் கிருபையிலும், நமது விசுவாசத்தின் காரணங்களைப் பற்றிய அறிவிலும் வளர்ச்சியடையவில்லை. கர்த்தர் சீக்கிரம் வருவதற்காக, "அழிவுள்ளதாகிய இது அழியாமையைத் தரித்துக்கொள்கிற" அந்த ஆச்சரியமான மாற்றத்துக்காக எதிர்பார்த்திருக்கிறார்கள், இந்தத் தவணையில் காலத்தில்தானே மிகவும் உயர்வான செயல்தளத்தின்மீது நின்றுகொண்டிருக்க வேண்டும்.

என் பிரியமான இளம் நண்பர்களே, உணர்ச்சிகளைத் தூண்டும் கதைகைளின் செல்வாக்கைக் குறித்த உங்கள் சொந்த அனுபவத்தை நிதானித்துப்பாருங்கள். அப்படிப்பட்ட வாசிப்புக்குப் பின்னர், நீங்கள் வேதத்தைத் திறந்து, ஆர்வத்துடன் ஜீவவார்த்தைகளை வாசிக்கமுடியுமா? தேவனுடைய புத்தகத்தை சுவாரஸ்யமற்றதாக நீங்கள் காண்கிறதில்லையா? அந்தக் காதல் கதையின் கவர்ச்சியானது மனதின்மீது தங்கி, அதன் ஆரோக்கியமான பண்புநிலையை அழித்து, உங்களது நித்திய நலன் சம்பந்தப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த, பக்திவிநயமான சத்தியங்களின்மீது நீங்ள் கவனத்தைச் செலுத்துவதை இயலாததாக்கிவிடுகிறது.

குப்பைகூளமான வாசிப்பு அனைத்தையும் தீர்மானிக்க உறுதியுடன் ஒதுக்கித் தள்ளுங்கள். உங்களது ஆவிக்குரிய வாழ்வை அது பெலப்படுத்துவ தில்லை, மாறாக, இயேசுவைப்பற்றிக் குறைவாகச் சிந்திக்கவும், அவரது விலையேறப்பெற்ற பாடங்களின்மீது குறைவாக நாட்டங்கொள்ளவும் செய்கிற, கற்பனாசக்தியைச் சீர்கெடுக்கிற உணர்ச்சிக்கனிவுகளை அது மனதிற்குள் கொண்டுவரும். தவறான திசையில் மனதை இட்டுச்செல்கிற அனைத்திலிருந்தும் அதைக் காத்துக்கொள்ளுங்கள். மனதின் சக்திகளுக்குப் பெலன் அளிக்காத குப்பைகூளமான கதைகளினால் மனதை நிரப்பாதீர்கள். மனதிற்கு அளிக்கப்படும் உணவின் பண்பைப் போன்றே சிந்தனைகளும் இருக்கும்.

## புத்தகங்களின் புத்தகம்

ஒருவர் தனது ஓய்வுநேரங்களில் வாசிக்கத் தெரிவுசெய்கிற புத்தகங்களின் தன்மையினால் அவரது ஆன்மீக அனுபவத்தின் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது. ஆரோக்கியமான மனத்திட்பமும், முழுமையான ஆன்மீகக் கொள்கைகளும் பெற்றிட வேண்டுமானால், வாலிபர்கள் அவரது வார்த்தையின்மூலமாக, தேவனுடன் ஐக்கிய உறவில் வாழ்ந்திட

வேண்டும். கிறிஸ்துவின் மூலமாக வரும் இரட்சிப்பின் வழியைச் சுட்டிக் காட்டுகிற வேதமே உன்னதமான, மேன்மையான வாழ்வுக்கான நமது வழிகாட்டியாயிருக்கிறது. இதுவரையிலும் எழுதப்பட்டவைகளிலேயே மிகவும் சுவாரஸ்யமான, படிப்பினைமிகுந்த சரித்திரமும், வாழ்க்கை வரலாறும் அதில் அடங்கியிருக்கிறது. கற்பனைக் கதையினால் தடம்புரளாத சிந்தனையை உடையவர்கள் வேதாகமத்தைப் புத்தகங்களிலெல்லாம் மிகவும் சுவாரஸ்யமானதாகக் காண்பார்கள்.

வேதாகமம் புத்தகங்களின் புத்தகமாகும். தேவனுடைய வார்த்தையை நீங்கள் நேசித்து, அதன் வளமான பொக்கிஷங்களை உடைமையாக்கிக்கொண்டு, சகல நற்கிரியைகளுக்கும் முழுமையாக ஆயத்தப்பட்டுநிற்கும்வண்ணம், உங்களுக்குக் கிடைக்கும் சமயத்திற்கேற்ப அதை ஆராய்ந்தால், இயேசுவானவர் உங்களைத் தம்மண்டை இழுத்துக் கொண்டிருக்கிறார் என்ற நிச்சயத்தை நீங்கள் அடையலாம். ஆனால், கிறிஸ்துவின் கோரிக்கைகளுக்கு இணங்கும்விதத்தில் அவருடைய படிப்பினையைப் புரிந்துகொள்ள வகைதேடாமல், வழக்கம்போல வேத வாக்கியங்களை வாசிப்பது போதாது. சத்திய சுரங்கத்திற்குள் வெட்டும் கருவியை ஆழமாய்ப் பாய்ச்சுவதால்மட்டுமே கண்டுபிடிக்கப்படக்கூடிய பொக்கிஷங்கள் தேவனுடைய வார்த்தையில் இருக்கின்றன.

மாம்ச சிந்தை சத்தியத்தைப் புறக்கணிக்கிறது; மாறாக, மனமாற்றமடைந்த ஆத்துமா ஆச்சரியமான மாற்றத்தை அடைகிறது. பாவிக்கெதிரான சாட்சிபகர்ந்து சத்தியங்களை வெளிப்படுத்தியதால் முன்பு கவர்ச்சியற்றதாயிருந்த புத்தகம், இப்பொழுது ஆத்துமாவின் உணவாகவும், வாழ்வின் சந்தோஷமாகவும், ஆறுதலாகவும் மாறுகிறது. நீதியின் சூரியனானவர் பரிசுத்தப் பக்கங்களுக்கு ஒளியூட்டுகிறார், பரிசுத்த ஆவியானவர் அவற்றின் மூலமாக ஆத்துமாவுடன் பேசுகிறார்...

அற்பமான வாசிப்புக்கு ஆர்வத்தை வளர்த்துக் கொண்டிருக்கிற யாவரும் அதிக உறுதியான தீர்க்கதரிசனத்திற்குத் தங்களது கவனத்தை இப்பொழுது திருப்புவார்களாக. உங்கள் வேதாகமங்களை எடுத்து, பழைய, புதிய ஏற்பாடுகளின் பரிசுத்தப் பதிவேடுகளைப் புத்தம்புது ஆர்வத்துடன் படிக்கத் தொடங்குங்கள். வேதாகமத்தை எவ்வளவு அதிகமாகவும், ஆர்வமாகவும் நீங்கள் படிக்கிறீர்களோ, அவ்வளவு அழகானதாக அது காட்சியளிக்கும், அற்பமான வாசிப்புக்குரிய நாட்டம் குறைந்துபோகும். இந்த விலையேறப்பெற்ற புத்தகத்தை உங்கள் இருதயங்களுடன் சேர்த்துக் கட்டிக்கொள்ளுங்கள். அது உங்களுக்கு நண்பனாகவும், வழிகாட்டியாகவும் இருக்கும்.—The Youth's Instructor, October 9, 1902.

89

# எபேசியர்களின் எடுத்துக்காட்டு

எபேசியர்கள் மனமாற்றமடைந்தபோது, அவர்கள் தங்களது பழக்கங்களையும், பயிற்சிகளையும் மாற்றிக்கொண்டனர். தேவ ஆவியின் உணர்த்துதலின்கீழ், அவர்கள் விரைந்து செயலாற்றி, தங்களது மாய வித்தையின் மர்மங்கள் அனைத்தையும் வெட்டவெளிச்சமாக்கினர். அவர்கள் வந்து அறிக்கையிட்டு, தங்கள் கிரியைகளைக் காண்பித்தனர், அவர்களது ஆத்துமாக்கள் பரிசுத்த வைராக்கியத்தினால் நிரப்பப் பட்டிருந்தன. ஏனெனில் அவர்கள் மாயவித்தைக்குத் தங்களை அர்ப்பணித் திருந்தனர்; மாயவித்தையை அவர்கள் கடைபிடிப்பதற்கான வழிமுறைகள் வரையறுக்கப்பட்டிருந்த சாத்தானுடைய திட்டத்தின்படியான விதிமுறைகள் அடங்கியிருந்த புத்தகங்களை அவர்கள் மிகவும் உயர்வாக மதித்திருந்தனர். பொல்லாங்கனின் சேவையிலிருந்து திரும்பிட அவர்கள் தீர்மானித்தவர் களாயிருந்தனர். தங்களது விலையேறப்பெற்ற புத்தகங்களை அவர்கள் கொண்டுவந்து, பொதுவில் வைத்து அவைகளை எரித்தனர். இவ்விதமாகத் தேவனிடத்திற்குத் திரும்பியதில் அவர்களிடம் காணப்பட்ட உண்மையை அவர்கள் வெளிக்காட்டினர்…

எபேசியர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு மனமாற்றமடைந்தபோது, தாங்கள் ஏற்கெனவே அகமகிழ்ந்திருந்த, தங்களது மனச்சாட்சிகளை ஆளுவதற்கும், தங்களது மனங்களை வழிநடத்துவதற்கும் அவர்கள் அனுமதித்திருந்த புத்தகங்களை தீயிலிட்டுப் பொசுக்கினர். அவர்கள் அவகைளை விற்றிருந்திருக்கலாம், ஆயினும் அப்படிச் செய்வதனால் தீமையானது நீடித்திருக்கும்படி செய்யப்படும். பின்னாட்களில் அவர்கள் சாத்தானிய மர்மங்களையும், மந்திர வித்தைகளையும் அருவருத்தனர்; அவைகளிலிருந்து அவர்கள் பெற்றிருந்த அறிவை வெறுப்புடன் நோக்கினர். சத்தியத்துடன் இணைக்கப்பட்டிருக்கிற வாலிபர்களைப் பார்த்துக் கேட்கிறேன், நீங்கள் உங்களது மந்திரப் புத்தகங்களை சுட்டெரித்துவிட்டீர்களா?

### இன்றைய மந்திரப் புத்தகங்கள்

எபேசியர்களைக் கட்டியிருந்த தீமை உங்களிடம் இருப்பதாகவோ அல்லது நீங்கள் மந்திரதந்திரத்தைக் கடைபிடிப்பதாகவோ, பில்லிசூனிய வித்தைகளில் அவர்களைப்போலவே தொடர்புகொண்டிருப்பதாகவோ நாங்கள் குற்றப்படுத்தவில்லை. மாந்திரிகத்தின் மர்மங்களை நீங்கள் பின்பற்றினீர்கள் என்றோ அல்லது தீய ஆவிகளுடன் தொடர்புகொண்டீர்கள்

என்றோ கூறவில்லை. ஆனாலும் சகல தீமைக்கும் காரணமானவனுடன், இந்தச் சகல மர்மங்களையும், நரகத் தந்திரங்களையும் திட்டமிடுகிறவனுடன் நீங்கள் ஐக்கியத் தொடர்பில் இல்லையா? ஆகாயத்து அதிகாரப் பிரபுவும், இப்பிரபஞ் சத்தின் தேவனுமாக இருக்கிறவனின் ஆலோசனைகளுக்கு நீங்கள் செவிகொடுக்கிறதில்லையா? அவனுடைய பொய்களுக்கு உங்களை அர்ப்பணித்து, மனமாற்றத்திற்கு முன்னிருந்த உங்கள் வாழ்க்கையுடன் இசைந்து செல்லும் காரியங்களைச் செய்ய அவனுடைய கருவிகளாக இருப்பதற்கு உங்களை கொடுக்கவில்லையா? சாத்தானின் கருவிகளாக இருப்பதற்கு நீங்கள் உங்களை ஒப்படைக்கவில்லையா? இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால், விழுந்துபோன தூதர்களுடன் உறவுகொண்டு, மற்ற ஆத்துமாக்களையும், உங்களது சொந்த ஆத்துமாவையும் வஞ்சிக்கும் கலையை அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவில்லையா?

மந்திரப் புத்தகங்களைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் என்ன வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் நேரத்தை எப்படிக் கழிக்கிறீர்கள்? தேவன் தமது வார்த்தையிலிருந்து உங்களிடத்தில் பேசுகிற அவரது குரலைக் கேட்கும்விதத்தில், புனிதமான தெய்வீக வாக்கியங்களை ஆராயத் தேடுகிறீர்களா? ஐயவாதம், அவிசுவாசம் மற்றும் இல்லைவாதத்தின் விதைகளை விதைக்கக்கூடிய புத்தகங்களினால் உலகம் நிரம்பிக்கிடக்கிறது; இத்தகைய புத்தகங்களிலிருந்து நீங்கள் நிறைவாகவோ அல்லது குறை வாகவோ உங்கள் பாடங்களைக் கற்றுக்கொண்டு வருகிறீர்கள், அவைகள் மாந்திரிகப் புத்தகங்களே ஆகும். அவைகள் தேவனைச் சிந்தையிலிருந்து அகற்றி, மெய்யான மேய்ப்பனிடமிருந்து ஆத்துமாவைப் பிரிக்கிறது.

## பக்திமிக்கச் சிந்தனைக்குத் தகுதியிழக்கும் மனம்

நீங்கள் வாசித்திருக்கிற புத்தகங்கள் பொல்லாங்கனைச் சாத்தானிய கௌரவத்துடன் நீங்கள் சேவிப்பது எப்படி என்று உங்களுக்குக் காட்டுவதற்கு, சாத்தானுடைய கூட்டத்தால் உருவாக்கப்பட்டக் கொள்கைகளினால் மனதை வசீகரிக்கும்படி, சாத்தானுடைய ஏதுகரங்களால் திட்டமிடப்பட்டிருக்கின்றன. நம்பக்கூடிய தோற்றமுள்ள சந்தேகங்களின் மூலமாக மனதைத் தடுமாறச் செய்யும்படி, கணக்கிட்டுத் திட்டமிடப்பட்ட அவிசுவாசப் போக்குகளினாலான புத்தகங்கள் எத்தனை! எத்தனை! சாத்தான் தனது விஷம்நிறைந்த மூச்சுக் காற்றை அவற்றின்மீது ஊதியிருக்கிறான்; அவற்றை வாசிக்கும் ஆத்துமாவைச் சாவுக்கேதுவான, ஆவிமார்க்க மலேரியா தொற்றிக்கொள்ளும்.

மனதைக் கற்பனைக் காட்சிகளினாலும், மூட எண்ணங்களினாலும் நிரப்புவதற்கு, உலகத்தில் எவ்வளவு திரளான கட்டுக்கதை வாசகங்கள் நிரம்பியிருக்கின்றன; இவ்விதமாகச் சத்தியம் மற்றும் நீதியின் வார்த்தை

களுக்கான வெறுப்பு உருவாக்கப்படுகிறது! தேவனுடைய பரதீசுக்கு உங்களை வழிநடத்தக்கூடிய வழிகாட்டிப் புத்தகமாயிருக்கிற வேதவாக்கியங்களைப் பொறுமையாக, விடாப்பிடியுடன் ஆராய்ச்சி செய்வதற்கும், பக்திவிநயமான சிந்தனைக்கும் இவ்விதமாகச் சிந்தையானது தகுதியிழந்துபோகிறது.

இவ்வுலகத்துக்குரிய செல்வம் பரலோகத்துக்குரிய கடவுச்சீட்டை நமக்கு வாங்கிக் கொடுத்துவிடுவதுபோல பூமிக்குரிய பொக்கிஷத்தை அடைவது சம்பந்தமாக ஏராளம் எழுதப்பட்டிருக்கிறது. மேன்மையான தேசத்திற்கு வழிநடத்தக்கூடிய பாதையின்மீது ஒரு சிறு மினுக்கொளியையும் வீசிடாத ஜீவியங்களை உடைய மனிதர்களின் தீரமிக்க, துணிச்சலான சாதனைகள் நிரம்பிய சரித்திரத் தொகுதிகள் எவ்வளவோ எழுதப்பட்டிருக்கின்றன!

## வழிவிலக்கும் புத்தகங்கள்

வாலிபர்களை வழிவிலக்குகிற, போர் மற்றும் இரத்தஞ்சிந்துதல் சம்பந்தமான புத்தகங்கள் எத்தனை! எத்தனை! அவர்கள் வாசிக்கும் வேளையில், அவர்கள் யாரைப்பற்றி வாசிக்கின்றனரோ அந்தப் போர்வீரனின் ஆவியை அவர்களில் தூண்டியெழுப்புவதற்குச் சாத்தான் அவர்கள் பக்கத்தில் நிற்கிறான், அவர்களது இரத்தம் அவர்களது நாளங்களில் கொதிப்படைகிறது, கொடூரச் செயல்களைச் செய்வதற்கு அவர்கள் தூண்டப்படுகின்றனர். அசுத்த விருப்பங்களுக்கு வழிநடத்தி, இருதயத்தின் வெறி உணர்ச்சிகளுக்குத் தீமூட்டி, தூய்மையும் பரிசுத்தமுமான சகலத்திலுமிருந்து வழிவிலக்குகிற ஒழுக்கக்கேடான புத்தகங்கள் எத்தனை எத்தனை!

பரலோக மன்றங்களில் ஒரு காலத்தில் உயர்த்தப்பட்ட தூதனாக இருந்தவனால் தூண்டிவிடப்பட்ட அதே காட்சிகளும், படங்களும் கொண்ட மாந்திரிகப் புத்தகங்களை நீங்கள் வைத்திருந்து இருக்கிறீர்கள்....

## சாத்தானின் சூனியக்கட்டை உடைத்தல்

மாந்திரிகப் புத்தகங்களைச் சுட்டெரிக்கலாமா? என்று நான் கேட்கிறேன். காமவிகாரம் ஆதரிக்கப்பட்டு, அனுபவிக்கப்படுகிற கவர்ச்சி கரமான இடங்கள் சாத்தானிய கூட்டத்தாரிடம் இருக்கின்றன; ஆயினும் அந்தகாரத்தில் செய்யப்படுகிற கிரியைகளைக் கண்ணோக்குகிற சாட்சி, காணக்கூடாத பார்வையாளன் ஒருவன் இருக்கிறான். வீணும், பெருமையும், களியாட்டும் நிறைந்த கூட்டங்களில் சாத்தான் தலைமை வகிக்கிறான், உல்லாசக் காட்சிகளில் அவன் பிரதான இயக்குனராக இருக்கிறான். அவன் மறைவானநிலையில் அங்கே இருக்கிறான். நம்மைச்சுற்றி ஒவ்வொரு பக்கத்திலும் பில்லிசூனியம் கிரியை செய்துவருகிறது. உலகமும் திருச்சபையும், தாங்கள் செய்வோம் என்று கனவிலும்கூட நினைத்திராத காரியங்களைச் செய்வதற்கு அவர்களை வழிநடத்தக்கூடிய ஒருவனுடைய செல்வாக்கின்கீழ்

இருக்கின்றன. அவர்கள் செய்யப்போகிற செயல்கள் அவர்களுக்கு அறிவிக்கப்படுமானால், தீர்க்கதரிசி ஆசகேலுக்கு அவனது எதிர்காலத்தைக் குறித்து அவனுக்குச் சொன்னபோது ஆச்சரியமடைந்ததுபோல, அவர்கள் ஆச்சரியமடைவார்கள்…

தேவனுடைய ஆவியானவரின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத ஒவ்வொரு ஆணும், பெண்ணும், குழந்தையும் சாத்தானுடைய பில்லி சூனியச் செல்வாக்கின்கீழ் இருக்கிறது; அவன் தனது வார்த்தைகள் மற்றும் மாதிரியினால், மற்றவர்களைச் சத்தியப் பாதையிலிருந்து வழிவிலகச் செய்திடுவான். கிறிஸ்துவின் மறுரூபமாக்கும் கிருபையானது இருதயத்தின்மீது இருக்கும்போது, பாவிக்குத் தேவன் அளித்திருக்கிற மாபெரும் இரட்சிப்பை அவன் நீண்டகாலமாகப் புறக்கணித்திருக்கிறபடியால், ஒரு நீதியுள்ள கோபம் ஆத்துமாவில் ஆளுகைசெய்யும். அப்பொழுது அவன் தன்னையும், சரீரம், ஆத்துமா, ஆவியையும் தேவனுக்கென்று அர்ப்பணிப்பான்; தேவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட கிருபையின் மூலமாக, சாத்தானின் தோழமை யிலிருந்து தன்னை விலக்கிக்கொள்வான். எபேசியர்களைப்போல, மாயவாதத்தை அவன் கண்டனஞ்செய்து, சாத்தானுடன் அவனைக் கட்டியிருக்கிற கடைசி நூலிழையையும் அறுத்துப்போடுவான். அந்தகாரப் பிரபுவின் கொடியின்கீழிருந்து அவன் விலகி, இளவரசர் இம்மானுவேலின் இரத்தக்கறைபடிந்த கொடியின்கீழ் அவன் வருவான். மாந்திரிகப் புத்தகங்களை அவன் சுட்டெரிப்பான்.—The Youth's Instructor, November 16, 1893.

## 90

# முறையான அறிவுக்குரிய ஆகாரம்

நமது பிள்ளைகள் என்ன வாசிக்கலாம்? என்பது ஒரு பொறுப்புணர்ச்சி வாய்ந்த கேள்வியாகும்; ஒளிவுமறைவற்ற ஒரு பதிலும் அதற்குத் தேவைப் படுகிறது. மனதின்மீது நன்மையைப் பதிக்காத தொடர்கதைகள் அடங்கிய பத்திரிகைகளும், செய்தித்தாள்களும் கிறிஸ்தவக் குடும்பங்களில் இருப்பதைக் கண்டு நான் வருந்துகிறேன். கற்பனைக்கதைக்கான விருப்பத்தை இவ்விதமாக வளர்த்துக்கொண்டவர்களை நான் பார்த்திருக்கிறேன். தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களைக் கவனித்துக்கேட்கிற, நமது விசுவாசத்திற்கான காரணகாரியங்களுடன் அறிமுகமாகிக் கொள்கிற சிலாக்கியத்தை அவர்கள் பெற்றிருந்திருக்கின்றனர்; ஆயினும் அவர்கள் மெய்யான பக்தியில்லாதவர்களாக முழுவளர்ச்சி அடைந்திருக்கின்றனர்.

இத்தகைய பிரியமான வாலிபர்கள் தங்களுடைய குணக்கட்டுமானத் திற்குள்—அன்பு, தேவபயம் மற்றும் கிறிஸ்துவைப் பற்றிய அறிவு—எனும் மிகச்சிறந்த மூலப்பொருளை மிகவும் அதிகமாகப் போட வேண்டியதிருக்கிறது. ஆயினும் இயேசுவில் இருக்கிறபடியே சத்தியத்தைக் குறித்ததான அறிவுப் பூர்வமான புரிந்துகொள்ளுதல் அநேகரிடத்தில் இல்லை. பரபரப்பான உணர்ச்சியூட்டும் கதைகளின்மீது மனம் தோய்ந்து மகிழ்கிறது. அவர்கள் கற்பனை உலகத்தில் வாழ்கின்றனர், வாழ்வின் அன்றாடக் கடமைகளுக்கான தகுதியிழந்து போகின்றனர்.

## கட்டுக்கதைகளை வாசிப்பதன் விளைவுகள்

சிறுபிள்ளைகள் இவ்விதமாக வளர்வதற்கு அனுமதிக்கப்படுவதை நான் கவனித்திருக்கிறேன். வீட்டிலோ அல்லது வெளியிலோ, அவர்கள் அலைவுறும் மனதுள்ளவர்களாகவும், கனவு காண்கிறவர்களாகவும், வழக்கிலுள்ள சர்வசாதாரண தலைப்புகளைப்பற்றி பேசி மகிழக்கூடாதவர்களாகவும் இருக்கின்றனர். மாமேன்மையான குறிக்கோள்களைத் தழுவவேண்டிய உயர்ந்த மனோசக்திகள் அற்பமான பாடப்பொருள்களை அல்லது அதைவிட மோசமானதைச் சிந்திக்குமளவுக்கு இழிநிலை அடைந்திருக்கின்றன; அவற்றைக் கொண்டிருப்பவர் அப்படிப்பட்ட தலைப்புகளுடன் திருப்தியடைந்து, எந்த உயர்நிலையையும் எட்டுவதற்கும் வல்லமை குன்றியவராகிவிடுகிறார். ஆன்மீகச் சிந்தனையும், உரையாடலும் சுவையற்றதாகிவிடுகிறது.

அறிவுக்குரிய ஆகாரத்துக்காக அவர்கள் பெற்றிருக்கிற விருப்பார்வம் அதன் விளைவுகளில் கறைப்படுத்துகிறதாயிருந்து, தூய்மையற்ற, சிற்றின்பப் பிரியமுள்ள எண்ணங்களுக்கு வழிநடத்துகிறது. நமது நித்திய வாழ்வின் நம்பிக்கைகளுக்கெல்லாம் மையமாயிருக்கிற கிறிஸ்துவை அறிகிற அறிவை அடைகிற வாய்ப்புகளைப் புறக்கணிப்பதால் அவர்கள் எவ்வளவு இழப்பு அடைகிறார்கள் என்று எண்ணும்போது, அந்த ஆத்துமாக்களுக்காக நான் மிகவும் பரிதாபங்கொள்ளுகிறேன். மெய்யான நற்குணத்தின் மாதிரி யானவரைக்குறித்து ஆராய்வதில் செலவிடப்பட வேண்டிய அருமையான நேரம் எவ்வளவாக வீணடிக்கப்படுகிறது.

தவறான வாசிப்புப் பழக்கங்களின் மூலமாக ஆரோக்கியமான மனத்திட்பத்தை இழந்திருக்கிற சிலருடன் நான் தனிப்பட்டமுறையில் அறிமுகமாகியிருக்கிறேன். ஒவ்வொரு சிறுசிறு மனக்குறையையும் பெரிய தாக்குகிற நோய்பிடித்த மனோசக்தியுடன் அவர்கள் வாழ்கின்றனர். ஆரோக்கியமான, விவேகமுள்ள மனம் கண்டுகொள்ள விரும்பாதவைகள் அவர்களுக்குச் சகிக்கமுடியாத துன்பங்களாகவும், சமாளிக்க முடியாத

இடையூறுகளாகவும் மாறிவிடுகின்றன. அவர்களுக்கு வாழ்க்கை தொடர்ச்சி யான இருட்டடிப்புள்ளதாக இருக்கிறது.

கிளர்ச்சியூட்டும் கதைகளை முழநிறை வேகத்துடன் வாசிக்கும் பழக்கத்தில் ஈடுபடுகிறவர்கள் தங்களது அறிவுக்குரிய ஆற்றலை முடக்கி, உறுதிவாய்ந்த எண்ணம் மற்றும் ஆராய்ச்சிக்குத் தங்களையே தகுதியிழக்கச் செய்துகொள்கின்றனர். வரம்புகடந்த வாசிப்பின் விளைவுகளிலிருந்து ஒருபோதும் மீண்டுவர இயலாமல், வாழ்வில் வீழ்ச்சி கண்ட ஆண்களும், பெண்களும் இப்பொழுது இருக்கின்றனர்.

ஆரம்ப வருடங்களில் அமையப்பெற்ற பழக்கமானது, அவர்களது வளர்ச்சியுடன் வளர்ந்து, அவர்கள் பெலனடைந்தபோது அதுவும் பெல னடைந்திருக்கிறது; அதை மேற்கொள்வதற்கான அவர்களது முயற்சிகள் தீர்மானிக்கப்பட்டிருந்தும், பாதி வெற்றியை மட்டுமே அடைந்திருக்கின்றன. அநேகர் தங்களது தொடக்க முதலேயுள்ள மன உறுதியை ஒருபோதும் திரும்பப் பெறவில்லை. நடைமுறைக் கிறிஸ்தவர் களாக மாறுவதற்கான அனைத்து முயற்சிகளும் வாஞ்சையாய் மட்டுமே முடிவடைந்துவிடுகின்றன. அவர்கள் மெய்யாகவே கிறிஸ்துவைப் போன்றிருந் தால், இவ்வகையான இலக்கியத்தைத் தொடர்ந்து மனதில் திணிக்கமாட்டார்கள்.

சரீரரீதியாக ஏற்படும் கேடும் கொஞ்சநஞ்சமல்ல. வாசிப்புக்கான இவ்விதத் தீவிர உணர்ச்சியினால் நரம்பு மண்டலத்தின்மீது அவசியமின்றிக் கடும்பளுச் சுமத்தப்படுகிறது. சில வேளைகளில் வாலிபர்களும், வயது முதிர்ந்தவர்களும்கூட, அளவுக்குமீறிய வாசிப்பைவிட வேறுகாரணம் எதுவுமின்றிப் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்திருக்கின்றனர். மூளை எனும் நேர்த்தியான எந்திரம் செயல்படக் கூடாத அளவுக்கு மிகவும் பெலவீனமாகும் வரைக்கும், தொடர்ச்சியான தூண்டுதலின்கீழ் மனம் வைக்கப்பட்டிருந்தால், பக்கவாதம் விளைவாக இருந்தது.

## மனரீதியான போதைக்காரர்கள்

கிளர்ச்சியூட்டுகிற, உணர்ச்சி தூண்டுகிற கதைகளுக்கான ஆவல் வளரும்போது, ஒழுக்கச் சுவை தவறிப்போகிறது, இந்தக் குப்பைகூளமான, ஆரோக்கியமற்ற ஆகாரத்தைத் தொடர்ந்து திணிக்காவிட்டால் மனம் திருப்தியற்றுப்போகிறது. தங்களது கைகளில் ஏதாவதொரு புதிய நாவல் அல்லது கதை இதழ் இல்லாவிட்டால், நிஜமாகவே மகிழ்ச்சியற்றிருக்கிற கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று சொல்லிக்கொள்கிற இளம்பெண்களை நான் கண்டிருக்கிறேன். குடிகாரன் போதையூட்டும் பானத்தை நாடுவதுபோல மனம் தூண்டுதலை நாடுகிறது. இத்தகைய வாலிபர்கள் பக்தியின் ஆவியை வெளிக்காட்டவில்லை; அறிவின் ஊற்றுக்கு அவர்களை வழிநடத்திட

அவர்களது நண்பர்கள்மீதும் பரலோக வெளிச்சம் பாய்ச்சப்படவில்லை. அவர்களிடம் ஆழமான, ஆன்மீக அனுபவம் இல்லை. இவ்வகையான வாசிப்புத் தொடர்ந்து அவர்களுக்கு முன்பாக இல்லாமல் இருந்தால், அவர்கள் சீர்பொருந்துவதற்கான ஏதாவதொரு நம்பிக்கை இருந்திருக்கும்; ஆனால் அவர்கள் அதையே ஆவலுடன் நாடினார்கள், அதையே அடைந்தார்கள்.

வாலிப ஆண்களும், பெண்களும் இவ்வாழ்வில் இவ்விதமாகத் தங்களது பயன்பாட்டைக் கெடுத்துக் கொள்வதையும், பரலோக சமுதாயத்தில் நித்திய வாழ்வுக்காகத் தங்களை ஆயத்தப்படுத்துகிற ஒரு அனுபவத்தை அடையத் தவறுவதையும் கண்டு நான் வேதனைப்படுகிறேன். “மனரீதியான போதைக்காரர்கள்” என்பதைவிட வேறொரு பொருத்தமான பெயரை அவர்களுக்காக நாம் கண்டுபிடிக்கமுடியாது.

புசிப்பிலும், குடிப்பிலும் இச்சையடக்கமின்மையானது மூளையின்மீது நிச்சயமான ஒரு கேடுண்டாக்கும் செல்வாக்கை ஏற்படுத்துவதுபோல, வாசிப்பதிலுள்ள மட்டுமீறிய பழக்கங்களும் ஏற்படுத்தும்.

### பரிகாரம்

மனதை முழுவதும் ஈடுபடுத்திக்கொள்வதே தீமையின் வளர்ச்சியைத் தடுப்பதற்கான சிறந்த வழியாகும். மனதை வளர்ப்பதிலும், வேத சத்தியத்தின் விலையேறப்பெற்ற விதைகளை அதில் விதைப்பதிலும் மாபெரும் கவனமும், விழிப்பும் அவசியப்படுகிறது. கர்த்தர் தமது பெரிய இரக்கத்தினால் பரிசுத்த வாழ்வுக்குரிய நெறிமுறைகளை வேதவாக்கியங்களில் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்….

வழியில் சூழ்ந்திருக்கும் அபாயங்கள் மற்றும் அவற்றிலிருந்து தப்புவது எப்படி என்பது சம்பந்தமான போதனையை நமது நன்மைக்காகப் பதிவுசெய்து வைப்பதற்குப் பரிசுத்த மனிதர்களை அவர் ஏவியெழுப்பி இருக்கிறார். வேதவாக்கியங்களை ஆராய்வதற்கான அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவர்கள் இக்காரியங்களைக் குறித்த அறிவில்லாதவர்களாக இருக்கமாட்டார்கள். கடைசிநாட்களின் கொடுமைகளுக்கு மத்தியில், சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் தன்னுடைய நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்குரிய காரணங்களை—விளங்கிக் கொள்வதற்குக் கடினமாயிராத காரணங்களைப் புரிந்திருக்க வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அறிவிலும், கிருபையிலும் நாம் வளர்ந்திட விரும்புவோமானால், மனதை நிரப்புவதற்குப் போதுமானது இருக்கிறது.—Christian Temperance and Bible Hygiene, pp. 123-126. (1890.)

**பாவத்தின் முதல் படிகள்**

கிறிஸ்தவன் பகிரங்கப் பாவத்தைச் செய்யும்முன்பாக உலகம் அறியாதவிதத்தில் ஒரு நீண்ட ஆயத்த நடவடிக்கை இருதயத்தில் தொடர்ந்து நிகழ்கிறது. தூய்மை மற்றும் பரிசுத்தத்திலிருந்து ஒழுக்கக் கேட்டுக்கும், அசுத்தத்துக்கும், குற்றத்துக்கும் மனமானது உடனடியாக இறங்கி வந்துவிடுவதில்லை. தேவசாயலில் படைக்கப்பட்டவர்களை மிருகத்தன்மை அல்லது பிசாசுத்தன்மை உள்ளவர்களாக்குவதற்கு நேரம் எடுக்கிறது. காண்பதினால், நாம் மாறுகிறோம். அசுத்த எண்ணங்களுக்கு அனுமதி யளிப்பதினால், மனிதன் ஒருகாலத்தில் வெறுத்தப் பாவமானது அவனுக்கு இனிமையானதாக மாறுமளவுக்கு அவன் தனது மனதைப் பயிற்றுவிக்க முடியும்.—Patriarchs and Prophets, p. 459.

# 91

# வேதாகமம்—மிகவும் சுவாரஸ்யமான புத்தகம்

வயோதிபரும் வாலிபரும் வேதத்தை அசட்டை செய்கின்றனர். அவர்கள் அதனைத் தங்கள் ஆராய்ச்சியாகவும், வாழ்வின் சட்டமாகவும் ஆக்கிக்கொள்கிறதில்லை. விசேஷமாக வாலிபர்கள் இந்தப் புறக்கணிப்புக் குற்றத்துக்குரியவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் அநேகருக்கு மற்ற புத்தகங்களை வாசிப்பதற்கு நேரம் இருக்கிறது, ஆனால் நித்திய வாழ்வுக்கான வழியைச் சுட்டிக்காட்டுகிற புத்தகம் தினமும் படிக்கப்படுவதில்லை. வேதாகமம் புறக்கணிக்கப்படுகிறபோது, பயனற்ற வகையில் பொழுதைப் போக்கும் கதைகள் கருத்துடன் வாசிக்கப்படுகின்றன. மேன்மையான, பரிசுத்தமான வாழ்வுக்கான நமது வழிகாட்டியாக இப்புத்தகம் இருக்கிறது. கற்பனைக் கதைகளை வாசிப்பதினால் வாலிபர்கள் தங்களது கற்பனாசக்தியைத் தவறான வழியில் செலுத்தாதிருந்தால், அவர்கள் வாசித்ததிலேயே மிகவும் சுவாரஸ்யமான புத்தகம் வேதமே என்று அவர்கள் கூறுவார்கள்.

வாலிப மனங்கள் தேவனுடைய வார்த்தை எனும் ஞானத்தின் மிக உயர்ந்த மூலாதாரத்தைப் புறக்கணிக்கும்போது, தங்களது உயர்தரமான முன்னேற்றத்தை அடைவதிலிருந்து தவறிவிடுகின்றன. நாம் தேவனுடைய உலகத்தில், சிருஷ்டிகளின் பிரசன்னத்தில் இருக்கிறோம் என்பதும், நாம் அவரது சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதும், அவர்

நம்மைக் கண்காணிக்கிறார், நேசிக்கிறார், பராமரிக்கிறார் என்பதும் நமது சிந்தனைக்கான, மனதை அகன்ற, உயர்ந்த தியானக் களங்களுக்குள்ளாகக் கொண்டுசெல்கிற ஆச்சரியமான கருப்பொருள்களாகும். இப்படிப்பட்டக் கருப்பொருட்களின் தியானத்திற்கு மனதையும், இருதயத்தையும் திறக்கிறவர் அற்பமான, உணர்ச்சியூட்டுகிற விஷயங்களால் ஒருபோதும் திருப்தியடைய மாட்டார்.

வேதவாக்கியங்களின் முழுமையான அறிவை அடையத் தேடுவதின் முக்கியத்துவத்தை எளிதில் மதிப்பிட இயலாது. "தேவ ஆவியினால் அருளப்பட்டு" நம்மை "இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ள"வர்களாக்குகிற, தேவனுடைய மனுஷனைத் "தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படிச்" செய்கிற வேதாகமம் நமது பக்திவிநயமானகவனத்தைப்பெறும்உயர்வானஉரிமைஉடையதாயிருக்கிறது. ஒரு மேலோட்டமான அறிவுடன் நாம் திருப்தியடைந்துவிடக்கூடாது. மாறாக, சத்திய வார்த்தைகளின் முழு அர்த்தத்தைக் கற்றுக்கொள்ளவும், பரிசுத்த வேதவாக்கியங்களின் மெய்ப்பொருளின் ஆழத்தைப் பருகவும் வகைதேட வேண்டும்.—Counsels to Teachers, Parents, and Students, pp. 138, 139.

## பாவத்தின் விளக்க வர்ணனை

பணம் பண்ணும் திட்டமாக அச்சடிக்கப்பட்டு, விநியோகிக்கப்படுகிற பரபரப்பூட்டும் தலைப்புகள் கொண்ட புத்தகங்கள் வாலிபர்களால் ஒருபோதும் வாசிக்கப்படாதிருந்தால் நலமாயிருக்கும். அப்படிப்பட்ட புத்தகங்களில் ஒரு சாத்தானிய வசீகரம் இருக்கிறது. குற்றங்கள் மற்றும் அராஜகங்கள்குறித்த மனத்தளர்வூட்டும் உரத்த வாசிப்பானது அநேகரைக் கவர்ந்திழுக்கும் சக்தியுடையதாயிருக்கிறது, துன்மார்க்கமான செயல்களினாலும்கூடத் தங்களைப் பிரபலநிலைக்குக் கொண்டுவருதற்குத் தங்களால் இயன்றதைச் செய்யுமாறும் அவர்களைத் தூண்டுகிறது. சில திட்டவட்டமான சரித்திரப் புத்தகங்களில் வர்ணிக்கப்பட்டுள்ள அயோக்கியத்தனங்கள், கொடுமைகள், காமவிகார நடவடிக்கைகள் பலருடைய மனங்களில் புளித்தமாவைப் போலக் கிரியைசெய்து, அதேவிதமான கிரியைகளைச் செய்வதற்கு அவர்களை வழிநடத்தியிருக்கிறது.

மனிதர்களின் சாத்தானியச் செயல்பாடுகளை விவரிக்கிற புத்தகங்கள் தீமைக்கு விளம்பரத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இத்தகைய பயங்கரமான குறிப்புகளைப் பின்பற்றி வாழவேண்டிய அவசியமில்லை, இக்காலத்திற்குரிய சத்தியத்தை விசுவாசிக்கிற எவரும் அவற்றை நினைவில் நிறுத்துகிற பங்கை ஆற்றக் கூடாது. துன்மார்க்கத்திற்கு இட்டுச் செல்லும் இவ்வுணவினால் அறிவாற்றல் போஷிக்கப்பட்டுத் தூண்டப்படும்போது,

எண்ணங்கள் தூய்மையிழந்து, சிற்றின்ப நாட்டமுள்ளவைகளாகி விடுகின்றன.—Counsels to Teachers, Parents, and Students, pp. 133, 134.

## 92

# ஆத்துமத்தின் வாசல்களை நன்றாய்க் காத்துக்கொள்

"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்" என்பது ஞானியின் ஆலோசனை. "அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்." மனுஷனின் "இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்." தெய்வீகக் கிருபையினால் இருதயமானது புதுப்பிக்கப்பட வேண்டும் அல்லது வாழ்வின் தூய்மையை அடையத்தேடுவது வீணானதாயிருக்கும். கிறிஸ்துவின் கிருபையைச் சாராமல் ஓர் உயர்தரமான, ஒழுக்கத் தன்மையுள்ள குணத்தைக் கட்ட முயற்சிக்கிறவன் நிலையில்லாத மணலின்மீது தனது வீட்டைக் கட்டுகிறான். சோதனை எனும் பலத்த புயற்காற்றுகள் வீசுகையில், நிச்சயமாக அது கவிழ்க்கப்பட்டுப்போம். "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்," என்ற தாவீதின் ஜெபம் ஒவ்வொரு ஆத்துமாவின் வேண்டுதலாக இருக்கவேண்டும். பரம ஈவுக்குப் பங்குள்ளவர்களானபின், "விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறவர்களாக" பூரணமாகுதலை நோக்கி நாம் கடந்துபோக வேண்டும்.

ஆயினும் சோதனையை எதிர்த்துநிற்பதற்கு நாம் செய்யவேண்டிய பணி ஒன்று இருக்கிறது. சாத்தானின் தந்திரங்களுக்கு இரையாக விழ விரும்பாதவர்கள் ஆத்துமத்தின் வாசல்களை நன்றாய்க் காத்துக்கொள்ள வேண்டும்; அசுத்த எண்ணங்களை எழுப்புகிற எதையும் வாசிப்பதையோ, பார்ப்பதையோ அல்லது கேட்பதையோ அவர்கள் தவிர்க்க வேண்டும். ஆத்துமாக்களின் எதிரியானவன் சுட்டிக்காட்டுகிற ஒவ்வொரு பாடப்பொருளின் மீதும் அங்கொன்றும் இங்கொன்றுமான முறைமையில் அலைவதற்கு மனதை விட்டுவிடக்கூடாது. "நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, .... நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல் ... உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும்

உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்” என்று அப்போஸ்தலன் பேதுரு கூறுகிறார். “…உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ள வைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவை களெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்” (பிலி. 4:8) என்று பவுல் கூறுகிறார். இதற்கு ஊக்கமான ஜெபமும் இடைவிடாத விழிப்பும் தேவை. பரிசுத்த ஆவியானவரின் நிலைத்திருக்கும் செல்வாக்கினால் நாம் ஒத்தாசைபெற வேண்டும்; அவரே மனதை மேல்நோக்கிக் கவர்ந்திழுத்து, தூய்மையான, பரிசுத்தமான காரியங்களில் அதைத் தங்கச் செய்திடப் பழக்கப்படுத்துவார். தேவனுடைய வார்த்தையை நாம் கவனமாக ஆராய்ந்திட வேண்டும். “வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே… நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்” (சங். 119:9,11) என்று சங்கீதக்காரன் கூறுகிறான்.—Patriarchs and Prophets, p. 460.

### பதரும் கோதுமையும்

பிரியமான வாலிபர்களே, கதைகள் அடங்கியுள்ள பத்திரிகைகளை வாசிப்பதை நிறுத்துங்கள். ஒவ்வொரு நாவலையும் அகற்றுங்கள்… சாத்தானிய ஏதுகரங்களால் உருவாக்கப்பட்ட உருவமைப்புகள், கேலிக்குரிய சித்திரங்கள் அடங்கிய கதைப் புத்தகங்கள், வெளியீடுகள் அனைத்தும் நமது வீடுகளிலிருந்து அகற்றப்பட்டால் நன்றாயிருக்கும். அப்படிப்பட்ட காரியங்களினால் வாலிபர்கள் தங்களது மனங்களை விஷப்படுத்தக் கூடாது. “கோதுமைக்குமுன் பதர் நிற்குமா?” கிறிஸ்துவின் பின்னடியார் என்று கூறும் ஒவ்வொருவரும் உண்மையும், நித்திய மதிப்புடையவைகளை மட்டுமே வாசிப்பார்களாக.

மிகவும் பக்திவிநயமான கடமைகளுக்கு நம்மைநாமே ஆயத்தப் படுத்தவேண்டும். உலகம் இரட்சிக்கப்பட வேண்டியதிருக்கிறது… செய்யப்பட வேண்டியிருக்கிற மாபெரும் பணியை முன்வைத்து நோக்கினால், தனது சிறந்த நன்மைக்கோ, தேவனுடைய மகிமைக்கோ இல்லாத அத்தகைய காரியங்களைச் செய்வதில் விலையேறப்பெற்ற நேரத்தையும், தேவன் கொடுத்துள்ள பணத்தையும் வீணடிப்பதற்கு எப்படி ஒருவர் முயலக்கூடும்? —The Youth's Instructor, August 14, 1906.

93

# கிறிஸ்தவக் குணத்தைக் கட்டியெழுப்புதல்

(இது சகோதரி உவைட் தனது கடைசி பெலவீன வேளையில், நமது வாலிபர்களுக்குக்காகத் தந்த கடைசித் தூது.)

நமது வாலிபப்பிள்ளைகளால் ஏறிட்டுப் பார்க்கப்படாத மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த புத்தகங்கள் இருக்கின்றன. சில அற்பமான புத்தக வாசிப்பைப்போல அவைகள் மிக சுவாரஸ்யமாக இல்லாததால், அவைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

கிறிஸ்தவக் குணத்தை உயர்த்திப் பிடிப்பதற்காகப் பரிந்துரை செய்கிற அப்படிப்பட்ட வாசிப்புக் காரியத்தைப் பற்றிக்கொள்ளுமாறு வாலிபர்களுக்கு நாம் அறிவுறுத்தவேண்டும். நமது விசுவாசத்திற்குரிய மிகவும் முக்கியமான வாதங்கள் வாலிபர்களின் நினைவில் பதிக்கப்படவேண்டும். இந்த சத்தியங்களைக் குறித்த ஒரு மின்னல்வேகப் பார்வை அவர்களுக்கு உண்டு, ஆயினும் அவற்றைப் பிரியத்துடன் படிக்குமளவுக்கு அவர்களை நடத்துகிற அப்படிப்பட்ட பழக்கம் அவர்களுக்கு இல்லை. மனதின்மீது ஆரோக்கியம் நிறைந்த, பரிசுத்தமாகுதலின் தாக்கத்தை ஏற்படுத்துகிறவற்றை நமது வாலிபர்கள் வாசிக்கவேண்டும். எது உண்மையான பக்தி என்பதைப் பகுத்தறிவதற்கு இது அவர்களுக்கு அவசியமாய் இருக்கிறது. பரிசுத்தமாக்காத மிகுந்த நன்மையான வசாகமும் இருக்கவே செய்கிறது.

வாலிபப்பிள்ளைகளுக்காக உழைக்கிற காலமும், வாய்ப்பும் இதுவே ஆகும். நாம் இப்பொழுது கொடிய நெருக்கடியில் இருக்கிறோம் என்பதையும், மெய்யான தேவபக்தியை எப்படிப் பகுத்தறிவது என்பது பற்றி நாம் அறிந்திடவேண்டும் என்பதையும் அவர்களுக்குச் சொல்லுங்கள். நமது வாலிபப் பிள்ளைகளுக்குச் சரியானவிதத்தில் உதவிசெய்து, உயர்த்திப் பிடித்து, ஊக்கப்படுத்த வேண்டியது அவசியமாயிருக்கிறது; ஒருவேளை அவர்கள் விரும்புகிறவிதமாக இல்லாவிட்டாலும்கூட, பரிசுத்தமாக்கப்பட மனங்களை அடைவதற்குரிய விதத்தில் அவர்களுக்கு உதவியளிக்கப்படவேண்டும். வேறு எதையும் விட நன்மையான, பரிசுத்தமாக்குகிற பக்தியே அவர்களுக்கு அதிகம் தேவையாயிருக்கிறது.

நீண்டகாலம் வாழ்வதற்கு நான் எதிர்பார்க்கவில்லை. எனது பணி ஏறக்குறைய முடிந்துவிட்டது. பரலோக அறிவுஜீவிகளுக்கு மகிவும்

கவர்ச்சிகரமானதாக அவர்கள் வாழும் விதமும், பிறர்மீதான அவர்களது செல்வாக்கு மிகவும் உயர்த்துகிறதாகவும் இருப்பதற்கு ஊக்கப்படுத்தும்படி என் வார்த்தைகள் இருக்கவேண்டும் என்பதை நமது வாலிபர்களுக்குச் சொல்லுங்கள்.

## தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புமுறை பரிந்துரைசெய்யப்படுதல்

இராத்தரிசனத்திலே வாலிபர்களுக்குப் பயன்படாத புத்தகங்களை நான் தெரிந்தெடுத்துப் புறம்பாக வைத்துக்கொண்டிருந்தேன். வாழ்வில் உண்மையாயிருத்தலுக்கு அவர்களை ஊக்கப்படுத்தி, வார்த்தையைத் திறப்பதற்கு அவர்களை வழிநடத்துகிற புத்தகங்களை அவர்களுக்காக நாம் தெரிந்தெடுக்க வேண்டும். கடந்தகாலத்தில் இது எனக்குக் காட்டப் பட்டிருக்கிறது, நான் அதை உங்களுக்குமுன்பாகக் கொண்டுவந்து, அதைத் தக்கவைத்திடவேண்டும் என்று நினைத்தேன். மதிப்பில்லாத புத்தவாசிப்பை நாம் வாலிபர்களுக்குக் கொடுக்கக்கூடாது. மனதுக்கும், ஆத்துமாவுக்கும் ஆசீர்வாதமாக இருக்கிற புத்தகங்கள் தேவைப்படுகின்றன. இக்கரியங்கள் மிகவும் அற்பமாய் எண்ணப்படுகின்றன; ஆகையால் நமது மக்கள் நான் என்ன சொல்கிறேன் என்பதுடன் அறிமுகமானவர்களாக வேண்டும்.

நமது மக்களுக்காக அதிகமான சாட்சியாகமங்களை இனிமேல் கொடுப்பேன் என்று எனக்குத் தோன்றவில்லை. ஊழியத்தை உயர்த்திக் கட்டியெழுப்புவதற்கு எது சிறந்தது என்பதை திடமனம் கொண்ட நமது மனிதர்கள் அறிந்திருக்கின்றனர். ஆயினும் தங்கள் இருதயங்களில் தேவ அன்புடன் தேவனுடைய காரியங்களை ஆராய்வதில் அவர்கள் ஆழத்தின்மேல் ஆழம் காணுதல் அவசியம். நமது வாலிபர்கள் முறையான வாசிப்பு வகையைப் பெற்றிருக்க வேண்டும் என்பது குறித்து மிகவும் அக்கறையோடு இருக்கிறேன்; பின்னர் வயோதிபர்களும் அதைப் பெற்றுக்கொள்வார்கள். சத்தியத்தின் பக்திவிநயமான கவர்ச்சியின்மீது நமது கண்களை நாம் பதிக்கவேண்டும். தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களுக்கு மனதையும், மூளையையும் நாம் திறந்துவைக்கவேண்டும். மனிதர்கள் அஜாக்கிரதையாயிருக்கும்போது சாத்தான் வருகிறான். எச்சரிப்பின் தூது ஒருமுறை கொடுக்கப்பட்டுவிட்டது என்பதால் நாம் திருப்தியடைந்துவிடக்கூடாது. நாம் அதைத் திரும்பத் திரும்பக் கொடுக்கவேண்டும்.

அநேக மனங்களைக் கவர்ந்திழுத்து, தூண்டிவிடுகிற மிகத்தீவிர சுவாரஸ்யமிக்க ஒரு வாசிப்பு முறையை நாம் தொடங்கவேண்டும். மேலும் பணிசெய்ய நான் உயிரோடு விடப்பட்டால், வாலிபர்களுக்காகப் புத்தகங்கள் ஆயத்தம்செய்வதற்கு நான் சந்தோஷமாக உதவவேண்டும்.

தேவனுடைய பரிசுத்தமாக்கும் சத்தியத்தினால் வாலிபர்களின் மனங்களில் முத்திரை பதித்து, வனையக்கூடியதான பணி ஒன்று அவர் களுக்காகச் செய்யப்பட வேண்டியதிருக்கிறது. நித்திய வாழ்வுக்கு வாலிபர் களை ஆயத்தப்படுத்துகிறதான விசுவாசத்தினால் நீதிமானாகுதல் மற்றும் குணாதிசயப் பூரணத்துவம் ஆகிய சத்தியங்களின் மெய்யான பொருளை நமது வாலிபர்கள் கண்டடைய வேண்டும் என்பதே எனது மனமார்ந்த ஆவல். நீண்டகாலம் வாழ்வதற்கு நான் எதிர்பார்க்கவில்லை. வாலிபர்கள் வைக்கும் குறிக்கோள் தோல்வியடையாது என்ற செய்தியை நான் அவர்களுக்காக விட்டுச் செல்கிறேன்.

தேவனுடைய கிருபையும் அதன் அருமையையும் எப்பொழுதும் உயர்வானதாக மதிக்கும்படி வாலிபர்களை ஊக்கப்படுத்துமாறு எனது சகோதரர்களுக்கு நான் புத்திகூறுகிறேன். உண்மையான பக்தியின் அருமையைக்குறித்த உணர்வுக்காகத் தொடர்ச்சியாக உழைக்கவும், ஜெபிக்கவும் வேண்டும். தேவனுடைய கிருபை மற்றும் பரிசுத்தத்தின் கவர்ச்சிகரத்தன்மையையும், ஆசீர்வாதத்தையும் புதிதாகக் கொணர்ந்திட வேண்டும். இது அசட்டைசெய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிந்துள்ள படியால் இது சம்பந்தமான ஒரு பாரத்தை நான் உணர்ந்தேன்.

எனது வாழ்வு நெடுநாள் நீடிக்கும் என்ற நிச்சயம் எனக்கு இல்லை, ஆயினும் நான் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவள் என்பதை நான் உணருகிறேன். கிறிஸ்தவர்கள் எனச் சொல்லிக்கொள்ளப்படுகிறவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற வாழ்வின் தாழ்ந்த தரங்களை நான் எடுத்துக் காட்டியிருக்கிறபடியால் நான் எவ்வளவாகப் பாடுபட்டிருக்கிறேன் என்பதை அவர் அறிவார். சத்தியம் என் வாழ்வில் காணப்படவேண்டும். எனது சாட்சி மக்களிடம் போய்ச்சேர வேண்டும் என்பது அவசரமானது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். அயல்நாடுகளிலுள்ள மக்களின் கரங்களில் எனது புத்தகங்கள் வைக்கப்படுவதற்கு உங்களால் இயன்ற அனைத்தையும் நீங்கள் செய்யவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அநேக ஆவிக்குரிய நன்மைகளை நீங்கள் பெற்றிருந்திருக்கிறீர்கள் என்று வாலிபர்களுக்குச் சொல்லுங்கள். ஜனங்களுக்கு முன்பாகச் சத்தியத்தைக் கொண்டுசெல்ல அவர்கள் அக்கறைமிக்க முயற்சிகள் செய்யவேண்டுமென தேவன் விரும்புகிறார். இத்தகைய காரியங்களைக் கூறுவது எனது விசேஷித்தக் கடமை என்று எனக்கு உணர்த்தப்பட்டது. —Fundamentals of Christian Education, pp. 547–549.

94

# கட்டுக்கதையின் தாக்கம்

"என் பாடத்தைப் படிக்க எனக்கு நேரமில்லை" என்று வாலிபர்களில் அநேகர் கூறுகின்றனர். ஆனாலும் அவர்கள் என்ன செய்கின்றனர்? சில நாணயங்களை அதிகமாகச் சம்பாதிப்பதற்குச் சிலர் ஒவ்வொரு நொடியிலும் ஒருமித்துக் கூடுகின்றனர். உழைப்பிற்குப் போகிற இந்த நேரமானது, வேத ஆராய்ச்சிக்குக் கொடுக்கப்பட்டால், அதன் பாடங்களை அவர்கள் கடைபிடித்தால், அதிகநேரப் பணியினால் பெறப்பட்ட தொகையைவிடவும் அதிகமானதைச் சேமித்து வைப்பார்கள். அவசியமற்ற ஆபரணங்களுக்குச் செலவழிக்கப்படுவதை அது தடுத்து, வேதபக்தியின் இரகசியத்தைப் புரிந்துகொள்வதற்கும் மன உறுதியைத் தக்கவைக்கும். "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்."

ஆனால் கிறிஸ்தவர்கள் என்று கூறும் அதே வாலிபர்கள் தங்களது சொந்தப்போக்குகளைப் பின்பற்றி, மாம்ச இருதயத்தின் விருப்பங்களைத் திருப்திசெய்துகொள்கின்றனர்; வேதாகமத்தின் விலையேறப்பெற்ற சத்தியங் களுடன் அறிமுகமாவதற்காக அவர்களுக்குத் தேவனால் கொடுக்கப் பட்டிருக்கிற தவணையின் காலமானது கட்டுக்கதைகளை வாசிப்பதற்கு அர்ப்பணிக்கப்படுகிறது. ஒருமுறை நிறுவப்பட்டுவிட்ட இந்தப் பழக்கத்தை மேற்கொள்வது கடினமாயிருக்கும்; ஆயினும் அதை மேற்கொள்ள முடியும், பரலோகத்தின் பிரஜைகளாக இருக்கிற யாவராலும் இது மேற்கொள்ளப்பட்டாக வேண்டும்.

கதைவாசிப்பில் மூழ்குவதற்கு அனுமதிக்கப்பட்ட மனம் அழிந்துபோகும். கற்பனாசக்தி நோயுற்றதாகிறது, உணர்ச்சிவயப்பட்ட தன்மை மனதை ஆளுகைசெய்கிறது. மனதைத் தொடர்ந்து சமநிலையிழக்கச் செய்கிற ஆரோக்கியமல்லாத மனரீதியான ஆகாரத்துக்கான ஒரு விளங்காத ஆர்வமும், உறுதியற்ற மன உலைவும் உண்டாகிறது. மனக்கோட்டை கட்டுதல் மற்றும் காதல்நோய் கொண்ட உணர்ச்சிவய நிலையை விளைவுகளாகக் கொண்டுவருகிற, நாவல் வாசிப்பினால் மனங்களில் சமநிலை இழந்த ஆயிரக்கணக்கானவர்கள் இன்று மனநலக் காப்பகத்தில் இருக்கின்றனர்.—The Signs of the Times, February 10, 1881.

95

# இசையின் நன்மைகள்

பரலோகத்தின் சூழல் எப்பொழுதும் துதியின் இன்னிசை எழும்புகிற இடமாகும்; இப்படிப்பட்ட பரலோகம் பூலோகத்துடன் தொடர்புகொள்ளும்போது, இசையும் பாடலும்—“துதியும் கீதசத்தமும்” உண்டாகிறது.

புதிதாய்ப் படைக்கப்பட்ட பூமிக்குமேலே, தேவனுடைய புன்சிரிப்பின்கீழ் அது அழகும் கறைப்படாததுமாய் இருந்தபோது, “விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே.” அதுபோல மனித மனங்களும் பரலோகத்துடன் இணைந்து, தேவனுடைய மேன்மைகளை உணர்ந்து, துதியின் தொனிகளில் மறுமொழி கொடுத்திருக் கின்றன. மானிட சரித்திரத்தின் அநேக சம்பவங்கள் பாடலுடன் தொடர்புடையதாய் இருக்கின்றன…

### இசை ஓர் அருமையான ஈவு

வேதத்திலுள்ள பாடல்களின் சரித்திரமானது இசை மற்றும் பாடலின் பயன்பாடுகள் மற்றும் நன்மைகளைப் பற்றியதான குறிப்பு நிறைந்ததாயிருக்கிறது. இசை பெரும்பாலும் தீய நோக்கங்களுக்காகவே தவறான வழியில் உபயோகப்படுத்தப்படுகிறது; இவ்விதமாக அதுவே சோதனைக்கான மிகவும் கவர்ச்சிகரமான கருவிகளில் ஒன்றாக மாறிவிடுகிறது. ஆனால், சரியாக உபயோகிக்கப்பட்டால், எண்ணங்களை உன்னதமான, உயர்தரமான கருப்பொருள்களுக்கு நேராக உயர்த்துவதற்கும், ஆத்துமாவை ஏவி எழுப்புகிறதற்கும் வடிவமைக்கப்பட்ட தேவனுடைய அருமையான ஈவாக இருக்கிறது.

இஸ்ரவேலர் வனாந்தரத்தில் நடந்துவந்தபோது, பரிசுத்தப் பாடல்களைப் பாடித் தங்களை உற்சாகப்படுத்திக் கொண்டதுபோலவே, தேவனுடைய பிள்ளைகள் இன்றைய காலத்திலும் அவர்களுடைய பரதேச வாழ்க்கையை இப்படிப்பட்ட பாடல்களினாலே சந்தோஷமானதாக மாற்றிக் கொள்ளவேண்டும் என்று தேவன் கூறுகிறார். அவருடைய வார்த்தைகளை நினைவில் நிறுத்துவதற்காக உள்ள மிகவும் பயனுள்ள சில வழிவகைகளில் பாடலாக அவைகளைப் பாடுவதும் ஒன்று ஆகும். பாடல்களாக அவைகளைப் பாடுவது மிகச்சிறந்த வழியாக இருக்கும். அப்படிப்பட்ட பாடல் அதிசயமான வல்லமையைக் கொண்டிருக்கும். கரடுமுரடான, பக்குவப்படாத குணங்களை அது கீழ்ப்படுத்த வல்லமையுள்ளது. எண்ணத்தையும் இரக்க உணர்வையும

உயிர்ப்பிக்கவும், நம் செயலின் இணக்கத்தை மேம்படுத்தவும், சோக உணர்வை நீக்கவும், முயற்சியை பெலவீனப்படுத்துகிற மற்றும் தைரியத்தை அழிக்கிற காரியங்களைப் பற்றி முன்னறிவிப்புக் கொடுக்கவும் அதற்கு வல்லமையுள்ளது.

ஆவிக்குரிய சத்தியத்தை இருதயத்திலே பதியச்செய்ய இது மிகவும் நல்ல பலனை அளிக்கிற வழிகளில் ஒன்றாக இருக்கிறது. நம்பிக்கை இழந்துவிடும் நிலையிலிருக்கிற, கடினமாய் நசுக்கப்பட்ட மனதிற்கு இளமையிலே கற்றுக்கொண்ட, தேவ வார்த்தைகள் அடங்கிய பாடல்கள் நினைவுக்கு வருமானால், அவர்கள்முன் இருக்கும் சோதனைகள் அதன் வல்லமையை இழந்துவிடும்; அவர்கள் வாழ்க்கை புதுப்பொலிவோடும் புது நோக்கத்தோடும் அமையும்; உற்சாகமும் சந்தோஷமும் மற்ற ஆத்துமாக்களுக்குப் போய்ச்சேர வழிவகுக்கும்!

கல்வியில் ஒரு கருவியான பாடலின் மதிப்பைக்குறித்த உண்மையை ஒருபோதும் நாம் மறந்துபோகக்கூடாது. வீடுகளிலே எப்போதும் பாடல்கள் தொனிக்கட்டும். இப்படிப்பட்ட இனிமையான, பரிசுத்தமான பாடல்கள் பாடப்படும்போது, கடினமான, குறைசொல்லுகிற வார்த்தைகள் குறைந்துபோய் அதற்கு பதிலாக அவ்வீடுகள் நம்பிக்கையும் சந்தோஷ முமான வார்த்தைகளால் நிறைந்திருக்கும். பள்ளிக்கூடங்களிலே பாடல்கள் பாடப்படட்டும். அப்போது பிள்ளைகள் தேவனிடமும், ஆசிரியர்களிடமும், மற்றவர்களிடமும் நெருக்கமாகப் பிணைக்கப்படுவார்கள்.

தொழுகையில், ஜெபம் எப்படி முக்கியமோ, அப்படியே ஆராதனையில் பாடல்கள் பாடுவதும் அவசியமாகும். உண்மையில் அநேக பாடல்கள் ஜெபமாகவே இருக்கின்றன. குழந்தைகளுக்குப் பாடல்களின் அர்த்தங்களைக் கவனித்துப் பாடச் சொல்லிக் கொடுப்போமானால், அவர்கள் அவைகளை அதிகம் கவனித்து, அதன் வல்லமைக்குத் தங்களை ஒப்புக்கொடுப்பார்கள்.

நம் மீட்பர் நம்மை தேவமகிமையின் வாசற்படிக்கு நடத்திச் செல்லும்போது, பரலோக சிங்காசனத்தைச் சுற்றியுள்ள தேவமகிமை முகத்தில் நிறைந்தவர்களாய், பரலோகப் பாடல் குழுவினரிடமிருந்து பாடக்கூடிய நன்றி நிறைந்த துதிகீதங்களின் முக்கியக் கருத்தைப் புரிந்து கொள்ளஇயலும். அந்தத் தூதர்களுடைய பாடல்களின் எதிரொலி நம் பூலோக இல்லங்களிலும் தொனிக்கத் துவங்கும்போது நம் மனங்கள் பரலோகப் பாடகர்களோடு நெருக்கமாகக் கொண்டுவரப்படும். பரலோகத்தின் ஐக்கியம் பூமியிலேயே ஆரம்பிக்கும். அந்தத் துதிகீதங்களின் அடிப்படையை (keynote) நாம் இங்கேயே கற்றுக்கொள்கிறோம்.—Education, pp. 161–168.

96

# இசையின் பயன்கள்

தூயதான, உயர்தரமான, மேன்மையானவைகளுக்கு நேரே எண்ணங்களை உயர்த்துகிற ஆத்துமாவில் தேவனுக்கென்று பக்தியையும், நன்றியுணர்வையும் எழுப்புகிற ஒரு பரிசுத்த நோக்கத்திற்குப் பயன்படுமாறு இசையானது படைக்கப்பட்டது. இசையின் பண்டைய பழக்கம் மற்றும் பயன்பாடுகளுக்கும், இன்றைக்கு அது பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதற்கும் இடையில் எத்தனை வித்தியாசம்! தேவனை மகிமைப்படுத்த அதனைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, சுயத்தை உயர்த்துவதற்கு இந்த ஈவை உபயோகிப்போர் எத்தனை பேர்! இசைக்கான பிரியம் விழிப்பாயிராதவர்களை உலகப்பிரியர்களுடன் சிற்றின்பக் கூடுகைகளில் இணைவதற்கு வழிநடத்தும்; அவ்விடத்துக்குத் தமது பிள்ளைகள் செல்லாதபடிக்குத் தேவன் தடைசெய்திருக்கிறார். இவ்விதமாக, சரியாகப் பயன்படுத்தப்பட்டால், மாபெரும் ஆசீர்வாதமாக இருக்கிற இசையானது, கடமையிலிருந்தும், நித்திய காரியங்களின் சிந்தனையிலிருந்தும் மனதைக் கவர்ந்திழுக்கிற சாத்தானுடைய மிக வெற்றிகரமான கருவிகளில் ஒன்றாக மாறியிருக்கிறது.

உன்னதத்தில் உள்ள மன்றங்களில் இசையானது தேவனுடைய தொழுகையின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டிருக்கிறது. நமது துதியின் பாடல்களில் கூடுமானவரைக்கும் பரலோகப் பாடல் குழுக்களின் ஒத்திசைவுடன் ஏறத்தாழ ஒத்திருப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். குரலுக்கான முறையான பயிற்சி என்பது கல்வியின் ஒரு முக்கிய அம்சம் ஆகும், அது அலட்சியம் செய்யப்படக்கூடாது.—Patriarchs and Prophets, p. 594.

### தூண்டியெழுப்பும் ஒரு தாலந்து

பாடல் எனும் ஒரு விசேஷ வரத்தை உடையவர்கள் இருக்கின்றனர். ஒரு விசேஷ செய்தியானது தனிநபர் பாடலின் வழியாகவோ அல்லது பலர் கூடிப் பாடுவதன் வாயிலாகவோ கொண்டுசெல்லப்படும் நேரங்களும் இருக்கின்றன. ஆயினும் பாடுதல் என்பது ஒரு சிலரால் மட்டுமே அரிதாகச் செய்யப்படக்கூடியதாயிருக்கிறது. பாடுகிற திறமை என்பது தூண்டியெழுப்பும் ஒரு தாலந்து ஆகும், அதனை அனைவரும் வளர்த்து, அவருடைய நாமத்தின் மகிமைக்குப் பயன்படுத்த வேண்டும் எனத் தேவன் விரும்புகிறார்.—Testimonies for the Church, Vol. 7, pp. 115, 116.

### பரலோக இசையாளர்களுடன் ஒத்திசைவாக

மனிதர்கள் ஆவியோடும் கருத்தோடும் பாடும்போது, பரலோக

இசையாளர்கள் தொனியை உயர்த்தி, துதியின் பாடலில் இணைகின்றனர். தேவனோடு வேலைக்காரர்களாக இருப்பதற்கு நம்மைப் பெலப்படுத்தும்படி எல்லா வரங்களையும் நமக்கருளியிருக்கிற அவர், தமது ஊழியக்காரர்கள், அனைவரும் புரிந்துகொள்ளும்விதத்தில் பேசவும், பாடவும் தக்கதாகத் தங்களது குரல்களைச் சீர்ப்படுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். சப்தமான பாடுதல் அல்ல, தெளிவான ஏற்ற இறக்கம், சரியான உச்சரிப்பு, எளிதில் விளங்குகிற உணர்ச்சி வெளிப்பாடு ஆகியவைகளே அவசியமாயிருக்கிறது. குரலைப் பண்படுத்த அனைவரும் நேரம் எடுத்துக்கொள்வோமாக; அப்படிச் செய்தால் காதைக் கெடுக்கிற கரடுமுரமான, கீச்சிடுகிற தொனிகளில் அல்ல, தேவனுடைய துதியானது தெளிவான, மென்மையான தொனிகளில் பாடப்படக்கூடும். பாடுகிற திறமை தேவவரம் ஆகும்; அவரது மகிமைக்காக அது பயன்படுத்தப்படட்டும்.

நடத்தப்படும் கூட்டங்களில், பாடல் ஆராதனையில் பங்குபெறுவதற்கென ஒரு எண் தெரிந்துகொள்ளப்படட்டும். திறமையாகக் கையாளப்படும் இசைக்கருவிகளும் பாடலுடன் சேர்ந்துகொள்ளட்டும். நமது பணியில் இசைக்கருவிப் பயன்பாட்டுக்கு நாம் எதிர்த்துநிற்கக்கூடாது. ஆராதனையின் இப்பகுதி கவனமாக நடத்தப்பட வேண்டும்; ஏனெனில் இது பாடலில் தேவனைத் துதிப்பதாக இருக்கிறது.

பாடுதல் என்பது எப்பொழுதும் ஒரு சிலரால் செய்யப்படக்கூடியதாய் இருக்கலாகாது. கூடுமானவரைக்கும், முழுத் திருச்சபையும் இணைந்து கொள்ளட்டும்.—Testimonies for the Church, Vol. 9, pp. 143, 144.

**பாடல்களால் தேவன் மகிமைப்படுகிறார்**

தேவனுக்குரிய பக்தி மற்றும் அன்பினால் நிறைந்திருக்கும் ஒரு தூய இருதயத்திலிருந்து புறப்படும் துதியின் பாடல்களினால் தேவன் மகிமைப்படுகிறார்.—Testimonies for the Church, Vol 1, p. 509.

## 97

# இசையைத் தவறாகப் பயன்படுத்துதல்

தூதர்கள் அதோ அங்கே உள்ள ஸ்தலத்தைச் சுற்றிலும் அசைவாடிக் கொண்டிருக்கின்றனர். வாலிபர்கள் அங்கே குழுமியிருக்கின்றனர்; பாடும் குரல் மற்றும் இசைக்கருவியின் சப்தம் அங்கே கேட்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள்

அங்கே கூடியிருக்கின்றனர், ஆயினும் நீங்கள் கேட்பது என்ன? அது ஒரு பாடல்; நடன அரங்கத்திற்குப் பொருத்தமான, விளையாட்டுத்தனமான சிறுபாடலாக இருக்கிறது. இதோ, தூய தூதர்கள் அவர்களைச் சுற்றிலும் அடர்ந்திருக்கிற தங்களது ஒளியை ஒன்றுதிரட்டுகின்றனர், அவ்விடத்தில் இருப்போரை இருள் சூழ்ந்துகொள்கிறது. தூதர்கள் நிகழ்விடத்திலிருந்து பெயர்ந்துபோகின்றனர். அவர்களது முகங்களில் துக்கம் படருகிறது. இதோ, அவர்கள் அழுகின்றனர். ஓய்வுநாள் ஆசரிப்புக்காரர்களின் அணிவரிசைகள் எங்கிலும், குறிப்பாக ——— என்ற இடத்திலும், பல தடவைகள் திரும்பத் திரும்ப இதை நான் கண்டேன். ஜெபத்திற்கு அர்ப்பணிக்கப்பட வேண்டிய மணிநேரங்களை இசையானது ஆக்கிரமித்திருக்கிறது. ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவர்கள் என்றுகூறும் அநேகர் ஆராதிக்கும் விக்கிரகமாக இசை இருக்கிறது. வாலிபர்களின் மனங்களைச் சென்றடைவதற்கு இசையை ஒரு வாய்க்காலாகச் சாத்தான் ஆக்கிக்கொள்ளக் கூடுமானால், அவனுக்கு இசையைக் குறித்து ஆட்சேபணை இல்லை. தேவனிடமிருந்து மனதைத் திசைதிருப்புகிற, அவருடைய சேவைக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டிய நேரத்தைப் போக்கடிக்கிற எதுவும் அவனது நோக்கத்திற்குக் கச்சிதமாகப் பொருந்தும். பெருந்திரளான எண்ணிக்கையிலானவர்களை ஒரு மகிழ்வூட்டுகிற மயக்கத்தினால் பற்றிப்பிடிப்பதற்குப் பலமான செல்வாக்கை உண்டுபண்ணுகிற வழிவகைகளின்மூலமாக அவன் கிரியைசெய்கிற அதேவேளையில், தனது வல்லமையினால் அவர்களை முடமாக்குகிறான். நன்மையான காரியத்திற்குப் பயன்படுத்திக்கொண்டால், இசை ஓர் ஆசீர்வாதமாக இருக்கிறது, ஆனால் அது ஆத்துமாக்களைக் கண்ணியில் அகப்படச்செய்கிற சாத்தானின் கவர்ச்சிகரமான கருவிகளில் ஒன்றாகப் பெருமளவில் ஆக்கப்பட்டிருக்கிறது. தவறாகப் பயன்படுத்தும்போது, மற்றும் ஜெபத்தின் இடத்தை எடுத்துக்கொள்ள அனுமதிக்கும்போது, அது ஒரு பயங்கர சாபமாகிறது. பாடுவதற்காகக் கூடி வருகின்ற வாலிபர்கள் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டாலும், தங்களது அற்பமான உரையாடல் மற்றும் தங்களது இசைத் தெரிந்தெடுப்பினால் அநேக வேளைகளில் தேவனையும், தங்களது விசுவாசத்தையும் கனவீனம் பண்ணுகின்றனர். புனிதமான இசை அவர்களது சுவைக்கு இன்பகரமானதாக இல்லை. கண்டுகொள்ளாமல் விட்டுவிடப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தையின் தெளிவான போதனைகளுக்கு நேராக நான் நடத்தப்பட்டேன். நியாயத்தீர்ப்பில் ஆவியானவரின் இத்தகைய வார்த்தைகள் அனைத்தும் அவற்றிற்குச் செவிசாய்க்காதோரைக் குற்றவாளிகளெனத் தீர்மானிக்கும்.—Testimonies for the Church, Vol. 1, p. 506.

## இசை—நன்மைக்கான ஒரு வல்லமை

இசையை நன்மைக்கான ஒரு மாபெரும் வல்லமையாக்கமுடியும்; ஆயினும் தொழுகையின் இப்பகுதியை நாம் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை. பொதுவாகத் திடீர் உணர்ச்சியினால் அல்லது விசேஷ நிகழ்ச்சிகளுக்காகப் பாடுகிறார்கள், மற்ற வேளைகளில் பாடக்கூடியவர்கள் பாடும்போது கவனக்குறைவால் பெருந்தவறிழைத்து விடுகின்றனர், கூடியிருப்போரின் மனங்களில் இசையானது அதன் இயல்பான தாக்கத்தை இழந்துபோகிறது. இசையில் அழகும், உணர்ச்சிக் கனிவும், வல்லமையும் இருக்கவேண்டும். துதி மற்றும் பக்திப் பாடல்களினால் குரல்கள் உயர்த்தப்படட்டும். சாத்தியப்படுமானால், உங்களுக்குத் துணையாகக் கருவி இசையையும் வைத்துக்கொள்ளுங்கள், ஒரு பிரியமான பலியாக மகிமையான பண்ணிசை தேவனுக்கென்று மேலெழும்பட்டும்.—Testimonies for the Church, Vol. 4, p. 71. ★

# பகுதி 10

# உக்கிராணத்துவம்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 98 | சிக்கனத்துக்குரிய பாடங்கள் | 266 |
| 99 | தியாகத்தின் ஆவி | 270 |
| 100 | தசமபாகம் | 271 |
| 101 | உன் பொருளாலும்... கர்ததரைக் கனம்பண்ணு | 273 |
| 102 | தனிப்பட்ட பொறுப்பு | 276 |
| 103 | விடுமுறை அன்பளிப்புகள் | 278 |
| 104 | உடையில் சிக்கனம் | 280 |
| 105 | சுயத்தைத் திருப்திப்படுத்துதல் | 282 |
| 106 | சிக்கனமும் உதார குணமும் | 286 |

## பகுதி 10

# உக்கிராணத்துவம்

நம் வசம் இருக்கும் தாலந்து எவ்வளவு சிறியதானாலும் தேவனிடம் அதற்கான ஒரு இடமுண்டு. அந்த ஒரு தாலந்தை ஞானத்தோடு பயன்படுத்தும் போது, அதற்காக நியமிக்கப்பட்ட வேலையை அது நிறைவேற்றும். சிறிய கடமைகளில் ஞானம் உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது, கூட்டிச் சேர்த்தல் என்ற திட்டத்தின்படி நாம் செயல்படவேண்டும். அப்பொழுது பெருக்கிக் கொடுத்தல் என்ற திட்டத்தின்படி தேவன் நமக்காகப் பணிபுரிவார். இந்தச் சிறிய காரியங்கள் அவருடைய ஊழியத்திலே மிகவும் விலையேறப்பெற்ற செல்வாக்குகளாக மாறுதலை அடையும்.— Christ's Object Lessons, p. 360.

## 98

# சிக்கனத்துக்குரிய பாடங்கள்

சிக்கனம் மற்றும் சுயமறுப்பின் பாடங்களைக் கற்றுக்கொள்வதால், தேவனுடைய ஊழியத்திற்கு உதவியாயிருக்கும் வாலிபர்களின் சிலாக்கியம் குறித்து அவர்களுக்கு அதிகம் சொல்லப்பட முடியும். இந்தச் சிற்றின்பத்தில், அந்தச் சிற்றின்பத்தில் தாங்கள் ஈடுபடவேண்டும், இதைச் செய்வதற்குத் தங்களது வருமானத்தின் முழுப்பகுதியையும் பயன்படுத்தத் தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று அநேகர் நினைக்கின்றனர். இக்காரியத்தில் நாம் நேர்த்தியாகச் செயல்படவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

புசிக்கவும், குடிக்கவும், உடுத்தவும் நமக்கிருப்பது போதும் என்று நாம் திருப்தியடையும்போது, நமக்கே விரோதமாக நாம் பாவம் செய்கிறோம். இதைவிட மேன்மையான ஒன்றை தேவன் நமக்கு முன்பாக வைத்திருக்கிறார். நமது சுய விருப்பங்களைப் புறம்பே தள்ளி, தேவனுடைய ஊழியப்பணிக்கு இருதயம் மற்றும் மனதின் சக்திகளை ஒப்புக்கொடுக்க வாஞ்சையுள்ளவர்களாகும்போது, பரலோக ஏதுகரங்கள் நம்மை மனித இனத்திற்கு ஓர் ஆசீர்வாதமாக்கும் விதத்தில், நம்முடன் ஒத்துழைப்பார்கள்.

### ஊழியங்களுக்காகச் சேமித்தல்

கடின உழைப்பும், சிக்கனமுமுள்ள வாலிபன், ஒருவேளை ஏழையாயிருப்பினும், தேவனுடைய ஊழியத்துக்காகக் கொஞ்சம் சேமிக்க

முடியும். நான் பன்னிரண்டு வயதாயிருக்கும்போதே, சிக்கனமாயிருப்பது என்றால் என்ன என்பதை அறிந்திருந்தேன். என் சகோதரியுடன் ஒரு தொழிலை நான் கற்றுக்கொண்டேன். ஒரு நாளைக்கு இருபத்தைந்து சென்ட்டுகள் மட்டுமே நாங்கள் சம்பாதித்தபோதிலும், இந்தத் தொகையி லிருந்து ஊழியங்களுக்குக் கொடுப்பதற்குக் கொஞ்சத்தைச் சேமிக்க நாங்கள் திராணியுள்ளவர்களாய் இருந்தோம். முப்பது டாலர்கள் ஆகும்வரைக்கும் நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சேமித்தோம். பின்னர் கர்த்தருடைய அதிசீக்கிர வருகையைக் குறித்தத் தூது, மனிதர்கள் மற்றும் பணவளத்துக்கான அழைப்புடன் எங்களிடம் வந்தபோது, முப்பது டாலர்களைத் தகப்பனாரிடம் ஒப்படைத்து, இருளில் இருப்போருக்குத் தூதினை அனுப்புவதற்காகக் கைப்பிரதிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களில் அதை முதலீடு செய்ய அவரிடம் கேட்பதை ஒரு சிலாக்கியம் என்று நாங்கள் உணர்ந்தோம்.

நேரம் மற்றும் பணத்தைப் பயன்படுத்துவதில் சிக்கனத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியது தேவனுடைய பணியில் தொடர்புடைய அனைவரது கடமையாயிருக்கிறது. சோம்பலாயிருப்பவர்கள் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மகிமையான சத்தியங்களுக்குச் சிறிதளவு முக்கியத்துவம் கொடுப்பதையே வெளிக்காட்டுகின்றனர். கடின உழைப்பின் பழக்கங்களைக் கற்றுக்கொடுப்பதும், தேவனுடைய மகிமைக்காக மட்டுமே உழைப்பதற்குக் கற்றுக்கொள்வதும் அவர்களது தேவையாயிருக்கிறது.

### சுயமறுப்பு

நேரத்தையும் பணத்தையும் குறித்தப் பயன்பாட்டில் நல்ல அறிவுத்திறன் இல்லாதவர்கள், அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசனை பெறவேண்டும். எங்கள் தொழிலில் நாங்கள் சம்பாதித்திருந்த பணத்தைக் கொண்டு, என் சகோதரியும் நானும் எங்களுக்குரிய துணிகளை ஏற்பாடு செய்துகொண்டோம். எங்களது பணத்தைத் தாயாரிடம் கொடுத்து, “வாங்குங்கள், எங்களது துணிமணிக்குச் செலுத்தப்பட்டத் தொகைபோக, மிஷனெரி ஊழியத்திற்குக் கொடுப்பதற்குக் கொஞ்சம் இருக்குமே” என்று கூறுவோம். அவர்கள் அப்படியே செய்து, இவ்விதமாக எங்களில் மிஷனெரி ஆவியை ஊக்கப்படுத்துவார்கள்.

சுயமறுப்பின் கனியான கொடுத்தல் என்பது கொடுப்பவருக்கு ஒரு ஆச்சரியமான உதவியாக இருக்கிறது. துயருற்றோரின் துயர்நீக்கி, ஆதரவற்றோரின் தேவைகளை வழங்கும்படி நன்மைசெய்கிறவராகச் சுற்றித் திரிந்தவரின் பணியை மிக முழுமையாகப் புரிந்துகொள்ள நம்மை ஊக்கப்படுத்துகிற ஒரு கல்வியை அது அளிக்கிறது. இரட்சகர் தம்மையே

பிரியப்படுத்துவதற்காக வாழவில்லை. அவரது வாழ்வில் சுயநலத்தின் அச்சடையாளமே இல்லை. அவர்தாமே படைத்திருந்த உலகமே இருந்த போதிலும், அதின் எந்தப் பகுதியையும் தமது இல்லம் என்று அவர் உரிமைபாராட்டவில்லை. "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவை களுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" (மத். 8:20) என்று கூறினார்.

### தாலந்துகளை முறையாகப் பயன்படுத்துதல்

நமது தாலந்துகளை நாம் சிறப்பான விதத்தில் பயன்படுத்தினால், அதிக மேன்மையான பயன்பாட்டிற்குத் தொடர்ந்து தேவ ஆவியானவர் நம்மை வழிநடத்துவார். தனது தாலந்துகளைக் கொண்டு உண்மையாய்த் தொழில் செய்திருந்த மனிதனை நோக்கி: "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று கர்த்தர் சொன்னார். ஒரு தாலந்தைப் பெற்றவனும் மிகச் சிறந்ததைச் செய்யும்படிக்கு எதிர்பார்க்கப்பட்டான். தனது எஜமானுடைய பொருள்களைக் கொண்டு அவன் தொழில் செய்திருந்தால், கர்த்தர் அவனது தாலந்தைப் பெருக்கியிருந்திருப்பார்.

"அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக" தேவன் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்குரிய பணியைக் கொடுத்திருக்கிறார். நமது திறமையின் அளவு தேவனிடம் இருக்கிறது, நம்மீது எதை வைக்கவேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். உண்மையாயிருந்தவனுக்கு, இன்னும் அதிகப் பொறுப்பை ஒப்புவியுங்கள் என்ற கட்டளை அருளப்பட்டது. அந்த ஒப்படைப்புக்கு அவன் உண்மையாக விளங்கினால், அவனிடம் இன்னும் அதிகமாக நம்பி ஒப்படைக்குமாறு மீண்டும் வாக்குறுதி அருளப்பட்டது. இவ்விதமாகக் கிறிஸ்துவின் கிருபையின் மூலமாக கிறிஸ்து இயேசுவிலுள்ள ஒரு புருஷனின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக அவன் வளருகிறான்.

உங்களிடம் ஒரே ஒரு தாலந்துதான் இருக்கிறதா? காசுக்காரர்களிடம் அதைப் போட்டுவைத்து, ஞானமுள்ள முதலீட்டினால் அதை இரண்டாக்க வேண்டும். செய்யும்படி உங்கள் கைகளுக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உங்கள் பெலத்தோடே செய்யுங்கள். உங்கள் தாலந்து நியமிக்கப்பட்ட தனது ஊழியத்தை நிறைவேற்றும்படிக்கு அதை மிக ஞானமாகப் பயன்படுத்துங்கள். கடைசியில் "நல்லது" என்று உங்களிடம் பேசப்படும் வார்த்தைகளைக் கேட்பது உங்களிடமுள்ள அனைத்தைவிடவும் பெரும் மதிப்புடையதாயிருக்கும். ஆயினும் நன்றாய்ச் செய்தவர்களுக்கு மட்டுமே "நல்லது" என்று கூறப்படும்.

## இழப்பதற்கு நேரமில்லை

வாலிப ஆண்களே, பெண்களே, இழப்பதற்கு உங்களுக்கு நேரமில்லை. உங்களது குணக் கட்டுமானத்திற்குள் திடமான வேலைப் பாடுகளைக் கொண்டுவர வைராக்கியத்துடன் பிரயாசப்படுங்கள். நீங்கள் உண்மையாயிருக்கும்படி கிறிஸ்துவினிமித்தம் நாங்கள் வேண்டிக் கொள்கிறோம். காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வகைதேடுங்கள். தேவனுடைய சேவைக்கென்று ஒவ்வொரு நாளும் உங்களையே அர்ப்பணியுங்கள். சோம்பலாய்க் கழிப்பதற்கு அநேக விடுமுறைநாட்களோ, சுயத்தைத் திருப்திப்படுத்துவதில் செலவிடுவதற்கு அதிகமான பணமோ உங்களுக்குத் தேவையில்லை என்பதை நீங்கள் காண்பீர்கள். கிறிஸ்துவின் சாயலில் வளர்ந்து, வனையப்படுவதற்கு வகைதேடுகிறவர்களைப் பரலோகம் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. மனிதப் பிரதிநிதி கிறிஸ்துவிடம் சரணடையும்போது, பரிசுத்த ஆவியானவர் அவனுக்காக மாபெரும் கிரியையைச் செய்துமுடிப்பார்.

தேவனுக்காகத் தற்தியாகம்பண்ணும் ஒவ்வொரு உண்மையுள்ள பணியாளரும் மற்றவர்களினிமித்தம் செலவு பண்ணவும் செலவு பண்ணப்படவும் வாஞ்சையுள்ளவராக இருக்கிறார். "தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" (யோவான் 12:25) என்று கிறிஸ்து கூறுகிறார். உதவி தேவைப்படும் இடத்திற்கு உதவிட எடுக்கும் அக்கறைமிக்க, பிறர்நலங் கவனிக்கிற முயற்சிகளினால், உண்மையுள்ள கிறிஸ்தவன் தேவனுக்கும், சக மனிதர்களுக்குமான தனது அன்பைக் காட்டுகிறான். சேவையிலேயே அவன் தன் ஜீவனை இழக்க நேரிடலாம்; ஆயினும் கிறிஸ்துவானவர் தமது சம்பத்தைத் தமக்காகக் கூட்டிச் சேர்க்க வரும்போது, அதை மீண்டும் அவன் கண்டடைவான்.—The Youth's Instructor, September 10, 1907.

## தியாகத்திற்கான பலன்

மற்றவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக நீங்கள் பயன்படுத்தும் பொருட்கள் திரும்பவும் அதற்கான ஆதாயத்தைக் கொண்டுவரும். ஐசுவரியமானது சரியாகப் பயன்படுத்தப்படும்போது, அநேக நன்மையான காரியங்களை நிறைவேற்றிவைக்கும். கிறிஸ்துவிற்காக ஆத்துமாக்கள் ஆதாயம் செய்யப்படும். இந்த பூலோக வாழ்விற்காக கிறிஸ்து வைத்திருக்கும் திட்டத்தைப் பின்பற்றுபவர்கள் இந்த பூமியிலே அவர்கள் யாருக்காவது ஊழியம்செய்து தியாகத்தோடு தங்களை அர்ப்பணித்தார்களோ அவர்களை பரலோகமன்றங்களிலே காண்பார்கள். மீட்கப்பட்டவர்கள் தங்களது

இரட்சிப்பிற்கு காரணமாக இருந்தவர்கள் நன்றியுடன் நினைவுகூருவார்கள. ஆத்தும ஆதாய ஊழியத்தில் உண்மையும் உத்தமமுமாக ஈடுபட்டவர்களுக்கு பரலோகம் ஒரு அருமையான இடமான இருக்கும்.—Christ's Object Lessons. p. 373.

# 99

# தியாகத்தின் ஆவி

மிக உயர்ந்த பதவியையும், மிக அதிகமான சம்பளத்தையும் தேடுகிற பொருளாசையின் ஆவி உலகத்தில் மிகுதியாக இருக்கிறது. முந்தைய கால தன்னல மறுப்பு மற்றும் தற்தியாக ஆவியானது மிக அரிதாகவே காணப்படுகிறது. ஆயினும் இயேசுவின் மெய்யான பின்னடியாரைச் செயல்படத் தூண்டுகிற ஒரே ஆவி இதுவே ஆகும். நாம் எப்படி வேலைசெய்ய வேண்டும் என்பதற்கான மாதிரியை நமது தெய்வீக எஜமான் நமக்குக் கொடுத்திருக்கிறார். “என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்” என்று தாம் கட்டளையிட்டவர்களுக்கு, ஒரு குறிப்பிட்டத் தொகையைப் பிரதிபலனாக அவர்களது சேவைகளுக்காக அவர் வழங்கவில்லை. அவர்கள் அவரது தன்னல மறுப்பு மற்றும் தியாகத்தை அவருடன் பகிர்ந்துகொள்ள வேண்டியதாயிருந்தது.

தனிச்சிறப்புவாய்ந்த பணியாளரின் (கிறிஸ்துவின்) பின்னடியார்களாக இரப்பதாக உரிமைகோரி, தேவனுக்கு உடன் வேலையாட்களாக அவரது சேவையில் ஈடுபட்டிருக்கிறவர்கள், பூரண சற்குணத்தின் தேவன் பூமிக்குரிய ஆசரிப்புக்கூடாரத்தின் கட்டுமானத்தில் எதிர்பார்த்தத் துல்லியத்தையும், திறமையையும், சாமர்த்தியத்தையும், ஞானத்தையும் தங்களுடைய பணிக்குள் கொண்டுவர வேண்டும். அந்தக் காலத்திலும், கிறிஸ்துவின் பூலோக ஊழியநாட்களிலும் இருந்ததைப்போல, தேவனுக்கென்ற பக்தியும், தற்தியாக ஆவியும் பிரியமான சேவையின் முதல் இன்றியமையாத் தேவைகளாக இப்பொழுதும் மதிக்கப்பட வேண்டும். சுயநலத்தின் ஒரு நூலிழைகூட தமது பணிக்குள் புகுந்துவிடக்கூடாது எனத் தேவன் திட்டம் வகுத்துள்ளார்.—Review and Herald, January 4, 1906.

### இருதயத்தில் கிருபையின் அடையாளங்கள்

தாழ்மை, தன்னல மறுப்பு, உதாரகுணம், விசுவாசமாய் தசமபாகம் செலுத்துதல் ஆகியவை இருதயத்தில் தேவகிருபையானது கிரியை செய்கிறது என்பதைக் காட்டுகிறது.—Counsels on Health, p. 590.

# 100

# தசமபாகம்

தாம் செய்ய வந்ததாக இயேசு அறிவித்த மாபெரும் பணியானது பூமியிலுள்ள அவரது பின்னடியார்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இரட்சிப்பின் மாபெரும் பணியில் வழிநடத்திச் செல்கிற நமது தலையாகிய கிறிஸ்து அவரது மாதிரியைப் பின்பற்றும்படி நமக்குக் கட்டளையிடுகிறார். உலகளாவிய ஒரு தூதை அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். இந்தச் சத்தியம் சகல தேசத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் கொடுக்கப்பட வேண்டும். சாத்தானின் வல்லமை எதிர்க்கப்பட வேண்டியதா யிருந்தது. கிறிஸ்துவினாலும், அவரது பின்னடியார்களாலும் அவன் மேற்கொள்ளப்பட வேண்டியவனாக இருந்தான். அந்தகார வல்லமைகளுக்கு எதிராக ஒரு மாபெரும் போர் விடாமல் நடத்தப்பட வேண்டியதாயிருந்தது. இப்பணியை வெற்றிகரமாகச் செய்வதற்கு பணவளம் அவசியப்பட்டது. பரலோகத்திலிருந்து நேரடியாகப் பணத்தை அனுப்புவதாகத் தேவன் முன்மொழிகிறதில்லை; மாறாக, இந்தப் போராட்டத்தின் மெய்யான நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதற்குப் பணவளத்தின் தாலந்துகளைத் தமது பின்னடியார்களின் கரங்களில் அவர் கொடுத்திருக்கிறார்.

நிறுவனத்தைத் தன்னிச்சையாகச் செயல்படச் செய்வதற்குப் போதுமான தொகைகளைக் கொண்டு வருவதற்கு அவர் தமது மக்களுக்கு ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறார். தசமபாக ஒழுங்குமுறையிலுள்ள தேவனின் திட்டமானது அதன் எளிமையிலும், சமத்துவத்திலும் அழகானதாக இருக்கிறது. விசுவாசத்தோடும், தைரியத்தோடும் அனைவரும் அதைப் பின்பற்றலாம், ஏனெனில் அது அதன் தோற்றத்தில் தெய்வீகமானதாக இருக்கிறது. அதில் எளிமையும் பயன்பாடும் இணைந்திருக்கிறது; அதைப் புரிந்துகொள்ளவும், செயல்படுத்தவும் ஆழமான அறிவு அவசியப்படுவதில்லை. இரட்சிப்பின் அருமையான பணியை முன்னோக்கிக் கொண்டுசெல்வதில் அவர்கள் ஒரு பங்கை ஆற்றமுடியும் என்பதை அனைவரும் உணரலாம். ஒவ்வொரு ஆணும், பெண்ணும், வாலிபனும் கர்த்தருக்கென்று பொக்கிஷ தாரராக மாறலாம். கருவூலத்தின் தேவைகளைச் சந்திக்கும் ஒரு கருவியாகவும் இருக்கலாம், “... தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்” என்று அப்போஸ்தலன் கூறுகிறார்.

இந்த ஒழுங்குமுறையினால் மாபெரும் நோக்கங்கள் நிறைவேறுகின்றன. ஒவ்வொருவரும், அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டால், ஒவ்வொருவரும் தேவனுக்கென்று காவல்காரராக, விசுவாசமிக்க பொக்கிஷதாரராக ஆக்கப்படுவர்; உலகத்திற்கான எச்சரிப்பின் கடைசிச் செய்தியை முழங்கும் மாபெரும் பணியை முன்னேற்றிக் கொண்டுசெல்வதில் பணப் பற்றாக்குறை என்பது இருக்காது. அனைவரும் இருக்கும்படி விடப்படுவதில்லை. செய்யப்படும் ஒவ்வொரு முதலீட்டின் மூலமாக, நிகழ்கால சத்தியத்தின் செயல்நோக்கத்தோடு மிகவும் நெருக்கமானவர்களாக அவர்கள் மாறுவர். "நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக" அவர்கள் வைப்பார்கள்.—Testimonies for the Church, Vol. 3, pp. 388, 389.

### தேவனே சொந்தக்காரர் என்பதை அங்கீகரித்தல்

தோட்டத்திலிருந்து கிடைத்த விளைச்சலிலும், வயலிலிருந்து கிடைத்த விளைச்சலிலும், ஆடு மாடுகளிலிருந்து கிடைத்த பலனிலும், மனதின் மற்றும் கைகளின் பிரயாசத்தின் பலனிலும் தசமபாகத்தைத் தேவனுக்கு அர்ப்பணித்தார்க்ள. இரண்டாம் தசமபாகத்தை ஏழை ஜனங்களுக்கு உதவுவதற்காகவும், மற்ற நன்மைகளுக்காகவும் செலவு செய்தார்கள். இதன்மூலம் தேவன், தாம் சகலத்துக்கும் சொந்தக்காரர் என்பதும், அவருடைய ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்கு கொடுக்கிற வாய்க்கால்களாக தாங்கள் இருக்கவேண்டியது அவர்களுக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் என்பதுமாகிய இந்த சத்தியம் மக்கள்முன் எப்பொழுதும் பசுமையாய் இருந்தது. இது எல்லா குறுகிய சுயநலத்தையும் மக்களிடமிருந்து எடுத்துவிடவும், அவர்கள் மனதிலே பரந்த நல்ல குணங்களை வளர்க்கவும் நல்ல பயிற்சியாக இருந்தது.— Education. p. 44.

### தேவனுக்கு உரியது

"தசமபாகம் ... கர்த்தருக்கு உரியது." ஓய்வுநாள் பிரமாணத்தில் இருப்பதுபோன்ற அதேவிதமான சொற்றொடர் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்." மனிதனின் நேரம் மற்றும் அவனது பணவளத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தேவன் தமக்கென்று பாதுகாத்து வைத்துக்கொண்டார்; எந்த மனிதனும் குற்றப் பழியின்றி இரண்டில் எதையும் தனது சுய விருப்பங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது.—Patriarchs and Prophets, pp. 525, 526.

## 101

# “உன் பொருளாலும்... கர்த்தரைக் கனம்பண்ணு”

“நீ என் எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு?” தேவனுடைய கரத்திலிருந்து ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் நாம் பெற்றுக்கொண்டு, அவருக்குரிய தொகைகளை—அவர் தமக்கென்று ஒதுக்கி வைத்திருக்கிற பங்காகிய நமது தசமபாகத்தைக் கூட—அவருக்குத திரும்பச் செலுத்தாமல் இருக்கலாமா? தற்தியாக ஆவி எனும் உண்மையான பாதையிலிருந்து சுயத்தைத் திருப்திப்படுத்தும் பாதைக்குள் அனைத்தையும் திருப்புவது வழக்கமாகிவிட்டது. ஆனாலும் தொடர்ந்து அவரது சலுகைககளை அக்கறையின்றிப் பெற்றுக்கொண்டு, அவரது அன்புக்கு மறுமொழி கொடாதிருக்கலாமா?

பிரியமான வாலிபர்களே, தேவனுக்கென்று மிஷனெரிகளாக நீங்கள் மாறமாட்டீர்களா? நீங்கள் அனுபவிக்கும்படி கர்த்தர் உங்களுக்கு இலவசமாய் அருளியிருக்கிறதிலிருந்து கருவூலத்துக்குள் போடுவதனால், அவருக்குப் பரிசுகளைக் கொடுக்கிற அருமையான படிப்பினையை, நீங்கள் முன்னொருபோதும் செய்திராததுபோல, கற்றுக்கொள்வீர்களா? நீங்கள் பெற்றுக்கொண்டது எதுவாயிருப்பினும், கொடுத்தவருக்கு ஒரு பங்கானது நன்றியின் காணிக்கையாகத் திரும்பச் செலுத்தப்படட்டும். தாயகத்திலும், அயல்நாட்டிலும் மிஷனெரிப் பணி செய்யப்படுவதற்காகவும் ஒரு பகுதி கருவூலத்துக்குள் போடப்பட வேண்டும்.

### பரலோகத்தில் பொக்கிஷங்கள்

தேவனுடைய செயல்நோக்கம் நமது இருதயங்களில் மிக நெருக்கமான இடம்பிடித்திருக்கவேண்டும். ஒரு குடும்பத்துக்கு ஆசீர்வாதமாயிருந்த சத்திய வெளிச்சம், பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளால் கொடுக்கப்பட்டால், மற்றக் குடும்பங்களுக்கும் அது ஒரு பெரும் ஆசீர்வாதமாக மாறும். ஆனால் மிகவும் வளமாகவும் அபரிமிதமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிற தேவனுடைய தாராளக் கொடைகள் அவரிடமிருந்து தடுத்து நிறுத்தப்பட்டால், சுயநலமாக நமக்காகவே பயன்படுத்திக் கொள்ளப்பட்டால், அவரது ஆசீர்வாதத்திற்குப் பதிலாக, தேவனுடைய சாபம் நிச்சயமாக அனுபவிக்கப்படும்; இதைக் கர்த்தர்தாமே அறிவித்திருக்கிறார். வேறு எந்த உரிமைகோருதலைவிடவும் தேவனுடைய உரிமைகோருதலுக்கு முன்னுரிமை அளித்து, அதை முதலில்

நிறைவேற்றிட வேண்டும். பின்னர் ஏழைகளும், எளியோரும் பராமரிக்கப்பட வேண்டும். எது அப்படியானாலும் அல்லது நம்மையே தியாகம்பண்ண வேண்டியிருந்தாலும், இக்காரியங்கள் அலட்சியம் பண்ணப்படக்கூடாது.

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி," புசிப்பதிலும், குடிப்பதிலும், உடுத்துவதிலும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பது நமது கடமை ஆகும். தசமபாகங்களில் மட்டுமல்ல, கூடுமானவரைக்கும் கொடைகள் மற்றும் காணிக்கைகளிலும்கூட, தேவனுக்கு அவருக்குரியதைச் செலுத்தும் இருதயத்தின் வாஞ்சையுடன், நமது கட்டிடங்கள் மற்றும் நமது தங்குமிடங்களின் தட்டுமுட்டுச் சாமான்களையும் கவனமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கர்த்தர் தம்முடையதாக உரிமைகோரும் பங்குடன், கொடைகள் மற்றும் காணிக்கைகளையும் கொண்டு அவரது பண்டசாலையை நிரப்பிவைப்பதால், மிகத் திரளானபேர்கள் பரலோகத்தில் தங்களுக்கென்று பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்துக் கொண்டிருப்பார்கள்.

தங்களுடையதென்று உரிமைபாராட்டுகிற சொத்துடைமையைக் குறித்து, தேவன் தங்களிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்று நேர்மையாக விசாரிக்கிறவர்கள், பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை ஆராய்ந்து, இஸ்ரவேலர்களின் நெடுந்தூர வனாந்தர பயணத்தில் காணக்கூடாத தலைவராயிருந்த கிறிஸ்துவானவர் இது சம்பந்தமாகத் தமது ஜனங்கள் செய்யும்படிக்கு வழிநடத்தியதைக் காணவேண்டும். தேவனுடைய ஆலயத்துக்குள் வரவேண்டிய அவரது பங்கை வஞ்சிப்பதைக் காட்டிலும், எந்த இடுக்கமான நிலைமைகளுக்குள் கொண்டுவரப்படவும், எந்த அசௌகரியத்துக்குள் வைக்கப்படவும் நாம் தனிப்பட்ட முறையில் விருப்ப முள்ளவர்களாக இருக்க வேண்டும். வேதத்தை வாசிப்பவர்களும், விசுவாசிப்பவர்களும் இக்காரியத்தில் "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்" என்பது குறித்த ஒரு நுணுக்கமான அறிவைப் பெற்றிருப்பார்கள்.

## போக்குச்சொல்ல இடமில்லை

அவனவன் தன் சரீரத்தில் செய்த கிரியைகளுக்குத்தக்க நியாயந்தீர்க்கப்படும் அந்த நாளில், கர்த்தரிடத்திலிருந்து தசமபாகத்தையும், கொடைகளையும், காணிக்கைகளையும் நிறுத்தி வைப்பதற்காக இப்பொழுது சுயநலமானது கொண்டுவரும் ஒவ்வொரு சாக்குப்போக்கும், அவனவன் தன்தன் சரீரத்தில் செய்த கிரியைகளுக்குத்தக்கதாக நியாயந் தீர்க்கப்படும் அந்த நாளில், சூரியனுக்கு மன்னே பனியைப்போல உருகி மறைந்துபோகும். அது என்றென்றைக்கும அதிகத் தாமதமாக இல்லாதிருந்தால், அநேகர் பின்னோக்கிச் சென்று, தங்களது குணங்களை மறுகட்டுமானம் செய்வதற்கு எவ்வளவாய் சந்தோஷப்படுவார்கள்! ஆயினும்

வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும் தேவனை வஞ்சித்தவர்களின் பதிவேட்டினை அப்பொழுது மாற்றுவது மிகவும் தாமதமாயிருக்கும். அவர்களது முடிவு தீர்மானிக்கப்பட்டிருக்கும், மாற்றக்கூடாத விதத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கும்...

சுயநலம் சாவுக்கேதுவான தீமையாகும். தேவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் விசேஷித்த நிபந்தனைகளுக்குக் காட்டப்பட்ட கவனமற்ற அக்கறையின்மை மற்றும் தற்பிரியமும், அவரது உண்மையான உக்கிராணக்காரர்களாகச் செயல்படுவதற்குக் காண்பித்த மறுப்பும், காரியம் இப்படியாகும் என்று அவர் அறிவித்தபடியே, அவரது சாபத்தை அவர்கள்மீது கொண்டுவந்துவிட்டது. இந்த ஆத்துமாக்கள் தங்களைத் தேவனிடமிருந்து பிரித்துக்கொண்டுவிட்டனர்; தேவனுடைய தெளிவான கட்டளைகளை அவமதிப்பதற்கு, வார்த்தையினாலும் மாதிரியினாலும் மற்றவர்களை அவர்கள் நடத்தியிருக்கின்றனர், அவர்கள்மீது தமது ஆசீர்வாதத்தை அவர் வழங்கக் கூடாமற்போயிற்று.

**தசமபாகம்**

கர்த்தர் குறிப்பிட்டிருக்கிறார்: உங்கள் உடைமைகள் அனைத்திலும் தசமபாகம் என்னுடையது; எனது செயல்நோக்கத்தை முன்னேற்றுவிக்கப் பயன்படுத்துவதற்கும், அந்தகாரத்தில் அமர்ந்திருப்போருக்கு வேதவாக்கியங் களைத் திறந்துகாட்டும்படி உயிருள்ள பிரசங்கியை அனுப்புவதற்கும், உங்கள் கொடைகளும், காணிக்கைகளும் கருவூலத்துக்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

உண்மையற்ற ஊழியக்காரன் தனது எஜமானுடைய பணத்தைப் பூமியில் புதைத்துப் போட்டதைப் போல, யாராவது தேவனிடமிருந்து அவருக்குரியதை நிறுத்திவைத்து இழப்புக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்ளலாமா? “ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன். ஆகையால், நான் பயந்து, போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும்,” (மத் 25:24,25) என்று இந்த மனிதன் கூறியதுபோல, நாமும் தேவனைப் பற்றி முறையிடுவதால் நமது உண்மையின்மையைச் சரிதானென்று காட்டுவதற்கு வகைதேடலாமா? சொல்லப்போனால், நமது நன்றியின் காணிக்கைகளை நாம் தேவனுக்கென்று படைக்கவேண்டுமல்லவா?—The Youth's Instructor, August 26, 1897.

# 102

# தனிப்பட்ட பொறுப்பு

நமது பரலோகப் பரமபிதா நாம் வேலைசெய்வதற்கு கொடுத்திருக்கும் திறனுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ நம்மிடத்தில் கேட்பதில்லை. அவர் தமது ஊழியக்காரர்களால் தாங்கமுடியாத அளவிற்கு எந்த பாரத்தையும் அவர்கள்மீது சுமத்துவதில்லை. “நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்” (சங்கீதம் 103:14). தெய்வீகக் கிருபையினால் நாம் என்ன செய்யமுடியுமோ அதை மாத்திரமே உரிமைகோரி கேட்கின்றார்.

“எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்” (லூக்கா 12:48). நம் ஒவ்வொருவரையும் தனித் தனியாக பொறுப்புள்ளவர்களாக்கி, நாம் காரியங்களைச் செய்வதற்கு நமக்களிக்கப்பட்டிருக்கும் திறமையினின்று ஒரு புள்ளியளவு குறைத்து செய்யப்பட்டாலும், அதற்கு அவர் கணக்கு கேட்பார். சேவைக்கான அனைத்து சாதகமான காரியங்களையும் இம்மியும் பிசகாமல் நமது கர்த்தர் அளவிடுகிறார். மேம்படுத்தப்பட்ட திறமைகள் எவ்வாறு கணக்கிற்கு கொண்டுவரப்படுகின்றனவோ அதேபோன்று பயன்படுத்தப்படாத திறமைகளும் கொண்டுவரப்படுகின்றன. நமது தாலந்துகளை நாம் சரியாக பயன்படுத்து வதின்மூலமாக நாம் எப்படிப்பட்டவர்களாக மாறமுடியுமோ அதற்கு நம்மை பொறுப்பாளியாக்குகின்றார். நாம் நமது சக்திகளைப் பயன்படுத்தி தேவனை மகிமைப்படுத்தவில்லை. எனவே, நம்மால் காரியங்களைச் சாதிக்கமுடியவில்லை. எனவே, நாம் என்ன செய்திருக்க வேண்டுமென்ற தின்படி நியாயந்தீர்க்கப்படுவோம். நாம் நமது ஆத்துமாக்களை இழந்து போகாவிட்டாலும், நமது தாலந்துகளை பயன்படுத்தாததினால் ஏற்படும் பலன்களை நித்தியத்தில் தெளிவாகப் புரிந்துகொள்வோம். நாம் பெற்றிருந் திருக்கக்கூடிய அனைத்து அறிவையும், திறமைகளையும் பெறாததினால் நித்தியக்கால முழுமைக்குமாக நமக்கு ஒரு இழப்பு ஏற்பட்டுவிடுகிறது.

தேவனுக்கு நம்மை முற்றிலுமாக ஒப்படைக்கும்போது, நமது ஊழியத்திலே அவரது வழிகாட்டுதல்களை பின்பற்றும்போது, அதனால் சாதிக்கப்படவேண்டிய காரியங்களுக்கு அவர் தாமே பொறுப்பேற்றுக் கொள்கிறார். நமது நேர்மையான பெரும் முயற்சிகளுக்கான வெற்றி குறித்து யூகித்துக்கொண்டிருக்கும்படி நம்மை விட்டுவிடமாட்டார். தோல்விகுறித்து ஒருமுறைகூட நாம் சிந்தித்துப் பார்க்கக்கூடாது. தோல்வியே அறியாத

அந்த ஒருவரோடு (தேவனோடு) நாம் இணைந்து வேலைசெய்யவேண்டும்.

நமது சொந்த பாவீனங்களைக்குறித்தும், இயலாமையைக்குறித்தும் நாம் பேசிக்கொண்டிருக்கக்கூடாது. தேவனை நாம் முற்றிலுமாக நம்பவில்லை யென்பதற்கு அவரது வசனத்தை மறுதலிப்பதற்கும் வெளிப்படையான ஒரு அடையாளமாக அது இருக்கிறது. நமது பாரங்களினால் நாம் முறுமுறுக்கும்போது, சில பொறுப்புகளை நாம் எடுத்துச்செய்யவேண்டுமென்று அவர் நம்மை அழைக்கும்போது, உண்மையிலேயே அவர் ஒரு கடினமான எஜமானரென்றும் குறிப்பிட்ட அந்த வேலைக்கு வல்லமையைக் கொடுக்காமலேயே அதைச் செய்யும்படி நம்மைக் கேட்கிறாரென்றும் நாம் உண்மையிலேயே கூறுகின்றோம்.—Christ's Object Lessons, pp. 362, 363.

## பணத்தின் மதிப்பு

நம்மை நாமே மகிமைப்படுத்தி, கனப்படுத்திக்கொள்ளும்படியாக பணம் நமக்கு அளிக்கப்படவில்லை. உண்மையுள்ள உக்கிராணக்காரர் களாக நாம் அதைப் பயன்படுத்தவேண்டும். சிலர் தங்களுடைய சொத்தின் ஒரு பகுதிமாத்திரமே கர்த்தருக்குரியது என்று நினைக்கிறார்கள். ஊழியத்திற்கென்றும் தர்ம காரியங்களுக்கென்றும் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்துவிட்டு, மீதமுள்ள தொகையை தங்களுகக்கு எது தகுதியானதென்று அவர்கள் காண்கிறார்களோ அதற்காகப் பயன்படுத்தப்படும்படி அந்தப் பணம் தங்களுக்கே சொந்தமானதென்று கருதுகிறார்கள். இந்த எண்ணம் மிகவும் தவறானது. நம்முடையவைகள் அனைத்தும் கர்த்தருடையவைகளாக இருப்பதினால், நாம் அவைகளை எவ்விதமாகப் பயன்படுத்துகிறோம் என்பது குறித்து அவரிடம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பைசாவிலும் நாம் மிகமிக அதிகமாக தேவனை நேசிக்கிறோமா என்பதும் நம்மைப்போல நமது அண்டை அயலகத்தாரையும் நேசிக்கிறோமா என்பதும் காணப்படும்.

பணத்திற்கான மதிப்பு அதிகம்; ஏனெனில் பணத்தினால் ஏராளமான நன்மைகளைச் செய்யமுடியும். தேவனுடைய பிள்ளைகள் கையில் அது பசியாக இருப்பவர்களுக்கு உணவாகவும், தாகமாக இருப்பவர்களுக்கு பானமாகவும், உடையின்றித் தவிப்பவர்களுக்கு ஆடையாகவும் செயல் படுகிறது. ஒடுக்கப்படுவோர்களுக்கு அது ஒரு பாதுகாப்பு. நோயுற்றோருக்கு உதவிசெய்யக்கூடிய ஒரு வழிமுறையாக இருக்கிறது. வாழ்வின் தேவை களை வழங்கவும் மற்றவர்களை ஆசீர்வதிக்கவும் தேவனுடைய ஊழியத்தை முன்னேற்றுவிக்கவும் பயன்படுத்தப்பட்டால் மாத்திரமே பணம் ஒரு நன்மையானதாக இருக்கும்; இல்லாவிடில், அதற்கு மணலுக்குமேலாக எந்த மதிப்பும் கிடையாது.—Christ's Object Lessons, p. 351.

## 103

# விடுமுறை அன்பளிப்புகள்

விடுமுறை நாட்கள் கிட்டிவருகின்றன. இவ்வுண்மையை முன்வைத்துப் பார்த்தால், அன்பளிப்புகளே தேவைப்படாதோருக்கு அவற்றை அளிப்பதற்கு வருடந்தோறும் எவ்வளவு பணம் செலவழிக்கப்படுகிறது என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது நலமாயிருக்கும். இத்தகைய சிறப்புக்காலங்களில் நமது நண்பர் களிடமிருந்து பரிசுகளை நிறுத்திவைப்பது, ஏறக்குறைய அவர்களைப் புறக்கணித்ததுபோல நமக்குத் தோன்றும் என்று எண்ணுமளவுக்குப் பாரம்பரியப் பழக்கங்கள் மிகவும் பலப்பட்டிருக்கின்றன. ஆனால் பூமிக்குரிய நண்பர்கள் எவரையும்விட நமது இரக்கமுள்ள பரலோகக் கொடையாளர் நம்மீது மிக மேன்மையான உரிமைகோருதல்களைக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் நினைப்போமாக. வருகிற விடுமுறை நாட்களில், நமது காணிக்கைகளைத் தேவனுக்கென்று படைக்கலாமல்லவா? இப்பணியில் சிறுபிள்ளைகள்கூட பங்குபெறலாம். உடை மற்றும் இதர பயனுள்ள பொருட்கள் தகுதியுள்ள ஏழைகளுக்குக் கொடுக்கப்படலாம், இவ்விதமாக எஜமானுக்காக ஒரு ஊழியம் செய்யப்படக்கூடும்.

### சுய இன்பத்தோய்வின் தீமைகள்

உலக மீட்பரின் பிறப்பை நினைவுகூரும் வகையில் கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுகிறது என்பதை நாம் நினைப்போமாக. பொதுவாக இந்த நாள் விருந்திலும், மட்டுமீறிய புசிப்பிலும் கழிக்கப்படுகிறது. அவசியமற்ற சுய இன்பத்தோய்வில் பெரும் பணத்தொகைகள் செலவழிக்கப்படுகின்றன. சரீர, மன மற்றும் ஒழுக்கரீதியான வல்லமையின் இழப்பில் பசியார்வம் மற்றும் புலன்சார்ந்த சிற்றின்பங்கள் திருப்திப்படுத்தப்படுகின்றன. ஆயினும் இது ஒரு பழக்கமாகிவிட்டது. பெருமை, புதுப்பாணி மற்றும் சுவையுணர்வைத் திருப்திசெய்தல் போன்றவை ஒருவருக்கும் உண்மையிலேயே பயன்படாத விதத்தில் மிகுதியான பணத்தொகைகளை விழுங்கியிருக்கின்றன, ஆயினும் தேவனுக்குப் பிரியமல்லாத பண வீணடிப்பை ஊக்கப்படுத்தியிருக்கின்றன. தேவனை விடவும் சுயத்தை மகிமைப்படுத்துவதில் இந்த நாட்கள் செலவழிக்கப்படுகின்றன. ஆரோக்கியம் தியாகம் செய்யப்பட்டிருக்கிறது.

மட்டுமீறிய புசிப்பினால் அல்லது நெறிபிறழச்செய்யும் சிற்றின்பத்தின் மூலமாக அநேகர் தங்களது ஜீவியங்களை இழந்திருக்கின்றனர், இந்த உபாயத்தினால் ஆத்துமாக்கள் கதிகெட்டுப் போயிருக்கின்றன.

தேவனுடைய பிள்ளைகள் ஆடம்பரமில்லாத, எளிமை வாய்ந்த உணவுத்திட்டத்தை அனுபவித்து, அசத்திய இருளில் இருக்கிற ஆத்துமாக்களுக்குச் சத்திய ஒளியை அனுப்புவதில் பயன்படுத்தப்படுமாறு, தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணவளத்தைச் சிறிய, பெரிய காணிக்கைகளாக, அவருடைய கருவூலத்துக்குக் கொண்டுவருவதற்கு உபயோகித்தால் அவர் அவர்களால் மகிமைப்படுவார். விதவை மற்றும் தகப்பனற்றோருக்கு ஆறுதல் சேர்த்து, அவர்களது பசியைத் திருப்திசெய்யும் கொடைகளினால் அவர்களது இருதயங்கள் மகிழும்படிச் செய்திடலாம்.

## தேவனுக்குச் செலுத்தும் கொடைகள்

நிகழ்கால சத்தியத்தை விசுவாசிப்பதாகக் கூறிக்கொள்ளும் யாவரும் ஆண்டுதோறும், குறிப்பாக திரும்பத்திரும்ப வரும் வருடாந்தர விடுமுறைநாட்களில், சுயநலமான மற்றும் பரிசுத்தமற்ற விருப்பங்களுக்காக எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்பதையும், மற்றவர்களுடன் போட்டி போடுவதற்காகக் கிறிஸ்தவமல்லாத பகட்டாரவாரத்திற்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்பதையும் அவர்கள் கணக்கிடுவார்களாக. இவ்விதமாகத் தேவையின்றிச் செலவழிக்கப்பட்டத் தொகையையெல்லாம் கூட்டிப்பாருங்கள், பின்னர் ஆத்துமாவுக்கோ அல்லது சரீரத்துக்கோ சேதமில்லாமல் தேவனுடைய ஊழியத்திற்கென்று ஒப்படைக்கப்பட்ட கொடைகளாக எவ்வளவு சேமிக்கப்பட்டிருக்க முடியும் என்பதை மதிப்பிட்டுப் பாருங்கள்.

தேவனுக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிற சபைகளிலிருந்து கடன்களை அடைப்பதில் உதவுவதற்கு, கொடுக்கிறவரின் திராணிக்குத் தக்கதாக, காசுகளும் அதிக தாராளமான கொடைகளும் கொண்டுவரப் படலாம். பிற்பாடு புதிய களங்களுக்குள் அனுப்பப்படுகிற மிஷனெரிகள் மற்றும் தங்களுக்கே உரித்தான தொழில்துறைகளில் ஆதரிக்கப்படவேண்டிய மற்றவர்கள் இருக்கின்றனர். இத்தகைய மிஷனெரிகள், வாழ்வின் அத்தியாவசியங்கள் என்று நீங்கள் கருதுகிற, நீங்கள் தினமும் அனுபவிக்கிற அதே காரியங்களைக்கூடத் தங்களுக்கென்று மறுத்து, மிகக் கண்டிப்பான சிக்கனத்தைக் கடைபிடித்தாக வேண்டும். அவர்கள் குறைவான ஆடம்பரங்களையே அனுபவிக்கின்றனர்.—Review and Herald, November 21, 1878.

104

# உடையில் சிக்கனம்

தேவனுடைய ஜனங்கள் தங்களது செலவுகளில் கண்டிப்பான சிக்கனத்தைக் கடைபிடிக்கவேண்டும். அப்படிச் செய்தால், “உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்” என்று கூறி அவருக்குக் கொண்டு வருமளவுக்கு ஏதோ கொஞ்சம் இருக்கும். இவ்விதமாகத் தேவனிடமிருந்து பெற்ற ஆசீர்வாதங்களுக்காக அவர்கள் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். இவ்விதமாகவும், அவர்கள் தேவ சிங்காசனத்திற்கு அருகில் தங்களுக்கென்று பொக்கிஷத்தைச் சேர்த்துவைக்க வேண்டியதாயிருக்கிறது.

பசியினாலும் குளிரினாலும் வாடுவோரைப் போஷிக்கவும், உடுத்தவும் பயன்படுத்தப்பட வேண்டிய பெரும் தொகைகளை உலகத்தார் உடைக்காகச் செலவிடுகின்றனர். கிறிஸ்து தமது ஜீவனை யாருக்காகக் கொடுத்தாரோ அவர்களில் அநேகர் மிகவும் மலிவான, மிகவும் சாதாரண உடைகளே போதுமென்று திறந்த மனதுடன் இருக்கிற அதேவேளையில், மற்றவர்களோ ஒருபோதும் முடிவுறாத நவநாகரீகத்தின் கோரிக்கைகளைத் திருப்திப்படுத்தும் முயற்சிகளில் ஆயிரக்கணக்கான டாலர்களை வீணடிக்கின்றனர்.

உலகத்தின் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்திருக்குமாறு கர்த்தர் தமது ஜனங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். தவணையின் கடைசிநாட்களில் நாம் வாழ்ந்து வருகிறோம் என்று விசுவாசிப்பவர்களுக்கு பகட்டழகான அல்லது விலையுயர்ந்த ஆடை ஏற்றதாயிராது. “அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன். ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்” (1 தீமோ. 2:8–10) என்று பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார்.

தேவனுடைய பிள்ளைகளென்று சொல்லுகிறவர்கள் மத்தியிலும்கூட, உடையின் காரியத்தில் தேவைக்கும் அதிகமாகச் செலவழிப்பவர்கள் இருக்கின்றனர். நாம் சுத்தமாகவும், அழகாகவும் உடுத்தவேண்டும்தான், ஆயினும் என் சகோதரிகளே, உங்களுக்கான உங்கள் பிள்ளைகளுக்கான ஆடையை நீங்கள் விலைகொடுத்து வாங்கி, ஏற்பாடு செய்யும்போது,

கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் இன்னும் செய்ப்பட வேண்டியதிருக்கிற வேலையைச் சிந்தித்துப் பாருங்கள். தரமான பொருளை வாங்கி, அதைக் கவனமாக ஆயத்தப்படுத்துவது சரியே. இதுவே சிக்கனம் ஆகும். ஆனால் ஆடம்பரமான ஒப்பனைகள் அவசியமில்லை, அவைகளில் ஈடுபட்டு சுயத்தைத் திருப்திப்படுத்தச் செலவிடப்படும் பணமானது தேவனுடைய ஊழியத்துக்குக் கொடுக்கப்பட்டாக வேண்டும்.

கர்த்தருடைய பார்வையில் உங்களை மதிப்புடையவர்களாக்குவது உங்கள் உடை அல்ல. ஆவியின் குணங்களான கனிவான வார்த்தை, பிறர்நலம் நாடுகிற சிந்தனை போன்றவையே வேதன் மதிக்கிற உள்ளான அலங்கரிப்பாகும். தேவையற்ற ஒப்பனைகளைத் தவிர்த்து வாழ்ந்திடுங்கள், இவ்விதமாகச் சேமிக்கப்படும் பணத்தைத் தேவனுடைய ஊழியத்தின் முன்னேற்றத்துக்காக ஒதுக்கி வையுங்கள்.

## தன்னல மறுப்பு தேவனுக்குப் பிரியமானது

தன்னல மறுப்பின் பாடத்தைக் கற்றுக்கொள்ளுங்கள், உங்கள் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுங்கள். தன்னல மறுப்பினால் சேமிக்கப்படுகிற யாவும் செய்யப்பட வேண்டிய பணியில் இப்பொழுது அவசியப்படுகிறது. துயருற்றோரின் துன்பந் துடைக்கப்படவும், உடையற்றோர் உடுத்தப்படவும், பசித்தோர் போஷிக்கப்படவும் வேண்டும்; இக்காலத்திற்குரிய சத்தியமானது அதை அறியாதோருக்கு அறிவிக்கப்பட வேண்டும்…

நாம் கிறிஸ்துவின் சாட்சிகள், முதலிடம் பெறவேண்டும் என்று தேவன் சொல்லியிருக்கிற காரியங்களுக்கு நாம் செவிமடுக்கக்கூடாதபடிக்கு, நமது நேரத்தையும் கவனத்தையும் அதிகமாக ஈர்த்துக் கொள்ளும்படி உலகப்பிரகாரமான கவர்ச்சிகளுக்கு நாம் அனுமதியளிக்கக்கூடாது. போராடி நாட்டவேண்டிய நிலையில் மேன்மையான நற்காரியங்கள் இருக்கின்றன. “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையம் அவருடைய நீதியையும் தேடுங்கள்.” கிறிஸ்து தாம் செய்ய வந்த பணிக்குத் தம்முடையது அனைத்தையும் கொடுத்தார்; “ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.” “எனக்கும் சீஷராயிருப்பீர்கள்” என்பதே நமக்கான அவரது வார்த்தையாக இருக்கிறது. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்குக் கிறிஸ்து விருப்பத்தோடும், மகிழ்ச்சியோடும் தம்மையே ஒப்புக்கொடுத்தார். மரணபரியந்தம், சிலுவையின் மரணமபரியந்தம் அவர் கீழ்ப்படிந்தவரானார். நம்மையே மறுப்பதைத் துன்பம் என்று நாம் நினைக்கலாமா? அவருடைய பாடுகளுக்குப் பங்காளிகளாவதிலிருந்து நம்மைப் பின்னிழுத்துக் கொள்ளலாமா? நம்மிடமுள்ள அனைத்தையும், நம்மையும் அவருடைய

பணிக்கு அர்ப்பணிக்க நம்மை விருப்பமுள்ளவர்களாக்கும்படி, அவரது மரணம் தேகத்தின் ஒவ்வொரு நரம்பையும் தூண்டிவிட வேண்டும். அவர் நமக்காகச் செய்ததை நாம் எண்ணிப் பார்க்கும்போது, நமது உள்ளங்கள் அன்பினால் நிரம்பிவழிய வேண்டும்.

சத்தியத்தை அறிந்தவர்கள் தேவனுடைய வார்த்தையில் கட்டளையிடப்பட்டுள்ள தன்னல மறுப்பைப் பின்பற்றும்போது, செய்தியானது வல்லமையுடன் முன்செல்லும். ஆத்துமாக்களின் மனமாற்றத்துக்கான நமது ஜெபங்களைக் கர்த்தர் கேட்பார். தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய வெளிச்சத்தைப் பிரகாசிக்கப் பண்ணுவார்கள். அவிசுவாசிகள் அவர்களது நற்கிரியைகளைக் கண்டு, நமது பரமபிதாவை மகிமைப்படுத்துவார்கள்.—Review and Herald, December 1, 1910.

### ஆடம்பரப் பிரியம்

ஆடம்பரமாய் ஜீவிப்பது ஊதாரித்தனத்துக்கே வழிநடத்தும். இது அநேக வாலிபப் பிள்ளைகளின் மனதிலே ஒரு உயர்ந்த வாழ்க்கை வாழ்வதற்கான நினைவையே அழித்துப்போட்டுவிடுகிறது. படிப்பைத் தொடருவதைவிட்டு, தங்கள் இளம்பிராயத்திலேயே வேலையில் அமர்ந்து சம்பாதித்து அதன்மூலம் தங்கள் ஆடைக்குரிய ஆசைகளைத் தீர்த்துக்கொள்ளத் தேடுகின்றனர். இந்த வெறித்தனத்தினால் அநேக வாலிபப்பெண்கள் சீரழிந்து போவதற்கு வழிநடத்தப்படுகிறார்கள்.—Education, p. 247.

### சீர்திருத்தவாதிக்குரிய எளிய மனப்பான்மை

இக்காலத்திற்குரிய பக்திவிநயமான சத்தியங்களை விசுவாசிக்கிற யாவருடய உடை மற்றும் உறைவிடங்களில் சீர்திருத்தவாதிக்குரிய எளிய மனப்பர்னமையும், எளிமை வாழ்வும் முத்திரை பதித்திருக்க வேண்டும். உடையில் அல்லது நமது வீடுகளின் அலங்கரிப்பில் அவசியமின்றி செலவழிக்கப்படுகிற எல்லாப் பணமும் வீணடிக்கப்பட்ட நமது கர்த்தருடைய பணமே ஆகும். அது பெருமையை மகிழ்வடையச் செய்து, தேவனுடைய ஊழியத்தை வஞ்சிப்பதாக இருக்கிறது.—Testimonies for the Church, Vol. 1, p. 189.

## 105

# சுயத்தைத் திருப்திப்படுத்துதல்

நமது ஜனங்களின் இல்லங்களையும், நமது பள்ளிகளையும் நான் பார்வையிடுகிறபோது, மேஜைகள், அலமாரிகள் மற்றும் தட்டுமாடங்கள் என

இருக்கிற இடங்களிலெல்லாம் புகைப்படங்கள் நிரம்பியிருக்கிறதை நான் காண்கிறேன். வலதுபுறத்திலும், இடதுபுறத்திலும் மனித முகங்களின் படங்கள் காணப்படுகின்றன. இவ்வித முறையிலான காரியங்கள் மாற்றப்பட வேண்டும் என் தேவன் விரும்புகிறார். கிறிஸ்து பூமியில் இருந்திருந்தால், "இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போங்கள்" என்று கூறியிருந்திருப்பார். தேவனுக்கென்று புனிதமாய் அர்ப்பணிக்கப்படவேண்டிய நேரத்தையும், சிந்தனையையும் எடுத்துக்கொள்கிற பற்பல விக்கிரகங்களைப்போல, இத்தகைய படங்கள் இருக்கின்றன என்று நான் போதிக்கப் பட்டிருக்கிறேன்.

இத்தகைய புகைப்படங்களுக்குப் பணம் செலவாகிறது. இக்காலத்தில் செய்யப்பட வேண்டிய பணியை அறிந்திருக்கிற நாம், நமது முகங்களையம், நமது நண்பர்களின் முகங்களையும் படங்களாகத் தயாரிப்பதில் தேவனுடைய பணத்தைச் செலவிடுவது ஒப்புக்கொள்ளக்கூடியது தானா? நாம் செலவிடாமல் மீத்துவைக்கிற ஒவ்வொரு டாலரும் தேவனுடைய ஊழியத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டாமா? தேவனுடைய சேவைக் கென்று புனிதமாய் அர்ப்பணிக்கப்படவேண்டிய பணத்தை இத்தகைய படங்கள் எடுத்துக்கொள்கின்றன: அவைகள் தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களிலிருந்து மனதைத் திசைதிருப்புகின்றன.

## விக்கிரகாராதனையின் ஒரு வகைப் பிரிவு

இப்படிப் புகைப்படங்களை எடுப்பதும், பரிமாறிக்கொள்வதும் விக்கிரகாராதனையின் ஒரு வகைப்பிரிவு ஆகும். நமது பார்வையிலிருந்து பரலோகத்தை மறைப்பதற்கு அவனால் ஆன அனைத்தையும் சாத்தான் செய்துவருகிறான். பட விக்கிரகங்களைச் செய்வதினால் நாம் அவனுக்கு உதவாதிருப்போமாக. இத்தகைய மனிதப் படங்கள் சுட்டிக்காட்டுவதைப் பார்க்கிலும் ஒரு மேன்மையான தரத்தை நாம் அடைய வேண்டும். "என்னையன்றி உக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" என்று கர்த்தர் கூறுகிறார். கிறிஸ்துவை விசுவாசிப்பதாக உரிமைகோருகிறவர்கள் அவருடைய சாயலைப் பிரதிபலிக்க வேண்டியவர்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும். அவரது சாயலே சிந்தைக்கு முன்பாக வைக்கப்பட வேண்டும். பேசப்பட்டிருக்கிற வார்த்தைகள் பரலோக ஆவியின் ஏவதலால் கொண்டுசெல்லப்பட வேண்டியிருக்கிறது....

## முதற்காரியங்களுக்கு முதலிடம்

ஞானஸ்நானம் எனும் பக்திவிநயமான சடங்கில் பங்குபெற்றவர்கள், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுவதற்கும், பாவிகளின் இரட்சிப்புக்காக ஊக்கமாக உழைப்பதற்கும் தாங்களே உறுதிபூண்டிருக்கின்றனர். எனது குமாரனின்

மரணத்தினால் மீட்கப்பட்டிருக்கிற வல்லமைகளை நீங்கள் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள்? ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலில் ஒரு மேன்மையான உச்சநிலையை அடைவதற்கு உங்கள் சக்திக்குட்பட்ட அனைத்தையும் நீங்கள் செய்கிறீர்களா? பெருவிளைவுகளை உண்டாக்கவல்ல நித்தியத்தின் கோரிக்கைகளுக்கு இசைவாக உங்கள் ஆவர்வங்களையும், செயல்பாடுகளையும் நீங்கள் ஒழுங்குபடுத்திக் கொள்கிறீர்களா? என்று தேவன் தமது நாமத்தைத் தரித்திருப்போரிடம் கேட்கிறார்.

தேவனுடைய ஜனங்கள் மத்தியில் ஒரு சீர்திருத்தம் உண்டாகட்டும். "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்"–1 கொரி. 10:31. அறியாமையில் அழிந்துகொண்டிருக்கிற ஆத்துமாக்கள் எச்சரிக்கப்படும்படி, சத்தியத்தை அறிவிப்பதற்குக் கர்த்தருடைய பணியின் பாரத்தை அவரால் பெற்றவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தன்னல மறுப்பினால், அவர்களது பணியில் கொஞ்சமாவது நீங்கள் அவர்களுக்கு உதவிட முடியாதா? எழுந்திருங்கள், நீங்கள் மனமாற்றமடைந்தவர்கள் என்பதை உங்கள் தன்னலமற்ற வைராக்கியம் மற்றும் அக்கறையினால் வெளிக்காட்டுங்கள்.

ஆத்துமாக்களை இரட்சிக்கும் பணியில் ஒவ்வொரு டாலரும் அவசியப் படுகிறது. தேவனுடைய ஜனங்கள் என்று சொல்லிக்கொள்பவர்களால் மனித முகங்களைப் படங்களாக எடுப்பதில் முதலீடு செய்யப்பட்ட பணமானது களத்திலுள்ள பல மிஷனெரிகளுக்கு ஆதரவாக இருக்கும். பற்பல சிற்றோடைகள் ஒருங்கிணைக்கப்பட்டால் ஒரு பெரும் நதியாக உருவெடுக்கும். எச்சரிப்பின் கடைசி செய்தியை அறிவிப்பதற்குப் பயன் படுத்தப்படவேண்டிய பணவளத்தைச் சுயநலச் சிற்றின்பத்துக்கான நாம் பயன்படுத்தும்போது நமது கர்த்தரின் உடைமைகளை நாம் கையாடல் செய்கிறோம். சுய திருப்திப்படுத்தலுக்காகக் கர்த்தருடைய பணத்தை நீங்கள் செலவழித்தால், அவரது நன்மைகளைத் தொடர்ந்து உங்கள்மீது பொழிவதற்கு நீங்கள் எப்படி அவரிடம் எதிர்பார்க்கமுடியும்? எஜமானுடைய பணத்தைப் புகைப்படங்களில் சுயநலத்துடன் முதலீடு செய்கிறவர்களை அவர் எப்படி மதிக்கிறார்? அறியாமை இருளில் உள்ளோருக்கு அனுப்பும்படி வாசிப்புப்பொருளை வாங்குவதற்கு அதேபணம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

தேவன் நமக்கு அருளியிருக்கிற சத்தியம் உலகத்திற்கு அறிவிக்கப்படவேண்டும். இப்பணியைச் செய்யும் பாக்கியம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் சத்திய விதையை நாம் விதைக்க வேண்டும். தன்னல மறுப்பு மற்றும்

தற்தியாகத்தைக் கடைபிடிக்கும்படிக் கர்த்தர் நம்மை அழைக்கிறார். சுவிசேஷம் முழுமையான அர்ப்பணிப்பைக் கோருகிறது. ஊழியத்தின் தேவைகள் நம்மால் இயன்ற அனைத்தையும் கொடுக்கும்படி உரிமையுடன் கேட்கிறது. புகைப்படங்களிலுள்ள நம் நாட்டமானது நம் சார்பிலுள்ள ஒரு தன்மகிழ்வூட்டும் செயலாக இருக்கிறது, அது நமக்கு விரோதமான மௌன சாட்சியாயிருக்கிறது. இப்படிப்பட்ட நாட்டத்தினால், கடைசிநாளின் அக்கினிப்பிழம்புகளால் அழிக்கப்படும்படி அஸ்திபாரத்திற்கு மரம், புல், வைக்கோலுமே பெருமளவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

## சுயமறுப்பின் கடமை

வீடுவீடாகச் சென்று, பற்பல புகைப்படங்களைப் பார்த்த பின்னர், இத்தீமைக்கெதிராக நமது ஜனங்களை எச்சரிக்கும்படி நான் போதிக்கப்பட்டேன். தேவனுக்காக நாம் இவ்வளவு செய்ய முடியும். இத்தகைய பட விக்கிரகங்களை பார்வையிலிருந்து அகற்ற முடியும். அவைகளில் நன்மைக்கான வல்லமை இல்லை. மாறாக, ஆண்டவருக்கும், ஆத்துமா வுக்கும் இடையிலே புகுந்துகொள்கின்றன. சத்திய விதைகளை விதைப்பதில் உதவுவதற்கு அவற்றால் ஒன்றும் செய்யக்கூடாது. அவரைப் பின்பற்றுவதாக உரிமைகோருபவர்கள் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ளும்படிக் கிறிஸ்து அழைக்கிறார்.

நமது கல்வி நிறுவனங்கள் தேவ ஆவியானவரின் சீர்திருந்தும் வல்லமையை உணரவேண்டியது அவசியம். “உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.” “நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப் படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது”—மத். 5:13. நமது பள்ளிகள் மற்றும் சுகாதார மையங்களில் ஆசிரியர்களாகப் பணிசெய்கிறவர்கள் அர்ப்பணிப்பில் ஓர் உயர்ந்த தரத்தை அடையவேண்டும். மிஷனெரிகளாகப் புறப்பட்டுப்போவதற்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டிருக்கிற இத்தகைய நிறுவனங்களின் மாணவர்கள் சுயமறுப்பைக் கடைபிடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் தேவனுடைய உக்கிராணக்காரர்கள், “உக்கிரணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.” தேவன் நம்மிடம் நம்பி ஒப்படைத்துள்ள பணத்தைக் கவனத்துடன் சிக்கனமாகக் கையாள வேண்டும். நமக்கு அருளப்பட்டுள்ள தாலந்துகளைச் சிறப்பாகப் பயன்படுத்தினால், தேவனுடைய வருகையில் அவருக்குரியதை வட்டியுடன்

அவருக்கும் நாம் திரும்பச் செலுத்தும் விதத்தில் செயலாற்றலில் நாம் பெருகவேண்டும்.—Review and Herald, June 13, 1907.

**படங்களைத் திரும்பத்திரும்ப எடுத்தல்**

வாலிபர்களின் உள்ளங்கள் தற்பிரியத்தினால் நிரம்பியிருக்கிறது. கலைஞனால் நிழற்படமெடுக்கப்பட்ட தங்களது முகங்களைக் காண்பதி லிருக்கும் அவர்களது வாஞ்சையே இதை வெளிப்படுத்துகிறது; ஒருமுறை எடுக்கப்பட்டதில் அவர்கள் திருப்தியடையாமல், தங்களது முந்தைய முயற்சிகள் அனைத்தையும்விடக் கடைசியாய் எடுப்பது நேர்த்தியாயிருக்கும், முதலில் எடுக்கப்பட்டதை விட இது உண்மையிலே மிக அழகாகத் தோன்றும் என்று ஒவ்வொரு முறையும் நம்பிக்கொண்டு, தங்களது படங்களுக்காக மீண்டும் மீண்டும் உட்காருகின்றனர். இவ்விதமாக அவர்களது கர்த்தரின் பணம் வீண்செலவு செய்யப்படுகிறது, என்ன சாதிக்கப்பட்டது?—Testimonies for the Church, Vol. 1, p. 500.

## 106

# சிக்கனமும் உதார குணமும்

கஞ்சத்தனம் மற்றும் குறகிய மனப்பான்மையுடன் சிக்கனத்தைக் குழப்பிக்கொண்டு, அதனை அசட்டை செய்கிறவர்கள் அநேகர். ஆனால் சிக்கனம் என்பது பரந்த தாராள குணத்துடன் ஒத்துச் செல்லக்கூடியதாகும். சொல்லப்போனால், சிக்கனம் இல்லையேல், உண்மையான தாராள குணம் இல்லை. நாம் கொடுப்பதற்காகச் சேமிக்க வேண்டும்.

சுயமறுப்பின்றி எவரும் உண்மையான உதாரகுணத்தைச் செயற்படுத்தமுடியாது. எளிமையான வாழ்க்கை, சுயமறுப்பு மற்றும் கண்டிப்பான சிக்கனத்தினால் மட்டுமே கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக நமக்கு நியமிக்கப்பட்டுள்ள பணியை நிறைவேற்ற நம்மால் இயலும். பெருமையும், உலகப் புகழார்வமும் நமது இருதயங்களைவிட்டு அகற்றப்பட வேண்டும். கிறிஸ்துவின் வாழ்வில் வெளிப்பட்ட தன்னலமின்மை எனும் கொள்கை நமது பணி அனைத்திலும் கொண்டுவரப்பட வேண்டும். நமது இல்லங்களின் சுவர்களிலும், படங்களிலும், தட்டுமுட்டுச் சாமான்களிலும், "துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்" என்று நாம் வாசிக்கவேண்டும். "வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரங்கொடு" என்று நமது ஆடை அலமாரிகளில், தேவனுடைய விரலினால் எழுதப்பட்டிருப் பதைப் போன்று, எழுதியிருக்க நாம் காணவேண்டும். உணவு

அறையில் அபரிமிதமான உணவு வைக்கப்பட்டிருக்கிற மேஜையின்மீது, “பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்க வேண்டும் அல்லவா?” என்றெழுதியிருப்பதை நாம் காணவேண்டும்.

## பயன்பாட்டின் திறந்த வாசல்கள்

பயனுடைமைக்கான ஆயிரக்கணக்கான வாசல்கள் நமக்கு முன்பாகத் திறந்திருக்கின்றன. நம்மிடத்தில் இருக்கிற குறைவான மூலாதாரங்களைக் குறித்து அடிக்கடி புலம்புகிறோம், மாறாக, கிறிஸ்தவர்கள் முழுமையான ஊக்கத்துடனிருந்தால், மூலாதாரங்களை ஆயிரம் மடங்காக அவர்கள் பெருக்கக்கூடும். சுயநலமும், சுய இன்பத்தோய்வுமே நமது பயன்பாட்டிற்கான பாதையை அடைக்கின்றன.

மேன்மையான பிரயோஜனத்துக்கென்று கொடுக்கப்பட வேண்டிய எண்ணத்தையும், நேரத்தையும், பெலத்தையும் கவர்ந்துகொள்கிற காரியங்களுக்கும், வெறுமனே விக்கிரகங்களாயிருக்கிற காரியங்களுக்கும் எவ்வளவு பணம் செலவழிக்கப்படுகிறது! விலையுயர்ந்த வீடுகள் மற்றும் அணிகலன்களுக்காக, சுய இன்பங்கள், ஆடம்பரமான, ஆரோக்கியமற்ற உணவு மற்றும் தீங்கு விளைவிக்கும் நாட்டங்களுக்காக எவ்வளவு பணம் வீணடிக்கப்படுகிறது! ஒருவருக்கும் பயன்படாத பரிசுப்பொருள்களின்மீது எவ்வளவு வீண்செலவு செய்யப்படுகிறது! சோதனைக்காரனிடமிருந்து ஆத்துமாக்களை மீட்பதற்கு செலவிடுவதைக் காட்டிலும், தேவையற்ற, பெரும்பாலும் தீங்கு விளைவிக்கும் காரியங்களுக்கே அதிகமாக, பன்மடங்கு அதிகமாக கிறிஸ்தவர்கள் என்று கூறுபவர்கள் இன்றைக்குச் செலவிடுகின்றனர்.

கிறிஸ்தவர்கள் என்று கூறுபவர்களில் அநேகர், பிறரது தேவைகளுக்கென்று கொஞ்சம்கூட இல்லாதபடிக்கு உடைக்காக மிக அதிகமாகச் செலவழிக்கின்றனர். கஷ்டப்பட்டுத் தங்களுக்கான மிக எளிமையான ஆடையைத் தேடிக்கொள்வோரின் தேவைகளைக் குறித்த எண்ணமற்று, ஆடம்பரமான ஆபரணங்களுக்கும், விலையுயர்ந்த ஆடையும் தங்களுக்கு இருக்கவேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

## துணிக்கைகளைச் சேமித்தல்

என் சகோதரிகளே, வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இசைவாக உங்களது உடுத்தும் பழக்கத்தை நீங்கள் கொண்டுவந்தால், உங்களத மிக ஏழ்மையான சகோதரிகளுக்கு உதவும்விதத்தில் ஒரு மாவளம் உங்களிடத்தில் இருக்கும். உங்களுக்குப் பணம் மட்டுமல்ல, நேரமும் இருக்கும். பெரும்பாலும் இதுவே அதிகத்தேவையாயிருக்கிறது. உங்கள் ஆலோசனைகள், உங்கள் சாமர்த்தியம் மற்றும் திறமையினால்

நீங்கள் அநேகருக்கு உதவிசெய்யலாம். எளிமையோடும் அதேநேரம் சுவைநயத்தோடும உடுத்துவது எப்படி என்று அவர்களுக்குக் காட்டுங்கள். அநேகப் பெண்கள் மற்றவர்களின் ஆடையுடன் அதிர்ச்சியுட்டும்விதத்தில் ஒப்பிட்டுப் பார்த்தால், தங்களது ஆடைகள் அழுக்கும், அலங்கோலமுமாக இருப்பதனால், தேவனுடைய ஆலயத்திற்கு வராமல் ஒதுங்கிக் கொள்கின்றனர். எளிதில் புண்படும் குணமுள்ள அநேகர் இந்த வித்தியாசத்தினால் ஒரு கசப்பான தாழ்வுமனப்பான்மையையும், அநீதி இழைக்கப்பட்டுவிட்டது போன்ற உணர்வையும் கொண்டிருக்கின்றனர். இதினிமித்தம் அநேகர் ஆன்மீகத்தின் உண்மைநிலையைச் சந்தேகிப்பதற்கும், சுவிசேஷத்துக்கெதிராகத் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துவதற்கும் நடத்தப்படுகின்றனர்.

“ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு, மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள்” என்று கிறிஸ்து நமக்குக் கட்டளையிடுகிறார். பஞ்சம், இரத்தஞ்சிந்துதல், நெருப்பு மற்றும் வாதையினால் அனுதினமும் ஆயிரங்கள் அழிந்துகொண்டிருக்கும் வேளையில், சக மனிதரை நேசிக்கும் ஒவ்வொருவரும் ஒரு மனிதனுக்காவது தான் நன்மைசெய்யும்விதத்தில், ஒன்றும் சேதப்படாமல், ஒன்றும் அவசியமின்றிச் செலவழிக்கப்படாமல் பார்த்துக்கொள்வது ஏற்றதாயிருககிறது.

நமது நேரத்தை வீணடிப்பதும் தவறாகும், நமது எண்ணங்களை வீணடிப்பதும் தவறாகும். தன்னல நாட்டத்துக்கு நாம் தாரைவார்க்கும் ஒவ்வொரு நொடியையும் நாம் இழக்கிறோம். ஒவ்வொரு நொடியும் கணக்கிடப்பட்டுச் சரியாகச் செலவழிக்கப்பட்டால், நமக்காகவும் உலகத்துக்காகவும் நாம் செய்யவேண்டிய அனைத்திற்கும் நமக்கு நேரம் இருக்கும். பணச் செலவழிப்பிலும், நேரம், பெலன், வாய்ப்புகளைப் பயன்படுத்துவதிலும், வழிகாட்டுதலுக்காக ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனை நோக்கிப் பார்க்கட்டும். “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்”–யாக். 1:5.—Ministry of Healing, pp. 206–208.

### சிக்கனத்துக்கான வழிகாட்டி

ஒவ்வொரு விஷயத்திலும் சிக்கனத்தைக் கடைபிடிப்பது எப்படி யென்று இங்கு குறிப்பிட அவசியமில்லை. தேவனுக்கென்று தங்கள் இருதயங்களை முற்றிலும் அர்ப்பணித்தவர்கள், அவரது வார்த்தையைத் தங்களது வழிகாட்டியாகக் கொண்டிருப்பவர்கள், வாழ்வின் அனைத்துக் கடமைகளிலும் தங்களை நடத்திக்கொள்வது எப்படி என்பதை அறிவார்

கள். சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கிற இயேசுவிடமிருந்து அவர்கள் கற்றுக்கொள்வார்கள்; கிறிஸ்துவின் சாந்தகுணத்தை வளர்த்துக் கொள்வதினால், எண்ணற்ற சோதனைகளுக்கெதிராக அவர்கள் கதவை அடைப்பார்கள்.—Fundamentals of Christian Education, p. 152. ★

# பகுதி 11

# குடும்ப வாழ்வு

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 107 | கிறிஸ்தவக் குடும்பம் | 291 |
| 108 | குடும்பக் கடமைகளில் உண்மை | 292 |
| 109 | குடும்ப பக்தி | 293 |
| 110 | இல்லம் ஒரு பயிற்சிப் பள்ளி | 295 |
| 111 | பெற்றோர்களுக்கான மரியாமையும்அன்பும் | 297 |
| 112 | இல்லத்தில் ஓர் ஆசீர்வாதம் | 299 |
| 113 | இல்லத்தில் குணத்தைக் கட்டுதல் | 300 |
| 114 | பொறுப்புகளைச் சுமக்கவேண்டிய வாலிபர்கள் | 304 |
| 115 | ஆராதனை நேரம் | 306 |
| 116 | ஆன்மீக விருந்தோம்பல் | 307 |

## பகுதி 11

# குடும்ப வாழ்வு

மனித இனத்தின் ஆதிநிலை திரும்புதலும், உயர்த்தப்படுதலும் குடும்பத்தில் தொடங்குகிறது. பெற்றோரின் பணியே மற்ற அனைத்திற்கும் அடிப்படை. குடும்பங்களால் ஆனதே, குடும்பங்களின் தலைவர்களால் ஆக்கப்படுவதே சமுதாயம் ஆகும். இருதயத்தினின்று "ஜீவ ஊற்று" புறப்படும்; சமுதாயம், சபை மற்றும் தேசத்தின் இருதயம் குடும்பமே ஆகும். சமுதாயத்தின் நலனும், சபையின் ஜெயமும் தேசத்தின் வளமும் குடும்ப செல்வாக்குகளைச் சார்ந்தே அமைகின்றன.—Ministry of Healing, p. 349.

## 107

# கிறிஸ்தவக் குடும்பம்

தேவனை நேசிப்பதாகக் கூறுகிறவர்கள், பூர்வத்திலிருந்த முற்பிதாக் களைப்போல, தங்களுடைய கூடாரத்தை அவர்கள் போடுகிற இடங்களி லெல்லாம் கர்த்தருக்கென்று ஒரு பலிபீடத்தை எழுப்பவேண்டும். ஒவ்வொரு வீடும் ஒரு ஜெபவீடாக இருக்கவேண்டிய காலம் ஒன்று இருக்குமானால், அது இதுதான். தகப்பன்மார்களும், தாய்மார்களும் தங்களுக்காகவும் தங்கள் பிள்ளைகளுக்காகவும் தாழ்மையான வேண்டுதலில் தேவனை நோக்கி அடிக்கடி தங்களது இருதயங்களை உயர்த்த வேண்டும். குடும்பத்தின் ஆசாரியனாகத் தகப்பன், காலை மாலை பலியைத் தேவனுடைய பலிபீடத்தில் படைக்கும் வேளையில், மனைவியும் பிள்ளைகளும் ஜெபம் மற்றும் துதியில் இணைந்துகொள்ளட்டும். அப்படிப்பட்ட குடும்பத்தில் தரித்திருக்க இயேசு விரும்புவார்.

ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்திலிருந்தும் ஒரு தூய ஒளி பிரகாசிக்க வேண்டும். அன்பு செயலில் வெளிப்படவேண்டும். பிறர்நலத்தின்மீது ஆர்வம் காட்டுகிற இரக்கமாகவும், மென்மையான, சுயநலமற்ற மரியாதைப் பண்பாகவும் அது தன்னை வெளிக்காட்டி, குடும்பத்தின் எல்லா உறவிலும் அது வழிந்தோட வேண்டும். இந்நியதி செயல்படுத்தப்படுகிற குடும்பங்கள்—தேவன் ஆராதிக்கப்படுகிற, மெய்யான அன்பு ஆளுகைசெய்கிற குடும்பங்களாக இருக்கின்றன. இத்தகைய குடும்பங்களிலிருந்து காலை, மாலை ஜெபமானது நறுமண தூபம்போலத் தேவனைநோக்கி மேலெழும்புகிறது. வேண்டுதல்

செய்கிறவர்களின்மீது காலைப் பனித்துளிபோல அவரது இரக்கங்களும், ஆசீர்வாதங்களும் இறங்கி வருகின்றன.

நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவக் குடும்பமே கிறிஸ்தவ மார்க்கத்தினுடைய உண்மைநிலையின் சார்பிலான ஒரு வல்லமைமிகுந்த வாதமாக—அவிசுவாசி எதிர்பேசக்கூடாத ஒரு வாதமாக இருக்கிறது. குடும்பத்தில் கிரியைசெய்து, பிள்ளைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிற ஒரு செல்வாக்கு உண்டு என்பதையும், ஆபிரகாமின் தேவன் அவர்களுடன் இருக்கிறார் என்பதையும் அனைவரும் காணமுடியும்.—Patriarchs and Prophets, p. 144.

## 108

# குடும்பக்கடமைகளில் உண்மை

வாலிபர்கள் தங்களது சொந்தக் குடும்பங்களில், பாசம் மற்றும் உண்மையான அக்கறையினால் தாய், தகப்பன், சகோதரர்கள் மற்றும் சகோதரிகளைச் சந்தோஷமடையச் செய்வதே அவர்கள்மீது சுமந்த மேலான கடமையாகும். தன்னலம் மறுத்து, தன்னலம் மறந்து மற்றவர்களுக்காகச் செயல்படுவதையும், பராமரிப்பதையும் இங்கே அவர்கள் காண்பிக்க முடியும். இப்பணியைச் செய்வதினால் பெண் ஒருபோதும் இழிநிலை அடைவதில்லை. அவள் நிறைவேற்றக்கூடிய மகா புனிதமான, உயர்வான அலுவலாக அது இருக்கிறது. சகோதரர்கள்மீது ஒரு சகோதரி எப்படிப்பட்ட ஒரு செல்வாக்கைக் கொண்டிருக்கலாம்! அவள் சரியாயிருந்தால், தனது சகோதரர்களின் குணத்தை அவள் தீர்மானிக்கலாம். அவளது ஜெபங்கள், அவளது தயவு மற்றும் அவளது பாசம் வீட்டில் பெரிய கிரியையைச் செய்திடும்.

என் சகோதரியே, இத்தகைய உயர்தரமான குணங்கள் முதலாவது உன்னில் இல்லாவிட்டால் ஒருபோதும் மற்றோரது மனங்களுக்குக் கொண்டு செல்ல முடியாது. உங்கள் இருதயமானது மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிற மனதிருப்தி, பாசம், தயவு மற்றும் ஒவ்வொரு இருதயத்தையும் சென்றடைகிற புன்னகைபூத்த மனநிலை யாவும் உங்கள்மீது பிரதிபலிக்கும். கிறிஸ்து இருதயத்தில் ஆளுகை செய்யாவிட்டால், அங்கே அதிருப்தியும் ஒழுக்கக்கேடும் உண்டாயிருக்கும். நாம் மற்றவர்களுக்குக் கொடுக்க விரும்பாததைச் சுயநலம் அவர்களிடத்திலிருந்து உரிமையுடன் கேட்கும்…

ஆத்துமாவைச் சோதித்து, தைரியத்தைக் கோருவது ஒரு மாபெரும் பணி மற்றும் மாபெரும் போராட்டங்கள் மட்டுமல்ல. அனுதின வாழ்வு அதன் குழப்பங்களையும், துன்பங்களையும், சோர்வுகளையும் கொண்டுவருகிறது. தாழ்மையான வேலைக்கே வழக்கமாகப் பொறுமையும், மனோபலமும் தேவையாயிருக்கிறது. அனைத்துச் சங்கடங்களையும் சந்தித்து, சாதனைபுரிய தன்னம்பிக்கையும், திடமான நோக்கமும் தேவைப்படும். ஒவ்வொரு இடத்திலும் உங்கள் தேறுதலும், ஆறதலுமாயிருப்பதற்குக் கர்த்தரை உங்களுடன் நிற்கும்படிக்குத் தக்கவைத்துக்கொள்ளுங்கள்.— Testimonies for the Church, Vol. 3, pp. 80,81.

## 109

# குடும்ப பக்தி

குடும்ப பக்தி பெரிதும் தேவையாயிருக்கிறது. குடும்பத்தில் நமது வார்த்தைகள் சரியான தன்மையுள்ளதாக இருக்கவேண்டும் அல்லது சபையில் நமது சாட்சிகளால் ஒரு பயனும் விளையாது. சாந்தத்தையும், இரக்கத்தையும், மரியாதைப் பண்பையும் உங்கள் குடும்பத்தில் நீங்கள் வெளிப்படுத்தாவிட்டால், உங்கள் பக்தி வீணாயிருக்கும். குடும்ப பக்தி அதிக உண்மையுள்ளதாயிருந்தால், சபையில் அதிக வல்லமை இருக்கும்.

### இல்லத்தில் இனிமையற்ற பேச்சு

பொறுமையற்ற வார்த்தைகளின் உச்சரிப்பினால் குடும்பவட்டத்தில் எவ்வளவு தீமை விளைகிறது; ஒருவரது பொறுமையற்ற பேச்சு அதே ஆவி மற்றும் பாணியில் எதிர்த்துப்பேசுவதற்கு அடுத்தவரையும் வழிநடத்தும். பின்னர் பதிலுக்குப் பதில் வார்த்தைகள், சுயநீதியின் வார்த்தைகள் வெளிவரும். இப்படிப்பட்ட வார்த்தைகளினால் ஒரு பாரமான, வருத்தமுண்டாக்கும் நுகம் உங்கள் கழுத்துக்கு உற்பத்தியாகிறது. இத்தகைய கசப்பான எல்லா வார்த்தைகளும் ஒரு தீமைபயக்கும் அறுவடையுடன் உங்கள் அத்துமாவுக்கே திரும்பிவரும்.

அப்படிப்பட்ட பேச்சுமுறையில் ஈடுபடுகிறவர்கள் வெட்கத்தையும், தன்மரியாதை இழப்பையும், தன்னம்பிக்கை இழப்பையும் அனுபவிப்பார்கள், தன்னடக்கமின்றி இவ்விதமாகப் பேசுவதற்குத் தங்களையே அனுமதித்துக் கொண்டதற்காக அவர்கள் கசப்பான மனஉறுத்தலும், வருத்தமும் அடைவார்கள். இவ்விதமான வார்த்தைகள் ஒருபோதும் பேசப்படாதிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும். எல்லாக் கோபமூட்டுதலைத் தவிர்ப்பதற்குத்

திராணியுள்ளவர்களாவதற்கும், கிறிஸ்துவைப்போன்ற சாந்தம் மற்றும் பொறுமையுடன் எல்லாக் காரியங்களையும் சகித்துக்கொள்வதற்கும் கிருபை யின் தைலத்தை இருதயத்தில் பெற்றிருப்பது எவ்வளவு நலமாக இருக்கும்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களின் நிபந்தனைகளை நீங்கள் நிறைவேற்றினால், வாக்குத்தத்தங்கள் உங்களிடத்தில் நிறைவேறும். உங்கள் மனம் தேவனை உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தால், துன்பமும் சோதனையும் உங்களுக்கு வரும்போது நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையி லிருந்து மனச்சோர்வின் பள்ளத்தாக்குகள் செல்லமாட்டீர்கள். சந்தேகத் தையும், வருத்தத்தையும் பிறரிடம் பேசமாட்டீர்கள்.

சாத்தான் நமது எண்ணங்களை வாசிக்கமுடியாது, மாறாக நமது செயல்களை அவன் காணவும், நமது வார்த்தைகளைக் கேட்கவும் முடியும்; மனிதக்குடும்பம் பற்றிய தனது நெடுங்கால அறிவினால், நமது குணத்திலுள்ள பெலவீனமான விஷயங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் விதத்தில் அவன் தனது சோதனைகளை வனையமுடியும்! நம்மீது அவன் ஜெயம்பெறுவது எப்படி என்ற இரகசியத்தை நாம் எவ்வளவாக அவனுக்கு வெளியிட்டு விடுகிறோம். ஆ! நமது வார்த்தைகளையும், செயல்களையும் நாம் கட்டுப்படுத்தினால் நலமாயிருக்கும்! நமது வார்த்தைகள் அப்படிப்பட்ட ஒழுங்குடனிருந்தால் நியாயத்தீர்ப்பு நாளில் அவற்றின் பதிவேட்டைச் சந்திப்பதற்கு வெட்கப்படாதபடிக்கு எவ்வளவு பெலனுள்ளவர்களாக நாம் மாறுவோம். நாம் அவற்றை உச்சரிக்கும்போது அவைகள் காணப்படுவதைவிட தேவனுடைய நாளில் எவ்வளவு வித்தியாசமாக அவைகள் காட்சியளிக்கும்.—Review and Herald, February 27, 1913.

## குடும்பம் ஒரு பொருள் பாடம்

குடும்பத்தின் ஊழியம் அதன் அங்கத்தினர்களையும் தாண்டிச் செல்லுகிறது. வாழ்வின் உண்மை நியதிகளின் மேன்மையை விளக்கிக்காட்டுகிற ஒரு பொருட்பாடமாகக் கிறிஸ்தவக் குடும்பம் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஓர் உதாரணம் உலகில் நன்மைக்கான வல்லமையாக இருக்கும். மனித இருதயங்கள் மற்றும் ஜீவியங்களின்மீது ஒரு உண்மையான குடும்பத்தின் செல்வாக்கு, பிரசங்கிக்கப்படுகிற எந்தப் பிரசங்கத்தைக் காட்டிலும் மிகவும் வல்லமையுள்ளதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு குடும்பத்திலிருந்து வாலிபர்கள் சமுதாயத்திற்குள் செல்கையில், அவர்கள் கற்றுக்கொண்டிருந்த பாடங்கள் தெரிவிக்கப்படுகின்றன. வாழ்வின் மிக உயர்தரமான கொள்கைகள் மற்ற குடும்பங்களுக்கும் அறிமுகப்படுத்தப்படுகின்றன, ஓர் மேம்படுத்துகிற செல்வாக்கு சமுதாயத்தில் கிரியை செய்கிறது.—Ministry of Healing, p. 352.

## 110

# இல்லம் ஒரு பயற்சிப் பள்ளி

தேவனுடைய சேவைக்கு வாலிபர்கள் தங்களை அர்ப்பணிப்பதால், பெலவீன சிந்தையுள்ளவர்களாகவோ, திறமையற்றவர்களாகவோ அவர்கள் மாறுவதில்லை. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். மாபெரும் இரட்சிப்பை அலட்சியம்பண்ணுகிற திறமைமிகுந்த, கற்றறிந்த மனிதனைக் காட்டிலும் தேவனை நேசித்து, அவருக்குப் பயப்படுகிற, வயதில் சிறிய குழந்தையே அவருடைய பார்வையில் உயர்ந்தவனாயிருக்கிறான். தங்களது இருதயங்களையும் ஜீவியங்களையும் தேவனுக்கென்று அர்ப்பணிக்கிற வாலிபர்கள், அப்படிச் செய்வதால், சகல ஞானத்திற்கும், திறமைக்கும் ஊற்றானவருடன் உள்ள தொடர்பில் தங்களை வைத்துக்கொள்கின்றனர்.

### அனுதினக் கடமைகள்

சிறுபிள்ளைகள், அனுதினக் கடமைகளின் தாழ்மையான வட்டத்தை, கர்த்தரால் தங்களுக்கென்று குறிக்கப்பட்ட ஒரு பாதையாகவும், உண்மையான, திறமையான சேவையை அளிக்கும்படித் தங்களைப் பயிற்றுவிக்கிற ஒரு பள்ளிக்கூடமாகவும் கருதும்படி போதிக்கப்பட்டால், அவர்களது பணி எவ்வளவு அதிக இனிமையானதாகவும், மதிப்பிற்குரியதாகவும் காட்சியளிக்கும். ஒவ்வொரு கடமையையும் கர்த்தருக்கென்று செய்வதுபோல செய்தலானது, மிகத்தாழ்வான பணிக்கும் ஒரு கவர்ச்சியைக் கொடுக்கிறது. பூமியிலுள்ள பணியாளர்களைப் பரலோகத்தில் தேவசித்தத்தைச் செய்கிற பரிசுத்த ஜீவிகளுடன் இணைக்கிறது.

தூதர்கள் தங்களுடைய உயர் எல்லையில் எவ்வளவு உண்மையாய்ச் செயல்படுகின்றனரோ அதுபோல நமக்கு நியமிக்கப்பட்ட இடத்தில் நமது கடமைகளை நாம் நிறைவேற்றிட வேண்டும். தங்களைத் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்று எவர்கள் உணர்கின்றனரோ, அவர்களே எவ்விடத்திலும் நம்பகமான மனிதர்களாக இருப்பார்கள். பரலோகத்தின் குடிமக்கள் பூமியின் சிறந்த குடிமக்களாக விளங்குவர். தேவனுக்குரிய நமது கடமை பற்றிய சரியான கண்ணோட்டம், சக மனிதர்களுக்குரிய நமது கடமைபற்றிய தெளிவான புரிதல்களுக்கு வழிநடத்தும்.

### தாயின் வெகுமதி

நியாய சங்கம் உட்கார்ந்து, புத்தகங்கள் திறக்கப்பட்டு, “நல்லது உண்மையும் உத்தமமுள்ள ஊழியக்காரனே” என்ற மாபெரும் நியாயாதி

பதியின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டு, அழியாத மகிமை பொருந்திய கிரீடம் ஜெயம் பெற்றவருடைய சிரசின்மீது வைக்கப்படும்போது, அநேகர் கூடியிருக்கும் அண்டசராசரத்தின் முன்பாக தங்கள் கிரீடங்களை உயர்த்திக்காட்டி, தங்கள் தாய்மாரைச் சுட்டிக்காட்டி: "நான் இப்பொழுதிருக்கின்ற நிலைக்கு தேவனுடைய கிருபையினால் என்னைக்கொண்டுவந்தவர் எனது அன்னையே. அவரது ஆலோசனைகளும் அவரது ஜேபங்களும் என்னுடைய இந்த நித்தியஇரட்சிப்பை நான்பெற்றுக்கொள்ளக் காரணமாக இருந்தன" என்று கூறுவார்கள்.—Last Day Events, pp. 308–309.

பரவிவரும் அக்கிரமத்தின் மத்தியில் நேர்மைக்காக உறுதியுடன் நிற்கவும், தீமையின் வளர்ச்சியைத் தடைசெய்து, ஒழுக்கத்தையும், தூய்மையையும், உண்மையான வீரத்தையும் முன்னேற்றுவிக்கத் தங்களுடைய சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்யவும் வாலிபர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். சிறுபிராய வாழ்வில் மனதின்மீதும், குணத்தின்மீதும் ஏற்படுத்தப்பட்ட முத்திரைப் பதிப்புகள் ஆழமானதாகவும், நீடிக்கக்கூடியதாகவும் இருக்கின்றன. ஞானமற்ற பயிற்சியோ அல்லது தீய தோழமைகளோ வாலிப சிந்தையின் மீது தீமைக்கான ஒரு செல்வாக்கைப் பெருமளவில் உண்டுபண்ணும்; அதைத் துடைத்தழிப்பதற்கான எல்லாப் பிற்கால முயற்சியும் வல்லமையற்றதாகிவிடும்.—The Signs of the Times, Nov 3, 1881.

## இல்லப் பயிற்சியின் சாத்தியக்கூறுகள்

இன்றைய பிள்ளைகள் மற்றும் வாலிபர்களால் நாளைய சமுதாயம் தீர்மானிக்கப்படுகிறது. இந்தப் பிள்ளைகளும், வாலிபர்களும் எப்படி யிருப்பார்கள் என்பது இல்லத்தைப் பொறுத்தே அமைகிறது. சரியான இல்லப் பயிற்சியின் குறைபாட்டை, மானிட வர்க்கத்தின் சாபமாயிருக்கிற வியாதி, துன்பம் மற்றும் குற்றச் செயலின் பெரும்பங்களிப்பில் கண்டறியலாம். இல்லற வாழ்வு தூய்மையும், உண்மையுமுள்ளதாக இருந்தால், அதின் பராமரிப்பலிருந்து வெளியே செல்கிற பிள்ளைகள் வாழ்வின் பொறுப்புகளையும், ஆபத்துகளையும் சந்திப்பதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தால், உலகத்தில் என்ன ஒரு மாற்றம் காணப்படும்!—Ministry of Healing, p. 351.

# 111

# பெற்றோர்களுக்கான மரியாதையும் அன்பும்

கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்கள் இருதயத்தில் அவர் தங்கும்படி இடமளித்து, முதன்மையானவராக அவரை அங்கே சிங்காசனத்தில் அமர்த்த வேண்டும். அவர்களது இல்லற வாழ்வில் அவரது ஆவியையும் குணத்தையும் பிரதிபலித்து, தங்களுடன் தொடர்புக்குள் வருவோரிடம் மரியாதையும், இரக்கத்தையும் காட்டவேண்டும்.

சத்தியத்தை அறிந்திருப்பதாகக் கூறும் அநேகம் பிள்ளைகள் இருக்கின்றனர். பெற்றோர்களுக்குரிய மரியாதையையும் பாசத்தையும் அவர்கள் அளிப்பதில்லை, தகப்பனுக்கும் தாய்க்கும் அற்பமான அன்பையே அவர்கள் வெளிக்காட்டுகின்றனர், அவர்களது விருப்பங்களைத் தள்ளிப் போட்டு அல்லது அவர்களது கவலையைப் போக்க வகைதேடுவதில் கனம்பண்ணத் தவறிவிடுகின்றனர். கிறிஸ்தவர்கள் என்று கூறும் அநேகர், “உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக,” என்பதன் பொருளை அறியாதிருக்கிறார்கள். அதன் விளைவாக, “உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கு”— என்பதன் பொருளையும் சிறிதளவே அறிந்துகொள்வார்கள்.

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் மத்தியில் இருப்பதாக நமத வாலிபர்கள் கூறுகின்றனர், ஆயினும் அவர்களில் அநேகர் ஐந்தாம் கற்பனையைப் புறக்கணித்து, உடைக்கின்றனர்; இக்கட்டளையைக் கடைபிடித்துத் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுகிறவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள வளமான ஆசீர்வாதம் அவர்களுக்கு வாய்ப்பதில்லை. தங்கள் பாவத்திற்காக மனந்திரும்பி, கிறிஸ்துவின் கிருபையின்மூலமாகத் தங்களது பழக்கங்களையும், குணத்தையும் சீரமைத்துக் கொள்ளாவிட்டால், நித்தியமாக வாழப்போகிற புதிய பூமியில் அவர்கள் ஒருபோதும் பிரவேசிப்பதில்லை. தங்களது பெற்றோர்களை மதித்து நேசியாதவர்கள் தேவனையும் மதித்துக் கனப்படுத்தமாட்டார்கள். தங்களது தெய்வபக்திமிக்க பெற்றோர்களைக் கனம்பண்ணத் தவறி, பரீட்சைக்கு நில்லாமல் போனவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியவும் தவறுவார்கள், ஆகையால் வாக்குத்தத்தத் தேசத்துக்குள் நுழைய அவர்கள் எதிர்பார்க்கக் கூடாது.

## கீழ்ப்படிதலில் ஓர் முடிவு

வாலிபர்கள் இப்பொழுது தங்களது நித்திய முடிவைத் தீர்மானித்துக் கொண்டிருக்கின்றனர். “உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கு” என்ற ஒரு வாக்குத்தத்தத்தையும் தேவன் இணைத்திருக்கிறதான கற்பனையை எண்ணிப்பார்க்கும்படி நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். பிள்ளைகளே, நித்திய வாழ்வை நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படியானால், உங்கள் பெற்றோர்களை மதித்து, கனம்பண்ணுங்கள்...

அவர்களுக்கு அன்பும் கீழ்ப்படிதலும் காட்டுவதில் நீங்கள் பாவம் செய்திருந்தால், இப்பொழுதே காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளத் தொடங்குங்கள். உங்களுக்கு வேறு எந்த வழியும் இல்லை; அது உங்களுக்கு நித்திய வாழ்வின் இழப்பாக இருக்கும். இருதயத்தை ஆராய்கிறவர் உங்களது பெற்றோர்களிடம்ட நீங்கள் கொண்டுள்ள மனநிலையை அறிந்திருக்கிறார்; பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் பொற்தராசுகளில் சன்மார்க்கக் குணத்தை அவர் நிறுத்துப்பார்க்கிறார். ஓ, உங்கள் பெற்றோர்களை நீங்கள் அலட்சியப் படுத்தினதை அறிக்கையிடுங்கள், அவர்களிடத்திலான உங்களது அக்கறை யின்மையையும், தேவனுடைய பரிசுத்தக் கற்பனையை நீங்கள் அவமதித் ததையும் அறிக்கையிடுங்கள்...

உங்கள் பெற்றோர்களின் இருதயங்கள் மென்மையான அனுதாபத் துடன் உங்களை நோக்கி இழுக்கப்பட்டிருந்திருக்கின்றன, அவர்களது அன்புக்குப் பாசமற்ற நன்றியின்மையுடன் பதிற்செலுத்துவீர்களா? உங்கள் உள்ளங்களை அவர்கள் நேசிக்கின்றனர், நீங்கள் இரட்சிக்கப்படவேண்டு மென்று அவர்கள் விரும்புகின்றனர்; ஆயினும் நீங்கள் அநேகந்தரம் அவர்களது ஆலோசனையை அசட்டைசெய்து, உங்கள் சுயசித்தத்தை, நீங்கள் விரும்பிய வழியில் செய்யவில்லையா? சுயபுத்தியைப் பின்பற்றுதல் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறாது என்பதை நீங்கள் அறிந்திருந்தும், அப்படிப்பட்ட ஒரு பிடிவாதமான பாதையில் செல்லவில்லையா? அநேகத் தகப்பன்மார்களும், தாய்மார்களும் தங்களுடைய பிள்ளைகளால் தங்களுக்குக் காண்பிக்கப்பட்ட மரியாதைக்குறைவு, நன்றியின்மையினால் உடைந்த உள்ளங்களோடு கல்லறைக்குச் சென்றிருக்கின்றனர்.—The Youth's Instructor, June 22, 1893.

# 112

# இல்லத்தில் ஓர் ஆசீர்வாதம்

"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா" என்று வாலிபர்களிடம் கர்த்தர் கேட்கிறார். பிள்ளைகளும் வாலிபர்களும் தங்களது உள்ளங்களைத் தம்மிடம் கொடுப்பதை உலக இரட்சகர் விரும்புகிறார். பிள்ளைகளாலான ஒரு பெரிய சேனை, கிறிஸ்து ஒளியில் இருப்பதுபோல, அவர்களும் ஒளியில் நடப்பதால், தேவனுக்கென்று உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவார்கள். கர்த்தர் இயேசுவை அவர்கள் நேசிப்பார்கள், அவரைப் பிரியப்படுத்துவதே அவர்களது மனமகிழ்ச்சியாயிருக்கும். கடிந்துகொள்ளப்பட்டால், அவர்கள் பொறுமையிழக்கமாட்டார்கள்; மாறாக, தங்கள் இரக்கம், பொறுமை மற்றும் அனுதின வாழ்வின் பாரங்களைச் சகித்திட உதவுவதில் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வதற்குரிய அவர்களது விருப்பார்வம் ஆகியவற்றால் தாய், தகப்பனின் இருதயத்தைச் சந்தோஷப்படுத்துவார்கள். சிறுபிராயம் மற்றும் வாலிபப்பருவம் நெடுகிலும், நமது கர்த்தரின் உண்மையுள்ள சீஷர்களாக அவர்கள் காணப்படுவார்கள்.

சிறுபிள்ளைகளே, வாலிபர்களே, உங்களது சிறுபிராய வருடங்களில் இல்லத்திற்கு ஓர் ஆசீர்வாதமாக நீங்கள் விளங்கலாம். தெய்வபக்திமிக்க பெற்றோர்களின் பிள்ளைகள் அடங்காதவர்களாக, கீழ்ப்படியாதவர்களாக, நன்றியில்லாதவர்களாக, பிடிவாதமுள்ளவர்களாக, தங்களது பெற்றோர் களுக்கு அது ஏற்படுத்தும் அசௌகரியம் அல்லது வருத்தத்தைக் கருத்தில் கொள்ளாமல், தங்கள் இஷ்டப்படி நடக்கத் தீர்மானமிக்கவர்களாக இருக்கக் காண்பது எவ்வளவு வேதனை! பிள்ளைகளின் உள்ளங்களை ஆளவதில் சாத்தான் அலாதி பிரியம் கொள்ளுகிறான், அனுமதிக்கப்பட்டால் தனது பகையுணர்ச்சியின் ஆவியை அவர்களுக்குள் அவன் தூண்டிவிடுவான்.

## பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிதல்

பிள்ளைகள் தங்கள் உள்ளங்களைத் தேவனுக்கென்று ஒப்படைக்கும் விதத்தில், பெற்றோர்கள் அவர்களுக்கு ஒவ்வொரு வாய்ப்பையும், போதகத் தையும் கொடுக்கும்படி தங்களது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்யலாம்; ஆயினும் பிள்ளைகள் ஒளியில் நடப்பதற்கு மறுக்கலாம், தங்களது பொல்லாத நோக்கினால், அவர்களது இரட்சிப்பிற்காக ஏங்கும் உள்ளங்களைக் கொண்ட, அவர்களை நேசிக்கிற பெற்றோர்களுக்கு விருப்பத்தகாத நினைவுகளை ஏற்படுத்தித் தருவார்கள்.

பாவம் மற்றும் கீழ்ப்படியாமையின் பாதையைப் பின்பற்றுவதற்குச் சாத்தான் பிள்ளைகளைச் சோதிக்கிறான்; பின்னர் அவனுக்கு அனுமதிக்கப் பட்டால், இன்னும் தங்களது பாவங்களில் இருக்கிற பிள்ளைகளின் ஜீவனை அவன் எடுப்பான்; இரட்சிப்பின் எல்லா நம்பிக்கையிலிருந்து அவர்களை அறுத்துப்போடும்படிக்கும், தெய்வபக்திமிக்கத் தகப்பன்மார்கள் மற்றும் தாய்மார்கள் தேவனுக்கெதிரான தங்கள் பிள்ளைகளின் கடைசிவரையிலான கல்மனம் மற்றும் கலகத்தினால், ஒருபோதும் தீராத வருத்தத்துடன் தலைகுனிவடையச் செய்து பட்டயத்தினால் உருவக்குத்துவதுபோல அவர்களின் உள்ளங்களைக் குத்தும்படிக்கும் அப்படிச் செய்வான்…

பிள்ளைகளே, வாலிபர்களே, ஒளியில் நடவுங்கள் என்று கிறிஸ்துவின் பொருட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன். உங்கள் சித்தத்தைத் தேவ சித்தத்துக்கு அர்ப்பணியுங்கள். "பாவிகள் உனக்கு நயங்காட்டும்போது நீ சம்மதியாதே." கர்த்தருடைய வழியைக் காத்துக்கொள், மீறுதலில் உனக்குச் சமாதானம் இருக்காது. தீய போக்கினால் உங்கள் பெற்றோர்களுக்கு அவகீர்த்தியையும், கிறிஸ்துவின் மார்க்கத்திற்கு அவமதிப்பையும் நீங்கள் கொண்டுவருவீர்கள். குழுமியிருக்கும் அண்டசராசத்திற்குமுன்பாகத் திறக்கும்படி, பரலோகப்புத்தகங்களில் உங்கள் வாழ்க்கை பதிவுசெய்யப் பட்டிருக்கிறதை நினைவில் கொள்ளுங்கள். நித்திய ஜீவனை இழப்பது உங்களது மகிழ்ச்சியற்ற பங்காக இருக்குமானால், உங்களது வெட்கமும், வருத்தமும் எவ்வளவாயிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்! "என் கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்புங்கள்; இதோ என் ஆவியை உங்களுக்கு அருளுவேன், என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன்… அப்பொழுது அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்... எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்." "இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்" என்ற கிறிஸ்துவின் போதனைக்குச் செவிகொடுங்கள்.—The Youth's Instructor, August 10, 1893.

## 113

# இல்லத்தில் குணத்தைக் கட்டுதல்

பிள்ளைகள் தங்களுக்கு உதவக்கூடாத, ஆனால் மோசமான ஆலோசனை கொடுக்கக்கூடிய வயதில் சிறிய மற்றும் அனுபவமில்லாத நண்பர்களைத் தங்களுக்கு நம்பகமானவர்களாகத் தெரிந்துகொள்ளவும்,

பெற்றோர்களிடமிருந்து தங்களை ஒதுக்கிக்கொள்ளவும் சாத்தான் அவர்களைச் சோதிக்கிறான்…

பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுடன் மிகவும் நெருக்கமானவர்களாக இருந்தால், அவர்கள் அநேக தீமைகளிலிருந்து காக்கப்படுவார்கள். பிள்ளைகள் தங்களுடன் வெளிப்படையாகவும், ஒளிவு மறைவின்றி இருக்கவும், அவர்களது சங்கடங்களைத் தங்களிடம் கொண்டுவரவும், எது சரியான பாதை என்று அவர்கள் குழம்பியிருக்கும்போது, அவர்கள் காண்கிறபடியே காரியத்தைப் பெற்றோர்கள் முன்பாக வைத்து, அவர்களது ஆலோசனையைக் கேட்கவும்கூடிய மனநிலையைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடம் ஊக்கப்படுத்த வேண்டும். தேவபக்தியுள்ள பெற்றோர்களைப்போல அவர்களது ஆபத்துக்களை முன்கூட்டியே கண்டறிந்து சுட்டிக்காட்டக்கூடியவர்கள் யாரேனும் உண்டா? தங்கள் பிள்ளைகளுடைய அதே நேரம் தங்களுடைய குறிப்பிட்ட உணர்ச்சியியல்புகளை வேறு யார் புரிந்துகொள்ளக்கூடும்? குழந்தைப் பருவத்திலிருந்து மனதின் ஒவ்வொரு திருப்பத்தையும் கண்காணித்திருக்கிற தாயானவள், சுபாவ மனநிலையுடன் இவ்விதமாக அறிமுகமாகியிருக்கிறபடியினால், தன் பிள்ளைகளுக்கு ஆலோசனை வழங்க சிறப்புற ஆயத்தப்பட்டிருக்கிறாா். என்ன குணக்கூறுகளைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்பதைத் தகப்பனின் உதவியோடு வருகிற தாயைப்போல வேறு யார் சொல்லக்கூடும்?

## பெற்றோர்களை மகிழ்ச்சியாக்குதல்

கிறிஸ்தவர்களாக இருக்கிற பிள்ளைகள் ஒவ்வொரு பூமிக்குரிய ஆசீர்வாதத்திற்கும் மேலாகத் தங்களது தெய்வபக்திமிக்க பெற்றோர்களின் அன்பு மற்றும் பாராட்டிற்கு முன்னுரிமை அளிப்பார்கள். தங்கள் பெற்றோர்களை அவர்கள் மதித்துக் கனம்பண்ணுவார்கள். பெற்றோர்களை மகிழச்சியாக்குவது எப்படி என்பது அவர்களது ஜீவியங்களின் முக்கிய ஆராய்ச்சிகளில் ஒன்றாக இருக்கவேண்டும். இந்தக் கலக யுகத்தில் சரியான போதனையையும் ஒழுங்குமுறைப் பயிற்சியையும் பெற்றிராத பிள்ளைகள் தங்களது பெற்றோர்களுக்குரிய தங்களது கடமைகள் குறித்துக் குறைந்த அறிவையே கொண்டிருப்பார்கள். பெற்றோர்கள் எவ்வளவுக்கு அவர்களுக்குச் செய்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் நன்றியில்லாதவர்களாக இருப்பதும், அவர்களை அவர்கள் மதிக்காமல் போவதும் அடிக்கடி நடக்கும் கதையாகிவிட்டது.

செல்லங்கொடுக்கப்பட்டு, பணிவிடைசெய்து வளர்க்கப்பட்ட பிள்ளைகள் அதையே எப்பொழுதும் அதையே எப்பொழுதும் எதிர்பார்க்கின்றனர்; அவர்களது எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லையானால், அவர்கள் ஏமாற்றமடைந்து,

சோர்ந்துபோகின்றனர். இதே மனநிலை அவர்களது ஜீவியங்கள் நெடுகிலும் காணப்படும்; உதவிக்காக மற்றவர்களைச் சார்ந்து, மற்றவர்கள் தங்களுக்குத் தயவுபாராட்டி, பணிந்துபோக எதிர்பார்க்கும் அளவுக்கு அவர்கள் உதவியற்றவர்களாயிருப்பார்கள். அவர்கள் எதிர்க்கப்பட்டால், ஆண்மை, பெண்மைநிலைக்கு அவர்கள் வளர்ந்தபின்னருங்கூட, தாங்கள் அவமதிக்கப்பட்டுவிட்டதாக அவர்கள் நினைப்பார்கள்; இவ்விதமாக அவர்கள் உலகத்தில் கவலையோடு கடந்துசெல்கிறவர்களாகவும், தங்களது சொந்த பாரத்தையே தாங்கக் கூடாதவர்களாகவும், எல்லாமே அவர்களுக்கு இசைவாயிராததால் அடிக்கடி முறுமுறுக்கிறவர்களாகவும், எரிச்சலடைகிறவர்களாகவும் காணப்படுவார்கள்...

குழந்தைப் பருவத்தில் பராமரித்து, வியாதியில் ஊட்டிவளர்த்தத் தங்கள் பெற்றோர்களுக்குத் தாங்கள் கடன்பட்டிருப்பதாகப் பிள்ளைகள் உணரவேண்டும். தங்களது பெற்றோர்கள் தங்களுக்காக எவ்வளவோ கவலை அடைந்திருக்கின்றனர் என்பதை அவர்கள் நினைவுகூர வேண்டும். தங்களது பிள்ளைகள் சரியான வழியில் செல்லவேண்டும் என்ற ஆழ்ந்த அக்கறையை மனச்சாட்சியுள்ள, தேவபக்திமிக்கப் பெற்றோர்கள் விசேஷமாக உணர்ந்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் பிள்ளைகளில் தப்பிதங்களைக் கண்ணுற்றபோது, அவர்களது இருதயங்கள் எவ்வளவு பாரப்பட்டிருந்திருக்கும். அத்தகைய இருதயங்கள் வேதனைப்படக் காரணமாயிருந்த பிள்ளைகள் தங்களது போக்கின் விளைவைக் காணக்கூடுமானால், அவர்கள் நிச்சயமாக மனதிரங்குவார்கள். தங்களது தாயின் கண்ணீர்த்துளிகளை அவர்கள் கண்டு, தங்கள் சார்பில் தேவனிடம் ஏறெடுக்கப்பட்ட அவளது ஜெபங்களை அவர்கள் கேட்கக்கூடுமானால், அவளது அடக்கிவைக்கப்பட்ட, உள்ளம் உடைந்த ஏக்கப் பெருமூச்சுகளை அவர்கள் கவனிக்கக்கூடுமானால், அவர்களது இருதயங்கள் உணர்வடைந்து, தங்கள் பிழைகளை விரைவாய் அறிக்கையிட்டு, மன்னிக்கும்படி அவர்கள் கேட்பார்கள்...

## போராட்டத்துக்கான பெலன்

பிள்ளைகளுக்கான துரதிர்ஷ்டவசமான காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு பாரமிக்க நிலவரம் அழிவைநோக்கி இட்டுச்சென்று கொண்டிருக்கிறது; இந்நிலவரத்துக்கு எதிர்த்து முன்னேறவும், அதனால் அடித்துச்செல்லப்படாதிருக்கவும் குழந்தைப் பருவ அனுபவம் மற்றும் பெலத்திற்கும் மேலான அனுபவமும் பெலனும் தேைவயாயிருக்கிறது. வாலிபர்கள் பொதுவாகச் சாத்தானின் சிறைக்கைதிகள்போல் காணப்படு கின்றனர், அவனும் அவனது தூதர்களும் அவர்களை நிச்சயமான அழிவுக்கு வழிநடத்திக்கொண்டிருக்கின்றனர். தேவனுடைய அரசாங்கத் துக்கு எதிராகச்

சாத்தானும் அவனது சேனைகளும் போர்புரிந்துகொண்டிருக் கின்றன; அவருக்குத் தங்களது உள்ளங்களை ஒப்படைத்து, அவரது கோரிக்கை களுக்குக் கீழ்ப்படியும் வாஞ்சையுள்ள யாவரையும் சோர்ந்துபோகவும், போராட்டத்தைக் கைவிடவும் செய்யும் வகையில் சாத்தான் அவர்களைத் திகைப்பூட்டவும், தனது சோதனைகளால் மேற்கொள்ளவும் முயற்சிப்பான்...

ஊக்கமான ஜெபம் மற்றும் உயிருள்ள விசுவாசத்தால், மாபெரும் வெற்றிகள் பெறப்படும். சில பெற்றோர்கள் தங்கள்மீது தங்கியிருக்கிற பொறுப்புகளை உணராமல், தங்களது பிள்ளைகளின் ஆன்மீகக் கல்வியைக் புறக்கணித்திருக்கின்றனர். காலையில் கிறிஸ்தவனின் முதல் சிந்தனைகள் தேவன்மீது இருக்கவேண்டும். உலக அலுவலும், தன்னலமும் இரண்டாம் இடத்தில் இருக்கவேண்டும். ஜெபநேரத்தை மதிக்கவும், பயபக்தியாயிருக்கவும் பிள்ளைகளுக்குப் போதிக்கப்பட வேண்டும். அலுவலுக்கு வீட்டைவிட்டுச் செல்லும் முன்பாக, குடும்பத்தார் யாவரும் ஒன்றுகூட்டப்படவேண்டும்; தகப்பன் அல்லது தகப்பன் இல்லாத நேரத்தில் தாய், நாள் முழுவதும் தங்களைக் காக்கும்படி தேவனிடத்தில் அக்கறையுடன் மன்றாட வேண்டும்...

## கட்டுப்பாட்டினால் பொறுமையின்மை

ஓய்வுநாளை ஆசரிக்கும் பிள்ளைகள் கட்டுப்பாட்டினால் பொறுமை யிழந்து, தங்கள் பெற்றோர்களை மிகவும் கண்டிப்பானவர்கள் என்று நினைக்கலாம்; அவர்களது உள்ளங்களில் கடினமான உணர்ச்சிகள்கூட எழும்பலாம். அவர்களது நிகழ்கால, வருங்கால, நித்திய நன்மைக்காக உழைக்கிறவர்களுக்கெதிராக, மனநிறைவற்ற, மகிழ்ச்சியற்ற எண்ணங்கள் அவர்களால் பேணி வளர்க்கப்படலாம். ஆனால் வாழ்வு மேலும் சில ஆண்டு களுக்கு விட்டுவைக்கப்படுமானால், தங்களது அனுபவமில்லாத ஆண்டு களில் தங்கள்மீது செலுத்தப்பட்ட கண்டிப்பான பராமரிப்பு மற்றும் உண்மை யான கவனத்துக்காக அவர்கள் தங்கள் பெற்றோர்களை வாழ்த்துவார்கள்.

## தனிப்பட்ட பொறுப்பு

பிள்ளைகளே, உங்களுக்குப் போதித்து, கட்டுப்படுத்தி இவ்வித மாகப் பரலோகத்திற்கான உங்கள் குணத்த அமைப்பதில் தங்களது பங்கைச் செய்வதற்கு, உங்களது பெற்றோர்களின் பராமரிப்பிற்கு உங்கள் ஒப்புக்கொடுப்பதைத் தேவன் பொருத்தமென்று கண்டிருக்கிறார். பக்திமிக்க, விசுவாசமிக்க, ஜெபிக்கிற பெற்றோர்களிடமிருந்து நீங்கள் பெற்றிருந் திருக்கிற நன்மைகளைப் பயன்படுத்திக்கொள்வதனால் ஒரு நல்ல கிறிஸ்தவ குணத்தை நீங்கள் வளர்ப்பீர்களா என்று கூறுவது உங்களிடமே விடப்பட் டிருக்கிறது. தங்களுடைய பிள்ளைகளின் சார்பில் பெற்றோர்களுக்குக்

கவலை, விசுவாசம் அனைத்தும் இருந்தபோதிலும், அவர்களால் மாத்திரம் அவர்களை இரட்சிக்க முடியாது. பிள்ளைகள் செய்ய வேண்டிய ஒரு பணி இருக்கிறது. ஒவ்வொரு பிள்ளையும் சந்திக்க வேண்டிய தனிப்பட்ட வழக்கு ஒன்று இருக்கிறது.

விசுவாசிக்கும் பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளின் அடிச்சுவடு களை அவர்களது ஆன்மீக ஆனபவத்திலும் வழிநடத்துகிற ஒரு பொறுப்பான பணி உங்கள் முன்பாக இருக்கிறது. அவர்கள் உண்மையாய் தேவனை நேசிக்கும்போது, நீங்கள் அவர்களிடம் காண்பித்த கரிசனைக்காகவும், அவர்களது ஆசைகளைத் தடுத்துநிறுத்திய அவர்களது விருப்பார்வங்களைக் கீழ்ப்படுத்திய உங்களது உண்மைக்காகவும் அவர்கள் உங்களை மதித்துப் போற்றுவார்கள்.—Testimonies for the Church, Vol. 1, pp. 391–403.

### கிறிஸ்துவின் நீதியினால் உடுத்துவிக்கப்படுதல்

கிறிஸ்துவின் நீதியினால் நாம் உடுத்துவிக்கப்படும்போது, பாவத்திற்கான ஆர்வ ஈடுபாடு நம்மிடம் இருக்காது; ஏனெனில் கிறிஸ்து நம்மிடம் கிரியைசெய்து கொண்டிருப்பார். நாம் தவறுகள் இழைக்கலாம், ஆயினும் தேவகுமாரனுக்குத் துயரம் விளைவித்த பாவத்தை நாம் வெறுப்போம்.—Review and Herald, March 18, 1890.

# 114

# பொறுப்புகளைச் சுமக்கவேண்டிய வாலிபர்கள்

### (இரண்டு வாலிபர்களுக்குக் கொடுக்கப்பட்ட செய்தி)

இந்த வாலிபர்கள் தங்களது வீட்டில் கண்டுகொள்ளாது விடுகிற கடமைகள் இருக்கின்றன. வீட்டுப் பொறுப்புகளைச் சுமக்க வேண்டியதான தங்களது கடமையைச் செய்வதற்கும், கடமைகளைக் கையிலெடுத்துக் கொள்வதற்கும் அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கொரு விசுவாசமிக்க, உழைப்புமிக்க ஒரு தாயார் இருக்கிறார்கள், அவள் சுமப்பதற்கு அவளது பிள்ளைகள் அனுமதித்திருக்கக்கூடாத அநேக பாரங்களை அவள் சுமந்திருக்கிறாள். இவ்விஷயத்தில் தங்கள் தாயாரைக் கனப்படுத்த அவர்கள் தவறிவிட்டனர். தங்களது தகப்பனின் பாரங்களைத் தங்கள் கடமையாகக் கருதிப் பங்குபெறாமல், தாங்கள் மதிக்கவேண்டிய பிரகாரம் அவரை மதிப்பதற்குப் புறக்கணித்துவிட்டனர். கடமையைவிடச் சுயபுத்தியை அவர்கள் பின்பற்றிச் செல்கின்றனர்.

பாரங்களையும், கடின உழைப்பையும் தவிர்ப்பதில், ஒரு தன்னலமான போக்கை அவர்கள் தங்கள் ஜீவியங்களில் முயன்று பின்பற்றியிருக்கின்றனர். அவர்கள் வாழ்க்கையை ஒரு வெற்றியுள்ளதாக்க வேண்டுமானால்,அவர்கள் இழந்துபோகக்கூடாத ஒரு விலையேறப்பெற்ற அனுபவத்தை அடைவதற்கு அவர்கள் தவறிவிட்டனர். சிறுசிறு காரியங்களில் உண்மையாயிருத்தலின் அவசியத்தை அவர்கள் உணரவில்லை; தங்களது பாதையில் கண்முன்னே இருந்த வாழ்வின் பணிவான, எளிமையான கடமைகளில் உண்மையாயும், முழுமையாயும், விசுவாசமாயும் இருப்பதற்குத் தங்களது பெற்றோர்களின்கீழ் நன்றிக்கடன்பட்டிருப்பதையும் அவர்கள் உணரவில்லை. நடைமுறை வாழ்விற்கு மிகமிக அவசியமான பொதுவான அறிவுக்கூறுகளை கண்சாடையாய் விட்டுவிடுகின்றனர்.

## இல்லத்தை மகிழ்ச்சிகரமானதாக்குதல்

இந்த வாலிபர்கள் எங்கேயாகிலும் ஓர் ஆசீர்வாதமாக இருக்கவேண்டுமென்றனால், அது வீட்டில்தான். தெளிந்த பகுத்தறிவு, நல்ல ஆய்வுத்திறன், மற்றும் ஒளியூட்டம்பெற்ற மனச்சாட்சியின் முன்மதியுள்ள் தீர்மானத்தினால் அவர்கள் வழிநடத்தப்படுவதற்குப் பதிலாக, அவர்கள் சுயபுத்தியைச் சாருவார்களானால், சமுதாயத்திற்கோ அல்லது தங்கள் தகப்பன் குடும்பத்திற்கோ, அவர்கள் ஓர் ஆசீர்வாதமாக இருக்கமுடியாது. மேலும் இவ்வுலகத்திற்கும், வரவிருக்கும் மேன்மையான உலகத்துக்குமான அவர்களது வெற்றிவாய்ப்புநிலைகள் ஆபத்துக்குள்ளாக்கப்படும்.

தங்களது ஆரம்பகால வாழ்வு, பராமரிப்புச் செய்வதற்காக அல்ல, மாறாக, வெறும் விளையாட்டிலும், கேலி, கிண்டலிலும், மதியீன மான களியாட்டுகளிலும் வீணாகச் செலவுசெய்வதற்காக வடிவமைக்கப் பட்டிருக்கிறது என்ற எண்ணப்பதிவை அநேக வாலிபர்கள் பெற்றுவருகின்றனர். மதியீனமான, புலன்கள் சார்ந்த களியாட்டுகளில் ஈடுபட்டிருக்கும்போது சிலர் அத்துடன் தொடர்புடைய கணப்பொழுது திருப்தியைமட்டும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். கேளிக்கைக்கான அவர்களது ஆசை, கூடியிருத்தல் குலாவுதல் மற்றும் வெடிசிரிப்புக்கான அவர்களது பிரியம் போன்றவை மனம்போனபோக்கில் போவதால் பெருகுகிறது; வாழ்வின் நிலையான நிஜங்களுக்கான சுவை உணர்வு அனைத்தையும் அவர்கள் இழக்கின்றனர். இல்லக் கடமைகள் இனிமையற்றதாகத் தோன்றுகின்றன. அவர்களது மனங்களுக்கேற்ற போதுமான மாற்றம் ஏற்படவில்லை; அவர்கள் அமைதலற்றவர்களாக, சிடுசிடுப்பும் எரிச்சலுமுள்ளவர்களாக மாறுகின்றனர். இல்லத்தை மகிழ்ச்சியும், உற்சாகமும் உள்ளதாக்குவதை ஒரு கடமையாக இவ்வாலிபர்கள் உணர்ந்திட வேண்டும்...

மாபெரும் வெற்றிக்கான கடுமுயற்சியுடன் மீண்டும் உழைப்பில் ஈடுபடுவதற்கு ஏதுவாக, அவர்களது பெலத்துக்குப் பெரும் பாரமாயிருந்த சரீர உழைப்பிலிருந்து ஒரு மாற்றமானது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மிகவும் அவசியப்படலாம். ஆனால் முழுமையான ஓய்வு அவசியப்படாதிருக்கலாம் அல்லது அவர்களது சரீர பெலத்தைப் பொறுத்தமட்டில் சிறப்பான விளைவுகள் ஏற்படவும் செய்யலாம்.

ஒரு குறிப்பிட்ட பணியினால் அவர்கள் பெலன்குன்றிப் போனாலும், தங்களது விலையேறப்பெற்ற விநாடிகளை அவர்கள் வீணடிக்க வேண்டியதில்லை. அவர்கள் அப்பொழுது மிகக் களைப்புண்டாக்கும் ஏதோ ஒன்றைச் செய்யாமல், தங்களது தாய்க்கும், சகோதரிகளுக்கும் ஓர் ஆசீர்வாதமாக இருக்கும் காரியத்தைச் செய்ய வகைதேடலாம். தாங்கள் சுமக்கவேண்டிய மிகவும் பளுவான பாரங்களைத் தாங்களே மேல்போட்டுக் கொள்வதினால் அவர்களது கவலைகளை இலகுவாக்குவதில், கொள்கையிலிருந்து மலருகிற, மெய்யான மகிழச்சியைத் தருகிற கேளிக்கையை அவர்கள் கண்டடைவார்கள்; அவர்களது நேரம் அற்பமான அல்லது சுயநலக் களியாட்டில் வீணடிக்கப்படாது.—Testimonies for the Church, Vol. 3, pp. 221–223.

## 115

# ஆராதனை நேரம்

வேதத்தைப் படிப்பதற்கு வாஞ்சையை பெலப்படுத்துவம், தூண்டுவதும் ஆராதனை நேரத்தை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொருத்தே இருக்கிறது. காலையிலும் மாலையிலும் தேவனைத் தொழுகிற மணிநேரங்கள் ஒருநாளின் இனிமையானதும் மிக உபயோகமானதுமான நேரமாக இருக்கவேண்டும். இயேசுவைச் சந்திக்கவும், பரிசுத்த தூதர்களின் பிரசன்னம் இல்லத்தில் இருப்பதற்காக அழைக்கவுந்தக்கதாக பெற்றோரும் பிள்ளைகளும் கூடுகின்ற இந்த ஆராதனை மணிநேரங்களில் தொந்தரவு தரக்கூடிய, அன்பற்ற சிந்தனைகள் நுழையக்கூடாது என்பதை நாம் புரிந்திருக்கவேண்டும். அந்த ஆராதனைகள் சுருக்கமானதாகவும், ஜீவனுள்ளதாகவும், அச்சமயத்துக்கு ஏற்றதாகவும், ஒவ்வொரு முறையும் வித்தியாசமானதாகவும் இருக்கவேண்டும். வேதத்தை வாசிப்பதிலும், தேவனுடைய பிரமாணத்தை கற்றுக்கொள்வதிலும், அதைத் திரும்பத்திரும்பச் சொல்வதிலும் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். வாசிக்க வேண்டிய வேதப்பகுதிகளைத் தெரிந்தெடுக்கும்படி பிள்ளைகளுக்குத்

தருணம் கொடுக்கும்போது அவர்கள் அதிக உற்சாகம் அடைவார்கள். அதைக்குறித்து அவர்களிடம் கேள்வி கேளுங்கள். அவர்களும் உங்களிடம் கேள்விகள் கேட்கட்டும். அவைகளின் அர்த்தங்களைத் தெளிவுபடுத்துகிற விளக்கங்களைக் கற்றுக்கொடுங்கள். இங்ஙனம் குடும்ப ஜெபநேரமானது மிக நீண்டதாயிராமல் ஆக்கப்படும்போது, அந்த சிறுபிள்ளைகள் ஜெபத்தில் பங்கு பெறட்டும், பாடலின் ஒரு பல்லவியைப் பாடுவதில் அவர்கள் சேர்ந்துகொள்ளட்டும்.

ஆராதனைகள் இவ்வாறு நடத்தப்பட வேண்டுமெனில் அதற்காக சரியான ஆயத்தம் செய்வதற்குரிய சிந்தனை கொடுக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளோடு வேதத்தை தியானிக்க தினமும் நேரமெடுத்துக்கொள்ளவேண்டும். இதை அடைவதற்கு முயற்சியும், திட்டமிடுதலும், சில தியாகங்களும் செய்யவேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஆனாலும் இந்த முயற்சி செய்யும்போது அத பெருத்த ஆசீர்வாதங்களை நமக்குக் கொண்டுவரும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.—Education, p. 186.

## 116

# ஆன்மீக விருந்தோம்பல்

நமது இல்லற வாழ்வும், சமுதாய உறவும் கிறிஸ்துவின் சாந்தம் மற்றும் எளிமையினால் நிர்வகிக்கப்பட்டால், நாம் மிகவும் மகிழ்ச்சியுள்ளவர்களாகவும், மிகுந்த பயனுள்ளவர்களாகவும் விளங்குவோம். விருந்தினர்களின் பொறாமை அல்லது பாராட்டைத் தூண்டுவதற்கும், பகட்டாரவாரத்துக்கும் பதிலாக, நமது உற்சாகம், பரிவு மற்றும் அன்பினால் நம்மைச் சுற்றியுள்ள யாவரையும் மகிழ்ச்சியாக்குவதற்கு நாம் முயன்றிட வேண்டும். கிறிஸ்துவின் சித்தத்துக்கு இசைந்து செயல்பட நாம் பிரயாசப்படுகிறோம் என்பதை விருந்தினர்கள் காணட்டும். நமது வாய்ப்புநிலை எளிமையானதாக இருந்தாலும், ஒரு மனநிறைவு மற்றும் நன்றியுணர்வின் ஆவியை அவர்கள் நம்மில் காணட்டும். ஒரு மெய்யான கிறிஸ்தவ இல்லத்தின் அப்பட்டமான சூழலானது சமாதானமும், இளைப்பாறுதலும் நிரம்பியதாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு முன்மாதிரியானது தாக்கத்தை ஏற்படுத்தாமல் இராது...

விருந்தினர்க்ள சௌகரியம் மற்றும் மகிழ்ச்சிக்கான நமது முயற்சிகளில், தேவனுக்கான நமது கடமைகளைக் கண்சாடையாய் விடாதிருப்போமாக. வேறு எந்தக் காரணத்துக்காகவும், ஜெப ரேநம்

அசட்டைசெய்யப்படக்கூடாது. தியான வேளையை உணர்ந்து மகிழக்கூடாமல் அனைவரும் மிகவும் களைப்புற்றவர்களாகும்வரைக்கும் உங்களையே பேச்சிலும், வேடிக்கையிலும் ஈடுபடுத்தாதிருங்கள். இப்படிச் செய்வது தேவனுக்கு ஒரு ஊனமான காணிக்கையைப் படைப்பது போலாகும். மாலைவேளையின் ஆரம்ப மணிநேரத்திலே, அவசரமின்றி புரியும் திறனுடன் நாம் ஜெபிக்கக்கூடிய தருணத்திலே, நம் வேண்டுதல்களை நாம் படைத்து, மகிழ்ச்சியும் நன்றியுணர்வும் நிறைந்த துதியில் நமது குரல்களை உயர்த்தவேண்டும்.

கிறிஸ்தவர்களைச் சந்திக்கிற யாவரும், ஜெபநேரத்தை மிகவும் அருமையான, மிகவும் புனிதமான, அந்தநாளின் மிகுந்த மகிழ்ச்சியான நேரமாகக் காணட்டும். இத்தகைய தியான நேரங்களில் பங்குபெறுகிற அனைவரின்மீதும் ஒரு பக்குவப்படுத்தும், உயர்த்தும் செல்வாக்கை அவைகள் உண்டுபண்ணும். இதயத்திற்கு இனிமையான சமாதானத்தையும். இளைப்பாறுதலையும் அவைகள் கொண்டுவரும்.—Review and Herald, November 29, 1887. ★

# பகுதி 12

# ஆடையும் அலங்காரமும்

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 117 | குணக்கட்டுமானத்தின் அடிப்படைக்கூறுகள் | 311 |
| 118 | உடையும்குணமும் | 315 |
| 119 | பொருத்தமான உடை | 317 |
| 120 | உடையின் செல்வாக்கு | 319 |
| 121 | உடையின் செல்வாக்கு | 320 |
| 122 | உடை எனும் விக்கிரகாராதனை | 323 |
| 123 | மெய்யான அலங்கரிப்பு | 324 |

# பகுதி 12

# ஆடையும் அலங்காரமும்

ஒருவனுடைய ஆடை அலங்காரத்தை வைத்து அவனுடைய குணம் நிதானிக்கப்படுகிறது (தீர்க்கப்படுகிறது). அவனுடைய தூய்மைப்படுத்தப்பட்ட நாட்டம், மற்றும் பக்குவப்பட்ட மனம் எல்லாம், அவன் தெரிந்தெடுக்கிற சாதாரணமான, தகுந்த வஸ்திரத்தினாலே வெளிப்படுத்தப்படும். ஆடை அணிவதிலுள்ள பரிசுத்த எளிமையானது தன்னடக்கமான இழிவற்ற நிலையோடு இணையும்போது, ஒரு வாலிபப் பெண்ணை ஓராயிரம் ஆபத்துக்களினின்று கேடகமாக பாதுகாக்கும்.—Education, p. 248.

## 117

## குணக்கட்டுமானத்தின் அடிப்படைக்கூறுகள்

சிறுபிள்ளைகளும் வாலிபர்களும் தங்கள் வார்த்தைகளையும் செயல்களையும் காத்துக்கொள்ளும்படி பயிற்றுவிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது; அவர்களது செயலின் போக்கு அவர்களது சொந்த வீட்டில் மட்டுமல்ல, மாறாக அவர்களுடன் தொடர்பில் அனைவரிடத்திலும் இனிமையை அல்லது இருளை விளைவிக்கும். ஆனாலும் வாலிபர்கள் கவனமிக்கவர்களாக, கருத்துமிக்கவர்களாக இருந்து தீமையின் ஒவ்வொரு தோற்றத்திலிருந்தும் விலகுவதற்கு முன்பாக, பரத்திலிருந்து வருகிற ஞானத்தையும், இயேசு மாத்திரம் அருளக்கூடிய பெலத்தையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

### மெய்யான அலங்காரம்

நல்ல தோற்றங்களும், பகட்டழகான ஆடையும் உலகத்தில் தங்களுக்குச் சலுகையைப் பெற்றுத்தரும் என்று நினைத்து அநேகர் தங்களை வஞ்சித்துக் கொண்டிருக்கின்றனர். ஆயினும் வெளிப்புற ஆடையினால் மட்டும் உண்டாகிற கவர்ச்சிக்கூறுகள் ஆழமற்றவைகளும், மாறக்கூடியவைகளுமாக இருக்கின்றன; அவற்றின்மீது நம்பிக்கை வைக்கலாகாது. கிறிஸ்துவானவர் தமது பின்னடியார்களுக்குக் கட்டளையிடுகிற அலங்காரம் ஒருபோதும் அழியாது. “மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த

வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" (1 பேதுரு 3:3,4) என்று அவர் கூறுகிறார்.

வெளித்தோற்றங்களில் தங்களைக் கவர்ச்சிகரமாக்கிக் கொள்வதற்கு வாலிபர்களால் செலவழிக்கப்பட்ட நேரத்தில் பாதியாவது ஆத்துமப் பண்படுத்தலுக்கு, உள்ளான அலங்கரிப்புக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், அவர்களது நடத்தையிலும், வார்த்தைகளிலும், செயல்களிலும் என்ன ஒரு வித்தியாசம் காணப்படும்! கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு மெய்யாகவே தேடுகிறவர்கள் தாங்கள் அணிகிற ஆடை சம்பந்தமான காரியத்திலும் மனச்சாட்சியின் உறுத்தல்களை உடையவர்களாயிருப்பார்கள்; கர்த்தரால் மிகத்தெளிவான விதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் கட்டளையின் கோரிக்கைகளை நிறைவேற்றிட அவர்கள் பிரயாசப்படுவார்கள். ஆடை விஷயத்தில் இப்பொழுது வீணடிக்கப்படுகிற பணமானது, தேவனுடைய ஊழியத்தின் முன்னேற்றத்துக்காகவும், அவர்களது சிந்தைகளில் பயனுள்ள அறிவைத் தக்கவைப்பதற்கும் பயன்படுத்தப்படும்; இவ்விதமாக நம்பகமான பொறுப்புகளுக்குத் தங்களைத் தகுதிப்படுத்திக்கொள்வார்கள். விலைமதிப்பற்ற கிரயத்தால் தங்களை வாங்கியிருக்கிற இயேசுவானவரின் எதிர்பார்ப்புகளை அவர்கள் நிறைவேற்றத் தேடுவார்கள்.

பிரியமான சிறுபிள்ளைகளே, வாலிபர்களே, இங்கே இயேசுவை நேசித்து, அவருக்குச் சேவை செய்வோருக்காக ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிற வாசஸ்தலங்களில் ஒரு வீட்டைக் கொடுப்பதற்குத் தமது வல்லமைக்குட்பட்ட அனைத்தையும் அவர் செய்திருக்கிறார். அவர் தமது பரலோக வீட்டைவிட்டு, பாவத்தால் கறைபடிந்த ஒரு உலகத்திற்கு—அவரை மதியாத, அவரது தூய்மையையும் பரிசுத்தத்தையும் விரும்பாத, அவரது உபதேசங்களை ஏளனமாய் அவமதித்த, கடைசியில் ஒரு மிகக் கொடூரமான மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த ஒரு ஜனக்கூட்டத்தாரிடம் அவர் வந்தார். "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"—யோவான் 3:16.

## புறத்தோற்றம்

உங்கள் சார்பாகத் தேவன் செய்திருக்கிற மாபெரும் தியாகத்திற்கான கைம்மாறாக அவருக்கு ஒன்று தேவை. பெயரளவில் மட்டுமல்ல, மாறாக உடையிலும், உரையாடலிலும் நீங்கள் கிறிஸ்தவர்களாக இருக்க

வேண்டுமென்று அவர் விரும்புகிறார். குஞ்சங்கள், இறகுகள் மற்றும் அவசியமற்ற ஒப்பனைகளில் அல்ல. தகுதியான வஸ்திரம் அணிவதில் நீங்கள் மனநிறைவடைய வேண்டுமென்று அவர் விரும்புகிறார். பரலோகம் அங்கீகரிக்கிற விதத்தில், உங்கள் பழக்கங்களை நீங்கள் கவர்ச்சியானவைகளாக்கிக்கொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார். பிரியமான வாலிபர்களே, அவரது எதிர்பார்ப்புகளை நீங்கள் ஏமாற்றத்துக் குள்ளாக்குவீர்களா?

புறத்தோற்றமே பெரும்பாலும் அகத்தின் அழகைக்காட்டும் அளவையாயிருக்கிறது. நமது விசுவாசத்தை மதிப்பிடுவதற்கு எப்படிப்பட்ட அடையாளங்களை நாம் காட்டிக்கொள்கிறோம் என்பதைக் குறித்து நாம் கவனமாக இருக்கவேண்டும். பிரியமான பிள்ளைகளாக வெளிப்படுத்தப் பட்டுள்ள அவரது சித்தத்துக்கு அனைத்துக் காரியங்களிலும் கீழ்ப்படிந்து இயேசுவை நீங்கள் பின்பற்ற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அந்த உள்ளான அலங்கரிப்பை நீங்கள் அக்கறையுடன் தேடுவதால் உங்கள் மீட்பரை நீங்கள் பிரியப்படுத்த வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இவ்விதமாக நாளுக்குநாள், இயேசுவின் உதவியினால், நீங்கள் சுயத்தை மேற்கொள்ளலாம். பெருமையும், ஆடம்பரப் பிரியமும் உங்கள் இருதயங்கள் மற்றும் ஜீவியங்களிலிருந்து அகற்றப்படும். சாந்தமும், எளிமைக்குரிய பிரியமும் ஊக்கப்படுத்தப்படும். இவ்விதமாகக் கிறிஸ்துவின் உண்மையான வீரர்களின் ஒரு சேனையாக வாலிபர்கள் மாறலாம்.

தேவனை நேசித்துக் கீழ்ப்படிவதாகக் கூறுபவர்கள் தங்களத அனுதின ஜீவியங்களில் அவரை மறுதலிக்கிற கொடிய காலங்களில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். “எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக் கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாத வர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்க மில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர் களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர் களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு”–2 தீமோ. 3:2—5. பிரியமான வாலிபர்களே, இந்த வகையினர் மத்தியில் நீங்கள் காணப்படுவதைத் தேவன் விரும்பவில்லை. இத்தகைய தீமைகளைத் தள்ளி, முடிவில் எப்படி ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கலாம் என்பதை அவரது வார்த்தையில் நீங்கள் கற்றுக்கொள்ளலாம்…

"ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்." "அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்: கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது"—மல். 3:16

## சாட்சியாய் விளங்குதல்

தீமையின் தோற்றத்தை நீங்கள் தவிர்ப்பதுமட்டும்போதாது; இதற்கும் மேலாக நீங்கள் செல்லவேண்டும்; நீங்கள் "நன்மைசெய்யப் படிக்க" வேண்டும். நீங்கள் கிறிஸ்துவை உலகத்திற்குப் பிரதிபலித்துக் காட்ட வேண்டும். தேவனுடைய கிரியைகளைக் கிரியையாக நடப்பிக்கக் கற்றுக் கொள்வது எப்டி என்பது உங்கள் அன்றாட ஆராய்ச்சியாக இருக்கவேண்டும். "சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற" உயிருள்ள நிருபங்களாக அவரது பின்னடியார்கள் இருக்கவேண்டும்.

வெறுமனே ஆசைப்படுவதால் மட்டும் ஒரு நல்ல குணத்தை ஒருபோதும் நீங்கள் அடைந்துவிட முடியாது. கடுமுயற்சியினால் மட்டுமே அதை அடையமுடியும். இந்த விதத்திலான உங்களது வாஞ்சைகள் அக்கறைமிக்க, நேர்மையான முயற்சி மற்றும் பொறுமையான கடின உழைப்பில் வெளிக்காட்டப்பட வேண்டும். வளர்ச்சி எனும் ஏணியிலே ஒவ்வொரு நாளும் மேல்நோக்கிய முன்னேற்றப்படிகளை எடுத்துவைப்பதால், உங்களிடத்தில் அன்புகூருகிறவராலே ஒரு ஜெயங்கொள்ளுகிறவராக, ஆம், முற்றும் ஜெயங்கொள்ளுகிறவராக, கடைசியில் உச்சத்தில் உங்களையே நீங்கள் காண்பீர்கள்.—The Youth's Instructor, November 5, 1896.

## ஆடையால் மதிப்பிடப்படும் ஆன்மீகம்

பிரியமான வாலிபர்களே, புதுப்பாணிக்கேற்ப உடுத்தவும், சரிகைகள், பொன் மற்றும் ஆடம்பரத்துக்கான செயற்கையானவைகளை அணியவும் வேண்டுமென்ற உங்களுக்குள் இருக்கிற மனநிலையானது உங்கள் ஆன்மீகத்தையோ அல்லது நீங்கள் நம்புவதாகக் கூறுகிற சத்தியத்தையோ மற்றவர்களுக்குப் பரிந்துரை செய்யாது. வெளித்தோற்றத்தை அழகுபடுத்துவதற்கான உங்கள் முயற்சிகளை, பெலவீனமான மனங்கள் மற்றும் பெருமையான உள்ளங்களுக்கான அத்தாட்சியாகப் பகுத்துணரும் தன்மையுள்ள மக்கள் கண்டுகொள்வார்கள். எளிமையான, ஆடம்பரமற்ற, பாசாங்கு செய்யாத உடையே எனது இளமைப்பொலிவுமிக்க சகோதரிகளுக்கான ஒரு பரிந்துரையாயிருக்கும். உங்களது உடை மற்றும் நடத்தையின் எளிமையைவிட வேறெந்தச் சிறந்த வழியிலும் உங்கள்

வெளிச்சத்தை நீங்கள் பிரகாசிக்கச் செய்யமுடியாது. நித்திய காரியங்களுடன் ஒப்பிடுகையில், இவ்வாழ்விற்குரிய காரியங்களின்மீது ஒரு சரிநேரான மதிப்பீட்டை வைத்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அனைவருக்கும் காண்பிக்கலாம்.—Testimonies for the Church, Vol. 3, p. 376.

## 118

# உடையும் குணமும்

கிறிஸ்துவின் பின்னடியார்கள் பூமியின் உப்பாக, உலகத்தின் வெளிச்சமாக அவரால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றனர். கிறிஸ்தவர்களின் இரட்சிக்கும் செல்வாக்கு இல்லாவிடில், உலகம் தன் சீர்கேட்டில் அழிந்துபோகும். கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் வகுப்பினர் வர்ணிக்கப்பட்டிருப்பதைக் பாருங்கள்; அவர்கள் உடையிலும், உடலிலும் கவனமற்றவர்களாக, அவர்கள் உடை பிரதிபலித்துக் காட்டுவதுபோல, தங்களது வியாபார நடவடிக்கைகளில் ஒழுங்கற்றவர்களாக; அவர்களது பழக்கங்களில் பண்பு, மரியாதை அற்றவர்களாக, முரட்டுத்தனமானவர்களாக, அவர்களது உரையாடலில் கீழ்த்தரமானவர்களாக; அதேநேரத்தில் இத்தகைய வெறுக்கத்தக்க பண்புக்கூறுகளை மெய்யான தாழ்மை மற்றும் கிறிஸ்தவ வாழ்வின் அடையாளங்கள் என எண்ணுகிறவர்களாக இருக்கின்றனர். நமது இரட்சகர் பூமியின்மீது இருந்தால், அவர்களைப் பூமிக்கு உப்பாகவும், உலகத்துக்கு வெளிச்சமாகவும் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டுவார் என்று நினைக்கிறீர்களா?—இல்லை, ஒருபோதும் இல்லை!

கிறிஸ்தவர்கள் தங்கள் உரையாடலில் மேம்பட்டவர்களாக இருக்கின்றனர்; மதியீனமான முகஸ்துதி பேசுதலுக்கு இறங்குவதைப் பாவம் என்று அவர்கள் நம்பினாலும், அவர்கள் மரியாதையும், இரக்கமும், உதாரகுணமும் உடையவர்களாக இருக்கின்றனர். அவர்களது வார்த்தைகள் நேர்மையும், உண்மையுமானவைகளாக இருக்கின்றன. தங்கள் சகோதரரோடும், உலகத்தோடும் உள்ள தொடர்பில் அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கின்றனர். தங்கள் உடையில் அவர்கள் மட்டுமீறலையும், பகட்டாரவாரத்தையும் தவிர்க்கின்றனர்; ஆயினும் அவர்களது உடை சுத்தமானதாகவும், வீண்பளபளப்பின்றித் தகுதியானதாகவும், ஒழுங்கு மற்றும சுவையுணர்வுடன் உடலில் அமைக்கப்பட்டதாகவும் இருக்கும். பரிசுத்த ஓய்வுநாள் மற்றும் தேவனுடைய தொழுகைக்குமான புனிதமான மரியாதையைக் காட்டும் விதத்தில் உடுத்துவதற்கு விசேஷமான கவனம் எடுக்கப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட ஒரு வகுப்பினருக்கும் உலகத்திற்கும் இடையிலான பிரிக்கும் கோடானது தவறாகப் புரிந்திடக்கூடாத விதத்தில் வெளிப்படையாகக் காணப்படும். முன்னே தங்களது பழக்கங்களில் கவனமற்றவர்களாக, மந்தமானவர்களாக இருந்த ஆண்களும், பெண்களும் சத்தியத்தை ஏற்றுக்கொண்டால், தங்கள் உடையில் சுத்தம், ஒழுங்கு மற்றும் நற்சுவையுணர்வு ஆகிய பழக்கங்களைப் பின்பற்றும் விதத்தில் சத்தியத்தின்மூலமாக மிகவும் உயர்த்தப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுவார்கள். விசுவாசிகளின் செல்வாக்கு பத்துமடங்கு பெரிதாயிருக்கும். நம் தேவன் ஒழுங்கின் தேவன் ஆவார், அவர் எவ்விதத்திலும் கவனச்சிதறடிப்பு, அருவருப்பான அழுக்கு அல்லது பாவத்தில் மகிழ்வு கொள்ளுகிறதில்லை.

### புத்தம் புதுப்பாணிகளுடன் தொடர்பு

உலகத்திலிருந்து வித்தியாசமாக உடுத்திக்கொள்வதால் தங்களைத் தூற்றுதலுக்குரியவர்களாக ஆக்கிக்கொள்வதில் கிறிஸ்தவர்கள் கடுமுயற்சி செய்யலாகாது. ஆயினும் தங்களது விசுவாசத்துக்கும், தகுதியானதாகவும் ஆரோக்கியத்திற்கேற்றதாகவும் தங்களது உடுத்துதல் இருக்கவேண்டும் என்ற கடமைக்கும் ஏற்ப, அவர்கள் தங்களை நடப்புநயத்துக்கு மாறானவர்களாகக் கண்டால், உலகத்தைப் போல் இருக்கும்படிக்கு அவர்கள் தங்கள் உடையை மாற்றிக்கொள்ள வேண்டியதில்லை. ஆனாலும் முழு உலகமே அவர்களிடமிருந்து மாறுபட்டிருந்தாலும், நேர்மையாய் இருப்பதற்கான ஒரு உயர்தரமான தற்சார்பையும், சன்மார்க்கத் தைரியத்தையும் அவர்கள் வெளிக்காட்ட வேண்டும். வேதத்தோடு ஒத்துப்போகிற, ஒரு தகுதியான, சௌகரியமான, ஆரோக்கியத்துக்கேதுவான உடைவகையை உலகம் அறிமுகப்படுத்துமானால், அப்படிப்பட்ட ஒரு உடைபாணியை ஏற்றுக் கொள்வது தேவனோடு அல்லது உலகத்தோடுள்ள நமது உறவில் மாற்றத்தை உண்டுபண்ணாது. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றி, தேவனுடைய வார்த்தைக்கு இசைவாகத் தங்கள் உடையை அவர்கள் அமைத்துக்கொள்ள வேண்டும். மட்டுமீறிய நடவடிக்கைகளை அவர்கள் தவிர்க்கவேண்டும். போற்றுதலோ, தூற்றுதலோ எப்படியிருப்பினும், ஒரு நேர்மையான பாதையைத் தாழ்மையாக அவர்கள் பின்பற்ற வேண்டும், நேர்மையானது தன்னில்தானே சிறப்புகளை உடையதாகையால், அதை அவர்கள் பிடித்துக்கொள்ள வேண்டும்.—Review and Herald, January 30, 1900.

119

# பொருத்தமான உடை

தகுதியான வஸ்திரம் உடுத்துதல் குறித்து வேதம் போதிக்கிறது. "ஸ்திரீகளும் மரிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்"–1 தீமோ. 2:9,10. ஆடையில் ஆடம்பரத்தையும், பளபளப்பான நிறங்களையும், மட்டுமீறிய அலங்கரிப்பையும் இது தடை செய்கிறது. அணிகிறவரின் கவனத்தைக் கவர்வதற்கு அல்லது பாராட்டைத் தூண்டுவதற்கு வடிவமைக்கப்பட்ட எந்தப் பொருளும் தேவனுடைய வார்த்தை கட்டளையிடுகிற தகுதியான வஸ்திரத்திலிருந்து தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

### உடையில் சிக்கனம்

"... பொன்னிலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது," இல்லாதபடிக்கு, நமது உடை மலிவானதாக இருக்கவேண்டும். பணம் என்பது தேவனிடமிருந்து வரும் பொறுப்பு ஆகும். பெருமை அல்லது பேராசையின் திருப்திப்படுத்துதலுக்காகச் செலவழிப்பதற்கு அது நம்முடையதல்ல. தேவனுடைய பிள்ளைகளின் கரங்களில், அது பசித்தோர்க்கு உணவாகவும், உடுப்பற்றோர்க்கு உடையாகவும் இருக்கிறது. அது ஒடுக்கப்பட்டோர்க்குப் பாதுகாப்பாகவும், பிணியுற்றோர்க்கு அல்லது தரித்திரருக்குச் சுவிசஷேத்தைப் பிரசங்கிப்பதற்கு ஒரு ஆரோக்கியமான வழிவகையாகவும் இருக்கிறது. பகட்டுக்காக இப்பொழுது செலவழிக்கப்படுகிற பணம் ஞானமாகப் பயன்படுத்தப்பட்டால், அநேக இருதயங்களுக்கு நீங்கள் மகிழ்ச்சியைக் கொண்டுவரக்கூடும். கிறிஸ்துவின் வாழ்வைக்குறித்துச் சிந்தியுங்கள். அவரது குணத்தை ஆய்வுசெய்து, அவரது தன்னலமறுப்பில் அவரோடு பங்குள்ளவர்களாக இருங்கள்.

வெளிப்படையாகக் காணும் கிறிஸ்தவ உலகில், பசித்தோருக்கெல்லாம் உணவளிப்பதற்கும், உடுப்பற்றோருக்கு உடையளிப்பதற்கும் போதுமான பணமானது நகைகளுக்காகவும், அவசியமற்ற விலை உயர்வான உடைக்காகவும் செலவழிக்கப்படுகிறது. ஏழைகளுக்கும், துயருற்றோருக்கும் ஆறுதலளிக்க வேண்டிய பணத்தை நவநாகரீகமும் ஆடம்பரமும் உறிஞ்சிக்

கொள்கிறது. இரட்சகரின் அன்பின் சுவிசேஷத்தை உலகத்திலிருந்து அவைகள் பறித்துக்கொண்டு விடுகின்றன…

### தரமும் சுவைநயமும்

நமது உடை தகுதியானதாகவும் எளிமையானதாகவும் இருக்கும் வேளையில், நல்ல தரமானதாகவும், ஏற்ற வண்ணங்கள் கொண்டதாகவும், சேவைக்குப் பொருந்துகிறதாகவும் இருக்கவேண்டும். ஆடம்பரத்துக்காக அல்லாமல் நிலைத்துநிற்கும் தன்மைக்காக அது தெரிந்துகொள்ளப்பட வேண்டும். வெதுவெதுப்பையும் போதுமான பாதுகாப்பையும் அது அளிக்கவேண்டும். நீதிமொழிகளில் வர்ணிக்கப்பட்டுள்ள ஞானமுள்ள பெண்மணி, "தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்பிருக்கிறதால், தன் வீட்டாரினிமித்தம் குளிருக்குப் பயப்படாள்"—நீதி. 31:21.

### சுகாதாரமும் சுத்தமும்

நமது உடை சுத்தமாயிருக்கவேண்டும். உடையில் அசுத்தம் சுகாதார மற்றது. இவ்விதமாகச் சரீரத்தையும், ஆத்துமாவையும் கறைப்படுத்தக்கூடியது. "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்… ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்"—1 கொரி. 3:16,17.

எல்லா வகையிலும் ஆடையானது ஆரோக்கியமுள்ளதாக இருக்க வேண்டும். நாம் "எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி" (3 யோவான் 2)—சரீர மற்றும் ஆத்தும ஆரோக்கியத்துடன் இருக்கும்படி தேவன் விரும்புகிறார். ஆத்தும மற்றும் சரீர ஆரோக்கியத்துக்காக அவருடன் இணைந்து உழைக்கிறவர்களாக நாம் இருக்கவேண்டும். சுகாதாரமான உடையினால் இரண்டும் முன்னேற்றமடைகின்றன.

### பண்பும் இயற்கை அழகும்

அது பண்பையும், அழகையும், இயல்பான எளிமையின் பொருத்தத் தையும் உடையதாக இருக்கவேண்டும்.

ஜீவனத்தின் பண்பு மற்றும் இயற்கை அழகுக்கு எதிராக அல்லாமல், ஜீவனத்தின் பெருமைக்கு எதிராகக் கிறிஸ்து நம்மை எச்சரித்திருக்கிறார். காட்டுப் புஷ்பங்களையும், தூய்மையில் மலரும் லீலிபுஷ்பங்களையும் அவர் சுட்டிக்காட்டி, "சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை" (மத். 6:29) என்று கூறினார். நமது உடுத்துதலை அவருக்குப் பிரியமுள்ளதாக்குகிற அடக்கமான பண்பு, எளிமை, தூய்மை, பொருத்தம் போன்ற பரலோகம் உயர்வாகக் கருதுகிற அழகை இவ்விதமாக இயற்கைக் காரியங்களினால்

கிறிஸ்துவானவர் எடுத்துக்காட்டுகிறார்.—Counsels to Teachers, Parents, and Students, pp. 302, 303.

## 120

# உடையின் செல்வாக்கு

உடை சுத்தத்தை நாம் தடைசெய்யவில்லை. சரியான சுவைநயம், அலட்சியப்படுத்தப்படக் கூடாது, குற்றப்படுத்தவும் கூடாது. நமது விசுவாசம் கைக்கொள்ளப்பட்டால், விசேஷித்தவர்களாக நாம் விளங்கும்படிக்கு, உடையில் மிக எளிமையுள்ளவர்களாகவும், நற்கிரியைகளில் வைராக்கிய முள்ளவர்களாகவும் இருப்பதற்கு நம்மை வழிநடத்தும். ஆனால் உடையில் ஒழுங்கிற்கும், சுத்தத்துக்குமான சுவைநயத்தை நாம் இழக்கும்போது, நாம் நடைமுறையில் சத்தியத்தை விட்டுவிடுகிறோம்; சத்தியம் ஒருபோதும் இழிநிலைக்குத் தள்ளாது, மாறாக, மேன்மைப்படுத்தும். விசுவாசிகள் தங்கள் உடைவிஷயத்தில் அசட்டையுள்ளவர்களாகவும், தங்கள் பழக்கங்களில் கரடுமுரடானவர்களாகவும் இருக்கும்போழுது, அவர்களது செல்வாக்கு சத்தியத்தைக் காயப்படுத்துகிறது. “நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்”—(1 கொரி. 4:9) என்று ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் கூறுகிறார். கிறிஸ்து பின்னடியார்கள் எனக் கூறுபவர்கள் உலகத்தின்மீது செலுத்தும் செல்வாக்கை பரலோகமும் பதிவுசெய்துகொண்டிருக்கிறது…

உடையில் எளிமை ஒரு உணர்வுள்ள பெண்மணியையும் சிறப்பான நன்மைக்கேதுவாகத் தோற்றமளிக்கச் செய்யும். உடுத்தப்பட்டிருக்கிற உடையின் பாணியினால் ஒரு நபரின் குணத்தை நாம் நிதானிக்கிறோம். ஒரு அடக்கமுள்ள, தெய்வபக்திமிக்க பெண்மணி தன்னடக்கத்துடன் உடை உடுத்துவாள். எளிமையான, பொருத்தமான உடையின் தெரிந்தெடுப்பில், பக்குவப்பட்ட சுவைநயம், பண்பட்ட உணர்வுநிலை வெளிப்படும். நவநாகரீக அடிமைத்தனத்திலிருந்து விலகிச்செல்கிற இளம்பெண்கள் சமுதாயத்திற்கு அணிகலன்களாக இருப்பார்கள். தன் உடையிலும், தன் பழக்கங்களிலும் எளிமையாகவும், பாசாங்கு அற்றவளாகவும் இருக்கும் ஒருத்தி, ஒழுக்கஞ்சார்ந்த தகுதியே ஒரு உண்மையான பெண்மணியின் தனிச்சிறப்பாய் இருக்கிறது என்பதை அவள் புரிந்துகொண்டிருப்பதை வெளிக்காட்டுகிறாள். உடையில் எளிமை எவ்வளவு கவர்ச்சிகரமானது, எவ்வளவு சுவாரஸ்யமானது, அதன் அழகைக் காட்டுப் புஷ்பங்களுடன் ஒப்பிடலாம்.—Review and Herald, November 17, 1904.

121

# உடையில் எளிமை

"மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது"–1 பேதுரு 3:3,4.

தேவவார்த்தையின் எளிய, நேரடியான போதனைகளைத் தவிர்ப்பதற்கோ, தள்ளுவதற்கோ மனிதப் பகுத்தறிவானது எப்பொழுதுமே முயற்சித்து வருகிறது. தன்னல மறுப்பையும், தாழ்மையையும் கட்டளையிடுகிற உரையாடலிலும் நடத்தையிலும் உடையிலும் தன்னடக்கத்தையும் எளிமையையும் கோருகிற அத்தகைய கட்டளைகளைக் கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று கூறிக்கொள்ளும் பெரும்பான்மையானவர்கள் ஒவ்வொரு காலத்திலும் அவமதித்திருக்கின்றனர். விளைவு எப்பொழுதும் ஒன்றுபோலவே இருந்திருக்கிறது—சுவிசேஷத்தின் உபதேசங்களிலிருந்து விலகுதலானது நவநாகரீகங்களையும், நடைமுறைப் பழக்கங்களையும், உலகத்தின் கொள்கைகளையும் ஏற்றுக்கொள்வதற்கு வழிநடத்துகிறது. உயிரோட்டமுள்ள தேவபக்தியானது செத்த சடங்காச்சாரத்திற்கு வழிதிறந்து கொடுக்கிறது. லௌகிக—சிநேகமுள்ள வட்டங்களிலிருந்து பின்னிழுத்துக் கொள்ளப்பட்ட, தேவனின் பிரசன்னமும் வல்லமையும், புனித வார்த்தையின் உபதேசங்களுக்குக் கீழ்ப்படியும் விருப்பமுள்ள, மிகத்தாழ்மையான தொழுகையாளர்களின் குழுவினரிடத்தில் காணப்படுகிறது. அடுத்தடுத்து உண்டான தலைமுறைகள் நெடுகிலும், இதே பாதையானது பின்பற்றப்பட்டு இருந்திருக்கிறது. ஒன்றன்பின் ஒன்றாக, பலதரப்பட்ட சபைப்பிரிவுகள் எழும்பி, தங்கள் எளிமையை விட்டுக்கொடுத்து, பெருமளவில் தங்களது ஆதியில் கொண்டிருந்த வல்லமையை இழந்துபோயின.

### தேவஜனங்களுக்கு ஒரு கண்ணி

நிகழ்கால சத்தியத்தை விசுவாசிப்பதாகக் கூறுகிறவர்கள் மத்தியில் நவநாகரீகப் பிரியத்தையும், ஆடம்பரத்தையும் நாம் காணும்போது, கடந்தகால சரித்திரத்திலிருந்து தேவஜனங்கள் ஒன்றும் கற்றுக்கொள்ளமாட்டார்களா? என்று நாம் வருத்தத்துடன் கேட்கிறோம். தங்களது சொந்த இருதயங்களைப் புரிந்துகொள்ளுகிற சிலர் இருக்கின்றனர். வீணும், அற்பமுமான நவ

நாகரீகப் பிரியர்கள் தங்களைக் கிறிஸ்துவின் பின்னடியார்கள் என உரிமைபாராட்டலாம்; ஆயினும் அவர்களது உடையும், உரையாடலும் மனதை ஆக்கிரமித்திருப்பது, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தியிருப்பது என்ன என்பதைக் காட்டுகின்றன. உலகத்துக்கான அவர்களது சிநேகத்தை அவர்களது ஜீவியங்கள் காட்டிக்கொடுக்கின்றன; அது அவர்களைத் தன்னுடையவர்களென்று உரிமைபாராட்டுகிறது.

கிறிஸ்துவின் அன்பை ருசித்த ஒருவர் எப்படி நவநாகரீகத்தில் அற்பக்காரியங்களினால் திருப்தியடையக்கூடும்? சாந்தமும் மனத்தாழ்மையுமான இரட்சகரின் பின்னடியார்களாக இருப்பதாகக் கூறுகிறவர்கள் உடையில் உலகத்தின் தரத்திற்கு இசைந்து செல்ல மிகுந்த ஆர்வத்துடன் பிரயாசப்படுவதைக் காணும்போது என் உள்ளம் வேதனைப்படுகிறது. தேவபக்தியுள்ளவர்கள் போல அவர்கள் காட்டிக்கொண்டாலும், அவிசுவாசியிடமிருந்து அவர்களை வித்தியாசப்படுத்திப் பார்ப்பதற்கு அரிதாயிருக்கிறது. ஒரு பக்தியுள்ள வாழ்வை அவர்கள் அனுபவிக்கிறதில்லை. ஆடம்பரத்துக்காக ஆடையணிதல் எனும் ஒரே நோக்கத்துக்காக அவர்களது நேரமும் பணவளமும் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது.

உடையில் பெருமை, மட்டுமீறியதன்மை என்பது ஒரு பாவம் ஆகும்; அதற்குப் பெண்ணானவள் விசேஷமாக அடிபணிந்துவிடுகிறாள். இதனால் அப்போஸ்தலனின் கட்டளையானது அவளுடன் நேரடியாகப் பேசுகிறது: “ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும்”–1 தீமோ. 2:9,10.

## சீர்திருத்தம் தேவை

தேவவார்த்தையானது கண்டஞ்செய்கிற ஒரு தீமை கொஞ்சம் கொஞ்சமாகச் சபையில் இடம்பிடிக்கிறதை நாம் காண்கிறோம். இக்காரியம் சம்பந்தமாக அதிகாரத்தில் இருப்போரின் கடமை என்ன? சபையின் அங்கத்தினர்களில் அநேகர் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும், நவநாகரீகத்தின் துண்டுதல்களுக்குக் கீழ்ப்படியும் வேளையில், சபையின் செல்வாக்கானது இருக்க வேண்டியபடி இருக்குமா? இத்தகைய காரியங்கள் நம் மத்தியில் இருப்பதற்கு நாம் அனுமதிக்கும்போது, பரிசுத்த ஆவியின் உதவியையும், பிரசன்னத்தையும் நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? கிறிஸ்துவின்

உபதேசங்கள் வெளிப்படையாய்க் காணும் அவரது பின்னடியார்களால் ஒதுக்கிவைக்கப்படும்போது, நாம் மௌனமாய் இருக்கலாமா? தேவனுடைய சபையைக் கண்பாணிப்பவர்களுக்கு இத்தகைய காரியங்கள் வருத்தத்தையும் குழப்பத்தையும் கொண்டுவரும். எனது கிறிஸ்தவ சகோதரிகள் தாங்களாகவே இப்பாடப்பொருளைக் கறித்துக் கள்ளங்கபடமின்றி, ஜெபத்தோடு சிந்திக்க மாட்டார்களா? தேவவார்த்தையால் வழிநடத்தப்படுவதற்கு அவர்கள் வகைதேடமாட்டார்களா? உலகத்தின் புதுப்பாணிகளுக்கேற்ப உடையை உருவாக்குவதில் செலவிடப்படுகிற கூடுதல் நேரமானது கவனமான இருதயப் பரிசோதனைக்கும், வேதவாக்கியங்களின் ஆராய்ச்சிக்கும் அர்ப்பணிக்கப் படவேண்டும். அவசியமற்ற அலங்கரிப்புகளை ஆயத்தப்படுத்துவதில் வீணடிக்கப்பட்டதைவிடவும் மோசமான அந்த மணிநேரங்கள், சரியான கொள்கைகளையும் திடமான சாதனைகளையும் அடையத் தேடுவதில் செலவழிக்கப்பட்டிருந்தால், பொன்னைக்காட்டிலும் அதிக மதிப்புள்ளதாக ஆக்கப்பட்டிருந்திருக்கும். கிறிஸ்துவின் பின்னடியார்கள் எனச் சொல்லிக் கொள்ளும் இளம்பெண்கள் நடைமுறையில் அரவது குணத்தையும், அவரது சித்தத்தையும் அறியாதவர்களாக இருக்கிறதை நான் காணும்போது என் இருதயம் வேதனைப்படுகிறது. தவிட்டைப் புசிப்பதில் இத்தகைய வாலிபர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். நித்திய ஐசுவரியங்களைவிடவும் உலகத்தின் மின்னும் தகரம் அவர்களுக்கு அதிக மதிப்புடையதாகத் தோன்றுகிறது. சிந்தனையினாலும் ஆராய்ச்சியினாலும் வளர்க்கப்படவேண்டிய மனோசக்திகள் செயலற்றுக் கிடக்கும்படி விடப்பட்டிருக்கின்றன. ஆவிக்குரிய அழகு அல்லது மன வலிமையை விடவும் புறத்தோற்ற ஆடையானது அதிக முக்கியத்துவமுள்ளதாகக் கருதப்பட்டிருப்பதால், உணர்ச்சிகள் ஒழுங்குபடுத்தப்படாமல் இருக்கின்றன.

## உள்ளான அலங்கரிப்பு

தேவன் விலையேறப்பெற்றது என்று கூறுகிற சாந்தமும் அமைதலு முள்ள ஆவியாகிய உள்ளான அலங்கரிப்பை அடைவதற்குக் கிறிஸ்துவின் பின்னடியாாக்ள வகைதேடுவார்களா? அல்லது தவணையின் மிகக்குறைந்த மணிநேரங்களை ஆடம்பரத்துக்கான தேவையற்ற பிரயாசத்தில் அவர்கள் வீணடிப்பார்களா? பெண்ணானவள்—உலகத்திற்கு ஒரு ஆசீர்வாதமாகவும், தனது சிருஷ்டிகருக்கு மகிமையாகவும், ஒரு பயனுள்ள, மகிழ்ச்சியான வாழ்வை நடத்துவதற்கேதுவாக, அறிவார்ந்த, ஒழுக்கஞ்சார்ந்த பெலனையடைந்து, மனதிலும் இருதயத்திலும் தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கு அவள் வகைதேட வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார்.

நிகழ்கால சத்தியத்தை விசுவாசிப்பதாகக் கூறும் இன்றைய வாலிபர்களிடம், சத்தியத்தினிமித்தம் எவ்வகையில் அவர்கள் சுயத்தை

மறுதலித்தார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். ஒரு உடையை அல்லது ஒரு ஆபரணத்தை அல்லது சௌகரியத்தை அவர்கள் உண்மையிலேயே விரும்பும்போது, அவரது ஆவியானவர் இந்தப் பணச்செலவழிப்புக்கு அங்கீகாரம் அளிப்பாரா என்பதை அறிய ஜெபததில் கர்த்தருக்கு முன்பாகக் காரியத்தை அவர்கள் வைக்கிறார்களா? தங்களுக்குயரி ஆடை ஆயத்தத்தில், தாங்கள் அறிக்கையிடுகிற விசுவாசத்தைக் கனவீனம்பண்ணாதபடிக்கு அவர்கள் கவனமாக இருக்கிறீர்களா? இவ்விதமாகப் பயன்படுத்துகிற நேரத்தின்மீது கர்த்தருடைய ஆசீர்வாதத்தை அவர்கள் தேடமுடியுமா? சபையில் சேருகிற காரியம் வேறு; கிறிஸ்துவோடு இணைந்திருக்கிற காரியம் என்பது வேறு. அர்ப்பணிப்பில்லாத, லௌகிக—சிநேகமுள்ள ஆன்மீக அறிக்கையாளர்கள், கிறிஸ்துவின் சபையின் தளர்ச்சிக்கான மிகவும் முக்கியமான காரணிகளில் ஒன்றாக இருக்கின்றனர்.

உலகத்தின் இக்காலகட்டத்தில் சிற்றின்பத்துக்கான வெறியார்வம் முன்னொருபோதும் இல்லாத அளவுக்குக் காணப்படுகிறது. ஒழுக்கங் கெட்ட வாழ்க்கையும், அக்கறையற்ற ஊதாரித்தனமும் எங்கும் பரவி யிருக்கிறது. திரளானவர்கள் கேளிக்கைக்கான ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர். சிந்தையானது தியானத்திற்குப் பழக்கப்படாதபடியால், ஆராய்ச்சிக்குப் பயிற்று விக்கப்படாதபடியால், அது அற்பமானதாக, விளையாட்டுத்தனமுள்ளதாக மாறுகிறது. அறிவற்ற உணர்ச்சிப்பூர்வமான நிலை நடைமுறையில் இருக்கிறது. ஒவ்வொரு ஆத்துமாவும் பயிற்றுவிக்கப்பட்டு, பக்குவப்படுத்தப்பட்டு, உயர்த்தப் பட்டு, உன்னதநிலையை அடையவேண்டும் என்று தேவன் எதிர்பார்க் கிறார். ஆனாலும் ஒவ்வொரு மதிப்புமிக்க சாதனையும் பெருமளவில் நவநாகரீக ஆடம்பரத்துக்காகவும், மேலோட்டமான சிற்றின்பத்துக்காகவும் அசட்டை செய்யப்படுகிறது. நவநாகரீகத்தால் தங்கள் ஆத்துமாக்கள் வறுமைப்படுவதற்கும், குன்றிப்போவதற்கும் பெண்கள் அனுமதிக்கின்றனர்; இவ்விதமாக அவர்கள் சமுதாயத்திற்கு ஒரு ஆசீர்வாதமாக இருப்பதற்குப் பதிலாக, சாபமாக மாறுகின்றனர்.—Review and Herald, December 6, 1881.

## 122

# ஆடை எனும் விக்கிரகாராதனை

ஆடை எனும் விக்கிரகாராதனை என்பது ஒரு சன்மார்க்க வியாதியாகும். புதிய வாழ்க்கைக்குள் அது கொண்டுசெயல்லப்படக்கூடாது. பெரும்பாலான வேளைகளில், சுவிசேஷக் கோரிக்கைகளுக்கான கீழ்ப்படிதலானது ஆடையில் ஒரு தீர்மானிக்கப்பட்ட மாற்றத்தை அவசியமுள்ளதாக்கும்.

ஆடையில் அக்கறையின்மை இருக்கலாகாது. கிறிஸ்துவின் சாட்சிகளான நாம், அவர் நிமித்தம், நமது தோற்றத்தைச் சிறந்தவிதத்தில் ஆக்குவதற்கு வகைதேட வேண்டும். ஆசரிப்புக்கூடார ஆராதனையில், அவருக்கு முன்பாக ஊழியஞ்செய்கிறவர்களின் வஸ்திரங்கள் குறித்த ஒவ்வொரு விபரத்தையும் தேவன் குறிப்பிட்டுக் காட்டினார். அவருக்குச் சேவைசெய்கிறவர்களின் ஆடை விஷயத்தில் அவருக்கு ஒரு விருப்பத்தேர்வு இருக்கிறது என்பது இவ்விதமாக நமக்குக் கற்பிக்கப்படுகிறது. ஆரோனின் வஸ்திரங்கள் தொடர்பாகக் கொடுக்கப்பட்ட கட்டளைகள் மிகவும் குறிப்பான வைகளாக இருந்தன; அவனது ஆடை அடையாள அர்த்தமுள்ளதாக இருந்தது. அதுபோல கிறிஸ்துவின் பின்னடியார்களின் ஆடையும் அடையாள அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும். எல்லாவகையிலும் நமது தோற்றமானது, சுத்தம், தன்னடக்கம் மற்றும் தூய்மையினால் தனிப்பட விளங்குகிறதாயிருக்க வேண்டும். ஆயினும் வெறுமனே நவநாகரீகத்தின் பொருட்டு உலகத்தைப்போல நாம் தோற்றமளிப்பதற்கு உடையில் மாற்றங்களைச் செய்திட தேவனுடைய வார்த்தை அனுமதி அளிக்கவில்லை. பெருமதிப்புள்ள ஆடை அல்லது விலையுயர்ந்த ஆபரங்களைக் கொண்டு கிறிஸ்தவர்கள தங்களை அலங்கரிக்கக்கூடாது.

ஆடை சம்பந்தமான வேதத்தின் வார்த்தைகள் கவனமாகச் சிந்திக்கப்பட வேண்டும். உடலுக்கு உடுத்துகிற காரியத்திலும் பரலோகத்தின் கர்த்தர் மதிப்பிடுவதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கிறிஸ்துவின் கிருபையைத் தேடுவதில் வாஞ்சையாயிருக்கிற யாவரும் தேவனால் அருளப்பட்டிருக்கிற அருமையான போதனையின் வார்த்தைகளைக் கவனித்து நடப்பார்கள். உடையின் பாணிகூட சுவிசேஷத்தின் சத்தியத்தை வெளிப்படுத்துகிறதாயிருக்கும்.—Testimonies for the Church, Vol. 6, p. 96.

## 123

# மெய்யான அலங்கரிப்பு

ஒழுக்கங்கெடுக்கிற ஊதாரித்தனம் எங்கணும் பரவியிருக்கிறது, ஆடை மற்றும் ஆடம்பரப் பிரியத்தினால் ஆத்துமாக்கள் அழிவைநோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். நவநாகரீகத்தின் பக்தர்களாக இருப்பவர்களில் பத்தில் ஒன்பது பங்கினரின் வாழ்க்கையானது ஒரு உயிருள்ள பொய்யாக இருக்கிறது. வஞ்சனையும், மோசடியும் அவர்களது அன்றாடப் பழக்கமாக இருக்கிறது; தாங்கள் எவர்களாக இல்லையோ அவர்களாகக் காட்டிக்கொள்வதற்கு அவர்கள் விரும்புகின்றனர்.

தீய காரியங்களின்மீதுள்ள இச்சையைத் திருப்திசெய்துகொள்வதற்கு, ஆத்துமாவின் பெருந்தன்மை, தயவு, தாராளகுணம் ஆகியவை வீணாக இழக்கப்படுகின்றன. உலகத்தின் புதுப்பாணிகளைப் பின்பற்று வதற்குத் தங்களுக்குப் பணவளம் இருக்கவேண்டும் என்பதற்காக ஆயிரக்கணக் கானவர்கள் தங்கள் ஒழுக்கத்தை விற்றுப்போடுகின்றனர். உலகத்தின் நிலையற்ற நவநாகரீகங்களைக் குறித்த அப்படிப்பட்ட மதியீனம், எளிமையான ஆடம்பரமற்ற ஆடைக்காகத் தங்கள் நிலைப்பாட்டைத் தெரிந்துகொள்கிற ஒரு சீர்திருத்தவாதிகளின் சேனையை வெளிவரச்செய்ய வேண்டும். சாத்தான் புத்தம்புதுப்பாணிகளை எப்பொழுதும் புனைந்துகொண்டே இருக்கிறான்; பணம், நேரம் மற்றும் ஆரோக்கியத்தைத் தியாகம் பண்ணினாலொழிய அவைகளைப் பின்தொடர முடியாது.

## உலகத்தைப் பின்பற்றுதல்

நவநாகரீகத்தைக் குறித்த விஷயத்தில் உலகத்தின் ஒழுக்கச் சிதைவு பற்றியதான படம் நமக்கு முன்பாக இருக்கும்போது, வெளிப்படையாய்க் காணும் கிறிஸ்தவர்கள் எவ்வளவு துணிகரமாக உலகத்தாரின் பாதையைப் பின்பற்றுகின்றனர்? நெறிபிறழச்செய்யும் இத்தகைய புத்தம்புதுப்பாணிகளைப் பின்பற்றுவதால்அவைகளை நாம்அங்கீகரிப்பதுபோலக்காட்டிக்கொள்ளலாமா? அநேகர் உலகத்தின் நவநாகரீகங்களைப் பின்பற்றுகின்றனர்; ஏனெனில் மகிமையின் நம்பிக்கையான கிறிஸ்து அவர்களில் உருவாகவில்லை. சொகுசான வாழ்வும், ஊதாரித்தனமான உடுத்துதலும் கடைசிக்காலத்தின் அடையாளங்களில் ஒன்று என்று சேர்த்துக்கொள்ளும் அளவுக்கு முன்னேற்ற மடைந்திருக்கிறது.

பெருமையும் வெற்றாரவாரமும் எங்கணும் வெளிக்காட்டப்பட்டிருக் கின்றன; ஆயினும் தங்களையே மெச்சிக்கொள்ள நிலைக் கண்ணாடியில் உற்றுநோக்கும் இயல்புள்ளவர்கள், மாபெரும் சன்மார்க்கக் கண்ணாடியான தேவனுடைய பிரமாணத்தை உற்றுநோக்கும் இயல்பைச் சிறிதளவே கொண் டிருப்பார்கள். ஆடை எனும் இந்த விக்கிரகாராதனையாது குணத்திலுள்ள எல்லாத் தாழ்மையையும், சாந்தத்தையும், அழகையும் அழித்துப்போடுகிறது. தியானத்திற்கும், இருதயப் பரிசோதனைக்கும், ஜெபத்தோடுகூடிய தேவ னுடைய வார்த்தையின் ஆராய்ச்சிக்கும் அர்ப்பணிக்கப் படவேண்டிய அருமையான மணிநேரங்களை அது உள்வாங்கிக்கொள்கிறது. தேவனுடைய வார்த்தையில், விசேஷமாக நமது படிப்பினைக்கான பாடங்கள் ஆவியின் ஏவுதலால் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன...

ஆடைக்கான ஆர்வப்பற்று, இரக்கம், மற்றும் உதாரகுணத்தின் கிரியைகளுக்காக நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள பணவளத்திலிருந்து எடுத்துக்

கொள்கிறது; இந்த வீணான செலவு தேவனைக் கொள்ளையடிப்பதாக இருக்கிறது. பெருமை மற்றும் ஆடம்பரப்பிரியத்தின் திருப்திப்படுத்தலுக்காக நமது பணம் நம்மிடம் கொடுக்கப்படவில்லை. ஞானமுள்ள உக்கிராணக் காரர்களாக நாம் இருக்கவேண்டும், உடையற்றோர்க்கு உடுத்தி, பசித்தோ ருக்கு ஊட்டி, தேவனுடைய ஊழியத்தின் வளர்ச்சிக்காக நமது பணத்தைக் கொடுக்கவேண்டும். நமக்கு அலங்கரிப்புத் தேவைப்படுமானால், சாந்தம், தாழ்மை, தன்னடக்கம் மறறும் விவேகம் ஆகிய குணங்கள் ஒவ்வொரு நபருக்கும், வாழ்வின் ஒவ்வொரு படிநிலைக்கும், முறைமைக்கும் பொருத்த மானவைகளாய் இருக்கின்றன.

ஒழுக்கங்கெட்ட வாழ்விற்கும், ஊதாரித்தனத்திற்கும் தனிச்சிறப்புரிமை காட்டும் இந்தச் சீர்கெட்ட காலத்தில், வார்த்தையினாலும் நடக்கையினாலும் அவற்றை வெறுத்துக் கண்டித்தடக்குகிற விசுவாசமிக்க வீரர்களாக நம் நிலைபாட்டை நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? நாம் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்கிற ஒரு சரியான முன்மாதிரியை நம் வாலிபர்களுக்கு நாம் வைக்கவேண்டாமா?—Review and Herald, December 12, 1912. ★

# பகுதி 13

# பொழுதுபோக்கும் கேளிக்கையும்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 124 | பொழுதுபோக்கின் மதிப்பு | 328 |
| 125 | லௌகீகச் சிற்றின்பப் பிரியம் | 332 |
| 126 | ஆலோசனையின் வார்த்தைகள் | 336 |
| 127 | வாலிபருக்கான அபாயகரமான கேளிக்கைகள் | 338 |
| 128 | வாலிபர்களின் நேர்மையான நியதிகளை நிலைநாட்டுதல் | 343 |
| 129 | கிரியை செய்கின்ற பரிசுத்தமற்ற செல்வாக்குகள் | 346 |
| 130 | இறைவாழ்வில் சந்தோஷம் | 347 |
| 131 | கிறிஸ்தவப் பொழுதுபோக்கு | 349 |
| 132 | சமுதாயக் கூடுகைகள் | 351 |
| 133 | விடுமுறை நாட்களைச் செலவழிப்பது எப்படி? | 355 |
| 134 | இலக்கிய சங்கங்கள் | 357 |
| 135 | நடனம் புரிதல் | 361 |

பகுதி 13

# பொழுதுபோக்கும் கேளிக்கையும்

நம்மை உற்சாகப்படுத்தி மகிழ்ச்சிப்படுத்துகிற பொழுதுபோக்குக்கும், நம்மை சிரிக்கவைக்கிற கேளிக்கைக்கும் வித்தியாசமுண்டு, பொழுதுபோக்கு (Recreation) என்பது அதன் பெயருக்கேற்றவாறு உண்மையாக இருக்கும்போது (Re-creation) நம்மைப் பலப்படுத்தி கட்டுவிக்கின்றது. அதோடு அன்றாடப் பொறுப்புகள், தொழில்களிலிருந்து நம்மைப் பிரித்து, நம் மனதிற்கும் சரீரத்திற்கும் புத்துணர்ச்சியைக் கொடுத்து, மீண்டும் புதுபலத்தோடு நமக்குக் கொடுக்கப்பட்ட வேலையை உண்மையாயச் செய்யும்படி நம்மைத் தகுதிப்படுத்துகிறது. அதேநேரம், கேளிக்கையானது, வெறும் சிரிப்புக்காக மாத்திரம் செய்யப்பட்டு, அநேக வேளைகளில் சற்று அளவுக்கதிகமாகக் கூட போய்விடுகிறது. இது உபயோகமான வேலைக்குத் தேவையான பலத்தை உறிஞ்சிக்கொள்வதோடு, வாழ்க்கையில் உண்மை யான வெற்றியடையக்கூடாதபடி நமக்குத் தடங்கலாகவே இருக்கிறது.—Education, p. 207.

## 124

# பொழுதுபோக்கின் மதிப்பு

வாழக்கூடியவர்களில் கிறிஸ்தவர்கள் மிகவும் உற்சாகமான, மகிழ்ச்சியான மக்களாக இருக்கவேண்டும். தேவன் தங்களது பிதா மற்றும் தங்களது நித்திய நண்பர் என்ற எண்ணத்தை அவர்கள் கொண்டிருக்கலாம்.

ஆனால் வெளிப்படையாய்க் காணும் அநேகக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தைச் சரியாகப் பிரதிபலிப்பதில்லை. ஒரு மேகத்தின் கீழிருப்பதுபோன்று, அவர்கள் இருண்ட தோற்றமளிக்கின்றனர். தாங்கள் கிறிஸ்தவர்கள் ஆவதற்குச் செய்த மாபெரும் தியாகங்களைப் பற்றியே பெரும்பாலும் அவர்கள் பேசுகின்றனர். அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களிடம், வாழ்வை இன்பமும், சந்தோஷமும் நிறைந்த தாக்குகிற அனைத்தையும் அவர்கள் விட்டுவிடவேண்டும் என்பதைத் தங்களது சொந்த உதாரணம் மற்றும் உரையாடலினால் எடுத்துக்காட்டி வேண்டுகோள் விடுக்கின்றனர். ஆசீர்வாதமான கிறிஸ்தவ நம்பிக்கையின்மீது அவர்கள் இருளின் பிணச்சீலையை வீசியெறிகின்றனர். வாஞ்சையுள்ள

ஆத்துமாவுக்குக்கூட தேவனுடைய கோரிக்கைகள் ஒரு பெருஞ்சுமையாக இருக்கிறது; மேலும் இன்பம் தரும் அனைத்தையும் அல்லது சுவைக்கு மகிழ்வூட்டும் எதையும் தியாகம் செய்யவேண்டும் என்பதுபோன்ற எண்ணம் பதிக்கப்படுகிறது.

கிறிஸ்தவர்கள் எனக்கூறும் இவ்வகுப்பினரிடத்தில் உண்மையான கொள்கை இல்லை என்று கூற நாங்கள் தயங்குவதில்லை. தேவன் அன்பாகவே இருக்கிறார். தேவனில் வாசம்பண்ணுகிறவன், அன்பில் வாசம் பண்ணுகிறான். அனுபவப்பூர்வமான அறிவினால் நமது பரமபிதாவின் அன்பு மற்றும் மென்மையான மனதுருக்கத்துடன மெய்யாகவே அறிமுகமாகி யிருக்கிற யாவரும் தாங்கள் எங்கிருந்தாலும் வெளிச்சத்தையும் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துவார்கள். தேவனோடும் பரலோகத்ததோடும் அவர்கள் இணைக்கப்பட்டிருப்பதால், அவர்களது பிரசன்னமும் செல்வாக்கும் அவர்களது நண்பர்களுக்கு இனிமையான மலர்களின் நறுமணத்தைப்போல இருக்கும். பரலோகத்தின் தூய்மையும் மேன்மையுமான அழகும், அவர்களது செல்வாக்கினடியில் கொண்டுவரப்படும் யாவருக்கும் அவர்கள் மூலமாக வெளிப்படுத்தப்படும். இதுவே அவர்களை உலகத்துக்கு வெளிச்சமாக, பூமிக்கு உப்பாக ஏற்படுத்துகிறது. அவர்கள் மரணத்துக்கேதுவான மரண வாசனையாக இல்லாமல், மெய்யாகவே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனை யாக இருக்கிறார்கள்.

## கிறிஸ்தவப் பொழுதுபோக்கு

கிறிஸ்தவர்கள் தங்களது சரீர மற்றும் மனோரீதியான சக்திகளை தேவனுடைய மகிமைக்கென்று பயன்படுத்தும் நோக்கத்துடன், தீங்கற்ற பொழுதுபோக்கினால் தங்கள் உள்ளங்களுக்குப் புத்துணர்ச்சியூட்டவும், தங்கள் சரீரங்களுக்கு ஊக்கமூட்டவும் நாடுவது அவர்களது சிலாக்கியமும், கடமையுமாக இருக்கிறது. மதியீனமான முன்மாதிரியை எடுத்துக்கொள்கிற, உணர்வற்ற வேடிக்கையின் காட்சிகளாக நமது பொழுதுபோக்குள் இருக்கக்கூடாது. நம்முடன் தொடர்பில் உள்ளவர்களுக்கு நன்மைபயக்கச் செய்து, மேன்மைப்படுத்தி, கிறிஸ்தவர்களாகிய நம்மீது சுமந்திருக்கிற கடமைகளை மிக வெற்றிகரமாகச் செய்வதற்கு நம்மையும் அவர்களையும் சிற்பாகத் தகுதிப்படுத்துகிற விதத்தில் நாம் அவற்றை நடைமுறைப் படுத்தவேண்டும்.

வாழ்வின் வாடிக்கையான கடமைகளை உண்மையாய் நிறைவேற்று வதற்கு நம்மைத் தகுதியிழக்கச் செய்து, இவ்விதமாக தேவனையும், பரலோகக் காரியங்களையும் குறித்தச் சிந்தனைக்கான நமது சுவையுணர்வைக் குறைத்துப்போடும் இயல்புடைய கேளிக்கைகளில் நாம் ஈடுபட்டால்,

தேவனுடைய பார்வையில் நாம் மன்னிப்படைய முடியாது. கிறிஸ்துவின் மார்க்கமானது அதன் செல்வாக்கில் உற்சாகப்படுத்துகிறதாகவும், உயர்த்து கிறதாகவும் இருக்கிறது. மதியீனமான கிண்டல் மற்றும் வேடிக்கைப் பேச்சு, வீணும், அற்பமுமான வம்பளப்பு போன்ற அனைத்திற்கும் மேலானதாக இருக்கிறது. தூய்மைக்கும், உண்மையான நற்குணத்துக்கும், பரிசுத்தத்துக்கும் ஏதுவாக நமது ஜீவயங்களை அதிக வெற்றிகரமாக நாம் உயர்த்திக்கொள்ளும்படிக்கு, நமது எல்லாப் பொழுதுபோக்குக் காலங்களிலும் பெலத்துக்கான தெய்வீக மூலாதாரமானவரிடமிருந்து புத்தெழுச்சியான தைரியத்தையும், வல்லமையையும் நாம் சேகரித்துக் கொள்ளலாம்.

### அழகிற்கான நேசம்

மகாதேவனும்கூட அழகை நேசிப்பவராக இருக்கிறார். தமது கரங்களின் கிரியையில் இதற்கான தெளிவான ஆதாரத்தை அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். நமது முதல் பெற்றோருக்காக ஏதேனில் ஓர் அழகான தோட்டத்தை அவர் அமைத்தார். விதவிதமான வர்ணனை கொண்ட கெம்பீரத் தோற்றமுள்ள மரங்கள், பயன்பாட்டிற்காகவும் அழகுக்காகவும் பூமியிலிருந்து முளைக்கும்படி செய்யப்பட்டன. அரிதான அழகும், விதவிதமான தோற்றமும், நிறமும் கொண்ட கண்ணுக்கினிய மலர்கள் படைக்கப்பட்டன; காற்றை நறுமணப்படுத்தின பல்வேறுபட்ட பறவையினத்தைச் சார்ந்த, மகிழ்ந்து பாடும் பறவைகள் தங்களது சிருஷ்டிகருக்குத் துதிசெலுத்தும்படி தங்கள் ஆனந்த கீதங்களை இன்னிசையாய்ப் பாடின. தேவன் படைத்திருந்த காரியங்களைப் பராமரிக்கும் பணியில் மனிதன் மகிழ்ச்சியைக் கண்டடைவதும், தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளினால் அவனது தேவைகள் சந்திக்கப்படுவதும் அவருடைய திட்டமாய் இருந்தது.

நமது முதல் பெற்றோரின் ஏதேன் இல்லத்தை மிகவும் மேன்மையான அழகுடன் படைத்த தேவன், நமது மகிழ்ச்சிக்காக வானளாவிய மரங்களையும், வனப்புமிக்க மலர்களையும், இயற்கையில் காண்பதற்கினிய அனைத்தையும் கொடுத்திருக்கிறார். அவரது குணம் குறித்த சரியான கண்ணோட்டங்களை நாம் பெற்றிடவேண்டும் என்பதற்காக அவரது அன்பின் அடையாளங்களாக இவைகளை அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

அழகிற்கான நேசத்தை அவர் தமது பிள்ளைகளின் இருதயங்களில் ஊன்றி வைத்திருக்கிறார். ஆனால் அநேகரால் இந்த நேசம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. தேவன் நமக்காகக் கொடுத்திருக்கிற நன்மைகளும், அழகுக்கூறுகளும் ஆராதிக்கப்படுகின்றன, அதே வேளையில் மகிமையான கொடையாளர் மறக்கப்படுகிறார். இது மதியீனமான நன்றியின்மை ஆகும்.

அவரது அனைத்துச் சிருஷ்டிப்பின் கிரியைகளில் நமக்காக வெளிப்படும் தேவனுடைய அன்பினை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்; இருதயத்தின் மிகச்சிறந்த, மிகப் பரிசுத்தமான பாச உணர்ச்சிகளை அவருக்குக் கொடுப்பதினால், இவ்விதமான அவரது அன்பின் ஆதாரங்களுக்கு நமது இருதயங்கள் மறுமொழி கொடுக்கவேண்டும்.

## கைதேர்ந்த கலைஞர்

மனதை வசீகரிக்கவும், சுவாரஸ்யப்படுத்தவும் இயற்கையின் அழகான காட்சி நம்மைச் சூழ்ந்திருக்கும்படி தேவன் செய்திருக்கிறார். இயற்கையின் மகிமைகளை அவரது குணத்துடன் நாம் தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டும் என்பது அவரது திட்டமாக இருக்கிறது. இயற்கை எனும் புத்தகத்தை நாம் உண்மையாக ஆராய்ந்தால், தேவனுடைய அளவற்ற அன்பையும் வல்லமையையும் தியானிப்பதற்கான ஒரு செழிப்பான மூலாதாரமாக அது இருக்கிறது என்பதை நாம் கண்டடைவோம். திரைச்சீலையின்மீது அழகான படங்களை உருவாக்குகிற கலைநயத்திறமையை அநேகர் வியந்து போற்றுகின்றனர். தேகத்தின் சக்திகளெல்லாம் அநேகரால் கலைத்திறனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றன, ஆயினும் இயற்கையிலிருந்து இவைகள் எவ்வளவாகக் குறைவுபட்டிருக்கின்றன. இயற்கையில் காணும் பூரண அழகைக் கலைத்திறன் ஒருபோதும் அடையமுடியாது. வெளிப்படையாய்க் காணும் அநேகக் கிறிஸ்தவர்கள் ஒரு மாலைநேர அஸ்தமனத்தின் சித்திரத்தைக் கண்டால் ஆனந்தப்பரவசம் அடைவார்கள். கலைஞனின் திறமையை அவர்கள் ஆராதிக்கிறார்கள்; ஆனால் ஒவ்வொரு மந்தாரமற்ற மாலைப்பொழுதிலும் நிஜமாய் திகழும் மகிமையான அஸ்தமனத்தை உற்றுநோக்குகிற அவர்களது சிலாக்கியத்தை அவர்கள் புறக்கணித்து விடுகின்றனர்.

கலைஞன் தன் வரைபடத்திட்டத்தை எங்கிருந்து பெற்றான்? இயற்கையிலிருந்து. ஆனால் கைதேர்ந்த மாபெரும் கலைஞர் மறையும் சூரியனின் மகிமைகளைப் பெயருந்தன்மையுள்ள, மாறும் தன்மையுள்ள ஆகாயத்தின்மீது வரைந்து வைத்திருக்கிறார். உன்னதப் பரமண்டலத்தின் நுழைவாயில்கள் விசாலமாய்த் திறக்கப்பட்டு, அதின் ஒளிக்கதிர்களை நாம் கண்ணோக்கி, நம் கற்பனாசக்தி உள்ளேயுள்ள மகிமையைப் பற்றிக்கொள்வதுபோல, அவர் வானங்களைப் பொன், வெள்ளி, இரத்தாம்பரத்தினால் வண்ணப்படுத்தி, மெருகேற்றியிருக்கிறார். வானமண்டலத்தில் நிறுவப்பட்டுள்ள இச்சித்திரத்திலிருந்து அநேகர் அக்கறையின்றித் திரும்பிக்கொள்கின்றனர். வானங்களில் காணப்படும் தேவனுடைய அளவற்ற அன்பு மற்றும் வல்லமையின் ஈடு இணையற்ற

அழகுக்கூறுகளைக் கண்ணோக்கிப் பார்க்க அவர்கள் தவறிவிடுகின்றனர், ஆனால் கைதேர்ந்த கலைஞரைப் பார்த்துச் செய்யப்பட்ட குறைபாடுள்ள சித்திரங்களை அவர்கள் கண்டு ஆராதிக்கும் வேளையில் ஏறக்குறைய மெய்மறந்துவிடுகின்றனர்.—Review and Herald, July 25, 1871.

### சோதனைக்கு எதிர்த்துநிற்கும் தகுதியிழத்தல்

கேளிக்கைப் பிரியர்கள், உல்லாசம் மற்றும் சிற்றின்பப் பிரியர்களுடன் நீங்கள் உங்களை இணைத்துக்கொள்கிற அதே வேளையில் சோதனைக்கு எதிர்த்துநிற்க முடியும் என்று நினைக்காதீர்கள்.—The Signs of the Times, June 20, 1900.

## 125

# லௌகிகச் சிற்றின்பப் பிரியம்

ஒரு கூட்டத்தாரான வாலிபர்களின் உள்ளங்களில் உலக சிநேகமானது உயர்விடத்தைப் பெற்றிருக்கிறது என்பது ஒரு அதிர்ச்சிகரமான உண்மை ஆகும். இரக்கமானது தாமதித்துக்கொண்டிருக்கும்வேளையில், அநேகர் தவணையின் அருமையான மணிநேரங்களை ஒரு ஆரவாரமான விடுமுறைக்காலம் போலவும், வெறுமனே தங்களது சொந்த மகிழ்ச்சிக் காகவும், பரபரப்பான தொடர்வட்ட வாழ்க்கைச் சுழற்சியினால் தங்களை திருப்திப்படுத்திக் கொள்வதற்காகவும், அவர்கள் உலகத்தில் வைக்கப்பட்டிருப்பதுபோல நினைத்துத் தங்களையே நடத்திக் கொண்டிருக் கின்றனர். அவர்கள் தங்களது சிற்றின்பங்களை உலகத்திலும், உலகத்தி லுள்ளவைகளிலும் கண்டடைகின்றனர்; அவர்கள் பிதாவுக்கும், அவரது ஆவியின் அருங்குணங்களுக்கும் அந்நியர்களாக இருக்கின்றனர். அநேகர் தங்களது உரையாடலில் அக்கறையற்றவர்களாக இருக்கின்றனர். தங்களது வார்த்தைகளினால் அவர்கள் நீதிமான்களாக்கப்படுவார்கள் அல்லது குற்றவாளிகளாகத் தீர்க்கப்படுவார்கள் என்பதை மறப்பதற்கு அவர்கள் தெரிந்துகொள்கின்றனர். நமது வாலிபர்களில் அநேகரது வாழ்வின் தனிச்சிறப்பாய் அமைந்திருக்கிற அற்பமான, வெறுமையான, வீணான பேச்சு மற்றும் வெடிச்சிரிப்பினால் தேவன் கனவீனம் பண்ணப்படுகிறார்...

உலகரீதியான கேளிக்கைகளில் மகிழச்சியைக் கண்டடையவும், இத்தகைய கேளிக்கைகள் தீங்கற்றவை, பாவமற்றவை, ஆரோக்கியத்துக்கும் முக்கியமானவை என்பதுபோலக் காட்ட முயற்சிப்பதினால் தங்களையே சரியென்று நிரூபிக்கவும் அவர்களை நடத்துவதற்குச் சாத்தான் விசேஷப்

பிரயத்தனங்களை செய்கிறான். லௌகிகச் சிற்றின்பப் பாதைகள் மலர்களால் மூடப்பட்டவை போன்று அவன் காட்டுகிற அதே வேளையில், பரிசுத்தத்துக்கான பாதையைக் கடினமானதாகக் காட்டுகிறான்.

போலியான, மனதைக் கவரும் வண்ணங்களில், வாலிபர்களுக்கு முன்பாக உலகச் சிற்றின்பங்களை அணிவரிசையாக அவன் வைத்திருக் கிறான். ஆயினும் பூமியின் சிற்றின்பங்கள் விரைவில் ஒரு முடிவுக்கு வரும், விதைக்கப்பட்டது அறுக்கப்படவும் வேண்டும். நம் வாழ்வின் சிருஷ்டிகர்த்தாவும், நம்மை ஒவ்வொரு நொடியும் காப்பவருமான தேவனுக்கு அர்ப்பணிக்கக் கூடாதபடிக்குத் தனிப்பட்டக் கவர்ச்சிகளும், திறமையும், தாலந்துகளும் அவ்வளவு விலைமதிப்பற்றவைகளா? தேவனுக்கு ஒப்படைக்கக்கூடாதபடிக்கு நமது தகுதிகள் அவ்வளவு அருமையானவைகளா?

## ஞானத்தின் வழி

எழுச்சியூட்டவும், மனதைத் திசைதிருப்பவும் தங்களுக்கு ஏதாவது தேவை என்று வாலிபர்கள் அடிக்கடி வற்புறுத்துகிறார்கள். கிறிஸ்தவனின் நம்பிக்கையே தேவையானதாக இருக்கிறது. ஆன்மீகமானது விசுவாசிக்கு ஒரு தேற்றரவாளனாக, மெய்யான மகிழ்ச்சியின் ஊற்றுக்கான ஒரு நிச்சயமான வழிகாட்டியாக விளங்கும். வாலிபர்கள் தியானத்துக்கும், ஜெபத்துக்கும் தங்களை ஒப்படைத்து, தேவனுடைய வார்த்தையை ஆராயவேண்டும். தங்களது ஓய்வான மணித்துளிகளை வேறெவ்விதத்திலும் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள முடியாது என்பதை அவர்கள் கண்டடைவார்கள். ஞானத்தின் “வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம்.”

பவுல், தீத்துவுக்கு எழுதுகையில், வாலிபர்கள் தெளிந்த புத்தி யுள்ளவர்களாயிருக்கும்படி அறிவுறுத்துகிறார்; “அப்படியே, பாலிய புருஷ ரும் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கவும் நீ புத்திசொல்லி, நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாத வனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக”—தீத்து 2:6–8.

அப்போஸ்தலனின் அறிவுரையைக் கவனிக்குமாறு, வாலிபர்களை அவர்களது ஆத்துமாக்களினிமித்தம் கெஞ்சிக் கேட்கிறேன். இத்தகைய அனைத்து கிருபையுள்ள போதனைகளும், எச்சரிப்புகளும், கடிந்துரைகளும் ஜீவனுக்கேற்ற ஜீவவாசனையாக அல்லது மரணத்துக்கேற்ற மரண வாசனையாக இருக்கும்.

வாலிபர்கள் தங்களிடமிருந்து அதிகமான பொறுப்பு, பராமரிப்பு அல்லது பாரத்தைச் சுமத்தல் போன்றவை எதிர்பார்க்கப்படுகிறதில்லை என்று இயல்பாகவே நினைக்கும் தன்மையுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆனாலும் வேதாகமத் தராதரத்தை அடைவதற்கான ஒவ்வொருவர்மீதும் சுமந்திருக்கிறது. சிலாக்கியங்களிலும், வாய்ப்புகளிலும், வார்த்தையின் ஊழியத்திலும், ஆலோசனைகளிலும், எச்சரிப்புகளிலும், கடிந்துரைகளிலும் பிரகாசிக்கிற வெளிச்சமானது குணத்தைப் பூரணப்படுத்தும் அல்லது அக்கறையற்றோரைக் குற்றமுள்ளவர்களாகத் தீர்க்கும். இவ்வெளிச்சமானது வாலிபர்களாலும் வயோதிபர்களாலும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். தங்களது ஜீவியங்களில் தேவனுடைய சேவைக்கு முதலிடம் கொடுக்கத் தீர்மானித்து, அவருக்காக நிற்க இப்பொழுது தெரிந்துகொள்பவர்கள் யார்? சுமைதாங்கிகளாக யார் இருப்பார்கள்?

"நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை." இளமையின் உத்வேகம் எவர்கள்மீது இருக்கிறதோ அவர்களது சேவையை இயேசு விரும்புகிறார். அழியாமையைச் சுதந்தரிப்பவர்களாக அவர்கள் இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். வாலிபர்களில் மிக அதிகமானோரை சிறு வயதிலேயே கறைப்படுத்துகிற ஒழுக்கச் சீர்கேடு பெருகியிருந்தாலும்; அவர்கள் உயர்தரம்வாய்ந்த ஆண்மை, பெண்மைக் குள்ளாக வளர்ந்திடலாம். அவர்கள் இருளின் பிள்ளைகளாக அல்ல, வெளிச்சத்தின் பிள்ளைகளாகக் கிறிஸ்துவில் விடுதலை பெற்றவர்களாக இருக்கலாம்.

ஒவ்வொரு தீய பழக்கத்தையும் துறந்து, பணியில் ஜாக்கிரதையா யிருக்கவும், ஆவியிலே அனலாயிருக்கவும், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யவும், தேவன் ஒவ்வொரு வாலிப ஆணையும், வாலிபப் பெண்ணையும் அழைக்கிறார். தவறான பழக்கங்களை மேற்கொள்ளவோ அல்லது நடத்தையை மேம்படுத்தவோ முயற்சி செய்யாமல், சோம்பலில் அவர்கள் நிலைத்திருக்க வேண்டியதில்லை. கர்த்தர் தமது ஆவியின் வல்லமையினால் மேற்கொள்வதற்கு தங்களுக்குப் பெலனளிப்பார் என்று விசுவாசித்து, அவர்கள் ஒவ்வொரு அடியிலும் தீய பழக்கங்களையும், தோழமைகளையும் வைவிடலாம்.

## சிறுசிறு காரியங்களில் உண்மையாயிருத்தல்

தனிப்பட்ட, தொடர்ச்சியான, கூட்டு முயற்சிகள் வெற்றி எனும் வெகுமானத்தைப் பெறும். நம் உலகத்தில் மாபெரும் அளவிலான நன்மையைச் செய்ய விரும்புகிறவர்கள், சிறுசிறு காரியங்களைச் செய் வதினால் தேவனுடைய வழியில் அதைச் செய்யும் விருப்பமுள்ளவர்களாக

இருக்கவேண்டும். ஏதோ ஒரு மாபெரும், ஆச்சரியமான காரியத்தைச் செய்வதினால் சாதனையின் உச்சநிலையை அடையவேண்டுமென்று விரும்புகிறவர் எதையும் செய்வதில் தோல்வியுறுவார்.

ஒரு நல்ல பணியில் படிப்படியான முன்னேற்றம், ஒரு வகையான விசுவாசமிக்க சேவையை அடிக்கடித் திரும்பத் திரும்பச் செய்தலானது, ஒரு மாபெரும் பணியைச் செய்கிறதைவிடவும் தேவனுடைய பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றதாயிருக்கிறது; அது வாலிபர்களுக்கு நற்கீர்த்தியைப் பெற்றுத் தரும், அவர்களது முயற்சிகளுக்கு நன்மதிப்பைக் கொடுக்கும்…

ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு உழைப்பதினால் வாலிபர்கள் நன்மை செய்யலாம். தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தாலந்துகளை அவர்கள் பயன்படுத்துவதற்காக தேவன் அவர்களிடம் கணக்குக் கேட்பார். தேவனுடைய குமாரர்கள் மற்றும் குமாரத்திகளாக இருப்பதாக உரிமை பாராட்டுகிறவர்கள் ஓர் உயர்ந்த தரத்தைக் குறிக்கோளாக்கிக் கொள்ளட்டும். தேவன் அவர்களுக்குத் தந்திருக்கிற ஒவ்வொரு மனோசக்தியையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும்.—The Youth's Instructor, January 1, 1907.

## திருப்தியடையாத ஏக்கங்கள்

இன்பமூட்டும் கேளிக்கைகளுக்கான இடைவிடாத விருப்பமானது ஆத்துமாவின் ஆழ்ந்த ஏக்கங்களை வெளிப்படுத்துகிறது. ஆயினும் லௌகிக சிற்றின்பத்தின் ஊற்றில் பருகுகிறவர்கள் தங்களது ஆத்தும தாகம் இன்னும் திருப்தியடையாதிருப்பதைக் காண்பார்கள். அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கின்றனர்; களியாட்டத்தை அவர்கள் மகிழ்ச்சியென்று தவறாக நினைக்கின்றனர்; உற்சாகம் தணியும்போது, மனச்சோர்வு மற்றும் மனக்கசப்பின் ஆழங்களுக்குள் அநேகர் மூழ்கிப்போகின்றனர். லௌகிக சிற்றின்பம் எனும் “வெடிப்புள்ள தொட்டிகளுக்காக” “ஜீவத்தண்ணீர் ஊற்றை” விட்டுவிடுவது எவ்வளவு மூர்க்கத்தனம், ஓ எவ்வளவு மதியீனம்! —Fundamentals of Christian Education, p. 422.

## சாட்சிபகருதலுக்கான சிலாக்கியங்கள்

நீங்கள் மெய்யாகவே கிறிஸ்துவினுடையவர்கள் என்றால், அவருக்காகச் சாட்சிபகரும் சிலாக்கியங்களை நீங்கள் பெறுவீர்கள். கேளிக்கையின் இடங்களில் கலந்துகொள்ளும்படி நீங்கள் அழைக்கப் படுவீர்கள், உங்கள் கர்த்தருக்காகச் சாட்சிபகரக்கூடிய ஒரு வாய்ப்பை நீங்கள் பெறும் நேரம் அதுவாக இருக்கும். அப்பொழுது நீங்கள் கிறிஸ்துவுக்கு உண்மையாயிருந்தால், நீங்கள் கலந்துகொள்ளக் கூடாமைக்கான

நொண்டிச்சாக்குகளை உருவாக்க முயற்சிக்க மாட்டீர்கள்; மாறாக, நீங்கள் தேவனுடைய பிள்ளை என்பதையும், உங்கள் கர்த்தருடைய பிரசன்னத்தை நீங்கள் ஒரு நிகழ்ச்சிக்காகவாவது அழைக்கக்கூடாத ஒரு இடத்தில் இருப்பதற்கு உங்கள் கொள்கைகள் உங்களை அனுமதிக்காது என்பதையும் வெளிப்படையாக, தன்னடக்கத்துடன் அறிவிப்பீர்கள்.—The Youth's Instructor, May 4, 1893.

## 126

# ஆலோசனையின் வார்த்தைகள்

சரீரரீதியான, மனரீதியான வல்லமைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய ஒழுங்கு ஆகும்; ஆனால் எடுக்கப்படுகிற உடற்பயிற்சியின் தன்மையானது கிறிஸ்துவினால் தமது சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்ட படிப்பினைகளுடன் முற்றிலும் இசைவானதாக இருக்கவேண்டும். அத்தகைய படிப்பினைகள் கிறிஸ்தவர்களின் ஜீவியங்களில் பின்பற்றப்பட வேண்டும், அப்படிச்செய்தால் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் சுய பயிற்சி மற்றும் கல்வி அனைத்திலும் அவர்களைக் குறித்து “சுகபோகப் பிரியர்கள்” என்று பரலோக ஏதுகரங்கள் பதிவுசெய்யாதிருப்பார்கள். “தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராக” (2 தீமோ. 3:4) இருக்கிறார்கள் என்பதே பெரும் எண்ணிக்கையிலானவர்களைப்பற்றி இப்பொழுது செய்யப்பட்டுவரும் பதிவேட்டுக் குறிப்பாகும்.

இவ்விதமாகச் சாத்தானும் அவனது தூதர்களும் ஆத்துமாக்களுக்காகத் தங்களது கண்ணிகளை வைக்கின்றனர். மிகவும் தீவிரமாக ஈர்த்துக்கொள்ளுகிற, கீழ்த்தர உணர்ச்சிகளைப் பெலப்படுத்தி, மனித இருதயங்களின்மீதான தேவனுடைய ஆவியின் கிரியைகளுக்கு எதிர்த்துச் செயல்படும் பசியார்வங்களையும், வெறி உணர்ச்சிகளையும் உருவாக்குகிற கேளிக்கைகளிலும், பயிற்சிகளிலும் ஈடுபடுவதற்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மனங்களைத் தூண்டிவிடும் விதத்தில் அவர்கள் வேலைசெய்து கொண்டிருக்கின்றனர்.

ஒரு பள்ளியிலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சி, ஒரு மாற்றுப்பணி தேவை. பயனுள்ள, நடைமுறைப் பணியாக அது இருக்கவேண்டும் என்று தேவன் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் அநேகர் ஆவிக்குரிய வாழ்விற்குக் கெடுதியுண்டாகும் விதத்தில் மனிதக் கண்டு பிடிப்புகளைக் பின்பற்றுவதற்காக தேவனுடைய திட்டத்திலிருந்து விலகிச்

சென்றிருக்கின்றனர். பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கு எதிர்த்துச் செயல்படுவதை, வேறெதைக் காட்டிலும் கேளிக்கைகள் அதிகமாகச் செய்துகொண்டிருக்கின்றன, கர்த்தர் துக்கப்படுகிறார்…

“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்”–1 பேதுரு 5:8. விளையாட்டு மைதானத்தில் அவன் இருக்கிறான், உங்கள் கேளிக்கைகளை அவன் கண்காணிக்கிறான், பாதுகாப்பற்றிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும் அவன் கண்டு, பற்றிக்கொள்ளுகிறான். மனித இருதயங்களில் விதைகளை விதைக்கிறான், மனித உள்ளங்களின் கட்டுப்பாட்டை அவன் அடைந்து கொள்ளுகிறான். வகுப்பறையின் ஒவ்வொரு பயிற்சியிலும் அவன் இடம்பெறுகிறான். தங்கள் மனங்களை விளையாட்டுகளின்மீது ஆழமாகக் கிளர்ச்சியடையும்படி அனுமதிக்கிற மாணவர்கள், அவர்களுக்கு மிகவும் அவசியமான போதனை, ஆலோசனை, கடிந்துரையைப் பெற்றுக்கொள்கிற சிறந்த நிலைமையில் இருக்கிறதில்லை.

உடற்பயிற்சியானது ஞானத்தின் தேவனால் திட்டமிடப்பட்டிருந்தது. நமது வாலிபர்கள் அனைவருக்கும் அத்தியாவசியமானதாக இருக்கிற நடைமுறைவாழ்வின் கடமைகளைக் கற்றுக்கொள்வதில் மாணவர்களுக்கு உதவியாயிருக்கும் பணியின் பற்பல துறைகளைக் குறித்த பயனுள்ள கல்விக்கு சில மணிநேரங்கள் ஒவ்வொருநாளும் ஒதுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பள்ளியிலும், ஒவ்வொரு பிற நிறுவனத்திலும் இருக்கிற ஒவ்வொரு நபரும், ஒவ்வொரு பணித்துறையிலும் மிக உயர்ந்த தரத்தை எட்டிப்பிடிப்பதற்கு அவர் பெலப்படுத்தப்படும் வகையில் தானியேலைப் போன்று, சகல ஞானத்திற்கும் ஊற்றானவருடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. தேவபயமும், அன்பும் தானியேலுக்கு முன்பாக இருந்தது; தேவனுக்கு அவன் கட்டுப்பட்டிருக்கிற உணர்வுடன், மாபெரும் ஆசிரியரின் அன்பின் பராமரிப்பிற்குக் கூடுமான வரைக்கும் மறுமொழி கொடுப்பதற்கு அவன் தனது வல்லமைகள் அனைத்தையும் பயிற்றுவித்திருந்தான். சுயநல நோக்கங்களும், கேளிக்கை களின் பிரியமும், வாழ்வின் பொன்னான நொடிகளை ஆக்கிரமிப்பதற்கு நான்கு எபிரெயப் பிள்ளைகளும் அனுமதிக்கவில்லை. விருப்பமுள்ள இருதயத்துடன், ஆயத்த சிந்தையுடன் அவர்கள் பணிபுரிந்தனர். ஒவ்வொரு கிறிஸ்தவ வாலிபனும் அடையவேண்டிய உயர்வான தராதரம் இதைக்காட்டிலும் வேறெதுவுமில்லை.—Counsels to Teachers, Parents, and Students, pp. 281–284.

127

# வாலிபர்களுக்கான அபாயகரமான கேளிக்கைகள்

கிளர்ச்சி மற்றும் பிரியமூட்டும் பொழுதுபோக்குக்கான விருப்பமானது தேவஜனங்களுக்கு, குறிப்பாக வாலிபர்களுக்கு ஒரு சோதனையும், ஒரு கண்ணியுமாக இருக்கிறது. சற்றே எதிர்காலத்தில் இருக்கும் காட்சிகளுக்காக ஆயத்தமாகும் பக்திவிநயமான பணியிலிருந்து மனங்களைக் கவர்ந்திழுப்பதற்குத் தூண்டுதல்களைச் சாத்தான் தொடர்ந்து ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறான். உலகப் பிள்ளைகளை ஏதுகரமாகக் கொண்டு, விழிப்பாயிராதவர்களை லௌகிக சிற்றின்பங்களில் சேர்ந்துகொள்ளத் தூண்டும்விதத்தில் தொடர்ச்சியான கிளர்ச்சியை அவன் தக்கவைத்துக்கொள்கிறான். லௌகிகப் பிரியத்தில் வழிநடத்துவதற்காக நன்கு திட்டமிடப்பட்ட படக்காட்சிகளும், விரிவுரைகளும், முடிவில்லாத பல்வேறுவகைப் பொழுதுபோக்குகளும் இருக்கின்றன; உலகத்துடன் கொள்ளும் இந்த ஐக்கியத்தின்மூலமாக விசுவாசம் பெலவீனப்படுகிறது.

சாத்தான் ஒரு விடாப்பிடியுள்ள பணியாளன், தந்திரமுள்ள, கொடிய சத்துரு ஆவான். முகஸ்துதியாக அல்லது ஏதோ ஒரு பாவத்தைக் குறைந்த அருவருப்புடன் வாலிபர்களைப் பார்க்கும்படிச் செய்வதற்கு, ஒரு துடுக்கான வார்த்தைப் பேசப்படுகிறபோதெல்லாம், அவன் அதைச் சாதகமாக்கிக்கொண்டு, அந்தத் தீய விதையானது வேர்பற்றி, ஒரு நிறைவான அறுவடையை அளிக்கும்படிக்கு அதைப் போஷித்து வளர்க்கிறான். வஞ்சகன், திறமையுள்ள வசீகரன் என்ற வார்த்தையின்படியாகவே அவன் இருக்கிறான். தீங்கற்றவையாய்த் தோன்றுகிற, நன்கு பின்னப்பட்ட அநேக வலைகள் அவனிடத்தில் உண்டு; ஆயினும் அவைகள் வாலிபர் களையும், விழிப்பற்றோரையும் சிக்கவைப்பதற்காக நுணுக்கமாகத் தயாரிக்கப் பட்டவைகள். ஜென்ம சிந்தை சிற்றின்பத்தையும், சுய திருப்தியையும் நோக்கியே செல்லுகிறது. இது என் ஆத்துமாவுக்கு ஏற்றதா? என்ற கேள்விக்கு நேரமில்லாதபடிக்கு, உலகரீதியான கேளிக்கைக்காக மனதை நிரப்பிவிடுவதே சாத்தானின் கோட்பாடு ஆகும்.

### துரதிர்ஷ்டமான காலம்

வாலிபர்களுக்கான துரதிர்ஷ்டமான காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமுதாயத்தில் பரவியிருக்கும் செல்வாக்கானது, வாலிபர்

களை அவர்களது மனம்போன போக்கில் விடுவதற்குச் சாதகமானதாக இருக்கிறது. தங்களது பிள்ளைகள் மிகவும் முரடர்களாக இருந்தால், அவர்கள் வளர்ந்து, தாங்களே பகுத்தறிந்து கொள்ளும்போது, தங்களுடைய கெட்ட பழக்கங்களைக் கைவிட்டுவிட்டு, பயனுள்ள ஆண்கள், பெண்களாக மாறுவார்கள் என்று பெற்றோர்கள் தங்களையே தேற்றிக்கொள்கின்றனர். என்னே ஒரு பிழை! ஆண்டுகள் கணக்கிலே சத்துருவானவன் இருதயத்தின் தோட்டத்தில் விதைக்கும்படி அவர்கள் விட்டுவிட்டு, மறைந்திருக்கும் அபாயங்களைக் கண்டுணராதவர்கள்போல, தவறான கொள்கைகள் வளரவும், பெலப்படவும் அனுமதித்துவிட்டனர், பாதையின் அஞ்சத்தகுந்த முடிவானது அவர்களுக்கு மகிழ்ச்சியின் பாதையாகக் காட்சியளிக்கிறது. அநேக வேளைகளில் இத்தகைய வாலிபர்களின் மீது வாரி வழங்கப்பட்ட பிந்தைய உழைப்பு யாவும் பயனற்றுப்போய் விடுகிறது.

வெளிப்படையாய்க் காணும் கிறிஸ்தவர்கள் மத்தியில் பொதுவாகப் பக்தியின் தராதரம் குறைவாகவே இருக்கிறது. அநேக சபை—அங்கத்தினர் களால் ஊக்கப்படுத்தப்படுகிற லௌகிக செல்வாக்குகளுக்கு எதிர்த்துநிற்பது வாலிபர்களுக்குக் கடினமாக இருக்கிறது. பெயர்க்கிறிஸ்தவர்களில் பெரும்பாலானவர்கள், கிறிஸ்துவுக்காக வாழ்வதாகச் சொல்லிக்கொண்டாலும், உண்மையில் உலகத்துக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். பரலோகக் காரியங்களின் மேன்மையை அவர்கள் பகுத்துணர்வதில்லை, ஆகையால் அவைகளை அவர்கள் உண்மையாக நேசிக்க முடிவதில்லை. கிறிஸ்தவம் கனத்துக்குரியதாகக் கருதப்படுகிறபடியால் அநேகர் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். மெய்யான கிறிஸ்தவம் என்பது சிலுவை சுமக்கக்கூடியது என்பதை அவர்கள் பகுத்துணரவில்லை; லௌகிக சிற்றின்பங்களில் பங்குபெறுவதிலிருந்து அவர்களைத் தடுப்பதற்கு அவர்களது ஆன்மீகம் குறைந்த செல்வாக்கையே பெற்றிருக்கிறது.

சிலர் நடன அறையில் நுழைந்து, அது அளிக்கும் அனைத்து கேளிக்கைகளிலும் பங்குகொள்ளமுடியும். மற்றவர்கள் இதுபோன்ற தொலைவுகளுக்குள் செல்லமுடியாது. ஆயினும் அவர்கள் இன்பவிருந்துகள், குடும்ப விருந்துகள், படக்காட்சிகள் மற்றும் உலகரீதியிலான கேளிக்கையின் மற்ற இடங்களில் கலந்துகொள்ள முடியும்; அவர்களது தோற்றத்துக்கும், அவிசுவாசிகளின் தோற்றத்துக்கும் இடையிலுள்ள எந்த வித்தியாசத்தையும் கண்டறிய மிகவும் ஊடுருவிக் காணும் கண்ணும் தவறிவிடும்.

இன்றைய சமுதாய நிலைமையில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தடையுத்தரவுபோடுவதும், வேதாகம நேர்மை நியதியின்படி அவர்களுக்குப் போதிப்பது எளிதான வேலையல்ல. தடையுத்தரவின்கீழ்

பிள்ளைகள் அடிக்கடி பொறுமையிழக்கின்றனர்; தங்கள் சுயபோக்கின்படி நடக்கவும், தாங்கள் விரும்புகிறபடி போகவும் வரவும் விரும்புகின்றனர். குறிப்பாகப் பத்து முதல் பதினெட்டு வயதில், இளம் நண்பர்களின் உலகரீதியான கூடுகைகளுக்குப் போவதால் தீங்கு எதுவுமில்லை என்று நினைக்கும் இயல்புள்ளவர்களாக அவர்கள் இருக்கின்றனர். ஆயினும் அனுபவப்பட்ட கிறிஸ்தவப் பெற்றோர்கள் அபாயத்தை உணரமுடியும். அவர்கள் தங்கள் பிள்ளைகளின் குறிப்பிடத்தக்க மனநிலைகளுடன் அறிமுகமாகியிருக்கின்றனர்; அவர்களது மனங்களின்மீதுள்ள இத்தகைய காரியங்களின் செல்வாக்கை அறிந்திருக்கின்றனர்; அவர்களது இரட்சிப்புக்கான ஒரு வாஞ்சையினிமித்தம், இத்தகைய கிளர்ச்சியூட்டும் கேளிக்கைகளிலிருந்து அவர்களை அவர்கள் பின்னிழுத்துவைக்க வேண்டும்.

உலகத்தின் சிற்றின்பங்களை விட்டுவிடவும், கிறிஸ்துவின் சீஷர்களாக மாறவும் பிள்ளைகள் தங்களுக்காகத் தீர்மானிக்கும்போது, அக்கறைமிக்க, விசுவாசமிக்க பெற்றோர்களின் இருதயங்களிலிருந்து என்ன ஒரு பாரம் நீக்கப்படுகிறது! ஆனால் அப்போதும்கூட பெற்றோர்களின் உழைப்புகள் நிறுத்தப்படக்கூடாது. இத்தகைய வாலிபர்கள் இப்பொழுதுதான் பாவத்திற் கெதிரான, சுபாவ இருதயத்தின் தீமைகளுக்கதிரான போராட்டத்தை ஆர்வத்துடன் தொடங்கியிருக்கின்றனர், தங்களது பெற்றோர்களின் ஆலோசனையும், கவனமிக்க பராமரிப்பும் விசேஷமாக அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

### வாலிபர்களுக்கு முன்பாக ஒரு சோதனைக்காலம்

உலகத்தின் செல்வாக்கிற்கு இணங்கிப்போன இளம் ஓய்வுநாள் ஆசரிப்பாளர்கள் சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட வேண்டும். கடைசிநாட்களின் தீங்குகள் நம்மீது இருக்கின்றன, அநேகர் எதிர்பார்த்திராத ஒரு சோதனை வாலிபர்களுக்கு முன்பாக இருக்கிறது. மனச்சோர்வுண்டாக்கும் சிக்கலான நிலைக்குள் அவர்கள் கொண்டுவரப்படுவார்கள், அவர்களது விசுவாசத்தின் உண்மைத்தன்மை நிரூபிக்கப்படும். மனுஷகுமாரனை எதிர்நோக்கியிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்; ஆயினும் அவர்களில் சிலர் அவிசுவாசிகளுக்கு ஒரு வெறுக்கத்தக்க முன்மாதிரியாக இருந்திருக் கின்றனர். உலகத்தை விட்டுவிட அவர்களுக்கு விருப்பமில்லை, ஆனால் விருந்துக்கூட்டங்கள் மற்றும் சிற்றின்பத்துக்கான பிற கூட்டங்களில் கலந்துகொள்வதால் உலகத்துடன் இணைந்துவிட்டுத் தாங்கள் தீங்கற்ற கேளிக்கையில் ஈடுபட்டிருந்ததாகத் தங்களையே தேற்றிக்கொள்கின்றனர். ஆயினும் இப்படிப்பட்ட இன்பத்தோய்வுகளே தேவனிடமிருந்து அவர்களைப் பிரித்து, உலகத்தின் பிள்ளைகளாக அவர்களை ஆக்கிவிடுகிறது.

சிலர் தொடர்ந்து உலகத்தின் பக்கமாகவே சாய்ந்திருக்கின்றனர். அவர்களது கண்ணோட்டங்களும், உணர்ச்சிகளும் கிறிஸ்துவின் தன்னலம்—மறுக்கும் பின்னடியார்களின் ஆவியுடன் ஒத்திருப்பதைவிடவும், உலகத்தின் ஆவியுடன் மிகச் சிறப்பான விதத்தில் ஒத்திருக்கிறது. தங்களுடைய ஆவியுடன் சிறப்பாக ஒத்துப்போகும் ஆவியுள்ளவர்களின் தோழமைக்கு அவர்கள் முன்னுரிமையளிப்பது முற்றிலும் இயல்பானதே. அப்படிப்பட்டவர்கள் தேவஜனங்கள் மத்தியில் சற்று மிக அதிகமான செல்வாக்கைப் பெற்றிருப்பார்கள். அவர்கள் அவர்களுடன் பங்கெடுப்பார்கள், அவர்கள் மத்தியில் பெயர்பெற்றிருப்பார்கள்; ஆனால் அவர்கள் அவிசுவாசிகளுக்கும், சபையிலுள்ள பெலவீனமானவர்களுக்கும், அர்ப்பணிப்பில்லாதவர்களுக்கும் ஒரு பாடமாக இருக்கிறார்கள். இந்தச் சுத்திகரிப்பின் காலத்தில் இத்தகைய அறிக்கையாளர்கள் சத்தியத்துக்குக் கீழ்ப்படிவதினால் முற்றிலும் மனமாற்ற மடைந்து, பரிசுத்தமாக்கப்படுவார்கள் அல்லது உலகத்தாருடன் தங்கள் பலனை அடைவதற்கு உலகத்துடன் விட்டுவிடப்படுவார்கள்.

சிற்றின்பம்—தேடுகிறவனை தேவன் தமது பின்னடியானாகக் கொள்ள மாட்டார். தன்னலத்தை மறுக்கிறவர்கள் மட்டுமே, தெளிந்த புத்தியும், தாழ்மையும், பரிசுத்தமுமுள்ள வாழ்வை வாழ்பவர்களே இயேசுவின் மெய்யான பின்னடியார்கள். உலக சிநேகமுள்ளவனின் அற்பத்தனமான, வெறுமையான உரையாடலை அப்படிப்பட்டவர்கள் கேட்டு மகிழ முடியாது.

## உலகத்திலிருந்து பிரிந்திருத்தல்

கிறிஸ்துவின் மெய்யான பின்னடியார்கள் செய்யவேண்டிய தியாகங்கள் உண்டு. உலகரீதியான கேளிக்கையின் இடங்களை அவர்கள் தவிர்ப்பார்கள், ஏனெனில் அவர்கள் அங்கே இயேசுவையும், — அவர்களைப் பரலோக சிந்தையுள்ளவர்களாக்குகிற, கிருபையில் அவர்களது வளர்ச்சியை அதிகரிக்கிற செல்வாக்கையும் காண்பதில்லை. தேவவார்த்தைக்கான கீழ்ப்படிதலானது இத்தகைய காரியங்கள் எல்லாவற்றிலிருந்தும் வெளியே வந்து, பிரிந்திருக்கும்படி அவர்களை வழிநடத்தும்.

"அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (மத். 7:20) என்று இரட்சகர் கூறினார். கிறிஸ்துவின் மெய்யான பின்னடியார்கள் யாவரும் அவரது மகிமைக்கென்று கனிகொடுப்பார்கள். தேவனுடைய ஆவியினால் அவர்கள் ஒரு நற்கிரியை நடந்தேறியிருக்கிறது என்பதற்கு அவர்கள் ஜீவியங்கள் சாட்சிபகரும்; அவர்களது கனி பரிசுத்தத்துக்கு ஏதுவாயிருக்கிறது. அவர்களது ஜீவியங்கள் உயர்த்தப்பட்டதாய், தூயதாய் இருக்கிறது. நேர்மையான செயல்கள் மெய்யான தேவபக்தியின் சந்தேகத் துக்கிடமற்ற கனிகளாக இருக்கின்றன; இவ்விதமான கனிகொடாதவர்கள்

தேவனுடைய காரியங்களில் தங்களுக்கு அனுபவம் இல்லை என்பதை வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் திராட்சச்செடியுடன் இணைந்திருக்க வில்லை. "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்"–யோவான் 15:4.

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவான் 15:4,5) என்று இயேசு கூறினார்.

மெய்யான தேவனின் தொழுகையாளர்களாக இருக்க விரும்புகிறவர்கள் ஒவ்வொரு விக்கிரகத்தையும் தியாகம் செய்வார்கள். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை" (மத். 22:37,38) என்று இயேசு நியாயசாஸ்திரியிடம் கூறினார். பத்துக் கட்டளைகளில் முதல் நான்கு கட்டளைகள் தேவனிடமிருந்து பற்றுறுதிகளைப் பிரித்துக்கொள்ள அனுமதிக்கவில்லை. அவரிலுள்ள நமது முதன்மையான மனமகிழ்ச்சியை வேறெதுவும் பங்கிட்டுவிடவும் கூடாது. தேவனிடமிருந்து நம்மைப் பிரிக்கிற அனைத்தையும் நாம் புறம்பே தள்ளுகிறவரைக்கும், கிறிஸ்தவ அனுபவத்தில் நாம் முன்னேற முடியாது.

உலகத்திலிருந்து தமது ஜனங்களைத் தெரிந்துகொண்டிருக்கிற, திருச்சபையின் மாபெரும் தலையானவர், உலகத்திலிருந்து பிரிந்திருக்கும்படி அவர்களைக் கோருகிறார். அவரது கட்டளைகளின் குணம், அவரது பின்னடியார்களை அவரண்டைக்கு இழுத்துக்கொள்வதினால், அவர்களை உலகக் காரியங்களிலிருந்து பிரிக்கும் வகையில் அவர் வடிவமைத் திருக்கிறார். தேவனை நேசித்து, அவரது கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் என்பது லௌகிகச் சிற்றின்பங்கள் மற்றும் அதன் தோழமையில் பிரியங்கொள்வதிலிருந்து மிகவும் அப்பாற்பட்டதாக இருக்கிறது. கிறிஸ்து வுக்கும் பேலியாளுக்கும் இடையில் இசைவேதும் இல்லை.

## வாலிபர்களுக்கான வாக்குத்தத்தங்கள்

கிறிஸ்துவைப் பின்பற்றும் வாலிபர்களுக்கு முன்பாக ஒரு போராட்டம் இருக்கிறது; உலகத்திலிருந்து பிரிந்துவந்து, கிறிஸ்துவின் வாழ்வைப் பின்பற்றுவதில் அவர்கள் சுமக்கவேண்டிய அனுதின சிலுவையொன்று இருக்கிறது. ஆயினும் இளம்பிராயத்திலேயே இரட்சகரைத் தேடுவோருக்குப்

பதிவேட்டில் அநேக அருமையான வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன. "என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதி. 8:17) என்று ஞானம் மனுபுத்திரரை நோக்கிக் கூப்பிடுகிறது.

"ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர் களாயிருங்கள். நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண் டிருந்த இச்சைகளின்படியே இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளா யிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராகியிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" (1 பேதுரு 1:13–15). "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத் துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்"–தீத்து 2:11—14.—Counsels to Teachers, Parents, and Students, pp. 325–330.

## 128

# வாலிபர்களில் நேர்மையான நியதிகளை நிலைநாட்டுதல்

வாலிபர்களுக்கு தேவன் தந்திருக்கிற வல்லமைகளைச் சரியாக மேம்படுத்திக்கொள்ளும்வண்ணம், அவர்கள் உறுதியான கொள்கையினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆனால் கொள்கையில் நாட்டமின்றி, உணர்ச்சியை அதிகமாகவும், குருட்டுத்தனமாகவும் பின்பற்றுகிற வாலிபர்கள் தொடர்ச்சியான அபாயத்தில் இருக்கின்றனர். பெற்றோர்கள் மற்றும் ஆதரவாளர்களின் வழிகாட்டுதலையும், பாதுகாப்பையும் எப்போதும் அவர்கள் கொண்டிருக்க முடியாதாகையால், தற்சார்பு மற்றும்

தன்னடக்கத்திற்கு அவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். உணர்வுரீதியான கொள்கையின் அடிப்படையில் சிந்திக்கவும் செயல்படவும் அவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும்.

## இடை ஓய்வும் கேளிக்கையும்

படிப்பில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு இடை ஓய்வு தேவை. உன்னிப்பான சிந்தனைக்கு மனம் இடைவிடாமல் உட்பட்டிருக்கக்கூடாது; அப்படிச்செய்வதால் மிக நுண்ணிய மனரீதியான இயந்திரம் சோர்வுற்று விடுகிறது. சரீரத்திற்கும் மனதிற்கும் பயிற்சி தேவை. ஆயினும் ஒவ்வொரு பிற நாட்டத்திலும்போல, கேளிக்கைகளிலும் இச்சையடக்கம் பெரிதும் அவசியப்படுகிறது. இத்தகைய கேளிக்கைகளின் தன்மையானது கவன மாகவும், முழுமையாகவும் ஆழ்ந்து ஆராயப்படவேண்டும். இந்தக் கேளிக்கைகள் சரீர, மன, சன்மார்க்க ஆரோக்கியத்தில் என்ன செல்வாக்கை உண்டுபண்ணும்? தேவனை மறக்குமளவுக்கு என் மனம் மிகவும் மயங்கிப் போகுமா? அவரது மகிமையை எனக்குமுன்பாகக் கொண்டிருப்பதை நான் நிறுத்திக்கொள்வேனா? என்று ஒவ்வொரு வாலிபனும் தனக்குத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும்.

சீட்டாட்டம் தடைசெய்யப்பட வேண்டும். தோழமைகளும் போக்குகளும் அபாயகரமானவைகள்… அப்படிப்பட்ட கேளிக்கைகளில் ஆத்துமாவுக்கோ அல்லது சரீரத்துக்கோ நன்மைபயக்கக்கூடியது ஒன்று மில்லை. அறிவாற்றலைப் பெலப்படுத்துவதற்கும் ஒன்றுமில்லை, எதிர்காலப் பயன்பாட்டிற்காக மதிப்புமிக்கக் கருத்துக்களை அதில் சேர்த்துவைப்பதற்கும் ஒன்றுமில்லை. உரையாடல் அடிக்கடி அற்பமான மற்றும் இழிநிலையான தலைப்புகளின்மீதே அமைந்திருக்கிறது….

அட்டைகளைக் கையாள்வதிலுள்ள தனித்திறனானது, தனிப்பட்ட லாபத்திற்காக இந்த அறிவையும், சாமர்த்தியத்தையும் பயன்படுத்துகிற ஆசைக்கு எதிராக வழிநடத்தும். ஒரு சிறு தொகை, பின்னர் ஒரு பெரிய தொகை, பந்தயமாக வைக்கப்படுகிறது. நிச்சயமான அழிவுக்கு வழிநடத்துகிற சூதாட்டத்துக்கான ஒரு ஆவல் ஏற்படுகிறவரைக்கும் இது தொடர்கிறது. இந்தப் பொல்லாத கேளிக்கையானது எத்தனை பேரை ஒவ்வொரு பாவப் பழக்கத்திற்கும், வறுமைக்கும், சிறைச்சாலைக்கும், கொலைக்கும், தூக்குமேடைக்கும் வழிநடத்தியிருக்கிறது! இருப்பினும் நமது வாலிபர்களுக்காக வாய்பிளந்திருக்கிற அழிவின் பயங்கரமான பாதாளப் பள்ளத்தை அநேகப் பெற்றோர்கள் காணாதிருக்கின்றனர்.

சிற்றின்பத்துக்கான மிகவும் அபாயகரமான இடங்களில் திரையரங்கமும் ஒன்றாக இருக்கிறது. ஒழுக்கத்திற்கும், நற்குணத்திற்குமான ஒரு பள்ளிக்

கூடமாக இருப்பதற்குப் பதிலாக, அப்படியிருப்பதாகப் பெரும்பாலும் கூறப்பட்டாலும் கூட, அது ஒழுக்கக்கேட்டின் விரைவான வளர்ச்சிக்குகந்த இடமாக இருக்கிறது. இத்தகைய பொழுதுபோக்குகளினால், தீய பழக்கங்களும், பாவ இயல்புகளும் பெலப்படுத்தப்பட்டு, உறுதியடைகின்றன. கீழ்த்தரமான பாடல்கள், காமவெறி பிடித்த அசைவுகள், வசனங்கள் மற்றும் பழக்கவழக்கங்கள் மனோசக்தியைச் சீரழித்து, ஒழுக்கநெறிகளைத் தரத்தில் குறைவுபடுத்தும். அப்படிப்பட்ட காட்சிகளில் வழக்கமாகக் கலந்துகொள்ளும் ஒவ்வொரு வாலிபரும் கொள்கையில் கறைபடுவர். மனோசக்தியை விஷப்படுத்துவதற்கும், ஆன்மீகத் தாக்கங்களை அழித்துப் போடுவதற்கும், வாழ்வின் நிலையான நிஜங்கள் மற்றும் அமைதியான இன்பங்களுக்கான சுவையுணர்வை மழுங்கச் செய்வதற்கும், திரையரங்கக் கேளிக்கைகளைக் காட்டிலும் மிகவும் வல்லமையான செல்வாக்கு நமது தேசத்தில் வேறெதுவும் இல்லை.

மயக்கமூட்டும் பானத்தைப் பயன்படுத்துவதால் அதன் ஆசை மேலும் பெருகுவதுபோல, இத்தகைய காட்சிகளுக்கான பிரியம் ஒவ்வொரு ஈடுபாட்டினாலும் அதிகரிக்கிறது. திரையரங்கம், விளையாட்டு வேடிக்கைக் கான வட்டரங்கு (சர்க்கஸ்) மற்றும் ஒவ்வொரு பிற கேள்விக்குரிய கேளிக்கையின் இடத்தைத் தவிர்ப்பதே ஒரே பாதுகாப்பான வழியாகும்.

சரீரத்துக்கும், மனதுக்கும் உணர்ந்தவிதத்தில் நன்மைபயக்கிற பொழுதுபோக்கு வகைகள் இருக்கின்றன. ஒரு ஒளியூட்டம்பெற்ற பகுத்தறிகிற மனம், தீங்கற்ற ஆதாரங்களிலிருந்து மட்டுமல்லாமல், பாடம்புகட்டுகிற ஆதாரங்களிலிருந்தும் பொழுதுபோக்கு மற்றும் மாற்றுக்கவர்ச்சிக்கான அபரிமிதமான வழிவகைகளைக் கண்டடைவார்கள். திறந்த வெளியில் பொழுதுபோக்குதல், இயற்கையில் தேவனுடைய கிரியைகளைத் தியானித்தல் ஆகியவை மிக உயர்தரமான பலனளிக்கிறதாயிருக்கும்.— Testimonies for the Church, Vol. 4, pp. 651–653.

## தீங்கற்ற இன்பங்களை அளித்திடுங்கள்.

முதியோரைப் போல அமைதியுள்ளவர்களாக, வேகமற்றவர்களாக வாலிபர்களையும், தகப்பனைப்போலத் தன்னடக்கம் வாய்ந்ததாகக் குழந்தையையும் அமரச்செய்ய முடியாது. பாவமிக்கக் கேளிக்கைகள் கண்டஞ்செய்யப்பட வேண்டும், அதே வேளையில், பெற்றோர்களும், ஆசிரியர்களும், வாலிபர்களின் பாதுகாவலர்களும், அவைகளுக்குப் பதிலாக, ஒழுக்கநெறிகளைக் கறைபடுத்தாத அல்லது சீர்கெடுக்காத தீங்கற்ற இன்பங்களை அளித்திட வேண்டும். வாலிபர்கள் தாங்கள் ஒடுக்கப்படுகிறோம் என்று எண்ணி, உடைத்துக்கொண்டு மதியீனம் மற்றும்

அழிவின் பாதைகளுக்குள் விரைவதற்கு அவர்களை வழிநடத்தக்கூடிய கண்டிப்பான விதிகள் மற்றும் தடையுத்தரவுகளினால் அவர்களைக் கட்டி இறுக்காதிருங்கள். அவர்களது சிறந்த நன்மையை முன்வைத்து நீங்கள் செயல்படுகிறீர்கள் என்று அவர்கள் இன்னும் அறிந்துகொள்ளும்வண்ணமாக, உறுதியான, தயவுள்ள, அன்பாதரவான கரத்துடன் குடும்ப ஆட்சியின் விதிகளை நிலைநிறுத்தி, மிகக் கனிவாக, மிக ஞானமாக, மிகவும் அன்பாக அவர்களது மனங்களையும், நோக்கங்களையும் வழிநடத்திக் கட்டுப்படுத்துங்கள்.—Counsels to Teachers, Parents, and Students, p. 335.

**மிஷனெரிப் பணியில் பொழுதுபோக்கு**

சரீரத்துக்கான, ஆத்துமாவுக்கோ புத்துணர்வூட்டாத கேளிக்கையில் பெரும்பாலும் செலவழிக்கப்படுகிற மணிநேரங்கள், ஏழைகள், வியாதியஸ்தர் மற்றும் துயருற்றோரைச் சந்திப்பதில் அல்லது தேவையிலிருக்கும் ஒருவருக்கு உதவுவதற்குப் பிரயாசப்படுவதில் செலவழிக்கப்பட வேண்டும்.—Testimonies for the Church, Vol. 6, p. 276.

## 129

# கிரியைசெய்கிற பரிசுத்தமற்ற செல்வாக்குகள்

நமது பள்ளிகளிலுள்ள மாணவர்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்கும்படி கெஞ்சுகிறேன். வாலிபர்களின் வேடிக்கையான விளையாட்டுத் தனம் தேவனுக்குப் பிரியமானது அல்ல. அவர்களது போட்டிகளும், விளையாட்டுகளும் சோதனைகளின் பெருவெள்ளத்துக்கான வாசலைத் திறந்துவிடுகின்றன. அவர்கள் தங்கள் அறிவார்ந்த நுட்பங்களில் தேவனுடைய பரலோகக் கொடையை உடையவர்களாக இருக்கின்றனர், அவர்கள் தங்களது எண்ணங்கள் மலிவான, கீழ்த்தரமானவையாய் இருப்பதற்கு அனுமதிக்கக்கூடாது. தேவ வார்த்தையின் கட்டளைகளுக்கேற்ப அமையப்பெற்ற ஒரு குணமானது உறுதியான கொள்கைகளை, தூய்மையான, உயர்தரமான பேரார்வங்களை வெளிப்படுத்தும். மனித சிந்தையின் வல்லமைகளுடன் பரிசுத்த ஆவியானவர் ஒத்துழைக்கிறார். உன்னதமும், பரிசுத்தமுமான தூண்டுதல்கள் நிச்சயமான விளைவாயிருக்கும்....

கீழ்த்தரமான, வழக்கமான இன்ப விருந்துகள், புசிப்புக்கும், குடிப்புக்கும், பாடுவதற்கும், இசைக்கருவிகளை மீட்டுவதற்குமான கூடுகைகள் கீழிருந்து

வரும் ஒரு ஆவியினால் தூண்டப்பட்டவையாயிருக்கின்றன. அவைகள் சாத்தானுக்குப் படைக்கும் பலிப்பொருட்களாக இருக்கின்றன…

இத்தகைய வேடிக்கையான விளையாட்டுத்தனங்களில் முன்னணி வகிக்கிறவர்கள் செயல்நோக்கத்தின்மீது எளிதில் துடைத்தழிக்கமுடியாத ஒரு கறையைக் கொண்டுவருகின்றனர். அவர்கள் தங்கள் சொந்த ஆத்துமாக்களைக் காயப்படுத்திக் கொள்கின்றனர், தழும்புகளைத் தங்கள் வாழ்நாள் நெடுகச் சுமப்பார்கள். தீமைசெய்தவன் தன் பாவங்களைப் பார்த்து, மனந்திரும்பலாம், மீறுதல்காரனை தேவன் மன்னிப்பார்; ஆனாலும் பரிசுத்தமானதற்கும் சாதாரமானதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைக் கண்டறிவதற்கு எப்பொழுதும் கூர்மையோடும், உணர்வோடும் வைக்கப்பட வேண்டிய பகுத்தறியும் வல்லமையானது பெரிய அளவில் அழிக்கப்பட்டு விடுகிறது.—Counsels to Teachers, Parents, and Students, pp. 366–368.

## 130

# இறைவாழ்வில் சந்தோஷம்

நீதிமான்களின் வருங்கால வாசஸ்தலம், அவர்களது நித்திய வெகுமானம் போன்றவை வாலிபர்களின் தியானத்துக்கான உன்னதமான, மேன்மைப்படுத்துகிற கருப்பொருள்களாகும். அவரது இரத்தத்தின் புண்ணியங்களின்மூலமாக நீங்கள் உயர்நிலை அடையவேண்டும், கீழ்ப்படிதலினால் கடைசியாகக் கிறிஸ்துவின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக மகிமையின் இராஜாவினால் செய்யப்பட்ட மாபெரும் தியாகத்தை, ஆச்சரியமான இரட்சிப்பின் திட்டத்தைத் தியானியுங்கள். இப்பாடப்பொருள் மனதின் மிகச்சிறந்த சிந்தனைக்குரிய பொருளாக ஆக்கப்படவேண்டும். தேவனுடைய காருண்யத்துடன் தொடர்புக்குள் வருவது—என்னே ஒரு சிலாக்கியம்!...

இளம் நண்பர்களே, அப்படிப்பட்ட ஈடுபாடு மற்றும் கருத்து மாற்றத்தினால், நீங்கள் மகிழ்ச்சியுள்ளவர்களாக முடியும் என்பதை நான் கண்டேன். ஆனால் நீங்கள் அமைதலற்றவர்களாக இருப்பதற்குக் காரணம் —மகிழ்ச்சியின் ஒரே மெய்யான மூலாதாரத்தை நீங்கள் தேடவில்லை என்பதே. கிறிஸ்துவில் மட்டுமே கிடைக்கக்கூடிய சந்தோஷத்தை அவருக்கு வெளியே கண்டடைய நீங்கள் எப்பொழுதும் முயற்சிக்கிறீர்கள். அவருக்குள் ஏமாற்றமடையும் நம்பிக்கைகள் இல்லை. ஜெபம்—ஓ, இந்த அருமையான சிலாக்கியம் எவ்வளவாக அசட்டை செய்யப்படுகிறது! தேவ

வார்த்தையை வாசித்தலானது ஜெபத்திற்குச் சிந்தையை ஆயத்தப்படுகிறது. ஜெபத்தில் தேவனைக் கிட்டிச் சேருவதற்கு உங்களுக்கு மிகக் குறைந்த நாட்டமே இருப்பதற்கான மாபெரும் காரணங்களில் ஒன்று—உங்கள் மனோசக்தியைத் தூண்டி, பரிசுத்தமற்ற உணர்ச்சிகளை உசுப்பிவிடக்கூடிய, கவர்ச்சிகரமான கதைகளை வாசிப்பதினால் இப்பரிசுத்தமான பணிக்கு நீங்கள் உங்களையே தகுதியற்றவர்களாக்கிக் கொண்டதே ஆகும். தேவவார்த்தை சுவையற்றதாகிறது. ஜெபநேரம் மறக்கப்படுகிறது. ஜெபமே கிறிஸ்தவனின் பெலன் ஆகும். தனிமையாய் இருக்கும்போது, அவன் தனியாய் இருக்கவில்லை; "இதோ, ..சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்றுரைத்தவரின் பிரசன்னத்தை அவன் உணருகிறான்.

வாலிபர்களுக்கு அவர்களிடம் இல்லாததே தேவையாயிருக்கிறது; அதாவது இறைவாழ்வே. இதன் இடத்தை வேறேதுவும் எடுத்துக்கொள்ள முடியாது. வெளிப்படையான அறிவிப்பு மட்டும் போதாது. பூமியிலுள்ள சபைப்பதிவேடுகளில் பதிவுசெய்யப்பட்டிருக்கிற நாமங்கள், ஜீவ புத்தகத்தில் இல்லை. அனுபவப்பூர்வமான இறைவாழ்வு என்றால் என்ன என்பதை இருபது வாலிபர்களில் ஒருவர்கூட அறிந்திருக்கவில்லை என்பதை நான் கண்டேன். அவர்கள் தங்களுக்கே சேவைசெய்துகொள்கின்றனர், ஆயினும் கிறிஸ்துவின் வேலைக்காரர்கள் என்று கூறிக்கொள்கின்றனர்; அவர்கள்மீது இருக்கிற கட்டு உடைக்கப்படாத பட்சத்தில், மீறுதல்காரனின் பங்கே தங்களுடையது என்பதை சீக்கிரத்தில் உணர்வார்கள். சத்தியத்தினிமித்தம், சுயமறுப்பு அல்லது தியாகம் என்ற வகையில் பார்த்தால், அவர்கள் அவையனைத்திற்கும் மேலான ஒரு எளிய வழியைக் கண்டுபிடித்திருக்கின்றனர். சாத்தானின் சோதனைகளை எதிர்த்து நிற்பதற்கு தேவனிடமிருந்து பெலத்துக்காகவும், அவரது மன்னிக்கும் கிருபைக்காகவும் அவரை நோக்கிப் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஊக்கமாகக் கெஞ்சி மன்றாட வேண்டும் என்றால், மிகவும் ஆர்வமாக, பக்திவைராக்கியமாக இருப்பது அவசியமற்றது என்றும், அது இல்லாமலேயே அவர்கள் முன்செல்லமுடியும் என்றும் அவர்கள் கண்டடைந்திருக்கின்றனர். மகிமையின் இராஜாவான கிறிஸ்து தமது ஆத்துமத்தின் விண்ணப்பத்தைத் தமது பிதாவிடம் ஊற்றுவதற்காக மலைகளுக்கும், வனாந்தரமான இடங்களுக்கும் அடிக்கடித் தனிமையில் சென்றார்; ஆனால், பெலனே இல்லாத பாவியான மனிதனோ, அவ்வளவு அதிகமான ஜெபம் இல்லாமல் தான் வாழமுடியும் என்று நினைக்கிறான். —Testimonies for the Church, Vol. I, pages 503–505.

## இயேசுவின் முன்மாதிரி

சிற்றின்ப ஈடுபாட்டினை அதன் அனைத்து விதங்களிலும் இயேசு கடிந்துகொண்டார். ஆயினும் அவரது நடத்தையில் சமூகத்துடன்

கலந்தவராக வாழ்ந்தார். சகல வகுப்பினரின் உபசரணைகளையும் அவர் ஏற்றிருந்து, ஏழை, பணக்காரன், கற்றோன், கல்லாதோன் ஆகிய அனைவரது வீடுகளையும் சந்தித்து, பொதுவான வாழ்க்கையைப் பற்றிய கேள்விகளிலிருந்து ஆவிக்குரிய மற்றும் நித்திய காரியங்களுக்கு நேராக அவர்களது எண்ணங்களை உயர்த்த வகைதேடினார். அவர் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கைக்கு அனுமதி கொடாமல், உலகப்பிரகாரமான பொறுப்பற்ற தன்மையின் நிழல்கூட அவரது நடத்தையைக் களங்கப்படுத்த அனுமதிக்காமல் இருந்தபோதிலும், தூயதான மகிழ்ச்சியின் காட்சிகளில் இன்பத்தைக் கண்டடைந்து, அவரது பிரசன்னத்தினால், சமூகக் கூட்டங்களை அங்கீகரித்திருந்தார்.—Desire of Ages, pp. 150, 151.

## 131

# கிறிஸ்தவப் பொழுதுபோக்கு

நமது உள்ளங்களுக்குப் புத்துணர்வூட்டி, நமது சரீரங்களுக்கு எழுச்சியூட்ட நாம் வகைதேடுகிற வேளையில், நமது எல்லா சக்திகளையும் எல்லா நேரங்களிலும் சிறந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதற்கு நாம் தேவனால் கோரப்பட்டிருக்கிறோம். நம்மீது சுமந்திருக்கிற கடமைகளின் வெற்றிகரமான நிறைவேற்றத்திற்கு நாம் சிறந்த முறையில் தகுதியாகும் விதத்தில் நமது பொழுதுபோக்குகளை நாம் அமைத்துக்கொள்ள முடியும்; அமைத்துக்கொள்ள வேண்டும்; நம்முடன் தொடர்புடையவர்கள்மீது நமது செல்வாக்கானது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சிந்தையில் மேம்பட்டவர்களாக, சரீரத்தில் புத்துணர்வு பெற்றவர்களாக, சிறந்த நம்பிக்கை மற்றும் சிறந்த தைரியத்துடன் மறுபடியும் பணியில் ஈடுபடுவதற்கு ஆயத்தப்பட்டவர்களாக அப்படிப்பட்ட நிகழ்வுகளிலிருந்து நம் இல்லங்களுக்கு நாம் திரும்பமுடியும்…

மனுக்குலத்திற்கு நன்மைசெய்யவும், சமுதாயத்திற்கு ஓர் ஆசீர்வாத மாக விளங்கவும் நாம் இங்கே இருக்கிறோம்; மாயத்தோற்றத்தையும் மதியீனத்தையுமே தேடுகிற அநேகர் தங்கள் மனங்களை ஓட அனுமதிக்கிற கீழ்த்தரமான பாதையில் நமது மனங்களை நாம் ஓட அனுமதித்தால், நமது இனத்திற்கும் தலைமுறைக்கும் நாம் எப்படி பயனுள்ளவர்களாக இருக்கமுடியும்? நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்திற்கு நாம் எப்படி ஒரு ஆசீர்வாதமாக இருக்கமுடியும்?...

## மாறுபட்ட கொள்கைகள்

கிறிஸ்தவப் பொழுதுபோக்குக்காகவும், சிற்றின்பம் மற்றும் கேளிக்கைக்கான உலகரீதியான கூடுகைகளுக்காகவும் கூடிவரும் கிறிஸ்துவின் பின்னடியார்களின் தோழமைகளுக்கு இடையில் ஒரு குறிப்பிட்ட வித்தியாசம் காணப்படும். ஜெபம், கிறிஸ்துவைக் குறித்த உச்சரிப்பு மற்றும் புனிதக் காரியங்களுக்குப் பதிலாக, உலகப்பிள்ளைகளின் உதடுகளிலிருந்து அற்பத்தனமான வெடிச்சிரிப்பும், அவசியமற்ற உரையாடலும் கேட்கப்படும். பொதுவாக ஒரு இன்பகரமான நேரம் இருக்கவேண்டும் என்பதே காரியம். அவர்களது கேளிக்கைகள் மதியீனத்தில் தொடங்கி, மாயத்தோற்றத்தில் முடிவடைகிறது. நாம் நமது இல்லங்களுக்குத் திரும்பும்போது, தேவனுக்கும் மனிதனுக்கும் ஊறுபாடு விளைவியாத ஒரு மனச்சாட்சியை, நம்முடன் தொடர்புகொண்டவர்களை எந்தவிதத்திலும் நாம் புண்படுத்தவில்லை அல்லது காயப்படுத்தவில்லை அல்லது அவர்கள்மீது ஒரு புண்படுத்தும் செல்வாக்கைக் கொண்டிருக்கவில்லை என்ற உணர்வை உடையவர்களாக இருக்கும்படி நாம் நம்மை நடைமுறைப்படுத்திக்கொள்ள வேண்டும், நமது கூடுகைகளும் அப்படியே நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

ஜென்ம சிந்தையானது சிற்றின்பத்தையும், சுய—திருப்தியையுமே நாடுகிறது. இதை அபரிமிதமாக உற்பத்தி செய்வது சாத்தானின் கோட்பாடு ஆகும். இது என் ஆத்துமாவுக்கு நன்மைபயக்குமா? என்ற கேள்வியை மனிதர்கள் தாங்களே கேட்டுக்கொள்வதற்கு நேரமில்லாதபடிக்கு, உலக ரீதியிலான கேளிக்கைக்கான ஒரு விருப்பத்தை அவர்களது மனங்களில் நிரப்புவதற்கு அவன் வகைதேடுகிறான். சிற்றின்பப் பிரியம் தொற்றுநோய் போன்றது. இதற்கு இடங்கொடுத்தால், மனம் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு, ஏதாவதொரு கேளிக்கைக்காக எப்பொழுதும் தேடிக்கொண்டே இருக்கும். தேவப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலானது இப்படிப்பட்ட போக்கை எதிர்த்துத் தடைசெய்து, அவபக்திக்கு எதிராகத் தடையரண்களை எழுப்புகிறது.—Counsels to Teachers, Parents, and Students, pp. 336, 337.

வாலிபர்கள் தாங்கள் அனுபவித்து வந்திருக்கிற எல்லா சிலாக்கியங் களுக்காகவும், தங்களது நேரத்தை மேம்படுத்திக் கொண்டமைக்காகவும், தங்களது திறமைகளை நன்கு பயன்படுத்தியதற்காகவும் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நமக்கு வேண்டாமா? நாம் வேலை, வேலை என்று இடைமாறுபாடு எதுவுமின்றி வேலைசெய்துகொண்டே இருக்க வேண்டுமா? என்று அவர்கள் கேட்கலாம்.

விசுவாசத்தோடு தேவனுடைய ஆசீர்வாதத்தை நீங்கள் கேட்பதற்கேதுவான எந்த கேளிக்கையும் ஆபத்தானதாக இராது. ஆனால் எந்த கேளிக்கை அந்தரங்க ஜெபத்திற்கும், ஜெபபீடத்தண்டையில் தியானத்திற்கும், அல்லது ஜெபக்கூட்டத்தில் பங்கெடுப்பதற்கும் உங்களைத் தகுதியிழக்கச் செய்கிறதோ, அது பாதுகாப்பானது அல்ல, மாறாக, அபாயகரமானது ஆகும்.—Counsels to Teachers, Parents, and Students, p. 337.

## 132

# சமூகக் கூடுகைகள்

சமுதாய நல்லுறவுக்கான கூட்டங்களில் கூடுகிறவர்கள் தங்கள் இருதயங்களில் தேவனுடைய அன்பைக் கனென்றெரியச் செய்பவர்களாக இருக்கும்போது, தேவ வார்த்தை சம்பந்தமான சிந்தனைகளைப் பரிமாறிக்கொள்வதற்கோ அல்லது அவரது பணியை முன்னேற்றுவிக்கவும், தங்களது சகமனிதர்களுக்கு நன்மை செய்வதற்குமான வழிமுறைகளை ஆழ்ந்து சிந்திப்பதற்கோ அவர்கள் கூடும்போது, அக்கூட்டங்கள் மிக உயர்ந்த அளவில் நன்மைபயக்கிறவையாக, படிப்பினை அளிப்பவை யாக ஆக்கப்படுகின்றன. இத்தகைய கூட்டங்களில் பரிசுத்த ஆவியானவர் ஒரு வரவேற்கப்பட்ட விருந்தாளியாக மதிக்கப்படும்போது, அவரைத் துக்கப்படுத்தும்விதமாக எதுவும் சொல்லப்படாத அல்லது செய்யப்படாத பொழுது, தேவன் கனம்பண்ணப்படுகிறார், கூடுகிறவர்கள் புத்தெழுச்சிபெற்று, புதுபெலன் அடைகின்றனர்.

ஆனால் பெருமையான தோற்றமும், பெருமகிழ்வும், நேரப்போக்கு மனப்பான்மையும், பெருமளவில் காணப்படுகிற வேறுபட்ட பண்பினாலான சமுதாயக் கூடுகைகள் இருக்கின்றன. கேளிக்கைக்கான அவர்களது ஆசையிலேயே, கலந்துகொள்ளக்கூடியவர்கள் ஆண்டவரை மறக்கும் அபாயத்திலும் இருக்கின்றனர், கண்காணிக்கும் தூதர்களைக் கண்ணீர் வடிக்கச் செய்யும் காரியங்களும் நடைபெறுகின்றன. சிற்றின்பக் காட்சியானது, குறிப்பிட்ட நேரத்திற்கு, அவர்களுக்குப் பரலோகம் போலாகிறது. இன்பப் பெருமகிழ்வுக்கும், களியாட்டத்துக்கும் அனைவரும் தங்களை ஒப்படைக் கின்றனர். கண்கள் பளபளக்கின்றன, நாணமில்லா நடத்தை திடீர் எழுச்சியடைகிறது; ஆனால் மனச்சாட்சி உறங்குகிறது.

**பக்திக் குறைபாடு வெளிப்படுகிறது.**

அப்படிப்பட்ட கிளர்ச்சியும், உணர்ச்சிப்பெருக்கும் பரலோகத்தால்

உண்டானதல்ல. அவைகள் முழுக்க இப்பூமிக்குரியவை. எவர்களுக்காகக் கிறிஸ்து மிக அதிகமாகச் செய்துமுடித்திருக்கிறாரோ அவர்களது மறதியைப் பரலோக தூதர்கள் வருத்தத்துடன் உற்றுநோக்குகின்றனர். வெறுமனே தன் மகிழ்ச்சிக்காகவே வாழ்ந்தவர்களுக்கு வியாதியோ, மரணமோ வரும்பொழுது, தங்களது வாழ்க்கைச் சரித்திரத்தை முடிப்பதற்குத் தாங்கள் முற்றிலும் தகுதியற்றவர்கள் என்பதையும், தங்கள் விளக்குகளில் எண்ணெய் இல்லையென்பதையும், வெகுதாமதமாகவே அவர்கள் கண்டுபிடிக்கின்றனர்.

அநேகமான சமுதாயக் கூடுகைகளில் இடம்பெறும் உரையாடலின் போக்கு, இருதயம் எதன்மீது அமைந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. சிரிப்பூட்டுவதற்காக மட்டுமே பேசப்படுகிற விளையாட்டுத்தனமான பேச்சு, அற்பத்தனமான நையாண்டிகள் கிறிஸ்துவைச் சரியாகப் பிரதிபலிப்பதில்லை. அவற்றைப்பேசுகிறவர்கள்தங்களதுவார்த்தைகளின்பதிவேட்டைப்பார்ப்பதற்கு விரும்பமாட்டார்கள். கேட்கிறவர்களுக்குத் தவறான எண்ணப்பதிவுகள் ஏற்படுகின்றன, கிறிஸ்துவுக்கு அவதூறு உண்டாகிறது. ஆ! வாலிபர்கள் தங்கள் வார்த்தைகளைக் காத்துக்கொண்டால் எவ்வளவு நலமாயிருக்கும்! அவைகளால் அவர்கள் நீதிமான்கள் என்றும், குற்றவாளிகள் என்றும் தீர்க்கப்படுவார்கள். நீங்கள் எங்கு சென்றாலும், உங்கள் செயல்களைப் பார்த்துக்கொண்டு, உங்கள் வார்த்தைகளை கேட்டுக்கொண்டு, இயேசு உங்கள் அருகில் இருக்கிறார் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். அவரது சத்தம் உங்களிடம் பேசுவதைக் கேட்பதற்கும், உங்கள் உரையாடலை அவர் கேட்கிறார் என்பதை அறிந்துகொள்வதற்கும் நீங்கள் வெட்கப்படுவீர்களா?...

ஒருகாலத்தில் ஊக்கமாயிருந்த கிறிஸ்தவன் உலகரீதியான கேளிக்கைகளில் பங்குபெறுவானாகில், அவன் ஆபத்தான களத்தில் இருக்கிறான். உயிரோட்டமிக்க பரலோகச்சூழல் நிரம்பியிருந்த பகுதியை அவன் விட்டுவிட்டு, மப்பும், மூடுபனியுமுள்ள சூழலுக்குள் அவன் மூழ்கிவிட்டான்; இன்பவிருந்துகளும், கேளிக்கைக்கான கூடுகைகளும் பெரும்பாலான வேளைகளில் கிறிஸ்துவின் மார்க்கத்திற்கு ஒரு நிந்தை யாகவே இருக்கின்றன. தேவனுடன் தன் தொடர்பைத் தக்கவைத்துக் கொள்கிறவன் எண்ணத்தினாலும்கூட அவைகளில் பங்கேற்க முடியாது. அவன் கேட்கும் வார்த்தைகள் அவனுக்கு இனிமையானவைகளாக இராது; ஏனெனில் அவைகள் கானானின் மொழியைச் சார்ந்தவைகள் அல்ல. பேசுகிறவர்கள் தங்கள் இருதயங்களில் தேவனைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுகின்றனர் என்பதற்கான ஆதாரத்தைக் காட்டுவதில்லை.

## தந்திரமான செலவாக்குகள்

குணத்திலும், ஆன்மீக அனுபவத்திலும் போலியானவர்களாக

இருப்பவர்கள் சிற்றின்பம் மற்றும் கேளிக்கைக்கு உடனடியாகக் கூடிவிடுவார்கள், அவர்களது செல்வாக்கு மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும். வேதாகமக் கிறிஸ்தவர்களாக இருப்பதற்கு முயற்சிக்கிற வாலிப ஆண்கள் மற்றும் பெண்களும் சில வேளைகளில் விருந்தில் பங்குபெறுவதற்கு இணங்க வைக்கப்படுகின்றனர். தனியாள் என்றெண்ணப்படுவதற்கு விருப்பமற்றவர்களாக, மற்றவர்களின் மாதிரியைப் பின்பற்றும் இயல்பான போக்குள்ளவர்களாக, மனதிலோ இருதயத்திலோ தெய்வீகத் தொடுதலை, ஒருவேளை ஒருபோதும் உணராதவர்களின் செல்வாக்கின்கீழ் அவர்கள் தங்களையே வைத்துக்கொள்கின்றனர். கிறிஸ்தவ மரத்தின்மீது இருக்கக்கூடியதான கனியைக்குறித்துக் கிறிஸ்து என்ன சொல்லியிருக்கிறார் என்று கற்றுக் கொள்வதற்கு, அவர்கள் ஜெபத்தோடு தெய்வீகப் படித்தரத்தைக் கவனத்தில் எடுத்துக்கொண்டிருந்தார்களானால், ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்குரிய அழைப்பை ஏற்பதிலிருந்து ஆத்துமாக்களை விலக்கிவைப்பதற்காக இந்தப் பொதுபோக்குகள் உண்மையிலேயே பெருவிருந்துகளாக ஆயத்தம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பகுத்தறிந்திருப்பார்கள்.

கேளிக்கையின் இடங்களுக்கு அடிக்கடி செல்வதால், கர்த்தருடைய வழியில் கவனமாகப் போதிக்கப்பட்டிருந்திருக்கிற வாலிபர்கள் மனித செல்வாக்கின் மாயக் கவர்ச்சியினால் அடித்துக்கொண்டு செல்லப்பட்டு, லௌகிகத் தன்மையுடையதாக இருக்கிற கல்வியையும், பயிற்சியையும் உள்ளவர்களோடு தொடர்புகளை அமைத்துக் கொள்வதும் சிலவேளைகளில் நடக்கிறது. கிறிஸ்துவைப் போன்ற ஒரு குணத்தை அலங்காரமாகக் கொண்டிராத நபர்களுடன் இணைவதால் வாழ்நாள் நெடுகிற்குமான அடிமைத்தனத்துக்குள் அவர்கள் தங்களையே விற்றுப் போடுகின்றனர். தேவனை மெய்யாய் நேசித்துச் சேவிப்பவர்கள், கிறிஸ்துவைத் தங்கள் இருதயங்களில் அரியணையமர்த்தாதவர்களோடு நட்புறவைத் தெரிந்து கொள்வதினால் உலகத்தின் அளவுக்கு இறங்கிப்போக அச்சம்கொள்வார்கள். தங்களது பாதையானது தன்னல—மறுப்பும், தற்தியாகமுமுள்ள ஒன்றாக இருந்தாலும்கூட, அவர்கள் கிறிஸ்துவுக்காகத் தைரியமாக நிற்பார்கள்.

## விளையாட்டுத்தனத்துக்கு மாற்றுமருந்து

கிறிஸ்து நமக்காகக் கடின உழைப்பு மற்றும் தியாகத்தின் வாழ்வை வாழ்ந்தார், அவருக்காக நமது தன்னலத்தை நாம் துறக்கக்கூடாதா? அவர் நமக்காகச் செய்திருக்கிற பாவப் பரிகாரமும், அவர் நமக்குக் கொடுக்கக் காத்திருக்கும் நீதியும் நமது மனங்களை ஆக்கிரமிப்பதற்குத் தகுதியான கருப்பொருள்கள் இல்லையா? வேதாகமத்தின் பண்டகசாலையில் அடங்கியிருக்கிற பொக்கிஷங்களிலிருந்து வாலிபர்கள் இழுத்துக்கொள்வார்

களானால், தன்னல—மறுப்புள்ள வாழ்விற்கு மணிமுடியாய் அமைகிற மன்னிப்பையும், சமாதானத்தையும், நித்திய நீதியையும் அவர்கள் தியானிப்பார்களானால், கேள்விக்கிடமான கிளர்ச்சி அல்லது கேளிக்கைக்கான விருப்பம் அவர்களுக்கு இராது.

வாலிபர்களின் சிந்தனைகள் மாபெரும், மேம்படுத்தக்கூடிய இரட்சிப்பின் கருப்பொருள்களினால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால் கிறிஸ்து மகிழ்கிறார். அப்படிப்பட்டவர்கள் அனைவரது இருதயங்களிலும் ஒரு நிலையான விருந்தினராக அவர் பிரவேசித்து, அவர்களைச் சந்தோஷத்தினாலும், சமாதானத்தாலும்நிரப்புகிறார். ஆத்துமாவில்கிறிஸ்துவின் அன்பானது, "நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றா யிருக்கும்." இவ்வன்பை உடையவர்கள் தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிறவர் களுக்கு ஆயத்தப்படுத்தியிருக்கிற காரியங்களைக் குறித்துப் பேசுவதில் மகிழச்சியடைவார்கள்.

பரிசுத்தவானுக்கும், பாவிக்கும் இடையிலான, மனந்திரும்பிய வனுக்கும் மனந்திரும்பாதவனுக்கும் இடையிலான பிரிக்கும் கோட்டை நித்திய தேவன் வரைந்திருக்கிறார். இரண்டு வகுப்பினரும், வானவில்லின் வண்ணங்களைப்போல, கண்ணுக்குப் புலப்படாதவகையில் ஒருவரோ டொருவர் கலந்திருப்பதில்லை, மாறாக, நடுப்பகல் மற்றும் நடுராத்திரிபோல பேறுபட்டவர்களாக இருப்பார்கள். சத்தியத்தை அறிந்தும், அதனைப் பின்பற்றாதவர்களுடன், தேவஜனங்கள் பாதுகாப்புடன் நெருக்கமான நட்புறவுகளுக்குள் பிரவேசிக்கமுடியாது. முற்பிதாவான யாக்கோபு தனது குமாரர்களின் குறிப்பிட்ட செயல்களைப் பயத்துடன் சிந்தித்துப் பேசியபோது, "என் ஆத்துமாவே, அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே; என் மேன்மையே, அவர்கள் கூட்டத்தில் நீ சேராதே" (ஆதி. 49:6) என்று ஆச்சரியத்துடன் கூறினான். பாவிகளுடைய செயல் களுடன் தானும் இணைந்துகொண்டால், தனது சொந்த மதிப்பையும் விட்டுக்கொடுக்க வேண்டியதிருக்கும் என்பதை அவன் உணர்ந்தான். நாம் தீமையினால் கறைபடாதபடிக்கு, தீய தொடர்புகளைத் தவிர்க்கும்படி நம்மை எச்சரிக்குமாறு, அபாய சமிக்ஞையை அவன் உயர்த்தினான். பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலன் பவுல்மூலமாக, அதேவிதமான ஒரு எச்சரிக்கையைக் கொடுக்கிறான், "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்"—எபே. 5:11.—The Youth's Instructor, February 4, 1897.

## ஏற்கப்படக்கூடிய சமுதாயக் கூடுகைகள்

ஆத்துமாக்களைக் கிறிஸ்துவண்டை கூட்டிச்சேர்க்கும் நோக்கத்துக் காக செல்வாக்கின் ஒவ்வொரு தாலந்தும் புனிதமாய்ப் பேணிக்காக்கப்பட்டு

பயன்படுத்தப்பட வேண்டும். வழக்கமாக நடத்தப்படுகிற தங்களது விளையாட்டுப் போட்டிகளும், மாலை விருந்துகளும், இசைப் பொழுது போக்குகளும் கிறிஸ்துவுக்கு ஏற்புடையதாயிருக்கும் என்று வாலிப ஆண்களும், வாலிபப் பெண்களும் நினைக்கக்கூடாது.

நமது எல்லாக் கூடுகைகளும் ஒரு தீர்மானிக்கப்பட்ட ஆன்மீக செல்வாக்கினால் தனிச்சிறப்பு பெற்றிருக்க வேண்டும் என்பது பற்றிய வெளிச்சம் மீண்டும் மீண்டும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது வாலிப மக்கள் வேதவாக்கியங்களை வாசிப்பதற்குக் கூடி, புரிந்துகொண்டு, "நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டு, பின்பு தங்களை ஒருமனதோடு சத்தியத்தின் பக்கம் வைத்துக்கொண்டால், கர்த்தராகிய இயேசு அவர்களது இருதயங்களுக்குள் தமது ஆசீர்வாதத்தை அனுப்புவார்.

ஆ! ஒவ்வொரு சபை—அங்கத்தினரும், நமது நிறுவனங்களிலுள்ள ஒவ்வொரு பணியாளரும், இவ்வாழ்க்கையானது, பரலோகத்தின் தேவனால் நடத்தப்பட இருக்கிற தூய்மைக்கும், சிந்தனையின் சுத்தத்துக்கும், தன்னலமற்ற செயலுக்கும் அடுத்ததான, தேர்வுக்கு ஆயத்தமாகிற ஒரு பள்ளிக்கூடமாக இருக்கிறது என்று உணர்ந்தால் நலமாயிருக்கும்! ஒவ்வொரு சொல்லும் செயலும், ஒவ்வொரு சிந்தனையும் பரலோகத்தின் பதிவேட்டுப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது....

வார்த்தையில் முன்வைக்கப்பட்டிருக்கிற தரத்தின் உண்மையான மதிப்புக்கேற்றாற்போல் நாம் பரிசுத்தமாக்கப்பட்டு, உயர்த்தப்படுவது சத்தியத்தின் வல்லமை மற்றும் அதன் மிகுந்த செல்வாக்கினாலேயே ஆகும். கர்த்தருடைய வழியானது, அவரது வார்த்தைக்கு மிகுந்த கவனத்துடன் கீழ்ப்படிவதன்மூலமாக மட்டுமே கற்றுக்கொள்ளப்பட முடியும். வார்த்தையைப் படியுங்கள்.—The Youth's Instructor, August 14, 1906.

## 133

# விடுமுறை நாட்களைச் செலவழிப்பது எப்படி

சரீர உழைப்பில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குப் பொழுதுபோக்கு அவசியப்படுகிறது, முக்கியமாக எவர்களது உழைப்பு மனரீதியாக இருக்கிறதோ அவர்களுக்குப் பொழுதுபோக்கு இன்னும் அதிகமாய்

அவசியப்படுகிறது. ஆன்மீகக் கருப்பொருள்களாலும்கூட, மனதை இடை விடாமல், அளவுக்குமீறிய உழைப்புக்குட்படுத்துவது நமது இரட்சிப்புக்கும் அவசியப்பட்டதல்ல, தேவனுடைய மகிமைக்கும் ஏற்றதல்ல. நாம் ஏற்றுக்கொள்ளாத, நடனம்புரிதல், சீட்டாட்டம், சதுரங்க ஆட்டம் போன்ற சில கேளிக்கைகள் இருக்கின்றன, ஏனெனில் பரலோகம் அவற்றைக் கண்டிக்கிறது. இத்தகைய கேளிக்கைகள் மாபெரும் தீமைக்கான வாசலைத் திறக்கும். அவைகள் இயல்பிலேயே நன்மைபயப்பவைகள் அல்ல, மாறாக சிலரது மனங்களைச் சூதாட்டத்துக்கும் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கைக்கும் வழிநடத்தும் விளையாட்டுகளுக்கான ஒரு வெறியை ஏற்படுத்துகிற, ஒரு தூண்டும் செல்வாக்கைக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஆட்டங்கள் அனைத்தும் கிறிஸ்தவர்களால் கண்டிக்கப்பட வேண்டும், அவற்றின் இடத்தில் முற்றிலும் தீங்கற்ற ஒன்று பதிலாக வைக்கப்பட வேண்டும்.

நமது விடுமுறை நாட்கள் உலகத்தின் மாதிரியைப் பின்பற்றிச் செலவழிக்கப்படக்கூடாது என்பதை நான் கண்டேன். ஆயினும் அவைகள் கவனிக்காமல் விடப்படவும் கூடாது, ஏனெனில் அது நம் பிள்ளைகளுக்கு அதிப்தியைக் கொண்டுவரும். இத்தகைய நாட்களில் நமது பிள்ளைகள் தீய செல்வாக்குகளுக்கு உட்பட்டு, சிற்றின்பங்கள் மற்றும் உலகத் தூண்டுதலினால் சீர்கெட்டுப்போவதற்கான அபாயம் இருக்கிறபடியினால், அதிக அபாயகரமான கேளிக்கைகளின் இடத்தை வேறு ஏதாவதொன்று எடுத்துக்கொள்ளுமாறு முன்னேற்பாடு செய்வதற்கு பெற்றோர்கள் ஆராய்வார்களாக. பிள்ளைகளின் நன்மை மற்றும் மகிழ்ச்சியை நீங்கள் கருத்திற்கொண்டு இருக்கிறீர்கள் என்பதை அவர்களுக்குப் புரியவையுங்கள்.

ஒரு பட்டணம் அல்லது கிராமத்தில் வசிக்கிற சில குடும்பங்கள் ஒன்றுகூடி, அவர்களை சரீர மற்றும் மனரீதியாகக் கடுமையாக அழுத்தியிருந்த தொழில்களை விட்டு, இயற்கையின் அழகுநிறைந்ததாயிருக்கிற, நாட்டுப்புறத் துக்குள், நேர்த்தியான ஒரு ஏரியின் பக்கம் அல்லது ஒரு அருமையான சோலைக்குள் இன்பச் சுற்றுலா செல்வார்களாக. அவர்கள் ஆரோக்கியமான எளிய உணவு, மிகச்சிறந்த கனிகள் மற்றும் தானியங்களைத் தங்களுக்கென்று ஏற்பாடு செய்துகொண்டு, தங்களது பந்தியை ஒரு மரநிழலின்கீழே அல்லது ஆகாயவிரிவின்கீழே விரித்துக்கொள்ள வேண்டும். சவாரியும், பயிற்சியும், இயற்கைக் காட்சியும் பசியைத் தூண்டும், அரசர்களும் பார்த்துப் பொறாமைகொள்ளும் ஒரு உணவை அவர்கள் மகிழ்வுடன் புசிக்கலாம்.

அப்படிப்பட்ட வேளைகளில் பெற்றோர்களும், பிள்ளைகளும் கவலை, உழைப்பு மற்றும் குழப்பத்திலிருந்து விடுபட்ட உணர்வுடன் இருக்கவேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் பிள்ளைகளாக

மாறி, அனைத்தையும் அவர்களுக்கு இன்பகரமானதாக்க வேண்டும். முழுநாளும் பொழுதுபோக்கிற்கென்று செலவழிக்கப்படட்டும்.

அறைகளுக்குள்ளேயே, ஒரே இடத்தில் அமர்ந்து வேலைசெய்வோருக்கு திறந்தவெளி உடற்பயிற்சியானது ஆரோக்கியத்திற்கு நன்மைபயக்கிறதாக இருக்கும். எவர்களால் முடியுமோ அவர்கள் இப்பாதையைப் பின்பற்றுவதை ஒரு கடமையாகக் கொள்ளவேண்டும். எந்த இழப்பும் ஏற்படாது, மாறாக அதிகம் அடையப்படும். தங்கள் உழைப்பில் உற்சாகத்துடன் ஈடுபடுவதற்குப் புதிய ஜீவன் மற்றும் புதிய தெம்புடன் தங்கள் தொழில்களுக்கு அவர்கள் திரும்பலாம். வியாதிக்கு எதிர்த்துநிற்க அவர்கள் சிறந்தமுறையில் ஆயத்தப் பட்டிருக்கிறார்கள்.—Testimonies for the Church, Vol. 1, pp. 514, 515.

### இன்பங்காணுதலுக்கான கிறிஸ்தவ மூலாதாரங்கள்

சிந்தனையில் தூய்மை மற்றும் செயலில் தன்னலமின்மையை வளர்ப்பதில் காணும் இன்பம், கனிவான வார்த்தைகளைப் பேசுதல் மற்றும இரக்கமுள்ள செயல்களைச் செய்வதிலிருந்து வரும் இன்பம்—என வளமுள்ளோரும் வறியோரும் அடைந்தனுபவிக்கக்கூடிய இன்பத்தை தேவன் ஒவ்வொருவருக்கும் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட வேை செய்வோரிடமிருந்து, கிறிஸ்துவின் வெளிச்சமானது அநேக வருத்தங்களால் இருளடைந்த ஜீவியங்களை ஒளியூட்டும்படி பிரகாசிக்கிறது.—Testimonies for the Church, Vol. IX, page 57.

## 134

# இலக்கிய சங்கங்கள்

இலக்கிய சங்கங்களால் வாலிபர்களுக்கு நன்மை உண்டா? என்று அடிக்கடி கேட்கப்படுகிறது. இக்கேள்விக்கு முறையாக பதிலளிக்க வேண்டுமானால், அப்படிப்பட்ட சங்கங்களின் உண்மையென்று ஒப்புக்கொள்ளப் பட்ட நோக்கத்தை மட்டுமல்ல, மாறாக, அவைகள் நிஜமாகவே ஏற்படுத்தி யிருக்கிற செல்வாக்கை, அனுபவத்தினால் நிரூபிக்கப்பட்ட பிரகாரம் நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். மனதின் வளர்ச்சி என்பது நாம் நமக்கும், சமுதாயத்துக்கும், தேவனுக்கும் கடன்பட்டிருக்கிற ஒரு கடமையாகும். ஆனால் ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரியரீதியான குணத்தின் இழப்பில் அறிவாற்றலை வளர்த்துக்கொள்வதற்கு வழிவகையை நாம் ஒருபோதும் கண்டுபிடிக்கக் கூடாது. மனரீதியான மற்றும் ஒழுக்கரீதியான சக்திகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியினால் மட்டுமே அவ்விரண்டில் ஒவ்வொன்றின்

மிக உயர்ந்த பூரண சற்குணமானது அடையப்பட முடியும். வழக்கமாக நடத்தப்படுகிற இலக்கி சங்கங்களினால் இத்தகைய விளைவுகள் தக்கவைக்கப்படுகின்றனவா?

இலக்கிய சங்கங்கள் பெயருக்கேற்றாற்போல் இல்லாத ஒரு செல்வாக்கை ஏறக்குறைய உலகம் முழுவதிலும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. பொதுவாக நடத்தப்படுகிறபடி பார்த்தால், அவைகள் வாலிபர்களுக்கு ஒரு தீமையாகவே இருக்கின்றன; ஏனெனில் செயல்பாடுகளின்மீது சாத்தான் தனது முத்திரையைப் போடுவதற்கு வருகிறான். ஆண்களை ஆண்மை யோடும் பெண்களைப் பெண்மையோடும் உருவாக்குகிற அனைத்தும் கிறிஸ்துவின் குணத்திலிருந்தே பிரதிபலிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட சங்கங்களில் கிறிஸ்துவிடமிருந்து பெறப்படுவது குறைந்தால், எங்கும் பரவியிருக்கவேண்டிய உயர்த்தி, பக்குவப்படுத்தி, மேம்படுத்துகிற அடிப்படைக் கூறும் குறைந்தே இருக்கும். உலகப் பிள்ளைகள் தங்களது விருப்பங்களை நிறைவேற்றிட இத்தகைய கூட்டங்களை நடத்தும்போது, கிறிஸ்துவின் குணம் தவிர்க்கப்படுகிறது. பக்திவிநயமான சிந்தனையிலிருந்தும், தேவனிட மிருந்தும், உண்மையாக, உறுதியாக இருப்பவற்றிலிருந்தும் மனம் இழுக்கப்பட்டு, கற்பனையானவற்றிற்கும், மேற்போக்கானவற்றிற்கும் நேராக ஈர்க்கப்படுகிறது. இலக்கிய சங்கங்கள்—சொல்லப்படும் பெயருக்கேற்ப தங்களது உண்மைத்தன்மையுடன் விளங்கினால் நலமாயிருக்கும்! கோதுமைக்குமுன் பதர் நிற்குமா?

இலக்கிய சங்கங்களின் உருவாக்கத்துக்கு வழிநடத்துகிற நோக்கங்களும், இலக்குகளும் நன்மையானவையாக இருக்கலாம்; ஆயினும் தேவனிடமிருந்து வரும் ஞானம் இத்தகைய ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்தாவிட்டால், அவைகள் ஒரு நேர்மறைவான தீமையாக மாறிவிடும். இருதயத்திலும், வாழ்விலும் பக்தியற்றவர்களும், அர்ப்பணிப்பில்லாதவர்களும் வழக்கமாகச் சேர்க்கப்பட்டு, அடிக்கடி மிகப்பொறுப்பான பதவிகளில் வைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு கேடான செல்வாக்கையும் தடுத்து நிறுத்துவதற்குப் போதுமானது என்றெண்ணப்படுமளவுக்கு விதிகளும், ஒழுங்குமுறையும் நடைமுறைப்படுத்தப்படலாம்; ஆனால், கூர்மதியுள்ள ஒரு போர்ப்படைத்தளபதியான சாத்தான் தனது திட்டங்களுக்கு ஏற்ப சமுதாயத்தை வனைவதற்குக் கிரியை செய்துகொண்டிருக்கிறான், சில நேரங்களில் மிக அதிகமாக அவன் வெற்றியும் அடைகிறான். மாபெரும் எதிராளியானவன் கடந்த காலத்தில் தான் கட்டுப்படுத்தியிருந்த நபர்களிடம் செல்ல ஆயத்தமான வழியைக் கண்டடைந்து, அவர்கள் மூலமாகத் தனது நோக்கத்தை அவன் நிறைவேற்றுகிறான். உலகப்பிள்ளைகளுக்குப்

கூட்டங்களைச் சுவாரஸ்யமுள்ளதாகவும், கவர்ச்சிகரமானதாகவும் ஆக்கும்படி பல்வேறுவிதமான பொழுதுபோக்குகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன; இவ்விதமான இலக்கிய சங்கங்கள் என்றழைக்கப்படுகிறவைகளின் செயல்பாடுகள் பெரும்பாலும் ஒழுக்கச் சீர்குலைவுண்டாக்கும் திரையரங்க நிறைவேற்றங்களாக, மலிவான மதியீனமுள்ளவைகளாகத் தரம் தாழ்ந்து போகின்றன. இவையனைத்தும் தேவனுக்கு விரோதமான பகையான மாம்ச சிந்தையைத் திருப்திப்படுத்தும்; ஆனால் அவைகள் அறிவாற்றலைப் பெலப்படுத்துவதுமில்லை, ஒழுக்கநெறிகளை உறுதிப்படுத்துவதுமில்லை.

இத்தகைய சங்கங்களிலுமுள்ள அவிசுவாசிகளுடன் தெய்வபயமிக்கவர்கள் இணைவதினால் பாவிகள் பரிசுத்தவான்கள் ஆக்கப்படுவதில்லை. தேவனுடைய ஜனங்கள் வேண்டுமென்றே உலகத்தாருடன், அர்ப்பணிப்பில்லாதவர்களுடன் இணைந்து, அவர்களுக்கு முதலிடம் கொடுக்கும்போது, அவர்கள் தங்களைத் தாங்களே வைத்துக்கொண்ட பரிசுத்தமற்ற செல்வாக்கின்கீழ் அவரிடமிருந்து வழிவிலக்கப்படுவார்கள். ஒரு குறுகிய காலத்திற்குப் பயங்கரமான ஆட்சேபணைக்குரியதாக எதுவும் இல்லாததுபோல் இருக்கலாம், ஆயினும் தேவனுடைய ஆவியானவரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படாத மனங்கள், சத்தியம் மற்றும் நீதிக்கடுத்த மணங்கமழும் காரியங்களை ஆயத்தமாய் ஏற்றுக்கொள்ளாது. அவர்கள் ஆவிக்குரிய காரியங்களுக்காக இதுவரைக்கும் எந்த ஆர்வ ஈடுபாடு கொண்டவர்களாக இருந்திருந்தால், இயேசு கிறிஸ்துவின் அணிவரிசைகளில் அவர்கள் தங்களை வைத்திருந்திருப்பார்கள். இரு வகுப்பினரும் இரு வேறுபட்ட எஜமான்களால் கட்டுப்படுத்தப்படுகின்றனர்; தங்களது நோக்கங்களிலும், நம்பிக்கைகளிலும், சுவைகளிலும், விருப்பங்களிலும் எதிர்மாறானவர்களாக இருக்கின்றனர். இயேசுவின் பின்னடியார்கள் அறிவுத் தெளிவுண்டாக்குகிற, உணர்வூட்டுகிற, மேம்படுத்துகிற கருப்பொருள்களை மகிழ்ந்து அனுபவிக்கின்றனர்; அதேவேளையில் புனிதக் காரியங்களுக்கான பிரியமில்லாதவர்கள், மேற்போக்கானதும் நிஜமற்றதுமான செயல்பாடுகளில் ஒரு சிறப்பான அம்சத்தைக் கொண்டிராத பட்சத்தில், இத்தகைய கூடுகைகளில் இன்பங்காண முடிவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாகப் பக்தியற்றவர்களால் ஆவிக்குரிய அடிப்படைக்கூறு அகற்றப்பட்டு விடுகிறது; ஒன்றுக்கொன்று எதிரான தன்மையுள்ள கொள்கைகளை ஒருங்கிணைப்பதற்கான முயற்சியானது தீர்மானிக்கப்பட்ட தோல்வியில் முடிவடைகிறது.

ஒரு இலக்கிய சங்கத்தை நிறுவுவதற்கான ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, அத்துடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அது ஒரு நன்மையாய் அமையும்.

ஒரு சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கும் யாவரும் அது எப்படி இருக்கவேண்டும் என்று அதை உருவாக்குவதற்கும், ஆன்மீகக் கொள்கை களுக்குப் பெரும்பாலும் ஆபத்துண்டாக்கும் அப்படிப்பட்ட தொடர்புகளின் தீமைகளைத் தவிர்ப்பதற்கும் ஏதுவான ஒரு ஒழுக்கரீதியான பொறுப்பை உணரவேண்டும். விவேகமும், நல்ல திறனாய்வும் உள்ள நபர்கள், பரலோகத்துடன் உயிருள்ள தொடர்பும் உடையவர்கள், தீமையான போக்குகளைக் காணக்கூடியவர்கள், சாத்தானால் வஞ்சிக்கப்படாதவர்கள் கிறிஸ்துவின் கொடியை இடைவிடாமல் உயர்த்திப் பிடித்துக்கொண்டு, நேர்மையின் பாதையில் ஒரே சீராய் முன்னேறிச் செல்வார்கள். இத்தகைய சங்கங்களைக் கட்டுப்படுத்த அப்படிப்பட்டவைகள் தேவை. அப்படிப்பட்ட ஒரு செல்வாக்கு மரியாதையைக் கொண்டுவரும், இத்தகைய கூடுகைகளை ஒரு சாபமாக்குவதற்குப் பதிலாக ஓர் ஆசீர்வாதமாக மாற்றும்.

அப்படிப்பட்ட ஒரு இலக்கிய சங்கத்தை ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வயதில் முதிர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் வாலிபர் களுடன் இணைந்துகொள்வார்களானால், அது பயனுடையதாக, செல்வாக்குடையதாக மாறும். ஆனால் அப்படிப்பட்ட கூடுகைகள் வேடிக்கை மற்றும் பேரிரைச்சல்மிக்கக் களியாட்டத்துக்கான சந்தர்ப்பங்களாகத் தரந்தாழ்ந்து போகும்போது, அவைகள் இலக்கியநயம் உள்ளதாக அல்லது உயர்த்துகிறதாக இராமல், வேறானவைகளாக இருக்கும். அவைகள் மனதையும், ஒழுக்கநெறிகளையும் கீழ்த்தரமுள்ளவைகளாக்குகின்றன.

வேத பாடம், வேதாகமக் கருப்பொருள்கள் குறித்த கருத்தான ஆராய்ச்சி, மனதை மேம்படுத்தி, அறிவுபுகட்டுகிற தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகள், தீர்க்கதரிசனங்களின் ஆராய்ச்சி அல்லது கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற பாடங்கள்—இவைகள் மனோசக்திகளைப் பெலப்படுத்துவதற்கும், ஆவிக்குரிய ஸ்திரத்தன்மையை அதிகரிப்பதற்கும் செல்வாக்கு உடையவைகளாயிருக்கும். வேதவாக்கியங்களுடன் கொள்ளும் நெருக்கமான தொடர்பு, பகுத்துணரும் சக்திகளைக் கூர்மைப்படுத்துகிறது, சாத்தானின் தாக்குதல்களுக்கெதிராக ஆத்துமாவைப் பாதுகாக்கிறது.

எண்ணங்கள் மற்றும் கற்பனாசக்திகளின்மீது கட்டுப்பாட்டைச் செயற்படுத்துவது ஒரு கடமை என்பதைச் சிலரே உணர்ந்திருக்கின்றனர். கட்டுப்படுத்தப்படாத மனதைப் பயனுள்ள பாடப்பொருள்களின்மீது நிலைத் திருக்கச்செய்வது கடினமாகும். ஆனால் எண்ணங்கள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லையானால், பக்திவாழ்வு ஆத்துமாவில் செழிப்படை யாது. புனிதமான, நித்திய காரியங்களில் மனம் முழுதும் ஈடுபாடு உடையதா யிருக்க வேண்டும். அறிவார்ந்த மற்றும் ஒழுக்கரீதியான வல்லமைகள்

கட்டுப்படுத்தப்படவேண்டும், பயிற்சியினால் அவைகள் பெலப்படும், மேம்படும்….

அறிவாற்றலும், இருதயமும் தேவசேவைக்கென்று அர்ப்பணிக்கப்பட வேண்டும். நம்மிடம் உள்ள அனைத்தின்மீதும் அவருக்கு உரிமை உண்டு. கிறிஸ்துவின் பின்னடியானின் ஒளியூட்டம்பெற்ற மனச்சாட்சியானது தனது ஆவலை அது குறைக்கும் அல்லது தனது ஆவிக்குரிய ஸ்திரத்தன்மையை அது தணிக்கும் என்று அவனுக்குத் சொல்லுகையில், எப்படிப்பட்ட தீங்கற்றதாக அல்லது பாராட்டத்தக்கதாக அது தோன்றினாலும், அவன் எந்தவிதமான திருப்தியூட்டும் செயலிலும் திளைக்கக்கூடாது அல்லது எந்தவிதமான துணிவான முயற்சியிலும் ஈடுபடக்கூடாது. தீமையின் அலையைப் பின்னுக்குத் தள்ளவும், நமது வாலிபர்களை அழிவுக்குள் அடித்துக்கொண்டுசெல்கிற செல்வாக்குகளிலிருந்து அவர்களைக் காக்கவும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் உழைக்கவேண்டும். தற்போதைய போக்குக்கு எதிர்த்து நமது வழியில் முன்னேறுவதற்கு தேவன் நமக்கு உதவிபுரிவாராக!—Counsels to Teachers, Parents, and Students, pp. 541–544.

## 135

# நடனம்புரிதல்

உண்மையான கிறிஸ்தவன் தேவனுடைய ஆசீர்வாதத்தைத் தான் கேட்கக்கூடாத எந்த கேளிக்கையின் இடத்தில் நுழைவதற்கோ அல்லது எந்த பொழுதுபோக்கில் ஈடுபடுவதற்கோ விரும்பமாட்டான். திரையரங்களில், மேசைக்கோல் பந்தாட்ட அறையில் அல்லது பந்துவீச்சுக் கூடத்தில் அவன் காணப்படமாட்டான். அவன் உல்லாசச் சுழற்சி நடனக்காரர்களுடன் இணையமாட்டான் அல்லது கிறிஸ்துவை மனதிலிருந்து புறம்பே தள்ளுகிற வேறு எந்த கவர்ச்சிக்கும் சிற்றின்பத்திலும் ஈடுபடமாட்டான்.

இத்தகைய பொழுதுபோக்குகளை ஆதரித்துப் பேசுகிறவர்களுக்கு, நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் நாம் அவைகளில் ஈடுபடக்கூடாது என்று நாங்கள் பதில்கூறுகிறோம். திரையரங்கம் அல்லது நடனத்தில் செலவிடப்படும் மணிநேரத்தின்மீது தேவனுடைய ஆசீர்வாதத்தை கேட்க முடியாது. எந்தக் கிறிஸ்தவனும் அப்படிப்பட்ட ஒரு இடத்தில் மரணத்தைச் சந்திக்க விரும்பமாட்டான். கிறிஸ்துவானவர் வரும்போது ஒருவரும் அங்கே காணப்பட விரும்பமாட்டார்கள்.

கடைசி மணிநேரத்தில் நாம் வந்து, நமது ஜீவியங்களின் பதிவேட்டுடன்

நேருக்கு நேராக நிற்கும்போது, வெகுசில இன்ப விருந்துகளில் நாம் கலந்திருக்கிறோமே? வெகு சில சிந்தனையற்ற களியாட்டக் காட்சிகளில் நாம் பங்குகொண்டிருந்திருக்கிறோமே? என்று நாம் வருந்துவோமா? இன்னும் சரியாகச் சொன்னால், சரியாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால், நமக்கு அழியாப் பொக்கிஷங்களைப் பெற்றுத் தந்திருக்கக்கூடிய எத்தனையோ அருமையான மணிநேரங்கள் சுய—திருப்தி செய்தலில் வீணடிக்கப்பட்டுவிட்டனவே,— எத்தனையோ வாய்ப்புகள் அசட்டை செய்யப்பட்டு விட்டனவே என்று நாம் கசப்புடன் வருந்தமாட்டோமா?

இருதயத்தோடு இணைக்கப்பட்டிருக்கிற ஏறக்குறைய எந்தத் தீங்கான இன்பத்தோய்வுக்கும் இசைவளிப்பது வெளிப்படையாய்க் காணும் பக்திமார்க்கத்தாருக்கு வழக்கமாகிவிட்டது. பாவத்துடன் நெருங்கிப் பழகிவிட்டதனால், அவர்கள் அதன் கொடூரத்தன்மைக்குக் கண்மறைக்கப் பட்டவர்களாகி விடுகின்றனர். தேவபிள்ளைகள் என்று உரிமைகோரும் அநேகர், தங்களது பக்தியற்ற மதுபான விருந்துகளுடன் சபையின் ஏதோ ஒரு அறப்பணி நோக்கத்தை இணைத்துக்கொள்வதினால், அவரது வார்த்தையானது கண்டனஞ்செய்கிற பாவங்களின்மீது பளபளப்பு முலாம் பூசிவிடுகின்றனர். இவ்விதமாக அவர்கள் உள்ளிருக்கும் பிசாசுக்குச் சேவைசெய்வதற்கு பரலோகத்தின் அடையாளச் சின்னத்தை இரவல் வாங்குகின்றனர். இத்தகைய புதுத்தினுசான சிற்றின்பங்களினால் ஆத்துமாக்கள் வஞ்சிக்கப்படுகின்றன வழிவிலக்கப்படுகின்றன, ஒழுக்கத் தையும் நேர்மையையும் தொலைத்துவிடுகின்றன.

### ஒழுக்கமற்ற வாழ்வின் பாதையில்

அநேக பக்தியுள்ள குடும்பங்களில், நடனமும் சீட்டாட்டமும் ஒரு வரவேற்பறை வேடிக்கையாக்கப்பட்டுவிட்டது. இத்தகைய அமைதியான, வீட்டுக் கேளிக்கைகள் பெற்றோர்களின் கண்காணிப்பின்கீழ் பாதுகாப்பாக அனுபவிக்கப்படலாம் என்று வலியுறுத்தப்படுகிறது. ஆனால் இவ்விதமாக வளர்க்கப்படுகிற, வீட்டில் தீங்கற்றது என்று கருதப்படுகிற இத்தகைய கிளர்ச்சியூட்டும் சிற்றின்பங்களுக்கான பிரியமானது, விரைவில் வெளியிலும் ஆபத்துள்ளதாகக் கருதப்படாது. இத்தகைய கேளிக்கைகளிலிருந்து பெறப்படுகிற நன்மை ஏதாகிலும் உண்டா என்பதை இன்னும் உறுதியாய் அறிய வேண்டியிருக்கிறது. அவைகளட உடலுக்கு உறுதியோ, மனதுக்கு அமைதியோ அளிப்பதில்லை. அவைகளட ஒரு நற்குணத்தையோ அல்லது பரிசுத்தமான உணர்ச்சிக்கனிவையோ ஆத்துமாவில் நிலைநாட்டுவதில்லை. மாறாக, பக்திவிநயமான சிந்தனை மற்றும் ஆன்மீக ஆராதனைகளுக்கான அனைத்து சுவைநாட்டத்தையும் அவைகள் அழித்துப்போடுகின்றன. தரமான

வகுப்பாரின் குறிப்பிட்ட விருந்துகளுக்கும், கீழ்த்தரமான நடனக்கூடத்தின் ஒழுக்கமற்ற, இழிவான கூட்டங்களுக்கும் இடையே ஒரு பெருத்த வித்தியாசம் இருக்கிறது என்பத உண்மையே. ஆயினும் அனைத்தும் ஒழுக்கமற்ற வாழ்வுக்கு இட்டுச்செல்லும் படிக்கட்டுகள் ஆகும்.

இன்றைய காலக்கட்டத்தில் நடத்தப்படுகிற, நடனம்புரிதல் எனும் கோரிக்கையானது, ஒழுக்கச் சீர்கேட்டின் பள்ளிக்கூடமாகவும், சமுதாயத்தின் ஒரு பயங்கர சாபமாகவும் இருக்கிறது. நமது மாபெரும் நகரங்களில் எல்லாம் இக்காரியத்தினால் வருடந்தோறும் சீரழிக்கப்படுகிறவர்கள் ஒன்றுதிரட்டப் பட்டால், சிதைந்துபோன ஜீவியங்களின் எப்பேர்ப்பட்ட சரித்திரங்கள் வெளிப்படுத்தப்படும். இந்தப் பயற்சிக்கு வக்காலத்து வாங்க இப்பொழுது ஆயத்தமாக நிற்கும் எத்தனையோ பேர் விளைவைக் கண்டு வேதனையாலும், ஆச்சரியத்தாலும் நிரப்பப்படுவார்கள். கிறிஸ்தவப் பெற்றோர்கள் என்று கூறுபவர்கள் எப்படித் தங்கள் பிள்ளைகளைச் சோதனையின் பாதையில் வைக்க அனுமதித்து, அப்படிப்பட்ட களியாட்டக் காட்சிகளில் அவர்களுடன் கலந்துகொள்ளலாம்? இந்த வசீகரிக்கும் சிற்றின்பத்துக்காக எப்படி வாலிப ஆண்களும், வாலிபப் பெண்களும் தங்கள் ஆத்துமாக்களைப் பண்டமாற்று செய்யலாம்?—Review and Herald, February 28, 1882.

## கேளிக்கைகளின் அபாயம்

சிற்றின்பப்பிரியம் என்பது பட்டணங்களிலுள்ள சிறுபிள்ளைகள் மற்றும் வாலிபர்களைத் தாக்குகிற அநேக சோதனைகளில் மிகவும் தந்திரமான ஒன்றாகவும், மிகவும் அபாயகரமான ஒன்றாகவும் இருக்கிறது. விடுமுறைநாட்கள் எண்ணற்றவை; விளையாட்டுகளும், குதிரைப்பந்தயமும் ஆயிரங்களைக் கவர்ந்திழுக்கின்றன. கிளர்ச்சி மற்றும் கேளிக்கை எனும் சுழற்சியானது வாழ்வின் கருத்துமிக்கக் கடமைகளிலிருந்து அவர்களைக் கவர்ந்துகொண்டு போய்விடுகிறது. சிறப்பான பயன்பாடுகளுக்காகச் சேமித்து வைக்கப்பட்டிருக்க வேண்டிய—அநேக வேளைகளில் ஏழைகளின் குறைவான சம்பாத்தியமான—பணமானது கேளிக்கைகளுக்காக வீண்செலவு செய்யப்படுகிறது.—Fundamentals of Christian Education, p. 422.

## கொள்கையினால் வழிநடத்தப்படுதல்

தாங்கள் கொள்கையின் அடிப்படையில் செயல்படத் துணியவில்லை என்று அன்பற்ற விமர்சனமோ அல்லது தீமையான புறளியோ உண்டுபண்ணப் படுவதைக் குறித்து அநேகர் மிகுந்த அச்சமுள்ளவர்களாக இருக்கின்றனர். கிறிஸ்துவை முழுமையாகப் பின்பற்றுகிறவர்களுடன் தங்களை அடையாளப் படுத்திக்கொள்ள அவர்கள் தைரியம் காட்டுவதில்லை. உலகரீதியான பழக்கவழக்கங்களுக்கு அவர்கள் இணங்கவும், உலகத்தாரின்

பாராட்டைத் தக்கவைக்கவும் விரும்புகின்றனர். "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி" நமக்காகத் தம்மைத்தாமே கிறிஸ்து ஒப்புக்கொடுத்தார். —Review and Herald, November 29, 1887. ★

# பகுதி 14

# சமுதாய தொடர்புகள்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 136 | இரட்சிப்பதற்குக் கூடி வாழுதல் | 367 |
| 137 | கிறிஸ்தவத் தோழமையும் மற்றவர்கள் உணர்ச்சிகளை மதிக்கும் பண்பும் | 369 |
| 138 | வழிகாட்டும் கொள்கைகள் | 371 |
| 139 | நட்பின் செல்வாக்கு | 375 |
| 140 | செல்வாக்கு | 380 |
| 141 | நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல் | 382 |
| 142 | பொற்சட்டம் | 383 |
| 143 | மெய்யான பண்புமிக்க நடத்தை | 384 |
| 144 | லௌகீகத் தொடர்புகளைப் புறக்கணித்தல் | 386 |
| 145 | உயர்தரமான உரையாடல் | 388 |
| 146 | இளம் பருவத்தின் இன்பக் களியாட்டுகளில் மூழ்குதல் | 391 |
| 147 | பக்தியற்ற விருந்தினர்கள் | 394 |

## பகுதி 14

# சமுதாயத் தொடர்புகள்

சமுதாயத் தொடர்புகள் மூலமாகவே கிறிஸ்தவம் உலகத்துடன் தொடர்புக்குள் வருகிறது. தெய்வீக வெளிச்சம் பெற்றிருக்கிற ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சிறப்பான வழியை அறியாதவர்களின் இருண்ட நடைபாதையில் வெளிச்சத்தை வீசவேண்டும். கிறிஸ்துவின் ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்ட சமுதாய வல்லமையானது, இரட்சகரிடம் ஆத்துமாக் களைக் கொண்டுவருவதினால் மேம்படுத்தப்பட வேண்டும்.—Ministry of Healing, p. 496.

## 136

# இரட்சிப்பதற்குக் கூடி வாழுதல்

அவருடைய வார்த்தையைப் பிரசங்கிப்பவர்களெல்லாம் மனித இனத்தின் ஆர்வத்தை கிறிஸ்து தம்முடன் இணைத்துக்கொண்டதைப் உதாரணமாகக்கொண்டு, அவரது கிருபையின் சுவிசேஷத்தைப் பெற்றுக் கொண்ட அனைவரும் அதைப் பின்பற்ற வேண்டும். சமூகத் தொடர்புகளை நாம் மறுக்கவேண்டியதில்லை. மற்றவர்களிலிருந்து நம்மை நாம் தனிமைப்படுத்திக்கொள்ளக்கூடாது. எல்லா வகுப்பினரையும் சந்திப்பதற்காக அவர்கள் எங்கே இருக்கின்றனரோ, அங்கே நாம் அவர்களை சந்தித்தாக வேண்டும். அவர்கள் அவர்களது சுயவிருப்பத்துடன் நம்மை அபூர்வமாகவே தேடுவார்கள். மனிதரின் இருதயங்கள் தெய்வீக சத்தியத்தினால் பிரசங்க மேடையிலிருந்துமட்டும் தொடப்படுவதில்லை. ஊழியஞ்செய்யக்கூடிய வேறொரு களம் இருக்கிறது. அது தாழ்மையானதாகக் காணப்பட்டபோதிலும் வாக்குத்தத்தங்கள் நிறைந்ததாக இருக்கிறது. கீழானவர்களின் வீட்டிலும், பெரியவர்களின் மாளிகையிலும் உபசரிக்கும் இடத்திலும் குற்றமற்ற சமூக மகிழ்ச்சிக்காக கூடுமிடங்களிலும் அது காணப்படுகிறது.

கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம் சந்தோஷத்தின்மீதுள்ள ஆசை யினால்மட்டும் அவர்களது தவறுகளுடன் ஐக்கியப்பட உலகத்துடன் கலந்துகொள்ளவேண்டாம். அப்படிப்பட்ட கூட்டுகள் கேட்டினை விளைவிக்கும். நமது வார்த்தைகளினாலோ அல்லது செயல்களினாலோ அல்லது நமது பிரசன்னத்தினாலோ நாம் பாவத்தை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

எங்கு சென்றாலும் இயேசுவை நம்முடன் சுமந்துசென்று, நமது இரட்சகரின் விலைமதிப்புமிக்க தன்மையை மற்றவர்களுக்கு அறிவித்தாகவேண்டும். தங்களுடைய மதத்தை நான்கு சுவர்களுக்குள் காத்துக்கொள்ள எவர்கள் முயலுகிறார்களோ, அவர்கள் நன்மை செய்யக்கூடிய விலைமதிப்புமிக்க வாய்ப்புகளை இழந்துவிடுகின்றனர். சமுதாய உறவுகளின்மூலமாக கிறிஸ்தவ மார்க்கம் உலகத்துடன் தொடர்புகொள்ள வருகிறது. தெய்வீக வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் ஜீவனின் ஒளியானவரை அறியாதவர்களின் பாதையை ஒளிபெறச்செய்யவேண்டும்.

நாம் அனைவரும் இயேசுவிற்கு சாட்சிகளாக மாறிடவேண்டும். இரட்சகருக்கென்று ஆத்துமாக்களை வெல்ல, கிறிஸ்துவின் கிருபையினால் பரிசுத்தமாக்கப்பட்ட சமூக வல்லமையை முன்னேற்றமடையச்செய்யவேண்டும். நாம் நமது சுயவிருப்பங்களின்மீது சுயநலத்துடன் ஈர்க்கப்பட்டவர்களாக அல்ல மாறாக நமது ஆசீர்வாதங்களையும் சிலாக்சகியங்களையும் பிறருடன் பகிர்ந்துகொள்ள நாம் விரும்புகிறோம் என்பதை உலகம் காணட்டும். நமது மதமும் அனுதாபமற்றதாகவும், கடும்பாரத்தை சுமத்துகிறதாகவும் இல்லை என்பதை அவர்கள் காணட்டும். கிறிஸ்துவைக் கண்டிருக்கிறோம் என்று கூறும் அனைவரும், அவர் மனிதர்களின் நம்மைக்காக ஊழியஞ்செய்ததுபோல செயல்படுவார்களாக.

கிறிஸ்தவர்கள், தாங்கள் துயரந்தோய்ந்த மகிழ்ச்சியற்ற மக்கள் என்னும் தவறான உணர்த்துதலை உலகத்திற்கு ஒருபோதும் கொடுக்கக்கூடாது. நமது கண்கள் இயேசுவின்மீது பதிந்திருந்தால், நாம் மனஉருக்கமிக்க ஒரு மீட்பரைக்கண்டு, அவரது முகத்திலிருந்து வரும் ஒளியைப் பற்றிக்கொள்ளுவோம். எங்கெல்லாம் அவரது ஆவி ஆளுகை செய்கிறதோ, அங்கெல்லாம் சமாதானம் தங்கியிருக்கிறது. ஏனெனில், அமைதியும் பரிசுத்தமுமிக்க ஒரு தேவநம்பிக்கை உள்ளதால் அங்கு மகிழ்ச்சியும் இருக்கும்.

கிறிஸ்துவின் பின்னடியார்கள் மனிதர்களாக இருந்தபோதிலும் தெய்வத்தன்மையில் பங்கு பெறுபவர்களாக உள்ளனர் என்பதைக் காட்டும்போது கிறிஸ்து மகழ்ச்சியடைகிறார். அவர்கள் சிலைகளாக இல்லாமல், ஜீவனுள்ள ஆண்களும் பெண்களுமாக உள்ளனர். தேவகிருபை என்னும் பனித்துளிகளால் புத்துணர்வடையும் அவர்களது இருதயங்கள் நீதியின் சூரியனுக்காகத் திறக்கப்பட்டு விரிவடைகின்றன. அவர்கள்மீது வீசும் ஒளியை, கிறிஸ்துவின் அன்பினால் ஒளிப்படுத்தப்பட்டுள்ள அவர்களது ஊழியங்களினால் பிறர்மீது பிரதிபலிக்கின்றனர்.— Desire of Ages, pp. 152, 153.

**முடிவை பாதிக்கும் நட்பு**

நட்பின் செல்வாக்கின்மீதும், ஆண்கள் மற்றும பெண்களின்மீதும்கூட, மாபெரும் வலியுறுத்தலை தேவனுடைய வார்த்தை வைத்திருக்கிறது. வளர்ந்துவரும் சிறுபிள்ளைகள் மற்றும் வாலிபர்களின் மனம் மற்றும் குணத்தின்மீதான அதனுடைய வல்லமை எத்தனை மகாபெரியது! அவர்கள் வைத்துக்கொள்ளும் கூட்டமும், பின்பற்றும் கொள்கைகளும், அமைத்துக்கொள்ளும் பழக்கங்களும், இவ்வுலகத்தில் அவர்களது பயன்பாடு மற்றும் அவர்களது எதிர்கால முடிவுக்கான கேள்வியைத் தீர்மானிக்கும்.— Counsels to Teachers, Parents, and Students, p. 220.

## 137

# கிறிஸ்தவத் தோழமையும் மற்றவர் உணர்ச்சிகளை மதிக்கும் பண்பும்

கிறிஸ்தவத் தோழமையானது தேவனுடைய ஜனங்களால் முற்றிலும் மிகக் குறைவாகவே வளர்க்கப்பட்டிருக்கிறது. கல்வியின் இக்கிளையானது நமது பள்ளிகளில் அசட்டை செய்யப்படக்கூடாது அல்லது பார்வையிலிருந்து காணாமல்போக விட்டுவிடக்கூடாது.

தாங்கள் தன்னிச்சையான அணுக்கள் அல்ல, மாறாக, ஒவ்வொருவரும் ஒரு ஆடையை உருவாக்குவதில் மற்ற நூல்களுடன் இணைந்து செல்கிற ஒரு நூலாக இருக்கின்றனர் என்பது மாணவர்களுக்குக் கற்பிக்கப்படவேண்டும். இந்தப் போதனையானது வீட்டைவிடவும் வேறெந்த பாடத்துறையிலும் மிக வல்லமையாகக் கொடுக்கப்படமுடியாது. இங்கே மாணவர்கள் தங்களது சமுதாயக் குணக்கூறுகளை வளர்த்துக்கொள்வதில், பயன்படுத்திக்கொண்டால், பெரிதும் உதவியாயிருக்கும் வாய்ப்புகளால் அனுதினமும் சூழப்பட்டிருக்கின்றனர். அவர்களை மகிழ்ச்சியும், பிரயோஜனமும் உள்ளவர்களாக்குகிற ஒரு குணத்தை வளர்த்துக்கொள்வதற்கேதுவாக, தங்களது நேரத்தையும், வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ளவேண்டியது அவர்களது சக்திக்குட்பட்டதாகவே இருக்கிறது. அன்பான நட்புறவுகளினால் மற்றவர்களை ஆசீர்வதிக்கும்படி இழுத்துக்கொள்ளப்பட விருப்பமற்றவர்களாக, தங்களுக்குள் தங்களையே அடைத்து வைத்துக்கொள்கிறவர்கள் அநேக ஆசீர்வாதங்களை இழக்கின்றனர்; பரஸ்பரத் தொடர்பினால் மனங்கள் மெருகேறி, பண்படுகின்றன; சமுதாயக் கூட்டுறவினால், பரலோகத்தின்

பார்வையில் இனிமையாயிருக்கிற மன ஒருமைப்பாட்டையும், அன்பின் சூழலையும் விளையப்பண்ணுகிற தொடர்புகள் ஏற்படுத்தப்படுகின்றன, தோழமைகள் உறுதிசெய்யப்படுகின்றன.

கிறிஸ்துவின் அன்பை ருசித்தவர்கள் குறிப்பாகத் தங்களது சமுதாய வல்லமைகளை வளர்த்திடவேண்டும்; இவ்வழியில் இரட்சகருக்கு அவர்கள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யலாம். தங்களால் மாத்திரம் அனுபவிக்கப்படுகிற, புனிதமான, இனிமையான, ஆவலுடன் விரும்பப்பட்ட ஒரு பொக்கிஷமாக, கிறிஸ்துவை அவர்கள் தங்கள் இருதயங்களில் மூடி மறைத்துவிடக்கூடாது; அல்லது அவர்களது மனதுக்குகந்தவர்களுக்கு மட்டும் கிறிஸ்துவின் அன்பானது வெளிக்காட்டப்படக்கூடாது. தாங்கள் சொந்தமாகத் தெரிந்துகொண்ட நண்பர்களாக இராவிட்டாலும், மாபெரும் தேவையிலிருப்போருக்கு, ஒரு இரக்கமுள்ள அக்கறையை, நட்புநாடும் மனநிலையை வெளிக்காட்டுகிற கிறிஸ்துவைப்போன்ற குணம் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும் இயேசுவானவர் மனிதக் குடும்பத்தில் ஒரு அன்புமிகுந்த அக்கறையை வெளிக்காட்டி, தம்மைச் சுற்றியுள்ளோருக்கு மனமகிழ்வோ டிருக்கிற பக்தியின் வெளிச்சத்தை வீசச்செய்தார். அவருடைய அடிச்சுவடு களில் நடக்க மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். கிறிஸ்தவ அக்கறை, அனுதாபம், மற்றும் தங்களது இளம் நண்பர்களுக்கு அன்புகாட்டி, அவர்களை இயேசுவண்டை ஈர்ப்பதற்கு முயற்சிக்கும்படி அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படவேண்டும்; அவர்களது தொடர்புக்குள் வருகிற யாவரையும் செழிப்பாக்குகிற, நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாகக் கிறிஸ்துவானவர் அவர்களது இருதயங்களில் இருக்கவேண்டும்.

அத்தியாவசியமான வேளைகளில் பிறருக்காகச் செய்யப்படுகிற இந்த ஆவலும், அன்பும் மிகுந்த ஊழியமே தேவனிடத்தில் விலையேறப்பெற்றதாக எண்ணப்படுகிறது. இவ்விதமாக மாணவர்கள் பள்ளியில் படிக்கும் நாட்களில்கூட, தங்களது வெளிப்படையான அறிவிப்புக்கு உண்மையாய் இருந்தால், தேவனுக்காக உயிருள்ள மிஷனெரிகளாக இருக்கலாம். இவையனைத்திற்கும் நேரம் பிடிக்கும்; ஆயினும் இவ்விதமாகப் பயன்படுத்தப்படுகிற நேரமானது பயனுள்ள வகையில் செலவழிக்கப்படுகிறது, உலகத்திற்குக் கிறிஸ்தவத்தைக் காட்டுவது எப்படி என்பதை இவ்வழியில் மாணவன் கற்றுக்கொள்கிறான்.

அன்பான கூட்டுறவில் மற்றவர்களுடன் பழகுவதற்கு கிறிஸ்து மறுக்கவில்லை. பரிசேயன் அல்லது ஆயக்காரனால் ஒரு விருந்துக்கு அழைக்கப்பட்டபொழுது, அழைப்பை அவர் ஏற்றார். அப்படிப்பட்ட

தருணங்களில் அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் கேட்கிறவர்களுக்கு ஜீவனுக்கேதுவான ஒரு ஜீவவாசனையாகவே இருந்தது; விருந்துநேரத்தை, அவர்களது தேவைகளுக்கேற்ப அநேக அருமையான பாடங்களைக் கற்றுக்கொடுக்கும் ஒரு தருணமாக அவர் ஆக்கிக்கொண்டார். பக்தியற்றவர்கள் மற்றும் பக்தியுள்ளவர்கள் கூட்டத்தில் இருக்கும்போது, எப்படித் தாங்கள் நடந்துகொள்ளவேண்டும் என்பதைக் கிறிஸ்து இவ்விதமாகத் தமது சீஷ ர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்.—Testimonies for the Church, Vol. 6, pp. 172, 173.

## 138

# வழிகாட்டும் கொள்கைகள்

இருதயம் இயேசுவுக்கு உரியது. ஆத்துமாவுக்காக அவர் அளவற்ற கிரயம் செலுத்தியிருக்கிறார்; பிதாவுக்கு முன்பாக, ஒரு விண்ணப்பதாரரைப்போல அல்ல, மாறாக, தமக்குச் சொந்தமானதை உரிமைகோருகிற வெற்றியாளரைப்போல மன்றாடுகிற, நமது மத்தியஸ்தராக அவர் பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார். நமக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிக்கிறவராகையால், அவர் முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். ஒரு இளமையான இருதயமானது தேவனுக்கென்று படைக்கப்படுகிற மிகவும் விலையேறப்பெற்ற பரிசாக, ஒரு அருமையான காணிக்கையாக இருக்கிறது. நீங்கள் முழுமையும், நீங்கள் கொண்டிருக்கிற திறமை முழுமையும் ஒரு உற்சாக பலியாக, பரிசுத்த பலியாகத் திரும்பவும் தேவனுக்கே செலுத்தப்படவேண்டிய ஒரு நம்பகமான பொறுப்பாக அவரிடமிருந்து வந்திருக்கிறது. தேவன் உங்களுக்கு முதலில் கொடுத்திராத எதையும் நீங்கள் அவருக்குக் கொடுக்கமுடியாது. ஆகையால் இருதயமானது தேவனுக்குக் கொடுக்கப்படும்போது, அது அவரால் சம்பாதிக்கப்பட்ட, அவருடையதாயிருக்கிற ஒரு ஈவாக அவருக்குக் கொடுக்கப்படுகிறது.

வாலிபர்களின் நேரம், பற்றுறுதிகள் மற்றும் பெலத்திற்கு உரிமை கொண்டாடுகிறவர்கள் அநேகர் உண்டு. வாலிபர்களைத் தனது சொத் துடைமை என்று சாத்தான் உரிமைகோருகிறான், பெருந்திரளானவர்கள் தாங்கள் பெற்றிருக்கிற திறமை அனைத்தையும், தாலந்து அனைத்தை யும் அவனுக்குச் செலுத்துகின்றனர். உலகம் இருதயத்தை உரிமைகொண்டாடு கிறது; ஆனால் இருதயமானது அதை மீட்டவருக்கே உரியது. உலகத்

துக்குக் கொடுக்கப்பட்டால், அது கவலையினாலும், வருத்தத்தினாலும், ஏமாற்றமடைந்த நம்பிக்கைகளாலும் நிரப்பப்படும்; அசுத்தமானதாக, சீர்கெட்டதாக அது மாறும். உங்கள் இருதயங்களின் பற்றுறுதிகள் மற்றும் சேவையை உலகத்திற்குக் கொடுப்பது மகா மோசமான கொள்ளையா யிருக்கும். ஏனெனில் அவைகள் தேவனுக்கு உரியவை. இலாபத்தோடு உங்கள் இருதயத்தை சிற்றின்பத் தேடுதலுக்கு கொடுக்க இயலாது.

நீதியின் எதிரியானவன் வாழ்வின் எல்லா நிலைமைகளிலும் வாலிபர்களுக்கென்று ஒவ்வொருவிதமான சிற்றின்பத்தை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறான்; நெரிசலான பட்டணங்களில் மட்டுமல்ல, மனிதர்கள் குடியிருக்கிற ஒவ்வொரு இடத்திலும் அவைகள் முன்வைக்கப்படுகின்றன. சாத்தான் வாலிபர்களைத் தனது அணிவரிசைகளில் படைவீரர்களாகத் தக்கவைத்துக்கொள்ள விரும்புகிறான். எந்தப் பொருளுடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதைப் பிரதான சண்டாளன் நன்கு அறிந்திருக்கிறான்: வாலிபர்களின் பாச உணர்ச்சிகளை இயேசு கிறிஸ்துவிடமிருந்து பிரிக்கக்கூடிய பழக்கவழக்கங்கள் மற்றும் சிற்றின்பங்களை அவர்களுக்காகக் கண்டுபிடிப்பதில் அவன் தனது நரக இயல்புடைய ஞானத்தை அம்பலப்படுத்தியிருக்கிறான்...

## ஊதாரி மைந்தன்

ஊதாரி மைந்தனின் பாடம் வாலிபர்களின் போதனைக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிற்றின்பமும் பாவமிக்க ஈடுபாடுமுள்ள அவனது வாழ்வில், தனது சுதந்தரவீதத்தை நெறிதவறி வாழ்ந்து அவன் செலவழித்துப் போட்டான். அவன் நண்பர்களை இழந்து, ஒரு அந்நிய நாட்டில் இருக்கிறான்; கந்தைகளை உடுத்தி, பசியோடு, பன்றிகளுக்குப் போக மிச்சமீதியிருந்த கழிவுக்காகக்கூட அவன் ஏங்கினான். மனம் வருந்தி, தாழ்மையோடு, தன் தகப்பன் வீட்டிற்குத் திரும்புவதே அவனது கடைசி நம்பிக்கையாக இருக்கிறது. அங்கே அவன் வரவேற்கப்பட்டான், மன்னிக்கப்பட்டான், தகப்பனின் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டான். அநேக வாலிபர்கள் அவன் செய்ததுபோல செய்துகொண்டு, அக்கறையின்றி, சிற்றின்பப் பிரியத்துடன், ஊதாரித்தனமான வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்; மெய்யான இன்பத்தின் ஊற்றான, ஜீவத்தண்ணீருள்ள ஊற்றை விட்டுவிட்டு, தண்ணீர் நிற்காத வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டிருக்கின்றனர்.

## தேவனுடைய கிருபையின் அழைப்பு

“என் மகனே, உன் இருதயத்தை எனக்குத்தா; நான் அதைத்

தூய்மையாய்க் காப்பேன்; அதன் ஏக்கங்களை மெய்யான மகிழ்ச்சியினால் நான் திருப்தியாக்குவேன்” என்று ஒவ்வொரு வாலிபருக்கும் தேவனுடைய அழைப்பு வருகிறது. தேவன் வாலிபர்களை மகிழ்ச்சியாக்க விரும்புகிறார், தேவனால் கொடுக்கப்பட் தேகத்தின் அனைத்து நுட்பத்திறன்களும் திடமான, ஆரோக்கியமான நிலையில் வைக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான், அவர்கள் தங்களது இருதயங்களை அவரது பாதுகாப்புக்குள் வைத்திட வேண்டுமென்று அவர் விரும்புகிறார். வாழ்வு எனும் தேவவரத்தை அவர்கள் பற்றிக்கொண்டிருக்கின்றனர். அவர் இருதயத்தைத் துடிக்கச் செய்கிறார்; ஒவ்வொரு நுட்பத்திறனுக்கும் அவர் பெலனைக் கொடுக்கிறார். மெய்யான மகிழ்வானது தேவனுடைய வரங்களில் ஒன்றையும் மதிப்புக்கெடச் செய்யாது. தேவனிடமிருந்து நமது பாச உணர்ச்சிகளைப் பிரிக்கிற சிற்றின்பங்களை நாம் தேடும்போது, நாம் நமது சரீரங்களுக்கு விரோதமாகவும், தேவனுக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறோம். தூதர்களுடன் வாழ்வதற்குத் தங்களைத் தகுதியாக்குகிற குணக்கூறுகள் தங்களிடம் உண்டா என்று பார்க்கிற, பலப்பரீட்சைக்காக அவர்கள் உலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை வாலிபர்கள் ஆழமாய்ச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

குற்றம் மற்றும் மதியீனத்தின் பாதைகளுக்குள் செல்ல உங்கள் நண்பர்கள் உங்களை வற்புறுத்தும்போதும், உங்களைச் சுற்றியுள்ள யாவும் நீங்கள் தேவனை மறப்பதற்கும், தேவன் உங்களை நம்பி ஒப்படைத்திருக்கிற திறமைகளை அழிப்பதற்கும், உங்கள் சுபாவத்திலுள்ள உயர்தரமான அனைத்தையும் கீழ்த்தரமாக்குவதற்கும் உங்களைச் சோதிக்கும்போதும், அவைகளுக்கு எதிர்த்துநில்லுங்கள். நீங்கள் தேவகுமாரனின் பாடு மற்றும் வியாகுலம் எனும் விலைக்கிரயத்தினால் சம்பாதிக்கப்பட்ட கர்த்தருடைய சொத்து என்பதை நினைவில் கொள்ளுங்கள்...

கர்த்தராகிய இயேசு உங்கள் சேவையை உரிமைகோருகிறார். அவர் உங்களை நேசிக்கிறார். அவரது அன்பை நீங்கள் சந்தேகித்தால், கல்வாரியை நோக்கிப் பாருங்கள். சிலுவையிலிருந்து பிரகாசிக்கிற வெளிச்ச மானது எந்த நாவும் வர்ணிக்க இயலாத அவ்வன்பின் மகத்துவத்தை உங்களுக்கு எடுத்துக் காட்டும். “என் கற்பனைகளைக்... கைக்கொள்ளு கிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்.” கவனமிக்க ஆராய்ச்சியினால் தேவனுடைய கற்பனைகளுடன் அறிமுகமானவர்களாக நாம் மாறவேண்டும்; பின்னர் நாம் அவருடைய கீழ்ப்படியும் குமாரர்கள் மற்றும் குமாரத்திகள் என்று காட்டவேண்டும்.

## தேவனுடைய இரக்கங்களால் சூழப்பட்டிருத்தல்

தேவனுடைய இரக்கங்கள் ஒவ்வொரு விநாடியும் உங்களைச் சூழ்ந்து

இருக்கிறது; எப்படி, எங்கே இருந்து ஒவ்வொருநாளும் உங்களுடைய ஆசீர்வாதங்கள் வருகின்றன என்று நீங்கள் சிந்தித்தால் நன்மை பயக்கிறதாயிருக்கும். தேவனுடைய அருமையான ஆசீர்வாதங்கள் உங்களில் நன்றியுணர்வை உசுப்பிவிடட்டும். உங்களுக்குக் காட்டப்படுகிற இடைவிடாத கிருபையை, தேவனுடைய ஆசீர்வாதங்களை உங்களால் எண்ணக்கூடாது; ஏனெனில் அவைகள் புத்துணர்ச்சியூட்டும மழைத்துளிகளிலும் அதிகமாமே. கிருபையின் மேகங்கள் உங்கள்மீது அசைவாடிக் கொண்டிருக்கின்றன, உங்கள்மீது பொழிய ஆயத்தமாயிருக்கின்றன. இரட்சிப்பு எனும் விலைமதியா ஈவை நீங்கள் பாராட்டுவீர்களானால், அன்றாடப் புதுபெலனையும், இயேசுவின் பாதுகாப்பையும், அன்பையும் நீங்கள் உணருவீர்கள்; சமாதானத்தின் பாதையில் நீங்கள் நடத்தப்படுவீர்கள்.

இயற்கையிலுள்ள தேவனின் மகிமையான காரியங்களை நோக்கிப் பாருங்கள், கொடையாளருக்கான நன்றியுணர்வு உங்கள் உள்ளத்திலிருந்து புறப்பட்டுச் செல்லட்டும். மனதுக்கான பயனுள்ள பாடம் இயற்கையின் புத்தகத்தில் இருக்கிறது. நன்றியற்றவர்களாக, அக்கறையற்றவர்களாக இராதேயுங்கள். உங்கள் மனக்கண்களைத் திறவுங்கள்; இயற்கையிலுள்ள தேவனுடைய பிரமாணங்களின் அழகான ஒத்திசைவைக் கண்டு, ஆச்சரியத்தில் மூழ்கி, உங்கள் சிருஷ்டிகரும், வானத்துக்கும் பூமிக்கும் முதன்மை அதிபதியானவருக்குப் பயந்து நடுங்குங்கள். “என் மகனே, என் மகளே, உன் இருதயத்தை எனக்குத் தா,” என்று மனதுருக்கத்துடன் கூறும், அன்பினால் உங்களிடம் திரும்பும் அவரை உங்கள் விசுவாசக் கண்களால் காணுங்கள். இயேசுவுக்கு உங்களை அர்ப்பணியுங்கள், பின்பு நன்றியுள்ள இருதயங்களுடன், “என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன்,” என்று நீங்கள் கூறமுடியும். இயேசுவிலுள்ள விசுவாசமானது ஒவ்வொரு நோக்கத்துக்கும் பெலத்தையும், குணத்துக்குக் கொள்கை உறுதியையும் கொடுக்கும்.

இவ்வுலக வாழ்வில் உங்களது மகிழ்ச்சி, சமாதானம், சந்தோஷம் மற்றும் வெற்றி யாவும் தேவனில் கொள்ளும் உண்மையான, நம்பகமான விசுவாசத்தைச் சார்ந்தே அமைந்திருக்கின்றன. இந்த விசுவாசம் தேவனுடைய கற்பனைகளுக்கு உண்மையாய்க் கீழ்ப்படிவதற்கான தூண்டுதலை அளிக்கும். தேவனிலுள்ள உங்கள அறிவும் விசுவாசமும் ஒவ்வொரு தீய பழக்கத்திற்கு எதிரான பலத்தத் தடுப்புக் காப்பாகவும், சகல நன்மைக்குமான சிறப்புக்கூறாகவும் இருக்கிறது.

உங்கள் பாவங்களை மன்னிக்கிற, உங்களுக்காக ஆயத்தம்பண்ணச் சென்றிருக்கிற வாசஸ்தலங்களில் உங்களை மகிழ்ச்சியாக வைக்க

விரும்புகிற இயேசுவில் விசுவாசமாயிருங்கள். நித்திய ஜீவனையும், ஒரு மகிமையின் கிரீடத்தையும் பெற்றிட, அவரது பிரசன்னத்தில் நீங்கள் வாழ்ந்திட அவர் விரும்புகிறார்.—The Youth's Instructor, January 5, 1887.

## 139

# நட்பின் செல்வாக்கு

வாலிபர்கள் நண்பர்களை உடையவர்களாயிருப்பது தவிர்க்க முடியாதது, அவர்களது செல்வாக்கை அவர்கள் நிச்சயமாக உணருவார்கள். ஆத்துமாக்களை ஒன்றாக இணைக்கிற மறைவடக்கமான பிணைப்புகள் இருக்கின்றன, அதனாலேயே ஒருவரின் இருதயமானது அடுத்தவரின் இருதயத்துக்குப் பதிலளிக்கிறது. ஒருவர் மற்றொருவரின் கருத்துக்களையும், உணர்ச்சிக் கனிவுகளையும், மனநிலையையும் புரிந்துகொள்ளுகிறார். இந்த நட்பு ஆசீர்வாதமாகவோ அல்லது சாபமாகவோ விளங்கலாம். வாலிபர்கள், நடத்தையிலும், மனநிலையிலும், அறிவிலும் மேம்படுவதற்கு, ஒருவருக்கொருவர் உதவிசெய்து, பெலப்படுத்திக்கொள்ளலாம்; அல்லது அக்கறையும், அவிசுவாசமும் அற்றவர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்வதற்கு அனுமதிப்பதினால், ஒழுக்கச் சீர்கேடடையச்செய்கிற ஒரு செல்வாக்கை அவர்கள் உண்டுபண்ணலாம்.

நண்பர்களைத் தெரிந்துகொள்ளும் காரியம் என்பது மாணவர்கள் மிகவும் கருத்தாகச் சிந்தித்துக் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். நமது பள்ளிகளுக்கு வருகிற வாலிபர்கள் மத்தியில், தேவனைப் பிரியப்படுத்தி, தங்களது ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிய நாடுகிறவர்கள் மற்றும் அக்கிரமத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறவர்கள் என்று இரு வகுப்பினர்கள் எப்பொழுதும் இருப்பார்கள். வாலிபர்கள் தீமை செய்வதற்குத் திரளான பேருடன் செல்வார்களானால், அவர்களது செல்வாக்கானது ஆத்துமாக்களின் எதிரியானவனின் பக்கத்தில் வீசப்படும்; அலைவுறாத விசுவாசத்தின் கொள்கைகளைக் கொண்டிராதவர்களை அவர்கள தவறாக வழிநடத்துவார்கள்.

“உன் தோழனை எனக்குக் காண்பி, உன் குணத்தை நான் உனக்குக் காட்டுவேன்” என்பது மெய்யான வாசகமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. தங்களது நண்பர்களைத் தெரிந்தெடுக்கும்போது, தங்கள் குணமும், நற்பெயரும் எளிதில் கண்டுணரக்கூடிய அளவுக்குப் பெரிதாகப் பாதிக்கப்படுகின்றன என்பதை வாலிபர்கள் உணரத் தவறிவிடுகின்றனர்.

எவர்களுடைய விருப்பங்களும், பழக்கங்களும், செயல்களும் மனதுக்கு உகந்தவைகளாக இருக்கின்றனவோ, அவர்களின் தோழமையையே ஒருவர் நாடுகிறார். ஞானமுள்ளவர்கள் மற்றும் நல்லவர்களுக்குப் பதிலாகப் படிப்பில்லாத, ஒழுக்கச் சீர்கேடுள்ளவர்களின் கூட்டுறவுக்கு முன்னுரிமை அளிக்கிறவன், தனது சொந்தக் குணம் குறைபாடுள்ளது என்பதைக் காட்டுகிறான். அவனது விருப்பங்களும், பழக்கங்களும் தான் நாடுகிற நண்பர்கூட்டத்தின் விருப்பங்கள் மற்றும் பழக்கங்களிலிருந்து முற்றிலும் வித்தியாசப்பட்டதாக ஆரம்பத்தில் இருக்கலாம்; ஆனால் இந்த வகுப்பினருடன் அவன் சேரச்சேர, அவனது எண்ண்ங்களும், உணர்ச்சிகளும் மாறுகின்றன; சரியான கொள்கைகளை அவன் தியாகம் செய்கிறான், உணரமுடியாதபடி அதே நேரம் தவிர்க்கமுடியாதபடி தனது நண்பர்களின் நிலைக்கு அவன் மூழ்கிவிடுகிறான். ஒரு நீரோடையானது அது நெடுக ஓடும் நிலத்திலுள்ள பொருட்களுடன் எப்பொழுதும் தொடர்பில் வருவதுபோல, வாலிபர்களின் கொள்கைகளும், பழக்கங்களும் தாங்கள் பழகுகிற கூட்டத்தாரின் குணத்துடன் மாறாமல் ஒன்றரக் கலந்துவிடுகின்றன...

## பெலத்தின் அளவு

குணத்தின் பெலன் என்பது சித்தத்தின் வல்லமை மற்றும் தன்னடக்கத்தின் வல்லமை—ஆகிய இரு காரியங்களால் ஆனது. பலமான, தடைகட்டப்படாத உணர்ச்சியைக் குணத்தின் பெலன் என்று அநேக வாலிபர்கள் தவறாகப் புரிந்திருக்கின்றனர்; ஆனாலும், தனது உணர்ச்சிகளால் அடக்கப்படுகிறவன் பெலவீனன் என்பதே உண்மையாகும். மனிதனின் உண்மையான மேன்மை மற்றும் உயர்தனித்தன்மையானது, அவனை அடக்குகிற அவனது உணர்ச்சிகளின் வல்லமையால் அல்ல, அவனுடைய உணர்ச்சிகளை அடக்குகிற அவனது வல்லமையால் அளக்கப்படுகிறது. அவதூறினால் புண்படுகிற அதேவேளையில், தனது கோப உணர்ச்சியைத் தடுத்து, தன் எதிரிகளை மன்னிக்கிறவனே மிகவும் பலம்வாய்ந்த மனிதன் ஆவான்.

தேவன் நமக்கு அறிவார்ந்த, ஒழுக்கஞ்சார்ந்த வல்லமையைக் கொடுத்திருக்கிறார்; ஆனால் பெரும்பாலும் அவரவரே தம்தம் குணத்துக்கான சிற்பாச்சாரியாக இருக்கிறார். ஒவ்வொரு நாளும் கட்டுமான அமைப்பானது பூரணத்தை நோக்கி மிக அதிகமாக நெருங்கி வருகிறது. நாம் எப்படிக் கட்டுகிறோம் என்று கவனிக்கவும், நமது கட்டிடம் நித்திய கன்மலையின்மீது அஸ்திபாரம் போடப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவும் தேவனுடைய வார்த்தை நம்மை எச்சரிக்கிறது. நமது வேலைப்பாடானது இருக்கிறபடியே வெளிப்படப்போகிற காலம் வந்துகொண்டிருக்கிறது. இவ்வுலக வாழ்வு மற்றும் இனிவரும் மேன்மையான வாழ்வின் பயன்பாட்டிற்காகக் குணங்களை

அமைத்துக்கொள்ளும்வண்ணம், தேவன் அவர்களுக்குத் தந்திருக்கிற வல்லமைகளை அனைவரும் வளர்த்துக்கொள்ள வேண்டிய காலம் இதுவே ஆகும்.

தனிப்பட்ட இரட்சகராகக் கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசமானது குணத்திற்குப் பெலனையும், ஸ்திரத்தன்மையையும் கொடுக்கும். கிறிஸ்துவில் உண்மையான விசுவாசம் கொண்டிருப்பவர்கள், தேவனுடைய கண்கள் தங்கள்மீது இருக்கிறது, சகல மனிதருக்கும் நீதிபதியானவர் சன்மார்க்கத் தகுதியை நிறுத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதையும், என்ன விதமான குணம் வளர்ச்சியடைந்து வருகிறது என்று காண்பதற்குப் பரலோக அறிவுஜீவிகள் விழிப்புடன் இருக்கின்றனர் என்பதையும் நினைவில் கொண்டவர்களாக, தெளிந்த புத்தியுடன் இருப்பார்கள்.

வாலிபர்களால் மாபெரும் தவறுகள் இழைக்கப்படுவதற்கான காரணம்—அவர்களைக் காட்டிலும் நெடுநாள் வாழ்ந்திருக்கிறவர்களின் அனுபவத்திலிருந்து அவர்கள் கற்றுக்கொள்ளாததே ஆகும். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் போதனை மற்றும் எச்சரிக்கைகளை, மாணவர்கள் விளையாட்டாகவோ அல்லது பரியாசமாகவோ எண்ணிக் கவனத்தைத் திருப்பிக்கொள்ளக்கூடாது. எந்த மனிதரும் கொடுக்கிறதைக் காட்டிலும் மிக ஆழமான போதனையின் தேவையை அவர்கள் உணருகிற அதேவேளையில், ஒவ்வொரு பாடத்தையும் அவர்கள் பேணிப் பாதுகாக்க வேண்டும். விசுவாசத்தினால் கிறிஸ்துவானவர் உள்ளத்தில் வாசம்பண்ணும்போது, அவரது ஆவியானது ஆத்துமாவைச் சுத்திகரிக்கிற, உயிரூட்டுகிற ஒரு வல்லமையாக மாறுகிறது. இருதயத்திலுள்ள சத்தியமானது வாழ்வின்மீது ஓரு சீர்ப்படுத்துகிற செல்வாக்கைக் கொண்டுவருவதில் தோல்வியடையாது...

தங்கள் இல்லங்களிலிருந்து, தங்கள் பெற்றோர்களின் நேரடி செல்வாக்கின்கீழ் இல்லாமல், தொலைவிலிருக்கிற மாணவர்கள், தங்களது பரமபிதாவின் கண்கள் தங்கள்மீது இருக்கிறதை நினைப்பார்களாக. அவர் வாலிபர்களை நேசிக்கிறார். அவர்களது தேவைகளை அவர் அறிந்திருக்கிறார். அவர்களது சோதனைகளை அவர் புரிந்திருக்கிறார். மாபெரும் சாத்தியக்கூறுகளை அவர்களில் அவர் காண்கிறார், அவர்கள் தங்களது தேவையை உணர்ந்து, உதவிக்காக அவரை நாடுவார்களானால், உன்னதமான தரத்தை அடைய அவர்களுக்கு உதவ அவர் ஆயத்தமாயிருக்கிறார்.

மாணவர்களே, இரவும் பகலும் உங்கள் பெற்றோர்களின் ஜெபங்கள் உங்கள் சார்பாக தேவனிடத்தில் எழும்பிக் கொண்டிருக்கின்றன; நாளுக்கு நாள் அவர்களது அன்பின் அக்கறை உங்களைப் பின்தொடர்கிறது. அவர்களது கெஞ்சுதல்களையும், எச்சரிக்கைகளையும் கவனித்து, உங்களைச்

சூழ்ந்திருக்கிற தீமைக்கு மேலாக உங்கள் வல்லமையின்படி உங்களையே நீங்கள் உயர்த்திக் கொள்வதற்கு உறுதியாகத் தீர்மானியுங்கள். உங்கள் மனங்களையும், பழக்கங்களையும் சீர்கெடுக்கவும், உங்களுக்குள் தவறான கொள்கைகளை வளர்க்கவும் எதிரியானவன் எவ்வளவு நயவஞ்சகமாகக் கிரியை செய்வான் என்பதை உங்களால் பகுத்தறிய முடியாது.

வேடிக்கைப்பேச்சு மற்றும் சிற்றின்பத் தேடலில் முதல் அடி எடுத்துவைப்பதால் எந்தவித உண்மையான அபாயத்தையும் நீங்கள் காணாதிருக்கலாம், நீங்கள் உங்கள் போக்கை மாற்றிக்கொள்ள விரும்பும்போது, முன்பு நீங்கள் தவறு செய்வதற்கு இணங்கினதுபோல எளிதாகச் சரியானதைச் செய்வதற்கு உங்களால் முடியும் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது தவறான கருத்து ஆகும். தீய நண்பர்களைத் தெரிவு செய்ததால், அநேகர் படிப்படியாக நல்லொழுக்கத்தின் பாதையிலிருந்து, தாங்கள் மூழ்கிப்போவது இயலாத காரியம் என்று ஒருகாலத்தில் அவர்கள் நினைத்திருந்த கீழ்ப்படியாமை மற்றும் ஒழுக்கங்கெட்ட வாழ்வின் ஆழங்களுக்குள் வழிநடத்தப்பட்டிருக்கின்றனர்.

சோதனைக்கு இணங்கும் மாணவன் நன்மைக்கான தனது செல்வாக்கைப் பெலவீனப்படுத்துகிறான்; தனது தவறான போக்கினால் எவனொருவன் ஆத்துமாக்களின் எதிராளியானவனுக்கு ஏதுகரம் ஆகிறானோ, அவன் மற்றவர்களின் பாதையில் முட்டுக்கட்டைகளை வைப்பதில் அவன் செயலாற்றியிருந்த பங்குக்காகத் தேவனுக்குக் கணக்கொப்பபுவிக்க வேண்டும். மாபெரும் பின்மாற்றக்காரனுடன் மாணவர்கள் ஏன் தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும்? மற்றவர்களைச் சோதிக்கும்படி அவர்கள் ஏன் அவனது கருவிகளாக வேண்டும்? அதற்கு மாறாக, தங்கள் சக மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஊக்கப்படுத்தி, உதவி செய்வதற்கு அவர்கள் ஏன் படிக்கக் கூடாது? சோர்வுட்டும் விதத்தில் சாத்தான் கொண்டுவரும் பளுவான, அழுத்துகிறதுமான குழப்பங்களைச் சந்திக்கவும், பாரங்களைச் சுமக்கவும் தங்கள் ஆசிரியர்களுக்கு உதவுவது அவர்களது சிலாக்கியம் ஆகும். பயனளிக்கிற, மனமகிழ்ச்சியூட்டுகிற ஒரு சூழலை அவர்கள் உருவாக்கலாம். ஒவ்வொரு மாணவனும் ஒழுங்கு, சுறுசுறுப்பான உழைப்பு மற்றும் கீழ்ப்படிதலுக்கான மதிப்பை அளித்து, நன்மையும், மேன்மையும் அளிக்கிறதான அனைத்துக்கும் மாபெரும் எதிரியானவனுக்குத் தனது திறமை அல்லது செல்வாக்கில் அணு அளவு கொடுப்பதற்கும் மறுத்து, கிறிஸ்துவின் பக்கம் நின்றிருந்ததை நினைத்து அவன் மகிழலாம்.

சத்தியத்துக்காக உணர்வுள்ள மதிப்பும், கடமைக்காக உண்மை யான கொள்கையும் கொண்டுள்ள மாணவன் கிறிஸ்துவுக்காகத் தனது

சகமாணவர்களை ஏவியெழுப்புகிறதை அதிகமாகச் சாதிக்கலாம். இரட்சகருடன் கட்டப்பட்டிருக்கிற வாலிபர்கள் அடங்காதவர்களாக இருக்க மாட்டார்கள்; அவர்கள் தங்கள் சுய மகிழ்வையும், திருப்தியையும் ஆராய்ந்து கொண்டிருக்க மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் ஆவியில் கிறிஸ்துவுடன் ஒருமித்திருக்கின்றனர், செயலிலும் கிறிஸ்துவுடன் ஒருமித்திருப்பார்கள். நமது பள்ளிகளிலுள்ள மூத்த மாணவர்கள், இளைய மாணவர்களின் பழக்கங்களையும், செயல்பாடுகளையும் பக்குவப்படுத்துவது தங்களுடைய சக்திக்குட்பட்டிருக்கிறதை நினைவுகூரவேண்டும்; ஒவ்வொரு வாய்ப்பையும் நன்கு பயன்படுத்திக்கொள்ள அவர்கள் முயலவேண்டும். இத்தகைய மாணவர்கள் தங்களுடைய செல்வாக்கின்மூலம் தங்களது நண்பர்களை எதிராளியின் கரங்களுக்குள் காட்டிக்கொடுக்காதிருக்கத் தீர்மானிப்பார்களாக.

தம்மில் நம்பிக்கைகொள்ளுகிற யாவருக்கும் இயேசு சகாயராக இருப்பார். கிறிஸ்துவுடன் இணைந்திருக்கிறவர்கள் மகிழ்ச்சியைத் தங்கள் வசம் வைத்திருக்கின்றனர். தங்களது இரட்சகரினிமித்தம் மாம்சத்தையும் அதின் ஆசைகளையும், இச்சைகளையும் சிலுவையிலறைந்து, அவர் நடத்துகிற பாதையில் அவர்கள் செல்கின்றனர். கிறிஸ்துவின்மீது தங்களது நம்பிக்கையார்வங்களை கட்டியெழுப்பியிருக்கின்றனர், பூமியின் புயல்கள் உறுதியான அஸ்திபாரத்திலிருந்து அவர்களை அடித்துச்செல்வதற்குச் சக்தியற்றதாயிருக்கின்றன.

## நம்பகமும் விசுவாசமுமானவர்கள்

வாலிப ஆண்களே, பெண்களே, எல்லா சந்தர்ப்ப சூழ்நிலைகளின்கீழும் நீங்கள் உண்மைக்காக நிற்பதற்கு நம்பகமும் விசுவாசமுமானவர்களாக, ஆயத்தமும், உறுதியுமுள்ளவர்களாக இருப்பீர்களா என்று தீர்மானிப்பது உங்களிடமே விடப்பட்டிருக்கிறது. சரியான பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படியானால், ஒழுக்கநெறிகளில் மாறாதிருக்கிற, நன்மைக்கேதுவான நோக்கங் கொண்டிருக்கிறவர்களின் தோழமையை நாடுங்கள். உங்கள் குணத்திலிருந்து ஒவ்வொரு குறையையும் நீங்கள் அகற்றிப்போடும்படிக்குக் கிருபையின் அருமையான மணிநேரங்கள் அருளப்பட்டிருக்கின்றன; வருங்கால வாழ்வை நீங்கள் அடையவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, இவ்வாழ்விலும் நீங்கள் பயனுள்ளவர்களாக இருக்க வேண்டுமம் என்பதற்காக, இதைச் செய்யும்படி நீங்கள் நாடவேண்டும். ஒரு நல்ல குணம் என்பது பொன் அல்லது வெள்ளியைவிடவும் அதிகமதிப்பு வாய்ந்த மூலதனம் ஆகும். திகில்கள் அல்லது தோல்விகளினால் அது பாதிக்கப்படுகிறதில்லை, பூமியின் சம்பத்துக்கள் அடித்துச் செல்லப்படும் அந்த நாளில், அது வளமான ஆதாயங்களைக்கொண்டுவரும். நேர்மை,

உறுதி, விடாமுயற்சி ஆகிய குணங்களை வளர்ப்பதற்கு அனைவரும் ஆவலுடன் வகைதேடவேண்டும்; அவைகளைப் பெற்றிருப்பவருக்கு—எதிர்த்துநிற்கக்கூடாத ஒரு வல்லமையை—நன்மை செய்வதற்கும், தீமைக்கு எதிர்த்துநிற்பதற்கும், துன்பத்தைச் சகிப்பதற்கும் அவரைப் பெலப்படுத்துகிற ஒரு வல்லமையை அவைகள் உடுத்துவிக்கும்.

சத்தியத்துக்கான பிரியம், தேவனை மகிமைப்படுத்துவதற்கான ஒரு பொறுப்புணர்வு ஆகியவை அறிவாற்றலின் வளர்ச்சிக்கான தூண்டுதல்களிலெல்லாம் மிகவும் வல்லமையுள்ளவைகளாக இருக்கின்றன. செயல்பாட்டுக்கான இவ்வித உந்துவிசையைப் பெற்றுள்ள மாணவன் ஒரு பெறுப்பற்றவனாக இருக்கமாட்டான். அவன் எப்பொழுதும் அக்கறை மிக்கவனாக இருப்பான். தனக்குக் கற்பிக்கும் பணியில் முழுப் பரலோகமும் ஈடுபட்டிருக்கிறது என்பதை அறிந்தவனாக, தேவனுடைய கண்காணிப்பின்கீழ் அவன் கற்றுக்கொள்வான். உயர்தரசிந்தையும், தாராள மனமும், இரக்கமும், மற்றவரின் உணர்ச்சிகளை மதிக்கிற பண்பும் கொண்டவனாக, கிறிஸ்துவைப் போன்றவனாக, திறமையுள்ளவனாக அவன் மாறுவான். இருதயமும் சிந்தையும் தேவசித்தத்துக்கு இசைவாகச் செயல்படும்.—Counsels to Teachers, Parents, and Students, pp. 220–226.

## 140

# செல்வாக்கு

கிறிஸ்துவின் ஜீவியமானது என்றும் விரிந்துபரந்திருக்கும் எல்லையற்ற ஒரு செல்வாக்காக இருந்தது. இந்த செல்வாக்கானது தேவனோடும் முழு மானிடக் குடும்பத்தோடும் அவரை இணைத்து கட்டிவைத்திருந்தது. கிறிஸ்துவின்மூலமாக தேவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கும் செல்வாக்கு அவன் தனக்காக வாழ்வதை இயலாத காரியமாகச் செய்துவிடுகிறது. தேவனுடைய அந்த மாபெரும் முழுமையின் ஒரு பகுதியாக, நாம் ஒவ்வொருவரும் நமது உடன் மனிதர்களுடன் தொடர்புகொண்டவர்களாக இருக்கின்றோம். உடன் மனிதர்களைவிட்டு எவராலும் தனித்து வாழமுடியாது. ஒவ்வொருவருடைய சுகசௌகரியமான வாழ்க்கையும் மற்றவர்களைத் தொடுகிறது. மற்றவர்களுடைய வாழ்விற்கு நாம் அவசியமானவர்களென்றும். நாம் அவர்களது மகிழ்ச்சியை மேம்படுத்த வகைதேடவேண்டுமென்றும், ஒவ்வொருவரும் எண்ணவேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது.

ஒவ்வொரு ஆத்துமாவும் அதற்கேயுரிய சூழ்நிலையால் வளைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலை ஒருவேளை விசுவாசத்தின் ஜீவன் கொடுக்கும் வல்லமையாலும் தைரியம், நம்பிக்கை, மற்றும் அன்பெனும் இனிய நறுமணத்தாலும் நிரப்பப்பட்டிருக்கலாம். அல்லது அதிருப்தி, தன்னலம் ஆகிய இருளினாலும் நெஞ்சாரப் பேணி நடப்பிக்கின்ற சாவுக்கேதுவான கறையென்னும் பாவத்தாலும் நிறைந்து கனத்து, குளிர்ந்துபோயிருக்கலாம். சுற்றியிருக்கும் சூழ்நிலையினால் நாம் தொடர்புகொள்ளும் ஒவ்வொருவர் மூலமாகவும் நாம் அறிந்தோ அறியாமலோ பாதிக்கப்படுகிறோம்.

## நமது பொறுப்பு

இந்தப் பொறுப்பினின்று நாம் நம்மை விடுவித்துக்கொள்ள இயலாது. நமது வார்த்தைகள், நமது செயல்கள், நமது உடை, நடவடிக்கைகள், பாவனைகள், நமது முகபாவங்கள் ஆகியவைகளுக்கும் மற்றவர்களை பாதிக்கக்கூடிய செல்வாக்குண்டு. இவ்வாறு மனதில் பதியும் எண்ணங்களில் எந்த மனிதனும் அளவிடமுடியாத அளவிற்கு நன்மையான அல்லது தீமையான விளைவுகள் ஏற்படலாம். ஒவ்வொரு கணநேர தூண்டுதல் தெரிவிக்கும் செய்தியானது விதைக்கப்பட்ட விதையாக அதற்கேயுரிய அறுவடையைக் கொண்டுவரும். நீண்ட சங்கிலிபோன்ற மானிட சம்பவங்களால் இது ஒரு கண்ணியாக இருக்கிறது. இது எம்மட்டும் விரிந்துசெல்லுமென்று நமக்குத் தெரியாது. நல்ல கொள்கைகளை மேம்படுத்துவதில் நமது முன்மாதிரியில் நாம் மற்றவர்களுக்கு உதவிசெய்யும்போது, நற்காரியங்களை செய்வதற்கான வல்லமையை நாம் அவர்களுக்குக் கொடுக்கிறோம். அவர்கள் தங்கள் பங்கிற்கு அதே செல்வாக்கை மற்றவர்கள்மீதும், இவ்வாறு செல்வாக்கை பெற்றவர்கள் இன்னும் வேறு பலர்மீதும் அதே தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள். இவ்வாறு நாம் அறியாமலேயே நமது செல்வாக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைகிறது.

ஒரு கூழாங்கல்லை எடுத்து ஏரியின்மீது எறியுங்கள். ஒரு அலை உருவாகின்றது; மற்றுமொரு அலையும் பின்னர் மற்றுமொரு அலையும் உருவாகின்றது. அந்த அலைகள் அதிகரிக்கும் போது, வட்டமானது கரையைத்தொடும்போது விரிவடைகிறது. நமது செல்வாக்கும் இப்படியே வேலைசெய்கிறது. நமது அறிவிற்கும் அல்லது நமது கட்டுப்பாட்டிற்கும் அப்பால் மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தையோ சாபத்தையோ அது கொண்டுவருகிறது.

நமது குணம் சக்திவாய்ந்ததாக இருக்கிறது. ஒரு உண்மையான —சுயநலமற்ற—தேவபயமுள்ள—வாழ்க்கையின் அமைதியான சாட்சி

ஏறக்குறைய தடுக்கமுடியாத ஒரு செல்வாக்கை உடையதாக இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் குணத்தை நமது வாழ்வில் வெளிப்படுத்துவதின்மூலம், பிற ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் வேலையில் அவரோடு ஒத்துழைக்கிறோம்.

நமது செல்வாக்கின் எல்லை எவ்வளவு விரிவாக இருக்கின்றதோ அதற்கேற்றபடி அதிகமான நன்மைகளை நாம் செய்யலாம். தேவனுக்கு சேவைசெய்கிறோமென்று கூறுபவர்கள் கிறிஸ்துவின் முன்மாதிரியை பின்பற்றும்போது, அவர்களது அன்றாட வாழ்விலே பிரமாணத்தின் கொள்கைகளை செயற்படுத்தும்போது, அவர்கள் தேவனை மிகவும் அதிகமாக நேசிக்கிறார்களென்றும், தங்களது அண்டை அயலகத்தாரை தங்களைப்போலவே நேசிக்கிறார்களென்றும், அவர்களது ஒவ்வொரு செயலும் சாட்சிபகருமானால் அப்பொழுது உலகத்தையே அசைக்கும் வல்லமையை சபை பெற்றிருக்கும்.—Christ's Object Lessons, pp. 339, 340.

## 141

# நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல்

நமது ஆவிக்குரிய முன்னேற்றத்துக்கு மிகவும் சாதகமான நட்புறவை நாம் தெரிந்துகொண்டு, அடையக்கூடிய நமது எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு உதவியையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; ஏனெனில் பரலோகம் நோக்கிய நமது பயணத்தை எவ்வளவு கடினமாகக் இயலுமோ அவ்வளவுக்குச் சாத்தான் அநேக இடைஞ்சல்களை எதிராக வைப்பான். சோதனையான சூழ்நிலைகளில் நாம் வைக்கப்படுவோம்; அநேகர் தாங்கள் விரும்புகிறபடியான சுற்றுசூழல்களைப் பெற்றுவிடமுடியாது. ஆனால் கிறிஸ்தவ குணத்தின் உருவாக்கத்துக்கு சாதகமற்றதாயிருக்கிற செல்வாக்குகளுக்கு நம்மை நாமே மனமாரத் திறந்துகொடுத்துவிடக் கூடாது. இதைச் செய்வதற்குக் கடமையுணர்வு நம்மை அழைக்கும்போது, கிறிஸ்துவின் கிருபையின் மூலமாக நாம் சீர்கெடாதவர்களாக நிற்கும்படிக்கு. இருமடங்கு விழிப்புள்ளவர்களாக ஜெபிக்கிறவர்களாக நாம் இருக்கவேண்டும்.

லோத்து சோதோமைக் குடியிருக்கும் இடமாகத் தெரிந்துகொண்டான், ஏனெனில் தன்னையும், தன் குடும்பத்தையும் சூழ்ந்திருக்கப்போகிற சன்மார்க்கச் செல்வாக்குகளைவிடவும் தான் அடையவிரும்பிய பூமிக்குரிய நன்மைகளையே அவன் அதிகமாக நோக்கிப்பார்த்தான். இவ்வுலகத்தின் பொருட்கள் என்பதைப் பொறுத்தமட்டில், அவன் அடைந்தது என்ன?

அவனது உடைமைகள் அழிக்கப்பட்டன. அவனது பிள்ளைகளில் சிலர் அந்த துன்மார்க்க பட்டணத்தின் அழிவில் அழிந்துபோனார்கள். அவன் மனைவி வழியிலே உப்புத்தூண் ஆனாள், அவனும் "அக்கினியிலகப்பட்டுத்" தப்பினவன் போலிருந்தான். அவனது சுயநலமான தெரிந்தெடுப்பின் தீமையான விளைவுகள் இத்துடன் முடிந்துவிடவில்லை; மாறாக, அவ்விடத்தின் ஒழுக்கச் சீர்கேடானது, அவனது பிள்ளைகளின் குணத்துடன் நயமாகப் பின்னிப் பிணைந்திருந்தது; அதனால் அவர்கள் நன்மைக்கு தீமைக்கும், பாவத்துக்கும் நீதிக்கும் இடையிலான வித்தியாசத்தைப் பிரித்துணர முடியாமற்போயிற்று. —The Signs of the Times, May 29, 1884.

## 142

# பொற்சட்டம்

மற்றவர்களோடு உங்களுக்கிருக்கும் தொடர்பிலே, உங்களை அவர் களுடைய இடத்தில் வைத்துப்பாருங்கள். அவர்களுடைய எண்ணங்கள், அவர்களுடைய பிரச்சனைகள், அவர்களுடைய ஏமாற்றங்கள், அவர்களுடைய சந்தோஷங்கள், அவர்களுடைய துக்கங்கள் ஆகியவைகளுக்குள் நுழைந்து பாருங்கள். அவர்களோடு உங்களை ஒன்றாகவைத்து எண்ணிப்பாருங்கள். அவர்கள் உங்களுக்கு எப்படிச்செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதின்படி, நீங்கள் அவர்களோடு இடம்மாற்றிக்கொள்வது போன்று நினைத்து, அவர்களுக்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யுங்கள். நேர்மையின் உண்மையான சட்டம் இதுவே. இது, "...உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக..." (மத்தேயு 22:39) என்ற பிரமாணத்தின் இன்னொரு விளக்கமாகும்; தீர்க்கதரிசிகளுடைய போதனையின் மூலப்பொருளாகும்.; இது பரலோகத்தின் ஒரு கொள்கையாகும்; மேலும், அந்த பரிசுத்த கூட்டுறவிற்குத் தகுதியாக்கப்படுகிற அனைவராலும் விருத்திசெய்யப்படும்.

உண்மையான இணக்கமுள்ள பண்பே (மரியாதை) பொற்சட்டமென்னும் கொள்கையாகும். இயேசுவின் வாழ்க்கை மற்றும் அவரது குணநலன்களிலே அதிக உண்மையான விளக்கம் காணப்படுகிறது. நமது மீட்பரின் அன்றாட வாழ்க்கையிலே ஆ! எத்தகைய மென்மையும் அழகும் மிளிர்ந்தது. எத்தகைய இனிமை அவரது பிரசன்னத்தில்மாத்திரமே பாய்ந்தோடியது! அவரது பிள்ளைகளிலே அதே குணம் வெளிப்படும். யாரிடத்தில் கிறிஸ்து வாசஞ்செய்கின்றாரோ அவர்களை ஒரு தெய்வீகச் சூழ்நிலை சூழ்ந்திருக்கும். தூய்மையென்னும் அவர்களது வெண்

வஸ்திரங்கள் ஆண்டவரின் தோட்டத்திலுள்ள சுகந்த வாசனையினால் மணம் வீசும். அவரினின்று வருகிற ஒளியை அவர்களது முகங்கள் பிரதிபலித்து, தடுமாறுகின்ற—களைத்துப்போன பாதங்களுக்கு உதவும்படி வழியை பிரகாசத்தால் நிறைக்கும்.

எந்த ஒரு நபருக்கு எத்தகைய குணநலன்களால் ஒரு பூரணமான குணம் உருவாகின்றது என்பதுபற்றிய தெளிவான குறிக்கோள் இல்லையோ, அவர் கிறிஸ்துவின் மென்மையையும் பரிவையும் வெளிப்படுத்தத் தவறிவிடுகிறார். கிருபையின் செல்வாக்கினால், இருதயம் மென்மையடைந்து, உணர்வுகள் தூய்மையடைந்து, சுத்திகரிக்கப்படுகின்றது. பரலோகத்தில் பிறந்த நேர்த்தியையும் நேர்மையின் உணர்வையும் கிருபையின் செல்வாக்கு கொடுக்கின்றது.—Thoughts from the Mount of Blessing, pp. 134, 135.

## 143

# மெய்யான பண்புமிக்க நடத்தை

ஒவ்வொரு மனிதனின் உரிமைகளையும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று கர்த்தராகிய இயேசு கட்டளையிடுகிறார். மனிதர்களின் சமுதாய உரிமைகளும், கிறிஸ்தவர்களாக அவர்களது உரிமைகளும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய குமாரர்கள் மற்றும் குமாரத்திகளாக அனைவரும் பண்புடனும், நாகரீகத்துடனும் நடத்தப்பட வேண்டும்.

கிறிஸ்தவம் ஒரு மனிதனைப் பண்பாளனாக ஆக்கும். கிறிஸ்து தம்மைத் துன்புறுத்துவோரிடத்திலும் மரியாதைப்பண்புடன் நடந்துகொண்டார்; அவரது மெய்யான பின்னடியார்களும் அதே ஆவியை வெளிக்காட்டுவார்கள். அதிபதிகளுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்ட பவுலை நோக்கிப்பாருங்கள். அகிரிப்பாவுக்கு முன்பாக அவனது பேச்சு, மெய்யான மரியாதைப் பண்புக்கும், நம்பவைக்கும் பேச்சாற்றலுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. உலகத்தின் நடைமுறையிலுள்ள உள்ளுணர்ச்சியற்ற பண்பைச் சுவிசேஷமானது ஊக்கப்படுத்தவில்லை; மாறாக, உள்ளத்தின் உண்மையான இரக்கத்தன்மையிலிருந்து ஊற்றெடுக்கிற மரியாதைப்பண்பையே அது ஊக்கப்படுத்துகிறது.

எரிச்சல், கனிவற்ற கண்டனம் மற்றும் அழகற்ற பேச்சு ஆகிய அனைத்தையும் வெளியே தள்ளுவதற்கு, வாழ்வின் புறத்தோற்றமான ஒழுங்குமுறைகளை மிகக் கவனமாக வளர்ப்பது மட்டும் போதாது. சுயம் முதன்மைப் பொருளாகக் கருதப்படுகிறவரைக்கும் மெய்யான

பண்புமிகக் நடத்தையை ஒருபோதும் வெளிப்படுத்த முடியாது. உள்ளத்தில் அன்பு குடிகொள்ள வேண்டும். ஒரு முழுமையான கிறிஸ்தவன் தனது எஜமானுக்கான ஆழமான இருதய அன்பிலிருந்து தனது செயலுக்கான உள்நோக்கங்களைப் பெற்றுக்கொள்ளுகிறான். கிறிஸ்துவுக்கான அவனது பாச உணர்ச்சியின் வேர்களின் வழியாகத் தனது சகோதரர்களுக்கான தன்னலமற்ற அக்கறையானது புறப்பட்டு வருகிறது. அன்பானது அதை உடையவருக்கு நற்பண்பையும், ஒழுக்கத்தையும், நடத்தையில் அழகையும் அளித்திடும். அது முகத்தோற்றத்தை ஒளிப்படுத்தி, குரலைச் சாந்தப்படுத்தும்; அது முழு உயிருருவையும் பண்படுத்தி, உயர்த்தும்.—Ministry of Healing, pp. 489, 490

## மெய்யான மரியாதைப் பண்பு அவசியம்

தேவசித்தம் பற்றிய அறிவைக் கொண்டிருக்கிற ஆண்களும் பெண்களும் அவரது பணியில் வெற்றிகரமான பணியாளர்களைாவதற்குக் கற்றுக்கொள்ளவேண்டிய மாபெரும் தேவை இருக்கிறது. அவர்கள் உலகத்தாரின் வஞ்சிக்கிற புறத்தோற்றப் பூச்சும், போலிப்புன்முறுவல் செய்யும் செயற்கையான நடிப்பும் உள்ளவர்களாக இராமல், திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெற்றிருக்கக்கூடிய, பரலோக மணம் வீசுகிற பண்புமிக்க நடத்தையையும், மெய்யான மரியாதைப் பண்பையும் பெற்றவர்களாக, நேர்த்தியான, புரிந்துகொள்கிற நபர்களாக இருக்கவேண்டும். ஓய்வுநாள்—ஆசரிப்பாளர்களின் அணிவரிசைகளிலுள்ள உண்மையான பெருந்தன்மை மற்றும் கிறிஸ்தவப் பண்புமிக்க நடத்தையின் குறைபாடானது, ஒரு ஜனக்கூட்டமான நமக்கு விரோதமானதாக இருக்கிறது; நாம் அறிக்கையிடுகிற சத்தியத்தையும் கவர்ச்சியற்றதாக்குகிறது. மனதையும், பழக்கவழக்கங்களையும் பயிற்றுவிக்கிற பணியானது பூரணத்துவத்தை நோக்கிக் கொண்டுசெல்லப்பட முடியும். சத்தியத்தை வெளிப்படையாக அறிக்கையிடுகிறவர்கள், கிறிஸ்து இயேசுவில் பூரண வளர்ச்சியடைந்த புருஷர்களாக, ஸ்திரீகளாக வளர்வதற்கேதுவாகத் தங்களது சிலாக்கியங்களையும், வாய்ப்புகளையும் இப்பொழுது பயன்படுத்திக்கொள்ளவில்லை என்றால், அவர்கள் சத்தியத்துக்கும் கிறிஸ்துவுக்கும் நற்பெயர் சேர்க்கிறவர்களாக இருக்கமாட்டார்கள்.—Testimonies for the Church, Vol. 4, pp. 358, 359.

## நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல்

கிறிஸ்துவுடன் இசைந்திருக்கும் வாலிபர்கள் நீதியைச் செய்வதில் தங்களுக்கு உதவியாயிருக்கும் நண்பர்களைத் தேர்ந்தெடுப்பார்கள், நேர்மையான கொள்கைகள் மற்றும் மேன்மையான நொக்கங்களின் வளர்ச்சியில் உதவியாயிராத கூட்டுறவைத் தவிர்ப்பார்கள். கீழ்த்தரமான

மாதிரி அச்சில் வார்க்கப்பட்டிருக்கிற மனங்களைக் கொண்ட வாலிபர்களை எவ்விடங்களிலும் காணலாம். எந்தவித உள்ளடக்க மறைப்புமின்றித் தங்களைக் கிறிஸ்துவின் பக்கத்தில் வைத்திருக்கிறவர்கள், இவ்வகுப்பாருடன் தொடர்புக்குள் கொண்டுவரப்படும்போது, பகுத்தறிவும், மனச்சாட்சியும் எது சரியென்று சொல்கிறதோ, அதன்படி உறுதியாக நிற்பார்கள்.—Counsels to Teachers, Parents, and Students, p. 226.

## 144

# லௌகிகத் தொடர்புகளைப் புறக்கணித்தல்

வாலிபர்கள் தங்களது நோக்கமும், வாழ்க்கைப் பணியும் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்று மிகவும் கவனமாகச் சிந்தித்து, தங்களது பழக்கங்கள் ஒழுக்கக்கேட்டின் கறையிலிருந்து விடுபட்டதாயிருக்கும் விதத்தில் அஸ்திபாரமிட்டுக் கொள்ளவேண்டும். மற்றவர்களில் மாறுதல் உண்டுபண்ணுகிற ஒரு நிலையில் அவர்கள் நிற்க விரும்பினால், அவர்கள் தன்னம்பிக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஏரியில் இருக்கிற அல்லமலர் மேற்பரப்பிலுள்ள குப்பையையும், சகதியையும் தாண்டி ஆழத்துக்குள் தனது வேர்களைப் பற்றிப் பிடிக்கச்செய்து, தனது நுண்துளைகளையுடைய தண்டின்மூலமாகத் தனது வளர்ச்சிக்கு உதவும் உரிமைப்பொருள்களை உறிஞ்சிக்கொண்டு, தனது கறையற்ற மலரை ஏரியின் மேற்பரப்பின்மீது தூய்மையில் ஓய்வுகொள்ள வெளிச்சத்துக்குக் கொண்டுவருகிறது, தனது கறையற்ற அழகைக் களங்கப்படுத்திக் கெடுக்கும் அனைத்தையும் அது புறக்கணித்துவிடுகிறது.

அல்லி மலரிடமிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். ஒழுக்கநெறிகளைக் கறைப்படுத்தி, ஆத்துமாவின்மீது அழிவைக் கொண்டு வருகிறதற்கேதுவான செல்வாக்குகளால் சூழப்பட்டிருந்தாலும், கறை படுவதற்கு நாம் மறுத்து, தீய தொடர்பானது நமது இருதயங்களைக் கறைப்படுத்தாத இடத்தில் நம்மை வைத்துக்கொள்ளலாம். தனிப்பட்ட முறையில் வாலிபர்கள், தடுமாறாக அடிகளால் மேல்நோக்கி முன்னேறப் பிரயாசப்படுகிறவர்களின் நட்புறவைத் தேடவேண்டும். ஒவ்வொரு தீய செல்வாக்கையும் ஈர்த்துக்கொள்கிறவர்கள், சுறுசுறுப்பற்றவர்கள், ஒரு உயர்தரமான குணத்தை அடைவதற்கு ஊக்கமான விருப்பமற்றவர்கள் மற்றும் கொள்கைக்கு உண்மையாயிருக்கும் நபர்கள் என்று நம்பப்பட

முடியாதவர்களின் கூட்டுறவை அவர்கள் தவிர்க்க வேண்டும். தேவனுக்குப் பயந்து, அவரை நேசிக்கிறவர்களுடன் வாலிபர்கள் நட்புறவு கொள்ளட்டும்; இத்தகைய உயர்தரமான, உறுதியான குணங்கள், ஏரியின் மேற்பரப்பின்மீது தனது தூய மலரைத் திறந்துகொடுக்கும் அல்லிமலரினால் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றன. ஒழுக்கத்தைக் கெடுக்கிற செல்வாக்குகளினால் வனையப் படுவதற்கு அவர்கள் மறுத்து, ஒரு தூய்மையான, உயர்தரமான குணத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறவைகளை மட்டும் தங்களுக்கென்று சேர்த்துக்கொள்கின்றனர். தெய்வீக மாதிரிக்கு இசைவானவர்களாக இருக்கும்படி அவர்கள் பிரயாசப்படுகின்றனர்.—The Youth's Instructor, January 5, 1893.

## நமது வார்த்தைகள் உதவிக்கான ஓர் ஆதாரம்

கிறிஸ்தவர்கள் மத்தியில் தங்களது அருமையான அனுபவ நிகழ்ச்சிகளைக் குறித்த உரையாடல் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. பேச்சுத்திறன் எனும் தாலந்தைத் தவறாகப் பயன்படுத்துவதால் தேவனுடைய பணி முடமாக்கப்படுகிறது, தேவன் கனவீனம் பண்ணப்படுகிறார். பொறாமை, தீமைசெய்யும் நாட்டம் மற்றும் சுயநலம் உள்ளத்தில் போற்றி வளர்க்கப்படுகின்றன. உள்ளார்ந்த சீர்கேட்டை வார்த்தைகள் காட்டிவிடுகின்றன. கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற அநேகரால் தீமையை யோசித்தலும், தீமையைப் பேசுதலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமது குமாரனை உலகத்திற்கு ஒப்புக்கொடுத்தலில் வெளிக்காட்டப்பட்ட தேவனுடைய அன்பை, இரக்கத்தை, நற்குணத்தை இத்தகையவர்கள் அரிதாகவே அறிக்கையிடுவார்கள். அவர் இதை நமக்காகச் செய்திருக்கிறார், நமது அன்பும், நன்றியுணர்வும் தெரிவிக்கப்பட வேண்டாமா? நமது கிறிஸ்தவ அனுபவத்தில் நமது வார்த்தைகளை, ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்தி, உதவுவதற்கான ஓர் ஆதாரமாக ஆக்கிக்கொள்ள நாம் பிரயாசப்பட வேண்டாமா? நாம் உண்மையிலே கிறிஸ்துவை நேசிப்போமானால், நமது வார்த்தைகளால் நாம் அவரை மகிமைப்படுத்துவோம். தேவனுக்குச் செலுத்தும் நன்றியுணர்வு மற்றும் துதியின் தூய்மையான வார்த்தைகளை அவிசுவாசிகள் கவனித்துக்கேட்கும்போது, அவர்கள் அடிக்கடி உள்ளத்தில் உணர்வடைகின்றனர்.—Review and Herald, January 25, 1898.

## நமது செல்வாக்கு

கிறிஸ்தவனின் மெய்யான முன்மாதிரியும், நடத்தையும், மேலும் வார்த்தைகளும், பாவியை ஜீவ ஊற்றானவரிடம் வரவழைப்பதற்கு ஒரு வாஞ்சையைத் தட்டியெழுப்பும் விதத்தில் இருக்கவேண்டும்.—Review and Herald, November 29, 1887.

# 145

# உயர்தரமான உரையாடல்

அறிவியல்களை நன்கு கற்றுத்தேறினவர்கள் தேவனுடைய பயன்பாட்டிற்கு மிகத் திறமையான கருவிகளாக எப்பொழுதும் இருக்கிறதில்லை. புத்தகங்களின் அறிவை அடைவதில் மிகக்குறைவான அனுகூலங்களையே பெற்றிருந்து, தங்களைப் புறக்கணிக்கப்பட்டவர்களாகக் காண்கிற அநேகர் அவர்களது இடங்களை எடுத்துக்கொள்கின்றனர், ஏனெனில் பின்கூறப்பட்டவர்கள் அன்றாட வாழ்வின் பயன்பாடுகளுக்கு அவசியமாயிருக்கிற நடைமுறைக் காரியங்களின் அறிவைப் பெற்றிருக்கின்றனர்; அதேவேளையில் தங்களைக் கற்றறிந்தவர்களாகக் கருதிக் கொள்கிறவர்கள் பெரும்பாலும் கற்றுக்கொள்பவர்களாக இருப்பதற்குத் தவிர்த்துவிடுகின்றனர்; உலகம் அறிந்தவர்களிலேயே மாபெரும் ஆசிரியராக இருந்த இயேசுவால் கற்றுக்கொடுக்கப்படுவதற்கும் அப்பாற்பட்டவர்களாக, தன்னிறைவுடையவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

தேவனுடைய சித்தத்தைத் தாங்கள் அறிந்துகொள்ளும்படிக்கு வேதவாக்கியங்களை ஆழமாக ஆராய்ந்ததினால் தங்களுடைய பகுத்தறியும் நுட்பத்திறமைகளை மேம்படுத்திக்கொண்டு, வளர்ந்து விரிவடைந்திருக்கிறவர்கள் பிரயோஜனமான பொறுப்புகளில் அமருவார்கள்; தேவவார்த்தையானது அவர்களது வாழ்வு மற்றும குணத்திற்குள் பிரவேசம் செய்திருக்கிறது. கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிற, இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிற தன்னுடைய தனிச்சிறப்பான பணியை அது செய்தாக வேண்டும். தேவனுடைய வார்த்தையானது கிறிஸ்தவனுக்கு உணவாக மாறவேண்டும், அதினால் அவன் ஆவியிலும் அறிவாற்றலிலும் பெலப்பட்டு வளர்ந்து, சத்தியத்துக்காகவும் நீதிக்காகவும் போராடலாம்.

### மலிவான படித்தரங்களுக்கான காரணம்

நமது வாலிபர்கள், அனுபவ முதிர்ச்சியடைந்தவர்களும்கூட, ஏன் மிக இலகுவாக சோதனை மற்றும் பாவத்துக்குள் வழிநடத்தப்பட்டு விடுகின்றனர். தேவனுடைய வார்த்தையானது செய்யப்படவேண்டிய பிரகாரம் ஆராய்ந்து, தியானிக்கப்படாததே அதற்குரிய காரணம் ஆகும். அது சரியாக மதிக்கப்பட்டிருந்தால், தீமைசெய்வதற்கான சாத்தானின் சோதனைகளுக்கு எதிர்த்திநிற்பதற்கான உள்ளார்ந்த நேர்மையும், ஆவியில் பெலனும் பெறப்பட்டிருந்திருக்கும். தேவனுடைய புனிதமான போதனையானது

தியானத்திற்கான ஆராய்ச்சியும், பாடப்பொருளுமாக ஆக்கப்படாதபடியால், வாழ்வு மற்றும் குணத்திற்குள் ஒரு உறுதியான, தீர்மானிக்கப்பட்ட மனவலிமை கொண்டுவரப்படவில்லை. மனதைத் தூய்மையான, பரிசுத்த சிந்தனைகளுடன் தொடர்புபடுத்துவதற்கும், அசுத்தமான மற்றும் பொய்யான சிந்தனைகளிலிருந்து அதைத் திருப்பிவிடுவதற்குமான முயற்சி எடுக்கவேண்டிய பிரகாரம் எடுக்கப்படவில்லை. மரியாளைப்போல, இயேசுவின் பாதத்தில் அமர்ந்து, இருதயத்தில் சேகரித்து, அனுதினவாழ்வில் கடைபிடிக்கப்படும்வண்ணமாக, தெய்வீக ஆசிரியரிடமிருந்து மிகவும் புனிதமான பாடங்களைக் கற்றுக்கொள்கிற நல்ல பங்கானது தெரிந்து கொள்ளப்படவில்லை. பரிசுத்தக் காரியங்களின்மீதான தியானம் மனதை மேன்மைப்படுத்தி, பண்படுத்தும், கிறிஸ்தவப் பெண்மணிகளாக, பண்பாளர்களாக வளரச்செய்யும்.

எண்ணத்தினாலோ, வார்த்தையினாலோ அல்லது செயலினாலோ பூமிக்குரிய இழிவில், இச்சையில் தனது வல்லமைகளைச் சிறுமைப்படுத்துகிற நம்மில் ஒருவரையும் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். பரலோகம் ஒரு தூயதான, பரிசுத்தமான இடம்; அவர்கள் பண்பட்டு, பக்தியில் வாழ்ந்து, கழுவப்பட்டு, சுத்திகரிக்கப்படாவிட்டால், ஒருவரும் அதில் பிரவேசிப்பதில்லை. நமக்காக நாம் செய்துகொள்ள வேண்டிய பணி ஒன்று இருக்கிறது; இயேசுவிடமிருந்து பெலனைப் பெறுவதால் மட்டுமே நாம் அதைச் செய்யக்கூடும். மற்ற எல்லாப் புத்தகத்துக்கும் மேலாக வேதாகமத்தை நாம் நமது பாடமாக்க வேண்டும்; தேவனுடைய குரலாக எண்ணி, நாம் அதை நேசிக்கவும், அதற்குக் கீழ்ப்படியவும் வேண்டும். “செய்வாயாக,” மற்றும் “செய்யாதிருப்பாயாக” ஆகிய அவரது தடையுத்தரவுகளையும், எதிர்பார்ப்புகளையும் நாம் கண்டு, புரிந்துகொண்டு, தேவனுடைய வார்த்தையின் மெய்யான அர்த்தத்தை உணர்ந்திட வேண்டும்.

## பரலோக சிந்தையின் அவசியம்

தேவனுடைய வார்த்தையானது நமது ஆலோசகராக்கப்பட்டு, வெளிச்சத்துக்கான வேதவாக்கியங்களை நாம் ஆராயும்பொழுது, மனதில் உணர்த்தவும், புத்திக்கு ஒளியூட்டவும பரலோக தூதர்கள் பக்கம் வருகின்றனர்; அப்பொழுது, “உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்” (சங். 119:130) என்று மெய்யாகவே சொல்லப்பட முடியும். கிறிஸ்தவர்கள் என்று வெளிப்படையாய் அறிவிக்கும் வாலிபர்கள் மத்தியில் மிகக் குறைவான கவனம் தேவவார்த்தைக்குக் கொடுக்கப்படும்பொழுது, அதிகமான பரலோக சிந்தை வெளிக்காட்டப்படவுமில்லை என்பது ஆச்சரியப்படுவதற்கில்லை. தெய்வீக

ஆலோசனைகள் செவிமடுக்கப்படவில்லை; புத்திமதிகள் கைக்கொள்ளப் படவில்லை; கடந்தகாலப் பாவங்கள் தவிர்க்கப்பட்டு, குணத்திலிருந்து ஒவ்வொரு ஒழுக்கக்கேட்டின் கறையும் கழுவப்படும் விதத்தில், கிருபையும பரலோக ஞானமும் தேடப்படவில்லை. "உமது கட்டளைகளின் வழியை எனக்கு உணர்த்தியருளும்; அப்பொழுது உமது அதிசயங்களைத் தியானிப்பேன்" (சங். 119:27) என்பதே தாவீதின் ஜெபமாக இருந்தது.

நமது வாலிபர்கள், மேலும் வயதில் அதிகம் முதிர்ந்தவர்களின் மனங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுச் சரியான முறையில் வழிநடத்தப் பட்டிருந்தால், அவர்களது உரையாடல் உயர்தரமான கருப்பொருள்களின்மீது இருந்திருக்கும். தேவனுடைய சத்தியத்தினால் எணணங்கள் உயர்த்தப்பட்டு, மனம் தூயதாயிருக்கும்போது வார்த்தைகளும், "வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானமான" அதே தன்மையுடையவைகளாக இருக்கும். ஆனால் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள்கூட தற்போதைய ஒப்புக்கொள்ளப்பட்ட நிலை மற்றும் தற்போதைய செயல்பாடுகளுடன், மலிவான படித்தரத்தை அடைவதில் திருப்தியடைந்திருப்பதினால், உரையாடலும் இழிவானதாகவும், பயனற்றதாகவும் இருககிறது. "பூமியிலிருந்துண்டானது பூமியின் தன்மையுள்ளதாயிருக்கிறது" பரலோகத்தின் அல்லது சத்தியத்தின் நறுமணம் அதில் இல்லை; உலகத்தாரில் நன்கு பண்பட்ட வகுப்பாரின் படித்தரத்துக்கும்கூட அது ஈடாக இருப்பதில்லை.

## உறுதிவாய்ந்த பரிசுத்தமாகுதலின் நடவடிக்கை

கிறிஸ்துவும் பரலோகமும் சிந்தனையின் கருப்பொருள்களாக இருக்கும்போது, உரையாடலானது ஒரு ஆதாரமாக இருக்கும். கிருபை யினால் சாரமேறியிருக்கும், பேசுபவர் தெய்வீக ஆசிரியரின் பள்ளியில் ஒரு மனப் பண்புப்பயிற்சியைத் தான் அடைந்துகொண்டிருக்கிறார் என்பதை வெளிக்காட்டுவார். "மெய்வழியை நான் தெரிந்துகொண்டு, உம்முடைய நியாயங்களை எனக்கு முன்பாக நிறுத்தினேன்" (சங். 119:30) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். தேவனுடைய வார்த்தையை அவன் பொக்கிஷ மாக்கிக் கொண்டான். அவமதிக்கப்படுவதற்காக அல்ல, மாறாக, அவனது வாழ்வில் கடைபிடிக்கப்படுவதற்காக, அது அவனது உள்ளத்திற்குள் பிரவேசித்தது....

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும், சுயமறுப்பு மற்றும் பரிசுத்தமாகுதலின் உறுதிவாய்ந்த நடவடிக்கை உள்ளுக்குள் நடைபெற்றுக்கொண்டே இருக்கவேண்டும்; அப்பொழுது விசுவாசத்தின் இயேசு உள்ளத்தில் வசிக்கிறார் என்பதற்கு வெளிப்புறக் கிரியைகள் சாட்சிபகரும். பரிசுத்தமாகுதல், அறிவுக்கான ஆத்துமத்தின் நுழை

வாயில்களை அடைத்துவிடுவதில்லை, மாறாக, அது மனதை விரிவு படுத்தவும், புதைந்திருக்கிற பொக்கிஷத்தைப்போல, சத்தியத்தைத் தேடும்படிக்கு மனதைத் தூண்டவும் வருகிறது; தேவசித்தத்தைப்பற்றிய அறிவு, பரிசுத்தமாகுதலின் பணியை முன்னேறச் செய்கிறது. ஒரு பரலோகம் காத்திருக்கிறது, ஆ! நாம் அதை அடைவதற்கு எவ்வளவு ஊக்கமாக முயற்சிக்க வேண்டும்!

உங்கள் இரட்சகராக இயேசுவில் விசுவாசம் கொள்ளுமாறு, நமது பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவர்களை நான் வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் அவரிடத்தில் உண்மையோடு வரும்பொழுது, தமது கிருபையினால் அவர் உங்களுக்கு உதவ ஆயத்தமாயிருக்கிறார் என்பதை விசுவாசியுங்கள். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை நீங்கள் போராட வேண்டும். ஜீவகிரீடத்துக்கான மல்யுத்தவீரர்களாக நீங்கள் இருக்க வேண்டும். போராடுங்கள், ஏனெனில் சாத்தானின் பிடி உங்கள்மீது இருக்கிறது; நீங்கள் அவனிடமிருந்து உங்களைப் பிடித்து இழுத்துக்கொள்ளாவிட்டால், நீங்கள் முடமாக்கப்பட்டு, அழிக்கப்படுவீர்கள். சத்துரு உங்கள் வலதுபுறமும், இடதுபுறமும், உங்களுக்கு முன்னும், உங்களுக்குப் பின்னும் இருக்கிறான்; நீங்கள் அவனை உங்கள் கால்களின்கீழ் மிதிக்கவேண்டும். போராடுங்கள், வெற்றிகொள்ளப்பட வேண்டிய கிரீடம் ஒன்று இருக்கிறது. போராடுங்கள், கிரீடத்தை நீங்கள் வெற்றிகொள்ளாவிட்டால், இவ்வாழ்விலும், இனிவரும் வாழ்விலும் நீங்கள் அனைத்தையும் இழப்பீர்கள். போராடுங்கள், ஆயினும் உங்களது உயிர்த்தெழுந்த இரட்சகரின் பெலத்தில் அது இருக்கட்டும்.—Fundamentals of Christian Education, pp. 129–137.

## 146

# இளம்பருவத்தின் இன்பக் களியாட்டங்களில் மூழ்குதல்

பிரியமான இளம்நண்பர்களே, உங்களுடைய இன்பக்களியாட்டங்களில் மூழ்குவதற்குச் செலவழிக்கப்படுகிற கொஞ்ச நேரமானது, உங்களது முழுவாழ்வையும் கசப்பாக்குகிற ஒரு விளைச்சலை உற்பத்திசெய்யும்; ஒரு மணிநேரச் சிந்தனையின்மையானது—சோதனைக்கு ஒருமுறை இணங்குதலானது—உங்கள் வாழ்வின் முழுப்போக்கையும் தவறான திசையில் திருப்பிவிடலாம். ஒரே ஒரு இளமைப்பருவம் மட்டுமே உங்களுக்கு உண்டு; அதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். களத்தை ஒருமுறை

நீங்கள் கடந்தபின்பு, உங்கள் தவறுகளைத் திருத்திக்கொள்ள நீங்கள் ஒருபோதும் திரும்பிவர முடியாது. தேவனோடு இணைவதற்கு மறுக்கிறவன் சோதனையின் பாதையில் தன்னையே வைத்துக்கொள்கிறான், அவன் நிச்சயமாய் விழுவான்.

ஒவ்வொரு வாலிபரையும் தேவன் பரீட்சித்துக்கொண்டிருக்கிறார். அதிக அனுபவமிக்க வெளிப்படையான அறிக்கையாளர்களால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தவறான முன்மாதிரியினிமித்தம், அநேகர் தங்களது அக்கறையின்மைக்கும் பயபக்தியின்மைக்கும் சாக்குப்போக்குக் கொடுத்திருக்கின்றனர். ஆனாலும் நீதியைச் செய்வதிலிருந்து எவரையும் இது தடைசெய்யக்கூடாது. கடைசிக் கணக்கெடுப்பின் நாளிலே நீங்கள் இப்பொழுது கூறுகிறதுபோல அப்படிப்பட்ட சாக்குப் போக்குகளைக் கூறமுடியாது. பாதையை நீங்கள் அறிந்திருந்தும், அதில் நடப்பதற்கு நீங்கள் தெரிந்துகொள்ளாத படியினால், நீங்கள் நீதியாய் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படுவீர்கள்.

## சோதனை

பிரதான—வஞ்சகனான சாத்தான் தன்னை ஒரு ஒளியின் தூதனைப்போல மறுரூபப்படுத்திக்கொண்டு, வெளிக்குச் சரியாகத் தோன்றுகிற தனது சோதனைகளுடன் வாலிபர்களிடம் வருகிறான்; படிப்படியாகக் கடமையின் பாதையிலிருந்து அவர்களைத் தன் பக்கம் இழுப்பதில் வெற்றி காண்கிறான். அவன் ஒரு குற்றஞ்சுமத்துகிறவனாக, வஞ்சகனாக, பொய்யனாக, அலைக்கழிப்பவனாக, மற்றும் கொலைகாரனாக வர்ணிக்கப்பட்டிருக்கிறான். “பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்.” ஒவ்வொரு மீறுதலும் ஆத்துமாவைக் குற்றத்தீர்ப்புக்குள் கொண்டுவருகிறது, தெய்வீக உக்கிரத்தை உண்டுபண்ணுகிறது. இருதயத்தின் எண்ணங்கள் தேவனால் பகுத்தறியப்பட்டிருக்கின்றன. அசுத்தமான எண்ணங்கள் போற்றி வளர்க்கப்படும்போது, பாவத்தை நிறைவேற்றி, ஆத்துமாவைக் குற்றத் தீர்ப்புக்குள் கொண்டுவருவதற்கு, அவைகள் வார்த்தையினாலோ அல்லது செயலினாலோ வெளிப்படுத்தப்படவேண்டிய அவசியமில்லை. அதன் தூய்மை கெடுக்கப்படுகிறது, சோதனைக்காரன் ஜெயம் பெறுகிறான்.

ஒவ்வொரு மனிதனும் தன்தன் சுய இச்சைகளினால் இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். அவ்ன தனது சொந்த விருப்பங்களைப் பின்பற்றுவதால், அவன் நல்லொழுக்கம் மற்றும் மெய்யான நன்மையின் பாதையிலிருந்து திருப்பப்படுகிறான். வாலிபர்கள் ஒழுக்கரீதியான நேர்மையை உடையவர்களாக இருப்பார்களானால், மிகவும் பலமிக்க சோதனைகளும் வீணாகவே முன்வைக்கப்படும். உங்களைச் சோதிப்பது சாத்தானின் செயல்,

ஆனால் இணங்குவது உங்கள் சொந்த செயலே. சோதிக்கப்படுகிறவர்களை மீறுதலுக்குட்படும்படி கட்டாயப்படுத்துவதற்குச் சாத்தானின் சர்வசேனைக்கும் அதிகாரம் இல்லை. பாவத்திற்கான சாக்குப்போக்கு இல்லை.

வாலிபர்களில் சிலர் தங்கள் சக்திகளை மாயையிலும், மதியீனத்திலும் வீணடித்துக் கொண்டிருக்கிற வேளையில், மற்றவர்கள தங்கள் மனங்களை ஒழுங்குபடுத்தி, அறிவைச் சேகரித்து, ஆயதவர்க்கத்தை அணிந்தவர்களாக வாழ்வின் போராட்டத்தில் ஈடுபட்டு, அதை வெற்றியாய் முடிக்கும் தீர்மானத்துடன் இருக்கின்றனர். ஆயினும் அவர்கள் தங்களது பாச உணர்ச்சிகளைத் தேவன்மீது மையங்கொள்ளச் செய்யாவிட்டால், எவ்வளவு உயரமாக ஏறுவதற்கு அவர்கள் முயற்சித்தாலும், வாழ்க்கையை அவர்கள் வெற்றியுள்ளதாக ஆக்கமுடியாது. நீதி செய்வதற்கான தங்களது நோக்கத்தை மிகநுண்ணிய அளவிலும் பெலவீனப்படுத்த விரும்புகிறவர்களின் முகஸ்துதிகளைப் புறக்கணித்து, முழு இதயத்துடன் அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்புவார்களானால், அவர்க்ள தேவனுக்குள் பெலத்தையும், தைரியத்தையும் பெற்றுக்கொள்வார்கள்.

## வீணாண கேளிக்கை மெய்யான மகிழ்ச்சி அல்ல

நட்புக்குழுஐவ விரும்கிறவர்கள் அது ஓர் அளவுக்குமீறிய வெறியாகிறவரைக்கும் இந்த நட்புநாட்டத்தில் ஈடுபடுகின்றனர். உடுத்துவதும், கேளிக்கையின் இடங்களைப் பார்வையிடுவதும், மொத்தத்தில் மாயையிலும் மிக அற்பமான தலைப்புகளைக் குறித்துச் சிரித்துப்பேசி மகிழ்வதே — அவர்களது ஜீவியங்களின் நோக்கமாகும். வேதம் வாசிப்பதையும், பரலோகக் காரியங்களைத் தியானிப்பதையும் அவர்கள் சகிக்கமாட்டார்கள். கிளர்ச்சியூட்டுகிற ஏதோ ஒன்று இல்லாவிடில்,அவர்கள் மகிழ்ச்சியற்றவர்களாக இருக்கின்றனர். மகிழ்ச்சியாயிருக்கும் வல்லமையை அவர்கள் தங்களில் கொண்டிருக்கவில்லை; ஆனால் அவர்கள் தங்களைப்போலவே சிந்தனை யற்ற, அக்கறையற்ற மற்ற வாலிபர்களின் தோழமையையே மகிழ்ச்சிக்காகச் சார்ந்திருக்கின்றனர். மேன்மையான நோக்கங்களுக்காகத் திசைதிருப்பப்பட வேண்டிய வல்லமைகளை, அவர்கள் மதியீனத்துக்குத் தாரை வார்த்து விடுகின்றனர்….

தேவனுடைய வார்த்தையை வாசிப்பதிலும், ஜெபநேரத்திலும் சந்தோஷம் மற்றும் மகிச்சியைக் கண்டடைகிற வாலிபன், ஜீவ ஊற்றிலிருந்து வரும் நீரினால் இடைவிடாத புத்துணர்ச்சியை அடைகிறான். மற்றவர்கள் புரிந்துகொள்ளக்கூடாத உழுக்கஞ்சார்ந்த மேன்மை மற்றும் விசாலமான சிந்தனையின் உச்சத்தை அவன் அடைவான். தேவனோடுள்ள ஐக்கியமானது நல்லெண்ணங்களையும், உயர்தரமான விருப்பங்களையும், சத்தியம் குறித்தத்

தெளிவான புரிதல்களையும், உன்னதமான செயல்நோக்கங்களையும் ஊக்குவிக்கிறது. இவ்விதமாகத் தங்களது ஆத்துமாக்களைத் தேவனோடு இணைத்துக்கொள்கிறவர்கள் அவரது குமாரர்கள் மற்றும் குமாரத்திகளாக அவரால் அங்கீகரிக்கப்படுகின்றனர். கர்த்தர் அவர்களை ஒளியின் வாய்க்கால்களாகவும், உலகத்திற்கு ஞானமாகவும் ஆக்குகிற வரைக்கும், அவர்கள் தேவனையும், நித்தியத்தையும் குறித்ததான மிகத்தெளிவான கண்ணோட்டங்களை அடைத்து, தொடர்ந்து மென்மேலும் உயர்ந்து செல்கின்றனர்....

இயேசுவில் நிலைத்திருக்கிறவர்கள் மகிழ்ச்சியும், உற்சாகமும் உள்ளவர்களாக, தேவனுக்குள் சந்தோஷமானவர்களாக இருப்பார்கள். அடக்கமான சாந்தம் குரலில் வெளிப்படும், ஆவிக்குரிய மற்றும் நித்திய காரியங்களுக்கான பயபக்தி, செயல்களில் வெளிக்காட்டப்படும், இசை, சந்தோஷமிக்க இசை, உதடுகளிலிருந்து தொனிக்கும்; ஏனெனில் அது தேவனுடைய சிங்காசனத்திலிருந்து மென்காற்றில் மிதந்து வருகிறது. எளிதில் விளக்கப்பட முடியாத, ஆனாலும் உள்ளத்தில் உணரப்பட்டு, அனுபவிக்கப்படுகிற தேவபக்திக்குரிய இரகசியம் இதுவே ஆகும். ஒரு அடங்காத, கலகக்குணமுள்ள இருதயமானது, தேவகிருபையில் எல்லா இனிய செல்வாக்குகளுக்கும், பரிசுத்த ஆவியினால் உண்டாகும் எல்லாச் சந்தோஷத்துக்கும் தன் கதவுகளை அடைத்துக்கொள்ளமுடியும்; ஆனால் ஞானத்தின் வழிகள் இனிதான வழிகள்; அதின் பாதைகளெல்லாம் சமாதானம். கிறிஸ்துவுடன் எவ்வளவு நெருக்கமாக நாம் இணைந்திருக்கிறோமோ, அவ்வளவுக்கதிகமாக, நம் வார்த்தைகளும், செயல்களும் அவரது கிருபையின் மென்மையாக்கும், மறுரூபமாக்கும் வல்லமையை வெளிப்படுத்தும்.—Testimonies for the Church, Vol. 4, pp. 622–626.

## 147

# பக்தியற்ற விருந்தினர்கள்

தேவனுடன் தொடர்பில்லாத, அவருக்குப் பிரியமற்ற போக்கைக் கொண்டிருக்கிறவர்களின் நட்புறவைத் தெரிந்துகொள்வது கிறிஸ்தவர்களுக்குப் பாதுகாப்பானது அல்ல. ஆயினும் வெளிப்படையாயக் காணும் எத்தனைக் கிறிஸ்தவர்கள் தடைசெய்யப்பட்ட களத்தின்மீது துணிந்து இறங்குகின்றனர். வீண்பெருமையுள்ள, அற்பத்தனமான, பக்தியற்ற உறவினர்களை, அநேகர் தங்கள் இல்லங்களுக்கு அழைக்கின்றனர்; இத்தகைய பக்தியற்ற விருந்தினர்களின் முன்மாதிரியும் செல்வாக்கும்,

பெரும்பாலும் வீட்டிலுள்ள பிள்ளைகளின் மனங்களின்மீது நீடித்திருக்கும் எண்ணப்பதிவுகளை உண்டுபண்ணிவிடுகிறது. இவ்விதமாக உண்டான செல்வாக்கானது பக்தியற்ற கானானியர்களுடன் எபிரெயர்கள் கொண்டிருந்த தோழமையிலிருந்து ஏற்பட்ட விளைவுக்கு ஒத்ததாக இருக்கிறது....

தங்களது பக்தியற்ற உறவினர்களையும், நண்பர்களையும் பிரியப்படுத்துவதற்குத் தாங்கள் சிலவற்றை விட்டுக்கொடுக்க வேண்டும் என்று அநேகர் நினைக்கின்றனர். வரம்பு ஏற்படுத்திக்கொள்வது எப்பொழுதும் இலகுவானதல்லாதபடியால், வாழ்விலும் குணத்திலும் ஒரு காலத்தில் கிறிஸ்துவின் உண்மைப் பின்னடியார்களாக இருந்தவர்கள் உலகத்தின் வழக்கங்களுக்கு இணங்கிப்போகிற வரைக்கும், ஒரு சலுகையானது அடுத்ததற்கான வழியை ஆயத்தப்படுத்துகிறது. தேவனோடுள்ள தொடர்பு அறுந்துபோகிறது. அவர்கள் பெயரளவில்மட்டும் கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர். சோதனைநேரம் வரும்பொழுது, அவர்களது நம்பிக்கையானது அடித்தளமற்றிருப்பதாகக் காணப்படுகிறது. அவர்கள் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் சத்துருவுக்கு விற்றுப்போட்டு விட்டனர். அவர்கள் தேவனை அவமதித்திருக்கின்றனர், அவரது நீதியுள்ள நியாயத்தீர்ப்புகள் வெளிப்படுகிற வேளையில், அவர்கள் விதைத்திருந்ததை அவர்கள் அறுப்பார்கள். “என் சொல்லைக் கேளாதேபோனார்கள்; ஏன் இப்படிச் செய்தீர்கள்?” என்று பண்டைய இஸ்ரவேலரிடம் கிறிஸ்து கூறியதுபோல, அவர்களிடம் கூறுவார்.—The Signs of the Times, June 2, 1881. ★

# பகுதி 15

# காதலுறவும் திருமணமும்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 148 | உண்மையான அன்பு | 397 |
| 149 | காதலுறவின் தவறான முறைமைகள் | 399 |
| 150 | அவிசுவாசிகளுடன் திருமண ஒப்பந்தம் | 401 |
| 151 | ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் அவசியம் | 404 |
| 152 | உரிய காலத்திற்கு முந்திய திருமணங்கள் | 413 |
| 153 | ஞானமுள்ள ஞானமற்ற திருமணங்கள் | 417 |
| 154 | பெண்கொள்ளுதலும், பெண்கொடுத்தலும் | 421 |
| 155 | திருமணத்தின் பொறுப்புரிமைகள் | 425 |
| 156 | திருமணத்தில் நல்ல சிந்தனைத்திறனும், சுயக்கட்டுப்பாடும் | 422 |
| 157 | ஈசாக்கின் முன்மாதிரி | 424 |

## பகுதி 15

# காதலுறவும் திருமணமும்

குடும்ப உறவானது, பூமியிலுள்ள எதையும்விட, மிகவும் நெருக்க மான, மிகவும் மென்மையான, மிகவும் புனிதமானதாக இருக்கிறது. மனுக்குலத்திற்கு ஓர் ஆசீர்வாதமாக இருக்கும்படி அது வடிவமைக்கப் பட்டிருந்தது. திருமண உடன்படிக்கையானது எங்கெல்லாம் விவேகத்தோடும், அதன் பொறுப்புகளைக் குறித்த சரிநுட்பமான சிந்தனையோடும் மேற்கொள்ளப்படுகிறதோ அங்கெல்லாம் அது ஓர் ஆசீர்வாதமாக இருக்கிறது.—Ministry of Healing, pp. 356, 357.

## 148

# உண்மையான அன்பு

அன்பு என்பது நாம் இயேசுவிடமிருந்து பெற்றுக்கொள்கிற ஓர் அருமையான ஈவு. தூய்மையான, பரிசுத்தமான உள்ளன்பு என்பது ஓர் உணர்ச்சியல்ல, அது ஒரு தத்துவம். உண்மையான அன்பினால் இயக்கப் படுகிறவர்கள் பகுத்தறிவற்றவர்களாக, குருடர்களாக இருக்கமாட்டார்கள். பரிசுத்த, ஆவியினால் போதிக்கப்பட்டவர்களாக, அவர்கள் தேவனை முதன்மையாகவும் பிறரைத் தங்களைப் போலவும் நேசிக்கின்றனர்.

திருமணத்தைக் குறித்துச் சிந்தித்து கொண்டிருப்பவர்கள், தங்களது வாழ்க்கைப் பயணத்தில் எந்த நபருடன் தங்களை இணைத்துக்கொள்ள நினைக்கிறார்களோ, அவருடைய ஒவ்வொரு மென்மையான உணர்வையும நிறுத்துப்பார்த்து, அவரது ஒழுக்கவளர்ச்சி ஒவ்வொன்றையும் உற்றுநோக்க வேண்டும். திருமண பந்தத்துக்கான ஒவ்வொரு அடியும் தன்னடக்கம், எளிமை, உண்மை மற்றும் தேவனைப் பிரியப்படுத்தி, கனப்படுத்தும் ஓர் அக்கறைமிக்க நோக்கத்தினால் தனித்தன்மையுடன் விளங்கட்டும். திருமணமானது பிற்கால வாழ்வை இவ்வுலகத்திலும், இனிவரும் உலகத்திலும் பாதிக்கிறது. ஓர் உண்மைக்க கிறிஸ்தவன் தேவன் அங்கீகரிக்க்கூடாதத் திட்டங்களைத் தீட்டமாட்டான்.

### ஆலோசனையைத் தேடுதல்

தெய்வபயமிக்கப் பெற்றோர்களை நீங்கள் ஆசீர்வாதமாகப் பெற்றிருந்தால், அவர்களது ஆலோசனையைத் தேடுங்கள். உங்கள்

எதிர்பார்ப்புகளையும், திட்டங்களையும் அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அவர்களது வாழ்க்கை அனுபவங்கள் கற்றுத்தந்திருக்கிற பாடங்களைக் கற்றுக்கொள்ளுங்கள். அநேக சஞ்சலங்களிலிருந்து நீங்கள் காக்கப்படுவீர்கள். அனைத்திற்கும் மேலாக, கிறிஸ்துவை உங்கள் ஆலோசகராக்குங்கள். ஜெபத்துடன் அவரது வார்த்தையை ஆராயுங்கள்.

அப்படிப்பட்ட நடத்துதலின்கீழ், தூய்மையான, ஆண்மையின் குணக்கூறுகளைப் பெற்றிருக்கிற, ஜாக்கிரதையுள்ள, இலட்சியநோக்குள்ள, நேர்மையுள்ள, தேவனை நேசித்து, அவருக்குப் பயப்படுகிற ஒரு நபரை மாத்திரம் வாழ்க்கைத் துணைவனாக ஓர் இளம்பெண் ஏற்றுக்கொள்வாளாக. ஓர் இளம் வாலிபன் தன் பக்கத்தில் நிற்பதற்கு, வாழ்வின் பாரங்களில் அவளது பங்கைச் சுமப்பதற்குத் தகுதி பெற்ற, அவனை மேன்மைப்படுத்தி, பண்படுத்தும் செல்வாக்கைக் கொண்ட, தனது அன்பில் அவனை மகிழச்செய்கிற ஒரு நபரைத் தேடுவானாக.

“புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு.” “அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்... அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள்.” “தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷ னும் அவளைப்பார்த்து: அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்”–நீதி. 19:14, 31:11,12,26–29. அப்படிப்பட்ட ஒரு மனைவியைக் “கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்கிறான்”–நீதி. 18:22.—Ministry of Healing, pp. 358, 359.

### வாழ்க்கைத்துணைகளைத் தேர்ந்தெடுத்தல்

கிறிஸ்தவ வாலிபர்கள் நட்புகொள்வதிலும், வாழ்க்கைத்துணைகளைத் தெரிந்துகொள்வதிலும் மிகவும் விழிப்பாய் இருக்கவேண்டும். நாம் இப்பொழுது பசும்பொன் என்று நினைப்பது நாளை விலைமதிப்புக்குறைந்த உலோகமாக மாறிவிடாதபடிக்குக் கவனமாக இருக்கவேண்டும். உலகத் தோழமைகள் தேவனுக்கான உங்கள் சேவையின் பாதையில் தடங்கல் களை வைக்கக்கூடும். ஒருபோதும் உணர்வும் மேன்மையும் அடையக் கூடாதவர்களுடன் தொழிலிலோ அல்லது திருமணத்திலோ கொண்ட மகிழ்ச்சியற்ற தொடர்புகளினால் அநேக ஆத்துமாக்கள் அழிந்திருக்கின்றனர். தேவனுடைய ஜனங்கள் விலக்கப்பட்ட நிலத்தில் நுழைவதற்கு ஒருபோதும்

துணியக்கூடாது. விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகளுக்கு இடையிலான திருமணம் தேவனால் தடைசெய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மிகப்பெருமளவில் குணப்படாத இருதயம் தன் சொந்த விருப்பங்களையே பின்பற்றிப்போகிறது. தேவனால் அனுமதிபெறாத திருமணங்கள் ஒப்பந்தமாகின்றன.— Fundamentals of Christian Education, p. 500.

## 149

# காதலுறவின் தவறான முறைமைகள்

(ஒரு தனிநபருக்குரிய சாட்சியாகமத்திலிருந்து—கடிதத்திலிருந்து எடுத்தாளப்பட்டது.)

உனது குணத்திலுள்ள திடத்தன்மை மற்றும் தன்னலமறுப்பின் குறைபாடானது, சறுக்கும் மணலாயிராத ஓர் உண்மையான ஆன்மீக அனுபவத்தைப் பெறுவதில் ஒரு ஆபயத்தான குறைபாடாக இருக்கிறது. திடத்தன்மையும் நோக்கத்தில் நேர்மையும் வளர்க்கப்படவேண்டும். ஒரு வெற்றிகரமமான கிறிஸ்தவ வாழ்வுக்கு இத்தகைய குணங்கள் கட்டாயமாக அவசியப்படுகின்றன. உனது ஆத்துமாவில் நேர்மையிருந்தால், நீதியிலிருந்து தடுமாறமாட்டாய். கடமை எனும் நேர்கோட்டிலிருந்து உன்னை நிலைமாற்றுவதற்கு எந்தத் தூய்டுதலுணர்ச்சியும் போதாமல் இருக்கும்; நீ தேவனுக்கு விசுவாசமும், உண்மையுமாய் இருப்பாய். பாச உணர்ச்சி மற்றும் அன்பின் வேண்டுதல்களோ, தோழர்கூட்டத்தின் கெஞ்சுதல்களோ உன்னைச் சத்தியம் மற்றும் கடமையிலிருந்து வேறு வழியில் திருப்புவதற்குத் தூண்டமுடியாது; சுயவிருப்பத்துக்காகக் கடமையை நீ தியாகம் செய்ய மாட்டாய்.

என் சகோதரனே, வாழ்வின் பொதுவான, நடைமுறையிலுள்ள அன்றாடக் கடமைகளுக்குரிய பயிற்சியில் உண்மையிலேயே குறைவு பட்டிருக்கிற ஒரு அனுபவமற்ற, இளம்பெண்ணுடன் உன் வாழ்வுரிமைப் பங்கை இணைத்துக்கொள்வதற்கு மயங்குவாயானால், நீ தவறுசெய்கிறாய்; ஆனால் தேவனுக்குரிய தனது கடமையைக் குறித்த அவளது அறியாமையுடன் ஒப்பிட்டால், இக்குறைபாடு சிறியதுதான். வெளிச்சத்தைப் பெறுவதற்கு வகையற்றவளாக அவள் இருக்கவில்லை; ஆன்மீக சிலாக்கியங்களை அவள் பெற்றிருந்தாள், ஆயினும் கிறிஸ்து இல்லாதத் தனது பரிதபிக்கப்படத்தக்கப் பாவத்தன்மையை அவள் உணரவில்லை.

## ஆன்மீக அனுபவத்தின்மீது செல்வாக்கு

தேவனை நேசியாத, அன்மீக வாழ்வில் ஆர்வங்கொள்ளாத ஒரு நபரின் நட்பில் கூடிமகிழ்வதற்காக, தேவன் தமு ஜனங்களைச் சந்திக்கிற, ஜெபக்கூட்டத்திலிருந்து உன் காதல்மோகத்தினால் நீ திரும்பத்திரும்ப விலகிப்போவாயானால், அப்படிப்பட்ட ஒரு ஐக்கியத்தைத் தேவன் செழிக்கச் செய்யும்படி நீ எப்படி எதிர்பார்க்கலாம்?

அவசரப்பட வேண்டாம். குறித்த காலத்துக்கு முந்திய திருமணங்கள் ஊக்குவிக்கப்படக்கூடாது. வாலிப ஆணோ அல்லது வாலிபப் பெண்ணோ தேவனுடைய உரிமைக்கோரிக்கைகளை அவர்கள் கவனிக்கத் தவறுவார்களானால், கணவன் அல்லது மனைவியின் உரிமை கோரிக்கைகளையும் அவர்கள் ஒழுங்காக மதமிக்காமற்போகிற அபாயம் உண்டு. உன் விருப்பப்படியான ஒரு நபரின் நட்புறவில், அதுவும் ஆன்மீக சிலாக்கியங்கள் மற்றும் உனது ஜெபநேரங்களைத் தியாகம்பண்ணி அடிக்கடி கூடியிருக்கிற பழக்கம் அபயாகரமானது ஆகும்; உன்னால் தாங்கக்கூடாத ஓர் இழப்பை நீ ஆதரித்துக்கொண்டிருக்கிறாய்.

இரவில் நெடுநேரம்வரை அமர்ந்திருக்கும் பழக்கம் வழக்கமாகிவிட்டது, ஆனால் நீங்கள் இருவரும் கிறிஸ்தவர்கள் என்றாலும்கூட, அது தேவனுக்குப் பிரியமானதல்ல. இத்தகைய பொருத்தமற்ற மணிநேரங்கள் ஆரோக்கியமானதைப் பாதிக்கும், மறுநாளின் கடமைகளுக்கு மனதைத் தகுதியிழக்கச் செய்யும், தீமையான தோற்றத்தையும் உடையதாயிருக்கும். என் சகோதரனே, இவ்விதமாக காதலுறவைத் தவிர்ப்பதற்கு உனக்குத் தன்மானம் இருக்கும் என்று நம்புகிறேன். தேவனை மகிமைப்படுத்துகிற ஒரே நோக்கம் உனக்கு இருக்குமானால், கருத்துமிக்கக் கவனத்துடன் நீ செயல்படுவாய். ஒரு கிறிஸ்தவனாக உன்மீது தேவன் கொண்டிருக்கிற உன்னதமான உரிமைக்கோரிக்கைகளை நீ பகுத்துணரக்கூடாதபடிக்கு உன் பார்வையைக் குருடாக்குகிற காதல் ஏக்கநோய்க்கும் நீ ஆளாக மாட்டாய்.—Testimonies for the Church, Vol. 3, pp. 44, 45.

## குறித்தகாலத்துக்கு முந்திய திருமணங்கள்

குறித்தகாலத்துக்கு முந்திய திருமணங்கள் ஊக்குவிக்கப்படக்கூடாது. திருமணம் போன்ற மிக முக்கியமான, அதன் விளைவுகளில் மிகவும் பரந்த செயல்விளைவுடைய ஓர் உறவில், துரிதகதியில், போதுமான ஆயத்தமின்றி, அறிவார்ந்த மற்றும் சரீரஞ்சார்ந்த வல்லமைகள் நன்கு வளர்ச்சியடைவதற்கு முன்பாக, ஈடுபடக்கூடாது.—Ministry of Healing, p. 358.

## 150

# அவிசுவாசிகளுடன் திருமண ஒப்பந்தம்

அருமை சகோதரியே: உன்னுடைய பக்திவிசுவாசத்தில் இணைந்திராத ஒரு நபருடன் திருமணம்புரிய இருக்கிற உனது நோக்கத்தை அறிந்துகொண்டேன். இந்த முக்கியமான காரியத்தை நீ கவனமாக நிறுத்தப் பார்க்கவில்லையே என நான் அஞ்சுகிறேன். உனது வருங்கால வாழ்வு முழுவதிலும் ஒரு செல்வாக்கை உண்டுபண்ணுகிற விஷயத்தில் ஒரு அடி எழுத்துவைக்கும் முன்பாக, இக்காரியத்தைக் கவனத்தோடும், ஜெபத்தோடும் ஆழ்ந்து சிந்தனைசெய்யுமாறு உன்னை வற்புறுத்தி வேண்டுகிறேன். இந்தப் புதிய உறவுமுறையானது ஒரு மெய்யான மகிழ்ச்சியின் ஆதாரமாக விளங்குமா? கிறிஸ்தவ வாழ்வில் அது உனக்கு ஒரு உதவியாக இருக்குமா? அது தேவனைப் பிரியப்படுத்துகிறதாக இருக்குமா? உனது முன்மாதரி மற்றவர்கள் பின்பற்றுவதற்குப் பாதுகாப்பானதாக இருக்குமா?

### அன்பின் பரீட்சைகள்

எந்தப் பெண்பிள்ளையும் ஒரு வாலிபனைக் கைபிடிக்குமுன்னே, தன் வாழ்க்கை நலத்துடனே இணைக்கப்படப்போகிறவன் தனக்குத் தகுதியுடையவன் தானோ என்பதை விசாரித்தறிய வேண்டும். அவன் கடந்தகால ஒழுக்கம் எத்தன்மையது, அவன் வாழ்க்கை தூய்மையுள்ளதோ? அவன் வெளியிடுகின்ற அன்பு பெருந்தகைமையும் உணர்ந்த பண்பும் உடையதோ? அல்லது வெறும் உணர்ச்சி வேட்கைதானோ? அவன் தனக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய சிறப்புக் குணம் உடையவனோ? தான் அவன் அன்பில் சமாதானமும் சந்தோஷமும் காணக்கூடுமோ? தான் தன் தனித்தன்மையைப் பாதுகாத்துக்கொள்ள இடம் கிடைக்குமோ? அல்லது தன் நிதானம், மனச்சாட்சி எல்லாம், தன் கணவனால் அடக்கி ஆளப்படுமோ? கிறிஸ்துவின் சீஷியான அவள் தனக்குச் சொந்தமானவள் அல்ல; அவள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறாள். இரட்சகரின் உரிமைக்கோரிக்கைகளை முதன்மையானவையாக அவள் கனம்பண்ணக் கூடுமா? உடல், ஆத்துமா, நினைவு, நோக்கம் எல்லாம், தூய்மையும் பரிசுத்தமுமாய்ப் பாதுகாத்துக் கொள்ளக்கூடுமோ? திருமண உறவிற்குள் பிரவேசிக்கிற பெண் ஒவ்வொருத்தியின் நல் வாழ்க்கைக்கு இவ்வினாக்கள் இன்றியமையாதவை.

இல்லத்தில் பக்தி அவசியம். திருமண வாழ்வைப் பெரும்பாலும் கசப்பாக்குகிற தீங்கான தப்பிதங்களை இதுமட்டுமே தடுத்திடமுடியும். கிறிஸ்து ஆளுகைசெய்கிற இடத்தில் மட்டுமே, ஆழமான, உண்மையான, தன்னலமற்ற அன்பு இருக்கமுடியும். அப்பொழுது உள்ளமும் உள்ளமும் ஒன்றுபடும், இரு உயிர்களும் ஒருயிராக ஒன்றரக் கலக்கும். தேவதூதர்கள் வீட்டில் விருந்தினர்களாக இருப்பார்கள், அவர்களது பரிசுத்தக் கண்காணிப்பு இல்லற வாழ்வைத் தூய்மையாக்கும். இழிவுபடுத்தும் இச்சைநாட்டம் அகற்றப்படும். எண்ணங்கள் தேவனைநோக்கித் திருப்பப்படும்; இருதயத்தின் வழிபாடு அவரிடமே மேலெழும்பும்.

**கீழ்ப்படியாமையின் விளைவுகள்**

இருதயம் மனித அன்பிற்காக ஏங்குகின்றனது. அந்த அன்போ இயேசுவின் அன்பிற்குப் பதிலாக வைத்துக் கொள்ளக்கூடிய அவ்வளவு போதிய உறுதியும், போதிய தூய்மையும், போதிய அருமையும் உடையது அன்று. மனைவி தன் வாழ்க்கையின் கவலைகளையும், பொறுப்புகளையும். துன்பங்களையும் தாங்கிக்கொள்வதற்கு இரட்சகரிலேயே ஞானத்தையும், பெலத்தையும், கிருபையையும் கண்டடைதல் கூடும். அவள் அவரையே தனக்கு வலிமையும் வழிகாட்டியும் ஆக்கிக்கொள்ளவேண்டும். பெண்மகள் தன்னை உலக நண்பர் எவருக்கும் ஒப்புக்கொடுக்கும் முன்னமே தன்னைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து, அதற்கு மாறுபாடாக வருகின்ற எவ்வகை உறவிலும் பிரவேசிக்கக்கூடாது. மெய்யான இன்பத்தைக் கண்டடைய விரும்புவோர் தங்கள் உடைமைகள் அனைத்திலும், தங்கள் செயல்கள் அனைத்திலும் பரலோக ஆசீர்வாதம் பெற்றவர்களாய் இருக்கவேண்டும். கீழ்ப்படியாமையே பலர் உள்ளங்களையும் இல்லங்களையும் நிர்ப்பாக்கியத்தினால் நிரப்புகின்றனது. என் சகோதரியே, எக்காலத்திலும் இருள் அகலாத இல்லத்தை நீ விரும்பினால் அல்லாமல், கடவுளுக்குப் பகைவனாய் இருக்கின்றவன் எவனோடும் உன்னைப் பிணைத்துக்கொள்ளாதே.

நியாயத்தீர்ப்பில் இத்தகைய வார்த்தைகளைச் சந்திக்க எதிர்பார்க்கும் ஒரு நபராக, நீ எடுப்பதற்கு நினைத்திருக்கும் அடியைச் சீர்தூக்கிப் பார்க்குமாறு உன்னை நான் வேண்டிக்கொள்கிறேன். “அவிசுவாசியான கணவன் என் எண்ணங்களை இயேசுவிடமிருந்து திசைதிருப்பிவிடமாட்டானா? அவன் தேவப்பிரியனாயிராமல் சுகபோகப்பிரியனாக இருக்கிறான்; அவன் அனுபவிக்கிற காரியங்களை நான் அனுபவிக்கும்படி என்னை அவன் வழிநடத்தமாட்டானா?” என்று உன்னையே கேட்டுப்பார். நித்திய ஜீவனுக்கான பாதை மிகக் கடுமையானது; கரடுமுரமானது. உனது முன்னேற்றத்தைத் தடுத்து வேகங்குறைக்கிற கூடுதலான பாரங்களை எடுத்துக்கொள்ள வேண்டாம்...

மிகவும் தாமதமாகிவிடுவதற்கு முன்பாக உனது ஆபத்தைக்குறித்து உன்னை எச்சரிக்கவிரும்புகிறேன். இதமான, இனிமையான வார்த்தைகளுக்கு நீ செவிகொடுக்கிறாய், எல்லாம் நன்றாயிருக்கும் என்று நம்புவதற்கு நடத்தப்படுகிறாய்; ஆனால் இத்தகைய அழகான பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னிருக்கிற உள்நோக்கங்களை நீ அறியாதிருக்கிறாய். உள்ளத்தில் மறைந்திருக்கிற துன்மார்க்கத்தின் ஆழங்களை நீ காணமுடியாது. அவன் தனது சோதனையின் அம்புகளை உனக்கெதிராகக் குறிவைப்பதற்கு எளிதான வழியைக் கண்டடையும்படிக்கு, அப்படிப்பட்ட ஒரு பாதையைப் பின்பற்ற அவன் உன்னை வழிநடத்துவான். அவனுக்கு மிகச்சிறிய வாய்ப்பையும் அளித்துவிடாதே. தேவன் தமது ஊழியக்காரர்களின் உள்ளங்களில் கிரியைசெய்யும்போது, சாத்தானும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மூலமாகக் கிரியைசெய்கிறான். கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும்மூ இடையில் ஐக்கிய உறவு இல்லை. இரண்டும் ஒத்துப்போகாது. ஒரு அவிசுவாசியுடன் இணைதல் என்பது சாத்தானின் மைதானத்தில் உன்னையே நிறுத்திக் கொள்வதற்குச் சமம். அப்படிச் செய்யும்போது, நீ தேவனுடைய ஆவியைத் துக்கப்படுத்தி, அவரது பாதுகாப்பை இழக்கிறாய். நித்திய ஜீவனுக்கேதுவான போராட்டத்தில் இப்படிப்பட்ட பயங்கரமாமன முரண்பாடுகளை உனக்கெதிராக வைத்துக்கொள்ள அனுமதிக்கலாமா?

## முறிக்கப்படவேண்டிய ஒப்பந்தம்

“நான் வாக்குக் கொடுத்துவிட்டேனே, இப்பொழுது பின்வாங்கலாமோ?” என்று நீ சொல்லுவாய். அதற்கு நான் பதில் கூறுகிறேன்: “நீ வேத வசனத்திற்கு விரோதமாக வாக்குக் கொடுத்திருந்தால், எவ்வகையிலும் காலதாமதமின்றி உடனே பின்வாங்கி விடு; கடவுளுக்கு முன்னே மிகுந்த தாழ்மையுடன், முன் பின்பாராமல் பிணைப்படும்படி உன்னை வழி நடத்திய மதிமயக்கத்திற்காக மனஸ்தாபப்படு. அந்த வாக்கை நிறைவேற்றி உன்னை உண்டாக்கிய கடவுளை அவமதிப்பதைக் காட்டிலும், அவருக்குப் பயப்படுகிற பயத்தினால் அதை நிறைவேற்றாமல் பின்வாங்கிக் கொள்ளுதலே மேன்மை. — சபைகளுக்கு ஆலோசனை, பக். 257,258

நீங்கள் அடையவேண்டிய பரலோகம் ஒன்று இருக்கிறது, அகற்ற வேண்டிய அழிவுக்கேதுவான அகன்ற பாதை ஒன்று இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவன் சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. அறிவுவிருட்சத்தின் கனியைப் புசிப்பதிலிருந்து நமது ஆதிப்பெற்றோரை அவர் தடைசெய்தபோது, அவர்களது கீழ்ப்படியாமையானது முழு உலகத்திற்கும் துன்பத்தின் வெள்ளமதகுகளைத் திறந்துவிட்டத. தேவனுக்கு எதிர்மாறாக நாம் நடந்தால், அவர் நமக்கு எதிமாறாக நடப்பார். என்ன விலைக்கிரயம்

கொடுத்தாகிலும், அவரது கோரிக்கைகளுக்கெல்லாம் கீழ்ப்படிந்து நடப்பதே நமக்கு ஒரே பாதுகாப்பான பாதையாகும். அனைத்தும் அளவற்ற அன்பு மற்றும் ஞானத்தில் அஸ்திபாரமிடப்பட்டிருக்கின்றன.—Testimonies for the Church, Vol. 5, pp. 361–365.

### முதிர்ந்த அறிவுத்திறன் அவசியம்

மாணவர்கள் தங்களது சொந்த குணம் இன்னும் வளராமலும், அறிவுத்திறன் முதிராமலும், அதேநேரம் பெற்றோர்களின் பராமரிப்பும், வழிகாட்டுதலும் இல்லாதிருக்கிற வேளையில், ஒரு வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுக்க அவர்கள் முயற்சிக்கக்கூடாது என்பது சமுதாயத்தின் நன்மைக்கும், மாணவர்களின் உயர்தரமான நலனுக்கும் இன்றியமையாதது…

வாலிபர்களைச் சோதனையிலிருந்து காக்கவும், ஒரு பயனுள்ள வாழ்க்கைக்கு அவர்களை ஆயத்தப்படுத்தவும் முயற்சிக்கிறவர்கள் ஒரு நல்ல பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். வாலிபர்களுக்கான முறையான தடையுத்தரவு மற்றும் ஒழுங்குமறைப் பயிற்சியின் முக்கியத்துவத்துக்கு அங்கீகாரம் அளிக்கிற எந்தக் கல்வி நிறுவனத்தையும் காண்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அப்படிப்பட்ட போதனையாளர்கள் அனைவரது முயற்சிகளும் வெற்றியினால் முடிசூட்டப்படுவதாக.—Fundamentals of Christian Education, pp. 62, 63.

## 151

# ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் அவசியம்

கொடுமையும், ஒழுக்கக்கேடும் நிறைந்த இந்த நாட்களில், வாலிபர்கள் அநேகத் துன்பங்களுக்கும், சோதனைகளுக்கும் உட்படுகின்றனர். பலர் அபாயகரமான துறைமுகத்தில் கப்பல் ஓட்டுகின்றனர். அவர்களுக்கு ஒரு மாலுமி அவசியம்; எனினும் தங்களுக்கு அவசியமான உதவியை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் இகழுகின்றனர். தங்கள் தோணியைத் தாங்களே நடத்திக்கொள்ளத் தங்களுக்குத் திறமையுண்டு என்பது அவர்கள் நினைப்பு. மறைந்திருக்கிற பாறையில் மோதி, தங்கள் விசுவாசம் மற்றும் மகிழ்ச்சியுடன் கப்பலுக்குச் சேதம் உண்டாக்கும் என்பதை உணராதிருக்கின்றனர். காதலுறவு மற்றும் கல்யாணம் எனும் கருப்பொருளில் அவர்கள மோகங்கொண்டிருக்கின்றனர், தங்கள் மனம்போன போக்கில் போவதே

அவர்களது தலையாய பாரமாக இருக்கிறது. அவர்களது ஜீவியங்களின் மிக முக்கியமான இந்தக் காலகட்டதத்தில் ஒரு தவறிழையாத ஆலோசகர், ஒரு நெறிபிறழாத வழிகாட்டி அவர்களுக்குத் தேவை. இதை அவர்கள் தேவனுடைய வார்த்தையில் கண்டடையலாம். அந்த வார்த்தையின் கருத்தான ஆராய்ச்சியாளர்களாக அவர்கள் இராதபட்சத்தில், இம்மையிலும் மறுமையிலும் தங்களுடைய மற்றும் பிறருடைய மகிழ்ச்சியைக் கெடுக்கிற பெருந்தவறுகளை அவர்கள் செய்வார்கள்.

மூர்க்கமான, முரட்டுப் பிடிவாதமுள்ள மனநிலை அநேகரிடத்தில் இருக்கிறது. தேவவார்த்தையின் ஞானமுள்ள ஆலோசனைக்கு அவர்கள் செவிகொடுக்கவில்லை; சுயத்துடன் போராடி, அருமையான வெற்றிகளை அவர்கள் அடையவில்லை; அவர்களது இறுமாப்புள்ள, வளைந்துகொடுக்காத மன உரமானது அவர்களைக் கடமை மற்றும் கீழ்ப்படிதலின் பாதையிலிருந்து துரத்தியடித்துவிட்டது. இளம் நண்பர்களே, உங்கள் கடந்தகால வாழ்க்கையைத் திரும்பிப்பார்த்து, தேவவார்த்தையின் வெளிச்சத்தில் உங்கள் போக்கை உண்மையாய்ச் சிந்தித்துப் பாருங்கள். வேதம் கட்டளையிடுகிற உங்கள் பெற்றோர்களுக்கான கடமைகளை மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு மதித்துப் போற்றிப் பின்பற்றுகிறீர்களா? குழந்தைப் பருவத்திலிருந்து உங்களைப் பராமரித்தத் தாயை அன்புடன், தயவுடன் நீங்கள் நடத்துகிறீர்களா? அவளது ஆசைகளை மதித்திருக்கிறீர்களா? அல்லது உங்கள் சொந்த விருப்பங்கள் மற்றும் திட்டங்களையே நிறைவேற்றுவதினால் அவளது இருதயத்திற்கு வேதனையையும், வருத்தத்தையும் கொண்டு வந்திருக்கிறீர்களா? நீங்கள் அறிக்கையிடுகிற சத்தியம் உங்கள் இருதயத்தைப் பரிசுத்தப்படுத்தியிருக்கிறதா, உங்கள் சித்தத்தை மென்மையாக்கி, ஒழுங்குபடுத்தியிருக்கிறதா? அப்படியில்லையானால், நீங்கள் உங்களது கடந்தகாலப் பிழைகளைச் சரிசெய்யவேண்டிய முடிவுநேரப்பணி ஒன்று இருக்கிறது.

## ஒரு பரிபூரண வழிகாட்டி

குணத்திற்கான ஒரு பரிபூரணப் படித்தரத்தை வேதாகமம் முன்வைக்கிறது. தேவனால் ஏவப்பட்டு, பரிசுத்த மனுஷர்களால் எழுதப்பட்ட இப்புனிதநூல் வாழ்வின் அனைத்துச் சூழ்நிலைகளிலும் ஒரு பரிபூரண வழிகாட்டியாக இருக்கிறது. வாலிபர் மற்றும் வயோதிபரின் கடமைகளைத் தெளிவாக அது எடுத்துரைக்கிறது. அது வாழ்வின் வழிகாட்டியாக்கப்பட்டால், அதன் உபதேசங்கள் ஆத்துமாவை மேல்நோக்கி நடத்தும். அது மனதை உயர்தரமானதாக்கி, குணத்தை மேம்படுத்தி, இருதயத்திற்குச் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்கும். ஆனால் வாலிபர்களில்

அநேகர் தங்களுக்குத் தாங்களே ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருப்பதற்குத் தெரிந்துகொண்டு, தங்கள் வழக்குகளைத் தாங்களே கைகளில் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் வேதத்தின் உபதேசங்களை மிகவும் கருத்தாக ஆராய்வது அவசியம். விசுவாசத்தில் இருக்கும் தங்கள் பெற்றோர்கள் மற்றும் தங்கள் சகோதரர்களுக்குரிய தங்கள் கடமைகள் அதின் பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை அவர்கள் காண்பார்கள். “உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக” (யாத். 20:12) என்று ஐந்தாம் கற்பனை கூறுகிறது. “பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்” (எபே. 6:1) என்று மறுபடியும் நாம் வாசிக்கிறோம்.

பிள்ளைகள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாதவர்களாக, நன்றி யறியாதவர்களாக, பரிசுத்தமற்றவர்களாக இருப்பது நாம் கடைசிநாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதற்கான அடையாளங்களில் ஒன்றாகும். பெற்றோர்களுக்குரிய மரியாதை சம்பந்தமான கட்டளைகளும், ஆலோசனைகளும் தேவனுடைய வார்த்தையில் நிரம்பியிருக்கிறது. குழந்தைப் பருவத்திலிருந்து பிள்ளைப்பருவம், வாலிபப்பருவம், ஆண்மை மற்றும் பெண்மை வரைக்கும் வழிநடத்தி, இப்பொழுது தங்களது சமாதானம் மற்றும் மகிழ்ச்சிக்காகப் பெருமளவில் தங்களது பிள்ளைகளைச் சார்ந்திருக்கிற பெற்றோர்களை நேசித்துப் போற்றி வளர்க்கும் புனிதமான கடமையை வேதம் வாலிபர்களுக்கு உணர்த்திக்காட்டுகிறது. இப்பாடப்பொருளைக் குறித்து நிச்சயமற்ற தொனியை வேதம் கொடுக்கவில்லை; இருப்பினும், அதன் உபதேசங்கள் அதிகமாக அவமதிக்கப்பட்டிருக்கிறது.

வாலிபர்கள் கற்றுகொள்வதற்கு அநேக பாடங்கள் உண்டு; தங்களை அறிந்துகொள்ளக் கற்பதே மிக முக்கியமானது ஆகும். அவர்கள் தங்கள் பெற்றோர்களுக்குரிய தங்களது நன்றிக்கடன்கள் மற்றும் கடமைகளைக் குறித்தச் சரியான கருத்துகளைக் கொண்டிருக்கவேண்டும், சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருப்பதற்குக் கிறிஸ்துவின் பள்ளியில் இடைவிடாமல் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் பெற்றோர்களை நேசித்துக் கனம்பண்ண வேண்டிய அதே வேளையில், அவர்கள் சபையில் தங்களுடன் தொடர்பில் உள்ள அனுபவசாலிகளின் கருத்தையும் மதிக்கவேண்டும்.

## மரியாதைக்குரிய நடத்தை

ஓர் இளம்பெண்ணின் தோழமையை அடைந்து, அவளது பெற்றோருக்குத் தெரியாமல் நட்புறவில் மகிழ்கிற ஒரு வாலிபன் அவளுக்கோ

அல்லது அவளது பெற்றோருக்கோ ஒரு உயர்தரமான கிறிஸ்தவப் பங்கை ஆற்றவில்லை. இரகசியத் தொடர்புகள் மற்றும் சந்திப்புகள் மூலமாக, அவள் மனதின்மீது அவன் ஒரு செல்வாக்கை உண்டுபண்ணலாம்; ஆனால் அப்படிச் செய்வதினால் ஒவ்வொரு தேவபிள்ளையும் கொண்டிருக்கவேண்டிய ஆத்துமத்தின் உயர்பண்பை, நேர்மையை வெளிக்காட்ட அவன் தவறி விடுகிறான். தங்களது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில், அவர்கள் ஒளிவுமறைவான, வெளிப்படையில்லாத, வேதாகமத் தராதரத்தின் படியில்லாத ஒரு பங்கைச் செயலாற்றி, தங்களை நேசித்து, தங்கள்மீது உண்மையான பாதுகாவலர்களாக இரப்பதற்குப் பிரயாசப்படுகிறவர்களுக்குத் தங்களை உண்மையற்றவர்கள் என்று விளங்கப்பண்ணுகின்றனர். அத்தகைய செல்வாக்குகளின்கீழ் நடைபெறுகின்ற திருமணங்கள் தேவனுடைய வார்த்தையின்படியானவைகள் அல்ல. ஒரு பெண்ணைத் தன் கடமையைச் செய்யவிடாமல் வழிவிலக்கி, அவள் தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, அவர்களைக் கனம்பண்ண வேண்டுமென்று விதிக்கின்ற தெளிவும் திட்டமுமான தேவனுடைய கற்பனைகள் குறித்த அவளது கருத்துக்களைக் குழப்புகிறவன், விவாகக் கடமைகளுக்கு உண்மையாய் நடந்துகொள்ளவே மாட்டான்.

“வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்?” என்ற கேள்வி கேட்கப்படுகிறது. “உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே” என்ற பதிலும் அளிக்கப்பட்டிருக்கிறது. வேதாகமத்தைத் தனது வழிகாட்டியாக்கிக்கொள்ளும் வாலிபன் கடமை மற்றும பாதுகாப்பின் பாதையிலிருந்து இடறவேண்டியதில்லை. அந்த ஆசீர்வாதமான புத்தமக் அவனது குணத்தின் நேர்மையைக் காத்துக்கொள்வும், உண்மையாயிருக்கவும், வஞ்சகத்தை நடப்பிக்காதிருக்கவும் அவனுக்குப் போதிக்கும். “களவு செய்யாதிருப்பாயாக” என்று தேவனுடைய விரலினால் கற்பலகைகளின்மீது எழுதப்பட்டிருந்தாலும், பாச உணர்ச்சிகள் எவ்வளவு நயவஞ்சகமாகத் தருடப்பட்டு, அதற்குச் சாக்குப்போக்கும் சொல்லப்படுகிறது.

சிறிதும் அனுபவமற்றவளும், இந்தச் செயல் எங்கெல்லாம் பரவும் என்று அறியாதவளுமாகிய பெண்பிள்ளையின் உள்ளப் பற்றுதலைக் கைப்பற்றுமட்டும், வஞ்சகமான காதலுறவை வளர்த்து, அவளுடன் அந்தரங்கமான செய்திப் போக்குவரத்து வைத்துக்கொண்டு, ஓரளவு தன் பெற்றோரைவிட்டு அவளைப் பிரித்து, தன் மேல் பற்று வைக்கும்படி செய்து தான் கையாளுகின்ற அந்த முறையினாலேயே தான் அவளுடைய அன்பிற்குத் தகுதியுள்ளவன் அல்ல என்று காண்பிக்கிறான். வேதாகமம் அசத்தியத்தின் சகல ரூபங்களையும் கண்டனம் செய்கிறது; மற்றும் எல்லாச்

சந்தர்ப்பங்களின்கீழும் நீதியான செயலைக் கோருகிறது. வேதாகமத்தைத் தனது வாலிபத்தின் வழிகாட்டியாகவும், தனது பாதையின் வெளிச்சமாகவும் ஆக்கிக்கொள்கிறவான், அதன் உபதேசங்களுக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்படிவான். விளைவாக அவன் மாபெரும் தியாகங்களைச் செய்யவேண்டியிருந்தாலும்கூட, எந்த நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் நியாயப்பிரமாணத்தின் ஒரு சிறு எழுத்தையாகிலும் அல்லது ஒரு எழுத்தின் உறுப்பையாகிலும் அவன் மீறமாட்டான். அவன் வேதாகமத்தை விசுவாசிக்கிறவனாக இருந்தால், நேர்மையின் உறுதியான பாதையிலிருந்து தான் வழிவிலகினால், தன்மீது தேவாசீர்வாதம் தங்காது என்பதை அவன் அறிந்திருக்கிறான். ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அவன் செழித்திருப்பதுபோல் தோன்றினாலும், தனது கிரியைகளின் பலனை அவன் நிச்சயமாய் அறுப்பான்.

உலகத்தின் இக்காலத்தில் ஏற்படுகிற அநேக நேரங்கெட்ட, பொருத்தமற்ற தொடர்புகளின்மீது தேவனுடைய சாபம் தங்குகிறது. இத்தகைய கேள்விகளைத் தெளிவற்ற, நிச்சயமற்ற வெளிச்சத்தில் வேதாகமம் விட்டுவிடுமானால், இப்போதுள்ள அநேக வாலிபர்கள் ஒருவருக்கொருவர் தங்களுக்கான தொடர்புகளைத் தேடிக்கொள்ளும் போக்கை அதிகமாகப் பொறுத்துப்போக வேண்டியதாகும். ஆனால் வேதாகமத்தின் கோரிக்கைகள் அரைகுறையான கட்டளைகள் அல்ல; அவைகள் எண்ணத்திலும், வார்த்தையிலும், செயலிலும் பரிபூரணத் தூய்மையை எதிர்பார்க்கிறது. ஒருவரும் கடமையின் பாதையிலிருந்து தவறக்கூடாதபடிக்கு, தேவனுடைய வார்த்தையானது கால்களுக்குத் தீபமாக இருக்கிறபடியால், நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். வாலிபர்கள் அதன் பக்கங்களைக் கருத்துடன் நாடி, அதன் ஆலோசனைகளுக்குச் செவிகொடுப்பதைத் தங்கள் தொழிலாக்கிக் கொள்ளவேண்டும்; ஏனெனில் அதன் கட்டளைகளிலிருந்து விலகுவதனால் வருத்தமுண்டாக்கும் தப்பிதங்கள் எப்பொழுதும் இழைக்கப் பட்டுவிடுகின்றன.

## உறுதிவாய்ந்த சிந்தனைத்திறனின் அவசியம்

அமர்ந்த பகுத்தறிவோடும், ஆத்திரப்படாத நிதானத்தோடும் கருத்தாய் ஆராய்ந்து பார்க்கவேண்டிய காரியம் யாதாவது உண்டானால், அது விவாக காரியமே. எப்பொழுதாவது வேதாகமம் அறிவுரை கூறுகிறதற்கு அவசியமுள்ள தருணம் உண்டானால் அது தம்பதிகளை வாழ்நாள் முழுவதும் ஒன்றாகச் சேர்த்துக்கட்ட முயற்சி செய்கிறதற்கு முந்திய தருணமே. ஆனாலும் இக்காலத்தில் மக்கள் நடுவே பரவி வருகிற கருத்து யாதெனில், இந்தக் காரியத்தில் உணர்ச்சியே வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்பது

மிக பெரும்பான்மையோர் காரியங்களில், காதல்நோயின் உணர்ச்சிக் கோட்பாடே அவர்கள் மரக்கலத்தில் சுக்கானைப் பிடித்து, அழிவிற்கு நடத்திக் கொண்டு போகின்றது. இங்கேதான் வாலிபர் மற்ற எந்தக் காரியத்தைப் பார்க்கிலும் குறைந்த அறிவு உடையவர்கள். ஆனால் இங்கேதான் அவர்கள் நியாயவாதத்தைக் கேளாமல் மறுக்கின்றார்கள். திருமணப் பிரச்சினை மந்திரசக்திபோல் அவர்களை மயக்கி மேற்கொண்டிருக்கிறது என்று தோன்றுகின்றது. அவர்கள் கடவுளுக்கு அடங்கி கீழ்ப்படிகிறதில்லை. அவர்களுடைய பொறிபுலன்கள் கட்டுண்டிருக்கின்றன. அவர்கள் தங்கள் திட்டங்களில் எவரேனும் தலையிட்டு விடுவார்களோ என்று அஞ்சுவதுபோல், மறைவிடங்களில் அலைந்து திரிகின்றனர்.

காதலுறவுகள் மற்றும் திருமணங்கள் திருட்டுத்தனமான வழியில் நடைபெறுவதே பெரிய அளவிலான துன்பத்திற்குக் காரணமாக இருக்கிறது. அத்துன்பத்தின் முழுநீள விவரத்தைத் தேவன் மட்டுமே அறிந்திருக்கிறார். இப்பாறையின்மீது ஆயிரக்கணக்கானவர் தங்களது ஆத்துமக் கப்பல்களைச் சேதப்படுத்தியிருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் என்று அறிக்கையிடுகிறவர்களும், தங்கள் வாழ்க்கை நேர்மையுடையது என்று பெயர் பெற்றவர்களும், மற்றெல்லாக் குற்றங்களையும் குறித்து உணர்ச்சியுடையவர்கள் போல் தோன்றுகிறவர்களும் ஆகிய பெரு மக்கள் தாமும் இந்தக் காரியத்தில் பயங்கரமான தவறுகள் செய்கின்றார்க்ள. பகுத்தறிவினாலே தானும் மாற்ற முடியாத உறுதியுள்ள தீர்மானத்தை வெளியிடுகிறார்கள். வேதாகமத்தை ஆராய்ந்து கடவுளோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பாமல், மனுஷருக்குரிய உணர்ச்சிகளினாலும் மயக்கம் அடைகின்றார்கள்.

எவ்வகைச் சூழ்நிலையை எளிதாகக் கையாள்வது என்று சாத்தான் நன்கறிவான். பலவகை உபாயங்களினால் ஆத்துமாக்களை அழிவிற்குக் கொண்டுபோகிறதற்குப் பொறிவைக்கும் செயலில் அவன் தன் கொடிய நரக ஞானத்தைக் காண்பிக்கிறான். அவர்கள் நடைமுறை ஒவ்வொன்றையும் கவனித்துப்பார்த்துக் குறிப்பாகப் பலவகை ஆலோசனை சொல்லுகிறான். அவர்கள் தேவவசன ஆலோசனைகளைக் காட்டிலும் பெரும்பாலும் அவனுடைய ஆலோசனைகளையே பின்பற்றுகிறார்கள். இளைஞரையும் விழிப்பில்லாத பேதைகளையும் அகப்படுத்துகிறதற்கு அவன் இவ்வளவு நேர்த்தியாக பின்னிய அபாயமுள்ள வலையை மிகவும் திறமையாக ஆயத்தப்படுத்துகிறான். அவ்வலையைப் பெரும்பாலும் மாறுகோலப்படுத்தி ஒளியினால் போர்த்து வைக்கின்றனர். அதற்கு இரையானவர்களோ அநேக வேதனைகளினாலே தங்களை உருவக் குத்திக்கொண்டு துடிக்கின்றார்கள். அதன் பயனாய் எவ்விடத்திலும் மக்கள் சிதைந்து சீரழிந்து கிடக்கக் காண்கின்றோம்.

## பெற்றோர்களின் அறிவுரை நாடுதல்

நம் வாலிபர்கள் எப்பொழுது ஞானமுள்ளவர்களாவார்கள்? இப்படிப்பட்ட செயல் இன்னும் எதுவரைக்கும் போகும்? பிள்ளைகள் எவ்வகையிலும் தங்கள் பெற்றோர் ஆலோசனையையும தீர்மானத்தையும் கவனியாமல், தங்கள் சொந்த விருப்பங்களையும் ஆசைகளையும் மாத்திரமே ஆலோசிப்பது தகுமோ? சிலர் தங்கள் பெற்றோருடைய விருப்பத்தையும், மேலான எண்ணத்தையும் ஒருபோதும் நினைத்துப் பார்ப்பதே இல்லை; அவர்களது முதிர்ந்த தீர்மானத்தை நன்கு மதிப்பதும் இல்லை. தன்னலமானது பிள்ளைகளுக்குரிய அன்பு அவர்கள் இருதயத்தில் வராதபடி கதவை அடைத்துவிடுகின்றது. வாலிபர் இந்தக் காரியத்தைக் குறித்து நினைத்துப் பார்க்கும்படி அவர்கள் சிந்தனையை எழுப்பிவிடவேண்டும். கற்பனைகளில் ஐந்தாம் கற்பனை ஒன்றே வாக்குத்தத்தத்துடன் கூடியது. ஆனாலும் அதற்கு மதிப்பு குறைந்துபோயிற்று; காதலர் உரிமை அதை முற்றிலும் புறக்கணித்து விட்டது என்பது தெளிவு. அன்னையின் அன்பை எளிதாக நினைப்பதும், தந்தையின் கரிசனையை அவமதிப்பதும், வாலிபர் பலருக்கு விரோதமாகப் பரலோகத்திலே பதிவு செய்யப்பெற்று நிலைத்திருக்கின்ற பாவங்கள்.

இதனோடு தொடர்புடைய மகாபெரிய குற்றங்களில் ஒன்று, வாலிபர் அனுபவமில்லாதவர்கள். இவர்களுடைய அன்புப் பற்றைக்குலைத்துப் போடக் கூடாதென்றும், இவர்கள் காதல் அனுபவத்தில் பிறர் தலையிடக்கூடாதென்றும் சொல்லுவதே. எப்பொழுதும் எல்லா நோக்குநிலையினின்றும் பார்வையிட வேண்டிய ஒரு பொருள் உண்டானால், அது இதுவே. பிறர் அனுபவத்தின் உதவியும், காரியத்தை அமர்ந்திருந்து கவனித்துச் சீர்தூக்கிப் பார்த்தலும், இருதிறத்தினருக்கும் இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை. பெரும் பான்மையானோர் அற்பமாக நினைத்து நடத்துகிற காரியம் இதுவே.

வாலிபரே! நண்பரே! கடவுளுக்குப் பயந்து நடக்கிற உங்கள் பெற்றோரையும் உங்கள் ஆலோசனைக்கு வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் காரியத்துக்காக ஜெபம் பண்ணுங்கள். உன் வாழ்க்கை நலத்தை எவருடன் பிணைத்துக்கொள்ள நினைக்கின்றாயோ அவரது உணர்ச்சிக் கருத்து ஒவ்வொன்றையும் நிறுத்துப்பார்; அவரது ஒழுக்க வளர்ச்சி ஒவ்வொன்றையும் உற்றுநோக்கு. உன் வாழ்க்கையில் நீ அடியெடுத்து வைக்கப்போகிற காரியம் மகா முக்கியமானது; ஆத்திரப்பட்டு அடியெடுத்து வைக்காதே. காதல் கொண்டாலும் குருட்டுத்தனமாய் காதல் கொள்ளாதே.

உன் மண வாழ்க்கை இன்பமாய் இருக்குமோ, பொருத்தமின்றி நிர்ப்பாக்கியமுள்ளதாய் இருக்குமோ என்று கருத்தாய் ஆராய்ந்துபார். இந்த ஐக்கியம் பரலோகவழியில் எனக்கு உதவியாகுமோ? இது என் வாழ்க்கை

பயன்படும் எல்லையை விரிவாக்குமோ? இவ்வினாக்களை எழுப்பி இவற்றிற்கு விடைதேடு. இக்கருத்துக்களின் இடர்பாடு தோன்றாவிடின், தெய்வ பயத்துடன் முன்னேறு.

நீ மணவுறவு செய்துகொள்ளும்படி நினைத்தவரது நடக்கையைக் குறித்து முற்றிலும் அறிந்துகொள்ளாமல் அவருடன் ஒப்பந்தம் செய்திருந் தாலும் அந்த ஒப்பந்தத்தினால் நீ நேசித்து நன்கு மதிக்கக்கூடாத ஒருவருக்கு மணவாழ்க்கை உறுதிமொழி கொடுத்து உன் வாழ்நாள் முழுவதும் அவரோடு உன்னைப் பிணைத்துக்கொள்வது அவசியமென்று நினைத்துக்கொள்ளாதே, எவ்வாறு நிபந்தனையுள்ள ஒப்பந்தத்தில் பிரவேசிக்கின்றாய் என்பதைக் குறித்து மிகவும் கவனமாய் இரு. பலர் செய்கிறதுபோல் விவாகத்திற்குப் பின்னே பிரிந்துபோவதைக் காட்டிலும் அதற்கு முன்னே ஒப்பந்தத்தை முறித்துவிடுவது எவ்வளவோ மேல்.

## தாயை நடத்தும்விதமே ஒரு குறிகாட்டி

உண்மையான அன்பு என்பது வளர்க்கப்பட வேண்டிய ஒரு தாவரம் ஆகும். பிற்காலத்தில் உண்டாகும் இடுக்கணுக்கும் துன்பத்திற்கும் தப்பிச் சமாதானமும் மகிழ்ச்சியுமாய் வாழ விரும்புகின்ற பெண்பிள்ளை, தான் அன்பு பாராட்டத் தொடங்கு முன்னமே தன் அன்பனுக்கு அன்னையார் இருக்கின்றாரோ என்று விசாரிக்கவேண்டும். மாமியாரின் இயற்கை குணநலம் எத்தகையது? அன்பன் தன் அன்னைக்குரிய தன் கடமைகளை உணர்ந்திருக்கிறானோ? தாயின் விருப்பத்தையும் மகிழ்ச்சியையும் மதித்து நடக்கிறவனோ? அவன் தன் அன்னையை நன்கு மதித்து கனம் பண்ணாதவனானால், தன் மனைவிக்கு மதிப்பும் அன்பும், பட்சமும், கவனமும் பாராட்டுவானோ? கல்யாணப் புதுமை மறைந்தபின்பு அன்பு நிலைபெற்றிருக்குமோ? அவன் என் தவறுகளைப் பொறுமையாய் சகித்துக் கொள்வானோ? அல்லது என்மேல் குறைகூறி வீராப்புக் காட்டி சர்வாதிகாரம் செலுத்துவானோ? மெய்நேசம் பல தவறுகளைப் பாராட்டாது; அன்பு தவறுகளை வகையறுத்துப் பேசாது.

## உணர்ச்சிவேகம் நம்பகமானது அல்ல

வாலிபர்கள் உணர்ச்சி வேகத்தை அளவு கடந்து முற்றிலும் நம்புகிறார்கள். அவர்கள் மிகவும் எளிதாய் தங்களை மறந்து, காதலரது கவர்ச்சியுள்ள வெளித்தோற்றத்தினால் உடனே மயங்கி விடுகின்றனர். காதலுறவு இந்தப் பருவத்தில் நடைபெறுகின்றவண்ணம், வஞ்சகத்திற்கும் மாய்மாலத்திற்கும் சத்துரு வகுத்த திட்டமேயாம். அதன் உதவியினால் ஆத்துமாக்களின் பகைவன் கடவுளைக் காட்டிலும் மிகுதியாய்ச் செயல்புரியக்

கூடியவனாய் இருக்கின்றான். எங்கேயாவது நல்ல பகுத்தறிவு தேவை என்றால், அது இங்கே தான். ஆயினும் உண்மை என்னவென்றால், இந்தக் காரியத்தில் அது செய்யக்கூடியது சிறிதளவேயாம்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகுவார்களானால், அவர்கள் அவர்களில் நம்பிக்கை வைத்து, தங்களது சந்தோஷங்களையும், வருத்தங்களையும் இறக்கிவைப்பார்களானால், அநேக எதிர்கால வேதனைகளிலிருந்து தங்களை அவர்கள் காத்துக்கொள்வார்கள். எந்தப் பாதை சரியானது என்று அறியக் குழம்பியிருக்கும்போது, தாங்கள் பார்க்கிறபடியே அக்காரியத்தைத் தங்கள் பெற்றோர்களுக்கு முன்பாக வைத்து, அவர்களது ஆலோசனையைக் கேட்கட்டும். அவர்களது ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டுவதற்கு நன்கு அறிந்த பக்திமிக்கப் பெற்றோர்களைப் போல வேறு யார் இருக்கமுடியும்? அவர்களது விசேஷமான மனநிலைகளையும், அவர்களையும் வேறு யார் புரிந்துகொண்டிருக்க முடியும்?

கிறிஸ்தவர்களாக இருக்கிற பிள்ளைகள் ஒவ்வொரு பூமிக்குரிய ஆசீர்வாதத்தை விடவும் தங்களது தெய்வபக்திமிக்கப் பெற்றோர்களின் அன்பையும், பாராட்டையும் மதித்துப்போற்றுவார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளிடத்தில் பரிவிரக்கங்காண்பித்து, தேவன் அவர்களைக் காத்து வழிநடத்தும்படி, அவர்களுக்காக, அவர்களுடன் ஜெபிக்கலாம். மற்ற அனைத்திற்கும் மேலாக, அவர்களது பெலவீனங்களுக்காகப் பரிதபிக்கிற, ஒருபோதும் கைவிடாத நண்பர் மற்றும் ஆலோசகரிடத்தில் அவர்களை நடத்திச் செல்வார்கள். எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிறவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு எப்படி உதவி செய்யவேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்.—Review and Herald, January 26, 1886.

## தெய்வீக அன்பு

உங்கள் வாழ்க்கை ஐக்கியத்தில் உங்களுடைய பாச உணர்ச்சிகள் ஒவ்வொருவரின் மகிழ்ச்சிக்கும் துணைபுரிகிறதாக இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் மற்றவரின் மகிழ்ச்சிக்காக ஊழியம் செய்யவேண்டும். இதுவே உங்களைக் குறித்த தேவசித்தம். ஆனால் நீங்கள் ஒருயிராக ஒன்றரக் கலக்கும் வேளையில், இருவரில் எவரும் தனது தனித்தன்மையை மற்றவரில் இழந்துவிடக்கூடாது. தேவனே உங்களது தனித்தன்மைக்கு உரிமையாளராக இருக்கிறார்....

தேவனுக்காக வாழும்போது, ஆத்துமாவானது அதனுடைய மிகச் சிறந்த, மிக உயர்ந்த பாச உணர்ச்சிகளை அவருக்கு வழங்குகிறது. உங்களுக்காக மரித்தவரை நோக்கி உங்களது அன்பின் மாபெரும்

வழிந்தோடுதல் இருக்கிறதா? அப்படியானால், ஒருவருக்கொருவர் காண்பிக்கும் உங்களது அன்பானது பரலோக ஒழுங்கின்படியானதாக இருக்கும்.—Testimonies for the Church, Vol. 7, pp. 45, 46.

# 152

# உரிய காலத்திற்கு முந்திய திருமணங்கள்

முதிராத அன்பு மற்றும் வளர்ச்சியடையாத சிந்தனைத்திறனுடனும், மேன்மையான, உயர்வான உணர்ச்சிகளின்றித் திருமண உறவில் நுழைகிற வாலிபப்பையன்களும், வாலிபப் பெண்களும் தங்களது சிறுபிள்ளைத்தனமான, சிறுபெண்ணுக்குரிய தீவிர உணர்ச்சிகளால் முற்றிலும் நடத்தப்பட்டு, திருமண வாக்குறுதிகளைத் தங்கள்மீது எடுத்துக்கொள்கின்றனர்….

### அதிவிரைவுத் திருமணங்களின் அபாயம்

மிகு இளமைப் பருவத்தில் அமையப்பெற்ற இணைப்புகளானது பெரும்பாலும் மிகவும் பரிதாபகரமான திருமணங்களில் அல்லது அவமானமிக்கப் பிரிவினைகளில் முடிந்திருக்கின்றன. பெற்றோர்களின் அனுமதியின்றி ஏற்பட்ட அதிசீக்கிர இணைப்புகள் அரிதாகவே மகிழச்சிகரமானதாக இருந்திருக்கின்றன. தகுதியான வயதும் அனுபவமும் வாலிப உணர்ச்சிகளை மதிப்புக்குரியவைகளாக்கி, அவற்றை அவிழ்த்துவிடுவதற்குப் பாதுகாப்பானவைகளாக்குகிற வரைக்கும், அவற்றிற்குத் தடைகட்டப்பட வேண்டும். தடைகட்டப்படாதவர்கள் ஒரு மகிழ்ச்சியற்ற வாழ்க்கையை வலுக்கட்டாயமாக இழுத்துச்செல்லும் அபாயத்தில் இருக்கின்றனர். தனது பதின்வயதுப் பருவத்தைக் கடக்காத ஒரு இளம் நபர் தன்னைப் போன்ற ஒரு இளம் நபரைத் தன் வாழ்க்கைத் துணையாகக்கொள்ளும் தகுதியைத் தீர்மானிப்பதில் வறிய நடுவராக இருக்கிறார். அவர்களது சிந்தனைத்திறன் அதிகமாக முதிர்ச்சியடைந்தபின், ஒருவேளை ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியுண்டாக்க ஒருபோதும் தயாராயிராத நிலையில், அவர்கள் ஒருவருக்கொருவர் வாழ்வுக்கு ஆயத்தமான நிலையில் இருப்பதுபோலத் தங்களைக் காணலாம். அப்பொழுது தங்களது வாழ்வின் மிகச்சிறந்த பங்கை அனுபவிப்பதற்குப் பதிலாக, ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுச் செய்துகொள்ளும் நிலை உருவாகிறது, ஒருவரையொருவர் உறுதியாக வெறுத்துப் புறக்கணிக்கும் வரையிலும், பிளவு பெரிதாகிறது. அவர்களைப்

பொறுத்தமட்டில், குடும்பம் என்ற வார்த்தையில் எந்தப் புனிதமும் இல்லை. அன்பற்ற வார்த்தைகள் மற்றும் கசப்பான அவதூறுகளினால் சூழ்நிலை மோசமடைகிறது.—A Solemn Appeal, pp. 11, 12 (Edition: Signs Publishing Company Limited).

## ஞானமுள்ள, ஞானமற்ற திருமணங்கள்

இன்றைக்கு நிலவுகிற மிகப்பெரும் அளவிலான தீமைகளைப் பக்குவப்படாத திருமணங்களே உற்பத்தி செய்கின்றன. வாழ்வில் வெகுசீக்கிரமாக மேற்கொள்ளப்படுகிற திருமணத்தினால் சரீர ஆரோக் கியமோ அல்லது மன உறுதியோ முன்னேற்றமடைவதில்லை. இக்கருப்பொருளின்மீது முற்றிலும் மிகக்குறைவான பகுத்தறிவே செயல் படுத்தப்படுகிறது. அநேக வாலிபர்கள் உணர்ச்சித் தூண்டுதலினால் செயல்படுகின்றனர். வாழ்நாள் நெடுகிலும் ஒரு ஆசீர்வாதமாக அல்லது சாபமாக இருக்கும்படி நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ பயங்கரமாக அவர்களைப் பாதிக்கிற இந்த அடியானது, உணர்ச்சிக்கனிவின் தூண்டுதலின்கீழ், பெரும்பாலும் துரிதகதியில் எடுக்கப்படுகிறது. கிறிஸ்தவக் கண்ணோட்டத்தினாலான போதனைக்கோ அல்லது விளக்கத்துக்கோ அநேகர் செவிகொடுக்கமாட்டார்கள்…

தவறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமணங்களின் விளைவினால் உலகமானது இன்று துன்பம் மற்றும் பாவத்தினால் நிரம்பியிருக்கிறது. தங்களது மனநிலைகள் ஒருபோதும் ஒத்துப்போகாது என்று உணர்வதற்கு, அநேக வேளைகளில் கணவனுக்கும் மனைவிக்கும் ஒருசில மாதங்கள் மட்டுமே பிடிக்கிறது; அன்பும், பரலோக ஒத்திசைவும் மட்டுமே இருக்கவேண்டிய இல்லத்தில், பலனாகப் பூசல் நிலவிக் காணப்படுகிறது.

அற்பக் காரியங்களின்மீதான சண்டைச் சச்சரவினால், ஒரு கசப்பின் ஆவியானது போற்றி வளர்க்கப்படுகிறது. வெளிப்படையான கருத்துமாறுபாடுகளும், கலகமும் வீட்டிற்குள் சொல்லிமுடியாத துயரத்தைக் கொண்டுவந்து, அன்பின் கட்டுகளில் பிணைக்கப்பட்டிருக்க வேண்டியவர்களை இரண்டாகப் பிரித்துவிடுகிறது. ஞானமற்ற திருமணங்களினால், இவ்விதமாக ஆயிரக்கணக்கானவர்கள் தங்களையே, ஆத்துமாவை, சரீரத்தைத் தியாகம்பண்ணி, அழிவின் பாதையில் அமிழ்ந்துபோயிருக்கின்றனர்.

## அந்நிய நுகத்திலே பிணைக்கப்படுதல்

உலக உறவு கொள்வது அபாயமுள்ள செயல். இளைஞரான ஆடவரும் மகளிரும் இவ்வகை மணம் நடத்துகின்ற அந்த நாழிகையிலே தானே, அவர்களுடைய சமயநெறி அனுபவம், பயன் இவற்றின் வரலாறு

முடிவடைகின்றது என்பதைச் சாத்தான் நன்கறிவான். அவர்கள் பின்னும் சிறிது காலம் கிறிஸ்தவ வாழ்க்கை நடத்த முயற்சி செய்யலாம். ஆனால் அவர்கள் முயற்சிகள் எல்லாம் அதற்கு எதிராக எதிர்த் திசையில் நிலையான செல்வாக்கு பெற்றுவிடுகின்றது. அவர்கள் தங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பற்றிப்பேசுவது, ஒரு காலத்தில் அவர்களுக்குச் சிலாக்கியமும் சந்தோஷமுமாய் இருந்தது. ஆனால் தங்கள் வாழ்க்கை நலத்தை எவருடன் பிணைத்திருக்கின்றார்களோ அவர் அதில் ஆர்வம் கொள்ளமாட்டார் என்று அறிந்து, அந்தப் பொருளை எடுத்துரைக்க மனமற்றவர்கள் ஆகிவிடுகின்றார்கள். அதன் பலனால் அருமையான சத்தியத்தைப் பற்றிய விசுவாசம் உள்ளத்தில் மடிந்து போகின்றது; சாத்தான் வஞ்சகமாய் அவர்களைச் சுற்றிலும் சந்தேகம் என்னும் வலையைப் பின்னி விடுகின்றான். அவர் இக்காரியங்களில் ஆர்வம் கொள்ள மாட்டார் என்றறிந்து, அந்தப் பாடப்பொருளை எடுத்துரைக்க மனமற்றவர்களாகி விடுகின்றார்கள். இவ்விதமாகச் சாத்தான் வஞ்சகமாய் அவர்களைச் சுற்றிலும் சந்தேகம் என்னும் வலையைப் பின்னி விடுகின்றான், அருமையான சத்தியத்தைப் பற்றிய விசுவாசம் உள்ளத்தில் மடிந்துபோகின்றது.

வாலிபர்களைப் பாவத்தில் தக்கவைப்பதே சாத்தானின் திட்டமிட்ட முயற்சியாக இருக்கிறது; பின்பு மனிதனை அவன் உறுதியாகப் பற்றிக்கொள்கிறான். வாலிபர்களைச் சரியான திசையில் செல்லத்தூண்டும் ஒவ்வொரு முயற்சிக்கும் எதிராக, ஆத்துமாக்களின் எதிரியானவன் தீவிரமான வெறுப்பினால் நிரம்பியவனாக இருக்கிறான். தேவனையும், கிறிஸ்துவையும் பற்றிய சரியான கண்ணோட்டங்களைக் கொடுக்கும் அனைத்தையும் அவன் வெறுக்கிறான். பரலோகத்திலிருந்து வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சாதகமான நிலையில் வைக்கப்பட்டிருக்கிறவர்களுக்கு எதிராக அவனது முயற்சிகள் விசேஷமாகத் திருப்பிவிடப்பட்டிருக்கின்றன; தேவனுடன் தொடர்பில் வருவதற்கு அவர்களது சார்பிலான எந்த அசைவும் அவனது சோதனைகளுக்கு எதிர்த்துநிற்பதற்கு அவர்களுக்கு வல்லமையைக் கொடுக்கும் என்பதை அவன் அறிந்திருக்கிறான். வெளிக்குச் சரியாகத் தோன்றுகிற அவனது தந்திரங்களுடன் ஒரு ஒளியின் தூதனைப்போல அவன் வாலிபர்களிடம் வருகிறான், கடமையின் பாதையிலிருந்து படிப்படியாக அவர்களைத் தன் பக்கம் இழுத்துக்கொள்வதில் பெருமளவில் வெற்றியடைகிறான்.

## நல்தோற்றம் வாய்ந்த நட்பு

ஒருவருக்கொருவர் உள்ள கூட்டுறவுக்குள் கூடி மகிழுகிற வாலிபர்கள் தங்கள் நட்பை ஓர் ஆசீர்வாதமாகவோ அல்லது ஒரு சாபமாகவோ

ஆக்கிக்கொள்ளலாம். அவர்கள் பக்திவிருத்தி உண்டுபண்ணி, பெலப்படுத்தி, ஒருவரையொருவர் ஆசீர்வதிக்கலாம், நடத்தையிலும், மனநிலையிலும், அறிவிலும் வளர்ச்சியடையலாம்; அல்லது அக்கறையற்றவர்களாக, உண்மையற்றவர்களாக மாறுவதற்குத் தங்களையே அனுமதிப்பதினால், ஓர் ஒழுக்கக்கேடான செல்வாக்கை மட்டுமே அவர்கள் உண்டுபண்ணக்கூடும்.—The Youth's Instructor, August 10, 1899.

## அவசரத் திருமணங்கள்

அனுபவமற்ற வாலிபர்களைத் திருமண உடன்பாட்டுக்குள் விரைந்து இட்டுச் செல்வதைச் சாத்தான் இடைவிடாமல் செய்துகொண்டிருக்கிறான். ஆனால் இப்பொழுது நடைபெற்றுவருகிற திருமணங்கள் குறித்து நாம் குறைவாகப் பெருமைகொண்டால் நலமாயிருக்கும். திருமணத்தின் புனிதத்தன்மையும், உரிமைக்கோரிக்கைகளும் உணர்ந்துகொள்ளப்படும் போது, அது இப்பொழுது பரலோகத்தாலும்கூட அங்கீகரிக்கப்பட்டிருக்கும், இரு வீட்டாரும் மகிழச்சியடைவதே விளைவாக இருக்கும், தேவனும் மகிமைப்படுவார்…

உண்மையான பக்தியானது மனதை மேம்படுத்தும், சுவையுணர்வைப் பண்படுத்தும், சிந்தனைத்திறனைப் பரிசுத்தப்படுத்தும், அதை உடையவரைப் பரலோகத்தின் தூய்மைக்கும், செல்வாக்குகளுக்கும் பங்குள்ளவராக்கும்; அது தூதர்களை அருகில் கொண்டுவந்து, உலகத்தின் செல்வாக்கு மற்றும் ஆவியிலிருந்து அதிகமதிகமாகப் பிரித்துக்கொண்டுபோகும்.—estimonies for the Church, Vol. 2, pp. 252, 253.

## திருமணத்திற்குச் சாத்தானால் தூண்டப்படுதல்

ஒருவருக்கொருவர் முற்றிலும் பொருத்தமற்றவர்கள் தங்களது ஆர்வ நலன்களை இணைத்துக்கொள்ளத் தூண்டுவதில் சாத்தான் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கிறான். வேறு எந்த வழியில் அவன் தனது திறமையைப் பயன்படுத்துவதைவிடவும், இவ்வழியில் மனிதக் குடும்பத்துக்கு அதிகமான துயரத்தையும், நம்பிக்கையற்றுப் போகச்செய்யும் துன்பத்தையும் கொண்டுவரமுடியும் என்பதால், அவன் இப்பணியில் எக்களிக்கிறான்.—Testimonies for the Church, Vol. 2, P. 248.

154

# பெண்கொள்ளுதலும், பெண்கொடுத்தலும்

உலகத்தில் மனிதர்களைத் தேவன் வைத்திருக்கிறார்; புசிப்பதும், குடிப்பதும், தொழில் செய்வதும், பெண் கொள்வதும், பெண் கொடுப்பதும் அவர்களது சிலாக்கியமாகும். ஆனால் இக்காரியங்களைத் தெய்வபயத்தோடு மட்டும் செய்வதே பாதுகாப்பானதாகும். நித்திய உலகத்தோடுள்ள உறவுடன் நாம் இவ்வுலகில் வாழவேண்டும். தேவகுமாரர்கள் மனுஷகுமாரத்திகளுடன் சம்பந்தங்கலந்ததே நோவா நாட்களில் நடந்த திருமணங்களில் காணப்பட்ட மாபெரும் குற்றம். தேவனை ஏற்றுக்கொண்டதாக, அவரிடத்தில் பயபக்தியாயிருப்பதாக அறிக்கையிட்டவர்கள், இருதயச்சீர்கேடுள்ளவர்களுடன் தொடர்புகொண்டனர்; வித்தியாசமின்றி தாங்கள் விரும்பினவர்களை மணந்தனர். ஆன்மீக அனுபவத்தில் ஆழமற்ற, நோவாவின் நாட்களில் செய்யப்பட்டதுபோன்ற அதே காரியங்களைத் துல்லியமாகச் செய்கிற அநேகர் இக்காலத்திலும் இருக்கின்றனர். கவனமிக்க ஜெபமிக்கச் சிந்தனையின்றி அவர்கள் திருமணம் செய்வார்கள். ஒரு வியாபார நடவடிக் கைக்குள் அவர்கள் நுழைவதுபோல எண்ணமற்வர்களாகப் புனிதமான வாக்குறுதிகளைத் தங்கள்மீது அநேகர் எடுத்துக்கொள்கின்றனர்; உண்மையான அன்பு திருமண உறவின் உள்நோக்கமாக இல்லை.

### பரிசுத்தமற்ற மோகம்

திருமணம் பற்றிய சிந்தனை அநேக வாலிபர்களின் மனங்களின்மீது ஒரு வசீகரிக்கும் வல்லமையைக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. இரண்டு நபர்கள் நட்புறவுக்குள் வருகின்றனர்; அவர்கள் ஒருவருக்கொருவர் கவர்ந்திழுக்கப்படுகின்றனர், அவர்களது முழு கவனமும் ஈர்க்கப்படுகிறது. பகுத்தறிவு குருடாகிறது, சிந்தனைத்திறன் வீசி எறியப்படுகிறது. எந்த ஆலோசனைக்கும், கட்டுப்பாட்டுக்கும் இணங்காமல், விளைவு எதுவாயினும், தங்கள் மனம்போன போக்கில் போக விடாப்பிடியாக இருப்பார்கள்.

மோகம் எவர்களை ஆட்கொள்கிறதோ, அவர்களுக்கு அது தன் பணியைச் செய்துமுடிக்கிற ஒரு கொள்ளைநோய் அல்லது தொற்று நோயைப்போல இருக்கிறது. அதற்கு முற்றுப்புள்ளி என்பதுபோன்ற ஒரு காரியம் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருவேளை அவர்களைச் சூழ்ந்திருக்கிறவர்கள், விருப்பார்வமுள்ள நபர்கள் திருமணத்தில் இணைக்கப்படவேண்டும் என்று

உணர்ந்தாலும், அது வாழ்நாள் நெடுகிலான மகிழ்ச்சியின்மையில் மட்டுமே முடியும். ஆனால் கெஞ்சுதல்களும், புத்திமதிகளும் வீணாகவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒருவேளை அப்படிப்பட்ட ஒரு திருமணத்தால், எவரைத் தேவன் தமது சேவையில் ஆசீர்வாதமாகப் பயன்படுத்தலாம் என நினைத்தாரோ, அவரது பயன்பாடு முடமாக்கப்பட்டு, அழிக்கப்படும்; ஆனால் உள்ளார்ந்த விளக்கமும், மெய்யெனக்காட்டி நம்பவைத்தலும் ஒன்றுபோல கவனிக்கப்படவில்லை.

அனுபவமிக்க ஆண்கள் மற்றும் பெண்களால் கூறப்பட்ட அனைத்தும் பயனற்றதாகக் காணப்படுகிறது; அவர்களை வழிநடத்தியிருக்கிற அவர்களது விருப்பங்களுக்குரிய தீர்மானத்தை மாற்றுவதற்கு அது வல்லமையற்றதாக இருக்கிறது. ஜெபக்கூட்டத்தில், பக்திவாழ்வுடன் தொடர்புடையதனைத்திலும் அவர்கள் ஆர்வம் இழக்கின்றனர். ஒருவருக்கொருவர் முற்றிலும் மோகங்கொண்டவர்களாக இருக்கின்றனர், வாழ்வின் கடமைகள் அற்பமான விஷயங்கள்போல அசட்டைசெய்யப்படுகின்றன. இரவுதோறும், ஒருவரோடொருவர் பேசுவதற்காக இத்தகைய வாலிபர்கள் இரவில் நெடுநேரம் விழித்திருக்கின்றனர்—மிகவும் அவசியமான, பக்திவிநயமான காரியம்குறித்துப் பேசுவதற்காகவா?—ஒருபோதும் இல்லை—சரியாகச் சொன்னால், முக்கியத்துவமற்ற வேடிக்கையான காரியங்களைக்குறித்துப் பேசுவதற்காகவே.

## ஆரோக்கியம் மற்றும் தன்னடக்கத்தின் பிரமாணங்களை மீறுதல்

காதலுறவில் இரவில் நெடுநேரம் போக்குகிறவர்கள் பக்கத்தில் சாத்தானுடைய தூதர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். காதலர் கண் திறந்திருந்தால், தேவதூதர் ஒருவர் தம் சொற்களையும் செயல்களையும் பதிவு செய்து கொண்டிருக்கக் காண்பர். உடல்நல விதிகளையும், அடக்க முறைகளையும் மீறி நடக்கிறார்கள். மணத்திற்கு முன்னே காதலுறவு செய்யும் சில மணிநேரத்தை மணவாழ்க்கையில் செலவிடும்படி வைத்துக்கொண்டால் மிகவும் பொருத்தமாயிருக்கும். ஆயினும் பொதுவாகக் காதலுறவு நாட்களில் காண்பிக்கும் பற்றுறுதி எல்லாம் மணவினையுடன் முடிந்துவிடுகின்றன.

ஒழுக்கங்கெட்ட இக்காலத்தில், இத்தகைய நள்ளிரவு மணிநேரங்களின் வீணடிப்பானது, இவ்விதமாக ஈடுபட்டிருக்கிற இருவரையும் வீழ்ச்சிக்கு நேராக அடிக்கடி வழிநடத்துகிறது. ஆண்களும் பெண்களும் தங்களைக் கனவீனமாக்கிக் கொள்ளும்போது, தேவனும் கனவீனப்படுகிறார், சாத்தான் எக்களிக்கிறான். மதிப்பு எனும் நற்பெயரானது இந்த மோகம் எனும் மந்திரக்கட்டின்கீழ் தியாகம் செய்யப்படுகிறது, அப்படிப்பட்ட நபர்களின் திருமணம் தேவனுடைய அங்கீகாரத்தின்கீழ் நடத்தப்பெற முடியாது.

உணர்ச்சி அவர்களை உந்தியதால், அவர்கள் மணம் முடித்துக்கொண்டனர். காதல்விஷயத்தின் புதுமை அனுபவம் முடிவடையும்போது, தாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்பதை உணர ஆரம்பிப்பார்கள். வாக்குறுதிகள் செய்யப்பட்ட ஆறு மாதங்களுக்குப்பின், ஒருவர் மற்றவரிடம் காண்பித்த அவர்களது உணர்ச்சிக்கனிவுகளில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் தெரிந்துகொண்ட வாழ்க்கைத்துணையின் குணத்தை அதிகமாகத் திருமண வாழ்வில் கற்றறிந்துவிட்டனர். தங்களது முந்தைய நட்புறவின் கண்மூடித்தனம் மற்றும் மதியீனத்தின்போது வெளிப்படையாய்த் தெரியாத குறைபாடுகளை ஒவ்வொருவரும் கண்டுபிடிக்கின்றனர். பலிபீடத்தில் பரிமாறப்பட்ட வாக்குறுதிகள் அவர்களை இறுக்கி இணைத்துக் கட்டுகிறதில்லை. அவசரத் திருமணங்களின் விளைவினால், தேவனுடைய ஜனங்கள் என்று கூறுகிறவர்கள் மத்தியிலும்கூட, பிரிவினைகளும், மணமுறிவுகளும், மாபெரும் குழப்பமும் சபையில் காணப்படுகின்றன.

## ஆலோசனை அவமதிக்கப்படுதல்

இவ்வகையான பெண்கொள்ளுதலும், பெண்கொடுத்தலும் சாத்தானின் விசேஷமான தந்திரங்களில் ஒன்றாக இருக்கிறது, ஏறக்குறைய எப்பொழுதும் அவன் தனது திட்டங்களில் வெற்றியடைகிறான். திருமணத் தரப்பினர்கள் இப்பாடப்பொருளின்மீதான ஆலோசனைக்காக என்னிடத்தில் வரும்போது, மிகவும் வேதனையான உதவியற்ற உணர்வு எனக்கு உண்டாகிறது. நான் பேசும்படி தேவன் விரும்புகிற வார்த்தைகளை நான் அவர்களிடம் பேசலாம்; ஆயினும் அவர்கள் ஒவ்வொரு காரியத்தையும் குறித்து அடிக்கடி கேள்வியெழுப்பி தங்கள் சொந்த நோக்கங்களை நிறைவேற்றும் ஞானத்தையே ஆதரித்துப் பேசுகின்றனர்; முடிவாக அவர்கள் அப்படியே செய்தும் விடுகின்றனர்.

தங்களது சொந்த ஆசைகளையும், விருப்பங்களையும் மேற்கொள்ளும் வல்லமை அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை, துணிவுடன் மனம் புரிகின்றனர். தேவனுடைய ஆவியினால் நடத்தப்படவும், கட்டுப்படுத்தப்படவும், அவருடைய கரங்களில் தங்களை ஒப்படைத்து, கவனத்தோடும், ஜெபத்தோடும் காரியத்தை அவர்கள் சிந்திக்கிறதில்லை. தெய்வபயம் அவர்களது கண்களுக்குமுன்பாக இருப்பதுபோல் தெரியவில்லை. தேவனிடமிருந்து வரும் ஞானமோ அல்லது மனிதனிடமிருந்து வரும் ஆலொசனையோ இன்றி, காரியத்தைத் தங்களால் புரிந்துகொள்ளமுடியமும் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

மிகவும் தாமதமானபின்னர், தாங்கள் தவறுசெய்துவிட்டதையும், இவ்வாழ்வில் தங்களது மகிழ்ச்சி மற்றும் தங்களது ஆத்தும இரட்சிப்பை

ஆபத்துக்குள்ளாக்கி இருப்பதையும் அவர்கள் காண்கின்றனர். அக்காரியத்தைக் குறித்துத் தங்களைத் தவிர எவரும் எதையும் அறிந்து கொண்டதாக அவர்கள் காட்டிக்கொள்ள மாட்டார்கள். கொடுக்கப்பட்ட ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், கவலை மற்றும் வருத்தத்தின் வருடங்களிலிருந்து அவர்கள் தங்களைக் காத்துக்கொண்டிருந்திருப்பார்கள். ஆனால் ஆலொசனையானது தங்கள் மனம்போன போக்கில் செல்லத் தீர்மானித்திருக்கிறவர்கள்மீது மட்டுமே அள்ளிவீசப்பட்டிருக்கிறது. பகுத்தறிவும், சிந்தனைத்திறனும் குறுக்கீடு செய்கிற ஒவ்வொரு தடையின்மீது அப்படிப்பட்ட தனிநபர்களை காம உணர்ச்சியானது கடக்கும்படி செய்கிறது.

## மெய்யன்பின் குணாதிசயங்கள்

அன்பு என்பது பரலோகத்தில் தோற்றம்கொண்ட ஒரு தாவரம் ஆகும். அது பகுத்தறிவிற்கு ஒவ்வாதது அல்ல; அது கண்மூடித்தனமானதும் அல்ல. அது தூய்மையானது, பரிசுத்தமானது. ஆனால் சுபாவ இருதயத்தின் காம உணர்ச்சி என்பது முற்றிலும் வித்தியாசமான காரியமாகும். மெய்யான அன்பானது அதன் திட்டங்கள் அனைத்திற்குள்ளும் தேவனை முன்வைத்து, தேவ ஆவியானவருடன் பூரணமான இசைவில் இருக்கும் அதே வேளையில், காம உணர்ச்சியானது பிடிமுரண்டுள்ளதாகவும், துணிச்சலுள்ளதாகவும், பகுத்தறிவுக்கு ஒவ்வாததாகவும், எல்லாத் தடையுத்தரவையும் எதிர்க்கிற தாகவும் இருக்கும், தனது விருப்பத்துக்குரிய ஒரு பொருளை ஒரு விக்கிரமாகவும் ஆக்கும்.

மெய்யன்பைக் கொண்டிருக்கிறவரின் நடத்தை யாவற்றிலும், தேவனுடைய கிருப வெளிப்படும். திருமண ஒப்பந்தம் நோக்கிய ஒவ்வொரு அடியிலும் தன்னடக்கம், எளிமை, நேர்மை, ஒழுக்கம் மற்றும் பக்தி ஆகியவை தனித்தன்மையுடன் விளங்கும். இவ்விதமான கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறவர்கள், ஜெபக்கூட்டம் மற்றும் ஆவிக்குரிய ஆராதனையிலுள்ள ஆர்வத்தை இழந்த நிலையில், ஒருவரோடொருவர் கொண்டுள்ள நட்பில் தங்களை மறந்து ஈடுபட்டிருக்கமாட்டார்கள்....

## தெய்வீக வழிநடத்துதலைத் தேடுதல்

ஆடவரும் மகளீரும் பரிசுத்த விவாகத்தைக் குறித்து சிந்திப்பதற்கு முன்னே, நாள்தோறும் இரண்டு தடவை ஜெபிக்கிற வழக்க முடையவர்களாயிருந்தால், அதற்காக முயற்சி செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிற பொழுது, நான்கு தடவை ஜெபிக்க வேண்டும். திருமணம் இம்மையிலும் மறுமையிலும் நம் வாழ்க்கையில் செல்வாக்குப் பெற்று, அதில் மாறுதல் விளைக்கும் ஒருவகைக் காரியம்.

மெய்க் கிறிஸ்தவன் கடவுள் தன் போக்கை ஒப்புக்கொள்ளுகின்றார் என்று அறிந்தால் அல்லாமல், அந்நெறியில் தன் திட்டங்களை முன்னேறவிடான். அவன் தனக்குத்தானே தெரிந்துகொள்ள விரும்பான். கடவுளே தனக்காக தெரிந்தெடுக்க வேண்டுமென்று உணர்வான். நாம் நமக்கே பிரியமாக நடக்கக்கூடாது. கிறிஸ்து தமக்கே பிரியமாய் நடக்கவில்லை. எவராவது தாம் நேசியாதவர் ஒருவரை மணம்செய்யலாம் என்பது என் கருத்து என்று எண்ணலாகாது. அது பெருந்தவறு. கவர்ச்சியும், உணர்ச்சி வசப்பட்ட சுபாவமும், அழிவுக்கு வழிநடத்த இடங்கொடுக்கக்கூடாது. கடவுள் நம் முழு இருதயத்தையும், உன்னத அன்பையும் உரிமையுடன் வேண்டுகிறார்.

நம் காலத்தில் நடைபெறுகின்ற பெருமபான்மை விவாகங்களும், அவற்றை நடத்துகின்ற முறையும், கடைசி கால அடையாளங்களில் ஒன்று. ஆடவரும் மகளீரும் கடவுளைப் புறக்கணித்துத் தள்ளிவிட்டு மணம்செய்து கொள்வதில் உறுதியும் முரட்டுப் பிடிவாதமும் உடையவர்களாய் இருக்கின்றார்கள். பயபக்தியும் முக்கியமுமான இந்தக் காரியத்தில் சமய நெறிக்கு இடம் இல்லை என்பதுபோல், அதை ஒதுக்கிவைத்து விடுகின்றனர். ஆயினும் சத்தியத்தை விசுவாசிப்பதாகக் கூறுகிறவர்கள் அதினால் பரிசுத்தமடைந்து, சிந்தனையிலும் குணத்திலும் மேன்மையடையாவிட்டால், அதன் உரிமைக் கோரிக்கைகளைக் குறித்து ஒருபோதும் ஒளியூட்டம் பெறாத பாவியைப்போன்று, ஒரு சாகதமான நிலையில் அவர்கள் தேவனுக்கு முன்பாக இருக்கிறதில்லை.—Review and Herald, September 25, 1888.

## 155

# திருமணத்தின் பொறுப்புரிமைகள்

சொத்தோ, சுதந்தரவீதமோ பெற்றிராத அநேகர் திருமண உறவில் நுழைந்திருக்கின்றனர். சொத்துடைமையை அடைவதற்கான சரீர பெலனையோ, மன ஆற்றலையோ அவர்கள் பெற்றிருக்கவில்லை. அப்படிப்பட்டவர்களே திருமணம் புரிவதில விரைவானவர்களாக இருந்திருக்கின்றனர்; திருமணத்தின் பொறுப்புரிமைகளைப் பற்றிய அறிவேதும் இல்லாதபோதிலும், அதைத் தங்கள்மீது சுமத்திக்கொண்டிருக்கின்றனர். மேன்மையான, உயர்தரமான உணர்வுகள் அவர்களிடம் இல்லை, ஒரு கணவன் அல்லத தகப்பனின் கடமையைக் குறித்த, குடும்பத்தின் தேவைகளைச் சந்திப்பதற்கு அவர்கள் எவ்வளவு பிரயாசம் எடுக்கவேண்டும் என்ற சரியான அபிப்பிராயம் அவர்களிடம் இல்லை. தங்களது வியாபார

நடவடிக்கைகளில் காண்பிக்கிற ஒழுங்குமுறையைவிடவும், தங்கள் குடும்பங்களின் பெருக்கத்தில் அதிகமான ஒழுங்குமுறையை அவர்கள் காண்பிக்கிறதில்லை....

திருமணம் எனும் நியமனம் மனிதனுக்கு ஓர் ஆசீர்வாதமாயிருக்கும்படி பரலோகத்தால் வடிவமைக்கப்பட்டிருந்தது; ஆனால், பொதுவாகவே, அதை ஒரு பயங்கரமான சாபமாக்கக்கூடிய விதத்தில் அது தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அநேகம் ஆண்களும் பெண்களும் தாங்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்களா இல்லையா என்பதை உறுதி செய்வதுவே தங்களுடைய ஒரே கேள்வி என்பதுபோலத் திருமண உறவில் நுழைய முற்பட்டிருக்கின்றனர். ஆனால் திருமண உறவில் இதற்கும் அப்பாற்பட்ட ஒரு பொறுப்பு தங்கள்மீது சுமந்திருக்கிறது என்பதை அவர்கள் உணரவேண்டும். தங்களுடைய சந்ததி சரீர ஆரோக்கியத்தை, மனரீதியான மற்றும் ஒழுக்கரீதியான பெலனைப் பெற்றிருப்பார்களா இல்லையா என்பதை அவர்கள் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். சமுதாயமானது தங்கள்மீது உரிமைக் கோரிக்கைகளை உடையதாயிருக்கிறது என்றும், தங்களது குடும்ப செல்வாக்கின் தாக்கமானது மேல்நோக்கிய அல்லது கீழ்நோக்கிய வளர்ச்சிவீதத்தில் அறியப்படும் என்றும்—தாங்கள் அற்பமாய் அகற்றிவிடக்கூடாத உயர்தரமான சிந்தனைகளுடன், உயர்ந்த உள்நோக்கங்களுடன் செயல்பட்டிருக்கிறவர்கள் சிலரே.—A Solemn Appeal, pp. 63, 64 (Edition: Signs Publishing Company Limited).

## 156

# திருமணத்தில் நல்ல சிந்தனைத் திறனும் சுயக்கட்டுப்பாடும்

திருமண உறவில் நுழைய இருக்கும் கிறிஸ்தவர்கள், அந்த உறவினால் தேவன் மகிமைப்படுவாரா என்று ஆராய்ந்து, ஒரு உயர்ந்த கண்ணோட்டத்துடன் கவனத்தோடும், ஜெபத்தோடும் அக்காரியத்தைக் குறித்துப் பரிசீலிக்கும்வரை அந்த உறவில் நுழையக்கூடாது. பிற்பாடு திருமண உறவின் ஒவ்வொரு சிலாக்கியத்தினால் உண்டாகும் விளைவையும் முறையாக சிந்திக்கவேண்டும். பரிசுத்தமாக்கப்பட்ட கொள்கை ஒவ்வொரு செயலுக்கும் அடிப்படையாக இருக்கவேண்டும்.

## முன்னோக்கிப் பார்த்தல்

தங்கள் குடும்பத்தைப் பெருக்குவதற்குமுன்பாக, தங்கள் பிள்ளைகளை உலகத்திற்குள் கொண்டு வருவதனால் தேவன் மகிமைப் படுவாரா அல்லது அவமதிக்கப்படுவாரா என்பதை அவர்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். தங்களது திருமண உறவினால் ஆரம்பத்தி லிருந்தே, தங்களது திருமண வாழ்வின் ஒவ்வொரு ஆண்டிலும் தேவனை மகிமைப்படுத்துவதற்கு அவர்கள் முயலவேண்டும். தங்களது பிள்ளைகளுக்காக என்ன முன்னேற்பாடு செய்யப்பட முடியும் என்பதை அவர்கள் அமைதியுடன் ஆராய்ந்து பார்த்திடவேண்டும். பிறருக்குப் பாரமாயிருக்கும்படி, பிள்ளைகளை உலகத்திற்குள் கொண்டுவருவதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை. பிறருக்குப் பாரமாயிருக்கிற அவசியம் அவர்களுக்கு ஏற்படாத அளவுக்கு, ஒரு குடும்பத்தைத் தாங்கி நடத்திட நம்பகமான ஒரு தொழில் அவர்களுக்கு இருக்கிறதா? அப்படியில்லை யென்றால், போதுமான பராமரிப்பு, உணவு மற்றும் உடைக் குறைவினால் கஷ்டப்படுவதற்குப் பிள்ளைகளை உலகத்திற்குள் கொண்டுவருவதில் அவர்கள் ஒரு குற்றத்தை இழைக்கிறார்கள்.

## காம உணர்ச்சியின் மேலாதிக்கம்

இந்த விரைவான, சீர்கெட்ட காலத்தில் இத்தகைய காரியங்கள் ஆழ்ந்து சிந்தனை செய்யப்படுவதில்லை. இச்சைமிகுந்த காம உணர்ச்சியே ஆளுகை செய்கிறது, பெலவீனமும், துன்பமும், மரணமும் அதன் ஆட்சியின் விளைவாக இருந்தாலும், அது கட்டுப்பாட்டுக்கு அடங்காததாய் இருக்கிறது. கணவன் எனும் பெயர்தாங்கியுள்ள மனிதர்களின் கட்டுக் கடங்காத காம உணர்ச்சிகளினால், பெண்கள் துன்பம், வேதனை மற்றும் பாடுமிக்க ஒரு வாழ்வுக்குள் வலிந்து தள்ளப்படுகின்றனர். மிகச் சரியாக அவர்கள் (கணவர்கள்) காட்டுமிராண்டிகள் என்றழைக்கப்படலாம். தாய்மார்கள் பிள்ளைகளை ஏறக்குறைய எப்பொழுதும் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டு, அவர்களுக்கு உணவூட்டவும், உடை உடுத்தவும் எல்லாவிதத்திலும் சமாளித்துக்கொண்டு, ஒரு துயர்மிகுந்த பிழைப்பைக் கஷ்டப்பட்டு நடத்தி வருகின்றனர். அப்படிப்பட்ட திரள்குவியலான துன்பம் உலகத்தை நிரப்பியிருக்கிறது.

நிஜமான, கலப்படமில்லாத, பக்திமிகுந்த தூய அன்பு குறைவாகவே காணப்படுகிறது. இந்த விலையேறப்பெற்ற பொருள் மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. காம உணர்ச்சி காதல் என்று அழைக்கப்படுகிறது. அநேகம் பெண்களுடைய நேர்த்தியான, மென்மையான உணர்வுகள் புண்படுத்தப்பட்டிருக்கின்றன, ஏனெனில் தநது கணவன் என்று எண்ணிக்

கொண்டிருந்தவளை அவன் மிருகத்தனமாக நடத்துவதற்குத் திருமண உறவு அவனுக்குச் சலுகையளித்திருக்கிறது. அவளுக்கு அருவருப்பாகுமளவுக்கு அவனது அன்பை மிகவும் கீழ்த்தரமானது என்பதை அவள் கண்டடைகிறாள்.

**சுயக்கட்டுப்பாட்டின் அவசியம்**

எண்ணிலடங்காத குடும்பங்கள் மிகவும் வருத்தகரமான நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றன; ஏனெனில் கணவனும் தகப்பனுமானவன் தன்னிலுள்ள மிருகத்தன்மையானது அறிவுரீதியான மற்றும் ஒழுக்கரீதியான தன்மைகளின்மீது ஆதிக்கம்செலுத்த அனுமதித்திருக்கிறான். அதன் விளைவாகத் தளர்வான, மனச்சோர்வான ஓர் உணர்வு அடிக்கடி ஏற்படுகிறது, ஆயினும் தங்களது செயலின் ஒழுங்கற்ற போக்கின் விளைவாகவே அது இருக்கிறது என்ற காரணம் அரிதாகவே கண்டறியப்படுகிறது. மனுக்குலத்திற்கு நாம் ஓர் நன்மையாக இருக்கவும், தேவனுக்குப் பூரணமான சேவை செய்யவும் தக்கதாக, ஆவியைத் தூண்மையாகவும், சரீரத்தை ஆரோக்கியமாகவும் காத்துக்கொள்வதற்குத் தேவனுக்கென்று பக்திவிநயமான கடமையுணர்ச்சிகளின்கீழ் நாம் இருக்கிறோம்.—Testimonies for the Church, Vol. 2, pp. 380, 381.

## 157

# ஈசாக்கின் முன்மாதிரி

தேவனுக்குப் பயப்படும் எவரும் அவருக்குப் பயப்படாத ஒருவருடன் ஆபத்தில்லாமல் தன்னைப் பிணைத்துக்கொள்ளமுடியாது. “இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?”– ஆமோஸ் 3:3. திருமண உறவில் உள்ள மகிழ்ச்சியும் செழுமையும் சம்பந்தப்பட்டத் தரப்பினரின் ஒற்றுமையைச் சார்ந்திருக்கிறது. ஆனால் விசுவாசிக்கும் அவிசுவாசிக்கும் இடையில் சுவைநயங்கள், விருப்பங்கள், நோக்கங்களைப்பற்றிய அடிப்படை வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் ஒருவருக்கொருவர் இசையில்லாத இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்துகொண்டிருக்கின்றனர். ஒருவருடைய கொள்கைகள் எவ்வளவுதான் சரியானவைகளாக இருந்தபோதிலும, விசுவாசமில்லாவனாக ஒரு தோழனின் செல்வாக்கு, தேவனிடமிருந்து விலக்கி நடத்தக்கூடிய ஒரு சுபாவத்தை உடையதாக இருக்கும்.

மனமாற்றமடையாத நிலையில் திருமண உறவிற்குள் பிரவேசித் திருக்கிற ஒருவன், ஆன்மீக விசுவாசத்தில் எவ்வளவு அதிகமான

வேற்றுமை கொண்டிருந்தாலும் தன்னுடைய மனமாற்றத்தினால் தனது துணைநலத்துக்கு உண்மையானவனாக இருக்கவேண்டும் என்னும் பலமிக்கக் கடமையுணர்ச்சிக்குள் வைக்கப்பட்டிருக்கிறான். சோதனைகளும் உபத்திரவங்களும் பூமிக்குரிய ஒவ்வொரு உறவுமுறைக்கும் மேலாக மதிக்கப்படவேண்டும். அன்பும் தாழ்மையுமிக்க ஆவியினால் இந்த விசுவாசம் விசுவாசமில்லாத ஒருவரை வெற்றிகொள்ளுகின்ற செல்வாக்கை உடையதாக இருக்கும். ஆனால் தெய்வபக்தி இல்லதவர்களுடனுள்ள கிறிஸ்தவர்களின் திருமணம், வேதாகமத்தில் தடைசெய்யப்பட்டிருக்கிறது. “அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக” (2 கொரி. 6:14) என்பது கர்த்தருடைய கட்டளையாக இருக்கிறது.

ஈசாக்கு வாக்குத்தத்தங்களின் சுதந்தரவாளியாக ஆக்கப்பட்டதினால், தேவனால் மிகவும் மேன்மையாக கனப்படுத்தப்பட்டிருந்தான். அவனுடைய வாக்குத்தத்தங்கள்மூலமாக உலகம் ஆசீர்வதிக்கப்படவேண்டியதிருந்தது. ஆயினும், அவன் நாற்பது வயதானவனாக இருந்தபோதிலும், அனுபவமிக்கவனும் தேவனுக்குப் பயப்படுகிறவனுமாயிருந்த வேலைக் காரனைத் தன் மகனுக்கு ஒரு மனைவியைத் தேர்ந்தெடுக்கும்படி நியமித்த அவனுடைய தகப்பனின் பகுத்துணர்வுக்குக் கீழ்ப்படிந்தான். வேத வாக்கியங்களில் வர்ணிக்கப்பட்டிருப்பதுபோல, இல்லற மகிழ்ச்சியின் மேன்மையும் அழகுமிக்கக் காட்சியும் அந்தத் திருமணத்தின் விளைபயனாக இருக்கிறது. “அப்பொழுது ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்”—ஆதி. 24:67.

நமது காலத்திலுள்ள வாலிபர்களும் வெளிப்படையான கிறிஸ்தவர் களும் பின்பற்றுகின்ற நடத்தைக்கும் ஈசாக்கின் நடத்தைக்கும் இடையில் உள்ள வேற்றுமை எப்படிப்பட்டதாக இருக்கிறது! தங்களுடைய பாச உணர்ச்சிகளை வழங்குகின்ற காரியம் சுயத்துடன் மட்டுமே கலந்தாலோ சிக்கப்படுகின்ற ஒன்றாக இருக்கிறதென்றும், தேவனாலோ அல்லது பெற்றோராலோ எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடாத ஒன்றாக இருக்கிற தென்றும் வாலிபர்கள் அடிக்கடி உணருகின்றனர். அவர்கள் புருஷன் அல்லது ஸ்திரீ என்னும் நிலையை அடைவதற்கு வெகுமுன்பாகவே தங்களுடைய சொந்தத் தெரிந்தெடுத்தலைப் பெற்றோர்களின் உதவி யில்லாமல் செய்வதற்குத் தகுதிபெற்றிருப்பதாக நினைக்கின்றனர். அவர்களுடைய தவறைக் காட்டுவதற்கு திருமண வாழ்க்கையின் சில வருடங்களே போதுமானதாக உள்ளன. ஆனால் கேடுண்டாக்கும் அதன் விளைவுகளைத் தடுப்பதற்கு அது மிகவும் தாமதமாகிவிடுகிறது. அவசரத்

தெரிந்தெடுத்தலைத் தூண்டிவிட்ட அதே ஞானம் மற்றும் சுயக்கட்டுப்பாட்டின் குறைபாடு, திருமண உறவு ஒரு கசப்புமிக்க நுகமாகும்வரைக்கும் தீமையை மேலும் பெருகச்செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அநேகர் இவ்விதமாக இந்த வாழ்க்கையிலுள்ள தங்களுடைய மகிழ்ச்சியையும் வரவிருக்கும் வாழ்க்கையைப்பற்றிய தங்களுடைய நம்பிக்கையையும் தகர்த்திருக்கின்றனர்.

மிகவும் ஜாக்கிரதையாக ஆலோசிக்கப்படவேண்டியதும், வயதான வர்கள் மற்றும் அதிக அனுபவமுள்ளவர்களின் ஆலோசனைகளும் தேடப்படவேண்டியதாக ஒரு காரியம் இருக்குமானால், அது திருமணம் என்னும் காரியமே. வேதாகமம் ஓர் ஆலோசகராக இருக்கவேண்டிய அவசியம் எப்பொழுதாவது இருக்குமானால், ஜெபத்தில் தெய்வீக வழிகாட்டுதல் எப்பொழுதாவது தேடப்படக்கூடியதாக இருக்குமானால், அது நபர்களை வாழ்க்கையில் ஒன்றாக இணைக்கின்ற ஒரு அடி எடுத்துவைப்பதற்கும் முற்பட்டதாக இருக்கிறது.

பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளின் மகிழ்ச்சிமிக்க எதிர் காலத்தைப்பற்றிய தங்களுடைய பொறுப்புகுறித்த பார்வையை ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. தனது தகப்பனின் பகுத்துணர்வுக்கு ஈசாக்கு காண்பித்த இணக்கம், கீழ்ப்படிதல்மிக்க ஒரு வாழ்க்கையை நடத்தும்படி அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஒரு பயிற்சியின் விளைவாக இருந்தது. பெற்றோர்களின் அதிகாரத்தைப் பிள்ளைகள் மதிக்கவேண்டும் என்று ஆபிரகாம் எதிர்நோக்கியபோது, அந்த அதிகாரம் சுயநலம் அல்லது ஆணவமிக்கக் கட்டுப்பாட்டில் அல்ல, மாறாக, அன்பில் அஸ்திபாரமிடப்பட்டிருந்தது என்பதற்கும் அவர்களது நலனையும் மகிழ்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தது என்பதற்கும் அவனது அனுதின வாழ்வு சாட்சி பகர்ந்தது. வாலிபர்களின் பாச உணர்வுகள் பொருத்தமான வாழ்க்கைத் துணைகளின்மீது வைக்கப்படும்படி அவைகளை வழிநடத்துகிற ஒரு கடமை பெற்றோர்களைச் சார்ந்திருக்கின்றது என்பதைத் தகப்பன்மார்களும் தாய்மார்களும் உணர வேண்டும். பெற்றோர்கள் தங்களுடைய போதனையினாலும், சொந்த உதாரணத்தினாலும், உதவிசெய்யும் தேவனுடைய கிருபையினாலும் தங்களுடைய பிள்ளைகளை அவர்களுடைய ஆரம்பகால வருடங்களிலேயே தூய்மையானவர்களாகவும், மேன்மைமிக்கவர்களாகவும் நன்மையினாலும் உண்மையினாலும் கவரப்பட்டவர்களாகவும் வனையவேண்டியது தங்களது கடமை என்பதை உணரவேண்டும். ஒத்த இயல்பு உடையவைகளே ஒன்றையொன்று கவருகின்றன. ஒன்றையொன்று மெச்சிக்கொள்கின்றன. சத்தியத்துக்கான அன்பு, தூய்மை மற்றும் நற்குணம் ஆகியவை ஆதியிலேயே ஆத்துமாவில் நடப்படுவதாக. அப்பொழுது வாலிபர்கள்

இத்தகைய குணலட்சணங்களை உடையவர்களின் நட்புறவைத் தேடு வார்கள். மனக்கிளர்ச்சியினால் எழுப்பப்பட்டு, கடுமையாகப் பரீட்சிக்கப்படும் போது திடீரென்று மறைந்துவிடும் அன்பின் தன்மையிலிருந்து முற்றிலும் வித்தியாசமான உன்னதமான மற்றும் பரிசுத்தமான கொள்கையாக உண்மையான அன்பு இருக்கிறது. பெற்றோரின் வீட்டிலுள்ள கடமைகளுக்கு வாலிபர்கள் உண்மையாக இருப்பதின்வழியாக தங்களுடைய வீட்டிற்கென்று தங்களை ஆயத்தஞ்செய்யவேண்டும். அவர்கள் இங்கே சுயமறுப்பைக் கடைபிடித்து, இரக்கம்,மரியாதைப்பண்பு மற்றும் கிறிஸ்தவ அனுதாபத்தை வெளிக்காட்டுவார்களாக. இவ்விதமாக, அன்பு இருதயத்தில் எழுச்சியுள்ளதாகக் காக்கப்படும். அப்படிப்பட்ட வீட்டிலிருந்து தனது சொந்தக் குடும்பத்தின் தலைவனாக நிற்கும்படி வெளியே செல்லும் ஒருவன், வாழ்க்கை முழுவதிலும் தனக்குத் துணைநலமாக இருக்கும்படியாகத் தெரிந்துகொண்டவளின் மகிழ்ச்சியை முன்னேற்றமடையச்செய்வது எப்படி என்பதை அறிந்துகொள்ளுவான். திருமணம் அன்பின் முடிவாக இருப்பதற்குப் பதிலாக, அன்பின் ஆரம்பமாக மட்டுமே இருக்கும். ★